சிலம்பொலியார்

அணிந்துரைகள்

(தொகுதி – 3)

அணிந்துரையாளர்

முனைவர் **சிலம்பொலி சு. செல்லப்பன்**

தொகுப்பாசிரியர்

முனைவர் **மணிமேகலை புஷ்பராஜ்**

பழனியப்பா பிரதர்ஸ்

'கோனார் மாளிகை'

25, பீட்டர்ஸ் சாலை, சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி – 620 002
சேலம் – 636 001
கோயமுத்தூர் – 641 001
மதுரை – 625 001
ஈரோடு – 638 001.

ISBN : 81-8379-365-7

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	சிலம்பொலியார் அணிந்துரைகள் (தொகுதி – 3)
அணிந்துரையாளர்	முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்
தொகுப்பாசிரியர்	முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்
பொருள்	இலக்கியத் திறனாய்வு
பதிப்பாளர்	பழனியப்பா பிரதர்ஸ் சென்னை – 600 014.
அச்சகம்	ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.
அச்சுப்புள்ளி	10 pt
தாள்	70 ஜி. எஸ். எம். மேப்லித்தோ
நூலின் அளவு	21 x 13.5 செ.மீ. (டெம்மி 1 x 8)
பக்கம்	XXXVIII + 282 (320 பக்கங்கள்)
முதற்பதிப்பு	ஜூன், 2006
விலை	ரூ. 120–00

© பதிப்புரிமை ஆசிரியர்க்கு

சிலம்பொலியார்
சிறந்த அணிந்துரையாளர்

– பேராசிரியர் இராம. குருநாதன்

அணிந்துரை என்பது, நூலுக்குரிய தகுதியையும் தகவையும் கட்டமைக்கும்; அதற்குப் பல பெயர்கள் தமிழில் உண்டு. அணிந்துரையைத் தந்துரை என்றும் கூறலாம். தகவுடையவர் தரும் தகுதியால் நூலும் தகுதி பெறும்; அணிந்துரை தருவோரும் தகுதி பெறுவர். எத்துணைப் பக்கங்களுக்கு நூல் விரிந்திருந்தாலும் அதனைச் சில பக்கங்களில் தந்து, கற்போரைப் படிக்கத் தூண்டுமாறு ˜ய்யவல்ல ஆற்றல் அணிந்துரைக்கு உண்டு.

,க்கு முகப்பு

நூன்முகம் என்றே இது நவிலப்படும். முகபடாம் யானைக்கு அழகு! அணிந்துரை, நூலுக்கு அழகு! நூலுக் குரிய முகமே அணிந்துரைதான். நூலென்னும் தோட்டத்தில் புகும்முன்பே, நூலின் மணத்தை அணிந்துரை உணர்த்திவிடும்.

நூல் நவில் திறத்தை நுனித்தறிந்தும், நுணுகி உரைத்தும் பெயர் பெற்றவர்கள் பலர் உள்ளனர். மேலைநாட்டிலும், நம் நாட்டிலும் நூலுக்கு அணிந்துரை தந்து பலர் தம் தகுதியை வெளிப்படுத்தியுள்ளனர். சேக்சுபியர் நாடகங்களுக்கான முன்னுரைகள் பற்பல கோணங்களில் வெளிவந்துள்ளன. அவற்றில் அறிநிலையும் ஐயநிலைகளும் உள்ளன என்று கருதுவர். நாடக ஆசிரியரான பெர்னாட்சாவின் முன்னுரைகள் மிக நீண்டவை; எள்ளல் சுவையுடன் கூடிய கூர்மையான அறிவுப்புலப்பாட்டினைக் காட்டுவன.

தமிழ்ப்பதிப்புலகில் தடம் பதித்த தமிழ்த்தாத்தா உ.வே.சா. பதிப்புரைகள் நூல் நுவல் செய்திகளை உள்ளடக்கிக் காட்டும். அவ்வாறு காட்டுவதோடு, பதிப்பித்த நூலின் பன்முகத்தன்மையையும் புலப்படுத்துவனவாய்

இருக்கும். பதிப்புரை என்பது முன்னுரையோ நூன்முகமோ அன்று. எனினும், தாம் எடுத்துக்கொண்ட நூலை ஆயப்புகுதல் என்ற வகையில் நூற்செய்திகளை முழுதுறவும் பழுதறவும் தருவதால் அது நூல்பற்றிய அறிமுகத்தை அள்ளித்தரும்.

தமிழில் சிறந்த படைப்பாளிகளுள் ஒருவரான செயகாந்தன் தமது படைப்புகளுக்கு நீண்ட முன்னுரை அளிப்பது வழக்கம். படைப்பினை அணிசெய்வதாய் இருத்தலோடு, சமூகத்தைப்பற்றிய அலசலும் எள்ளலும் அதில் சேர்ந்துகொள்ளும்.

அணிந்துரை இலக்கியம் ஒரு வகையா, வளர்நெறியா?

'அணிந்துரை இலக்கியம்' என்னும் ஓர் இலக்கிய வகை(?) உருவாவதற்கும், அதுகுறித்த வரையறையை உருவாக்குவதற்கும் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய தடத்தைப் பதித்துள்ளார், சிலம்பொலி சு. செல்லப்பன். தம் அணிந்துரைகளால் பெயர் பெற்ற சான்றோர் என் இவரைச் சிறப்பிக்கலாம். சிறந்த சொற்பொழிவாளராய்த் திகழும் இவர், அணிந்துரைகளின் நாயகராகவும் இலக்கிய உலகில் தம்மை அடையாளப்படுத்தியுள்ளார். தமிழில் மிகுதியாய் அணிந்துரை வழங்கியவர் இவராய்த்தான் இருக்கமுடியும்.

தொகுதி மூன்றில் இடம் பெற்றுள்ள அணிந்துரைகள் ஒரு வெள்ளிவிழாக் கால அளவின. இந்த மூன்றாம் தொகுதியில் கவிதைபற்றிய அணிந்துரைகள் ஒன்பது; காவியநூல் இரண்டு; கட்டுரைநூல் மூன்று; ஆய்வு, வரலாறு ஆகிய வகைகள் ஒவ்வொன்றுக்கும் வழங்கிய அணிந்துரைகள் இரண்டு; புதினம் ஒன்று; மொழிபெயர்ப்பு நாடகம் ஒன்று; கவிதை நாடகத்திற்கு வழங்கிய அணிந்துரை இரண்டு; ஆக மொத்தம் இருபத்திரண்டு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

காதா சப்தசதி, காதற்கனிகள், நாஞ்சிலார் கவிதைகள், அழகோவியம், கவியரங்கக் கவிதைகள், வண்ணநிலவின் வளர்கலை, மூன்று தமிழ்க்களம், மலைநாட்டின் மீதினிலே, மலேசியத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம் ஆகியன கவிதை நூல்கள் ஆகும். கலித்தொகை ஓர் அகழாய்வு, கண்ணகி புரட்சிக்காப்பியத்தின் புதுமைகள் ஆகிய இரண்டும் ஆய்வு நூல்களாகும். அகதி, கனகாபிஷேகமாலை ஆகியன குறுங்காப்பியங்களாகும். தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள்,

சிந்தனைச் சோலை, புரட்சிப் பொன்மொழிகள் ஆகிய மூன்றும் கட்டுரை நூல்கள் ஆகும். யாருக்காக உலகம் என்பது புதினமாகும். பிரியதர்சிகை என்பது மொழி பெயர்ப்பு நாடகமாகும். தீரன் சின்னமலை என்னும் தலைப்பில் அமைந்த இருநூல்கள் வரலாற்றடிப்படையில் அமைந்துள்ளனவாம். வடிவேலனாரின் தீரன் சின்னமலையும், நலங்கிள்ளியின் பொன்னூர்தியும் நாடகக் காப்பியங்களாம். ஆக, இருபத்திரண்டு நூல்களைப் படித்த உணர்வை ஒரே தொகுதியில் தந்து, நூல்களுக்குப் பெருமையும் புகழும் தேடித் தந்திருக்கிறார், சிலம்பொலியார்; இவர் அணிந்துரைகள் அந்த நூல்களைத் தேடிப்பிடித்துப் படிக்கத் தூண்டியிருக்கின்றன என்று துணிந்து சொல்லலாம். அந்த அளவிற்கு இவர் அணிந்துரைகள் நூலை அணி செய்திருக்கின்றன. வளரும் இளைய தலைமுறையினர் நூலை ஆழமாய் அறிவதற்கான கூறுகளைச் சிலம்பொலியாரின் அணிந்துரைகள் கொண்டுள்ளன. இலக்கிய வகையில் இடம்பெற முயலும் அளவிற்குப் பல ஆக்கக் கூறுகள் இவர் அணிந்துரையில் செறிந்துள்ளன.

சிலம்பொலியார் மிகுதியும் கவிதை நூல்களுக்கே அணிந்துரை அளித்துள்ளார். இலக்கிய வகைகளுள் இவரைக் கவிதையே மிகவும் ஈர்த்திருக்கிறது என்பதனை அணிந்துரைத் தொகுதிகளைக் கணக்கெடுத்தால் அறியலாம். அந்த அளவிற்கு மிகவும் நுகர்ச்சிக்குரியதாய்க் கவிதை இவரை ஆட்கொண்டிருக்கிறது. சங்க இலக்கியம், திருக்குறள், சிலம்பு, மேகலை, பெருங்கதை, இராமகாதை, பாரதி, பாவேந்தர் படைப்புகள் முதலியன இவர் நெஞ்சிலும் நினைவிலும் வற்றிப்போகாத அருவியாய்த் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும். இக்காலத்தெழுந்த இலக்கிய வகைகளிலுங்கூட இவர் நாட்டங்கொண்டவர்.

பரந்து பட்ட நூற்பயிற்சி, நூலில் ஆழங்காற்பட்டு அதன் சுவைநலத்தை வெளிக்கொணரும் திறம், நூல் நுவல் செய்தியைத் தருதல், தாம் விரும்பிக் கற்ற நூல்களிலிருந்து ஒப்புமை காட்டல், நயம் பாராட்டல், நூலை நுனித்தறிந்து படைப்பாளரே வியக்கும் அளவிற்குக் கருத்தாழம் காட்டுதல், ஆசிரியரை மனந்திறந்து பாராட்டும் பண்பு முதலான போக்குகள், சிலம்பொலியார் அணிந்துரையின் சிறப்பான அடையாளங்களாகும்.

திறனாய்வு நுட்பம்

இவர், திறனாய்வுத்திறம் படைத்தவர் என்பதனை நூலின் பக்கந்தோறும் பதிவு செய்திருப்பதனைக்கொண்டு அணுகமுடியும். ஆந்திர நாட்டின் 'காதா சப்தசதி' என்னும் அக இலக்கியத்தைப்பற்றி எழுதும்போது இவரின் திறனாய்வுத்திறம் நன்கு விளங்குகிறது. அந்த நூலைத் தொகுத்தவன், மன்னன் ஹாலன் என்பவன். அவன் பாடல் புனைபவனாயும் இருந்துள்ளான்.

'தன் பாடல்களை வெளியிட விரும்பிய மன்னன் அவற்றைத் தனியே வெளியிடாது, சிறந்த புலவர் பலரின் அரிய கவிதைகளையும் இணைத்து இந்நூலைத் தந்துள்ளான் என்று கூறுவது பொருத்தமாய் இருக்கும்' (பக். 2)

எனக் கூறியிருப்பது திறனாய்வுக்கூறுடையது.

திறனாய்வுப் பார்வையைச் செழுமையாய்த் தருவதோடு பண்பாட்டு அடிப்படையிலும் நூல் விளங்க வேண்டும் என்னும் கருத்தை முன்வைத்திருப்பதற்குக் கீழ்க்காணும் செய்தியை எடுத்துக்காட்டலாம்.

தேள்கடித் தது(டு)எனத் தோள்கள் உதறும்
மங்கையைக் காதல் மருத்துவன் பாலே
செங்கை பற்றித் திறன்மிகு தோழியர்
கணவன் கண்முன் கடத்திச் சென்றார்

— காதா சப்தசதி, பாடல் 200

என்னும் பாடற்பொருளை விளக்கும் அணிந்துரையாளர்,

தோழியர், மருத்துவத்திற்கென அவளை அழைத்துச் செல்வதுபோல் கள்ளக்காதலனாகிய மருத்துவனிடம் அழைத்துச் சென்றனர். இப்படியும் நிகழுமா?

என்று கேட்டுவிட்டு,

மனித வாழ்க்கையில் உள்ள விலங்குத்தன்மையை விவரிக்கிறது, இப்பாடல்.... சமூக ஒழுகலாற்றில் உள்ள இக் கரும்புள்ளிகளைத் தொகுப்பில் ஹால மன்னன் நீக்கியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. - (பக். 20)

என்னும் கருத்துரைப்பது திறனாய்வு நெஞ்சத்தைக் காட்டுகிறது.

'கண்ணகி புரட்சிக்காப்பியத்தில் புதுமைகள்' என்னும் நூலின் அணிந்துரையில் சிலம்பொலியார் தமக்கே உரித்தான பாங்கில் திறனாய்வுத்திறம் காட்டியுள்ளார்.

பகுத்தும் வகுத்தும் அளித்துள்ள அணிந்துரை ஆய்வொளி பாய்ச்சியிருக்கிறது. சிலம்பை எத்துணை அறிஞர்கள் தம் பார்வைகளில் மாற்றமும் புதுமையும் தோன்றப் படைத்திருக்கிறார்கள் என்பதை வரலாற்றுணர்வோடு சுட்டிவிட்டு, அதன் கால கட்டத்தைப் பண்பாட்டு அடிப்படையில் நிறுவியுள்ளார். 'சிலப்பதிகாரம் ஆரியப் பண்பாடு தமிழ்ப்பண்பாட்டுடன் கலக்கத் தொடங்கிய காலத்தில் எழுந்த காப்பியம்' எனச் சுட்டிக் காட்டிவிட்டுச் சிலம்பின் மூலக்கதையைச் சிதைக்காமல், தம் கொள்கை களுக்கு முரண்படுகின்ற இடங்களில் சிற்சில மாற்றங் களுடன் புதுமைகளையும் புகுத்திப் பாவேந்தர் எழுதியுள்ள திறத்தை எடுத்துக்காட்டுகிறார். அவர் எவ்விடங்களில் மாற்றமும் புதுமையும் செய்துள்ளார் என்பதை விளக்குகிறார். 'பாண்டியனிடம் கண்ணகி வழக்குரைத்த களத்தை' எப்படிப் புரட்சிக்காப்பியம் தன் நோக்கில் உணர்த்துகிறது என்பதைச் சிலம்பொலி நிலைநாட்டுகிறார்.

கண்ணகி வழக்காடுவதை இளங்கோவினும் விரிவாய் எடுத்துக்காட்டுகிறார், பாவேந்தர். அவள் வாதம் நீள்கிறது. அவ்வழக்கை விசாரிக்க அரசனுக்கு உரிமை இல்லை என்றும் அவள் கூறுகிறாள்.

அரசனாகிய அவன், நாட்டின் பொதுச்சொத்தை இழந்துவிடவில்லை; தன் தனிச்சொத்தை இழந்தவன். அந்த நிலையில் அவன் ஒரு வழக்காளி; முறையீட்டாளன். இவ்வாறாய், தனிஆள் ஒருவன் வழக்கைத் தானே தன்பால் சொல்லிக்கொள்வதும் தீர்ப்பையும் தானே கூறிக்கொள் வதும் முறையா என அரசனின் அதிகாரத்தை இடித்துரைக் கிறாள். இற்றை நீதிமன்ற வாதம்போலக் காப்பிய நீதிமன்றத்தை மாற்றியிருக்கிறார், பாவேந்தர் (பக். 99)

என்று வரும் கருத்தாக்கம் அரிமா நோக்காய் அணிந்துரையைச் சிறக்கவைத்துள்ளது.

'அகதி' என்னும் காப்பியத்தை மிக விரிவாய் ஆய்வணிந்துரையாய்த் தந்துள்ளார், சிலம்பொலியார். அணிநயத்தை விரிவாய் விளக்குகிறார். தற்குறிப்பேற்றம் பற்றித் தம் கருத்தைக் கீழ்க்காணுமாறு எடுத்துரைப்பர்.

'வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட' எனும் இளங்கோவடிகளின் இப்பாடலடியே தமிழ் இலக்கியப் பரப்பில் முதன்முதலில் எழுந்த தற்குறிப்பேற்றம் (பக். 113)

என அறுதியிட்டுக் கூறியிருப்பது எண்ணிப்பார்க்கத்தக்கது.

சிலம்பொலியார், பெயர் ஆராய்ச்சியில் தம் ஆய்வுக்கண்ணோட்டத்தைச் செலுத்தியுள்ளமையைப் பின்வரும் பகுதி உணர்த்தும்.

'கனகாபிஷேக மாலை என்னும் சிறந்த காப்பியத்தைப் பாடியதால் ஒருவேளை புலவர் கனக கவிராயர் என்ற சிறப்புப் பெயரால் வழங்கப்பட்டிருப்பாரோ என்றும் எண்ணிப் பார்க்கலாம். கனக கவிராயர் பாடியதால் நூல் கனகாபிஷேக மாலை என்னும் பெயரைப் பெற்றதா, கனகாபிஷேக மாலையைப் பாடியதால் கவிஞருக்குக் கனக கவிராயர் என்ற சிறப்புப் பட்டம் கிட்டியதா என்ற முறையிலும் பெயர்க்காரணத்தை ஆராய இடமுண்டு.' (பக். 129)

இவ்வாறு திறனாய்வோடு எழுதும் போக்கை அணிந்துரை தந்திருப்பது ஆய்வுப் புலமைக்குச் சான்றாகும்.

இக்காலத்தைய சமூகக் கண்ணோட்டத்தையும் இயைபுற எடுத்துக்காட்டும் திறத்தை வரலாற்று நூலான 'தீரன் சின்னமலை' என்னும் நூலுக்கு அளித்துள்ள அணிந்துரையில் காணலாம். சின்னமலையின் கதையை விரிவாய் எடுத்துரைத்து, அதில் வேலப்பன் தங்கை தெய்வநாயகி,

"'பெண்கள் போரில் ஈடுபடக்கூடாதா? இன்னும் நூறு அல்லது இருநூறு ஆண்டுகளில் பெண்கள் நாட்டை ஆள வந்துவிடுவார்கள். எல்லாத் துறைகளிலும் சமமாய் இருப்பார்கள்' என்றாள். அதற்கு வேலப்பன், 'உன் வாக்குப் பலிக்கட்டும். இந்தத் துணிவும் தொலைநோக்குந்தான் எனக்குப் பிடித்தது' என்கிறான்."

அணிந்துரையாளர் எழுதுவது பின்வருமாறு

'தெய்வநாயகி வாக்காய் ஆசிரியர் கூறியிருப்பது அருமை! தெய்வநாயகியின் வாக்கு முழுமையாய் நடைமுறைக்கு வருவதாகுக' (பக். 144)

எனச் சுட்டியிருப்பது நிகழ்கால நாட்டு நடப்பினை அறியும் நல்லுள்ளம் பெற்றவர் என்பதையும், பெண்ணுரிமை போற்றும் பெருந்தகையாளர் என்பதையும் காட்டும்.

'சிந்தனைச்சோலை'க்குத் தந்த அணிந்துரையில் 'இனிய உளவாக', 'அறம் போலும்' ஆகிய குறட்பாக்களுக்கு (பக். 177-178) நூலாசிரியருக்கும் அப்பால் சென்று நுனித்தறியும் வல்லமையை அறியலாம். விளக்கவியல்

ஆய்வுரையாய்த் திகழ்கிறது, அந்நூலுக்கு அளித்துள்ள அணிந்துரை.

'கவியரங்கக் கவிதைகள்' என்னும் நூல் அணிந்துரை யின்கண் கண்டுள்ள பொருள்விளக்கம் சுவைபட அமைந்து சிறக்கிறது (பக். 202).

'வண்ண நிலவின் வளர்கலை' என்னும் தலைப்பில் அமைந்துள்ள அணிந்துரையில், கவிஞர் வேள்நம்பி தம்மை முட்பலா என்று பாடலில் சுட்டியதற்கும், கவிஞர் ஒட்டும் நட்பு, ஒட்டா நட்பு என்று பாடியமைக்கும் சிலம்பொலியார் தந்துள்ள விளக்கம் அழகியல் உணர்வோடும் விளக்கவியல் ஆய்வோடும் அமைந்து சிறக்கிறது (பக். 210-211).

திறனாய்வுலகில் மேலை நாட்டுத் திறனாய்வாளர்கள் கருத்தை மேற்கோள்களாய்ப் பெய்து தம் கருத்தைத் தெளிவுறுத்துவர். அந்த வகையில் மூவேந்தர் முத்து எழுதிய 'யாருக்காக உலகம்?' என்னும் புதினத்திற்கு அளித்த அணிந்துரையில், கதைமாந்தர் படைப்பைத் திறனாயும் போது துர்கனேவ், இராபர்டு லிட்டல் முதலியோர் கருத்துகளை எடுத்தாள்கிறார்.

அணிந்துரையாளர் சிலம்பொலியார், ஈரோடு வடிவேலனார் எழுதிய 'தீரன் சின்னமலை' வரலாற்றுக் காப்பியத்திற்கு விரிவான அணிந்துரை அளித்துள்ளார். அரிஸ்டாடில் கருத்தை ஒட்டி நாடக மாந்தர் ஆக்கம் பெற்றிருப்பதைச் சுட்டியுள்ளார். நாடகத்தின் ஐந்து நிலைகளை விபுலானந்தர் வழிநின்று தீரன் நாடகத்தைத் திறம்பட ஆராய்ந்துள்ளார். கவிஞர் நடேசனின் 'தீரன் சின்னமலை' என்னும் வரலாற்றுக்கதை உரைநடையும் கவிதையும் கொண்டு மிடைந்த காப்பியம். அந்நூலைப் 'பாட்டு இடையிட்ட உரைநடைக் காப்பியம்' எனச் சிறப்பித்துப் போற்றுகிறார்.

ஒப்புமை உணர்வு

தமிழில் புலமையாற்றலும் பன்னூற்பயிற்சியும் சிலம்பொலியாருக்கு இருப்பதால் அணிந்துரை வழங்கும் போது ஒப்புமைப்படுத்திக் காண்பதைத் தம் இலக்கியக் கருத்தியலாய்த் தக்கவைத்துக்கொண்டிருப்பது பாராட்டக் கூடியதாய் உள்ளது. எந்த நூலுக்கு அணிந்துரை தந்தாலும் ஒப்புமை காட்டாமல் அவர் மனம் ஓய்வதில்லை. அதற்கு

அவர் பெற்றிருக்கும் பரந்துபட்ட அறிவே காரண மெனலாம்.

'காதா சப்தசதி' என்னும் நூல் அகத்துறை சார்ந்தது. ஆந்திர நாட்டு அகநானூறு என்று சிறப்பித்துப் போற்றப் படுவது. அதற்களித்த அணிந்துரை மிக விரிவானது.

தமிழ்ச்சங்க இலக்கியங்களுடன் ஒப்பீட்டாய்வு செய்தற்குரிய நூலாய் காதா சப்தசதி இருந்து வருகிறது. காதா சப்தசதிப் பாடல்களைப் படிக்கும்போது சங்க இலக்கியப் பாடல்களைப் படிக்கின்ற உணர்வே நமக்குத் தோன்றுகிறது (பக். 3).

ஒப்பியலில் இருநூல்களுக்கும் இடையேயுள்ள பொதுத்தன்மைகள் உணர்த்தப்படவேண்டும். இரு நூல் களுக்குள்ள வேறுபாடுகளைக் காட்டலாம். ஒப்பிடப்படும் நூல்களுக்கிடையே ஒரு நூலைவிட மற்றொன்று சிறந்தது எனக் கூறுவது ஒப்பியல் ஆகாது. காதா சப்தசதிக்கும் சங்க அக இலக்கியத்திற்கும் ஒப்புமை காட்டிவிட்டுச் சில வேற்றுமைப் பண்புகளை ஆய்கிறார், சிலம்பொலியார்.

சங்க இலக்கிய அகப்பாடல்களில் கூட்டுக் குடும்ப வாழ்க்கைபற்றிய செய்திகள் இல்லை. ஆனால், காதா சப்தசதியில் பல பாடல்கள், கூட்டுக் குடும்ப வாழ்க்கையினைச் சித்திரிக்கின்றன... தமிழ் அக இலக்கியங்கள் உயர்ந்த ஒழுகலாறுகளை மட்டுமே சுட்டுவன. கணவனிருக்க அயல் ஆடவனோடு தொடர்பு கொள்ளும் கேடுகளை அங்குக் காணமுடியாது. அதனால், சமூகத்தில் அத்தகைய கேடான நிலையே இருந்திருக்காது என்று சொல்லமுடியாது. அவற்றை இலக்கியம் எடுத்துக் கூறக்கூடாது என ஒதுக்கி யிருந்தனர். தமிழ் அகத்துறை புறக்கணித்த பெருந்திணை யின்பாற்படும் பொருந்தாக் காமச்சுவையும் சப்தசதியில் உண்டு (பக். 19-20)

என்று குறிப்பிட்டுரைப்பது ஒப்பீட்டுத் திறமிக்கவர் சிலம்பொலியார் என்பதை நிலைநாட்டியுள்ளது. இரு நூல்களையும் ஆய்ந்து கருத்திருத்திய இவரின் நடுநிலை இகவாத பண்பு சிறந்த ஆய்வறமாகும்.

'பிரியதர்சிகை' என்பது உதயணன் கதையின் ஒருபகுதியை விளக்கும் நாடகம். வடமொழியில் ஹர்சரால் எழுதப்பட்ட இந்த நாடகத்தைத் தமிழில் பண்டித முத்துவேங்கடாசலம் மொழிபெயர்த்துள்ளார். உதயணன்

கதையாதலால், பிரியதர்சிகை பாத்திரத்தைப் பெருங் கதையில் வரும் மானனீகை பாத்திரத்தோடு ஒப்பிடுகிறார். ஹர்சரின் பாடற்கருத்துகள் பலவற்றைத் தமிழிலக்கியக் கருத்துகளோடு ஒப்பிட்டு மகிழலாம் என்று கூறிவிட்டுச் சில நிகழ்ச்சிகளைப் பெருங்கதை, நளவெண்பா (பக். 28-29) ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள நிகழ்ச்சிகளோடு ஒப்புமை காட்டியுள்ளமை இவரது அகலாய்விற்குச் சான்றாகும்.

'மண்ணியல் சிறுதேர்' என்னும் பெயரில் பண்டிதமணி கதிரேசனார் மொழிபெயர்த்த 'மிருச்சகடிகம்' என்னும் வடமொழிக் காவியத்தைச் சில மாற்றங்களோடு 'பொன்னூர்தி' என்னும் பெயரிட்டுக் காப்பியமாய் இயற்றியுள்ளார், கவிஞர் நலங்கிள்ளி; அதனைச் சிலப்பதிகாரக் காட்சிகளோடு பொருந்தக் காட்டும் திறம் ஒப்புமைக்குச் சிறந்த சான்றாகும். நலங்கிள்ளி பண்டை இலக்கியங்களில் தோய்ந்தவர் என்பதைச் சிலம்பொலியார் சுவைபட ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். தமிழ் இலக்கியத் தோடு அக்காப்பியக் கவிதையை ஒப்பிட்டு மகிழ்ந்துள்ளமை ஒப்புமை உணர்வு இவரது உள்ளத்தில் வற்றாத சுரங்கமாய் இருந்து, 'இன்னும் இன்னும் எடுத்துக்கொள்க' என்று சொல்வதுபோல் இருக்கிறது.

ஒரு சிறு காட்சி என்றாலும் அதனை ஒப்புமைப்பட உரைப்பதில் சிலம்பொலியார் நாட்டம் மிகுந்தவராய் உள்ளமைக்குச் சில சான்றுகளைக் காட்டலாம்.

'அகதி' காவியத்தில், கழைக்கூத்தாடி ஒருவன் வித்தை காட்டிவரும்போது, காணவந்த கூட்டத்திடம் துணியேந்திக் காசு கேட்கும் காட்சிக்குப் பாவேந்தர் பாடலொன்றைச் சான்று காட்டுவதும் (பக். 116); ஔவையின் வாக்கான 'சேரிடம் அறிந்து சேர்' என்பதற்குரிய விளக்கமாய் வரும் காட்சி ஒன்றைத் துரை. மாலிறையனின் 'காதற்கனிகள்' நூலில் இடம்பெற்றுள்ள ஒரு கவிதையோடு பொருத்தி யுரைப்பதும் (பக். 121) இலக்கியத்தைப் பலகால் பயின்றதனோடு விடாது, உளத்தொடு அமைத்து, வேண்டும்வழி எடுத்தோதும் திறனைப் பெற்றுள்ளார் என்பதனை உணர்த்தும். இவர்தம் பண்டை நூற்பயிற்சி அளவிடற்கரியது என்பதை இவர் அணிந்துரை தருவதி விருந்து அறியலாம். இத்தொகுதியிலும் அதனைக் காண முடிகிறது. குறிப்பாய், கனகாபிஷேகமாலை என்னும்

நூலுக்களித்த அணிந்துரையில் அதனைச் சிறப்பாய்க் காணலாம். கவிதைகளுக்கு இணைவரை (parallelism) தருகின்ற திறன், தமிழில் இதுகாறும் அணிந்துரை தந்துள்ளோருள் சிலம்பொலியாரைத் தவிர வேறு எவரிடமும் இல்லை என்று துணிந்து கூறலாம்.

தீரன் சின்னமலைபற்றி மூன்று நூல்கள் இவரது அணிந்துரைப்பார்வையில் வெளிவந்துள்ளன. அவற்றுள் ஈரோடு வடிவேலனாரின் நூலுக்களித்துள்ள அணிந்துரையில், சின்னமலைபற்றிப் புலவர் குழந்தை, கவிஞர் சக்திக்கனல், கே. ஏ. மதியழகன், தே. ப. சின்னசாமி, புலவர் இராசு முதலியோரின் கருத்துகளையும் ஒப்பிட்டிருப்பது எண்ணுதற்குரியது. தீரன் சின்னமலையைக் காட்டிக் கொடுத்தவன் பெயர்பற்றிய இவர்களின் கருத்துகளை எடுத்துக்காட்டி அணிந்துரையாளர் தம் நோக்கில் முடிவு கூறுகிறார். சாமியப்பன் எனவும், ஆண்டியப்பன் எனவும், நல்லப்பன் எனவும் பெயர் நிலவுவதை,

> *பெயர் கற்பனை என்று தெரிகிறது. அந்தக் கொடியவன் பெயரை நல்லப்பன் என்று குறித்திருக்க வேண்டாம்; பொல்லப்பன் என்று கூறியிருக்கலாம். (பக். 158)*

எனச் சுட்டியிருப்பது நோக்கத்தக்கது.

'சிந்தனைச் சோலை' என்னும் நூலில் இடம் பெறும் சோலைக் காட்சியை இயைபுபடுத்துதல் (பக். 175) காட்சி ஒப்புமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. நாஞ்சிலாரின் கவிதை நூலில், அழகுபற்றி எடுத்துக்காட்டுத் தரும்போது, பாவேந்தரின் அழகின் சிரிப்பில் வரும் ஒரு காட்சியை இடத்திற்கேற்பச் சிலம்பொலியார் ஆள்கிறார் (பக். 190).

ஒப்புமை காட்டுவதிலோ, இணைவரையாய்த் தருவதிலோ அணிந்துரையாளரின் ஆற்றல் அறியக்கிடக் கிறது. சங்க இலக்கியம், குறள், சிலம்பு, பாவேந்தர் கவிதைகள் ஆகியவற்றைக் காட்டுவதில் இவர் பெரு விருப்புடையவர் எனலாம். அவற்றைச் சுவைப்பதில் அறாத இன்பம் பெற்று, அணிந்துரையில் தந்து படிப்பவரைச் சுவைக்கச் செய்யும் பாங்கினைச் சிலம்பொலியாரிடம் மட்டுமே காணமுடியும்.

விளக்கமும் காட்சிப்படுத்துதலும்

ஒன்றனைக் காட்சிப்படுத்துவதில் அணிந்துரையாளர் அகமகிழ்கிறார். அதில் விளக்கமும் விரிவும்பட

எடுத்துரைக்கலாம் என்று கருதி, அதற்கேற்ற வகையில் காட்சிப்படுத்துவது இவருக்குக் கைவந்த கலை. இப்போக்கினை இவரது பேச்சுக்கலையிலும் காணலாம். காதா சப்தசதியில் 'கலவியில் மென்துகில் சிவன்தன், இருகரம் பொத்தி' எனவரும் பாடலுக்கு இவர் அளித்திருக்கும் விளக்கம் மிகுசுவை தருவதாகும் (பக். 11). 'காதற்கனிகள்' என்னும் துரை. மாலிறையன் கவிதை நூல் அணிந்துரையில், இயற்கை வருணனை ஒன்றனை விவரித்துள்ளார்.

'ஒரு தட்டில் வெல்லக்கட்டி, ஒரு தட்டில் சுவைப்பால் கட்டி' என்று கவிதைக்குத் தந்துள்ள விளக்கம் காட்சி வருணனையை நன்கு புலப்படுத்தியுள்ளது (பக். 119). 'அடிக்குங்கைப் புலவனுக்கே அரும்புகழ்ப்பண் கொடுக்கத் துடிக்குந்தண் முழவுபோல' என்று வரும் உவமையை அழகிய முறையில் காட்சிப்பட விளக்குகிறார்.

அடிக்கின்றபடி அடித்தால்தான் முழவு சரியான இசையைத் தரும். அதுபோல, படிக்கின்ற முறையிலே படித்தால், படிப்பின் பயன் கிட்டும். அடி பிசகினால், முழவொலியும் பிசகுவதுபோல, முறை தவறினால் படிப்பின் பயனும் பிழைபடும் என்னும் கருத்துப் புலப்பட, எண்ணி எண்ணி உணரத்தக்க உவமையைச் சொல்லிச்செல்கிறார் (பக். 120)

என எழுதியுள்ள விளக்கம் காட்சிப்பட அமைந்து வியக்கக் கூடியதாய் உள்ளது. காதற்கனியில் மற்றொரு பாடலைக் காட்சிப்படுத்தி விளக்குகிறார். 'அந்தப் பச்சைக்கிள்ளைக்குக் கொத்தப் .பழுத்ததோர் பழமும் ஆனான்' என்ற பாடற் பொருளை,

காப்பியத் தலைவி மங்கையோ தன் கணவனிடம் ஊடல்கொள்கிறாள். சொல்லால் அவனைக் கிள்ளிவிடுகிறாள். ஆதலால், கவிஞர் அவளைக் கிளியாகவும், அவனை அக்கிளி கொத்தும் பழமாகவும்' (பக். 44).

அணிந்துரையில் விளக்கியிருப்பது அழகிய காட்சிப் படுத்தலாகும்.

'சிந்தனைச் சோலை' என்னும் நூலில், ஆர்.சி. தமிழன்பன், கடலை நிலமங்கையின் ஆடையாய்க் கூறுவதனோடு ஒப்புமையாய்ச் சிலம்பில் வரும் பாடலடி களைக் காட்டிவிட்டு, இக்கால நிலையைக் காட்சிப்படச்

சொல்லி, இடையின் நுண்மையைக் கவிஞர் நயமாய்க் கூறியிருப்பதனைக் காட்சிப்படுத்துகிறார் (பக். 176).

'வண்ணநிலவின் வளர்கலை' என்னும் நூலின் அணிந்துரையில், நட்பு என்பதுபற்றி விளக்கமாய் எழுதிச் செல்கிறார். அதுவும் காட்சிப்படுத்தப்பட்ட விளக்கமாகி விருந்து படைக்கிறது. 'மூன்று தமிழ்க்களம்' என்னும் கவிதை நூலில், கற்பனை குறித்த விளக்கமான செய்திகள் கிடைக்கின்றன (பக். 220).

நடைநலமும் சொல் ஆளுமையும்

அணிந்துரையாளரின் நடை நலத்தை அறிதற்கு ஏதுவான இடங்கள் பல. சிலம்பொலியாரின் நடை எல்லோரையும் ஈர்க்கக்கூடிய இனிய எளிய நடை. அவர் பேச்சுப் போலவே, எழுத்தும் சீரோடு செல்கிறது. சான்றுகள் பின்வருமாறு

'பகல் வேளை நிலாக்காண்டல் அரிது' எனும் மொழி பெயர்ப்பு நம் உள்ளத்தே நிலவின் குளிர்ச்சியைப் பெய்கிறது (31).

'சென்ற இளமை தரற்கு அரிது' என்னும் தொடர், காதல் ஏக்கத்தால் ஏற்படும் அன்பின் பிழிவு (60).

இக்காப்பியத்தின் முதற்பாகத்தில் எண்சீர் விருத்தம் கவிஞரின் ஏவல் கேட்டு ஏற்றம் பெற்றுள்ளது; இரண்டாம் பாகத்திலோ அறுசீர் விருத்தம் அவர் ஆணைக்குக் கட்டுப்பட்டு அழகு கூட்டுகிறது (118).

வட்டத்தின் கை வரைந்துகொண்டே இருக்கட்டும். புதிய புதிய வட்டங்கள் தோன்றிக்கொண்டே இருக்கட்டும்; வட்டத்திற்கு முடிவில்லை; நம் வட்டத்தின் (நடேசனின்) எழுத்துகளுக்கும் என்றும் முடிவில்லை (169).

தமிழன்பன் எழுத்தோ தூய்மையானது; பயன் தருவது. மணம் தருவதில், முல்லை மலர்; பயன் தருவதில், முருங்கை மலர் (173).

முரண்படும் சொற்களை இணைத்து அரண்தரும் கருத்துகளைத் தமிழன்பன் கூறியிருப்பதை நூலுள் பல இடங்களில் காணமுடிகிறது (179).

கவிஞர் குலோத்துங்கன் இயற்கையைக் கண்டுகண்டு, உணர்ச்சி கொண்டுகொண்டு, அழகை மொண்டு மொண்டு தந்திருக்கிறார் (193).

சிலம்பொலியாரின் இத்தகைய நடைத்திறம் ஆற்றொழுக்கானது. கருத்தைத் தெளிவுபடக் கூறும் திறனுடைய நடை என்பதையும், சூழலுக்கு ஏற்ப உணர்ச்சி தரும் நடை என்பதையும் அறியலாம்.

சில சொற்களை ஆள்கின்ற இயல்பில் நடையருமை யோடு சொல்வளமும் பொலிவுபெறுவதைக் காணலாம். இவ்வகையில் குறிக்கத்தகுந்தனவாய்ச் சில சொல்லாட்சிகள் இத்தொகுதிக்கண் இடம் பெற்றுள்ளன. நோக்குகை (9), கதைநிறைகளம் (32), உள்நாடகம் (33), ஆய்வுழைப்பு (67), அறிஞர்சீர் பரவுவார் (90), பாட்டிடையிட்ட உரைநடைக் காவியம் (163) என்பனபோல் வ்ரும் இடங்களில் சொல்லின் தகவு இனிமை நல்குகிறது.

மொழியுணர்வு

இன்றைய நிலையில் நம் மொழியின் நிலை, பாதுகாப்பு அற்ற நிலையில் மனிதர் இருப்பதுபோலத்தான் இருக்கிறது. நம் மொழியில் பேசினால் கலப்பில்லாமல் உரையாடினால்கூட - அது கேலிக்குரியதாகும் இழிநிலை நம் மண்ணில் நிகழ்வது வேடிக்கை! நம் மொழியில் பேசுவதற்கு நாமே ஒரு தடையை ஏற்படுத்தி வருகிறோம். ஊடகங்களில் தமிழ் என்ன பாடுபடுகிறது என்று நமக்குத் தெரியும்! தமிழரிடமிருந்து தமிழை மீட்கவேண்டிய நிலை இருக்கிறது.

சிலம்பொலியாரின் மொழிபற்றிய உணர்வு வெளிப்பாடு அவரது அணிந்துரைகள் சிலவற்றில் ஆழமாய்ப் புலப்படுகிறது. பாவேந்தர் வழிவந்த மொழி உணர்வு சிலம்பொலியாரின் பேச்சில் காணப்படுவதுபோல, எழுத்திலும் பதிந்திருக்கிறது.

'கனகாபிஷேகமாலை'யில், 'தமிழிலாத் தமிழே போலும்' என்ற தொடர் வருகிறது. இதனைக் கருத்திருத்திய சிலம்பொலியார்,

இன்றைக்கு இத்தொடர் எவ்வளவு பொருந்தியிருக்கிறது என்பதை எண்ணிப்பார்த்து, இவ்விடரை நீக்கித் தமிழர்கள் 'தமிழுள்ள தமிழை'க் கையாள இப்பாடல் நமக்குத் தூண்டு கோலாய் அமைவதாக! (பக். 131).

என எழுதுகிறார். மொழியின் உயிரோட்டம்பற்றிய கருத் தினைப் பின்வருமாறு தெரிவிக்கிறார், சிலம்பொலியார்.

ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து, பிறகு வழக்கொழிந்துவிடுவது ஓர் உயிர் மொழிக்கு அழகன்று. மொழி, மனத்தோடு தொடர்புடையது (பக். 172)

எனக் குறிப்பிடுகின்றார்.

தமிழ்ச்சமூகம் வீரமறவர்களைக் காட்டிக் கொடுத்த இழிசெயல் நம் நாட்டு வரலாற்றில் இருந்துள்ளது. அது மானமற்ற செயல் என்பதை இன்னும் வரலாறு உணர்த்திக் கொண்டிருக்கிறது. இத்தகைய இழிநிலையை எண்ணிப் பார்த்த சிலம்பொலியார், 'தீரன் சின்னமலை' என்னும் வரலாற்று நூலுக்கு அளித்த அணிந்துரையில் கீழ்க் காணுமாறு எழுதுகிறார்

போர்களில் தம்மைச் சேர்ந்தவர்களையே காட்டிக் கொடுக்கும் துரோகச் செயல் தமிழக வரலாற்றில்தான் மிகுதியாய்க் காணப்படுகிறது. ஏனோ இவ்விழிநிலை? ஆங்கிலேயரின் தூதுவனாய்ச் சின்னமலையிடம் சேலத்துப் பாளையக்காரர் வந்தார். அப்போது எதிரிக்குத் துணை போகும் தமிழனை இகழ்ந்து சின்னமலை தன் தம்பியிடம் "தம்பி! தமிழனுக்கு முதல் எதிரி தமிழன்தான்! அவனும் முன்னேற மாட்டான்... மற்றவனையும் முன்னேறவிட மாட்டான்.... தமிழன் தலைவிதியே இதுதான்!" எனப் பேசுகிறான் (பக். 145).

சின்னமலை பேசுவதை இவ்வாறு எடுத்துக்காட்டி, 'இன்னும் இந்நிலை ஏனோ?' என்று குறித்துள்ளமை சிலம்பொலியாரின் தமிழ்ச்சமூக உணர்வின் வெளிப் பாடாகும். வாய்ப்பு நேருகிறபோதெல்லாம் தமிழுணர்வைக் கவிதையில் பாவேந்தர் உணர்த்தியிருப்பது போன்றே, அணிந்துரை தருகின்ற போதே, பாவேந்தரிடம் மிகுபற்றுக் கொண்ட சிலம்பொலியாரும் தம் மொழியுணர்வை வெளிப்படுத்தத் தயங்குவதில்லை.

வெறும் பாராட்டா?

நூலாசிரியரைப் பாராட்டுவது என்பது அணிந்துரை அறம். அணிந்துரை என்னும் பெயருக்கேற்பப் பாராட்டு முறைமையை அச்சொல் குறிக்கும். அணிந்துரை தருவோர் நூலாசிரியரைப் பெரும்பாலும் பாராட்டவே செய்வர். அந்த வகையில் சிலம்பொலியார் தக்க வகையில் தகவறிந்து பாராட்டுவதில் இவறித்தன்மை காட்டவில்லை. பாராட்டத்

தகுதியுடைய நூல்தான் என்பதை, படிப்போர் உணர்ந்து போற்றும்படி செய்வதற்கு ஒரு தூண்டுகோல் அனையது, அணிந்துரை. அதனைச் செவ்வனே செய்திருப்பதில் செல்லப்பனார் பலரையும் வெல்லப்பராகவே திகழும் பான்மையை இத்தொகுதி மெய்ப்பிக்கிறது.

பாராட்டு என்பது வெறும் புகழ்ச்சியுடையதாய் இருந்துவிடக்கூடாது என்பதனால் தம் அறத்துலாக்கோலைப் பயன்படுத்துகிறார், சிலம்பொலியார். பண்பறம் காத்துத் தம் அளவுகோலைச் சமனாய் இருக்குமாறு அணிந்துரை ஒவ்வொன்றையும் தந்துள்ளார்.

திருத்தொண்டர் புராணம் எழுதிய சேக்கிழாரைத் தொண்டர்சீர் பரவுவார் எனப் போற்றுவதுபோல, தமிழ் வளர்த்த நல்லறிஞர் வரலாற்றினை எழுதியுள்ள குன்றக்குடி பெரியபெருமாளை இனி, 'அறிஞர்சீர் பரவுவார்' எனப் போற்றிப் பெருமைப் படுத்துவோமாக! (பக். 91)

என்னும் பாராட்டு மிகப் பொருத்தமானதே என்பதை அந்த நூலைப் படித்தோர் உணர்வர்.

மதிப்புமிக்கதும் ஒளியுடையதுமான தங்கத்தைக் கொண்டிருக்கும் தங்கச்சுரங்கம்போல, அரிய கருத்துகள் பொதிந்து கிடக்கும் சிந்தனைச் சுரங்கமாய்த் தமிழன்பன் திகழ்கிறார் என்பதற்கு அவர் காட்டியுள்ள தங்கச்சுரங்க உவமையே போதிய ஒன்றாய் விளங்குகிறது (பக். 179).

என்னும் பாராட்டு நூலாசிரியரின் உண்மைத்தன்மையை விளக்கும். 'உண்மை, இது வெறும் புகழ்ச்சி இல்லை' என்ற கூற்று, அணிந்துரையாளர் எதனையும் அளந்து உரைப்பார் என்பதையே காட்டுகிறது.

ஆய்வுக்குறிப்பு

ஆங்காங்கே ஆய்வுக்குறிப்பைத் தருவதான அணிந்துரையைக் காணமுடிகிறது. 'கவியரங்கக் கவிதை' அணிந்துரையில் 'கவியரங்கப் பாங்கு' என்னும் பகுதி அவ்வாறு அமைந்துள்ளது (201). 'யாருக்காக உலகம்?' என்னும் புதினம் குறித்துக் கேள்விகளை அடுக்கிக் கூறியிருப்பதும் இதன்பாற்பட்டதாகும் (230). நூலின் தலைப்பே கேள்வியில் அமைந்திருப்பது கருதியோ என்னவோ, அணிந்துரையிலும் கதைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பக் கேள்வி கேட்டு, எதிர்பார்ப்பை ஏற்படுத்தித் தம்

ஆய்வுப்போக்கை நிறுவியுள்ளார். அணிந்துரைகளில் பல இடங்களில் ஆய்வுத்துளிகளை ஆங்காங்கே அள்ளித் தெளித்திருப்பினும், இரண்டனை மட்டும் இங்கே காட்டியிருப்பது பதச்சோறாகும்.

அணிந்துரை நாயகரின் அணிந்துரைப் பண்புகளை பட்டியலிட வேண்டுமானால் அவற்றைக் கீழ்க்காணுமாறு எடுத்துக்காட்டலாம்.

பன்னூல் பயிற்சிப் பரப்பினைக் காட்டல்;
தொன்னூல் கருத்துத் தோன்றக் கூறல்;
எழில்வெளிப் படுத்தல்; இயைபுற விளக்கல்;
வழிவழி வந்த மரபினைப் போற்றல்;
வடிவமைப் பிருத்தி வார்ப்பினைச் சுட்டல்;
படிநிலை வளர்ச்சிப் போக்கினை உணர்த்தல்;
நடுநிலை இகவா நனிபா ராட்டல்;
பலகால் பயின்றதைப் பொன்போல் பதித்தல்;
நயவுரை தந்து நலம்பல காத்தல்;
பயன்பா டுறவே பட்டிய லாக்கல்;
சமயங் கடந்த சதுரப் பாட்டினை
அமைவுறப் போற்றி ஆய்வுரை வழங்கல்;
நலம்பல நவின்று நனிஅணிந் துரைதரும்
சிலம்பொலி யாரின் சீர்மிகு சிறப்பே.

தொகுப்பாளரின் உரை

— முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

இதுவரை தமிழில் பல்வேறு துறைகளிலும் வெளிவந்துள்ள ஏறத்தாழ அறுநூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கு என் தந்தையார் திரு. சிலம்பொலி சு. செல்லப்பனார் ஆராய்ச்சி முன்னுரைகள், மதிப்புரைகள், அணிந்துரைகள் அளித்துள்ளார் என்கின்ற செய்தி தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள பலரைப் போன்றே எனக்கும் மலைப்பையும் வியப்பையும் ஏற்படுத்திய ஒன்றாகும்.

என் தந்தையாரைக் காணவரும் தமிழறிஞர்களிடம் உரையாடுகின்ற வாய்ப்பு எனக்கு அடிக்கடி கிடைத்தது; கிடைத்தும் வருகிறது. சென்னையில் நடைபெறும் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அவருடன் செல்லும்போது அவருக்கு நெருங்கிய நண்பர்களாயுள்ள தமிழ்ச்சான்றோர் பலரையும் சந்தித்துப் பேசுகின்ற வாய்ப்புக் கிட்டியது; கிட்டிக்கொண்டுமிருக்கிறது. அவர்களுடன் உரையாடும் வேளைகளில், என் தந்தையார் அளித்துள்ள அணிந்துரைகள்பற்றிப் பேச்சு எழுவதுண்டு; அணிந்துரைகள் மிகவும் சிறப்பாய் உள்ளன என்றும், அவற்றையெல்லாம் யாராவது தொகுத்து வெளியிட்டால் தமிழிலக்கிய உலகிற்கும், வரும் தமிழ்த் தலைமுறையினர்க்கும் பயனுள்ளதாய் அமையுமென்றும் அவர்கள் சொல்லக் கேட்டபோது, நாமே அவற்றைத் தொகுக்கலாமே என்ற எண்ணமும் ஆவலும் என்னுள் எழுந்தன.

என் எண்ணத்தை என் தந்தையாரிடம் வெளிப் படுத்தியபோது இசைவளித்தார். முதற்கட்டமாய்த் தந்தையார் அணிந்துரைகள் அளித்துள்ள நூல்களைத் தேடி,

அணிந்துரைகளின் படியினை எடுக்கும் பணியைத் தொடங்கினேன். என் தந்தையாரின் நூலகத்திலேயே சில நூல்கள் கிடைத்தன. என் தந்தையாரின் நூலகம்பற்றி இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாய் இருக்குமென்று கருதுகிறேன். தமிழ்நாட்டில் தனிப்பட்டவர்கள் வைத்திருக்கும் நூலகங்களுள் மிகச்சிறப்பானவையாயும் பெரியனவாயும் உள்ள மிகச்சில நூலகங்களுள் என் தந்தையார் தம் வீட்டில் வைத்திருக்கும் நூலகமும் ஒன்றாகும் எனில் அது மிகையன்று. அவர் நூலகத்தில் இலக்கியங்கள், இலக்கணங்கள், அகராதிகள், நிகண்டுகள், கலைக்களஞ்சியங்கள் என வகைவகையான அரிய நூல்கள் பத்தாயிரத்திற்கும்மேல் உள்ளன. தந்தையாரின் நூலகத்தில் மாக்கவி பாரதிக்குப்பின் தமிழில் வெளிவந்த மரபுக் கவிதை நூல்கள் மட்டும் ஈராயிரத்துக்கும் மேல் உள்ளன. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கி எழுந்துள்ள புதுக்கவிதை நூல்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டு உள்ளன. இன்னும் கூடுதலாகவே இருந்தன. எல்லா நூல்களையும் சேர்த்து வைக்க வீட்டில் போதிய இடமில்லையாதலின் ஆயிரக் கணக்கான நூல்களை நன்கொடையாய் அளித்துவிட்டார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், நண்பர்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து வரும் தமிழார்வலர்களுக்கும் ஏராளமான நூல்களைத் தந்துவிட்டார். அதனால் அவர் அணிந்துரை எழுதிய நூல்கள் பல அவரிடம் இல்லாமல் போயின. எனவே, வெளி நூலகங்களில் தேடி எடுக்க வேண்டியதாயிற்று.

என் கணவர் திரு. புஷ்பராஜ் அவர்கள் சென்னையில் கன்னிமாரா நூலகம், தேவநேயப் பாவாணர் நூலகம், மறைமலையடிகள் நூலகம் போன்ற பெரிய நூலகங்களிலும் இன்னும் பல்வேறு சிறிய நூலகங்களிலும் நூல்களைப் பெற்று, என் தந்தையாரின் அணிந்துரைகளைப் படியெடுத்து வந்தார். சென்னையில் அவர் சென்று தேடாத நூலகமே இல்லை எனலாம். நூலகங்களிலும் இருபது முப்பது ஆண்டுகட்கு முற்பட்டு வெளிவந்த நூல்கள் கிடைக்க வில்லை; கிடைத்தவரை படியெடுத்துக் கொணர்ந்தார்.

ஓரளவுக்கு அணிந்துரைகள் சேகரிக்கப்பட்டதும், அவற்றைப் பதிப்பித்து வெளியிடுவதுபற்றி எண்ணிக் கொண்டிருந்த வேளையில், பழனியப்பா பிரதர்ஸ் திரு. சுப்பு அவர்கள், என் தந்தையாரின் அணிந்துரைகளைச் 'சிலம்பொலியார் அணிந்துரைகள்' என வெளிக் கொணரலாம் எனச் சொன்னபோது அளவிடற்கரிய மகிழ்ச்சி அடைந்தேன்.

என் தந்தையார்போல் நூல்களுக்கு அரிய விரிவான ஆராய்ச்சி அணிந்துரைகள் வழங்கியவர் எவருமிலர் என்று சொன்னால் அது மிகையன்று. இத்தகைய அணிந்துரை களைத் தொகுக்கும் பணியை மேற்கொண்டது வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த பேறுகளுள் ஒன்று என்று கருதுகிறேன்.

இந்நூல், சில தொகுதிகளாய் வெளிவருகின்றது. ஒவ்வொரு தொகுதிக்கும் சிறந்த தமிழறிஞர் ஒருவர் அணிந்துரை வழங்கியுள்ளார். அணிந்துரை வழங்கியுள்ள பேராசிரியப் பெருமக்கட்கு என் பணிவான வணக்கத்தை உரித்தாக்குகின்றேன். அணிந்துரைகள் அடங்கியுள்ள நூல்களுக்கு அணிந்துரை எழுதியுள்ள அறிஞர்கள் அவற்றை மிகச்சிறந்த திறனாய்வுரைகளாகவே விரிவாய், வளமாய், இலக்கிய முத்துகளாய் வழங்கியிருக்கின்றனர். இவ் அணிந்துரைகள் அப்பெருமக்களின் அயரா உழைப்பையும், அரிய தமிழ்ப்புலமையையும், திறனாய்வுத் திறனையும் மற்றும் என் தந்தையார்மீது அவர்கள் கொண்டுள்ள அன்பினையும் வெளிப்படுத்துகின்றன. குறுகிய காலத்தில் மிகச்சிறப்பான அணிந்துரைகளை வழங்கியுள்ள இப் பெருமக்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிப்புலகில் பழனியப்பா பிரதர்ஸ் பெருமைக்குரிய மூத்த நிறுவனம்; தரமான நூல்களைமட்டுமே வெளியிடுவதைக் குறிக்கோளாய்க் கொண்டது. இந்நூலை மிக அழகாயும் அருமையாயும் வெளியிட்டிருக்கும்

இப்பதிப்பகத்தார்க்கு குறிப்பாய் அமரர் பழனியப்பச் செட்டியார், அவர் இளவல் திரு. மெ. செல்லப்பன், மகன் திரு. ப. செல்லப்பன், மருகர் திரு. இராம. சுப்பு ஆகியோர்க்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலை உருவாக்குவதில் துணைநின்ற ஏசியன் அச்சக மேலாளர் வெற்றியூர் திரு. சுப. திருஞானம், செம்மையாய் மெய்ப்புத் திருத்தம் செய்து நூற்பதிப்பில் பெருந்துணைநின்ற திரு. பெ. நடராசன் (தேனி திருமாவளவன்) அவர்களுக்கும், கணினி ஒளிஅச்சு அமைத்துத்தந்த திருமதி லோகாம்பிகை ஜெய்கிருஷ்ணன் அவர்களுக்கும் என் நன்றி.

என் முயற்சிகளுக்கு ஊக்கம் தந்து, என்றும் துணைநிற்கும் என் அன்புத் தந்தையார்க்கும், கணவர் திரு. நா. புஷ்பராஜ் அவர்களுக்கும், மகன் பு. கிருபாவுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றி.

அணிந்துரையாளரின் முன்னுரை

– சிலம்பொலி சு. செல்லப்பன்

அணிந்துரை பண்டு பாயிரம் என வழங்கப்பட்டது. நூலின் தொடக்கத்தில் நூலாசிரியரோ மற்றவரோ அந்நூல்பற்றி எழுதிய பாயிரம் இருக்கவேண்டும். எத்துணைச் சிறப்புடையதாயினும் பாயிரம் இல்லாத நூல் ஒன்றனை நூல் என்றே கருத இயலாது என்கிறது, நன்னூல் இலக்கண நூற்பா[1]. எந்நூல் உரைப்பினும் அந்நூலுக்குப் 'பாயிரம் உரைத்து உரைக்க' என்பது மரபு என்கிறார், உரையாசிரியர் இளம்பூரணர்.

'பாயிரம் என்பது நூலைப்பற்றிய சிறுகுறிப்பு. அதற்கு வரலாறு என்றும் பொருள் கூறுவர். ஒரு நூலைப் பயில விரும்புவோர் அதுபற்றிய வரலாற்றினை அறிய அவாவுதல் முறைமை (கடமை)யாதலின் பாயிரம் நூலுக்கு இன்றியமையாததோர் உறுப்பாகிறது[2].

முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை என்னும் பெயர்களாலும் பாயிரம் வழங்கப்பெறும்[3].

நூலுக்கு முகமாய் (முகப்பாய்) இருப்பதால் முகவுரை;

நூலிலுள்ள பல்வகைப் பொருள்களையும் பதித்திருப்பதால் பதிகம்;

நூலுக்கு அழகு சேர்ப்பதால் அணிந்துரை;

நூலின் தொடக்கமாய் இருப்பதால் நூன்முகம்;

நூலுக்குப் புறத்தேயிருந்தும் செய்திகளைச் சொல்வதால் புறவுரை;

நூலில் சொல்லப்படாத பொருளைத் தந்துரைப்பதால் தந்துரை;

---

1. நன்னூல், 54
2. கோ. வில்வபதி, நன்னூல் உரை
3. நன்னூல், 1

நூலின் பெருமையைப் புனைந்து கூறுதலால் புனைந்துரை

என்னும் பொருளில் பாயிரத்திற்கு வேறு பெயர்கள் வழங்கப்படலாயின. நூற்பொருள், நூலாசிரியர் பெயர் முதலாயவற்றை முன்னின்று காட்டுவதால் பாயிரம் அப்பெயர் பெற்றது.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் வழங்கியுள்ள பாயிரந்தான் இன்று கிடைப்பவற்றுள் மிகவும் தொன்மை வாய்ந்தது. அவர் பாயிரத்தின் பொருள் :

"வடவேங்கடம் தென்குமரி இவற்றிற்கிடைப்பட்டது தமிழ் பேசும் மக்கள் வாழும் தமிழகம். இந்நாட்டினகத்தே வழங்கும் பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்குகளையும் அடிப்படையாய்க்கொண்டு இந் நூலின்கண் எழுத்திலக்கணமும் செய்யுளிலக்கணமும் பொருளிலக்கணமும் ஆராய்ந்து உரைக்கப்பட்டுள்ளன.

"செந்தமிழ் நாட்டின் இயல்பொடு பொருந்த இந்நூல் செய்யப்பட்டுள்ளது. இந்நாட்டில் பழங்காலந்தொட்டு வழங்கிவரும் முந்தைய நூல்கள் அனைத்தையும் கற்றும் தெளிந்தும் ஆய்ந்தும், அங்ஙனம் ஆய்ந்தறிந்தவற்றை யெல்லாம் தொகுத்தும் இந்நூல் செம்மையாய் எழுதப் பெற்றுள்ளது.

"இது நிலந்தருதிருவிற்பாண்டியன் எனும் வேந்தன் அவையில் அரங்கேற்றப்பட்டது. இவ்வரங்கேற்றம், அறம் உரைக்கும் நாவினையுடையவரும் நான்மறை வல்லுநரு மாகிய அதங்கோட்டாசான் தலைமையில் ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் குழுமியிருந்த அவைமுன் நிகழ்ந்தது.

"தொல்காப்பியர் எனும் தம் இயற்பெயரே நூற்பெயராய் விளங்குமாறு, 'தொல்காப்பியம்' என்னும் இந்நூலை இவர் இயற்றியுள்ளார். தொல்காப்பியர் ஐந்திரம் கற்ற அறிவாற்றலுடையவர்; இவர் பல்துறை சார்ந்த நுண்ணறிவும் மிகுபுகழும் கொண்டு தூய துறவியாய் விளங்கிய பெரியவர்."

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே![1]

தொல்காப்பியத்திற்குத்தான் முதன்முதலில் பாயிரம் எழுதப்பட்டது போலும்! அதனாற்றான் தொல்காப்பியர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுக்கவில்லை எனக் கருதலாம். பாவலரேறு பாலசுந்தரனார், "பாயிரம் என்பது செய்யுள் வகையோ நூல்வகையோ ஆகாமையின் தொல்காப்பியர் அதுபற்றி விளக்கவில்லை எனக் கருதலாம்" என்கிறார்.[2]

பனம்பாரனார் பாயிரத்தில் தொல்காப்பிய நூல் வழங்கும் எல்லை, முன்னோர் நூலின் வழி, நூல் நுவலும் பொருள், நூல் எழுந்த காலம், நூலைக் கேட்போர், நூலை ஆக்கியோன் பெயர், நூற்பெயர் என்பன அடங்கியுள்ளன. இதனையொட்டியே தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த இலக்கண நூலாகிய நன்னூலில் அதன் ஆசிரியர் பவணந்தி முனிவர் பாயிரத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார். பாயிரத்தைப் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரு பிரிவாய்ப் பிரித்துள்ள அவர், சிறப்புப் பாயிரத்திற்கு வகுத்துள்ள இலக்கணம் தொல்காப்பியப் பாயிரத்தை அடிப்படையாய்க் கொண்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது.

ஆக்கியோன் பெயரே, வழியே, எல்லை,
நூற்பெயர், யாப்பே, நுதலிய பொருளே,
கேட்போர், பயனோ(டு) ஆயஎண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்(து) இயல்பே.[3]

1. பனம்பாரனார், தொல்காப்பியப் பாயிரம்
2. ச. பாலசுந்தரம், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், காண்டிகையுரை
3. நன்னூல், 47

தொல்காப்பியத்திற்குப் பிறகு சங்ககால இலக்கியங்களில் பாயிரமோ, பதிகமோ, இவற்றையொத்த பகுதியோ இல்லை. சங்க இலக்கியங்கள் தனிப்பாடல்களின் தொகுப்பு. ஆதலின், பாயிரம் இடம் பெறவில்லை. ஆயினும், தொகுத்தோர், தொகுப்பித்தோர்பற்றிய விவரங்கள் கிடைத்துள்ளன. அதுவுங்கூட முழுமையாய்க் கிடைக்கவில்லை. பதிற்றுப்பத்தில் மட்டும் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் அமைந்துள்ளது. பாடலைப் பாடியோன், அவன் பெற்ற பரிசில், அப்பரிசிலின் பெருமை ஆகிய செய்திகளும், பாடப்பட்டுள்ள மன்னன் பெருமையும் அவன் ஆட்சியாண்டுகளும் கூறப்பட்டுள்ளன.

தமிழின் முதற்காப்பியமாய சிலப்பதிகாரத்தில்தான் விரிவான பதிகத்தைக் காணமுடிகிறது. அப்பதிகம் சிலப்பதிகாரக் காப்பியம் எழுந்த வரலாற்றையும், நூலின் அமைப்பையும், நூல் எழுதப்பட்டதற்கான நோக்கத்தையும், சிலப்பதிகாரத்தில் அடங்கியுள்ள பொருள்பற்றியும் தெளிவாய்ச் சுட்டுகிறது.

மணிமேகலைக் காப்பியப்பதிகம், காப்பியத்திலுள்ள ஒவ்வொரு காதையின் சுருக்கத்தை ஓரிரு அடிகளில் கூறுகிறது. இளங்கோவடிகள் கேட்பச் சாத்தனார் இதனைப் பாடியருளியதாயும் கூறப்பட்டுள்ளது.

சீவகசிந்தாமணிப்பதிகம் கடவுள் வாழ்த்துடன் தொடங்குகிறது. கடவுள் வாழ்த்தோடு தொடங்கும் பதிகத்தை முதன்முதலில் சீவகசிந்தாமணியில்தான் காண முடிகிறது. கதைத்தலைவன் வரலாற்றினைப் பதின்மூன்று இலம்பகங்களில் இக்காப்பியம் எடுத்துரைக்கிறது. ஒவ்வொரு கலம்பகத்தின் கதைச்சுருக்கம் ஒவ்வொரு விருத்தப்பாவில் கூறப்பட்டுள்ளது.

கம்பராமாயணத் தற்சிறப்புப்பாயிரம் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நூல் வந்த வழி ஆகியவற்றைக் கூறுவதோடு, நூலின் பெயர், நூற்பயன், நூல் அரங்கேறிய இடம் ஆகிய செய்திகளையும் கூறுகிறது.

இதையடுத்துத் தோன்றிய காப்பியங்களும் இதே போக்கில் பாயிரத்தைக் கொண்டுள்ளன.

ஒரு நூலின் சிறப்புப்பாயிரத்தை அந்நூலாசிரியருக்கு ஆசிரியர், நூலாசிரியருடன் ஒருங்கு கற்ற ஒருசாலை

மாணாக்கர், நூலாசிரியரிடம் பயின்ற மாணவர், அந்நூலுக்கு உரை வகுப்பவர் ஆகிய இந்நால்வருள் ஒருவர் இயற்றுதல் முறைமை.

தன்னா சிரியன்; தன்னொடு கற்றோன்;
தன்மா ணாக்கன்; தகும்உரை காரனென்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே![1]

ஆயின், இக்காலத்தே இந்நால்வர் என்பது மாறி, பெரும்பான்மை நூலாசிரியர் தாம் விரும்பும் தக்கார் ஒருவரிடம் அணிந்துரை பெறுவது நடைமுறையாயுள்ளது. இன்னார் எழுதினால், அவர் பெருமையால் அல்லது செல்வாக்கால், பதவியால் அந்நூலுக்குப் பெருமை கிட்டும் என்ற எண்ணம் கொண்டும் அணிந்துரைகள் பெறப்படு கின்றன.

பாயிரம் பண்டை நாளில் பா வடிவில் அமைந்தது. அதுவும் ஆசிரியப்பாவானும் வெண்பாவானும் இயற்றுதல் மரபாயிருந்தது.

பாயிரத்(து) இலக்கணம் பகருங் காலை,
நூல்நுதல் பொருளைத் தன்னகத் தடக்கி,
ஆசிரிய மானும் வெண்பா வானும்
மருவிய வகையால் நுவறல் வேண்டும்.[2]

அந்நாளில் அனைத்துமே பா வடிவில் எழுதப் பட்டதால் இவ்விதி பொருந்துவதாயிருந்தது. இன்றோ கட்டுரை, சிறுகதை, புதினம், நாடகம் எனப் பல திறத்தன உரைநடை வடிவில் உள்ளன. அதனால் அணிந்துரைகளும் உரைநடையிலேயே உள்ளன.

செய்யுள் நூல்களுக்காவது அணிந்துரை செய்யுளி லேயே இருப்பின் மரபு காக்கப்பட்டதாகும். அணிந்துரை தருவோர் செய்யுளியற்றக்கூடியவராய் இருந்தால்தான் இஃது இயலும்; அத்தகையவரை அணுகி அணிந்துரை பெறுவது பொன்மலர் நாற்றமுடைத்தாம்! எந்நூல் எவ்வகையில் அமைந்திருக்கிறதோ அவ்வகையிலேயே அணிந்துரை அமைய முயற்சி செய்யலாம். அப்படிச் செய்யின் அணிந்துரை வரலாற்றில் அஃது ஒரு புதுமைப் படைப்பாய்த் திகழும். நாடக நூலின் முன்னுரை அல்லது

1. நன்னூல், 51
2. நச்சினார்க்கினியர், தொல்காப்பியப் பாயிர உரை.

அணிந்துரை நாடக வடிவில் இருக்கலாமே! இந்நிலையிருந் திருப்பின் நூற்றுக்கணக்கான என் அணிந்துரைகள் எழுந் திருக்கவே வாய்ப்பில்லை! இவ்வணிந்துரை நூற்றொகுதிகள் வெளிவரும் நிலையும் உருவாகியிராது. ஆயினும், அப்படிப் பட்டதொரு முயற்சி தோன்றவேண்டும் என்பது என் அவா.

அணிந்துரை இன்று நுழைவாயில்,' அழகுரை, மதிப்புரை, ஆய்வுரை, சுவையுரை, சிறப்புரை, பொருளுரை முதலாய பெயர்களாலும் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்போது வெளிவரும் நூல்களுள்ளும் சிலவற்றில் அணிந்துரைகளைப் பா வடிவில் காணமுடிகிறது. அணிந்துரை 'சாற்றுக்கவி'யாயும் உள்ளது. நூலின் பெருமையை அக்கவி சொல்வதால் அது சாற்றுக்கவி என வழங்கப்படுகிறது. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய திருவெங்கைக் கோவை எனும் நூலுக்கு,

கற்றோர்க்(கு) இனியதொரு தமிழமுதாய் அகப்பொருளின்
கருத்தாய்க் காண
முற்றாரும் மணற்கேணி தொட்டென்ன அணிகள்பல
முனைந்து தோன்றி
சொற்றோறும் நயம்பெருகத் திருவெங்கை நாயகன்நற்
துணைய டிக்கே
வற்றாத பேரன்பிற் கோவையாம் ஒருநூலை
வகுத்திட் டானால்

எனப் பெரும்புலவர் கா. நமசிவாய முதலியார் சாற்றுக்கவி அளித்துள்ளார். இக்காலப் பெரும்புலவர்கள் தாம் படைத்துள்ள நூல்களுக்குப் பலரிடம் சாற்றுக்கவிகள் பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஓலைச்சுவடிகளைத் தேடிக் கண்டெடுத்துப் பண்டைய நூல்களைப் பதிப்பித்த சி.வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் உ.வே.சாமிநாதையர் போன்றவர்கள் தாங்கள் பதிப்பித்த நூல்களில் நீண்ட முகவுரைகள் எழுதியுள்ளனர். அவற்றில் அவர்கள் நூல்களைப் பதிப்பிப்பதற்கு ஓலைகளைத் தேடியலைந்த தொல்லைகள், பார்வையிட்ட ஓலைகள் முதலியவற்றை விரிவாய்க் குறிப்பிடுவதோடு, அந்நூல்களிலிருந்து அறியக் கிடக்கும் முக்கியச் செய்திகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பித்துள்ள நூல்களில் மிக நீண்ட முகவுரையைக் காணமுடிகிறது;

முகவுரைபற்றிய அவர் கருத்தும் புலனாகிறது. "அக்காலத்தில் அச்சிடப்பெற்ற தமிழ்ப்புத்தகங்கள் பலவற்றில் முகவுரை முதலியன காணப்படவில்லை. அவை இருந்தால் படிப்பவர்க்கு மிக்க உபயோகமாயிருக்கும் என்பதை உணர்ந்த நான் (சிந்தாமணிக் காப்பியத்தைப் பதிப்பித்த போது) அதற்கு அங்கமாக அவற்றை எழுதிச் சேர்த்துப் பதிப்பிக்கலாமென எண்ணினேன். என்ன என்ன விஷயங்களை முகவுரையில் எழுதவேண்டுமென்பதைப் பற்றி ஆலோசித்தேன். நூலைப் படிப்பதற்குமுன் அதிலுள்ள முக்கியமான செய்திகளையும், நூலின் பெருமையையும், உரையின் தன்மை முதலியவற்றையும் படிப்போர்கள் தெரிந்துகொள்ளுவது நலமென்பது என் கருத்து" என உ.வே.சா. தம் சிந்தாமணிப்பதிப்பின் முகவுரையில் குறிப்பிடுகிறார்.[1]

அவரது இக்கருத்துக்கேற்பவே அவர் பதிப்பித்துள்ள நூல்களின் முகவுரைகள் அமைந்திருப்பதைக் காண்கிறோம். அவரது சிலப்பதிகாரப் பதிப்பின் முகவுரையில் ஒரு பகுதி : "இக்காலத்தில் வேறொரு வகையாலும் அறிதற்கியலாத இசையிலக்கண வகை, நாடக இலக்கணம், பரத இலக்கணம், அவிநய வகைகள், நகர் அமைப்பு, கோயிலமைப்பு முதலியன; ஐவகைத் திணைகளின் அமைதிகள், இன்னின்ன சாதியார் இன்னின்ன தொழில்கள் செய்தார் என்பது, பலவகை நீதிகள், சமயக் கோட்பாடுகள், இராசபக்தி, ஆச்சிரம அமைதி, ஆசிரிய பக்தி, மாணாக்கரியல்பு, ஆபரண வகை, தானிய வகை, ஊர்தி வகை, கருவி வகை, மந்திர வகை, பூ வகை, செடி வகை, கொடி வகை, மர வகை ஆகிய இவையும் இவைபோல்வன பிறவும் இந்நூலால் (சிலப்பதிகாரத்தால்) அறியலாகும்" என எழுதியுள்ளார். நூலுள் அடங்கியுள்ள செய்திகளை, பழக்கவழக்கங்களைத் தொகுத்து முகவுரையில் தரவேண்டும் என்பது அவரது எண்ணமாய் இருந்திருக்கிறது.

அவர் எவ்வெந் நூல்களுக்கு முகவுரை எழுதுகிறாரோ, அவற்றுக்கு இலக்கண விளக்கம் அளிக்கவேண்டியிருப்பின் அவற்றையும் தருகிறார். தூது நூல்களுக்கு முகவுரை எழுதும்போது தூது இலக்கணங்களையும், பிற தூதுகளைப் பற்றிய பொதுச் செய்திகளையுங்கூட வெளிப்படுத்தி

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், பக். 608

யுள்ளார்; சில இடங்களில் நூலாசிரியர் கருத்து இன்னவாயிருக்கும் என்பதையும் புலப்படுத்துகிறார். புகையிலைவிடு தூது பதிப்பின் முகவுரையில், "இந்நூல் 59 கண்ணிகளையுடையது. இத்தூதில் புகையிலையின் பெருமைகள் 53 கண்ணிகளில் சொல்லப்படுகின்றன. தூது விடும் செய்தி ஏனைய ஆறு கண்ணிகளில் சுருக்கமாய் அமைந்துள்ளது. இதனால் இதைப் பாடிய புலவர் புகையிலையைச் சிறப்பிப்பதற்காகவே இதனைப் பாடியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது" என எழுதுகிறார்.[1]

இவர் காலத்தில் நூல்களைப் பதிப்பித்த பிற ஆசிரியர்கள் இவரைப் போன்று நீண்ட முகவுரைகள் எழுதவில்லையாயினும் சற்றொப்ப இதே போக்கில் எழுதியிருக்கக் காண்கிறோம்; சிலர் மிகுவிரிவான முகவுரை எழுதியுள்ளதையும் காணமுடிகிறது. ரா. இராகவய்யங்கார் தாமியற்றியுள்ள 'பாரிகாதை'யின் முகவுரையில் பாரி, கபிலர் ஆகியோர்பற்றிச் சங்க இலக்கியங்களில் கிடைக்கும் குறிப்புகளை விரிவாய்த் தந்துள்ளதோடு முகவுரையிலேயே காப்பியக்கதை முழுவதையும் சுருக்கமாய்த் தந்துள்ளார்.

மனிதன் ஒருவனுக்கு முகம்போல நூலுக்கு முகவுரை அமைகிறது. முகத்தை நோக்கி ஒருவரது அகநிலைமையைத் தெரிந்துகொள்கிறோம். அவ்வாறே முகவுரையைக்கொண்டு நூலின் உள்ளடக்கத்தைச் செவ்வையாய் அறிந்துகொள்கிறோம்.

மாளிகை, கட்டட வேலைப்பாடமைந்ததாயினும் அதற்குப் பொலிவூட்ட அழகிய ஓவியம் இன்றியமையாதது. ஒரு நகரம் மிகவும் பெரியதாய் அமைந்திருந்தாலும் அதற்கு மேலும் பெருமை சேர்க்கக் கோபுரத்தோடு கூடிய தலைவாயில் இன்றியமையாதது. பெண்கள் இயற்கையிலேயே அழகுடையவர்களாயினும் அவ்வழகுக்கு அழகூட்ட அணிகலன் இன்றியமையாது இருப்பதுபோல் ஒரு நூல் சிறப்புடையதாயினும் அதற்கோர் அணிந்துரை இன்றியமையாததாம்!

---

1. டாக்டர் உ.வே. சாமிநாதையர், புகையிலை விடுதூது பதிப்பு, பக். 3

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க் கணியும்போல் - நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.[1]

முகவுரைகள் குறித்துப் பிற நாட்டறிஞர்களும் இவற்றையொத்த கருத்துகளையே கூறியிருக்கக் காண்கிறோம்.

"முகவுரைகள் முன்வாயில்களைவிட முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை நூலின் நோக்கத்தைத் திறந்து காட்டும் சாவிகளாயும், ஆசிரியரின் இலக்கியப் பயணத்தைக் காட்டும் அருங்கருவிகளாயும் அமைந்துள்ளன.[2]

அணிந்துரை என்பது நூலின் நுழைவாயில் என்பதால் அஃது அந்நூலைப் படிப்போரை நூலினுள் நுழையத் தன் கவர்ச்சியால் ஈர்க்கக்கூடியதாய் இருக்கவேண்டும். காண்பதற்கினிய தோரணவாயில் உள்மாளிகையின் நேர்த்தியினை உணர்த்தி நிற்கும்.[3]

ஒரு நாடகத்தின் விறுவிறுப்பூட்டக்கூடிய தொடக்கம் போலவும், ஓர் இசைக்கூத்திற்கு வாய்த்த நேர்த்தியான இசைக்கருவிகள் போலவும் படிப்பவரை மனமகிழச் செய்வதற்கு சிறந்த அணிந்துரை இன்றியமையாத ஒன்றாம்.[4]

இத்தாலியர்கள் முன்னுரையை நூலின் தாளிதக்கூட்டு என வழங்குகிறார்கள்; பக்குவமாய்த் தாளிக்கப்பட்டால் அது படிப்பவர்க்குப் பெரும் பசியை உருவாக்கி, நூல் முழுவதையும் விழுங்கச் செய்துவிடும்.[5]

அணிந்துரைபற்றிய இக்கருத்துகள், என் அணிந்துரைகளின் தன்மையை எண்ணிப் பார்க்கப் படிப்போர்க்குத்

1. நன்னூல், 55

2. George Arthur Buttrick (Editor),. Interpreters' Bible, P. XVII

3. A Preface being the entrance of a book should invite by its beauty. An elegant porch announces the splendour of the interior - Disraeli.

4. A good preface is an essential to the reader into good humour, as a good proloque is to a play; or a fine sympony to an opera. - Disraeli.

5. The Itallians call the preface 'the sauce of the book' and if well seasoned, it creates an appetite to the reader to devour the book itself. - Disraeli

துணைசெய்யும் என்று நம்புகிறேன். பண்டைய இலக்கண நூலார் கூறியுள்ள அணிந்துரை இலக்கணங்களை முற்றிலும் பின்பற்றி அணிந்துரைகளை நான் எழுதியுள்ளேன் எனச் சொல்லுதற்கியலாது; ஆயினும், அணிந்துரையைப் படிப்போர்க்கு அந்நூலை முற்றாய்ப் படிக்க வேண்டும் எனும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அதை எழுதியிருப்பதாகவே கருதுகிறேன்.

தமிழ்த்தாய்க்கு அணி சேர்க்கும் நன்னோக்கில் நூல்கள் எழுதும் அன்பர் பலர் தம் படைப்புகட்கு 'அணிந்துரை' அளிக்குமாறு எனக்கு அன்புக் கட்டளையிட்டனர். அதனையேற்று நூற்றுக்கணக்கானவர்களின் நூல்களுக்கு அணிந்துரை எழுதும் நல்வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

"நான்கு பக்கங்கள் மட்டுமே அணிந்துரைக்கு ஒதுக்கியுள்ளோம்; அதற்குள் அடங்குமாறு எழுதித் தரவேண்டும்" என்று கூறியவரும் உண்டு; "எவ்வளவு விரிவாய் வேண்டுமானாலும் எழுதுங்கள்" என்று கூறியவர்களும் உண்டு. ஆதலின், என் அணிந்துரைகள் 4 பக்கங்களிலிருந்து 40 பக்கங்கள் வரையினவாய் அமைந்திருக்கக் காணலாம். நான் எழுதித் தந்ததை முழுமையாய்ச் சேர்க்க முடியாமல் சிலர் அளவைக் குறைத்து, சில பகுதிகளை நீக்கி அச்சிட்டதும் உண்டு. அவ்வாறு விடுபட்டவை இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. எந்த அளவினதாய் இருந்தாலும் அணிந்துரையை அந்நூலுக்கு ஓர் அணியாய் இருக்கும் முறையிலேயே எழுதியுள்ளேன் என நம்புகின்றேன்.

நான் எழுதிய அணிந்துரைகளைத் தொகுத்து நூலாக்க வேண்டுமென என் மகள் திருமதி மணிமேகலை கூறியபோது, அணிந்துரை நூலாக வேண்டுமா எனச் சற்றுத் தயங்கினேனாயினும், பேராசிரியப் பெருமக்கள் பலர், 'உங்கள் அணிந்துரையைப் படித்தால் நூலை முழுமையாய்ப் படித்ததுபோன்ற நிறைவைத் தருகிறது; ஆதலின், அவற்றைத் தொகுத்து வெளியிடுவது பயனுடையதாகவே இருக்கும்' என்றனர்; ஆதலின், இந்நூல் வெளிவருகிறது.

நான் எழுதித்தந்த அணிந்துரைகளின் படிகளை வைத்துக்கொள்ளும் பழக்கம் எனக்கில்லாது போயிற்று. இஃது ஒரு பெருங்குறையே! என் மகளும், மருமகன் திரு. புஷ்பராஜ் அவர்களும் நூலகங்கட்குச் சென்று, நூல்களைத்

தேடியெடுத்து, ஐந்நூறுக்கு மேற்பட்ட அணிந்துரைகளைப் படியெடுத்துச் சேர்த்தனர். இன்னும் தேடுதல் பணி நடந்து கொண்டுள்ளது. கிடைத்தவற்றை முதலில் அச்சிட்டு நூலாக்க முனைந்துள்ளனர்.

அணிந்துரை எழுதுதற்கென நான் ஒரு தனித்த முறையை மேற்கொண்டுள்ளேன். கொடுக்கப்பட்ட நூலை முழுமையாய்ப் படித்து, முதலில் அதன் உட்பொருளை மனத்தில் உள்வாங்கிக்கொள்வேன். இரண்டாம் முறை படித்து, அணிந்துரைக்குத் தேவைப்படும் முக்கியப் பகுதிகளைக் குறித்துக்கொள்வேன். பின்னர், அக்குறிப்பு களை நோக்கி, அவற்றை விரிக்கவோ சுருக்கவோ இடமுண்டா என ஆய்வேன். அடுத்து, எம்முறையில் எழுதுவது எனச் சிந்திப்பேன்; பிற இலக்கியங்களுடன் ஒத்திட்டுப் பார்க்க இடமுளதா என்பதையும் அறிவேன். அதன் பின்னரே எழுதத் தொடங்குவேன்.

ஆசிரியர் கருத்துகள், அவர் படைப்புகளில் வெளிப்படுவது தவிர்க்க இயலாததாகும். படிப்போர் அவற்றோடு உடன்படலாம் அல்லது முரண்படலாம். நான் வழங்கும் அணிந்துரைகளில், நூலில் உள்ள கருத்து முரண்பாடுகளையோ கொள்கை வேறுபாடுகளையோ சுட்டிக்காட்டி முன்நிறுத்துவதில்லை. அவற்றை எண்ணிப் பார்க்கும் பொறுப்பைப் படிப்போர்க்கு விட்டு, நூலின்கண் காணும் சிறப்புக்கூறுகளை மட்டும் சுட்டிச் செல்வேன். என் அணிந்துரைகள் பெரும்பாலும் பாராட்டுரைகளாகவே இருக்கும். 'அணிந்துரை திறனாய்வுரையினின்றும் வேறுபட்டது. திறனாய்வுரை குறைநிறைகளைச் சுட்டிக் காட்டுவது. அணிந்துரை நூற்பொருளின் அழகைக் கூறுவது' என்னும் கருத்துடையேன் நான். இப்பாராட்டு முறையால் ஏற்படும் பெரும் நன்மை ஒன்றுண்டு. படிப்போர், நூலுள் ஆர்வத்துடன் நுழைவதற்கு விருப்பமூட்டும் தூண்டு கோலாய் இஃது அமைவதே அந்நன்மையாம்.

"கன்னல் பொருள்தரும் தமிழே, நீ ஓர் பூக்காடு; நான் அங்கோர் தும்பி" என்பார், பாவேந்தர் பாரதிதாசன். பூக்காட்டில் உள்ள பிறவற்றைப் பொருட்படுத்தாமல், பூக்களில் உள்ள தேன்துளிகளை மட்டுமே வண்டு சுவைத்துண்ணுகிறது; தான் சுவைத்துண்டதோடு மட்டும் அமையாமல் தேனடையாய்ச் சேர்த்தும் வைக்கிறது.

அதுபோன்றே நானும் அன்பர்களின் நூல்கள் என்னும் பூக்காட்டில் நுழைந்து, சிறப்புக் கூறுகளாகிய தேன் துளிகளைச் சுவைத்துண்டு மகிழ்கிறேன்; அவற்றைத் தொகுத்து அணிந்துரை எனும் தேனடையாயும் தருகிறேன். தேனடையின் தேனுண்டு மகிழ்வோர், அத்தேன் எடுக்கப்பட்ட பூக்காடுகளுக்குள் நுழைந்து நிறையவே தேனுண்ண வேண்டும் என்பது என் அவா!

அணிந்துரைகளை எழுதச் சொல்வதன் வாயிலாய், நான் ஏராளமான நூல்களைப் படிப்பதற்கும் இன்பம் துய்ப்பதற்கும் வழியேற்படுத்தித் தருகின்ற நூலாசிரியர்கட்கு என் உளமார்ந்த நன்றி.

அணிந்துரைகளை முயன்று தேடித் தொகுத்துள்ள என் அருமை மகள் மணிமேகலைக்கும், மருகர் புஷ்பராஜுக்கும், இவர்களை இப்பணியில் ஈடுபடத் தூண்டுகோலாயிருந்த இவர்கள் மகனும் என் பெயரனுமாகிய செல்வன் கிருபாவுக்கும் நான் பெரிதும் கடப்பாடுடையேன்.

அணிந்துரை நூற்றொகுதியை வெளியிடத் தமிழகத்தின் புகழ்மிக்க பதிப்பகமாகிய பழனியப்பா பிரதர்ஸ் ஏற்றுக்கொண்டதை நான் எனக்குக் கிடைத்த பெருமையாகவே கருதுகிறேன். இதற்கு ஒரு காரணம் உண்டு. எனக்குச் ‘சிலம்பொலி’ எனும் பட்டத்தைத் தந்தவர் சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை ஆவார். அவர் எழுதிய அனைத்து நூல்களையும் வெளியிட்டுப் பெருமை சேர்த்துள்ளவர்கள், பழனியப்பா பிரதர்ஸார் ஆவர். என்னைப் பாராட்டிய சொல்லின் செல்வரால் பாராட்டப் பெற்றுள்ள பழனியப்பா பிரதர்ஸ் என் எழுத்துகளை நூலாக்கி வெளியிடுகிறது என்பதைவிடப் பெரிய மகிழ்ச்சி எனக்கு வேறு என்ன இருக்கமுடியும்? இந்நிறுவனத்தைச் சார்ந்த அனைவர்க்கும் என் நெஞ்சுநிறை நன்றி.

இந்நூலைப் படிப்பதன் வாயிலாய் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள அனைத்து நூல்களையும் படித்த நிறைவு, படிப்போர்க்கு ஏற்படும் என்று நம்புகிறேன்.

பதிப்புரை

கொங்குதமிழ் நாட்டினிலே
தோன்றியநல் தமிழாறு!
இசையோடு பாய்ந்தோடும்
இன்னிசைத் தேனருவி!
வைகைநதித் தமிழ்ச்சேயை
வளர்க்கின்ற தாய்ச்செவிலி!
மேடை தொறும் நற்றமிழின்
புகழ்பாடும் பூங்காற்று!
சங்கமெனும் கடல்கடைந்து
தமிழமுதம் தரும்நெடியோன்!
புலமையெனும் பூந்தடத்தில்
பூத்தசெந் தாமரை!
பாத்தோறும் தேனெடுத்துக்
கூடுகட்டும் கோத்தும்பி!
தமிழோடு தனைக்கரைத்த
செம்புலப் பெயல்நீரான்!
இத்தகைய
சிறப்புகள் அத்தனையும்
சேர்ந்தொன்றாய் உருவானான்
சிலம்பொலியாம் செல்லப்பன்
எனுந்திருப் பெயர்கொண்டான்!

கவிதையொடு கட்டுரைகள்
காப்பியம்நல் திரைஇசையும்
தகவுடைய சிறுகதைகள்
தன்வரலா றாய்வுநூல்
என்றுபல துறைநூல்கள்
இவன்தோய்ந்தே ஆராய்ந்து
சொல்லழகும் பொருளழகும்
துள்ளிவரும் கருத்தழகும்
பல்சுவையும் நடமிடவே
அணிந்துரைகள் வனைந்துள்ளான்!
பரந்துள்ள கடல்நீரைப்
பருகிட்ட குறுமுனிபோல்
விரிந்துள்ள நூற்சிறப்பை
வித்தகமாய்த் தான்தொகுத்துச்
சிறுதுளியாம் பனித்துளியில்
பெரும்பனையும் தோன்றுதல்போல்

அணிந்துரையில் முழுநூலை
அடக்கிஇவன் காட்டிவிட்டான்!

இந்நூல்
கல்லூரி மாணவர்க்குக்
கரைகாட்டும் ஒளிவிளக்கு!
கற்பிக்கும் ஆசானுக்(கு)
உற்றதொரு ஊன்றுகோல்!
ஆய்வுநூல் மாணவர்க்கு
அரியதொரு புதையலாகும்!
கல்லாரைக் கற்றாராய்க்
கரைசேர்க்கும் பெருந்தோணி!
கருத்துபல கசிந்தூறும்
கன்மலையின் சுனையாகும்!
அணிந்துரைகள் அணிவகுக்க
அழகியதோர் நூலாக
எம்மொழியாம் தமிழ்மொழியில்
இதுபோல வந்ததில்லை!

எனவே இவன்
தன்திறத்தால் தமிழ்மொழியைத்
தானுயர்த்தி வைத்தானா?
தானுரைத்த தமிழாலே
தானுயர்ந்து நின்றானா?
எம்மாலே பதிலுரைக்க
இயலாது பெரியோரே!
உம்மாலே விடைகூற
ஒல்லுமோ இயம்பிடுக!

நன்னூல்கள் தருவதுவே
நமதுகடன் என்றிருக்கும்
பன்னூலின் தாயகமாம்
பழனியப்பா பிரதர்ஸார்
இந்நூலைத் தமிழன்னைக்(கு)
ஏற்புடைய ஆரமெனச்
சூட்டுதற்கு முன்வந்தோம்
தொடர்ந்தெம்மை ஆதரிப்பீர்!
பாத்திரத்தை எடுத்துவைத்துப்
பருகிடவே முன்வைத்தோம்!
பாத்திறமும் பல்திறமும்
பயன்துய்த்து மகிழ்ந்திடுக!

— பதிப்பகத்தார்

அணிந்துரை அடங்கல்

வ.எண்	நூற்பெயர்	பக்கம்
	சிறப்புரை	III
	தொகுப்பாளரின் உரை	XIX
	அணிந்துரையாளரின் முன்னுரை	XXIII
	பதிப்புரை	XXXV
1.	காதா சப்தசதி *பன்மொழிப் புலவர் மு.கு. ஜகந்நாத ராஜா*	1
2.	பிரியதர்சிகை *மு. முத்துவேங்கடாசலம்*	23
3.	பொன்னூர்தி *கவிஞர் நலங்கிள்ளி*	35
4.	கலித்தொகை ஓர் அகழாய்வு *முனைவர் நா. ஆறுமுகம்*	54
5.	தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள் *குன்றக்குடி பெரியபெருமாள்*	71
6.	கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் புதுமைகள் *கவிக்குயில் பெ. வரதராசன்*	92
7.	அகதி *கவிஞர் எஸ்.பி. இராமச்சந்திரன்*	106
8.	காதற்கனிகள் (கற்பும் துறவும்) *கவிஞர் துரை. மாலிறையன்*	118
9.	கனகாபிஷேக மாலை *- கனகவிராயர் (செய்து நெய்னார்கான் புலவர்)*	128
10.	தீரன் சின்னமலை *- பாஸ்கரதாசன்*	136
11.	தீரன் சின்னமலை *பாவலர் ஈரோடு வடிவேலன்*	149

வ.எண்	நூற்பெயர்	பக்கம்
12.	தீரன் சின்னமலை - கவிஞர் என். ஏ. நடேசன்	162
13.	சிந்தனைச் சோலை ஆர். சி. தமிழன்பன்	170
14.	புரட்சிப் பொன்மொழிகள் திருப்புகழடிமை சண்முகதாசன்	185
15.	நாஞ்சிலார் கவிதைகள் - கவிஞர் நாஞ்சில் மனோகரன்	189
16.	அழகோவியம் புலவர் தி. குலோத்துங்கன்	193
17.	சிவனடியான் கவியரங்கக் கவிதைகள் கவிஞர் சிவனடியான்	198
18.	வண்ண நிலவின் வளர்கலை கவிஞர் கோ. வேள்நம்பி	208
19.	மூன்று தமிழ்க்களம் - பாவலர் இறையரசன்	217
20.	யாருக்காக உலகம்? மூவேந்தர் முத்து	224
21.	மலைநாட்டின் மீதினிலே வா. மு. சேதுராமன்	245
22.	மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் முரசு நெடுமாறன் (மலேசியா)	259

"ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே!"

- நன்னூல்

1

காதா சப்தசதி

காதா சப்தசதி

'காதா சப்தசதி' ஆந்திர நாட்டின் அரிய இலக்கியத் தொகுப்பு நூல். பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ள 700 பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. கி.மு. முதல் நூற்றாண்டில் ஆந்திர நாட்டை ஆண்டு வந்த சாதவாகன மன்னன், 'ஹாலன்' என்பவரால், பல்வேறு புலவர்கள் எழுதிய பல்லாயிரக் கணக்கான பாடல்களில் 700 சிறந்த பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தொகுக்கப்பெற்றுள்ளன.

தொகுப்புச் சிறப்பு

கோடிப் பாடல்களில் தேடி எழுநூறு எடுத்ததாக, தொகுப்பாசிரியர் ஹால மன்னன் குறிப்பிடுகிறார்.

> கோடிப் பாடலில் தேடி எழுநூா(று)
> அணிகொள் காதை அடையத் தொகுத்தான்
> 'கவிவத் சலனாம்' ஹால மன்னனே![1]

இங்குக் 'கோடி' என்பது பெரிய அளவு என்பதைக் குறிப்பதாகும். 700 பாடல்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு 500 பாடல்களே இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் சுமார் 100 பாடல்களுக்கு ஆசிரியர் பெயர் இல்லை. மீதி 400 பாடல்களை ஏறத்தாழ 300 புலவர்கள் பாடியுள்ளனர். ஒரு புலவருக்கு ஒரு பாடல் என்ற அளவில்தான் இத்தொகுப்புத் தென்படுகிறது. மிகச் சிலருடைய பாடல்களே ஒன்றுக்கு மேற்பட்டு இரண்டு அல்லது மூன்று என்ற அளவில் உள்ளன. அனுராசன் (6), ஆந்திரலட்சுமி (9), சாலிவாஹணன் (18), பாலிதன் (10) என்னும் புலவர்களின் பாடல்கள் மட்டுமே பத்தினை எட்டியுள்ளன. சுமார் 250 புலவர்களின் பாடல்கள் ஒவ்வொன்று மட்டுமே உள்ளன.

---

1. காதா சப்தசதி, பாடல் 3. (இந்நூலில் உள்ள பாடல் எண்களே இங்கு எண்களாய்க் கொடுக்கப்பட்டுள்ளன.)

ஒருவர்க்கு ஒன்று எனப் பாடல்கள் எடுக்கப்பட்டுத் தொகுத்திருப்பதால் இத் தொகுப்பிலுள்ள பாடல்கள் அனைத்தும் சிறப்பு வாய்ந்தவை என்பது சொல்லாமலேயே விளங்கும். இவற்றைத் தொகுத்த ஹாலன் மன்னராய் மட்டுமன்றிப் பெரும் புலவராயும், 'கவி வத்சலன்' என்ற சிறப்புப் பட்டம் பெற்றவராயும் விளங்கியிருக்கிறார். அவருடைய 45 பாடல்கள் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. தம்முடைய பாடல்களை வெளியிட விரும்பிய அம் மன்னன் அவற்றைத் தனியே வெளியிடாது சிறந்த பல புலவர்களின் அரிய கவிதைகளையும் இணைத்து இந்நூலைத் தந்துள்ளான் என்று கூறுவது பொருத்தமாய் இருக்கும்.

சங்கப் பாடல்களும் சப்த சதியும்

காதா சப்தசதியின் பாடல்கள் தமிழ்ச் சங்க அக இலக்கியப் பாடல்களை ஒத்திருக்கின்றன. சப்த சதியை, 'ஆந்திரச் சங்க அக இலக்கியம்' எனக் குறிப்பிடலாம். தமிழ்ச் சங்க காலத்தையொட்டி அதே போக்கில் அதே கருத்துகளைக் கொண்டு அதே முறையில் ஆந்திர நாட்டில் ஒரு தொகுப்பு நூல் உருவாகியிருப்பது இவ்விரு நாட்டு மக்களின் அடிப்படைப் பண்பொற்றுமையைக் காட்டுகிறது எனலாம்.

புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு, திணைமாலை நூற்றைம்பது, முத்தொள்ளாயிரம் போன்ற தமிழ் இலக்கிய நூல்கள் பாடல் எண்ணிக்கை கொண்டு பெயர் பெற்றுள்ளன. அதே காலத்தில் எழுந்த இந்நூலும் எண் பெயரால் அமைந்துள்ள ஒற்றுமையை அறிந்து வியக்கிறோம்.

காதா சப்தசதியில் ஒவ்வொரு பாடலும் 4 அடிகளைக் கொண்டுள்ளது. காதா என்பது ஒருவகை யாப்பு. இக் காதா யாப்பினால் அமைந்த எழுநூறு பாடல்களைக் கொண்டிருப்பதாலேயே இது, 'காதா சப்தசதி' எனப் பெயர் பெற்றது. "காதா, முதலடி 12 மாத்திரையும், நான்காம் அடி 15 மாத்திரையும் அமையப் பாடப்படுவதாம்." தமிழில் எட்டுத்தொகை நூல்களில் குறுந்தொகை 5 முதல் 8 அடிகளைக் கொண்டது. சற்றேறத்தாழ அதே அமைப்பில் சப்தசதி அமைந்திருக்கிறது. இந்நூலில் உள்ள பாடல்களை எழுதியவர் பெயரின்றித் தனியே கொடுத்தால் படிப்பவர் குறுந்தொகையை ஒத்த வேறோர் அருமையான தமிழ் அகப்பொருள் நூல் என்று எண்ணுமளவுக்குப் பாடல்கள் அமைந்துள்ளன.

ஒப்பீடு

தமிழில் இன்று கிடைக்கும் இலக்கியங்களில் பழமையானவை சங்க இலக்கியங்களே! தமிழ்ச் சங்க காலத்தை யொட்டிப் பிராகிருத மொழியில் எழுந்த சிறப்புடைய இலக்கியம் காதா சப்தசதியேயாம்.

சங்க இலக்கியங்களுக்கும் காதா சப்த சதிக்கும் மிகுந்த அளவில் கருத்தொற்றுமை இருக்கிறது; செய்திகளைச் சொல்லும் முறையிலும் பெருமளவில் ஒற்றுமை தென்படுகிறது. தமிழ்ச் சங்க இலக்கியங்களுடன் ஒப்பீட்டாய்வு செய்தற்குரிய நூலாய்க் காதா சப்தசதி இருந்து வருகிறது. காதா சப்தசதிப் பாடல்களைப் படிக்கும்போது சங்க இலக்கியப் பாடல்களைப் படிக்கின்ற உணர்வே நமக்குத் தோன்றுகிறது.

காதா சப்தசதி சங்க இலக்கியங்களோடு ஒத்துப்போவது மட்டுமன்று; அப் பாடல்களின் பொருள் போக்கினைத் தமிழில் இடைக்கால, இக்கால இலக்கியங்களில் கூடக் காணமுடிகிறது.

"தலைவி இரவில் கூந்தலில் நறுமலர் சூடி, மயிர்ச் சாந்து தடவி, மணங்கமழக் காதல் ததும்பும் முகத்துடன், இரவில் சந்திக்கும் இடத்தில் நம்முடன் ஒன்றியிருப்பாள். விடியற் காலையிலோ, இரவில் சூடிய மலர்களைச் சூடிய சுவடே தெரியாமல் களைந்துவிட்டு, சாந்தணிந்த கூந்தலில் எண்ணெய் தடவிச் சீவி, மணம் தோன்றாமல் செய்து, அமைதி நிறைந்த முகத்தினளாய் வீட்டிலுள்ளாரிடம் இரவில் ஏதும் நடவாதது போல இருப்பாள். இவ்வாறு இரண்டு வகையாய் நடக்கும் அறிவைக் காதலி எப்படித்தான் கற்றாளோ?" என, இரவுக்குறி வந்து கூடி நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறி வியந்ததாய்க் குறுந்தொகைப் பாடல் ஒன்றுண்டு.

இரண்டறி கள்வி,நம் காத லோளே;
முரண்கொள் துப்பின் செவ்வேல் மலையன்,
முள்ளூர்க் கானம் நாற வந்து,
நள்ளென் கங்குல் நம்மோ ரன்னள்;
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப்(பு) எண்ணெய் நீவி,
அமரா முகத்தள் ஆகித்
தமரோர் அன்னள், வைகறை யானே[1]

என்பது அப்பாடல்.

1. குறுந்தொகை, 312

'இரவில் களித்துக் கலந்திருந்தபோது நூற்றுக் கணக்கில் தலைவி எனக்குக் கட்டளையிட்டாள். பகலிலோ குனிந்த தலை நிமிராமல், அடக்கத்துடனும் நாணத்துடனும் நடந்து கொள்கிறாள். இரவில் நம்முடன் இருந்தவள்தானா என நம்புதற்கரியதாயுள்ளது' எனத் தலைவன் ஒருவன்தன் பாங்களிடம் கூறுவதாய்க், காதா சப்தசதியில் ஒரு பாடல் உள்ளது.

களித்தின் புறுங்கால் கன்னம் மின்னக்
கட்டளை நூறிடும் காரிர வினிலே;
பகலில் குனிந்த தலைநிமி ராதே;
அவளே இவளென நம்புதல் அரிதே.[1]

இவ்விரு பாடல்களின் கருத்தும் ஒன்றுபோலவே இருந்திடக் காண்கிறோம்.

தலைவி தோழியிடம் 'இன்று மட்டும் என்னை அழவிடு. நாளை தலைவன் பிரிந்து சென்று விடுவான். அதன்பின் ஒருவேளை நான் இறக்காதிருந்தால் அழவே மாட்டேன் எனச் சொல்லுகிறாள்.

இன்று மட்டும் எனை,அழ விடுக!
அன்புடைத் தோழி! எனைத்தடுக் காதே;
நாளை நாயகன் பிரிந்து சென்றபின்
மாளா திருப்பின் அழவே மாட்டேன்.[2]

தலைவன் பிரிந்தால் உயிர்விடுவது உறுதி என்பதைப் புலப்படுத்துகிறாள், தலைவி.

காதா சப்தசதியின் இப்பாடல்,

செல்லாமை உண்டேல் எனக்(கு)உரை; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்(கு) உரை [3]

என்னும் திருக்குறள் கருத்தை உள்ளடக்கியிருக்கிறது.

காதல் வெம்மைக்குத் தீயை ஒப்பிடுவது மரபு. திருவள்ளுவர், 'காதல் தீ' புதுமையானது என்பார். அருகே நெருங்கினால் தீ சுடும்; விலகி அகன்றாலோ சுடாது. ஆனால் காதல் தீயோ நெருங்கினால் மிகுந்த குளிர்ச்சியைத் தரும்; அகன்றாலோ தாங்க முடியாச் சூட்டினைத் தரும்.

நீங்கின் தெறூஉம்; குறுகும்கால் தண்என்னும்;
தீ,யாண்டுப் பெற்றாள் இவள் [4]

என்பது திருக்குறள்.

---

1. காதா சப்தசதி, 21
2. மேலது, 386
3. திருக்குறள் 1151
4. மேலது, 1104

"விறகு ஈரமிருந்தால் பற்றாது; உலர்ந்திருந்தால்தான் பற்றும். ஆனால் காதல் தீயோ (நெஞ்சில்) ஈரமிருந்தால் பற்றும்; காய்ந்தால் அறவே பற்றாது" என்கிறார், சப்த சதி கவிஞர் இராமதேவன்.

பிறதீப் போல்வ(து) அறவே இல்லை;
காதல் தீயின் கணக்கு வேறாம்;
காய்ந்த மனத்தில் ஓய்ந்தே போகும்;
ஈர நெஞ்சில் சீருடன் பற்றும்.[1]

கருத்தில், இராமதேவனும் திருவள்ளுவரும் ஒன்றிணைந்து செல்கின்றனர்.

பாலை நிலத்தில் நீர் வேட்கையோடு ஆண்மானும் பெண்மானும் செல்லுகின்றன. வழியிலுள்ள சுனையில் சிறிதளவு தண்ணீர் தென்படுகிறது. இரண்டனுக்கும் வேட்கை தணிக்க அது போதாது. தான் குடிக்காவிட்டால் பெண்மான் குடிக்காது என்பதால் ஆண்மான் உறிஞ்சுவதுபோல ஒப்புக்கு நீரில் வாய்வைக்கிறது. ஆண்மான் குடிப்பதாய் நினைத்துப் பெண்மான் நீர் குடித்து வேட்கை தணிகிறது.

சுனைவாய்ச் சிறுபுன்னீர் எய்தாதென் றெண்ணி
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் கலைமான்தன்
கள்ளத்தில் ஊச்சும் சுரமென்பர்; காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.[2]

ஆண்மானின் அன்புள்ளத்தை மாறன்பொறையனார் ஐந்திணை ஐம்பதில் இவ்வாறு காட்டுகிறார்.

பாலை நிலத்தில் மிகச் சிறிய அளவில் தண்ணீர் இருக்கிறது. அதையும் யானைக்குட்டி முதலில் கலக்கிவிட்டது. களிறு தன் வேட்கையை நீக்க விரும்பாமல் முதலில் பெண்யானையைக் குடிக்கச் செய்து பிறகே தான் குடிக்கிறது.

......அக் காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்உண்ணும் களிறெனவும் உரைத்தனரே.[3]

பெண்யானையைப் போற்றிப் பாதுகாக்கும் ஆண் யானையின் இச்செயலைக் கலித்தொகையில், பாலைபாடிய பெருங்கடுங்கோ சிறப்பிக்கிறார்.

1. காதா சப்தசதி, 343
2. ஐந்திணை ஐம்பது 38
3. கலித்தொகை, பாலை., 10 : 7-9

காதா சப்த சதியில் மத்தகஜேந்திரன் என்பார், தாம் பாடியுள்ள பாடல் ஒன்றில் இத்தகையதொரு காட்சியைக் காட்டுகிறார். ஆண் யானைக்குப் பெரும் பசி. அதற்கு மிகவும் பிரியமான உணவு தாமரைத் தண்டுகள். அம்மலர்க் கவளம் யானையின் கையில் இருக்கிறது; அதற்கு மிகுந்த பசி; என்றாலும் பெண் யானையை நினைத்துக் கொண்டதால் அதற்கு உண்பிக்காமல் தான் உண்ண மனமின்றி அப்படியே வைத்திருக்கிறது.

பெரும்பசி யுழந்தும் பிடிமுகம் நினைந்து
இருங்களிற்(று) ஒருத்தல் ஏங்கி நைந்து
தாமரைத் தண்டுறு தூமலர்க் கவளம்
நீடிய துதிக்கையில் வாட விடுமே[1]

சங்க இலக்கியங்களில் பாடல் எழுதியவர் பெயர் தெரியாத போது, அவர்தம் கவிதைகளில் கையாண்டுள்ள உவமை, பாடல் அடி இவற்றை வைத்தே நூலைத் தொகுத்தோர் பெயரிட்டுள்ளனர். மீனெறி தூண்டிலார், செம்புலப் பெயல்நீரார், குப்பைக் கோழியார் என்பன போன்ற பெயர்கள் இப்படி அமைந்தவை. அதுபோலவே இக் கவிதையில் 'இருங்களிற் றொருத்தலை' (மத்தகஜத்தை)ப் பாடியுள்ள இப் புலவர் பெயர் தெரியாததால் இவர் பெயர், 'மத்தகஜேந்திரன்' என்று வழங்கப்படுகிறது.

குரங்கு ஒன்றனை வண்டு ஒன்று கடித்துத் துன்புறுத்தி விட்டது. அதன் பின்னர் வண்டு உருவத்தில் எதைக் கண்டாலும், குரங்கு மருண்டது. அக் குரங்கு நாவற்கனி ஒன்றனைக் கண்டது. அதை வண்டு என நினைத்து அச்சம் கொண்டு அகன்று நின்றும், கிளையை உலுக்கியும், குதித்தும் ஆட்டம் போட்டது.

விலகி நிற்கும், உலுக்கும் கிளையை,
நகத்தால் கீறிக் குதிக்கும் குரங்கு,
பண்டு கடித்த வண்டெனக் கருதி
நாவற் கனிதொடா தே,கிடந் திடுமே[2]

நாரை கௌவ வருதலைக் கண்டஞ்சி நீருள் மூழ்கி மறைந்த கெண்டை மீன் ஒன்று தான் கண்ட தாமரை மொக்கையும் நாரையென்று அஞ்சி அகன்றோடி மறைகிறது;

குருகுகொளக் குளித்த கெண்டை, அயலது
உருகெழு தாமரை வான்முகை வெரூஉங்
கழனியம் படப்பை[3]

1. காதா சப்தசதி 309
2. மேலது, பாடல் 406
3. குறுந்., 127 1-3

எனும் இக் குறுந்தொகைப் பாடலடிகளில் காட்டப்பெறும் கெண்டை மீனும், காதா சப்த சதியில் காட்டப்பெற்ற குரங்கும் ஒன்று போன்ற மனநிலையினைக் கொண்டுள்ளன.

இத்தகையதொரு காட்சியை இக்காலக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் நகைச்சுவை ததும்பப் பாடியிருக்கிறார். குரங்கு ஒன்று ஆலமரத்தில் தொங்கிய பாம்பு ஒன்றனை விழுது என்று தொட்டுவிட்டது. உடனே வெடுக்கெனக் குதித்தோடியது. கீழே தென்படும் விழுதுகளைப் பாம்புகளென நினைத்துக் கிளைக்குக் கிளை தாவி மரத்தின் உச்சியை அடைந்து, கீழே பார்த்தபோது அதன் வால் தெரிந்தது. அதுவும் பாம்போ என அஞ்சிக் கிளையை உலுக்கி உலுக்கிக் குதிக்கிறது.

கிளையினிற் பாம்பு தொங்க,
விழுதென்று குரங்கு தொட்டு,
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்,
கிளைதொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி,
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.[1]

இவ்வாறாய்க் காலந்தோறும் கருத்துகள் ஒன்றுபடக் கவிதைகள் புனையப்படுவதைக் காண்கிறோம்.

மங்கை ஒருத்தி தன் வீட்டில் பூவை(மைனா) ஒன்றனை வளர்த்தாள். அது பேசப் பழகிய பூவை. இரவில் காதலர்கள் தனித்துப் பேசியதைக் கேட்டுக் கொண்டேயிருந்த அப்பூவை, அப்பேச்சுகளைப் பகலில் வீட்டுப் பெரியோர்முன் பேசத் தொடங்கிவிட்டது. அதுகேட்ட காதல் தலைவனும் தலைவியும் நாணத்தால் அங்கிருக்கக் கூசி ஓடிஒளிய முற்பட்டார்கள். ஆனால் எங்கே ஒளிவது என்று தெரியாமல் திண்டாடினார்கள்.

இரவில் நிகழ்ந்த தெல்லாம், எமது
பெரியோர் முன்னர் பேசிடும் பூவை
மொழிகள் கேட்டு, முகத்தை மறைக்க
ஒளிவ(து) எங்கென உணரா திருந்தோம்[2]

எனத் தலைவி தோழியிடம் கூறுவதாக உள்ள காதா சப்த சதிப் பாடல் இது.

1. பாரதிதாசன், அழகின் சிரிப்பு, ஆல்
2. காதா சப்தசதி, பாடல் 449

இதே போன்றதொரு காட்சியைத் தமிழ் இடைக்கால இலக்கியமாகிய கலிங்கத்துப் பரணி காட்டுகிறது. இரவில் தலைவனுடன் தலைவி பேசியதெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தது அவள் வளர்த்த கிளி. மறுநாள் காலை வீட்டில் மற்றவர் இருக்கும்போது தான் இரவு கேட்டதையெல்லாம் சொல்லத் தொடங்கியது. தலைவி ஓடி, 'பொல்லாத கிளியே; இதையெல்லாமா இங்குச் சொல்வது' எனச் செல்லமாக அதன் வாயைப் பொத்துகிறாள்.

நேயக் கலவி முயக்கத்தே
  நிகழ்ந்த மொழியைக் கிளிஉரைப்ப
வாயைப் புதைக்கும் மடநல்லீர்!
  மணிப்பொற் கபாடம் திறமினோ.[1]

இது கலிங்கத்துப்பரணி தீட்டியுள்ள சொல்லோவியம்.

தலைவியின் மேனியழகு பற்றிய ஒரு பாடல். அவளது அழகிய மேனியில் யாதோர் உறுப்பினை முதலில் கண்டார்களோ அதிலேயே அவர்கள் பார்வை நிலைத்து விடுகிறது. அவ்வளவு எழில் பொங்கும் அங்கம். ஆகையால் அவள் உடலை முற்றக் கண்டவர் எவருமிலர்.

எழில்மிகும் உறுப்பினில், எதில்முதற் பார்வை
விழ்ந்ததோ, அதிலே ஆழ்ந்ததே யன்றி
மேனி முழுவதும் மேவ எவரும்
கண்களாரக் கண்ட திலையே.[2]

அழகுணர்ச்சியை வியக்கத் தக்க வகையில் வெளியிடும் சப்த சதியின் இப்பாடற் கருத்தை, கம்பன் இராமாயணத்தில், இராமனின் அழகை வருணிக்கும் இடத்தில் பயன்படுத்தியுள்ளான். மிதிலை நகரில் இராமன் நடந்து சென்றபோது, அவனைப் பார்த்தவர்கள்,

தோள்கண்டார் தோளே கண்டார்,
  தொடுகழல் கமலம் அன்ன
தாள்கண்டார், தாளே கண்டார்;
  தடக்கை கண்டாரும் அஃதே;
வாள்கொண்ட கண்ணார் யாரே
  வடிவினை முடியக் கண்டார்?[3]

இராமனது திருமேனியழகை முழுவதும் பார்த்தவர்கள் ஒருவருமிலர் என்கிறார் கம்பர்.

1. கலிங். பரணி, கடைதிறப்பு 39
2. காதா சப்தசதி, பாடல் 197
3. கம்பராமாயணம், உலாவியல்., 19

உவமை, கற்பனை

இந்நூலை உவமை, கற்பனைகளின் களஞ்சியம் என்றே சொல்லலாம். காதற்சுவையில் முறிவு ஏற்பட்டபின் மீண்டும் கூடினாலும் அது முன்னைய சுவையைத் தராது என்பதற்கு, தண்ணீரைக் காய்ச்சிய பின் மீண்டும் குளிர வைத்தாலும் அதில் முன்னைய சுவையைப் பெற முடியாது என்பதைப் புலவர் உவமையாக்குகிறார்.[1]

தலைவி காதலனோடு ஊடல் கொண்டாள். கடுஞ்சினம் கொண்டு ஊடலைத் தளர்த்தாமல் உறுதியாக இருந்தாள். அப்போது தோழி தலைவியிடம், "இந்த ஊடல் இறுதிவரையில் இப்படியே இருக்க முடியாது. குறுமணலை இறுக்கிப் பிடித்திருந்த போதிலும் அது தானாகவே தளர்ந்து கொஞ்சம் கொஞ்சமாய் உதிர்ந்துவிடும். அது போலத்தான் உன் ஊடலும்" என்று குறிப்பிடு கிறாள்.

> பைப்பயத் தளர்ந்து பாழா கிடுமே
> கைப்பிடி யிறுக்கிய குறுமணல்...[2]

என்பது மிகவும் நுணுக்கமான நோக்குகை.

நல்லவர் வாய்க்கு ஒருதன்மைதான் உண்டு. அது எப் போதும் ஒன்று போலவே பேசும். அற்பர்வாய்க்கோ இரண்டு தன்மைகள் உண்டு. சோறு போட்டால் அவர் வாய் புகழும்; சோறு போடாவிட்டால் அதே வாய் வையும். இவ்வாறு இருவகையாகப் பேசும் அற்பர்களின் வாய்க்கு மிருதங்கத்தின் வாய்களைப் புலவர் உவமையாகக் கூறுகிறார். மிருதங்கத்திற்கு இரண்டு வாய்கள் (பக்கங்கள்) உண்டு. அவை சோறு கொடுத்தால் (மாவு தடவினால்) நல்லிசை தரும்; இல்லாவிட்டால் அபசுரமாக அரற்றும். பொருத்தமானதும் புதுமையானதுமான உவமையாக இது திகழ்கிறது.[3]

மரகத நிறச் சிறகுகளையும் பவளநிற மூக்குகளையும் கொண்ட கிளிகள் வானிலிருந்து வரிசையாய் ஒரே கோவையாய்க் கீழ்நோக்கி வருவது வானமகளின் கழுத்து மணிமாலை தவறிக் கீழே வீழ்வதுபோலத் தென்படுகிறது.[4]

---

1. இந்நூல் பாடல் 50
2. மேலது, பாடல் 66
3. மேலது, பாடல் 213
4. மேலது, பாடல் 67

புதர்களில் நாணற் பூக்கள் நெருங்கிப் பூத்திருப்பது தரைமகள் முதுமையுற்று, நரைத்த கூந்தலொடு இருப்பதுபோலக் காட்சிதருகிறது.[1]

கோடையில் சிள் வண்டுகள் கிறீச்சிடுவது காடுகள் வெப்பக் கொடுமை தாங்காமல் அழுகுரல் எழுப்புவதை ஒத்திருக்கிறது.[2]

தலைவி எழில் மிக்கவள்; அவளைப் பார்ப்பவர் கண்கள் அவள்மீது எங்கெங்குப் படுகின்றனவோ அங்கங்கேயே பதிந்து விடுகின்றன; பார்வை, பார்த்த அவ்விடத்தை விட்டு எழுவதே இல்லை. வலிவற்ற கிழட்டுமாடு எப்படிச் சேற்றில் விழுந்து எழமுடியாது - விழுந்த இடத்திலேயே கிடந்து தத்தளிக்குமோ அவ்வாறே கண்களும் பதிந்த இடம்விட்டு அகலமுடியாது ஆழ்ந்து போகின்றன.[3]

அம்பு நேரானது; அது நாணுடன் பொருந்திக் கோணலான வில்லுடன் சேர்ந்தாலும் வில்லிலேயே நிலைத்து நிற்காது; விரைந்து அகன்றோடும். சான்றோர் அம்பு போல்வர். சில சூழ்நிலை களினால் கொடுமனத்தாரோடு பழக நேரினும் உடனே பிரிந்து அகன்றுவிடுவர்.[4]

மனைவியை இழந்த உழவன் ஒருவன் வயலிலிருந்து வீடு திரும்பினான். மனைவி இல்லாத வீட்டை அவன் காண்பது, தான் புதைத்து வைத்திருந்த புதையலைக் கள்வர் திருடிக்கொண்டு போனபின்னர்ச் சிதைந்து கிடந்த குழியைப் பார்ப்பது போன்ற திகில் உணர்ச்சியைத் தந்தது.

> மனைவி இல்லா மனைகாண் டலுமே
> புதையல் தோண்டிய புலம்கண் டாரின்
> உழவன் உளம்வெந் துள்ளழிந் தழுமே.[5]

கோடை வெயிலில் செல்லும் ஒருவனுக்கு அவனுடைய நிழல் அவன் தங்கப் பயன்படாததுபோல, பெருஞ்செல்வமுடைய வனாயினும் கருமியிடம் உள்ளசெல்வம் அவனளவில் பயன்படாது போகும்.[6]

---

1. இந்நூல் பாடல் 347
2. மேலது, பாடல் 37
3. மேலது, பாடல் 230
4. மேலது, பாடல் 340
5. மேலது, பாடல் 302
6. மேலது, பாடல் 117

இவ்வாறான சிறந்த உவமைகள் பல இந்நூலுள் உள்ளன.

❖ நூல், சிவனின் காலைச் சந்தியாவந்தனத்துடன்.தொடங்குகிறது; மாலைக் காயத்திரியுடன் முடிவடைகிறது. புலர்காலையில் தொடங்கும் நூல் அந்தி மாலையில் நிறைவுறுகிறது. தொடக்கப் பாடலும் நிறைவுப் பாடலும் கற்பனை நயம் கொண்டவையாய்ச் சிறக்கின்றன.

காலையின் சந்தியாவந்தனம் செய்யச் சிவன் கையில் நீரை ஏந்தி இருக்கிறான். அருகே நின்ற உமையவள் சிவன் கையிலிருந்த நீரைப் பார்த்ததும் தன் சக்களத்தியை (கங்கையை)ச் சிவன் தியானம் செய்வதாய் ஊடல் கொள்கிறாள். அதனால் சிவந்த அவளுடைய முகம் சிவன் கையிலிருந்த நீரில் உருவமாய்த் தோன்றியது. அக்காட்சி சிவன் தாமரை மலரை நீருடன் ஏந்திப் பூசை செய்வது போல இருக்கிறதாம்![1] பார்வதி ஊடல் கொள்வதற்குக் கற்பித்துள்ள காரணமும் அவள் முகம் தாமரையொத்திருந்தது என்பதைக் கற்பனையோடு கூறுகின்ற திறமும் வியக்கத்தக்கனவாயுள்ளன.

ஆயர்பாடியில் ஆய்ச்சியர், குரவைக் கூத்தாடினர். கண்ணனும் ஆங்கிருந்தான். அவனது எழிலுருவம் ஆடிக் கொண்டிருந்த ஒருத்தியின் கன்னத்தில் பிரதிபலித்தது. அடுத்தவள், அவளை முத்தமிடுவதுபோல நிழலிட்டிருந்த கண்ணனின் உருவை முத்தமிட்டாள்.[2] மையலின் மயக்கத்தை வெகு திறமையாகக் கற்பனை செய்துள்ளார் கவிஞர்.

கலவியின்போது சிவன், உமையவள் உடையைக் களைந்து அவளை உற்றுப் பார்த்தான். வெட்கமுற்ற உமை சிவன் பார்க்காதவாறு அவனுடைய இரண்டு கண்களையும் தன் இரண்டு தளிர்க் கைகளினால் மூடினாள். சிவன் மூன்று கண்கள் உடையவனாயிற்றே! தன் மூன்றாம் கண்ணைத் திறந்து பார்த்தான். உமையோ அன்புடன் முத்தமிடுவதுபோல தன் உதடுகளால் அக்கண்ணையும் மூடிவிட்டாள். இனி என்ன செய்ய முடியும் சிவன்?

கலவியில் மென்துகில் கழற்றிய சிவன்தன்
இருகண் களைத்தன் இருகரம் பொத்தி
மூன்றாம் கண்ணையும் முத்த மிட்டு
மூடும் உமையவள் நீடு வாழ்க.[3]

---

1. இந்நூல் பாடல் 1
2. மேலது, பாடல் 103
3. மேலது, பாடல் 361

கடவுளரைக் கதைமாந்தர்களாக்கிப் பின்னப்பட்டுள்ள அருமையான கற்பனை இது.

வறுமை மிக்க குடும்பத்தான்; உடுத்த ஓர் ஆடை தவிர வேறில்லை. அதையே துவைத்துத் துவைத்து உலரப்போட்டு உடுத்து வந்தான். உலரப்போட்டபோது ஆடையின் ஒரு மூலையிலிருந்து நீர் சொட்டுச் சொட்டாய்க் கீழே வீழ்கிறது. அக்காட்சி, 'என்னை இவ்வாறு அடித்தும் துவைத்தும் தப்பியும் துன்புறுத்தினால் நான் எப்படித் தாங்குவேன்" என அந்த ஆடை அழுததால் வடிந்த கண்ணீர்த் துளிகள் சொட்டுவனபோல இருந்ததாம்!

எளிய குடிமகன் இழுத்துத் துவைத்திட
எவ்விதம் பொறுப்பேன் என்றே நைந்த
ஆடை யதுதான் கோடியிற் சொட்டும்
அழிதுளி யாலே அழுவது போலும்.[1]

உவமை நயத்துடன் கூடிய உயரிய கற்பனை இது.

இவ்வாறே நூல் முழுவதும் எண்ணிக் களிக்கத்தக்க கற்பனைகள் நிறைந்துள்ளன.

அரியசெய்திகள்

சில சூழ்நிலைகளைப் படைத்துக்கொண்டு அரிய செய்திகளைக் கூறும் பாடல்கள் பல காதா சப்த சதியில் உண்டு.

ஒருத்தி கணவனைப் பிரிந்து நெடுநாட்கள் ஆயின. அவளோ இளமையும் எழிலும் மிக்க மங்கை. அவள் வாழுமிடம் நாற்சந்துகள் கூடுமிடத்தில் ஓர் ஒதுக்குப்புறத்தில் உள்ளது. பக்கத்து வீட்டுப் பெண்களோ கற்புத் திறனில்லாப் பரத்தையர். அங்கே காமுகர்கள் வந்துலவுவர். அவளோ வறுமை நிலையில் இருப்பவள். இத்துணைத் தீமைகள் சுற்றி இருந்தும்கூட அவள் கற்பின் வழுவாப் பொற்புடைச் செல்வியாய் வாழ்ந்து வருகிறாள் எனில் அவளைப் 'பாராட்டாதார் இருக்க முடியுமா?

சதுக்கத் தெருவின் ஒதுக்கத்(து) இல்லம்!
கவின்மிகு மங்கை; கணவற் பிரிந்தோள்;
பாங்குளோர் எனினோ பரத்தை மகளிர்;
வறியள்! விடர்கள் வருமிடம்; எனினும்
கற்பின் வழுவாப் பொற்புடை யாளே.[2]

1. இந்நூல், பாடல் 17
2. காதா சப்தசதி, பாடல் 34

இப்பாடல்

சிறைகாக்கும் காப்(பு)எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை[1]

எனும் திருக்குறளுக்குச் சிறந்ததொரு கருத்தோவியமாய் அமைந்துள்ளது.

காதலன் ஒருவன் பிச்சை எடுப்பவன்போல இற்செறிக்கப் பட்டிருந்த தன் காதலியைக் காண அவள் இல்லத்தின்முன் வந்து நின்றான். வந்திருப்பவன் யார் என அறியாது காதலி பிச்சையிடக் கலத்தில் தானியத்துடன் வந்தாள்; வந்திருப்பவன் காதலன் என்பதறிந்தாள். அவன் அவளது இடையழகு நோக்க, அவள் அவன் முகம் காண இருவரும் மெய்ம்மறந்திருந்தனர். காகம் ஒன்று அவள் கைப்பாத்திரத்திலிருந்தும், அவன் திருவோட்டிலிருந்தும் தானிய மணிகளை எடுத்துக்கொண்டு பறந்து சென்றதுகூட அவர்களுக்குத் தெரியவில்லை.

இரவலன் அவள்எழில் இடையினைக் காண,
மங்கையும் அவன்முக மதிதனைக் காண
இருவர் கலத்தி லிருந்தும் காகம்
தானியம் கொண்டே தாவிப் பறக்கும்.[2]

காதலர் உள்ளநிலையை, காதல்வேட்கையை மிக அருமையான ஓவியமாக்கிக் காட்டுகிறது இப்பாடல்.

தன் மகனுக்கும் கணவனுக்கும் இடையில் தலைவி ஒருத்தி இருந்தாள். புதல்வன் முகம் வைத்து நயத்தலின் அவளுடைய ஒரு முலை பாலூறும்; அடுத்த பக்கம் கணவன் நகம் வைத்து நயத்தலின் அம்முலை புளகமுறும்.

மகற்கும் தன்கேள் மணாள னுக்கும்
இடையில் ஏந்திழை இருக்குங் காலே,
நகமும் முகமும் நயத்த லாலே,
ஒருமுலை தன்னில் பால்சுரந் திடுமே;
மற்றது புளகம் உற்றிலங் கிடுமே![3]

ஒரே வேளையில் தாய்மையும் காதலும் கனியக் கவிதையமைந்துள்ளது. இருவேறுபட்ட சுவைகள் ஒன்றிணைந்து நமக்கு ஒரு புதிய சுவையைத் தருகிறது.

குழந்தை ஈன்ற தலைவி ஒருத்தி தன் மகன் முதன் முதலில் முளைத்த பற்களால் கடித்த கனியைத் தன் தலைவனிடம்

1. திருக்குறள் 57
2. காதா சப்தசதி, பாடல் 136
3. மேலது, பாடல் 331

அகமகிழ்வுடன் காட்டினாள். இதிலே ஒரு குறிப்பு உண்டு. கருவுயிர்த்த பெண், தன் குழந்தைக்குப் பல் முளைத்ததும் மீண்டும் புணர்ச்சிக்குத் தகுதியாகிறாள் என்பது முன்னோர் மரபு. அதை நினைவூட்டவே தலைவி தலைவனிடம், 'பற்களால் கடிபட்ட பழத்தைக் காட்டி'த் தன் தகுதிப்பாட்டினைக் குறிப்பினால் புலப்படுத்தினாள். மகன் கனியைத் துய்ப்பதுபோலத் தலைவன் தன்னைத் துய்க்கவேண்டும் எனும் வேட்கையையும் வெளிப் படுத்தினாள்.

மகன்முதல் முளைப்பல் கடித்த கனியை
அகமகிழ் வுடனே நகைத்(து)இதோ என்றே
தகவுடன் தந்த தையல் தன்னை
மிகவும் அன்புடன் மேலோன் கண்டான்.[1]

கவிக்கூற்று

தலைவி, தோழி கூற்றுக்கு அடுத்ததாய் மிகுந்த எண்ணிக்கையில் 'கவிக்கூற்று'ப் பாடல்கள் அமைந்துள்ளன; கவிக் கூற்றாக 61 பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் பெரும்பான்மை நீதிகளையும், அறவுரைகளையும் கூறுகின்றன. அன்பை விளக்கும் பாடல்களும் உண்டு.

எவ்விடத்தேயாயினும் எக்காலத்தேயாயினும் துயர் நேரும்போது துவண்டுபோகாமல் சுவரில் எழுதப்பட்ட சித்திரம் போல முகமலர்ச்சியுடன் இருக்கும் திட உள்ளமுடையவர் நட்பை அடைய வேண்டும்.[2]

இகழ்தக்க இழிதகையாரின் நட்பைவிட, அறிவும் நற் குணமும் உடைய மேலோரின் பகை நன்று.[3]

மலைபோலும் மாண்புடைய மனிதனாயினும் அவனைக் குன்றிவிடச் செய்யும் குறைகள் இரண்டு உள. ஒன்று, தான் செய்யாத செயலைச் செய்ததாய்ச் சொல்லல்; மற்றொன்று தான் செய்த செயலைச் 'செய்தேன்' எனப் பெருமை பாராட்டிச் செப்பித் திரிதல். (முதலாவது பொய்மைக் குற்றம்; இரண்டாவது தற்செருக்குக் குற்றம்.)

குளத்தில் வெப்ப நேரத்தில் நீர் மேலே சுடும்; ஆனால் உள்ளே குளிர்ந்து இருக்கும். சான்றோர் மனமும் அதுபோன்றதே!

---

1. காதா சப்தசதி, பாடல் 166
2. மேலது, பாடல் 181
3. மேலது, பாடல் 226

மேலே சுடுவதுபோலச் சினந்தாலும், உள்ளே அன்பினாற் குளிர்ந்தேயிருக்கும்.[1]

இத்தகைய அறவுரைப் பாடல்கள் சப்தசதியில் நிறைய உள்ளன.

வேடன் ஒருவன் அம்பு எய்ய ஓர் ஆண்மான் மீது குறிவைத்தான். பெண்மான் தன் ஆணைக் காக்கவேண்டி அந்த அம்பு தன்மேல் விழுமாறு குறுக்கே வந்து நின்றது. வேடன் அப்பெண்மான் மீது குறிவைக்க, அதனைக் காக்க ஆண்மான் குறுக்கே வந்து நின்றது. வேடன் அம்பு எய்ய முற்படும் போதெல்லாம் ஒரு மான் மற்றதைக் காக்க முன்வந்து நின்றது. மான்களின் அன்பையும் ஒன்றையொன்று காக்க முன்வரும் தியாகத்தையும் கண்ட வேடன் மனம் உருகிக் கண்ணீர் வடித்தான்; அக்கண்ணீரால் வில் நனைந்தது; வில்லைக் கீழே போட்டான்.

ஒன்றினைக் காக்க ஒன்று முந்தி
அம்புக் கெதிர்வரும் கலைமான் இணைகண்(டு)
இருகண் நீர்வழிந் தொழுகி நனைந்த
வில்லினை வேடன்கை விட்டருள் கூர்ந்தான்.[2]

பகுத்தறிவில்லா இம்மான்களுக்கிருக்கும் அன்பும், ஈகமும் மாந்தரிடத்தில் இல்லையே என்பதை நினைந்து கவிஞர் கலங்குகிறார்.

திணை, துறை

சங்க இலக்கிய அகப்பாடல்களுக்கிருப்பன போன்று திணை, துறை என்ற பாகுபாடுகள் பிராகிருத நூலில் செய்யப்படவில்லை; எனினும் சங்க இலக்கியங்களின் அனைத்துத் திணை, துறைகட்கான பாடல்களும் இதில் அடங்கியுள்ளன. சங்க இலக்கியங்களைப் போலவே, பாடல்கள் தலைவி, தலைவன், தோழி, பாங்கன், பாணன், செவிலித்தாய், நற்றாய் போன்றோரின் கூற்றுகளாய் உள்ளன. தலைவி, தோழி கூற்றாக உள்ள பாடல்கள் எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளன. இந்நூலுள் உள்ள 500 பாடல்களுள் தோழி கூற்றாய் 167 பாடல்களும், தலைவி கூற்றாக 145 பாடல்களும் அமைந்துள்ளன.

தலைவன் கூற்று

வானவர்கள் கடல் கடைந்து அளவற்ற துயருற்று, நஞ்சு கண்டு நடுங்கி அஞ்சிப் பின்னர் அமுது உண்டு மகிழ்ந்தார்கள்.

1. காதா சப்தசதி, பாடல் 158
2. மேலது, பாடல் 456

"அவர்கள் இவ்வளவு தொல்லைப்படுவானேன்? தம் காதலியின் மெல்லிதழ்க் கனிவாயூறலைத் துய்க்கும் பேறு அவர்களுக்குக் கிடைக்கவில்லையோ?" எனத் தலைவியின் நலம் பாராட்டுகிறான் தலைவன் ஒருவன். தலைவியின் வாயெயிறு ஊறிய நீர் அமிழ்தம்' என்கிறான்.

"தலைவியின் இடையிற் பொருந்தி இணையும் பேறு எனக்குக் கிடைக்கவில்லை. பொன்னாலான மேகலை அவள் இடுப்பில் தவழ்கிறதே! இப்பேற்றினை அது நீரிலும் நெருப்பிலும் மூழ்கியல்லவா பெற்றிருக்கிறது. அப்படித் தவம் செய்தால்தான் நாமும் பெறமுடியும் போலிருக்கிறது" எனக் கருதுகிறது தலைவன் ஒருவனின் உள்ளம். பொன்கலன்கள் செய்யும்போது நெருப்பில் புடமிட்டும் நீரில் நனைத்தும் செய்வர். இதனைத்தான் மேகலை நீரிலும் நெருப்பிலும் நின்று தவம் செய்து அவள் இடையை அடைந்தது என்கிறான்.

மேகலைக்குக் கிடைக்கும் பேறு தனக்குக் கிடைக்க வில்லையே என ஏங்குகிறது அத்தலைவன் உள்ளம்.

பரத்தை கூற்று

பரத்தை தன் மகளிடம், "மகளே! அணிகள் அணிவதிலேயே நேரங்கடத்தி விடாதே! நேரம் கடத்துவதால் காதல் வேட்கையின் வெம்மை அகன்றிடின் உன்மீது ஆடவரின் கவனம் குறைய நேரலாம். ஆதலின் விரைந்து செல்க!" என மகளுக்கு ஆடவர் அகன்றுசெல இடந்தரல் கூடாது என அறிவுரை கூறுகிறாள்.[2]

பரத்தை ஒருத்தி இளைஞன் ஒருவனிடம், "மகப்பேறுற்று ஒரு திங்கள் கழிந்த பெண்; ஆறு திங்கள் சூலுற்றிருப்பவள்; ஒருநாள் காய்ச்சலால் உடல் தளர்ந்தவள்; பிரிவுத் துயர் மிகுந்தவள்; மன்றத்தில் நடனமாடிக் களைத்தவள்; புத்தம் புதியவள் ஆய இவர்கள் புணர்ச்சியின்பம் சிறந்ததாய் இருக்கும்" எனக் கூறி, அத்தகைய புணர்ச்சியை விரும்பிப் பெறுவாயாக என அவனுக்கு அறிவுரை கூறுகிறாள்.[3]

பரத்தையின் அறிவுரை இப்படித்தானே இருக்க முடியும்?

பரத்தையர்ப் பிரிவு

தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையர்பாற் சென்று மீள்வான். தலைவி அவனை ஏற்கமாட்டாள். தன் பாங்கன்,

1. காதா சப்தசதி, பாடல் 452
2. மேலது, பாடல் 26
3. மேலது, பாடல் 219

தலைவியின் தோழி ஆகியோரை அனுப்பித் தலைவியின் சம்மதத்தைப் பெறத் தலைவன் முயல்வான். தலைவி பிடிவாதம் தளர்ந்து இறுதியில் தலைவனை ஏற்பாள். இவ்வாறு பரத்தையர்ப் பிரிவு தொடர்பான பலவற்றைக் கூறும் இனிய பாக்கள் பல சப்த சதியில் உள்ளன.

தலைவி ஊடியிருந்தாள்; தலைவனைப் பார்க்கவும் மாட்டேன் என்கிறாள். தோழி தலைவியிடம், "ஆற்று நீர் போனது மீண்டு வராது. பகலும் இரவும் சென்றவை மீளா. ஆகையால் இளமையில் துய்க்க வேண்டிய இன்பங்களை ஊடல் கொண்டு இழந்து விடுவது நன்றன்று"[1] எனக் கூறி ஊடல் தீர்க்க முயல்கிறாள்.

தலைவி புலவி கூர்ந்து இருந்தாள். அவளது பூப்போன்ற பாதங்களில் தலைவன் வீழ்ந்து வணங்கினான். அந்த நேரம் அங்கிருந்த அவன் புதல்வனாகிய சிறுவன் தந்தையின் முதுகில் ஏறி விளையாடுகிறான். தலைவி தலைவன் நிலையை நினைந்து குறுநகை கொண்டு புலவி தீர்ந்தாள். இதைக் கண்ட தோழியும் மகிழ்ந்தாள்.[2]

பரத்தைபாற் சென்று திரும்பிய ஒருவன் மனைவியின் ஊடல் தீர்க்க அவள் காலில் விழுந்து வணங்கினான். அப்போது தலைவி, "தலைவ! பரத்தையின் முகத்திலிருந்த திலகம் அவளை நீ முத்தமிட்டபோது உன் முகத்தில் ஒட்டிக் கொண்டது. இப்போது நீ என் பாதங்களில் வீழ்ந்து இறைஞ்சியதாலே அத்திலகம் என் பாதங்களிலேயும் பொருந்திவிட்டது"[3] என்று திலகத்தை வியந்து கூறுவதுபோலத் தலைவனைக் கண்டித்தாள்.

இவ்வாறாகச் சங்க இலக்கியங்களில் வரும் எல்லாத் துறைகளுக்குமான பாடல்கள் சப்த சதியில் இடம் பெற்றுள்ளன.

சங்க இலக்கியங்களில் இல்லாத சில நிகழ்வுகளைக் காதா சப்த சதியில் காண முடிகிறது. சங்க இலக்கியங்கள் தலைவி நற்றாயிடம் அறத்தொடு நிற்பதாகக் கூறுவதில்லை. சப்த சதியில் அந்நிலை காணப்படுகிறது.

நற்றாய் தவிர்த்துத் தலைவி தன் குடும்ப உறவினரிடம் பேசும் வகையில் சங்க இலக்கியங்களில் பாடல் எதுவும் இல்லை. சப்த சதியில் மாமியிடம் தலைவி பேசும் முறையில் பாடல்கள் உள்ளன.

1. காதா சப்தசதி, பாடல் 42
2. மேலது, பாடல் 10
3. மேலது, பாடல் 150

சப்தசதி, "சக்களத்தியர், மாமன், மாமி, விதவையர், சிற்றன்னை, அத்தை முதலியவர்களைப் பற்றியும் பேசும்" என இந்நூலாசிரியர் தம் முன்னுரையில் கூறி உள்ளார்.

சில வேறுபாடுகள்

சங்க இலக்கியப் பாடல்களில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை பற்றிய செய்திகள் இல்லை. ஆனால் காதா சப்தசதியில் பல பாடல்கள் கூட்டுக் குடும்ப வாழ்க்கையைச் சித்திரிக்கின்றன. "புது மணப் பெண்ணான தலைவியைக் கொழுந்தன் ஒரு விதமாகப் பார்க்கலானான். அவனுடைய தவறான போக்கினைத் தலைவி வெறுக்கிறாள்; ஆயினும் குடும்ப ஒற்றுமை குலையக் கூடாதே என அஞ்சி, அதனைத் தலைவனிடமும் கூறாது, தன் மனத்துள்ளேயே அடக்கிக் கொள்கிறாள்" என்னும் கருத்துடைப் பாடல் கூட்டுக் குடும்ப வாழ்வில் தலைவி ஒழுகுகின்ற வகையை நயம்பட அறிவிக்கிறது.

கோதுறும் உளமுடைக் கொழுந்தன் இயல்பைக்
குடும்ப வாழ்க்கை குறைபடற் கஞ்சி
கோல மேனி சால மெலியவும்
கொண்க னிடமும் கூறிட மாட்டாள்.[1]

புதுமணப் பெண்ணைக் கொழுந்தன் தவறாய்ப் பார்த்த முறையைத் தலைவி நயமாய்த் திருத்துகின்ற நிலையை மற்றொரு பாடலில் அறிகிறோம். அவ்வீட்டுச் சுவரில் வரையப்பட்டிருந்த சீதை இராமனுடன் இலக்குவன் காட்டுக்குச் செல்லும் ஓவியத்தை அப்பெண் சுட்டிக்காட்டுகிறாள். 'இலக்குமணன்போல அண்ணியை நீ தாயாக மதிக்க வேண்டும்' எனக் குறிப்பால் புலப்படுத்துகின்றாள்.

கோதுறு மனமுடைக் கொழுந்தனை நோக்கி,
மா(து)அவள் தினமும் போதனை செய்தாள்;
இராம னுடன்செலும் இலக்குவன் சரிதம்
சுவரில் வரைந்த சுடரோ வியத்தே![2]

இவ்வாறான கூட்டுக் குடும்ப வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறும் பாடல்கள் பல சப்தசதியில் உள்ளன.

தமிழ் அக இலக்கியங்கள் உயர்ந்த ஒழுகலாறுகளை மட்டுமே சுட்டுவன. கணவனிருக்க அயல் ஆடவனோடு தொடர்பு கொள்ளும் கேடுகளை அங்குக் காணமுடியாது. அதனால்

1. காதா சப்தசதி, பாடல் 53
2. மேலது, பாடல் 33

சமூகத்தில் அத்தகைய கேடான நிலையே இருந்திருக்காது என்று சொல்ல முடியாது. அவற்றை இலக்கியம் எடுத்துக் கூறக்கூடாது என ஒதுக்கியிருக்கின்றனர் என்றே சொல்ல வேண்டும். சப்த சதியோ அத்தகு நிலைகளையும்கூடக் குறிப்பிட்டுச் செல்கிறது.

" 'இல்லதும் இனியதும் நல்லதுமெனப்' புலவரால் நாட்டப்பட்ட கற்பனை வாழ்வைச் சித்திரிப்பவை சங்க இலக்கிய அகப்பொருள் நூல்கள். காதா சப்தசதியோ நடைமுறை வாழ்வின் அவலங்களையும், முறைகேடுகளையும், இன்பதுன்பங்களையும், உயர்வு தாழ்வுகளையும்கூட எடுத்துக்காட்டும் மெய்யியல் (Realism) இலக்கியமாய்த் திகழ்கிறது. செல்வச் செழிப்பை மட்டும் காட்டாமல் வறுமையில் வாடும் மக்களையும் எடுத்துக் காட்டுகிறது இந்நூல்; கற்புக்கரசிகள் மட்டுமன்றி, கணவனிருக்க மற்றொரு காதலனை நாடும் காரிகையரும் உண்டு; பரத்தையரும் உண்டு. இது என்றும் நம் சமுதாயத்தில் இருந்துவரும் கண்கூடான உண்மை. சங்க இலக்கியங்களில் கற்புக்கரசியரையும், பரத்தையரையும் பற்றிக் கவிதைகள் உண்டு. கணவன் இருக்க மற்றொரு காதலனை நாடும் காரிகையரைப் பற்றித் தமிழ் இலக்கியத்தில் குறிப்பில்லை. காதா சப்த சதியில் மட்டுமே இத்தகைய பெண்டிரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன" என இந்நூலாசிரியர் தம்முரையில் குறிப்பிட்டுள்ளார்.[1]

தமிழ் அகத்துறை புறக்கணித்த பெருந்திணையின்பாற் படும் பொருந்தாக் காமச்சுவையும் சப்தசதிப் பாடல்களில் உண்டு.

கற்புக் காப்பிலா மடந்தை ஒருத்தியின் இல்லத்தில் சோர நாயகன் வந்திருந்தான். அப்போது எதிர்பாராவிதமாய் வீட்டுத் தலைவன் வந்துவிட்டான். உடனே அந்தச் சாகசக்காரி கணவனிடம் அவன் தம்மிடம் சரணடைய வந்தவன் என்றும், அவனைக் காக்க வேண்டும் என்றும், அவன் தன் தாய்வழி உறவினன் என்றும் கூறி அவனையும் தப்புவித்துத் தன் தவறான நடத்தையையும் மறைத்துக் கொண்டாள் என்று ஒரு பாடல் குறிப்பிடுகிறது.[2]

ஒருத்தி தன் கணவனிருக்க, மருத்துவன் ஒருவனிடம் கள்ளக் காதல் கொண்டாள். அவளை அவனிடம் சேர்ப்பிக்க, தோழியர் கணவன் கண்முன்னரேயே பாசாங்கு செய்து கடத்திச் செல்கின்றனர். அவள் தேள் கடித்ததுபோல, கையும் காலும் உதறி

1. இந்நூல், பக். 25-26
2. காதா சப்தசதி, பாடல் 240

அலறினாள். தோழிகள் மருத்துவத்திற்கென அவளை அழைத்துச் செல்வதுபோல் கள்ளக்காதலனாகிய மருத்துவனிடம் அழைத்துச் சென்றனர். இப்படியொரு பாடல் :

> தேள்கடித் த(து)எனத் தோள்கள் உதறும்
> மங்கையைக் காதல் மருத்தவன் பாலே,
> செங்கை பற்றித் திறன்மிகு தோழியர்
> கணவன் கண்முன் கடத்திச் சென்றார்.[1]

இப்படியுமா? என்று கேட்கத் தோன்றும். ஆனால் வாழ்க்கையில் இப்படியும் நடக்கத்தானே செய்கிறது. மனித வாழ்வில் உள்ள விலங்குத் தன்மையை விவரிக்கிறது இப்பாடல்.

இவை போன்ற வேறு பாடல்களும் சில உள்ளன.

சமூக ஒழுகலாற்றில் உள்ள இக் கரும்புள்ளிகளைத் தொகுப்பில் ஹால மன்னன் நீக்கியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

மேலே சொன்னது போன்ற ஒன்றிரண்டு வேறுபாடுகளைத் தவிர பிற அனைத்திலும் சப்தசதிப் பாடல்கள் முற்றிலும் சங்க இலக்கியப் பாடல்களுடன் இணைந்தே செல்கின்றன.

மொழியாக்கம்

திரு. மு.கு. ஜகந்நாத ராஜா பன்மொழிப் புலவர்; தமிழ் அறிஞர்; தெலுங்கைத் தாய்மொழியாய்க் கொண்டவர்; மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமைமிக்கவர். தெலுங்கிலும், தமிழிலும் பல அரிய ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளவர். 'மணிமேகலை மன்றம்' எனும் சிறந்த இலக்கிய அமைப்பினைக் கடந்த கால்நூற்றாண்டாய் நடத்தி வருவதன் மூலம் தமிழகத்திலும் அண்டை நாடுகளிலும் உள்ள அனைத்து இலக்கிய அறிஞர்களுடனும் தொடர்பு கொண்டுள்ளவர். முற்போக்கு இலக்கிய அணியில் முன்வரிசையில் நிற்பவர். சிறந்த எழுத்தாளர்; பேச்சாளர்; கவிஞர்; திறனாய்வாளர்; மொழிபெயர்ப்பாளர் எனப் பாராட்டப்படுபவர்.

முன்னரே பல நூல்களை இவர் மொழி பெயர்த்திருப்பினும் இந்நூல் அவரது மொழிபெயர்ப்பின் மணிமுடியாய்த் திகழ்கிறது எனலாம். மொழிபெயர்த்ததோடல்லாமல் பாடல்களுக்கு உரையும் எழுதியிருப்பதால் ஓர் உயர்ந்த உரையாசிரியர் எனும் தகுதியையும் இந்நூல் வழி அவர் பெறுகிறார். மொழிபெயர்ப்பு ஓர் அரிய கலை. மூலத்தின் சுவை குறையாது மொழிபெயர்ப்பது எளிய செயலன்று.

1. காதா சப்தசதி, பாடல் 200

அன்றைய சங்கநடைக்கு ஒப்பாக அரிய அகவலில், 'எழுத்து அசைகள் சீர் தளைகள் அடிதொடைகள்' சிதையாமல், யாப்பமைதி சிறக்க இந்நானூறு பாடல்களை மொழிபெயர்த்து வெற்றி கண்டிருக்கிறார். சங்கப் பாடல்களின் பெருமிதப் போக்கை இவருடைய மொழிபெயர்ப்பில் காண முடிகிறது. இந்நூலைப் படிக்கும்போது மொழிபெயர்ப்பு எனும் உணர்வின்றித் தமிழில் இயன்ற ஒரு மூலநூலைப் படிப்பது போன்ற உணர்வே ஏற்படுகிறது. மொழிபெயர்ப்பாளர் கையாண்டுள்ள எளிய இனிய தங்குதடையற்ற நடையே அதற்கு முதற் காரணமாகும்.

கற்பின் வழுவாப் பொற்புடை யோளே![1]

ஆற்று நீரென அமையும் இளமை
கழிதல் அன்றி மீண்டும் வாரா?[2]

பிரிவில் நஞ்சாய்ப் பின்இணைந் திடுங்கால்
வானமு தாக வாய்த்த நங்கை
தன்னைப் பிரமன் தான்அவ் விரண்டும்
இணையாய்க் கலந்தே இயற்றி னானோ?[3]

இவ்வாறு இவருடைய நடையழகுக்குப் பலவற்றை எடுத்துக் காட்டலாம்.

உரைநயம்

பண்டை உரையாசிரியர்கள் கையாண்டுள்ள அனைத்து நுணுக்கங்களையும் இந்நூலில் உரைவிளக்கப் பகுதியில் திரு. ஜகந்நாத ராஜா கையாண்டுள்ளார். கருப்பொருளைத் தேவைக்கேற்ப விளக்குகிறார். பொருள் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுகிறார்; முன்புற்ற உரைகளைக் குறிப்பிட்டும் அவை பொருந்துமாற்றையும் பொருந்தாமையையும் காட்டுகிறார். பாடலில் உள்ள விவரங்களோடு ஒத்து வருகிற பிற விவரங்களை எடுத்துரைக்கிறார்; குறிப்புப் பொருள்களை வெளிப்படுத்திக் காட்டுகிறார்; சில சொற்கள் கையாளப்பட்டுள்ளதற்கான காரணங்களைக் கூறுகிறார்; தமிழ், வடமொழி இலக்கிய ஒப்புமைப் பகுதிகளைச் சுட்டிக் காட்டுகிறார். எல்லாவற்றிற்கு மேலாக ஆங்காங்கே தம் கருத்தையும் தக்கவாறு நிலைநிறுத்துகிறார்.

---

1. காதா சப்தசதி, பாடல் 34
2. மேலது, பாடல் 42
3. மேலது, பாடல் 198

வாழ்த்து

தமிழிலிருந்து பிற மொழிகளுக்கும் பிற மொழிகளிலிருந்து தமிழுக்கும் இலக்கியப் பரிமாற்றம் தொடர்ந்து நடைபெற்று வந்துளது என்றாலும் தமிழ் இலக்கியங்களோடு ஒப்பிட்டு நோக்க இந்நூல் பெருமளவில் உதவுமென்பதால் காதா சப்தசதி மொழி பெயர்ப்புப் பணி தனிச் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். பன்மொழிப் புலவர் அவர்கள் இன்னும் இதுபோல் பல அரிய மொழி இலக்கியங் களைத் தமிழிலும், தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளிலும் பெயர்த்து இலக்கியத் தொண்டாற்றிச் சிறக்க இலக்கிய உலகு வாழ்த்துகிறது.

நூல் ஆக்கம்	பன்மொழிப் புலவர் மு.கு. ஜகந்நாத ராஜா
வகைமை	கவிதை (மொழிபெயர்ப்பு)
வெளியீடு	விசுவசாந்தி பதிப்பகம், இராஜபாளையம். (1981)

2

பிரியதர்சிகை

நாடிகை

"நாடகம் என்பது அங்கங்களை உடையதாய் ஒன்பான் சுவைகளைக் கொண்டிருப்பினும், அவற்றுள் வீரச் சுவையை யாவது அவலச் சுவையையாவது அது செவ்வையாய்ப் புலப்படுத்த வேண்டும்" என இலக்கண நூலார் கூறுவர். காப்பியங்களின் பெரும்பிரிவுகளைக் காண்டம் என வழங்குவதுபோல நாடகங்களின் பெரும்பிரிவுகளை அங்கம் என்பர். நாடகங்கள் ஒன்று முதல் பத்து அங்கங்கள்வரை பெற்றிருக்கும். பொதுவாக நாடகங்கள் ஐந்து அங்கங்களையே பெற்றிருக்கும். பத்து அங்கங்கள் கொண்டது, 'மாநாடகம்' எனப்படும். வடமொழியில் 14 அங்கங்களைக் கொண்ட 'அனுமான் நாடகம்' என்ற மாநாடகமும் உண்டு.

நாடகத் துணை வகைகள் (உபசாதிகள்) 18 என்பர். அவற்றுள் நாடிகை என்பது ஒருவகை. அது நான்கு அங்கங்களைக் கொண்டிருக்கும். அரசன் ஒருவன் கதைத் தலைவனாகவும் அவனுடைய பட்டத்தரசி ஒருத்தியும், அவளுடைய கட்டுப்பாட்டி லிருப்பவளும், அரசனால் விரும்பப்பட்டவளும் ஆகிய அழகி ஒருத்தியும் என இரண்டு கதைத் தலைவிகளைக் கொண்டும் நாட்டியம், இசை இவற்றோடும் நடத்தப் பெறுவது நாடிகை எனப்பெறும். அரசி இருக்க, தான் விரும்பும் அம் மற்றொரு பெண்ணை. அரசன் மணப்பதாகக் கதை முடியும். அரசன் விரும்பும் அப்பெண் வேறொரு நாட்டைச் சேர்ந்தவளாயும், அரசிக்கு உறவு முறையினளாயும்* இருப்பாள். ஒரு போர் அல்லது பூசலின் போது அப்பெண் தாய் நாட்டை விட்டு அகன்று இப்பட்டத்து அரசியிடம் வந்து சேருவாள். அரசிக்கு உறவு முறையினளாயும் இருப்பாள். அரசிக்கு உறவு முறையினளே ஆயினும் அப்பெண்ணை அரசி அதற்கு முன்பு நேரில் பார்த்தது இல்லையாதலின் உறவினள் என அறியாள். அப்பெண் அரசனைக் காணும்போது அரசனும் அவளும் காதல் வயப்படுவர்.

இதனை அறியும் அரசி சீற்றம் கொள்வாள். இறுதியில் அரசியின் உறவினளே அப்பெண் என்பது வெளிப்படும். அரசியே முன்னின்று மன்னனுக்கும் அவளுக்கும் மணம்முடித்து வைப்பாள். நாடிகை இவ்வாறு முடிவுறுவது வழக்கம்.

ஹர்ச நாடகங்கள்

வடமொழி நாடக இலக்கியங்களில் ஹர்சரின் பிரியதர்சிகை, ரத்னாவளி, நாகானந்தம் ஆகிய மூன்றும் சிறப்பிடம் பெறுகின்றன. அவற்றுள் பிரியதர்சிகை, ரத்னாவளி ஆகிய இரண்டையும் வட நூலார் நாடிகைக்கு எடுத்துக்காட்டுவர். நாகானந்தம் நாடக வகையைச் சார்ந்தது.

பரம்பரை வழக்கில் உள்ள ஒரு கதையை, அல்லது கற்பனையிற் பிறந்த ஒரு கதையை நாடிகை தன் கதைப் பொருளாய்க் கொள்வது மரபு. பிரியதர்சிகை எனும் இந்நாடிகை பரம்பரை வழக்கில் உள்ள கதையைக் கொண்டுள்ளது. வத்தவநாட்டு மன்னன் உதயணன்மேல் காதல் கொள்ளும் பெண்ணாகப் பிரியதர்சிகை (காட்சிக்கு இனியவள்) இருக்கிறாள். அவள் பெயரே நாடகத்தின் பெயராய் அமைந்துள்ளது.

பிருகத் கதை

பிரியதர்சிகையும், ஹர்சரின் மற்றொரு நாட்டிய நாடகமாகிய ரத்னாவளியும் உதயணனைக் கதைத் தலைவனாகக் கொண்டுள்ளன. இவை இரண்டுமே, கதைப் பொருளைக் குணாட்டியார் இயற்றிய, 'பிருகத் கதையிலிருந்து பெற்றுள்ளன. பிருகத் கதை நம் கைக்குக் கிடைக்கவில்லை. அதன் தழுவல் கதையைக் கொண்டு பிருகத் கதை எனும் முதல் நூலை மீட்டுருவாக்கும் முயற்சிகள் அறிஞர் பலரிடம் நடைபெற்று வருகின்றன. தமிழில் உள்ள பெருங்கதைக்கு மிக நெருங்கிய ஒற்றுமையுடைய நூலாகப் பிருகத் கதை கொள்ளப்படுகிறது.

"வடமொழிக் காவியங்களுக்கு இராமாயணம், மகாபாரதம், பிருகத் கதை என்ற முப்பெரும் இலக்கியங்களே மூலமாகும். கோவர்த்தனர் தனது சப்தசதியில் இராமாயணம், மகாபாரதம், பிருகத் கதை ஆகிய மூன்றையும் கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய மூன்று நதிகளுடன் ஒப்பிட்டுள்ளதிலிருந்து இதை அறியலாம். இன்று சரசுவதியும் மறைந்துவிட்டது; பிருகத் கதையும் மறைந்து விட்டது. ஆனால் நாம் சரசுவதியையும் மறக்கவில்லை; குணாட்டியாரின் பிருகத் கதையையும் மறக்கவில்லை." முன்னவை இரண்டும் இதிகாசங்கள்; சமய நூல்களாக எழுதப்பட்டவை.

மூன்றாவதான பிருகத் கதையோ கதை இன்பத்திற்காகவே, இலக்கியச் சுவைக்காகவே எழுதப்பட்டது. பிருகத் கதை மறைந்தாலும் அது தந்த இன்பத்தை, 'பிரியதர்சிகை' போன்ற நூல்களைக் கொண்டு நாம் பருக முடிகிறது.

மொழிபெயர்ப்பு

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவு முழுமையான நிலையில் தமிழில் நிறைவேறவில்லை. எனினும் இத்தகைய முயற்சிகள் ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டு வருவது மகிழ்ச்சிக் குரியது. ஹர்சரின் பிரியதர்சிகை என்ற இந்த நாடகத்தைத் தமிழாக்கம் செய்துள்ள பண்டித வித்துவான் முத்து வேங்கடாசலத்தின் முயற்சி வரவேற்கத்தக்கது. இவர் ஹர்சரின் ஏனைய இரு நாடகங்களையும் முன்னரே மொழி பெயர்த் துள்ளார் என்பது போற்றுதற்குரியது.

வரலாற்றுத் தெளிவு

பிரியதர்சிகையின் ஆசிரியரான ஹர்சரின் காலம் பற்றித் தொடக்க காலத்தில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், கி.பி. 606 முதல் கி.பி. 648 வரை கன்னியாகுப்சம் (Kanya Kupja) என்ற நாட்டினை ஆண்ட மன்னன் அவன் என்பது இன்று ஓரளவுக்கு நிலையான எண்ணமாய் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. ஹர்ச சரிதம் (Harsa Carita) என்ற உரைநடைக் காப்பியத்தில் ஹர்சரைத் தன் புரவலனாகப் புகழும் பாணனும், சீனப் பயணியான யுவான் சுவாங்கும் (Hiwan Tsang) இவனைப் பற்றிய செய்திகளை வரலாற்றுத் தகைமைகளுடன் எடுத்துரைக் கின்றனர். சாளுக்கிய மன்னன் புலிகேசியும், பல்லவ மன்னர்களான மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகியோரும் இவனது சம காலத்தவர்கள். எனவே ஹர்சர் நாடகங்களை வரலாற்றுப் பயனுடையவை என்றும் குறிப்பிடலாம்.

பிரியதர்சிகை என்ற இந்நாடிகையின் கதைத் தலைவனான உதயணன் இலக்கியப் புகழ் பெற்ற வரலாற்று மன்னன். இவனைப் பற்றிய கதைகள் தமிழிலும், வடமொழிகளான சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளிலும் வழங்கப்பட்டு வருகின்றன. செய்திகள் ஆங்காங்கே ஒன்றுக்கொன்று வேறுபட்டு இருப்பினும் கதை அடிப்படைகளைப் பொறுத்தவரை இவை எல்லாம் ஒற்றுமை உடையனவேயாகும். அத்துடன் மத வேறுபாடின்றி இந்தியாவின் புகழ்பெற்ற இந்து, பௌத்தம்,

சைனம் ஆகிய மதங்கள் உதயணன் கதைகளை இலக்கிய இன்பம் கருதியும் மதக் கருத்துகளை உள்நுழைத்துச் சுவையுடன் கூறவும் பயன்படுத்தியுள்ளன.

காதற் சுவையைத் தம் கதைப் பொருளாய்க் கொண்ட நூல்கள் பல உதயணன் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளன. அவந்தி நாட்டு மன்னன் பிரச்சோதனன் வத்தவ நாட்டு மன்னன் உதயணனைச் சிறைப்பிடித்து, தன் மகளான வாசவதத்தைக்கு யாழ் பயிற்றுவிக்க வைக்கிறான். யாழ் பயிலும் பொழுது மலர்ந்த காதல் திருமணத்தில் முடிகிறது. பட்டத்தரசி வாசவதத்தை தவிர உதயணன் காதல் மனைவியராய்ப் பதுமாவதி, லலிதா, விரசிதா (விருச்சிகை), பந்துமதி, இரசனிகை (Rajanika), கலிங்கசேனை, மானனீகை, பிரியதர்சிகை, இரத்தினாவளி, கோசலிகை போன்றோரும் உதயணன் கதைகளில் இடம்பெற்றுள்ளனர். இத்தகைய உறவுகள் பல அரசியல் வலுவைத் தேடிக் கொள்வதற்காக மன்னனின் அமைச்சர்களால் வழி வகுக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்டவையாம்.

உதயணனின் இக் கதையின் ஒரு பகுதியே ‘பிரியதர்சிகை’ என்ற பெயரில் நாடகமாய் ஹர்சரால் எழுதப்பட்டுள்ளது.

ஹர்சரின் படைப்பாற்றல்

இந்நாடகக் கதைப்பாத்திரமான பிரியதர்சிகை, முன்னரே குணாட்டியாரின் பிருகத் கதையின் தழுவலான சோமதேவரின் கதாசரிதசாகரத்தில் இடம்பெறும் பந்துமதி என்ற பாத்திரத்தின் ஒரு வளர்ச்சி நிலையேயெனலாம். கதாசரித சாகரத்திலும் போரில் நடுவில் மீட்கப்பட்டு உதயணனுக்குப் பரிசளிக்கப்பட்டவளே பந்துமதி. இவள் மஞ்சுளிகா என்ற பெயரில் வாசவதத்தையிடம் வளர்ந்து வருகிறாள். மலர்வனத்தில் உதயணன்மேற் காதல் கொண்ட இவளையும் உதயணனையும் ஒன்று சேர்க்க முயன்ற வசந்தகனை, வாசவதத்தை சங்கிலியாற் பிணிக்கிறாள். சாங்கிருத்தியாயினி தலையிட்டு வாசவதத்தையின் சினத்தைத் தணிக்கிறாள். ஈற்றில் பந்துமதியை உதயணன் மணம் செய்கின் றான். இக்கதையுடன் திருடவர்மனின் அரசியற் செய்திகளையும் சேர்த்து ஹர்சர் தமது பிரியதர்சிகையைப் படைத்துள்ளார் எனலாம்.

தமிழில் பெருங்கதையில் வரும் மானனீகை என்ற பாத்திரமும் ஓரளவிற்கு இத்தகையதே. இங்கும் மானனீகையும் உதயணனும் காதல் கொண்டுள்ளதை வாசவதத்தை அறிந்து மானனீகையின் கூந்தலை வெட்டித் தண்டிக்க முயல்கிறாள்.

அவ்வேளையில் அங்குக் கொண்டுவரப்பட்ட ஓலையொன்று, முன்னாளில், வாசவதத்தையெனப் பெயர் கொண்ட மானனீகை, அரசி வாசவதத்தையின் தங்கையே என உணர்த்துகிறது. சினம் தணிந்த வாசவதத்தை மானனீகையை உதயணனுக்கு மணம் முடித்து வைக்கிறாள்.

ஹர்சரின் இரத்தினாவளிக்கும், பிரியதர்சிகைக்கும் சிறப்பான ஒற்றுமை காணப்படுகின்றது. சில நிகழ்ச்சிகள் விக்கிரமோர்வசீயம், சாகுந்தலம், மாளவிகாக்கினிமித்திரம் ஆகிய காளிதாசனுடைய நாடகங்களில் உள்ள நிகழ்ச்சிகளோடு ஒத்து விளங்குகின்றன. அதுபோலவே வருணனைகளிலும் அந்நாடகச் சாயல்கள் காணப்படுகின்றன.

மொழிபெயர்ப்புத் திறன்

பண்டித முத்துவேங்கடாசலம், பிரியதர்சிகையிலுள்ள வருணனைப் பகுதிகளடங்கிய பாடல்களைத் தமிழ் யாப்புக் கொண்டு, முதல்நூல் விளக்கும் அழகும் மெருகும் குன்றாது தமிழாக்கம் செய்துள்ளார். ஹர்சர் மரபு தவறாது வருணனைகளை உருவாக்குவதில் வல்லவர். மாலை, மலர்வனம், தவசியர்வாழ் குடில்கள், நீரூற்றுகள், நீர்விளையாட்டு, மாலை, மலையம், காடு, அரண்மனை போன்றவற்றின் வருணனைகள் அவருக்கு முற்பட்டோர் படைத்த இலக்கியங்களைப் பின்பற்றிச் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன. காளிதாசன்போல் கற்பனை வளம், செறிவு, மெருகு உடையனவாய் நாடகம் அமையாவிடினும், இந்நாடகம் ஹர்சர் எளிமைக்கும், எடுத்தியம்பும் திறனுக்கும் பெயர்பெற்றவர் என்பதை நிறுவுகிறது. மலர்வனத்தின் தரை அழகை ஹர்சர் பின்வரும் பாடலால் எடுத்து விளக்குகிறார்.

bibharana mrdutam sirisakusumasriharibhih sadvalaih
sadyah kalpitakuttima marakataksodair iva ksalitaih
esa samprati bandhanad vigalitair bandhukapuspotkarair
(2 : 3)

adya pi ksitir indragopakasantais channe 'va samlaksyate
(3)

(சிரீச மலர்களைத் தம் அழகால் வென்ற பசும்புற்களால் நிலமகள் மென்மையாகத் தன்னை மூடிக்கொண்டாள். மரகதக் கொடிகொண்டமைந்தது போன்ற பாதைகளில் பந்தூக மலர்கள் வீழ்ந்திருப்பது மழையில்லாமலே நூற்றுக்கணக்கான இந்திர கோபங்கள் பரந்திருப்பதுபோற்.காணப்படுகின்றது.)

இப்பாடலை வித்துவான் முத்துவேங்கடாசலம் பின்வருமாறு அழகாக மொழிபெயர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வாகைமலர் மென்மையுடன் கோமளமும் வாய்ந்திலங்கி
 வளர்ப சும்புல்
ஆகுநிலம் மரகதத்தின் கூடிகையினால் அமைந்திட்ட
 மேடை காட்டும்
வாகமரும் புல்வெளியும் பந்தூக மலர்பொலிந்து
 மாரி யின்றி,
ஓகையுடன் இந்திர கோபம்பலவாய்ச் சூழ்ந்திருக்கும்
 என்னத் தோன்றும். (பக். 53)

இதுபோன்றே உலகியற் கருத்துகளடங்கிய பாடல்களை மொழிபெயர்க்கும் போதும் பொருள் வேறுபடாது தெளிவாகப் பாடல் வடிவிலேயே தமிழாக்கம் செய்கிறார்.

Prayo yat kim cid api prapnoty utkarsam asrayan mahatah
mattebhakumbhatatagatam eti hi srngaratam bhasma (3:1)

(எப்பொருளும் அது சார்ந்திருக்கும் இடத்தைப் பொறுத்தே பெருமைபெறும். சாம்பலாய் இருந்தாலும் அது மத யானையின் கும்பத்தில் இடப்படும்போது அஃது அதற்கு அணியாகிவிடுகிறது.)

மேற்கூறிய பாடற்பொருளைப் பின்வருமாறு தம் தமிழாக்கத்தில் வெளிக் கொணர்கிறார் ஆசிரியர்.

அற்பப் பொருள்,சிறப் பார்பொருளைச் சார்ந்துவிடில்,
மற்றிங் குயர்ந்ததாய் மாண்புபெறும்; – பொற்றொடியே!
கூடு மதவேழக் கும்பத் தலச்சாம்பர்,
பூடண மாகும் பொலிந்து. (பக். 74)

ஒப்பீடு

இந் நாடகத்தில் உள்ள ஹர்சரின் பாடற் கருத்துகள் பலவற்றைத் தமிழிலக்கியக் கருத்துகளுடன் ஒப்பிட்டு மகிழ முடிகிறது. பணிப்பெண் ஒருத்தி ஆரணியகையைப் பணி கொள்கிறாள். அப்போது, ஆரணியகை (துயரக் கண்ணீருடன் மனத்துள்) "பிறர்க்கு ஆணையிடும் உயர்குடிப் பிறந்த எனக்கு இச் சமயத்தில் பிறர் ஆணையை ஏற்று நடக்கும்படி விதி கூட்டி வைத்துள்ளது" என்று எண்ணி நைவதாக ஹர்சர் குறிப்பிடுகிறார் (பக். 54).

தமிழில் பெருங்கதையில் கொங்குவேள் இப்படியொரு இடத்தைப் படைத்துக் காட்டியுள்ளார். உதயணன் வழியிடையே நிற்க, அவ்வழியே இளவரசி பதுமாவதியின் சிவிகை வந்து கொண்டிருந்தது. மக்களை விலகிச் செல்லமாறு காவலர் அதட்டினர். மக்களோடு சேர்ந்து உதயணனும் அகல

வேண்டியதாயிற்று. அவ்வேளையில் உதயணன் தனக்குள், "நேற்று எனக்குப் பிறர் வழி விலக்கிவிட நான் சென்றேன். இன்றோ அந்நிலைமை மாறி 'வழியில் நில்லாதே; அகன்று போ!' என நான் பிறரால் விலக்கப்பட்டேன்" என நினைந்து வருந்துகிறான்.

நீங்கச் சென்றனென் நெருநல்; இன்றிவண்
நீக்கப் பட்டனென்.....

ஹர்சர் கருத்தும் இக் கருத்தும் ஒத்திருப்பதை அறிகிறோம்.

அரசன் ஆரணியகையை அணைத்துக்கொண்டு, "துயரம் தவிர்க! இவ்வண்டுகள் தாமரை என்று கருதித் தேனுண்ண விரும்பி உன் முகத்தின் மீது மொய்க்கின்றன. அச்சத்தால் உன் கண்கள் பிறழ, அவற்றைக் கருநெய்தல் மலர்கள் என்றெண்ணி அவற்றின் மேல் மொய்க்க வருகின்றன" எனக் கூறி வண்டுகளை ஓட்டுபவன் போல அவளை மேலும் அணைத்துக் கொள்கிறான். ஹர்சர் நாடகத்தில் உள்ள காட்சி இது (பக். 60).

'வண்டோச்சி மருங்கணைதல்' என்ற அகத்துறையை விளக்கும் திருக்கோவையார் பாடலை இதனோடு ஒப்பிட்டு மொழி பெயர்ப்பாளர் அடிக்குறிப்புத் தந்துள்ளார். இது துறை விளக்கத்திற்கான ஒப்புமை.

பாடற் கருத்தையொட்டிய நளவெண்பாப் பாடல் ஒன்றையும் காணலாம். நளனும் தமயந்தியும் தேரில் வந்து கொண்டிருக்கின்றனர். வழியே பொழில் ஒன்றில் பெண்ணொருத்தி மலர் கொய்கிறாள். அவள் முகத்தைத் தாமரையென்று கருதி வண்டுகள் முகத்தின்மீது மொய்க்கச் செல்கின்றன. வண்டுகளைக் கண்டு அஞ்சும் அம்மங்கை அவற்றை ஓட்டக் கையை வீசுகிறாள். வண்டுகளோ அக் கையைக் காந்தள் மலரென்று கருதி அதன் மீது பாய்கின்றன. வண்டுகளின் அச்செயலால் அவள் அஞ்சி வியர்த்து நிற்கிறாள். இக்காட்சியை நளன் தமயந்திக்குக் காட்டுகிறான்.

மங்கையொருத்தி மலர்கொய்வாள் வாண்மு கத்தைப்
பங்கயம் என்றெண்ணிப் படிவண்டைச் – செங்கையாள்
காத்தாள்,அக் கைம்மலரைக் காந்தள்எனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காண்என்றான் வேந்து.

இவ்வாறாய்த் தமிழ்ப் பாடல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தக்க இடங்கள் பல இந்நூலுள் அமைந்து விருந்தாகின்றன.

அடிக்குறிப்புகள்

மொழிபெயர்ப்பாளர் அங்கங்கே பொருத்தமான அடிக் குறிப்புகளைத் தந்திருக்கிறார். அடிக்குறிப்புகளில்,

அ) பாடல்களில் அமைந்துள்ள நயத்தைத் தெளிவுபடுத்தி விளக்குகிறார். (பக். 35, பக். 48, பக். 57, பக். 65....)

ஆ) சில பாடல்களுக்கு ஒப்புமையான தமிழ் இலக்கியப் பாடல்களை அங்கங்கே சுட்டிச் செல்கிறார். (பக். 40, பக். 92...)

இ) பாடல்கள் எவ்வெவ் அணியின்பாற்பட்டன என்பதைக் குறிப்பிடுகிறார். (பக். 43, 45, 47, 53....)

ஈ) முக்கியமான வடமொழி நாடகக் கலைச்சொற்களுக்குப் பொருள் தந்து விவரிக்கிறார்.... (பக். 37-பிரரோசனம், பக்.41-விஷ்கம்பம் போன்றவை.)

உ) முக்கியமான சொற்களுக்குப் பொருளைப் புலப்படுத்து கிறார். (பக். 38. கஞ்சுகி-நீண்ட சட்டை உடுத்திருப்பவன்; அரண்மனை அந்தப்புரத்தில் எல்லாக் காரியங்களையும் நிர்வகிப்பவன்.... போன்றவை.)

ஊ) முக்கிய வரலாற்றுக் குறிப்புகளையும் தருகிறார். ஒரு பாடல் காலாள், குதிரை, யானைச் சண்டையை விவரிக்கிறது. அது கொண்டு "ஹர்சர் காலத்தில் தேர் ஒழிந்த, மூன்று படைகளே போரில் பயன்படுத்தப்பட்டன என்பது நன்கு புலனாகும்" எனச் சுட்டிக்காட்டுகிறார்.

மொழிபெயர்ப்பை எவ்வளவு சிறப்பாய்ச் செய்துள்ளாரோ அவ்வளவு சிறப்பாய் அடிக்குறிப்புகளையும் தந்திருப்பது பாராட்டுக்குரியது.

கற்பனை வளம்

ஹர்சரின் சிறந்த கற்பனை நயத்தை நாடகத்தில் காணமுடிகிறது. அரசன் நீராடுவதற்காக அந்தப்புர மகளிர் பொற்குடங்களில் நீரையெடுத்து வைக்கின்றனர். அங்குமிங்குமாக அவர்கள் விரைந்தபோது அவர்களுடைய மேலாடை விலகித் தனங்கள் வெளியே தோற்றமளிக்கின்றன. கீழே வைக்கப்பட்ட பொற்குடங்கள் மேலேபோய் மகளிர் மார்புகளில் பொருந்திக் கொண்டனவோ? என ஹர்ஷரின் கற்பனை அங்கே விரிகிறது. அரசனிடம் வைதாளிகள் கூறுவதுபோல ஹர்சர் இப்பாடலைப் புனைந்திருக்கிறார்.

தனதுடை நழுவக் காட்டும்
　தனத்தூற்,பொற் குடமி ரண்டும்,
உனதுமஞ் சனாசா லைக்கண்
　உயர்த்திவைத் தாற்போல் தோன்றும் (பக். 47)

உதயணன் ஆரணியகையைக் குளக்கரையில் காண்கிறான். இது என்ன நிலவா? எனத் திகைக்கிறான். பகலில் நிலாத் தோன்ற முடியாதே! ஆதலால் இங்குத் தோன்றுவது நிலவன்று எனத் துணிகிறான்.

அவிர்நிலவின் மூர்த்திஎனில் பகல்வேளை
நிலாக்காண்டல் அரிது.... (பக். 57)

ஆரணியகையைக் கண்ட உதயணனுக்குக் கற்பனை மிகுந்தது எனச் சொல்லும் முறையில் ஹர்சர் அழகிய கற்பனையைத் தவழவிடுகிறார். 'பகல் வேளை நிலாக் காண்டல் அரிது' எனும் மொழிபெயர்ப்பு நம் உள்ளத்தே நிலவின் குளிர்ச்சியைப் பெய்கிறது. நயம் நிறைந்த ஹர்ச கற்பனைகளை மொழி பெயர்ப்பாளர் மெருகுகூட்டி ஒளிரச் செய்கிறார்.

கதைமாந்தர் படைப்பு

கதை உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரவர் நிலைக்கேற்பச் செம்மையாகப் படைக்கப்பட்டுள்ளனர். மற்றவர்களைப் படைப்பதினும் நகைச் சுவையாளனைப் (விதூடகனைப்) படைப்பதற்குத் தனித்திறன் வேண்டும். அவன் உரையாடல் நகைச்சுவையுடனும் அதேவேளை அறிவார்ந்ததாயும் இருத்தல் வேண்டும். ஹர்சர் இப்படைப்பில் வெற்றி கண்டிருக்கிறார் என்றே கூறவேண்டும்.

வாசவதத்தை காணிக்கை தருவதற்கு அழைப்பதாக விதூடகனிடம் பணிப்பெண் கூறுகிறாள். விதூடகன் ஓர் அந்தணன். "தேவியிடம் சென்று நான் வேதம் அறியாதவனேனும் உச்ச சுரத்தில் வேதம் கூறி மகிழ்விப்பேன். அந்தணர்கள் அரண்மனையில் வேறு எவ்வாறு தானம் பெறுகின்றனர்?" என்று அவன் சொல்வதாய் உரையாடல் அமைகிறது. வேதத்தை அறியாமலேயே ஏதோ உரக்கச் சொன்னால் காணிக்கையைப் பெற்றுக் கொள்ளலாம். அந்தணர்களெல்லாம் இப்படித்தான் செய்கிறார்கள் என்று அந்தணனையே சொல்லச் செய்து நகைப்பைத் தோற்றுவிக்கிறார்; என்றாலும் காணிக்கை பெறுவதற்காக மட்டும் வேதம் இருந்துவிடக் கூடாது; அது பொருளுணர்ந்து படிக்கப்பட வேண்டும் என்ற அறிவார்ந்த உணர்ச்சியையும் இவ்வுரையாடல் தோற்றுவித்து விடுகிறது.

அரசர், "ஆரணியகை எங்கு இருக்கிறாள் என்று பார்! எங்குத் தேடியும் அவள் கிடைக்கப் பெறாவிட்டால் அவள் கரம் தொட்ட காரணத்தால் இருமடங்கு இன்பமூட்டும் குளிர்ந்த தாமரை இலைகளை இங்கு எடுத்துவா என்று சொன்னாரே! (அவளைக்

காண முடியவில்லையே). அரசர் சொன்னபடி அவள் தொட்ட இலைகளை எப்படி அறிவது?" என்கிறான் விதூடகன். குளத்திலுள்ள தாமரை இலைகளைப் பார்த்துக்கொண்டு, "இவற்றுள் ஆரணியகை தொட்ட இலை எது?" என்று அவன் அவையினரைப் பார்த்துக் கேட்டால் நகைப்பொலி எழத்தானே செய்யும்?

விதூடகன் தூங்கப் படுக்கிறான். அப்போது மனோரமை வந்து எழுப்புகிறாள். "தாசி மகளே! தூங்கவே விடமாட்டேன் என்கிறாயே! என் தோழர் (அரசர்), என்று ஆரணியகையைப் பார்த்தாரோ அன்று முதல் அவருடன் எனக்கும் தூக்கம் வரவில்லை. (இப்பொழுதுதான் படுத்தேன். இங்கு வந்து எழுப்பித் தொலைக்கிறாய். இதோ வேறிடம் போகிறேன் என எழுகிறான்). ஆரணியகையின் மேல் கொண்ட காதலால் அரசனுக்குத் தூக்கமில்லை. இவன் தோழனல்லவா? அவனுக்குத் தூக்கமில்லாத போது இவனுக்கு மட்டும் ஏது தூக்கம்?. இப்போது ஆரணியகையுடன் நடிக்க அரசர் சென்றுள்ளார் என்றதால் சற்றுப் படுக்கலாம் என்றால் அதற்கும் இடையூறா? தூக்கக் கலக்கத்தோடு அவன் எழுந்து இவ்வாறு பேசும்போது இயல்பாக நாடகம் காண்போரிடையே நகைச்சுவை எழவே செய்யும்.

இவ்வாறு திறமையாக நகைச்சுவை உரையாடல்களை மூல ஆசிரியர் வரைந்துள்ளார். மூல ஆசிரியரின் இத்திறமையை உள்ளவாறே வெளிப்படுத்தும் வகையில் முத்து வேங்கடாசலத்தின் மொழிபெயர்ப்பு புகழ் சேர்க்கிறது.

நாடக உத்திகள்

நாடகங்களில் கதை நிகழ்ச்சிகளைக் கூறிச் செல்லும்போது, கதைப் போக்கில் கால இடைவெளி ஏற்பட்டால், அக்காலத்தில் நடந்த செய்திகளைப் பார்வையாளர்க்கு எடுத்துக் கூறுவதற்காக அமைக்கப்படும் அறிமுக உரைகள் உண்டு. இதனைக் கதைநிறை களம் என்பர். இதனை,

> அங்கம் தொடங்குமுன் ஆரியப் புலவோர்
> சிற்சில இடத்துக் கதைநிறை களமென
> இழிபாத் திரங்கள், எய்தும் பொருளை
> மொழிபாக் குறுத்தலும் முன்னர்க் கொள்ப

என நாடக இலக்கணம் கூறும், கதைத் தொடர்ச்சியையும், கால இடையில் நடைபெற்ற செய்திகளையும் இடைநிலைப் பாத்திரங்கள் வாயிலாக எடுத்துக் கூறும் பகுதிக்குக் கதை நிறை களம் எனப் பெயராம். இதனை வடமொழி நாடக இலக்கண

ஆசிரியர் விஷ்கம்பம் (Viskamba), பிரவேசகம் (Pravesika) என்பர். இத்தகைய கதை அறிமுகங்கள் (Arthopaksepaka) பிரியதர்சிகையில் இடம் பெற்றுள்ளன. விஷ்கம்பம் இரண்டுக்கு மேற்படாத நாடக மாந்தரைக் கொண்டமையும். நாடகத்தில் முதன்மை பெற்ற பாத்திரங்கள் இங்குத் தோன்றுவதில்லை. இந்தவகை அறிமுகம் நாடகத்தின் தொடக்கத்திலோ அன்றேல் வேண்டியபோது இடையிலோ அமையலாம். இந்த விஷ்கம்பத்தில் இடம் பெறும் பாத்திரங்கள் நடுத்தரத் தகைமையுடையவர்களாயின் சமஸ்கிருதத் திலும் கீழான தகைமையுடையவர்களாயின் பிராகிருதத்திலும் உரையாடுவர். விஷ்கம்பத்தைப்போல, பிரவேசகத்தை நாடகத் தொடக்கத்தில் கையாள முடியாது. பிரவேசகத்தில் இடம்பெறும் நாடக மாந்தர் கீழ்நிலையிலுள்ளவர்களாகவே அமைவர்.

இவை தவிர்த்த, 'கர்ப்பாங்கம்' (garbhanka) என்ற நாடக உத்தியும் உண்டு. இது நாடகத்துள் இன்னொரு நாடகம் இடம் பெறுவதைக் குறிக்கும்.பிரியதர்சிகையின் மூன்றாவது அங்கத்தில் உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் இளமைக் காலத்தில் ஏற்பட்ட காதலை, சாங்கிருத்தியாயினி நாடகமாய் எழுதி அதை வாசவதத்தையின் முன்னிலையில் நடித்துக் காண்பிப்பதாய், 'கர்ப்பாங்கம்' அமைந்துள்ளது.

பிற்கால வடமொழி நாடகக் கோட்பாட்டாசிரியர்கள் கர்ப்பாங்கத்திற்கு இதனை எடுத்துக்காட்டி விளக்குவது குறிப்பிடத்தக்கது. இந்த உள் நாடகம் முக்கிய நாடகத்தின் ஒரு பகுதியாய் - அதே வேளை இன்றியமையாது தேவைப்படுவதாய் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வுள் நாடகம் இன்றேல் முக்கிய நாடகம் முழுமை பெறாது என்றவாறு பொருத்தமாய்ப் புனையப்பட்டுள்ளது.

பொதுவில் எந்த முதல் நூலையும் தமிழாக்கம் செய்யும்போது பொருள் வேறுபடாது தமிழ் மரபுகளுக்கேற்பச் செய்வது தமிழுக்கு அணியாகும். ஹர்சர் எழுதிய மூன்று நாடகங்களுள் பிரியதர்சிகை முதலில் எழுதப்பட்டது. மற்ற இரண்டும் பின்னர் எழுதப்பட்டவை. முதல் நாடகத்தைவிட நாடகப் படைப்பு நுணுக்கம் கூடியதாக அடுத்துப் படைப்பவை அமைவது இய்ல்பே! ஹர்சரின் நுணுக்கம் கூடிய மற்ற இரண்டு நாடகங்களை முன்னரே திரு. முத்துவேங்கடாசலம் மொழி பெயர்த்துள்ளதால் ஹர்சர் படைப்பாற்றலுடன் அவர்கொண்ட பட்டறிவு மிக்க நிலையில் இப்போது இதனை மொழி

பெயர்த்துள்ளார். ஆதலின் இது மொழிபெயர்ப்புச் சிறப்பில் முதலிடம் பெறுகிறதெனலாம்.

"சிலம்பொலி போன்ற அன்னங்களின் குரல் செவிக்கு உவகை ஊட்டும்; மரங்களுக்கிடையே காணப்பெறும் மாளிகை வரிசைகள் கண்ணுக்குக் களிப்பைத் தரும்; தாமரைகளின் நறுமணம் மூக்கிற்கு இன்பம் சேர்க்கும்; குளிர் நீரை அளைந்து வரும் காற்று உடலுக்கு மகிழ்ச்சி பெய்யும்" எனும் கருத்தமைந்த பாடல் ஒன்று இந்நூலில் உள்ளது (பக். 55). மெய், கண், மூக்கு, செவி என்ற நான்கு புலன்களும் இன்பம் பெறும் நிலையைப் பாடல் உரைக்கிறது. வாய் பற்றி ஏதும் சொல்லவில்லை. இப்பாடலின் அடிக் குறிப்பில் திரு.முத்துவேங்கடாசலம் 'இப்பாடலைப் பாடும் வாயும் பெருமகிழ்வெய்தும் என்பது குறிப்பிற் புலப்படுத்தப் பெற்றது' என நயமுரைக்கிறார். இதே முறையில் நாமும் முத்துவேங்கடாசலத்தின் 'பிரியதர்சிகை' மொழிபெயர்ப்பைப் படிக்கும்போது உள்ளமும் இனிக்கிறது என்று சொல்லி மகிழ்வு கொள்ளலாம்.

திரு. முத்துவேங்கடாசலம் அவர்கள் இது போன்று இன்னும் பல நன்மொழிபெயர்ப்புகளை ஈந்து வளஞ் சேர்ப்பாராக!

நூலாக்கம்	மு. முத்துவேங்கடாசலம்
வகைமை	நாடகம் (மொழிபெயர்ப்பு)
வெளியீடு	செல்வி பதிப்பகம், காரைக்குடி. (1989)

3

பொன்னூர்தி

சூத்ரகன் என்னும் வடமொழிக் கவியரசர் இயற்றிய 'மிருச்சகடிகம்' என்னும் காவியத்தைத் தமிழில், 'மண்ணியல் சிறுதேர்' என்னும் பெயரில் பண்டிதமணி மு. கதிரேசனார் 1933இல் மொழிபெயர்த்தார். கதிரேசனார் செய்தது மிருச்சகடிகத்தின் நேர் மொழிபெயர்ப்பாகும். கவிஞர் நலங்கிள்ளியவர்கள் அக் காவியத்தின் கதையமைப்பில் மாற்றம் எதுவும் செய்யாமல் கதை நிகழ்விடம் போன்ற சிற்சிலவற்றில் சிறு மாற்றங்களைச் செய்து, இனிய தமிழில், 'பொன்னூர்தி' என்னும் காவியமாய் மூன்று காண்டங்களையும் 27 சருக்கங்களையும் கொண்டதாய் 1186 விருத்தப் பாக்களில் இந்நூலை யாத்துள்ளார்.

கதைச்சுருக்கம்

கற்றோர் போற்றும் காஞ்சி மாநகரில் சாருதத்தர் என்ற அந்தணர் வணிகராய்ப் பெரும் பொருளீட்டி வளமுடன் வாழ்ந்துவந்தவர், இடையிலேற்பட்ட இழப்பால் வறியராயினார். அவர் பெருவள்ளல்; குணக்குன்று. அவர் மனைவி தூதை; மகன் உரோகசேனன். காஞ்சியிலேயே கணிகையர் குலத்தில் தோன்றிய வசந்தசேனை பேரழகினள்; இளமையும் எழிலுமிக்க அவள் நற்குணங்களின் இருப்பிடமாயும் திகழ்ந்தாள்.

நகரில், இளவேனிற்காலத்தே காமவேள் விழா ஒன்று நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்டுவிட்டு மனைவியுடனும் மகனுடனும் திரும்பிய சாருதத்தர், எதிரே மதம் பிடித்த யானையொன்று மக்களைக் கலக்கி வந்ததைக் கண்டார். சாருதத்தர் அந்த யானையை ஒடுக்கி அடக்கினார்; அது வேளை அவருடைய மேலாடை காற்றில் பறந்து வசந்தசேனையைச் சேர்ந்தது. ஆடையைத் திருப்பிக் கொடுத்து நன்றி கூற வந்த அவளும் அவரும் ஒருவரையொருவர் நோக்கிக் காதல் மிகக் கொண்டனர். அவள் விலைமகளிர் குலத்துப் பிறந்தாளாயினும் குலமகளிர் ஒழுக்கம் பற்றி நின்றனள்; சாருதத்தரின் நற்குணங்களில் ஈடுபட்டு அவரைக் காதலித்தனள். இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினர்; தத்தம் வீடடைந்தனர்.

காஞ்சியை அதுவேளை களப்பிர மன்னன் ஆண்டு வந்தான். அவன் வனிதையர் மயக்கில் ஆழ்ந்தவன். அவனுடைய காதற் கிழத்தியின் உடன்பிறந்தானாகிய சகரன் என்பான் கல்வியறிவில் லாதவன்; வஞ்சகன். அச்சகரன் வசந்தசேனையை எவ்வாறேனும் அடைய விரும்பினான்.

சாருதத்தரின் நினைவோடு வீடடைந்த வசந்தசேனை, மறு நாள் மாலை அவரில்லம் நோக்கிச் சென்றாள். தெருவில் அவள் தனியே நடந்து செல்வது கண்ட சகரன், தன் துணைவர்களான விடன், சேடன் ஆகியவருடன் அவளைத் தொடர்ந்து சென்று அறிவிலாச் சொற்களை மொழிந்தான். அவனைக் கண்டு வசந்தசேனை அஞ்சியோட அவனும் அவளைப் பின்தொடர்ந்தான். அவ்வமயம் சாருதத்தர், மாலை வழிபாட்டை முடித்து, என்றும்போல் அன்றும் ஏழைகட்கு உணவளித்து வரத் தம் பார்ப்பனத் தோழன் மைத்திரேயனை அனுப்பினார். அவனுடன் இரதனிகை என்னும் பணிப்பெண் கையில் ஒரு விளக்குடன் கதவைத் திறந்தாள். சகரனுக்கு அஞ்சி ஓடிவந்த வசந்தசேனை, திறந்த அவ்வீட்டினுள் மறைந்தாள். தன் முயற்சி பயனளிக்காமற்போகவே, எப்படியும் அவளைப் பற்றப் போவதாய்ச் சூள் உரைத்துச் சென்றான், சகரன். இல்லத்தினுள் நுழைந்த வசந்தசேனையைச் சாருதத்தர் வரவேற்று உபசரித்தார். கொடியவர்க்கு அஞ்சிய வசந்தசேனை தன் பொன்அணிகள் அடங்கிய முடிப்பைச் சாருதத்தரிடம் அடைக்கலமாக்கிப் பாதுகாத்துத் தருமாறு வேண்டினாள். சாருதத்தரும் மைத்திரேயனிடம் அவ்வணிகலன்களைத் தந்து, இரவும் பகலும் பாதுகாத்து, அவள் வேண்டும்போது திருப்பித் தருமாறு கூறினார்.

ஒரு நாள் வசந்தசேனை, தான் சாருதத்தர்பால் கொண்டுள்ள காதலைத் தன் தோழியிடம் புலப்படுத்திப் பேசிக் கொண்டிருந்தாள். அப்போது, சூதிலே தோற்றுப் பணம் கொடுக்க முடியாமையால் சூதாடுகளத் தலைவனால் துரத்தப்பட்டு ஓடிவந்த சம்வாகனன் என்பான் வசந்தசேனையின் வீட்டினுள் நுழைந்து, அடைக்கலம் வேண்டினன்; அவன், முன்பு சாருதத்தருக்கு உடம்பு பிடிக்கும் தொழில் புரிந்தவன் என்பதறிந்து, அவனுக்குத் தன் பொன் வளையலைத் தந்து, அவன் கடனைத் தீர்க்குமாறு செய்தாள். அவளது பெருந்தன்மையால் மனந்திருந்திய அவன் பௌத்தத் துறவி யாயினான்.

ஒரு நாளிரவு. சாருதத்தருடைய இல்லத்தில் மைத்திரேயன், வசந்தசேனை அடைக்கலமாய்த் தந்த அணிகலப்பையைத்

தலைக்கடியில் வைத்துத் துயின்றுகொண்டிருந்தான். அதுவேளை சருவிலகன் என்னும் பார்ப்பனன் கன்னமிட்டு, உள் நுழைந்து, அவ்வணிகலப்பையைக் கவர்ந்து சென்றான். சருவிலகன் வசந்த சேனையின் பணிப்பெண் மதனிகைபால் காதல் கொண்டவன். பொருள் தந்து அவளை வசந்தசேனையிடமிருந்து மீட்கலாம் என்ற எண்ணத்தினாலேயே அத்திருட்டைச் செய்தான்; ஆயினும், தன் தகாத செயலுக்கு வருந்தினான்.

அடைக்கலப்பொருள் களவாடப்பட்டதையறிந்த சாருதத்தர், என்ன செய்வதெனத் தெரியாது திகைத்தார். அவர் மனைவி தூதை, தன் கணவர் வறுமையால் அப்பொருள்களைக் கையாடல் செய்திருப்பார் என்ற பழி வந்துவிடக்கூடாதே என்பதற்காகத் தன் தாய்வீட்டார் தனக்குத் தந்த இரத்தின மாலையைக் களவு போன பொருளுக்கு ஈடாய் வசந்த சேனையிடம் அளிக்கச் சொல்லித் தன் கணவரிடம் கொடுத்தாள். சாருதத்தர் இரத்தினமாலையை மைத்திரேயனிடம் தந்து, தான் வசந்தசேனையின் நகைகளைச் சூதில் வைத்து இழந்துவிட்டதாய்ச் சொல்லி, அதற்கு ஈடாய் அவ்விரத்தின மாலையை அனுப்பி யிருப்பதாய்க் கொடுத்துவருமாறு கூறினார்.

வசந்தசேனை தன் இல்லத்தே சாருதத்தரையே நினைத் திருந்தாள். ஒரு நாள், சகரன் பெரும் பொருள் கொடுத்து அவளை அழைத்துவர வண்டியை அனுப்பியிருந்தான். வசந்தசேனையின் தாய், அப்பொருளைப் பெற்றுக்கொண்டு மகளிடம், வண்டியிற் செல்லுமாறு வற்புறுத்தினாள். மகளோ தாயைச் சினந்து மறுத்துரைத்தாள்.

அதுவேளை அங்கு வந்த சருவிலகன், தான் சாருதத்தர் வீட்டில் திருடி வந்த நகைகளை மதனிகையிடம் காட்டி, இப் பொருளைத் தந்தால் வசந்தசேனை அவளை விடுவித்து விடுவாளா எனக் கேட்டான். அவளை விடுவிப்பதற்காக அப்பொருளை அவன் களவாடிய முறையையும் கூறிக் கொண்டிருந்தான். தாயிடம் வெகுண்டு திரும்பிய வசந்தசேனை அதைக் கேட்டாள்; அந்நகைகள் தன் காதலர் வீட்டிலிருந்து திருடப்பட்டவை என்பதையும் உணர்ந்தாள். தானறிந்ததை வெளிக்காட்டிக்கொள்ளாது நகைகளைப் பெற்றுக்கொண்டு மதனிகைக்கு விடுதலை தந்து, சருவிலகனோடு அவள் சிறப்புற வாழுமாறு வாழ்த்தி அனுப்பினாள். விலைமகளைக் குலமகளாக்கிய அவள் செயலுக்குச் சருவிலகன் கண்ணீரால் நன்றி கூறினான். மதனிகையோடு சருவிலகன் தெருவில் சென்று

கொண்டிருக்கையில், "நமது ஆட்சியை வீழ்த்திடப் பல்லவன் விஷ்ணுசிம்மனுக்கு ஒற்றனாயிருக்கும் வில்லவன் சிறையிலிருந்து தப்பிவிட்டான். நகரை நன்கு காவல் செய்யுங்கள்" எனக் காவலர் பறையறைந்ததைக் கேட்டான். வில்லவன் சருவிலகனுக்கு நண்பன். நாட்டைக் களப்பிரர் பிடியிலிருந்து விடுவிக்கப் பாடுபடும் தன் நண்பனுக்குத் தானும் உதவச் சருவிலகன் நினைத்தான். ஆதலின், மதனிகையைத் தன் இருப்பிடம் சேர்த்ததும் நண்பனைக் காண விரைந்து சென்றான்.

இரத்தினமாலையை வசந்தசேனையிடம் சேர்க்கச் சென்ற மைத்திரேயன் அவளது செல்வ நிலை கண்டு வியப்புற்றான்; தன் தலைவன் சொன்னதைச் சொல்லி, இரத்தின மாலையை அவளிடம் சேர்த்துவிட்டுத் திரும்பினான். அன்று மாலை, தான் சாருதத்தரைச் சந்திக்க அவர் வீடு வருவதாய் வசந்தசேனை கூறி அனுப்பினாள்.

மாலையில் கருமேகங்கள் எங்கும் சூழ்ந்தன; பெருமழை பொழிந்தது; கையில் சிறுகுடையைப் பிடித்துக்கொண்டு, தோழியின் துணையுடன், சாருதத்தர்மேல் கொண்ட காதல் உந்த, மின்னல் வழி காட்ட, முற்றிலும் நனைந்தவளாய் அவள் சாருதத்தர் இல்லம் அடைந்தாள். சாருதத்தர் வந்தவளை வரவேற்று, "நங்கையே! மழையில் நனைந்துள்ளாய்! மாற்றுடை தருவேன், வருக!" என உள்ளே அழைத்துச் சென்றார். காதலால் கட்டுண்ட அவர்கள் ஒன்றுகலந்தனர். வசந்தசேனை அன்றிரவு அங்குத் தங்கி அவரோடு இன்புற்றாள்.

மறுநாள் காலை துயிலெழுந்த சாருதத்தர் புனலாடச் சென்றார். வசந்தசேனை, சாருதத்தர் அளித்த தூதையின் இரத்தினமாலையை அவளிடமே சேர்த்து வருமாறு தோழியை அனுப்பினாள். தூதையோ அது வசந்தசேனைக்கே உரியது என்றாள். வசந்தசேனை தோட்டத்தினுள் சென்றாள். அங்கே சாருதத்தரின் மகன் உரோகசேனன் அழுதுகொண்டே வந்தான். அவன் அழுகைக்குக் காரணம் கேட்ட பொழுது தூதையின் தோழி, "மற்றவர்கள் பொன்தேர் கொண்டு விளையாடுவதைப் பார்த்துத் தனக்குப் பொன்னால் ஆன தேர் வேண்டுமெனக் கேட்டான். தந்தை நன்னிலையுற்றுச் செல்வரானதும் தருவார், இப்போது இதை உருட்டி விளையாடு என மண்ணாலும் மரத்தாலும் செய்த தேர் தந்தேன். ஆதலின், அழுது நிற்கிறான்" என்றாள். வசந்தசேனை அவனை ஆர்வத்துடன் தழுவி, "கண்ணே! ஈதால் ஈடில்லாப் பொற் சிறுதேர் செய்வோம்" எனத் தன் பொன்

நகைகளைக் கழற்றி அத்தேர்மீது சேர்த்தாள். மாடியின் மேலிருந்து இச்செயலைக் கண்ட தூதை, 'இவள் செயல் விலைமகள் செயலன்று' எனத் தேர்ந்து, அவளது நற்பண்புக்காக அவளை வாழ்த்தினாள்; "நம் தலைவர் உனக்குப் பரிசாய் இதை ஈந்தார்; இதை நீயே கொள்க" எனத் தன் இரத்தினமாலையை அவளிடமே அளித்து, அவளைத் தழுவி, அறைக்கு அழைத்துச் சென்றாள்.

அன்று மாலை, புட்பரண்டகம் என்னும் மலர் வனத்தில் சாருதத்தரைக் காண்பதற்காக வசந்தசேனை சாருதத்தர் வீட்டில் தன்னைப் புனைவு செய்துகொண்டிருந்தாள். சாருதத்தரின் வண்டியோட்டி அவருடைய வண்டியைக் கொண்டுவந்து வீட்டின் முன் நிறுத்தினான்; வண்டி விரிப்பை எடுத்துவர மறந்துவிட்டதால் அதை எடுத்துவர வண்டியை ஓட்டிக்கொண்டு அங்கிருந்து சென்றான்.

அப்போது சகரன் வண்டி அவ்வழியே வந்தது. போக்குவரத்து நெரிசலால் வண்டி முன்னேற முடியவில்லை. மேலும், அவ்வண்டிக்கு முன்னாலிருந்த வண்டி ஒன்று மண்ணில் புதைந்துவிட்டது. அவ்வண்டியோட்டிக்குத் துணைசெய்யச் சகரனின் வண்டியோட்டி தன். வண்டியை நிறுத்திவிட்டுக் கீழிறங்கிச் சென்றான். சகரன் வண்டி அப்போது சாருதத்தர் இல்லத்தின் முன் நின்று கொண்டிருந்தது. வீட்டினுள்ளிருந்து வெளிவந்த வசந்தசேனை, அது சாருதத்தர் வண்டியே எனக் கருதியவளாய் அதனுள் ஏறி அமர்ந்தாள். முன்னாலிருந்த வண்டியோட்டிக்கு உதவி செய்துவிட்டுத் திரும்பிய சகரனின் வண்டியோட்டி, தன் வண்டியினுள்ளே வசந்தசேனை இருப்பதை அறியாதவனாய் வண்டியை ஓட்டிச் சென்றான்.

அவ்வண்டி சென்ற சிறிது நேரத்திற்குள், விரிப்பை எடுத்துவரச் சென்றிருந்த சாருதத்தரின் வண்டியோட்டி வண்டியைக் கொணர்ந்து அவர் வீட்டின்முன் நிறுத்தினான். காவலர்க்கு அஞ்சி ஓடிவந்த வில்லவன், அங்கு நிற்பது சாருதத்தர் வண்டி என்பதறிந்து, அதனுள் ஏறி அமர்ந்துகொண்டான். வண்டி யோட்டியோ, ஏறியது வசந்தசேனையே எனக் கருதி வண்டியை மலர்வனம் நோக்கி ஓட்டினான்.

புட்பரண்டகக் காவில் சாருதத்தர் வசந்தசேனையை எதிர்நோக்கிக் காத்திருந்தார். வண்டி வந்தது. வசந்த சேனையை வரவேற்க ஆவலோடு வந்த சாருதத்தரிடம், அதனுள்ளிருந்த

வில்லவன் தன் வரலாறு கூறிக் காக்க வேண்டினான். சாருதத்தர் அவனுக்கு ஆறுதல் கூறி, தீங்கேதும் நேராவண்ணம் தம் வண்டியிலேயே நகரைக் கடக்குமாறு அனுப்பிவைத்தார்.

வசந்தசேனையுடன் சகரனுடைய வண்டி புட்பரண்டகத்தில் வந்து சேர்ந்தது. வண்டியினுள் வசந்தசேனையிருப்பதையறிந்த சகரன் அவளிடம் காதல் மொழி பகர்ந்தான். அவள் வெறுத்து ஒதுக்கினாள்; அவனோ காலில் வீழ்ந்து வணங்கினான். தடுத்தும் கேளாது தழுவச்சென்ற அவன் முகத்தைத் தன் நகங்களால் அவள் கீறினாள். எவ்வகையிலும் முயன்றும் முடியாமற்போகவே சகரன் அவள் கழுத்தைப் பிடித்து நெரித்தான். வசந்தசேனை மூச்சற்று நிலத்தில் விழுந்தாள். அவள் இறந்துவிட்டதாய் நினைத்துச் சகரன் திகைத்தான்; பின், தன் பணியாள்கள் துணையுடன் வசந்தசேனையின் உடலைச் சருகுகளால் மூடிவிட்டு அங்கிருந்து அகன்றான்.

சகரன் சென்றபின் அங்கே பௌத்த இளந்துறவி ஒருவர் வந்தார். புனலாடி, தம் துவராடையைப் பிழிந்து, அதனை, வசந்தசேனை மூடப்பட்டிருந்த சருகுக்குவியலின்மேல் உலர்த்துவதற்காக விரித்தார். சருகுக்குவை அசைவது கண்டார்; சிறிது நேரத்தில் கைவிரல்கள் வெளியே தெரிந்தன. சருகுகளை அகற்ற, அங்கே வசந்தசேனை கிடப்பதைக் கண்டார்; மார்பு மேலெழுந்து தாழ்ந்ததால் உயிரிருப்பதறிந்து முகத்தில் நீர் தெளிக்க, வசந்தசேனையின் மயக்கம் நீங்கியது. "முன்பொருமுறை சூதிலே தோற்றோடி வந்த சம்வாகனனுக்குப் பொன்வளையை ஈந்து காத்தீர்களே, அந்தச் சம்வாகனனே நான்" எனத் துறவி கூறி, அவளுக்கு நேர்ந்த துன்பத்திற்கு வருந்தி, அவளை அருகேயிருந்த பௌத்தப் பள்ளிக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்த தலைமைப் பிக்குணிபால் ஒப்படைத்தார்.

சகரன் வழக்கு மன்றம் சென்றான்; தான் புட்பரண்டகம் சென்றதாகவும், அங்கே வசந்தசேனை கழுத்து நெரிக்கப்பட்டு இறந்து கிடந்ததாகவும், எவனோ அவள் நகைக்கு ஆசைப்பட்டுக் கொலை செய்திருக்க வேண்டுமென்றும் வழக்குரைத்தான். நடுவர், வசந்தசேனையின் தாயை அழைத்துவரச் செய்து, அவளிடம் வசந்தசேனை எங்கே எனக் கேட்டார். அவள், "சாருதத்தர் இல்லம் ஏகினள்" என்றாள். அவ்வாறாயின் அவளைக் கொன்றவர் சாருதத்தராகவே இருக்கவேண்டுமெனச் சகரன் கூவினான். சாருதத்தர் அழைத்துவரப்பட்டார். நடுவர், "வணிகரே! உம்பால் வந்த வசந்தசேனை எங்கே?" என்றார். சாருதத்தர், "வசந்தசேனை அவள் இல்லத்திற்கு எவ்வாறு சென்றாள் என்பதை அறியேன்"

என்றார். அப்போது அங்கு வந்த வீரகன், முன்பு வீதியில் வில்லவனைத் தேடியபோது வசந்தசேனை சாருதத்தர் வண்டியிலேறிச் சென்றாள் எனத் தானறிந்திருந்த தவறான தகவலைத் தந்தான். அது கேட்ட நடுவர், அவனைப் புட்பரண்டகத்துக்கு அனுப்பி, அங்கு வசந்தசேனையின் பிணம் கிடக்கிறதா என அறிந்து வரச் சொன்னார். அவன் சென்று திரும்பி, "அங்கே கழுகும் நரியும் சிதைத்துவிட்டதால் அடையாளம் காணமுடியாதவாறு ஒரு பெண்ணுடல் கிடக்கிறது. கூந்தலால் அது பெண் பிணம் என்பதறிந்தேன்" என்றான். அங்கே கிடந்த வேறொரு பிணத்தைக் கண்டு அவன் அவ்வாறு கூற நேர்ந்தது.

உரோகசேனனுக்குப் பொன் தேர் செய்ய வசந்தசேனை அளித்த நகையை அவளிடம் திருப்பித் தருவதற்காகச் சென்ற மைத்திரேயன், வழியிடையே சாருத்தர் நீதிமன்றம் சென்றிருப்ப தறிந்து அங்கு விரைந்தான். சாருதத்தர் கொலைக்குற்றம் சாட்டப் பட்டிருப்பதறிந்து, கைகளால் முகத்தில் அறைந்துகொண்டு அழுதான். அப்போது அவனிடமிருந்த நகைகள் தரையில் வீழ்ந்தன; அவை வசந்தசேனையின் நகைகள் என்பது அவள் தாயின் கூற்றால் உறுதியாயிற்று. வசந்தசேனை சாருதத்தன் வண்டியில் சென்றதாய்க் கூறப்பட்டது; மலர் வனத்தில் அடையாளம் அறியமுடியாப் பெண்பிணம் ஒன்று கிடந்தது; மைத்திரேயனிடம் வசந்தசேனையின் நகைகள் இருந்தது ஆகிய வற்றால், நடுவர் மிக்க வருத்தத்துடன் சாருதத்தர் குற்றவாளி எனக் கூற வேண்டியதாயிற்று. "இக்குற்றத்துக்குத் தலையை தரையில் வெட்டலே தண்டனை"என அரசர்க்கு நடுவர் செய்தி அனுப்பினார். அரசனும் அத்தண்டனையை நிறைவேற்றுமாறு ஆணையிட்டான்.

சாருதத்தர் கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டார்; கண்ட மக்கள் கதறியழுதனர். மைத்திரேயன்மூலம் செய்தியறிந்த தூதை அடியற்ற மரமென விழுந்து புரண்டாள். மைத்திரேயன், சாருதத்தர் மகன் உரோகசேனனை அழைத்து வந்து அவரை வழியிடைக் கண்டனன். சாருதத்தர் தம் மகனை உச்சி மோந்து முத்தமிட்டுக் கண்ணீரால் முழுக்காட்டினார்.

கொலைஞர்கள் வள்ளல் சாருதத்தரை இறப்பதற்கு முன் இறைவனை வேண்டிக்கொள்ளுமாறு கூறினர். அப்போது சகரன் அங்கே வந்து, கொலைத்தண்டனையை நிறைவேற்ற இன்னுமேன் தாமதமெனக் கொலையாளியை விரட்டினான். கொலையாளி

வாளை ஓங்கினான். அவ்வாள் வில்லவன் எறிந்த அம்பால் அப்புறம் வீழ்ந்தது. வில்லவன் பாதகன் சகரனைக் கைது செய்யுமாறு கூறினான். மக்கள் மகிழ்ச்சியால் ஆரவாரித்தனர்.

பௌத்தத் துறவியோடு அங்கு வந்த வசந்தசேனை சாருதத்தரின் அடிகளில் வீழ்ந்து வணங்கினாள். மாண்டவள் எனக் கருதப்பட்ட வசந்தசேனை மீண்டது கண்டு மக்கள் மகிழ்ந்தனர். பௌத்தத் துறவி, முன் நாளில் புட்பரண்டகத்தில் நடந்ததை எடுத்து விளக்கினார். சகரனைக் கொல்லுமாறு அனைவரும் கூறினர். சாருதத்தரோ, "குற்றம் செய்தல் உளத்தியற்கை; அத்தீமையைப் பெருந்தன்மையோடு மன்னிப்பதே பண்பாடு" எனக் கூறி அவனை விடுவிக்குமாறு செய்தார்.

அதற்குள் சாருதத்தரின் மனைவி தூதை தீக்குளிக்க ஏற்பாடுகள் செய்துகொண்டிருப்பதை முதியவர் ஒருவர் உரைத்தார். எல்லோரும் தூதை வீட்டுக்கு விரைந்தனர். மைந்தன் அலற, தீயைத் தூதை வலம் வந்துகொண்டிருந்தாள். விரைந்து வந்த வில்லவன், சாருதத்தரின் விடுதலைச் செய்தியை அறிவித்து அவளைத் தடுத்தான். வசந்தசேனை உடன் தொடர, சாருதத்தர் ஓட்டமும் நடையுமாய் வந்தார். தன் கணவர் தாளில் வீழ்ந்து தூதை இன்பக்கண்ணீர் பெருக்கினாள், தூதையும் வசந்த சேனையும் உடன்பிறப்புரிமை பாராட்டி ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர். தூதை வசந்தசேனையிடம், "என்றன் நாயகன் உன்றன் நாயகன், நாமவர் அடிமை" எனக் கூறி, "எமதிருவர் கேள்வராய் அருளுக" எனக் கணவனை வேண்டினாள்.

வில்லவன் அப்போது, அன்றைய போரில் தம் தலைவன் வெற்றி பெற்றதை அறிவித்து, "இனிச் செந்தமிழ் நாடு நமதே!" என்றான்.

மறுநாள் மக்கள் மகிழ, களப்பிரர் ஆட்சியை ஒழித்த பல்லவ விஷ்ணு சிம்மன் காஞ்சி மன்னனாய் முடிபுனைந்தான். தூதையும் வசந்தசேனையும் வள்ளல் சாருதத்தர் நெறியினைச் சார்ந்தனர். மன்னன் திருக்குறள்வழி ஆட்சி செய்தனன்.

"எங்கெங்கும் தமிழ் தமிழே முழங்க, வாழ்வில் இன்பத்தோடு எழுச்சியெலாம் உற்றார் மாந்தர்."

"வாழ்ந்திட்டார் தண்டமிழர் வளமுற்றோங்கி, வண்குறளின் வழிநின்றே சிறந்தார் வாழ்க!"

ஆசிரியர் செய்துள்ள மாற்றங்கள்

மூலக்கதை வடபுலத்து அவந்தி நாட்டின் தலைநகராகிய உச்சயினியில் நடைபெறுவதாய் உள்ளது. கவிஞர் நலங்கிள்ளி கதை நிகழ்விடத்தைக் காஞ்சிக்கு மாற்றியுள்ளார். மூலக்கதையில் காமுகனாய் இருந்த மன்னனை அவனால் சிறைப்படுத்தப்பட்ட வீரன் தப்பி, அவனை வென்றதாய்க் கூறப்பட்டுள்ளது. இங்கோ காஞ்சியை ஆண்ட களப்பிரர் ஆட்சியைப் பல்லவ விஷ்ணுசிம்மன் முடிவுக்குக் கொண்டுவந்ததைக் கவிஞர் கூறுகிறார். கதை நிகழ்விடத்தைத் தமிழகத்திற்கு மாற்றியதால் தமிழக அரசியலை அதற்கேற்ப இணைத்துப் பாடியிருக்கிறார். கதை நிகழ்விடம் மாற்றப்பட்டதே தவிர, ஆசிரியர் கதைப்போக்கில் எவ்வித மாறுதலையும் செய்யாது மூலத்தையே பின்பற்றியுள்ளார்.

கதைமாந்தர்கள் பெயர்களை முன்நூலில் உள்ளவாறே பெரும்பாலும் ஆண்டிருக்கிறார். சகாரன் என்னும் பெயரைச் சகரன் என்றும், சம்வாககன் என்னும் பெயரைச் சம்வாகனன் என்றும், ஒலிப்பு எளிமை கருதி மாற்றம் செய்திருக்கிறார். முன் நூலில் அரசனை எதிர்த்துப் புரட்சி செய்யும் ஆரியகன் என்னும் பெயரை, நிகழ்விடத்தைத் தமிழ்நாட்டுக்கு மாற்றிய காரணத்தால் வில்லவன் என வழங்குகிறார்.

சிலப்பதிகாரத்துடன் ஒப்பீடு

பண்டிதமணி கதிரேசனாரின் மண்ணியல் சிறுதேர்க்கு ஆராய்ச்சி முன்னுரை வழங்கிய நாவலர் சோமசுந்தர பாரதியார், "சிலப்பதிகாரத்தில் வணிகன் கோவலன் காதலித்த மாதவி கதைக்கும், இங்குச் சாருதத்தர் காதல் கொண்ட கணிகை வசந்தசேனை கதைக்கும் உள்ள பல பெரிய ஒற்றுமைகளும், சில அரிய வேறுபாடுகளும் மிகவும் பாராட்டற்பாலன" என்று குறிப்பிட்டுள்ளார். அவர்வழி நின்று இங்குச் சில கூறுவாம்.

சிலம்பின் மாதவியும் இக்காவியத்தின் வசந்தசேனையும் விலைமகளிர் மரபிலே தோன்றியவர்கள்; ஆயினும், குலமகளிர் ஒழுக்கத்தில் நின்று புகழ் பெற்றனர். இருவருமே, முன்னரே திருமணமாகியுள்ள பெருவணிகர்களைக் காதலித்தனர். இருவரும் காதலரைப் பிரிந்து பலவாறு அல்லலுற்று அவலப்பட்டனர்.

கோவலன் மனைவி கண்ணகியும், சாருதத்தர் மனைவி தூதையும் தம் கணவரிடம் குறை காணாத கற்பரசியர். மாதவி வீட்டிலிருந்து திரும்பிய கோவலன்,

"குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும்எனக்கு"

என்றபோது கண்ணகி, "சிலம்புள; கொள்ளுங்கள்" என்றனள். அதே போன்றதொரு செயல் இக்காவியத்துள்ளும் வருகிறது. வசந்தசேனை அடைக்கலமாய் வைத்துச் சென்ற நகைகள் களவாடப்பட்டபோது சாருதத்தன் செய்வதின்னதெனத் தெரியாது திகைத்து நிற்க, அவன் மனைவி தூதை, தன் தாய் வீட்டிலிருந்து பெற்ற விலைமதிக்கவொண்ணா இரத்தின மாலையைச் சேர்ப்பித்தாள். இருபெரும் பத்தினியர் இயல்பும் ஒன்றாய் அமைந்திருப்பதை இங்குக் காண்கிறோம்.

சிலம்பில் மாதவியின் பச்சைநிற மணிமாலையை வாங்கியதன்மூலம் கோவலன் அவளை அடைகிறான். வசந்த சேனை தன் நகைகளைப் பாதுகாத்துத் தருமாறு சாருதத்தரிடம் தர, அதுவே அவர்கள் காதல் வளர்ச்சிக்கு இடமமைத்துத் தருகிறது. இரு காவியங்களிலும் நகைகள் இவ்வாறு காதலர்களை இணைய வைக்கின்றன.

புட்பரண்டகத்தில் இலைச்சருகுகளால் மூடுண்டு கிடந்த வசந்தசேனைக்குப் பௌத்தத் துறவி துணையாய் அமைகிறார்; சிலம்பில், மதுரை செல்லும் கோவலன்-கண்ணகிக்குச் சமணத் துறவி துணையாய்ச் செல்கிறார்.

கோவலன்மீது திருட்டுக்குற்றமும், சாருதத்தர்மீது கொலைக் குற்றமும் சாட்டப்பட்டு, அவர்கள் தலைகளை வெட்ட அரசர்கள் ஆணையிடுகின்றனர். ஆயினும், அவர்களின் நல்லியல்புகளை அறிந்த மக்கள், 'இவர்களுக்கோ இந்நிலை' என வருந்துவது இருகாவியங்களிலுமே பேசப்படுகிறது.

"இவ்விரு கதையிலும் காதலரிடையே தூது போவோர் பழுதற்ற பார்ப்பனராவர். இது தமிழ்ச்செய்யுள் வழக்குக்கும் மரபுக்கும் அமைவுடைத்து என்பது தொல்காப்பியச் சூத்திரத்தாலும் வெளிப்படும் (தொல். பொருள். சூ. 177)" என்பார் நாவலர் பாரதியார்.

மாதவி காதலித்த கோவலன் செல்வச் செருக்குடையவன்; அரைசு விழை திருவைப் பெற்றவன். வசந்தசேனையோ தன் காதலன் ஒருகாலத்தே வளம் மிக்கவனாயினும் அப்போது வறுமை நிலையிலிருப்பவன் என்பதை உணர்ந்தும், காதலித்தாள். மாதவி கோவலனை அடைவதற்கு எதிராய் யாரும் இருக்கவில்லை. அவள் கோவலனை அடைந்தாள்; அவனுடனேயே வாழ்ந்தாள்; அவன் பிரிந்ததும் துறவியானாள். வசந்தசேனை சாருதத்தரை

அடைவதைத் தடுத்து அவளைத் தனக்குரியவளாய் ஆக்கிக் கொள்ளவேண்டுமென வஞ்சகன் சகரன் இடைவிடாது முயன்றான். தன்னை விரும்பவில்லை என்பதற்காக அவ்வஞ்சகன் அவள் கழுத்தை நெரித்துக் கொடுமை செய்தான். இருப்பினும், அவள் சாருதத்தரையே காதலித்து அவரையே அடைந்தாள். தடை ஏதுமின்றிக் கோவலனை மாதவி அடைந்தாள்; ஆனால், வசந்தசேனையோ தடைபல கடந்து சாருதத்தரை அடைந்தாள்.

கண்ணகி மாதவியை நேரில் கண்டதாய்ச் சிலம்பில் குறிப்பில்லை. மாதவியைக் கண்ணகி வெறுத்ததில்லை. "மடம்படு சாயலாள் மாதவி தன்னைக் கடம்படாள்" என்று சிலம்பு பேசும். தூதையோ, தன் வீட்டிலேயே வசந்தசேனையைக் காண்கிறாள். அவள் குணவியல்புகளையும், தன் கணவன்பால் அவள் கொண்டுள்ள காதலையும் அறிந்ததும் அவளைத் தன் தங்கையாய், தன் கணவனுக்கு மற்றொரு மனைவியாய் ஏற்றுக்கொள்ளுகிறாள்.

கணவன் கொலையுண்ணப்படுவான் என்ற செய்தியறிந்ததும் தூதை தீக்குளிக்க முயன்றாள். கண்ணகியோ கணவனைக் கொலை செய்த மன்னனின் நகரையே தீக்கிரையாக்கினாள்.

சிலம்பில் கோவலனுக்கு மாதவிபால் ஒரு மகள் பிறந்தாள். இங்கோ வசந்தசேனை சாருதத்தரைக் கண்டு காதல் கொள்ளும் முன்பே அவருக்கு மகன் ஒருவன் இருந்தான்.

கோவலன் மாதவியை ஐயுற்று வெகுண்டு செல்லும் நிலை சிலம்பில் நேரிடுகிறது. சாருதத்தரோ வசந்தசேனையை வெறுக்கும் நிலை நேரிட்டதில்லை.

மாதவி முதலில் கோவலனை அடைந்து முடிவில் அவனை இழந்தாள். ஆனால், வசந்தசேனையோ முதலில் சாருதத்தரை இழந்து முடிவில் அவரை அடைந்தாள்.

கோவலன் திருடன் என்று சொல்லப்பட்டபோது அதனை ஆராயாமலேயே மன்னன் அவனுக்குத் தண்டனை வழங்கினான். சாருதத்தர்மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டபோது அரசர் அதனை ஆராய்ந்து, சூழ்நிலைகள் அவருக்கு எதிராய் அமைந்ததால் அவருக்குத் தண்டனை வழங்க நேரிட்டது.

சிலம்பில் ஊழ்வினை வெற்றி பெறுகிறது. இங்கோ வஞ்சனை வெற்றி பெறுவதுபோலத் தோன்றி இறுதியில் அழிகிறது.

இவ்விரு காப்பியங்களுமே பரத்தையர் குலத்தில் தோன்றியவர்களும் ஒழுக்கமுள்ளவர்களாய் வாழ்ந்து புகழ்பெற முடியும் என்பதை நிறுவுகின்றன. பரத்தையர் என்னும் சமுதாயக் கேட்டை அகற்றிடும் முயற்சிக்கு இவ்விரு காவியங்களும் அடிகோலுகின்றன.

இவ்வாறு சிலம்புடன் ஒப்புநோக்கி, அறிந்து, மகிழத்தக்க பல செய்திகளைக் கொண்டுள்ள இக்காவியத்தைக் கவிஞர் நலங்கிள்ளி எழில்பட இயற்றியுள்ளார். கவிஞரின் திறமும் புலமையும் நூல் முழுதும் நன்கு பளிச்சிடுகின்றன.

கதைமாந்தர் அறிமுகம்

கவிஞர் நலங்கிள்ளியின் கவிதைக்ளைப் படிக்குங்கால் கதைமாந்தர்கள் நம் கண்முன்னே உயிரோவியங்களாய் நடமாடுகின்றனர். கதைமாந்தர்களின் இயல்புகளைச் சுருங்கிய சொற்களில் அழகுற நம் நெஞ்சில் பதித்துவிடும் கவிஞரின் திறம் பாராட்டுக்குரியது.

சாருதத்தரை, "கலை தேர்ந்திடும் ஒளியன் (பக்கம் 12, பாடல் 21); கார் உற்றிருகையான், கனதனம் உற்றிடும் எவையும் பாருற்றவர் பருகத்தரும் பண்புற்றவன் (22 : 41); கொடையும் உயர்குணமும் உள கொண்டல் (22 : 43); அறங்கிடந்த நெஞ்சினன் (27 : 24); பல்கலை ஆய்ந்தமைந்த பண்பினன் (27 : 25); மாந்தர் தம்முளே மணியென ஒளிர்பவன் (36 71); ஒப்புரவின் மிக்கான் (104 6); வாழ்வில் நொந்துள மாந்தர் யார்க்கும் ஆக்கமும் பிறவும் வாரி அளித்திடும் வள்ளல் (58 50); பெருமிதமும் பேரழகும் பெருங்கருணை பிலிற்றும் இரு பேசும் கண்ணும், தருமத்தின் துணையாகும் தடந்தோளும், உதவிசெயத் தளராத் தாளும், மருமத்தில் அறநெறியும் வாக்கினிலே ஒளிமிளிரும் வணிக வேந்து (96 :17); அழகினில் அநங்கவேளை, அன்பினிற் குமரவேளை, மழையென ஓம்பிக் காக்கும் வண்மையிற் பாரிவேளை, தழைவுறு ஞானம் வீரத் தகைமையில் கண்ணன் ஒக்கும் சாருதத்தர் (135 : 13)" என்று கூறுவதன் வாயிலாய் அவருடைய கல்வி நலம், ஈகை நலம், ஒப்புரவாற்றும் பாங்கு ஆகியவற்றை நன்கு புலப்படுத்துகிறார்.

அதே போன்று "வேய்புரை தோளி (19 25); முல்லைநகை (21 34); செங்கனிவாய், சிறியநுதல், பெரிய சேற்கண் (23 48); மயிலியற் சாயலாள் (32 54); அன்னமென் நடையாள் (32 55); நெய்திகழும் கருங்குழலி (40 : 91); அநங்கவேள் அமிழ்தின் தீட்டிய நிதி (41 : 1); காதலாங்கடவுள், கோல்கொண்டு, அமிழ்தினால் கருதித்

தீட்டும், ஓதரு உயிர்கொள் ஓவம் (112 42); கவிசேர் இன்பம், பாவாணர் கனவின் கிழத்தி, இமையவரும் சுவையா அமிழ்தம் (44 20)" என்னும் சொற்றொடர்களால் வசந்தசேனையின் எழிலோவியத்தை உயிரோவியமாய்த் தீட்டிக் காட்டுகிறார்.

"அனமென்ன நடை, சாயல் அணிமஞ்ஞை, அழகுக்கோர் அலர்மேவு திருவே எனும், கனியொத்த மொழி நங்கை; கற்புக்கோர் நெறிகண்ட கணவற்குத் துணை தூதை" என்னும் அடிகள் தூதையின் அழகையும் கற்பு நலனையும் நன்கு எடுத்துரைக்கின்றன.

சகரனின் வஞ்சனையையும் கயமையையும் கீழ்க்காணும் அடிகள் படம் பிடிக்கின்றன

"நட்டநன் மதியார் இல்லா நரிக்குண நல்லபாம்பு;
கெட்டன மனத்துட் கொண்ட கீழ்மதிச் சகரன்" (164 : 1)

"சதிகாரன், பெண்பேயன், தருமத்தின் நிழலேதும்
தங்காத தீய சகரன்" (250 : 10)

நடுவர்க்கான இலக்கணம்

"கல்வியின் எல்லை கண்டார்; கருத்தினில் தெளிவு
பெற்றார்; நல்லியல் நடுவர்" (219 : 8)

என்று சிறப்புற விளக்கப்படுகிறது.

"அன்னையை, தந்தையை, அமிழ்தன்ன மனைவியை, தன்னுயிர்த் தனையரை மறப்பர் (50 : 10)" - சூதாடுகளம் சூதர்களை அனைத்தையும் மறக்கச் செய்வதை இவ்வடிகள் அருமையாய்ச் சித்திரிக்கின்றன.

கவி நயம்

காலைப் பொழுது (பக். 1-4; 78-79; 217-18); மாலைப் பொழுது (பக். 9); நாட்டு வளம் (பக். 16-17); காஞ்சியின் பெருமை (பக். 24-26); வறுமையின் கொடுமை (பக். 29-10); வசந்தசேனையின் மனையின் அழகு (பக். 18, 95); கணிகையர் தெரு (பக். 85-86); போர்க்கள நிகழ்ச்சிகள் (பக். 234-36); ஆகியவைபற்றிக் கவிஞர் பாடியுள்ளவை நம் நெஞ்சை அள்ளுவனவாய் உள்ளன.

பாடுபொருளைப் படிப்போரின் மனக்கண் முன் ஓவியமாய்த் தோற்றுவிக்கக்கூடிய ஆற்றல் வாய்ந்தனவாய் இந்நூலுள் கவிதைகள் அமைந்துள்ளன. சாருதத்தர் வீட்டில் மைத்திரேயன் எனும் பார்ப்பனத்தோழன், வசந்தசேனை அடைக்கலமாய்த் தந்த நகைப்பையைத் தலையின்கீழ் வைத்துத் தூங்குவதைக் கவிஞர் பின்வருமாறு பாடுகிறார்

"துண்டை விரித்த வெறுந்தரையில்
சுடர்ப் புரிநூல் புறங்கிடப்பச்
சிண்டு முடிந்த தலைக்கடியில்
சீரைப் பொதியைக் கைத்தாங்கி
மண்டும் உறக்கத்(து) ஆழ்ந்துள்ள
மைத்ரேயன்" (68 18)

இதைப் படிக்கும்போதே, துண்டை விரித்துச் சிண்டுடன் தூங்கும் மைத்ரேயனின் ஓவியத்தை நம் மனக்கண் முன்னர் நிற்கச் செய்கிறார்.

இனிமையும் எளிமையும் பொருந்திய கருத்தாழம் மிக்க பாக்கள் பல நம்மைக் களிப்பில் ஆழ்த்துகின்றன.

வாளைபாய்ந்து உயர்தெங்கின் மன்னியதேன்
அடைகிழிக்க வழிதேன், ஆறாய்
நீள்வயல்பாய் நெற்பழன நெடுமாடக்
காஞ்சி.... (274 : 16)

என நகர்வளம் எழிலுறப் பாடப்படுகிறது.

இசையின் இயல்பு யாது? கவிஞர் உரைக்கிறார் :

இசையினால் உவகை பொங்கும்; இசைஉளம் ஈர்த்து இசைக்கும்;
இசையினால் கொடிய நெஞ்சம் இளகியே அருள்பி லிற்றும்;
இசையினால் காதல் தோன்றும்.... (64 : 2)

இவ்வாறு உளம் ஈர்த்து, உவகையூட்டி, அருள் பிலிற்றி, அன்பைத் தோற்றுவிக்கும் பாக்களைக் கொண்டதாய் இந்நூல் மிளிர்கிறது.

கதைமாந்தர்களின் இயல்புக்கு ஏற்றவாறு அவர்களின் உரையாடலை ஆசிரியர் அமைத்துள்ள திறம் பாராட்டுக்குரியது. சகரன் அறிவற்ற மூடன் என்பதை அவனுடைய பேச்சைக் கொண்டே கவிஞர் வெளிப்படுத்துகிறார். தெருவில் சகரனைக் கண்டு வசந்தசேனை அஞ்சி ஓடும்போது அவன், "வசந்தசேனே நில்! இராவணனும் குந்தியும் கொண்ட காதல் போன்றதன்றோ நம் காதல். இராமனுக்கு அஞ்சித் துரோபதை ஓடியதுபோல நீ ஓடலாமா? விசுவாவசுவின் தங்கை சுபத்திரையை அனுமன் பிணித்துக் கவர்ந்ததுபோல நான் உன்னைப் பிடித்திடுவேன்" (பக். 33-34) எனப் பேசுவது அவனது மூடத்தன்மையை நன்கு புலப்படுத்துகிறது.

உவமைகள்

ஆசிரியர் இயல்பான இனிய உவமைகளை எடுத்தாளும் புலமை நலன் பெற்றுள்ளார்.

புன்சொல் கேட்டு வெதும்பி நடுங்கும் உள்ளத்திற்குக் கூறப்படும் உவமைகள்

என்மனமோ நெருப்பிலுறும் இறைச்சியென வெதும்பிடுமே
(33 57)

மெல்லியசெவ் வாடைநுனி வீழ்காற்றால் மிகஅசைய
புல்லியநல் இளவாழை போல்நடுங்கிப் போதலென்னே? (33 58)

இதைச் செய்யாவிடில் உன் தலை நொறுங்கும் எனக் கூறும்போது எடுத்தாளப்படும் உவமை

கதவிடுக்கில் சிக்கி,விளங் கனிகுடுக்கை நொறுங்குமென
இதைவிளக்கிச் சொற்றிலையேல், இற்றுனது தலைநொறுங்கும்
(40 92)

கதவு இடுக்கிலே சிக்கிய விளங்கனி நொறுங்குவதுபோல என்னும் இவ்வுவமை புதியதும் இனியதுமாம்.

முன்னோர் மொழிபொருள்

கவிஞர் பண்டை இலக்கியங்களில் நன்கு தோய்ந்தவர் என்பதை இந்நூலைப் படிக்கும்போது நாம் நன்குணர்கிறோம்.

பயன்எதிர் நோக்கா வள்ளல் பயன்மரம் ஊர்ப முத்த
நயனென நீர்நி றைந்த ஊருணி நலமே என்ன
உயங்கிடு மாந்தர்க் குற்ற குறையற உதவி நிற்கும்
நியமமே கொண்டு வாழ்வான்... (27 23)

என்ற இப்பாடலில்,

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்" (குறள் 217)

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு" (குறள் 216)

என்னும் குறட்பாக்களின் கருத்து பொதிந்து கிடப்பதைக் காணலாம்.

காலமறிதல், இடனறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என்னும் திருக்குறளதிகாரங்களைத் தொகுத்து வைத்தது போலக் கவிஞரின் கீழ்வரும் பாடல் அமைகிறது

காலங் கருதி, இடன்நோக்கிக்,
கருத்தில் தெளிவும் துணிவும்பூண்(டு),
ஏலும் வகையாம் துணைகொண்டே,
எஞ்சி யஞ்சா தியல்வினையால்,
ஞாலம் அனைத்தும் வெலல்கூடும்
நண்பா! சூழ்ந்து துணிவேமேல். (160 13)

மன்மத விழாச் சருக்கத்தில் கவிஞர் பாடுகின்ற ஊசல் வரி, கந்துக வரி, அம்மானை வரி ஆகியவை (பக். 4-8) சிலப்பதிகாரத்தில்

இளங்கோவடிகள் வாழ்த்துக் காதையில் பாடியிருப்பதை அடியொற்றியனவாகும்.

பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை... (நாலடி. 17)

முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு... (நாலடி. 19)

என்ற நாலடிக் கருத்துகளை நலங்கிள்ளி பின்வருமாறு கூறுகின்றார்

கனியொடு காயும் பிஞ்சும்,
  பூவெலாம், கடுவ ளிக்கே
நனியுகும்; கால முய்க்க
  நம்முயிர் வீயும் அன்றோ? (261 6)

வசந்தசேனையும் சாருதத்தரும் ஒருவரையொருவர் கண்டு காதலித்ததை,

"இருவரும் மாறி மாறிக் கண்புகுந்து இதயம் எய்தி
ஒருவர்போன் றொருவர் இந்த உலகுணர் வற,நி லைத்தார்"
(112 : 46)

எனக் கவிஞர் பாடுகிறார். இது,

பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாள்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்
(கம்ப. மிதிலைக் காட்சி. 37)

என்னும் கம்பராமாயணப் பாடலின் பிழிவாயுள்ளது.

தீவினை என்பது யாதுஎன வினவின்
ஆய்தொடி நல்லாய் ஆங்கது கேளாய்!
கொலையே, களவே, காமத் தீவிழைவு,
உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்;
பொய்யே, குறளை, கடுஞ்சொல், பயனில்
சொல்,எனச் சொல்லில் தோன்றுவ நான்கும்;
வெஃகல், வெகுளல், பொல்லாக் காட்சியென்று
உள்ளம் தன்னில் உருப்பன மூன்றும்;எனப்
பத்து வகையால் பயன்தெரி புலவர்
இத்திறம் படரார்.... (மணி. 30 64–73)

என மணிமேகலையில் அகவற்பாவால் கூறப்படும் புத்தநெறி இந்நூலுள்,

உலைந்திடும் உடலிற் றோன்றும்
  உறுகொலை, களவே, காமம்;
மலைவுறு குறளை, பொய்யே
  வன்சொலே, பயனில் சொல்லே,

அலைவுறு மனத்தாம்; வெஃகல்,
  வெளவலும், ஆகாக் காட்சி,
இலைஇவை பத்தும் நந்தம்
  இயல்நெறி சார்ந்த வர்க்கே (203 : 24)

என அழகிய விருத்தப்பாவாய் உருவெடுத்துள்ளது.

சாருதத்தர் மனைவி தூதை தீக்குளிப்பதைத் தடுக்க முயன்றபோது அவள்,

மடமாதர் கணவனிலா வாழ்க்கை வாழ,
  மனத்தினிலே நினைத்திடினும் பெருநெ ருப்பாம்;
'தடமாகும் இக்குண்டம் எனக்கே' என்னைத்
  தடைசெய்யேல்.... (257 33)

என்று கூறினாள். இப்பாடலில்,

பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
நுமக்கரிது ஆகுக தில்ல; எமக்குஎம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென, அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயும்ஓ ரற்றே! (புறம். 246 : 11–15)

எனப் புறநானூற்றில் பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு தீப்பாய்வாள் சொல்லியதைக் காண்கிறோம்.

திருவையாற்றுக் கோவிலை,

வலம்வந்த மடவார்கள் நடமாட,
  முழவதிர, மழையென்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
  முகில்பார்க்கும்

எனத் திருஞானசம்பந்தர் தேவாரம் உரைக்கும். அத்திருவை யாற்றுக் குரங்கின் செயலை இங்கு,

சேய்த்துள்ள மரக்கிளையைச் சேர்ந்தேறி
  முகில்பார்க்கும் கடுவன் மந்தி (104 : 5)

என நம் கவிஞர் வாக்கில் காணமுடிகிறது.

கிழக்கினைநோக் கிப்படகு செல்லும் போதில்
கேள்விஇலார் நெஞ்சம்போல் இருண்டு, நீளும்
வழக்குடையார் செல்வம்போல் மின்னி மாய்ந்து,
வண்பொருளை இழந்தான்போல் அதிர்ந்து, பின்னர்
மழைக்கண்ணீர் உகுத்ததுவான் (பாண்டியன் பரிசு, இயல் 53, 1)

என்னும் பாவேந்தர் பாரதிதாசனாரின் கருத்து, கவிஞர் நலங் கிள்ளியிடம்,

கல்வியிலான் உள்ளமெனக் கருத்திருந்தும்,
  கருணையுளான் உள்ள மேபோல்

எல்லையிலாது ஈகின்ற இயல்பு,என்னப்
பொழிவான்... (106 14)

எனப் புதிய வடிவம் பெறுகிறது.

உருஷியாவில் ஜாரின் கொடுங்கோலாட்சியை,
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்

எனப் பாரதி பாடுவார். அவர் வழி நின்று கவிஞர் நலங்கிள்ளி கொடுங்கோல் மன்னனை,

.... அறந்தான் வீழப்
பாதகமே வெல்லும்வகை கண்டபாவி (255 : 27)

எனப் பாடுகின்றார்.

இந்நூலுள் ஒன்பான் சுவைகளுமடங்கிய அரிய பாடல்கள் அமைந்துள்ளன. எனினும், அவலச்சுவைப் பாடல்கள் நம் நெஞ்சை உருக்குவனவாய் அமைந்து சிறக்கின்றன. தீயிலே விழச் செல்லும் தூரதையின் கால்களைப் பற்றி அவள் மகன் கண்ணீர் பெருக்கி, அவளைத் தடுத்தான். அப்போது தூரதை,

திருக்கிளர்தன் சேயணைத்தாள்; உச்சி மோந்தாள்,
தேம்பிட்டாள்; இதழ்துடிக்க முத்தம் ஈந்தாள் (257 35)

உடல் நடுங்கினாள்; கண்ணீரால் தன் மேனியை நனைத்தாள்.

கண்ணே வாழ்க!
கருத்துடனே குலம்விளங்கக் கடமை யாற்றி,
காசினியில் பேறனைத்தும் பெற்று வாழ்க!

நுந்தையைப்போல் கல்வி,உயர் கேள்வி, சால்பு,
நுவலரிய ஒப்புரவு, செல்வம் ஓங்கிச்,
சிந்தையிலே அறந்தேக்கிச் சிறக்க வாழ்க!
செய்யாத பழிக்காக இன்றென் கேள்வன்
முந்தைவினைப் பயனேற்றார்; யான்பின் செல்வேன்;
முழுமதியே! என்னோற்றான் அவனைப் பெற்ற
தந்தையெனும் சொல்காக்க நீவாழ்க (258 35, 36)

எனப் புதல்வனைப் தேற்றினாள். இவ்வடிகளைப் படிக்குந் தோறும் நம் கண்கள் குளமாகும் என்பது உறுதி.

கதையின் பிழிவு

கதையின் முக்கிய நிகழ்ச்சிகளையும், இக்கதையால் பெறும் நீதியினையும் ஆசிரியர் இறுதியில் அழகுறப் பாடியிருக்கிறார்.

அறம்மறத்தால் வீய்தலிலை; அநீதி என்றும்
ஆட்சிசெயல் உலகிலிலை; சாரு தத்தன்
திறம்நோக்கின் புடமிட்ட செம்பொன் போலே,
சிறுதவறால் சூழ்பழியால் மிக்கொ ளிர்ந்தான்;

உறக்கற்பால் மேன்மையுறு தூதை நல்லாள்,
  உறுகணவற் சார்ந்துபுகழ் ஓங்கி நின்றாள்;
நறுங்கமலம் சேற்றுதித்தும் இறைவற் சாரும்
  நலனேபோல், வயந்தசேனை யும்வாழ் வுற்றாள். (285 : 56)

அறம் வீழ்வதில்லை; அநீதி வெல்வதில்லை என்பது கதை நீதி. தமக்கு நேர்ந்த பழியால் சாருதத்தர் புடமிட்ட பொன்னானார்; தூதையின் கற்பு, பெருமை பெற்றது; வசந்த சேனையின் உண்மைக் காதல் வெற்றி பெற்றது என்பன கதையின் அடிப்படை நிகழ்ச்சிகள்.

கவிஞர் விழைவு

இனிய காவியத்தை இயற்றியுள்ள கவிஞர் தம் விழைவையும் காவியத்தின் இறுதியில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ்வாழ்க! தமிழாட்சி மலர்க! தங்கத்
  தமிழ்மறவர் வீரம்மிகச் சிறப்புற் றோங்க!
கமழ்வாழ்வில் வளமனைத்தும் பெறுக; காதல்
  கற்பணியே மாதரிடம் பொலிக; இந்த
இமிழ்திரைசூழ் உலகமெலாம் தமிழர் பண்பு
  இனிதோங்கிப் பலர்புகழ ஒளிர்க; மூவா
அமிழ்தன்ன தமிழ்சுவைத்துப் பருகி, மக்கள்
  அமரரென நீடுழி வாழ்க! வாழ்க! (286 59)

தமிழ் சிறந்து, தமிழர் நாடு சிறந்து, மக்கள் பல்வளமும் பெருக்கிப் பயன் வாழ்வு வாழ்ந்து சிறக்கவேண்டும் எனக் கவிஞரோடு நாமும் சேர்ந்து வாழ்த்துவோம்.

வாழ்த்துரை

இக்காவியம் தமிழ்த்தாய்க்குக் கவிஞர் தந்துள்ள மாற்றறியாத பசும்'பொன்னூர்தி'யாய்த் திகழ்கிறது. இதைப் படைத்துள்ள கவிதைத் தச்சரை உளமார வாழ்த்துவதோடு, தொடர்ந்து பல்வேறுபட்ட 'மணியூர்திகளை'த் தமிழ்த்தாய்க்குத் தந்துகொண்டேயிருங்கள் எனவும் வேண்டிக்கொள்வோம்.

நூலாக்கம்	கவிஞர் நலங்கிள்ளி
வகைமை	காவியம்
வெளியீடு	தமிழ்மணி புத்தகப் பண்ணை, சென்னை. (1981)

4

கலித்தொகை ஓர் அகழாய்வு

நிலத்தோற்றம்

சூரியனிலிருந்து முதன்முதலில் பிரிந்து வீழ்ந்த ஒரு நெருப்புக் கோளமே உலகம் என்பது ஆராய்ச்சியாளர்கள் துணிபு. கீழே வீழ்ந்த அந் நெருப்புக்கோளம் நாளடைவில் குளிர்ந்து அதன் மேற்பகுதி கல்லாய் மாறியது. காலப்போக்கில் அக்கல் உடைந்து நொறுங்கிப் பொடியாகி மண் தோன்றியது. கல் தோன்றிய பின்னரே மண் தோன்றியது என்பதை, "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே" எனும் புறப்பொருள் வெண்பாமாலை அடியால் அறியலாம். கல்லும் மண்ணும் கலந்த இடங்களில் காடுகள் தோன்றி வளரலாயின. கற்களின்மேல் கொட்டிய மழைப் பெருக்கு, அருவிகளாய்க் கீழே வீழ்ந்து ஆறுகளாய்ப் பெருகி ஓடின. அவை, தாம் ஓடிய வழிகளிலிருந்த வயல்களைச் செழிக்கச் செய்து முற்கூறிய கோளப்பகுதி குளிர்ந்தபோது உண்டான பள்ளங்களில் (கடலில்) நிறைந்திருந்த நீரோடு சென்று கலந்தன.

நிலப்பாகுபாடு

முதலில் தோன்றிய மலை (கல்), அடுத்து அம் மலையைச் சூழ்ந்த மண் பகுதியிற் தோன்றிய காடு, மலையிலிருந்து பெருக்கெடுத்த ஆறுகளால் வளப்பம்பெற்ற வயல், ஆறு முடிவிற் சென்றடைந்த கடல் எனும் இயற்கைத் தன்மைகளைக் கொண்டே பண்டைத் தமிழர்கள் நிலப்பாகுபாடுகள் செய்தனர் போலும்!

மழை தவழும் மலைச்சாரலில் பல்வேறு பூக்கள் நிறைந்திருந்த போதிலும் அவற்றுள் தேன் மிகுந்த குறிஞ்சிப் பூவே சிறப்புற்றிருந்ததால் மலையும் மலைசார்ந்த இடங்களும் குறிஞ்சி எனப் பெயர்பெற்றன.

மலையும் காடும் மயங்கிய வெப்பம் மிக்க பரந்தவெளியில் பாலைமரங்கள் ஓங்கி வளர்ந்து நிறைந்திருந்தமையால் அப்பகுதி பாலைநிலம் என்ற பெயரைப் பெற்றது.

காடுகளில் செழித்துப் படர்ந்திருந்த முல்லைக் கொடிகள், தம் வெள்ளை மலர்கள் காட்டி, அங்கு வந்தோர்க்கு இன்ப மணம் ஊட்டியதால் காடும் காடு சார்ந்த இடங்களும் முல்லை எனச் சிறப்பிக்கப்பட்டன.

நெல்லாலும் கரும்பாலும் அணிபெற்ற வயல்களிடத்தே வேலை செய்தோர்க்கு மருதமர நிழல் களைப்பையோட்டி மகிழ்வை ஊட்டியதால் வயலும் வயல் சார்ந்த இடங்களும் மருதம் எனப் பெயர் பூண்டன.

கடலையடுத்துள்ள உப்பங்கழிகளில் குவளை, ஆம்பல் எனப் பல்வேறு மலர்கள் மலர்ந்திருந்த போதிலும், நெய்தல்மலர்த் தொகுதியானது பசிய இலைகளுக்குமேல் தலைதூக்கி நின்று மகளிரின் மையுண்ட கண்கள்போல் விளங்கி அக் கழியை அழகு செய்ததால் கடலும் கடல் சார்ந்த இடங்களும் நெய்தல் எனச் சிறப்பிக்கப்பட்டன.

இவ்வாறாக நிலங்களை இயற்கையமைப்புக்கேற்பப் பிரித்து, அவ்வப் பகுதியில் சிறந்து விளங்கிய ஒரு பொருளைக் கொண்டே அவ்வப் பகுதிகட்குப் பெயரிட்டுப் பாகுபாடுசெய்த பெருமை உலகில் வேறெவர்க்கும் கிடைக்காது தமிழர்கட்கு மட்டுமே கிடைத்த தனிப்பெரும் பெருமையாம்.

ஐவகை நிலம்

மலையும் காடும் வெப்பத்தால் தம் தன்மையிழந்து மயங்கிய பகுதியே பாலையாகிறது. எனவே, இதனைத் தனி நிலமாகக் கருதாது நிலங்கள் நானிலமாகவே கொள்ளப்படுகின்றன. குறிஞ்சியும் முல்லையும் மயங்கிய இடமே பாலையாகக் கொள்ளப்பட்டது என்னும் கருத்தை,

> வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்,
> தான்நலம் திருகத் தன்மையிற் குன்றி,
> முல்லையுங் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
> நல்இயல்(பு) இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
> பாலை என்பதோர் படிவங் கொள்ளுங்
> காலை......... (சிலப். காடுகாண். 52–56)

எனும் சிலப்பதிகார அடிகள் நன்கு வலியுறுத்துவனவாய் அமைகின்றன. வேனிற் காலக் கதிரவன் சுட்டெரித்தலால் இயற்கை தன்நிலை இழந்துள்ளது. முல்லை, குறிஞ்சி என்னும் இரு திணை நிலங்களும் தம் இயல்புகளிலிருந்து மாறுபட்டுப் பாலை நிலம் என்னும் தன்மையைக் கொண்டுள்ள காலம் இது என்பது இதன் பொருள்.

பண்டைய பெருமக்கள் நிலப் பாகுபாடுகளைச் சுட்டிய தோடமையாது அங்கு வாழ்ந்த மக்கள், பறவைகள், விலங்குகள், அவ்வப் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் செய்தொழில்கள், உணவு முதலியவற்றையும் கூறிப் போந்துள்ளனர்.

குறிஞ்சி

குறிஞ்சிநில மக்கள் முருகனைத் தெய்வமென வழிபட்டனர். அந்நிலத் தலைவர்கள் பொருப்பன், வெற்பன், சிலம்பன் என்றழைக்கப்பட்டனர். அங்கு வாழ்ந்த மக்கள் குறவர், குறத்தியர், கானவர் ஆவர். கிளியும் மயிலும் அங்குப் பறந்து திரிந்த பறவைகளிற் சிறந்தவை. புலி, கரடி, யானை, சிங்கம் முதலியன அந் நிலத்து விலங்குகள். குறிஞ்சிப் பூ, வேங்கைப் பூ, காந்தள் பூ என்பன அங்கிருந்த சிறந்த பூக்கள். சந்தனம், தேக்கு, அகில், அசோகு, மூங்கில் போன்ற மரங்கள் மலைகளில் நிறைந்திருந்தன. குன்று வாழ் மக்கள் மலை நெல்லரிசி, மூங்கிலரிசி, தினை முதலியவற்றைத் தம் உணவுப் பொருள்களாய்க் கொண்டனர். தினைப்புனம் காத்தல், மலைநெல் பயிரிடல், தேனழித்தல், கிழங்கு கல்லியெடுத்தல் என்பன குறிஞ்சிநில மக்கள் மேற்கொண்ட தொழில்கள். அருவிநீரில் ஆடித் திளைத்தும் சுனை நீரைச் சுவைத்து மகிழ்ந்தும் இன்புற்று வாழ்ந்தனர். குறிஞ்சி நில ஊர்கள் சிறுகுடி எனப்பட்டன.

பாலை

பாலை நில மக்களின் வழிபடு தெய்வம் துர்க்கை. இந்நிலத் தலைமக்கள் விடலை, காளை, மீளி எனவும் மற்றையோர் எயினர், எயிற்றியர், மறவர் மறத்தியர் எனவும் பெயர் பெற்றனர். அந் நிலத்துப் பறவைகள் புறா, பருந்து, எருவை, கழுகு; விலங்கு செந்நாய். அங்கிருந்த ஊர் குறும்பு என அழைக்கப்பட்டது. குராம், மராம் என்பன அந் நிலத்துப் பூக்களாம். பாலை, உழிஞை, ஓமை, இருப்பை முதலியன அந் நிலத்து மரங்களாம். பாலைநில மக்கள் போர் செய்யக் கூடியவர்கள்; அதனோடு வழியிற் செல்வோரைக் கொன்று அவர்களின் பொருள்களைச் சூறையாடுவர். வழியிற் செல்வோரிடத்தே பொருளில்லையாயினும், தலை வேறுபட்ட முண்டங்கள் குதித்துத் துள்ளுதலைக் காண்பதற்காகவே அவர்களின் தலைகளைச் சிற்சில வேளைகளில் இப் பாலை நில மக்கள் வெட்டுதலுமுண்டு. "கொள்ளும் பொருளிலராயினும், வம்பலர்த் துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வெளவலின் புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆறு" என்பர் பெருங்கடுங்கோ. வழியிலே வரக்கூடியவரிடம் தாம் கொள்ளையிடக் கூடிய

பொருள் ஏதும் இல்லையாயினும், தங்கள் அம்புபட்டுப் பதைப்பதைக் கண்டு மகிழ்வதற்காகவே தொடர்ந்து சென்று கொன்று வீழ்த்தும் கொடிய இயல்பினர்; அதனால் பறவையினங்கள்கூட நடுங்கி, அங்கு வருவதில்லாத தனிமையான வழியில் கொள்ளையடித்த பொருள்களைக் கொண்டே இங்கு வாழ்ந்தோர் தம் உணவுப் பொருள்களைப் பெற்று வந்தனர்.

முல்லை

நெடுமால் முல்லைநிலக் கடவுள். நிலத் தலைவர்கள் குறும்பொறை நாடன், தோன்றல் என்றழைக்கப்பட்டனர். மற்றையோர் இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர் ஆவர். முல்லைநிலப் பறவை காட்டுக்கோழி; மானும் முயலும் அந் நிலத்துக்குரிய விலங்குகள். முல்லைநில ஊர்கள் பாடி என்றழைக்கப்பட்டன. முல்லைப்பூ, குல்லைப் பூ, தோன்றிப் பூ, பிடவம் பூ என்பன அங்கு விளங்கிய பூக்கள். கொன்றை, காயா, குருந்தம் முதலிய மரங்கள் அந் நிலத்தை அணிசெய்தன. வரகு, சாமை, முதிரை முதலியவை அம் மக்களின் உணவுப் பொருள்களாயின. வரகு, சாமை விதைத்தல்; அவற்றிற்குக் களைகட்டல்; அவற்றை அரிதல் முதலியன முல்லைநில மக்களின் முக்கியத் தொழில்கள், கொன்றைக் குழலூதியும் கொல்லேறு தழுவியும் குரவைக் கூத்தாடியும் அங்கிருந்தோர் களித்திருந்தனர்.

மருதம்

மருதநிலக் கடவுள் இந்திரன். இந் நிலத் தலைவர்கள் ஊரன், மகிழ்நன் எனச் சிறப்பிக்கப்பட்டனர். மற்ற மக்கள் உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர் என்றழைக்கப்பட்டனர். அன்னம், நாரை, குருகு, வண்டானம், மகன்றில், கம்புள், தாரா ஆகிய புட்களின் ஒலி போர் செய்யுமிடத்தே தோன்றும் ஒலியை ஒப்ப மருதநிலத்தில் என்றும் கேட்ட வண்ணமிருக்கும். இதனை இளங்கோ அடிகள்,

> கம்புள் கோழியும், கனைகுரல் நாரையும்,
> செங்கால் அன்னமும், பைங்கால் கொக்கும்,
> கானக் கோழியும், நீர்நிறக் காக்கையும்,
> உள்ளும், ஊரலும், புள்ளும், புதாவும்,
> வெல்போர் வேந்தர் முனையிடம் போலப்,
> பல்வேறு குழூஉக்குரல் பரந்த ஓதையும் (சிலம்பு, நாடுகாண். 114–18)

என்று பாடுவார்.

நீர்நிலைதோறும் நீர்நாய்களும், எருமைகளும் காணப்பட்டன. வயற்புறத்தே எருதுகள் அசைபோட்டு நின்றன. தாமரை,

குவளை, கழுநீர் ஆகிய பூக்களால் மருத நிலம் அழகு பெற்றது. இங்கிருந்த ஊர்கள் பேரூர் என்றோ மூதூர் என்றோ அழைக்கப் பட்டன. காஞ்சி, வஞ்சி, மருத மரங்களின் நிழல்கள் உழவர்கட்குப் பேருதவியாய் அமைந்தன. உழவர்கள் செந்நெல்லைப் பயிரிட்டு அரிசியை உணவாய்க் கொண்டனர். ஆடவரும் பெண்டிரும் குளங்களில் மூழ்கியும் ஆறுகளிற் புது நீராடியும் பூரித்து மகிழ்ந்தனர்.

நெய்தல்

நெய்தல் நிலக் கடவுள் வருணன். சேர்ப்பன், புலம்பன் என்பன இந் நிலத் தலைவர்களின் சிறப்புப் பெயர்கள். நுளையர், நுளைச்சியர், பரதவர், பரத்தியர் என்போர் அங்கு வாழ்ந்த மற்றையோர். நெய்தல் நிலப் பறவை கடற் காகம்; விலங்கு சுறாமீன்; ஊர்களின் பெயர்கள் பாக்கம், பட்டினம்; நெய்தல்பூ, தாழம்பூ, முண்டகப் பூ, கடப்பம் பூ ஆகிய பூக்களும் கண்டல், புன்னை, ஞாழல் ஆகிய மரங்களும் நெய்தலுக்குரியவையாய்க் கருதப் பட்டன. நெய்தல் நில மக்கள் மீனையும் உப்பையும் விற்றுக் கிடைத்த பொருளைக்கொண்டு தம் உணவுப் பொருள்களைப் பெற்றனர். மீன் பிடித்து உலர்த்தல், உப்புண்டாக்கல், அவற்றை விற்றல் அவர்களின் தொழில்களாயின. மீன் வற்றலை உண்ணவரும் பறவைகளை ஓட்டியும் கடலிடத்தே ஆடியும் ஆங்கிருந்தோர் அகமிக மகிழ்ந்தனர்.

அகத்துறைப் பாக்கள்

தமிழ் இலக்கியங்கள் அகம், புறம் என இரு திறத்தன. இவற்றுள் அகத்துறைப் பாக்கள் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணைகளை அடிப்படையாய்க் கொண்டு பாடப்பட்டவை.

அகத்திணைப் பாடல்களில் முதல், கரு, உரி என்னும் முப்பகுதிகள் உண்டு. முதல் என்பது நிலத்தையும் பொழுதையும் குறிக்கும். ஐவகை நிலங்கள் மேலே கூறப்பட்டுள்ளன.

பெரும்பொழுது, சிறுபொழுது எனப் பொழுது இரு பிரிவாகும். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் அறுபருவ காலங்களும் பெரும்பொழுது எனப்படும். ஒரு நாளில் வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, இரவு என்பன சிறுபொழுதுகளாம்.

ஒவ்வொரு நிலத்திற்குமுள்ள தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, தொழில், யாழ், பறை என்பன அவ்வந் நிலத்திற்குரிய கருப் பொருள்களாம்.

உரிப் பொருள் என்பது காதல் ஒழுக்கம். புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சிக்கும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலைக்கும், (ஆற்றி) இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லைக்கும், ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்திற்கும், இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தலுக்குமுரிய உரிப் பொருள்களாம். முதற்பொருள், கருப்பொருள் ஆகியனவற்றைப் பின்புலமாய்க் கொண்டு அகத்துறைப் பாக்கள் உரிப்பொருளை விளக்கும் பெற்றியவாம்.

கலித்தொகை

கலித்தொகை சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' எனச் சான்றோரால் சிறப்பிக்கப்பட்ட பெருமை கொண்டது. ஐந்து புலவர்களால், ஒவ்வொருவர் ஒரு திணையாக ஐந்து திணை பற்றியும் தனித் தனியே கலிப்பாவினால் பாடியுள்ள பாடல்களின் தொகுப்பே கலித்தொகை. கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்றும் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற வரிசையில் ஒவ்வொரு திணையிலும் முறையே 35, 29, 35, 17, 33 பாடல்களும் ஆக மொத்தம் 150 பாடல்கள் உள்ளன. சேரமான் பெருங்கடுங்கோ பாலையையும், கபிலர் குறிஞ்சியையும், இளநாகனார் மருதத்தையும், சோழன் நல்லுருத்திரன் முல்லையையும், நல்லந்துவன் நெய்தலையும் பாடியுள்ளனர். ஐவருள் இருவர் அரசர்களாய் உள்ளனர். நெய்தலைப் பாடியுள்ள நல்லந்துவனாரே கலித்தொகைப் பாடல்களைத் தொகுத்தவராவர். இயன்ற பாவகையால் பெயர்பெற்றுள்ள இக் கலித்தொகையைத் திரு. ஆறுமுகனார் ஆய்ந்து ஏழு இயல்களில் இவ் வரிய நூலைத் தந்துள்ளார்.

முதல் இயல் திணை வைப்புமுறை பற்றி ஆய்கிறது. பிரிதலைக் கூறும் பாலைக் கலியில் நூல் தொடங்கியிருப்பதற்கான காரணங்களை நுணுகி ஆய்ந்து பாலைக் கலிப்பாக்கள் மற்றக் கலிப்பாக்களைவிடச் சுவையும் பயனும் நிரம்பியனவாய் வாழ்வியல் உண்மைகளையும் அறநெறி விளக்கங்களையும் கொண்டிருப்பதால் அவை முதலிடம் பெற்று வைப்பு முறையில் ஒரு புரட்சிக்கோலம் கொண்டிலங்குவதை இவ்வியலில் நன்கு விளக்கியுள்ளார்.

தலைவன் பொருளீட்டப் பிரிய நினைக்கிறான். தலைவி, "பொருளை எப்பொழுதும் தேடிக்கொள்ளமுடியும். ஒவ்வொரு வரும் ஒரு துண்டுத் துணியே உடுப்பவராக வறுமை யுற்றாலும் இளமையும் காம விருப்பமும் உளநாள்வரை, ஒருவரை ஒருவர் தம்முள் தழுவி ஒன்றிக் கலந்து வாழ்வதே வாழ்க்கையின் சிறப்பு. செல்வத்தை மீட்டுப் பெறலாம். ஆனால் சென்ற இளமை சென்றதே; எவராலும் மீட்டுத் தரமுடியாது" எனக் கூறி அவன் செல்ல இருப்பதைத் தடுக்கிறாள்.

........உளநாள்
ஒரோஒகை தம்முள் தழீஇ, ஒரோஒகை
ஒன்றன்கூ(று) ஆடை உடுப்பவரே ஆயினும்,
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை; அரிதரோ
சென்ற இளமை தரற்கு. (பாலைக்கலி, 17 : 8–11)

'சென்ற இளமை தரற்கு அரிது' என்ற தொடர் காதல் ஏக்கத்தால் ஏற்படும் அன்பின் பிழிவு.

பாலை நிலம்; கடுமையான வெயிலின் கொடுமை; மானின் ஓர் இணை. பெண்மான் வெயிலின் கொடுமை தாங்க முடியாது தவிக்கிறது. எங்குத் தேடியும் நிழல் தென்படவில்லை. ஆண் மான் தான் நின்று, அதனால் ஏற்படும் நிழலைப் பெண்மானுக்குக் கொடுத்துதவுகிறது.

இன்நிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்நிழலைக் கொடுத்தளிக்கும் கலை... (பாலைக்கலி, 10 : 16–17)

அன்பின் பெருக்கம் அஃறிணை உயிர்களிடத்தும் சிறந்திருப்பதைக் காட்டும் கலித்தொகை ஓவியம் இது.

இத்தகைய பல அன்பியல் நிகழ்ச்சிகளையும், அறவியல் கருத்துகளையும் பாலைக்கலியில் பார்க்க முடிகிறது.

அடுத்த இயலில் முதற் பொருளையும், கருப்பொருளையும் பற்றி விரிவாக ஆய்கிறார். நிலப் பாகுபாட்டுடன் பொழுதும் கருப்பொருள்களும் உரிய காதல் ஒழுக்கத்திற்குப் பொருத்தமுற இணைக்கப்பட்டிருப்பதைச் சிறப்புறப் புலப்படுத்தியுள்ளார். "மரம், கிளை, தளிர் ஆகியவற்றின் இயல்புகளை எடுத்தியம்பும் இடங்களில் அறநெறிகளும் உலகியல்களும் அறிவுறுத்தப் படுகின்றன" என ஆசிரியர் எடுத்தோதித் தக்க காட்டுகள் மூலம் அவற்றை விளக்கியிருக்கிறார். கலித்தொகை என்று நினைக்கும் போதே,

வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணும் இகந்துசெய்து இசைகெட்டான் இறுதிபோல்
வேரோடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவ ஆறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி அவன்நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம் (பாலைக்கலி, 10 : 1–7)

எனும் பாடல் எவர்க்குமே நினைவிலெழும். வெயிலால் காட்டு மரங்களெல்லாம் இலைகளுதிர்ந்து, வெம்பி, சிறிதும் நிழலின்றிப் பொலிவிழந்து நின்ற தோற்றத்தைப் பாலை பாடிய சேரமான் பெருங்கடுங்கோ இப் பாடலில் அழகுற விவரிக்கிறார். கொடிது கொடிது வறுமை கொடிது; அதனினும் கொடிது இளமையில் வறுமை என்பர். இளமையில் வறுமையால் உழன்றவன் வாடியிருப்பதுபோல, மரங்களின் கிளைகள் வதங்கித் தோற்ற மளிக்கின்றன. பிறர்க்குதவும் பெருந்தன்மையில்லானிடம் பொருளிருந்தாலும் அதனால் பயனில்லையாதல்போலக் காட்டில் மரங்களிலிருந்தும் நிழலில்லை. எவரிடமும் வரம்புமீறி வம்பு செய்பவன், தனக்கு மட்டுமன்றித் தன் புகழுக்கும் கேடு சூழ்ந்து கொள்வதுபோல, வெப்பத்தின் கொடுமையால் மரக்கிளைகள் மட்டுமல்லாது வேர்களும் வெம்பி நிற்கின்றன. இவ்வாறு பொலிவிழந்த மரங்கள் பல சேர்ந்த காடோ, கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில் மக்கள் எவ்வாறு பொலிவிழந்து தென்படுவரோ அத்தகைய சோர்ந்த தோற்றத்தைத் தந்தது என்பதே பாடலின் பொருள். இங்கு மரக்கிளை, நிழல், வேர் கொண்டு அறக் கருத்துகள் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நூலுள் வந்துள்ள பகுதிகளையெல்லாம் ஆசிரியர் இரண்டாம் இயலில் நமக்கு அழகுறத் தொகுத்துக் காட்டியுள்ளார்.

மூன்றாம் இயலில் காதல் வாழ்வைக் களவுக் காதல், கற்புக் காதல் எனும் இரு பிரிவுகளில் இன்பச் சுவை நனி சொட்டச் சொட்டத் தந்துள்ளார். தலைமகனும் தலைமகளும் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்கின்றனர். தலைமகன் தலைமகளைக் காணுதல் தொடங்கி மணந்து மனையில் வாழும்வரை நிகழும் செயல்கள் களவுக்காதலெனவும், திருமணத்தின் பின் நிகழும் அவர்களுடைய இனிய இல்லற வாழ்க்கை கற்புக்காதலெனவும் கூறப்படும். களவுக்காதலின் செறிவையும் அதுவே அறமாகின்ற பெற்றியையும், பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, முல்லைக்கலி ஆகிய மூன்றும் கவினுற விளக்குவதை நூலில் ஆசிரியர் திறம்பட எடுத்து மொழிகிறார்.[1]

1. பக். 84-85

தலைமகனும் தலைமகளும் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்கின்றனர்; உள்ளத்தால் ஒன்றுபடுகின்றனர்; நாள்தோறும் கண்டு, களவொழுக்கம் பூண்டு, காதற்பயிரை வளர்க்கின்றனர். தலைமகனை உயிராய்க் கொண்டு வாழ்பவள் தலைமகள். தலைமகனைக் காணுங்கால் நீர்பெற்ற நிலம்போலக் கவின் பெறுவாள்; அவன் பிரிந்தாலோ எல் வளை உகும்; கண் பனி கலுழும். மேனி வாடும்.[1]

விரைவில் தலைமகளை மணந்துகொள்ளத் தோழி தலைவனைத் தூண்டுவாள். தலைமகன் வரைவு வேண்டி வந்துழித் தலைவியின் தமர் மறுத்தால் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பாள்; அவள் நற்றாய் தன் ஐயர் முதலியோர்க்கு அறத்தொடு நிற்ப, அவரும் ஒருவாற்றான் உடன்படுவதைக் குறிஞ்சிக்கலி கூறியுள்ளதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.[2]

தலைமகன் வரைவு விரும்பின நாளிலே தலைமகளின் சுற்றத்தார் தலைமகளைக் கொடுக்க இசைவதுமுண்டு; இங்குச் சுற்றத்தாரே களவு, கற்பாவதற்குத் துணை நிற்கின்றனர்.[3]

திருமணத்தின் பின் உள்ள கற்பு வாழ்வில் தலைமகன் பொருள் தேடப் பிரிவான். தலைவி பிரிவுக்கு உடன்படாள்; தலைவனோ பொருளின் இன்றியமையாமையைக் கூறி, கார் காலத்தில் திரும்பிவிடுவதாய் உறுதி கூறிப் பிரிவான். அவன் பிரிவை ஆற்றியிருக்கும் தலைவி உரிய காலத்தே அவன் திரும்பவில்லையாயின் பெரிதும் வருந்திப் புலம்புவாள்; அவன் வந்து சேர்ந்ததும் கூடி மகிழ்வாள். தலைவன் பரத்தையரை நாடிப் பிரிதலும் உண்டு; அப்பரத்தையரினின்றும் நீங்கி வரும் தலைவனிடம் தலைவி ஊடல் கொள்வாள். தலைவனைக் கண்டதும் அவன் சிறு மகவு செய்யும் பாசச் செயல்களால் தலைவியின் புலவி மிகும். ஆயினும், அம் மகவு தந்தையிடம் அல்லது தந்தை மகவிடம் படர்ந்து இணையும்போது புலவி தணிவாள். தலைமகனின் புறத்தொழுக்கத்தைப் பலவாறு கண்டித்தபின் தலைமகள் தலைமகனை ஏற்றுக்கொள்வாள்.[4]

இவ் வகத்துறைச் செயல்கள்பற்றிக் கலித்தொகை கூறியுள்ள செய்திகளை இம் மூன்றாம் இயல் தெளிவுபடுத்துகிறது.

---

1. பக். 91
2. பக். 85
3. பக். 87
4. பக். 105

அன்பின் ஐந்திணையன்றிக் கைக்கிளை, பெருந்திணை பற்றிக் கலித்தொகையுள் இடம்பெற்றுள்ள பாடல்களும் சுட்டப்பட்டுள்ளன.[1]

கலித்தொகைச் சமுதாயம்

அடுத்து, கலித்தொகையில் காணப்படும் அகத்துறைச் செய்திகள் மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்து பண்டைத் தமிழர் நாகரிகத்தின் செம்மையினையும் சமுதாயப் பழக்க வழக்கங்களையும் அறிவிப்பதை நான்காம் இயலில் நயம்பட ஆசிரியர் எடுத்து மொழிகிறார். ஆட்சி முறைமை, மக்கள் வாழ்க்கை முறை, பெண்ணின் பெருமை, ஆடை அணிகலன்கள், திருமணம் நிகழ்முறை, விருந்தோம்பல், விளையாட்டு, பொழுதுபோக்குகள், விழாக்கள், மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், போர்க்கருவிகள், கலைகள் ஆகியவைபற்றிக் கலித்தொகையில் சிதறிக் கிடக்கும் கருத்து முத்துகளை இந்நூலுள் எடுத்துக் கோத்து அழகிய மாலையாக்கித் தமிழன்னைக்கு ஆசிரியர் அணி சேர்த்துள்ளார்.

பாண்டியனின் தலைநகராய மதுரை, கலித்தொகையில் பேசப்பட்டுள்ளது.[2] மதுரைமாநகர் மக்கள், தங்கள் செவியெனும் வயலில், பொல்லாச் சொற்களாகிய களைகளைக் களைந்து, முதுமொழியெனும் நீர் பாய்ச்சி, புலவர்கள் தம் நா என்னும் கலப்பையால் உழவுசெய்து விளைவிக்கும், புதிய புதிய இலக்கியமாம் உணவை உண்ணுபவர்களாய் விளங்கினர் என்கிறார் மருதன் இளநாகனார். இக் கருத்தை விளக்கும்,

........வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர (மருதக்கலி, 3 : 2–5)

எனும் பாடற் பகுதி கொண்டு மதுரை; சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த வரலாற்றை ஆசிரியர் நம் நினைவுக்குக் கொண்டு வருகிறார்.[3]

மேலும், இவ்வியலில் ஆடவரைப் போலவே பண்டைத் தமிழ் மகளிரும் உரிமை (சுதந்திர) வாழ்வு நடத்தினர் என்பதைத் தக்க கலித்தொகைச் சான்றுகளுடன் நிறுவியுள்ளனர்.[4]

1. பக். 108-15
2. பக். 121
3. பக். 122
4. பக். 138

குறமகளிர் பாறை உரலிலும் சந்தன உரலிலும் யானை மருப்பினாலான உலக்கையால் தினை, மூங்கில் நெல், ஐவன நெல் ஆகியவற்றைக் குற்றும்போது வள்ளைப் பாட்டுப் பாடுவர் என்பதை ஆசிரியர்,

......ஏனலுள் தாழ்குரல் உரீஇ
முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின்
வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சி (குறிஞ்சிக்கலி, 4 : 3–5)

எனும் கலித்தொகைப் பாடல்வழி விளக்குகிறார்.[1] இதையே இளங்கோவடிகள்,

சந்துரற் பெய்து தகைசால் அணிமுத்தம்
வஞ்சி மகளிர் குறுவரே வான்கோட்டால் (சிலப். வாழ்த்து., 30)

என்று கூறியிருப்பதையும் ஈங்குக் கருதலாம்.

ஒளிதரும் முத்துகளை விளம்பிலே பதித்துப் பவளத்தால் செய்யப்பட்ட சக்கரங்களைக் கொண்ட வட்டப் பலகையின் மீதுள்ள யானைப் பொம்மைகளைச் சிறுவர்கள் பூங்கயிற்றினால் பையப் பைய இழுத்து மகிழ்ந்தனர்[2] எனும் செய்திகொண்டு அக்கால வள வாழ்க்கையை நாம் நன்குணர முடிகிறது.

ஏறு தழுவுதல்

வேறு சங்க நூல்களில் காணப் பெறாத ஏறு தழுவுதலைக் கலித்தொகை மட்டுமே குறிப்பிடுவதால்[3] அதனை ஒரு தனி இயலாய்க் (ஐந்தாவது இயல்) கொண்டு ஆறுமுகனார் ஆய்வு செய்துள்ளார். முல்லைக் கலியில் 17 பாடல்கள் உள்ளன. அவற்றுள் முதல் ஏழு பாடல்கள் ஏறு தழுவுதலைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.

"ஏறு தழுவியவர்க்கே என் மகள் உரியவள்; அவ்வாறு வெற்றி பெறாதவர் என் மகளின் அழகு தவழும் மேனியைத் தீண்டத்தக்கவர் அல்லர்" என முல்லை நில ஆயர்கள் தெரிவிப்பர்.

---

1. பக். 139
2. திகழ்ஒளி முத்துஅங்கு அரும்பாகத் தைஇப்
பவழம் புனைந்த பருதி சுமப்பக்
கவழம் அறியாநின் கைபுனை வேழம்
புரிபுனை பூங்கயிற்றில் பைபய வாங்கி
அரிபுனை புட்டிலின் ஆங்கண்ஈர்த்து, ஈங்கே
வருக! (மருதக்கலி, 15 4-9)
3. பக். 141

ஏறு தழுவ அஞ்சுபவனை ஆயமகள் மறுமையிலும் தழுவ மாட்டாள்.

> கொல்ஏற்றுக் கோ(டு)அஞ்சு வானை, மறுமையும்
> புல்லாளே ஆய மகள்![1] (முல்லைக்கலி, 3 : 63–64)

தெருவில் மோர் விற்கச் செல்லும்போது இவள் கேள்வன் 'கொல்லேறு கொண்டான்' என்று ஊரார் சொல்வதைக் கேட்பதையே ஆயமகள் பெருமையாய்க் கருதினாள்.

> கொல்லேறு கொண்டான் இவள்கேள்வன் என்று,ஊரார்
> சொல்லும்சொல் கேளா, அளைமாறி யாம்வரும்
> செல்வம்,எம் கேள்வன் தருமோ? (முல்லைக்கலி, 6 : 43–45)

என எதிர்பார்க்கிறாள் ஆய மங்கை.

விழுப்புண்பட்ட வீரர்களின் வெற்றியை விரும்பும் வீர மகளிராகவே ஆய்ச்சியர் இருந்தனர். கொலையேறு சாடிய ஆயமகளின் புண்ணைத் தங்கள் முலைவேதின் ஒற்றி முயங்கிப் பொதியும் இயல்பினர் அவர். ஆதலின் கொல்லேறு குத்திப் புண்பட்ட வீரர் குருதி தம் குவவுத் தோளில் படவேண்டும் என்று அவர் விரும்பினர். தாம் தயிர் கடையத் தாஅய புள்ளிமேல் குருதி மயங்குறப் புல்லல் தோளுக்கு அணியென்று எண்ணியது அவர்களின் வீர நெஞ்சம்.[2]

ஏறு தழுவுதலுக்கான பறை அறிவிக்கப்படுகிறது. அருகே அமைக்கப்பட்ட பரண் மீதிருந்து ஆய்ச்சியர் ஏறு தழுவுதலைக் காணக் குழுமுவர். கன்னிப்பெண்கள் தத்தம் காதலரின் ஆற்றலை ஆங்கிருந்து காதல் கனியக் கண்டிருப்பர்.

தொழுவத்துள் வெள்ளை, காரி, இளஞ்சிவப்பு, நெற்றி வெள்ளை, நெற்றிக்காரி, செம்புள்ளிகளையுடைய வெள்ளை, கழுத்துக் கபிலை, வெள்ளைக் கால்களையுடைய செவலை, பல்பொறிப் புகர்நிறம் பெற்ற கொம்பு சீவப்பட்ட ஏறுகள், ஊழித் தீ, கணிச்சி இவைபோலச் சுழன்று திரிகின்றன.[3] கண்ணி சூடிய ஆய இளைஞர்கள் அவற்றை அடக்க வந்தனர். ஏறுகள் பாய,

---

1. ஏறு–காளை; கோடு–கொம்பு; புல்லாள்–தழுவமாட்டாள்
2. முலைவேதின் ஒற்றி முயங்கிப் பொதிவேம்,
   கொலைஏறு சாடிய புண்ணை;எம் கேளே!
   பல்லூழ் தயிர்கடையத் தாஅய புள்ளிமேல்
   கொல்லேறு கொண்டான் குறுதி மயக்குறப்
   புல்லல்எம் தோளிற்(கு) அணியோ; எம்கேளே!
   (முல்லைக்கலி, 6 : 35–39)
3. பக். 67

வீரர்களும் பாய எங்கும் ஒரே புழுதி. புலிக் கூட்டமும் களிற்றினமும் மாறிமாறித் தம்முள் புரண்டு போரிடுவது போல ஏறுகளும் பொதுவர்களும் போரிடுகின்றனர். கொம்பு மார்பிலே படுதலை மார்பு கொடுத்து ஏற்றுக்கொள்பவர் சிலர்; கொம்பின்மேல் பாய்ந்து ஏறுபவர் சிலர்; இவ்வாறாகப் பொதுவர் பலரும் அங்கே விளங்குகின்றனர். காதலர் ஏற்றின் கழுத்தை இறுகத் தழுவி அவற்றின் திமிலிடையே தோன்றும் காட்சியைக் கண்டு காதலியர் களிப்புக் கடலில் மூழ்குகின்றனர்.

அடக்கப்பட்ட ஏறுகள் மேய்ச்சலுக்குச் செல்ல, அவற்றை வெற்றி கொண்ட பொதுவரனைவரும் தொழுவை விட்டு வெளியேறியதும், காதல் மகளிரும் மைந்தரும் மன்றத்தே சென்று ஒருவரையொருவர் தழுவிக் குரவைக் கூத்தாடிக் கொல்லேற்றுக் கொம்பு வடுச் செய்த பொதுவரின் மார்புகளைப் போற்றிப் பாடுவர். ஏறு தழுவிக் காதல் கை கூடல் பெறுகிறான் இளைஞன்; ஏறு தழுவிய வீரமகனைக் கணவனாக அடைகிறாள் இளநங்கை. இத்தகைய வீர ஒழுகலாற்றின் தனிச் சிறப்புகளை ஆசிரியர் இவ்வியலில் திறம்பட விவரிக்கிறார்.

அறக் கருவூலம்

கலித்தொகை கூறும் அறக் கருத்துகள் ஆறாம் இயலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

'ஆன்றோர் தம்புகழ் கேட்டுத் தலைசாய்ப்பர்.'
'சிறியவன் செல்வம் சேர்ந்தவரைப் பாதுகாவாது.'
'கிளையழிய வாழ்பவன் ஆக்கம் பொலிவுபெறாது.'
'பொருளில்லான் இளமையும் அறஞ்சாரான் மூப்பும் பொலிவழியும்.'
'வேந்தன் செம்மையால் மாரி சுரக்கும்.'
'வளம்பட வாழ்தலும், கேளிரைத் தாங்குதலும்,
இரந்தோர்க்கு இல்லையென்னாது ஈதலும், உயிரினும் மேலானதாம்.'
'பொருளில்லார்க்கு ஒழுக்கம் மலர்ச்சி காணாது.'
'காமம் பெரிதாகின்றபோது நாண் நிறுத்தல் இயலாது.'
'கற்புடைய மகளிரின் முயற்சிகட்கு அறம் துணையாகும்.'
'வளியினும் வரைநில்லாதது வாழும்நாள்.'
'சென்ற இளமை தரற்கு அரிது.'
'மன்னா உலகத்து மன்னுவது புகழ்.'

இதுபோன்று கலித்தொகையில் இடம்பெற்றுள்ள நூற்றுக் கணக்கான அறக்கருத்துகளை நாம் அறிந்து பயன்பெறுகிறோம்.

ஆசிரியர் அரிய அறக் கருத்துகளைச் சுருங்கிய, தெளிந்த, செறிவான சொற்றொடர்களில் கற்போர் இதயங்களைக் களிப்பிலாழ்த்திச் சிந்தனையைத் தூண்டும் வகையில் தந்திருப்பது பாராட்டுக்குரியது.

'பொய்க்கரி போகன்மின்' என்பார் இளங்கோவடிகள். பொய்க் கரி (சாட்சி) புகல்வது பாவங்களிலெல்லாம் பெரும்பாவம் என்பதைக் கலித்தொகை பெரிதும் வலியுறுத்துகிறது. பொய்ச்சாட்சி சொன்னவன் ஒரு மரத்தினடியில் நிற்பானே யானால், அவனுடைய அப் பாவம் தாக்கி, அம் மரமே பட்டுப்போய் விடுமாம்.

கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி

எனும் இக் கலித்தொகைப் பாடலடி பொய்ச்சாட்சி சொல்வதன் கொடுமையைப் புலப்படுத்துகிறது. இத்தகைய அறக்கருத்துகளின் கருவூலமாய்க் கலித்தொகை திகழ்வதை நூலுள் இவ்வியலைப் படிக்கும்போது தெற்றென உணர்கிறோம்.

உவமைக் களஞ்சியம்

நூலின் ஏழாவது இயலில் கலித்தொகை உவமைகளை அறிந்து மகிழ்கிறோம். கலித்தொகையில் மொத்தம் உள்ள உவமைகள் 641 எனச் சுட்டி அவற்றைக் கருத்துணர் உவமைகள், புலனுணர் உவமைகள் என இரு பிரிவாக்கிக் கலித்தொகையில் புலனுணர் உவமைகளே மிகுதியாய் உள்ளன என்பதை அருமையாய் நிலைநாட்டியுள்ளார், ஆசிரியர். புலனுணர் உவமைகளையும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புலன்களுக்குரியவற்றைத் தனித்தனியே பகுத்துப்பார்த்து ஒளி (காட்சி) பற்றிய உவமைகளே மிகுதியெனக் காட்டியுள்ளதோடு அக் காட்சி உவமைகளையும் வண்ணம், வடிவு என இருகூறாக்கி அவற்றுள் வடிவுபற்றிய உவமைகளே மிகுதி என்னும் முடிவுக்கு வந்துள்ளார். அனைத்து உவமைகளையும் தொகுத்து இந்த முடிவுக்கு வந்துள்ள அவருடைய ஆய்வுழைப்பு மதித்தற்குரியது.

தலைவனுடன் உடன்போக்குச் சென்றுவிட்ட தன் மகளைத் தேடிச் சென்ற செவிலித்தாய் தன் எதிர்ப்பட்ட முனிவர்களிடம், "என் மகளும் அவள் விரும்பிய தலைவனும் இந்த வழியில் செல்லக் கண்டீர்களா?" எனக் கேட்டாள். அதற்கு, அவ்வந்தணர்கள், "அம்மையே! சந்தனம் மலையிலே விளைகிறது. அதனால் மலை பயன் பெறுவதுண்டா? இல்லை. அதனைப் பூசிக் கொள்பவர்கட்கே குளிர்ச்சியையும் மகிழ்ச்சியையும் தருகிறது.

முத்து கடலிலே பிறக்கிறது; ஆயினும் அதனைக் கோத்து அணிபவர்க்கே அழகையும் சிறப்பையும் தருகிறது. யாழிலே நரம்பு இருக்கிறது; என்றாலும் அந் நரம்பினை மீட்டுபவர்க்கே இனிய இசையைத் தந்து இன்பமூட்டுகிறது. அதுபோன்றே மகள் நும் வீட்டில் பிறந்திருந்தாலும் அவளுக்குரிய கணவனோடு இணையும் போதுதான் அவள் வாழ்வே சிறப்பெய்துகிறது. நும் மகள் அறவழியே சென்றுள்ளாள்; கவலற்க" என்று கூறினர்.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்குஅவைதாம் என்செய்யும்?....

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்குஅவைதாம் என்செய்யும்?.....

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்குஅவைதாம் என்செய்யும்?.....

..நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே!... (பாலைக்கலி, பாடல் 8)

சந்தனம், முத்து, யாழ் இவற்றைக் கொண்டு மகளிரின் தன்மையைப் புலப்படுத்தும் இந்த உவமைகள், சந்த்னத்திலும் மணமிக்கவை; முத்தினும் அழகியவை; யாழிசையிலும் சுவை மிக்கவை. இத்தகு அரிய உவமைகளையெல்லாம் இந் நூலுள் ஏழாம் இயல் நமக்குத் தொகுத்துத் தருகிறது.

தன் முடிவு

இஃதோர் ஆய்வுநூல் ஆதலின் தொடக்கத்தில் இந்நூலுள் நுவலப்படும் பொருள் குறித்த முன்னுரையும், இறுதியில் ஆய்வின் பயனாகக் கண்டறிந்தவற்றைத் தொகுத்துரைக்கும் முடிவுரையும் அமைந்து நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

தருமணல் தாழப்பெய்து, இல்பூவல் ஊட்டி
எருமைப் பெடையோடு, எமர்ஈங்கு அயரும்
பெருமணம்.... (முல்லைக்கலி, 14 : 12–14)

ஆற்று மணலைக் கீழேகொட்டி, வீட்டுக்குச் செம்மண் பூசி, பெட்டை எருமையோடு திருமணம் செய்யப்படும். அதாவது முல்லை நிலத்தில் எருமைப் பெடையின் கொம்பினை நட்டுத் திருமணம் செய்யும் வழக்கம் இருந்தது.

வலிதில் மகளிரைப் புணரும் இராக்கத மணத்திற்கு அறநூல் வழக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

தெருவின்கண் காரணம்இன்றிக் கலங்குவார்க் கண்டு,நீ
வாரண வாசிப் பதம்பெயர்த்தல், ஏதில,
நீநின்மேல் கொள்வது எவன்?.... ((குறிஞ்சிக்கலி, 24 : 12–14

தலைவன் தலைவிமேல் காதல் கொண்டு உருகி நிற்கிறான் என்கிறாள் தோழி. தலைவியோ, 'ஏனடீ! காரணமில்லாமல் தெருவில் பலர் கலங்கி நிற்பார்கள். அவரைக்கண்டு அவர் துயரை நீ ஏன் தலையில் போட்டுக் கொள்கிறாய்' என்கிறாள். பிறர் வருத்தம் தம் வருத்தமாய்க் கொண்டு சொல்லுதலை வாரணவாசி என்னும் ஊரிலுள்ளார் சொல் என்றாள். (வாரணவாசி - காசி; பதம் - சொல்). "பிறராகத் தன்னைப் பாவித்து அவர்க்குரியன பெறுகின்ற நிலை, 'வாரணவாசிப் பதம்' எனப்படுகிறது. இறந்தார்க்கு இப்படி காசியில் அளிக்கப்படுவதால் இஃது இப் பெயர்பெற்றது போலும்" என்பர். 'வாரணவாசிப் பதம்' மக்கள் உரையாடலில் உவமை காட்டப்பெறுகிறது.

ஒரு தாய் தன் மகனைப் பாலுண்ண அழைக்கிறாள்.

"பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய ஆண்ஏற்று அவிர்பூண்
சூடின....."

மகனே! உனக்காக வைத்த பால் இருக்கிறது. உண்ண வாடா கண்ணே" என உளங் குளிர்ந்தவளாய் அழைக்கிறாள்.

"மழை பெய்த நிலத்திலே காணப்படும் தம்பலப் பூச்சி போன்ற கருஞ்சிவப்பு நிறமுடைய பவளத்தால் செய்த தகட்டிலே காளை வடிவ இலச்சினையிட்ட அணியினைக் கழுத்திலே அணிந்துள்ள மகனே! பாலுண்ண வா" என அழைக்கிறாள். (பெய்புலம் - மழை பெய்த நிலம்; மூதாய் - இந்திர கோப (தாம்பலப்) பூச்சி; புகர்நிறம் - கருஞ்சிவப்பு நிறம்; துகிர் - பவளம்; மைஅற - குற்றம் நீங்க; ஆனேற்று அவிர் பூண் (ஆன் + ஏற்று + அவிர் + பூண்) - இறைவன் ஊர்த்தியாகிய காளை வடிவமுடைய ஒளிவீசுகின்ற அணிகலன்.)

அக்காலத்தில் பவளத்தால் செய்யப்பெற்ற காளை வடிவமுடைய அணிகலன் குழந்தை கழுத்தில் அணியப்பெற்றது. 'ஆனேற்று அவிர்பூண்' எனப்பட்டது.

இச் செய்திகள் யாவும் கலித்தொகையில் மட்டுமே காணப்படுகின்றன [1] என ஆசிரியர் உரைப்பது அவருடைய ஆய்வாழத்தைப் புலப்படுத்தி மதிப்பேற்படுத்துகிறது.

1. பக். 230

வாழ்த்து

ஆசிரியர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட நூல் 'கற்றறிந்தார் ஏத்தும்' என்னும் அடைமொழியைப் பெற்றுள்ளது போலவே இந்த ஆய்வு நூலும் 'கற்றறிந்தார் ஏத்தும்' சிறப்பைப் பெற்றுத் திகழ்கிறது.

இலக்கியத்தை நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள் இதன் சுவையை நன்கு துய்ப்பர். தொடக்க நிலையிலுள்ளவர்கள் இந்நூலுளுள்ள செய்திகளை முற்றிலுமாய் அறிந்து சுவைக்க வேண்டுமென்பதற்காக இந்நூலுள் கூறப்பட்டுள்ள கருத்துகளுக்கு அறிமுகம்போல இந்த அணிந்துரையை வரைந்துள்ளேன். நூலாசிரியர் இத் தன்மையதான இன்னும் பல ஆய்வு நூல்களை வெளியிட்டுப் புகழ்பெற்றுச் சிறக்க வேண்டுமென உளமார விழைந்து வாழ்த்துகிறேன்.

நூல்ஆக்கம்	முனைவர் நா. ஆறுமுகம்
வகைமை	இலக்கிய ஆய்வு
வெளியீடு	கன்னி நிலையம், ஈரோடு. (1985)

5

தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள்

தமிழ்த் தொண்டர் புராணம்

பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவு தொட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்து, வாழ்ந்து, தமிழ் வளர்த்த நல்லறிஞர் நூற்றுவர் பற்றிய வரலாறுகளையும் தொண்டுகளையும் திரு.குன்றக்குடி பெரியபெருமாள் ஊனுருக, உளமுருக இந் நூலுள் எழுதியிருக்கிறார். நூற்றுவரில் இருவர் மட்டுமே 18ஆம் நூற்றாண்டில் பிறந்தவர். ஏனையோர் அனைவரும் 1800க்குப் பிறகு 1900 ஆம் ஆண்டு முடிய உள்ள கால எல்லையில் பிறந்தவர். எனவே இந்நூலை 19ஆம் நூற்றாண்டில் பிறந்து தமிழ் வளர்த்த நல்லறிஞர்களின் வரலாற்றுக் களஞ்சியம் எனலாம். இந் நூற்றாண்டிலே பிறந்து தமிழ்த் தொண்டுசெய்தோர் இன்னும் பலர் உளர்; என்றாலும் நூறு என்னும் எண்ணிக்கை கருதி, முதன்மையாகச் சுட்டிக் காட்டும் நிலையில் உள்ளவர்களை மட்டும் பெரியபெருமாள் எடுத்துக் கொண்டுள்ளார். சேக்கிழார் அறுபத்து மூன்று நாயன்மார்பற்றி எழுதிய வரலாறு 'திருத்தொண்டர் புராணம்' என அழைக்கப்பெற்றது. பெரிய பெருமாள் எழுதியுள்ள இந்நூலை, 'தமிழ்த் தொண்டர் புராணம்' எனப் பெருமையுடன் குறிப்பிடலாம்.

தமிழுக்குத் தொண்டுசெய்தோர் சாவதில்லை

நூலுள் உள்ள நூற்றுவரில் 6 போ மிக இளைய வயதிலேயே -40 அகவைக்கு முன்னரேயே மறைந்திருக்கின்றனர்.

காவடிச் சிந்து எனும் புத்திலக்கியம் படைத்த சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் 25 வயதே வாழ்ந்திருக்கிறார்.

பிறவிக் குருடராயிருந்தும், தம் முதுகில் எழுதச் சொல்லித் தமிழ் கற்றுக் கவிச்சிங்கமாய் விளங்கிய பழநி மாம்பழக் கவிராயர் வாழ்ந்த ஆண்டுகள் 29 மட்டுமே.

'முத்தமிழ்ப் புலவர்களைக் காணாத நாள் யான் பிறவாத நாளே' எனப் புலவர்களைப் போற்றி வாழ்ந்த முகவை

பொன்னுச்சாமித் தேவரும், 'திராவிட சாஸ்திரி' எனத் தமிழறிஞர்களால் பெருமையுடன் அழைக்கப்பெற்ற வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரும் 33 ஆண்டுகளே உயிரோடிருந்திருக் கின்றனர்.

திரு.வி.க.வின் ஆசிரியப் பெருந்தகையும், தமிழில் முதன் முதலில் பொருத்தமும் திருத்தமும் கொண்டு பிழைகளகற்றித் தமிழ்ப் பேரகராதியை வெளியிட்டவருமான நா. கதிரைவேற் பிள்ளை வாழ்ந்த ஆண்டுகள் 36 மட்டுமே.

தேசியக் கவிஞராய்ப் புகழ்பெற்றுத் தமிழ்க் கவிதையுலகில் திருப்புமுனையை ஏற்படுத்திய எழுச்சிக் கவிஞர் பாரதியார் 39 ஆண்டுகளே வாழ்ந்திருந்தார்.

90 வயதுக்கு மேற்பட்டு நூறாண்டு வாழ்ந்தவர்கள் என்று சொல்லத்தக்க நிலையில் 5 பேர் வாழ்ந்திருக்கின்றனர்.

'தமிழ் நாடகத் தந்தை' எனப் போற்றப்படும் பம்மல் சம்பந்த முதலியாரும், பேச்சுக் கலைக்கு இலக்கணம் வகுத்த சைவத் துறவி ஞானியாரடிகளும் 91 ஆண்டுகள் வாழ்ந்துள்ளனர்.

அரசியல் மூதறிஞராய் விளங்கி அருந்தமிழ் நூல்கள் பல இயற்றிய இராஜாஜி 94 வயதும்,

அறிவியலை அருந்தமிழில் தந்த அறிஞர் பெ.ந. அப்புசாமி 95 வயதும் வாழ்ந்து தொண்டாற்றியுள்ளனர்!

பிரெஞ்சு நூல்களைத் தமிழில் பெயர்த்தவரும், பல்கலை வல்லுநரும், துறவியுமான சுத்தானந்த பாரதியார் 99 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார்.

நூற்றுவரில்,

41 முதல் 50 வயது வரை 5 பேரும்;

51 இலிருந்து 60 வயது வரை 16 பேரும்;

61 முதல் 70 வயது வரை 22 பேரும்;

71 இலிருந்து 80 வயது வரை 26 பேரும்;

81 முதல் 90 வயதுவரை 20 பேரும்;

91 வயதுக்குமேல் 5 பேரும் வாழ்ந்திருக்கின்றனர்.

தமிழுக்குத் தொண்டு செய்வோர் என்றும் இறவாப் புகழ் பெறுவர் எனும் வகையில், 'தமிழுக்குத் தொண்டு செய்தோர் சாவதில்லை' எனப் பாடினார், பாவேந்தர் பாரதிதாசன். மக்களின் சராசரி ஆயுள்காலம் 30க்கும் குறைவாக இருந்த காலச் சூழலில்

தமிழ் வளர்த்த நூற்றுவருள் 73 பேர் அறுபது வயதுக்கு மேல் வாழ்ந்துள்ளனர். அயராதுழைத்தும் இன்னல் பல ஏற்றும் தமிழ்ப் பணிபுரிந்தவர்களை, தமிழ் இன்பம் நீண்டநாள் வாழவைத் திருக்கிறது எனலாம். தமிழையே அமிழ்தமாய்க் கொண்டதால் அவர்கள் தழைத்த வாழ்வு பெற்றிருக்கின்றனர்.

இறவாப் புகழுடைய இனிய பணிகள்

இத் தமிழ்ப் பெரியார்கள் இறவாத புகழுடைய பல தமிழ்த் தொண்டுகள் செய்திருப்பினும் ஒவ்வொருவரையும் நினைத்த அளவிலேயே முன் நிற்கும் சிறப்புப் பணி ஒவ்வொன்றை ஆற்றியுள்ளனர்.

பாவலர் பாடுவார் முத்தப்பர் சிற்றிலக்கிய வகையில், 'திருமுக விலாசம்' எனும் புதுவடிவைத் தந்தார்.

வண்ணங்கள் பல பாடிப் புகழ் பெற்றவர், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்.

ஐம்பெருங்காப்பியங்களைப் போல, 'பஞ்சகம்' என்னும் நூலை இயற்றிப் பெருமை பெற்றவர், ஆசுகவியாக விளங்கிய சிந்நயச் செட்டியார்.

'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எழுதியவர், டாக்டர் இராபர்ட் கால்டுவெல்.

'மொழிநூல்' வெளியிட்ட முதன்மைச் சிறப்பிற்குரியவர், மாகறல் கார்த்திகேய முதலியார்.

சங்க நூல்கள் அனைத்தையும் எல்லாரும் அறியும் முறையில் உரைநடையில் ஆக்கித் தந்தவர், ந.சி.கந்தையா பிள்ளை.

தமிழில் முதல் புதினம் எழுதியவர், மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

வரலாற்றுப் புதினங்கள் என்றதும் நம் கண்முன் தோன்றுபவர், பேனா மன்னர் கல்கி.

பதிப்புத் துறையில் முன்னோடியாய்த் திகழ்ந்தவர், சி.வை.தாமோதரம் பிள்ளை.

ஓலைச் சுவடிகளைத் தேடிக் கண்டு, சங்க நூல்களையும் காப்பியங்களையும் அச்சுக்குக் கொண்டுவந்த முதல்வர், டாக்டர் உ.வே. சாமிநாதையர்.

கவிதை நாடகத்தின் தந்தை என்னும் சிறப்புக்குரியவராய் விளங்கியவர், 'மனோன்மணீயம்' பெ. சுந்தரம் பிள்ளை.

'நாடகத் தந்தை' எனப் பாராட்டுப் பெற்றவர், பம்மல் சம்பந்த முதலியார்.

தமிழ் நாடகங்களுக்கு முறையான உரையாடல், பாடல்களை முதலில் எழுதியளித்து, 'நாடக ஆசிரியர்' என்ற சிறப்பைப் பெற்றவர், சங்கரதாஸ் சுவாமிகள்.

நாடக இலக்கண நூல் உருவாக்கியவர், பரிதிமாற் கலைஞர்.

இசைத் தமிழ் இயக்கத்திற்குக் கால்கோளிட்டவர், தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்.

தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்தவர்களுள் முக்கியமானவர், ஆர்.கே. சண்முகம் செட்டியார்.

யாழ் பற்றிய விரிவான ஆய்வு செய்து, 'யாழ் நூல்' எழுதியவர், சுவாமி விபுலானந்தர்.

நான்காம் தமிழ்ச் சங்கம் அமைத்தவர் பாண்டித்துரைத் தேவர்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர், கணியர் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை.

தனித்தமிழ் இயக்கம் கண்டவர், மறைமலையடிகள்.

இந்தி எதிர்ப்புத் தளபதியாய் விளங்கியவர், நாவலர் சோமசுந்தர பாரதியார்.

குழந்தை இலக்கிய முன்னோடியாய்த் திகழ்ந்தவர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

மாணவர் மன்றம் கண்டவர், மயிலை சிவமுத்து.

தமிழில் முதலில் பாடநூல்களை உருவாக்கியவர், கா. நமச்சிவாய முதலியார்.

அறிவியல் செய்திகளைத் தமிழில் தந்தவர், பெ.ந. அப்புசாமி.

கல்வெட்டு ஆராய்ச்சியாளராய் விளங்கியவர், சதாசிவ பண்டாரத்தார்.

தொழிலாளர் இயக்கம் கண்டவர், 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க.

சென்னைப் பல்கலைக் கழக மேற்பார்வையில் தமிழ்ப் பேரகராதியை உருவாக்கியவர், மு. இராகவையங்கார்.

தமிழ் உரைநடை வரலாறு எழுதியவர், தணிகைமணி செங்கல்வராய பிள்ளை.

முதன்முதலில் தமிழ் இலக்கிய வரலாறு எழுதி வெளியிட்டவர், கா.சு. பிள்ளை.

தமிழ் ஆட்சிமொழிச் சொற்களை உருவாக்கி அரும்பணி யாற்றியவர், கீ. இராமலிங்கனார்.

பெரிய புராணத்தை மக்கள் உளங்கொளச் சொல்லும் பெருஞ்சொல் விளக்கனாராய்த் திகழ்ந்தவர், அ.மு. சரவண முதலியார்.

அறுபத்துமூன்று நாயன்மார்கள் வரலாற்றை விளக்கமாய் எடுத்துரைத்துப் புகழ் பெற்றவர், அறிஞர் சொக்கலிங்க ஐயா.

பாடங்களை மாணவர் உளங்கொள நகைச்சுவையுடன் நடத்தும் திறம் பெற்றிருந்தவர், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை.

ஆசிரியப் பணி வாயிலாய் மாணவர் உள்ளங்கவர் கள்வராய் விளங்கியவர், கார்மேகக் கோனார்.

சமயங்கள் தமிழுக்காற்றியுள்ள தொண்டுகளை ஆய்வு முறையில் எடுத்துரைத்தவர், மயிலை சீனி. வேங்கடசாமி.

தமிழ் வளர்த்த தண்ணளியாளர்

தமிழை முறையாகப் பயின்று தமிழுக்கு அறிஞர்கள் ஆற்றிய அளப்பரிய பணிகளைப் பெரியபெருமாள் சுவையாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்திருக்கிறார்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, பல்லாயிரக் கணக்கான பாடல்கள் இயற்றியுள்ளார்; தல புராணங்கள் பல புனைந்துள்ளார். அனைத்துக்கும் மேலாய் அரியதொரு மாணவர் பரம்பரையை உருவாக்கி வைத்தார்.

பூவாளூர் தியாகராசச் செட்டியார், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர். தமிழையோ தமிழிலக்கியத் தையோ பழித்துப் பேசுவோர் முகத்தில் விழிக்கவே மாட்டார்.

உரையாற்றலில் உயர்வும், படைப்பாற்றலில் தமிழ் வளமும், பயிற்றுவிப்பதில் தனிச் சிறப்பும் கொண்ட ஆசிரியராய் விளங்கித் தமிழ் வளர்த்தவர், சோழவந்தான் அரசஞ்சண்முகனார்; இவர் வளம் செறிந்த உரையாசிரியராயும் விளங்கினார்.

தெலுங்கு நாட்டு எல்லையை ஒட்டியுள்ள திருத்தணிகைப் பகுதியில், தமிழர்களுக்குத் தமிழை முறையாகக் கற்றத் தந்து எண்ணற்ற தமிழ்ப் புலவர்களை உருவாக்கினார், மங்கலங்கிழார்.

மகாவித்துவான் இரா.இராகவையங்கார், மூன்று சேதுபதிகளின் அரசவைகளின் புகழார்ந்த பெரும்புலவராய்த் திகழ்ந்தார்.

சர்க்கரை வீ.செந்தில்வேலு முதலியார், தேவாரத் திருமுறைகள் ஏழினையும் தலமுறையாக வகுத்து வெளிப்படுத்தினார்.

மகாவித்துவான் வேணுகோபாலப் பிள்ளை, இலக்கணப் பெரும்புலவராய் விளங்கிப் பெருமை சேர்த்தார்.

ஒவ்வொரு குறளையும் வெண்பாவின் ஈற்று இரண்டடிகளாகக் கொண்டு குமரேச வெண்பா பாடினார், ஜெகவீர பாண்டியனார்; பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரமும் எழுதினார்.

ஓரளவே தமிழறிவுள்ளவர்களும் படித்துப் பயனடையும் வகையில் இலக்கியங்களை எளிய நடையில் எழுதியளித்தார், சாமி. சிதம்பரனார்.

ரா.பஞ்சநதம் பிள்ளை, தமிழகத் திருக்கோயில்களின் வரலாற்றை முறையாக முதன்முதலில் எழுதி வெளியிட்டார்.

கிறித்துவர் தமிழ்த் தொண்டு

எல்லாச் சமயங்கள் பற்றிய இலக்கியங்களும் தமிழில் உண்டு. கிறித்துவ சமயத்தை மேற்கொண்டிருந்த இந்நாட்டுத் தமிழறிஞர் பலர் குறிப்பிடத் தகுந்த தமிழ்த் தொண்டுகள் செய்துள்ளனர்.

தஞ்சை வேதநாயக சாஸ்திரி, பல அரிய நூல்களை எழுதியுள்ளார்; இயேசுவைத் தலைவராகக் கொண்டு எழுதியுள்ள 'பெத்தலேகம் குறவஞ்சி' குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும்.

மயிலாடுதுறை (மாயூரம்) நீதிபதி வேதநாயகம் பிள்ளை, முதல் தமிழ்ப் புதினத்தைப் படைத்தவர் என்ற பெருமைக்குரியவராய் இருப்பதோடு, பல நூல்கள் எழுதித் தமிழ் உரைநடையை வளப்படுத்தினார்; இசைக் கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார்.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், இசைத்தமிழுக்குப் பெருந்தொண்டு செய்தவர். அவர் எழுதிய கருணாமிர்த சாகரம் போன்ற இசை ஆராய்ச்சி நூல் இன்னொன்று இல்லை எனலாம்.

எச்.ஏ. கிருட்டிணப் பிள்ளை, இரட்சணிய யாத்திரிகம்' எனும் பெருங்காப்பியம் எழுதினார். கிறித்துவக் கம்பர் எனப் போற்றப்பட்டவர். 'தன்னரிய திருமேனி சதைப்புண்டு பதைப்பெய்தி, பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்து, எந்தாய்!

தாம் செய்வது இன்னதெனஉணர்கில்லார், இவர் பிழையை மன்னியும் என்று எழிற் கனிவாய் மலர்ந்தார் நம் அருள் வள்ளல்' என இயேசுவைப் பற்றி அவர் பாடிய பாடல் என்பையும் உருகச் செய்யும்.

இசுலாமியர் தமிழ்த் தொண்டு

16, 17, 18 ஆம் நூற்றாண்டுகளை இசுலாமியக் காப்பியக் காலம் என்றே சொல்லலாம். தமிழில் பெருங்காப்பியங்களை அக்கால எல்லையில் எழுதியவர்கள் இசுலாமியர்களே! 19ஆம் நூற்றாண்டிலும் குறிப்பிடத்தக்க தொண்டு செய்தவர்கள் இருந்திருக்கின்றனர்.

காரைக்கால் புலவர் அமுதகவி சாயபு மரைக்காயர், புலவர் பெருமக்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்த பெருவள்ளலாய் விளங்கினார். கவிதை எழுதும் ஆற்றலும் பெற்றிருந்தார்.

சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர், புலவர் மாமணியாய் விளங்கியவர். தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் துறைபோகக் கற்றவர். வள்ளலாரின் பாக்கள் அருட்பாக்களே என வாதிட்டு நிலைநாட்டியவர்.

மேனாட்டார் தமிழ்த் தொண்டு

மேலைநாட்டு அறிஞர்கள் கிறித்துவ சமயத்தைப் பரப்ப வந்தவர்கள்; தமிழின் இனிமையில் கட்டுண்டு தமிழைக் கற்றுத் தேர்ச்சி பெற்று அவர்கள் ஆற்றியுள்ள அரிய தமிழ்ப் பணிகள் பல.

அயர்லாந்து அறிஞர் இராபர்ட் கால்டுவெல், 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எழுதினார்; திராவிட மொழி நூலின் தந்தை என்றழைக்கப்படுகிறார்; தமிழ் தனித்தியங்கவல்ல செம்மொழி என்பதை ஆய்வு வாயிலாக நிறுவினார்.

டாக்டர் ஜி.யு.போப் திருக்குறள், நாலடியார், திருவாசகம் ஆகிய இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவர், 'எனது கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறு பகுதியாவது தமிழ் மக்களுடைய கொடையால் அமைய வேண்டும்' என விருப்பம் தெரிவித்தாராம்!

ஆங்கிலம் கற்று அருந்தமிழ்ப் பணியாற்றியோர்

ஆங்கிலம் பயின்ற பலர் தமிழுக்கு அருந்தொண்டாற்றி யிருக்கின்றனர்.

அறிஞர் மு.சு.பூர்ணலிங்கம் பிள்ளை, தமிழின் மாட்சிகளை வெளிநாட்டவர் வியந்து போற்றும் வகையில் நூல்களை

ஆங்கிலத்தில் உருவாக்கி வெளியிட்டார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றுவதில் தனிச்சிறப்புப் பெற்றிருந்தார்.

ஆங்கிலப் புலமைபெற்ற அறிஞர் பரிதிமாற்கலைஞர், தமிழ் நாடகத் துறைக்குத் தொண்டாற்றியுள்ளதோடு, தமிழ்மொழி வரலாறு பற்றிய ஆராய்ச்சி பலவும் செய்து, தமிழ் உயர்தனிச் செம்மொழி என்பதை நிறுவினார். 'தமிழ்மொழியின் வரலாறு' எனும் அரிய நூலை எழுதியுள்ளார்.

பா.வே. மாணிக்க நாயக்கர், ஆங்கிலத்தில் நூல்களை உருவாக்கித் தமிழின் பெருமையை உயர்த்தினார். தமிழ் எழுத்துகளின் அமைப்பையும் சிறப்பையும் ஆராய்ந்து, 'தமிழ் எழுத்துகளின் அரிய தன்மை' எனும் நூலை வெளியிட்டார்.

ஆங்கிலம் வல்ல தணிகைமணி செங்கல்வராய பிள்ளை, 'தமிழின் உரைநடை வரலாறு' என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதினார்.

'1800 ஆண்டுகட்கு முன் தமிழ்' என்னும் அரிய நூலை எழுதிய வீ.கனகசபை பிள்ளை, சிறுவயதிலேயே ஆங்கிலப் பட்டம் பெற்று, 'பட்டதாரிப் பையன்' என்றழைக்கப்பட்டார்.

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை ஆங்கிலம், தமிழ் மட்டுமன்றிப் பன்மொழி அறிஞராகவும் விளங்கினார். தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் அகலிகை வெண்பா, கோம்பி விருத்தம் எனும் புதுமை நூல்களை எழுதினார். தமிழுக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் வேண்டுமெனக் குரல் கொடுத்தார்.

கா.சு.பிள்ளை, தனிப் பாடல்களைத் திரட்டி, குறிப்புரை யுடன் இரண்டு தொகுதிகளாக வெளியிட்டார்.

ஆங்கிலமும் தமிழும் கற்றுத் தேர்ந்து பட்டம் பெற்ற திருமணம் செல்வக்கேசவராய முதலியார், தமிழ் ஆங்கில இலக்கியங்களை ஒப்பீடு செய்து விளக்கினார். தமிழ் இலக்கியங்களில் கலந்துள்ள வடசொற்களைப் பட்டியலிட்டும் காட்டினார்.

ஆங்கிலத்தில் கவிதை உருவாக்குமளவுக்குத் திறமை பெற்றிருந்த தி.இலக்குமணப் பிள்ளை, தமிழ் நாடகத் துறைக்குப் பெருந் தொண்டாற்றியிருக்கிறார்.

உலக வரலாற்று நாயகர் பற்றிய வாழ்க்கையைத் தமிழர் அறிந்து கொள்ளுமாறு செய்வித்து, அரசியல் சிந்தனைகளை, அறிவியல் சிறப்புகளை, தத்துவ நெறிகளைத் தமிழுக்கு அறிமுகமாக்கியவர், வெ. சாமிநாத சர்மா.

வ.வே.சு. ஐயர், கம்பராமாயணம் பற்றிய திறனாய்வு நூலை ஆங்கிலத்தில் எழுதினார்.

இசைத் தமிழ்த் தொண்டர்கள்

முத்தமிழில் ஒன்றான இசைத்தமிழுக்குச் சீரிய பணி புரிந்தவர்களும் இந்நூற்றாண்டில் பலர் இருந்திருக்கின்றனர்.

இசை தொடர்பான பல அரிய உண்மைகளையும் பழமையான தமிழ் நூல்களில் பொதிந்துள்ள கருத்துகளையும் தொகுத்து, 'கருணாமிர்த சாகரம்' எனும் இசைத் தமிழ்நூலைத் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் உருவாக்கியுள்ளார்.

யாழின் அமைப்பு, வகைகள் பற்றிய நுணுக்கங்களை நன்கு ஆராய்ந்து, சுவாமி விபுலானந்தர் யாழ்நூல் வெளியிட்டுள்ளார்.

தமிழிசை இயக்கம் தோன்றக் காரணமாயிருந்தவர்களுள் குறிப்பிடத் தகுந்த ஒருவராக இருந்தவர், ஆர்.கே. சண்முகம் செட்டியார்.

பாடகராகவும் இசைப் பேரறிஞராகவும் விளங்கியிருக்கிறார், பாபநாசம் சிவன். திரைப்படங்கள் பலவற்றிற்கு இவர் பாடல்கள் எழுதியுள்ளார்.

சங்கரதாஸ் சுவாமிகள், தமிழ் நாடகங்கட்கு ஏராளமான பாடல்களை எழுதியளித்தார். கொடுமுடி கே.பி.சுந்தராம்பாள் குரலில் நாம் விரும்பிக் கேட்கும், 'ஞானப் பழத்தை....' எனும் பாடலை எழுதியவர் இவரே!

நாடகத் தமிழ்த் தொண்டர்கள்

'எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே' எனப் பெருமை பொங்கப் பாடிய பெ. சுந்தரம்பிள்ளை, 'மனோன்மணீயம்' எனும் கவிதை நாடக நூல் இயற்றினார். தமிழில் தோன்றிய முதல் கவிதை நாடக நூல் இதுவே. ஆதலின் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, 'தமிழ்க் கவிதை நாடகத் தந்தை' எனப் போற்றப்படுகிறார்.

'இசைச் செல்வர்' எனப் புகழ்பெற்ற தி. இலக்குமணப் பிள்ளை தமிழில் சத்தியவதி, இரவிவர்மா நாடகம் முதலியவற்றை எழுதியுள்ளார். கிரேக்க மொழியிலிருந்து ஆங்கிலத்தில்

பெயர்க்கப்பட்ட வீல நாடகத்தைத் தமிழுக்குக் கொண்டு வந்தார். சேக்ஸ்பியர் நாடகங்கள் சிலவற்றைத் தமிழ்ப்படுத்தினார்.

'தமிழ் நாடகத் தந்தை' எனப் பாராட்டப் பெறும் பம்மல் சம்பந்த முதலியார் 94 நாடகங்களை எழுதியுள்ளார்.

பரிதிமாற் கலைஞர் மானவிஜயம், கலாவதி, ரூபாவதி ஆகிய நாடகங்களை இயற்றியுள்ளதோடு, 'நாடகவியல்' எனும் நாடக இலக்கண நூலையும் ஆக்கித் தந்திருக்கிறார்.

சங்கரதாஸ் சுவாமிகள் பல தமிழ் நாடகங்களை எழுதியிருக்கிறார். நான்கு மணி நேரம் நடைபெறக் கூடிய நாடகத்தை உரையாடல் பாடலுடன் ஒரே இரவில் ஓர் இடத்தில் கூட அடித்தல் திருத்தலின்றி எழுதித் தந்த பெருமை சுவாமிகளுக்கு உண்டு.

அயல் மாநிலத்தவர் ஆற்றிய தொண்டு

ஆந்திர மாநிலத்தின் சித்தூர் அருகேயுள்ள பூதலப்பட்டு என்னும் சிற்றூரில் பிறந்த ஸ்ரீ ராமுலு ரெட்டி, தெலுங்கைத் தாய்மொழியாய்க் கொண்டவர்; எனினும் தமிழை முனைந்து கற்றுப் பெரும் புலமை கொண்டார். கம்பராமாயணத்தைத் தெலுங்கிலே மொழிபெயர்த்து இரண்டு தொகுதிகளாய் வெளியிட்டார். சிலப்பதிகாரத்தைத் தெலுங்கில் மொழிபெயர்த்து, 'அந்தியகத' எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளார்.

வங்காளத்தில் ஹௌரா மாவட்டத்திலுள்ள சிப்பூர் எனும் சிற்றூரில் தோன்றியவர், டாக்டர் சுநித்குமார் சட்டர்ஜி. வங்க மொழியாளரான இவர் தமிழை முறையாகக் கற்றறிந்தார். 'பாரத மொழிகளின் இலக்கிய வரலாறு' என்னும் பெரு நூலில், 'தமிழ் மொழியின் தோற்றம்', 'தமிழ் இலக்கிய வரலாறு' ஆகியவை பற்றி விளக்கமாக எழுதியுள்ளார்.

தெலுங்கு மொழியாளர் தமிழ்த் தொண்டு

தெலுங்கைத் தாய்மொழியாய்க் கொண்டவர்களும், தமிழறிந்து, தமிழின் செழுமைக்குத் துணை நின்றுள்ளனர்.

நரசிம்மலு நாயுடு, தெலுங்கைத் தாய்மொழியாய்க் கொண்டவர்; ஆயினும் தமிழில் வரலாற்று நூல் எழுதிய புகழ் கொண்டார். 'தக்ஷிண இந்திய சரித்திரம்' எனும் நூலை எழுதி, தமிழில் வரலாற்று நூல் எழுதும் முறையைத் தொடக்கி வைத்தார்.

பேராசிரியர் வேங்கடராஜுலு ரெட்டியார், தொல்காப்பியத்துக்கு உரை எழுதினார். இலக்கணப் பெருங்கடலாய் விளங்கி எண்ணற்ற கட்டுரைகளை எழுதியிருக்கிறார்.

தெலுங்கைத் தாய்மொழியாய்க் கொண்ட கோவைக்கிழார் இராமச்சந்திரன் செட்டியார், எட்டு மொழிகளில் திறமும் உரமும் பெற்று விளங்கினார். பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி முதல்வராய் விளங்கித் தமிழ்ப் பணியும் சமயப் பணியும் செய்துவந்தார். கோயில் கோயிலாய்ச் சென்று கல்வெட்டுகளைப் படியெடுத்துப் பல புதிய செய்திகள் வெளிவரக் காரணமா யிருந்தார்.

வடமொழிப் புலமை பெற்ற தமிழறிஞர்கள்

தமிழறிஞர்களில் பலர் வடமொழியில் வளமான புலமை பெற்றவராயிருந்திருக்கின்றனர்.

மறைமலையடிகளார், தமிழ் ஆங்கிலம் மட்டுமன்றி, வடமொழியிலும் வல்லுநராயிருந்தார். அடிகளாரின் வடமொழிப் புலமையை, கவி காளிதாசனின் 'சாகுந்தல நாடக' மொழிபெயர்ப்பு பறைசாற்றுகின்றது.

இரா. இராகவையங்காரும் சாகுந்தலத்தைத் தமிழில் பெயர்த்துள்ளார்.

வடமொழியில் காளிதாசர் இயற்றிய, 'பிரகசன' என்னும் நூலைத் தமிழாக்கித் தந்திருக்கிறார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்.

திருவாசகத்திற்கு, 'கதிர்மணி விளக்கம்' எழுதிய பண்டிதமணி கதிரேசச் செட்டியார், தமிழ், வடமொழி ஆகிய இரண்டிலும் புலமையாளர். சாணக்கியரின் வடமொழி அர்த்தசாஸ்திரத்தைத் தமிழில் பெயர்த்துள்ளார். 'மண்ணியல் சிறுதேர்' என்பது அவர் வடமொழியிலிருந்து தமிழுக்குக் கொண்டு வந்துள்ள நாடகம்.

பதிப்புத் தொண்டாற்றிய பண்பாளர்கள்

ஓலைச் சுவடிகளிலிருந்தவற்றை அச்சில் பதிப்பித்து அருந்தொண்டாற்றிய பெருமக்களும் உள்ளனர். பதிப்புத் துறையில் முன்னோடியாய்த் திகழ்ந்தவர் சி.வை. தாமோதரம் பிள்ளை. வீரசோழியம், இறையனார் அகப்பொருள், தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கான நச்சினார்க்கினியர் உரை, கலித்தொகை, சூளாமணி என ஏராளமான நூல்களைப் பதிப்பித்தளித்த பெருமை இவருக்குண்டு.

திருக்குறள், திருக்கோவையார், கந்தபுராணம், பெரியபுராணம் ஆகிய நூல்களைப் பதிப்பித்து, தமிழுக்கும் சைவத்துக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர், ஆறுமுக நாவலர்.

ஓலைச்சுவடிகளைத் தேடிப் பதிப்பித்தல் என்று நினைத்ததுமே நம் முன் முதலில் தோன்றுபவர், தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர். கால்நடையாய் ஊர் ஊராய்ச் சுற்றியலைந்து ஓலைச்சுவடிகளைத் தேடிப் பதிப்பிப்பதைத் தம் உயிர்ப் பணியாய்க் கொண்டிருந்தார், உ.வே.சா. சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி இன்னும் எண்ணிறந்த பேரிலக்கியங்கள், சிற்றிலக்கியங்களைப் பதிப்பித்தளித்துத் தமிழர் தம் பண்டைப் பெருமையை அறியக் காரணமாய் இருந்தவர், உ.வே.சா.

உரையாசிரியத் தொண்டு

நூல்களுக்கு உரையெழுதிப் புகழ்பெற்றவர்கள் சிலர். குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய நூல்களுக்கு உரையெழுதி வெளியிடும் முயற்சியில், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் முனைந்திருந்தார். அவர் வாழ்ந்தபோது நற்றிணை நூல் உரை வெளியானது. அவர், 'மாணாக்கர் ஆற்றுப்படை', 'தென்தில்லை உலா', 'இராமாயண அகவல்' போன்ற பல நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு காப்பியங்களுக்கும் உரை எழுதியுள்ளார். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சிலவற்றிற்கும், இன்னும் வேறு சில இலக்கியங்களுக்கும் இவர் உரையுண்டு. 'உரைவேந்தர்' என்ற சிறப்புப்பெயரும் இவருக்குண்டு.

கா.சு.பிள்ளை திருக்குறள் எளிய உரை; திருவாசகம் நல்லுரை எழுதியிருக்கிறார்!

தூய தமிழ்த்தொண்டு செய்த துறவியர்

துறவிகளாய் இருந்து தமிழுக்கு அருந்தொண்டாற்றியவர் பலராயுள்ளனர்.

பேச்சுக்கலைக்கு இலக்கணமாய் விளங்கி, பல மணிநேரம் அரிய கருத்துகளை ஆயிரமாயிரவர் அசையாமல் கேட்குமாறு செய்தவர், ஞானியார் அடிகள்.

பாம்பன் சுவாமிகள் மணம்புரிந்தும் துறவியாய் வாழ்ந்தவர். 'வடசொல் புகாது பாடப்பெற்ற தமிழ் நூல் எதுவுமில்லை' என்று சொல்வோர் வாயடைக்குமாறு, 'சேந்தன் தமிழ் நூல்' எனும் திரு நூலை உருவாக்கினார். ஆயிரக்கணக்கில் அருட்பாடல்களைப் பாடியுள்ளார்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய அருளாளர் வடலூார் வள்ளலார், திருமணமாகியும் துறவியாக வாழ்ந்தவரே! 'திருவருட்பா'வினைப் பாடியளித்திருப்பதோடு வளமான உரைநடை வளரும் வகையில், 'மனுமுறை கண்ட வாசகம்', 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' போன்று இன்னும் பல உரைநடைப் பகுதிகளையும் எழுதியுள்ளார்.

மறைமலையடிகளும் மணம் செய்து கொண்டவரேயாயினும் துறவியாகித் தமிழுக்குப் பெருந்தொண்டு செய்தவர்.

துறவி சுத்தானந்த பாரதியார், பன்மொழி வல்லுநர்; பல்கலை வித்தகர்; சிறந்த மொழிபெயர்ப்பாளர்; எழுச்சிமிக்க கவிஞர்.

மயிலம் பொம்மபுரம் மடாலயத்தின் பதினெட்டாவது தம்பிரானாய் விளங்கிய தவத்திரு சிவஞான பாலைய அடிகளார், சிறந்த புலவராய் விளங்கியதோடு தமிழ் கற்றோரைப் பேணிக் காத்துப் போற்றியும் வந்தார்.

சுவாமி சித்பவானந்தர், இராமகிருஷ்ணரின் ஞானச் செறிவும் விவேகானந்தரின் ஆன்மிக ஆற்றலும் ஒருங்குகூடப் பெற்றவர். 'பகவத் கீதை', 'திருவாசகம்' ஆகியவற்றிற்கு இவர் எழுதியுள்ள உரைகள் போற்றுதலுக்குரியனவாய் விளங்குகின்றன.

இதழாசிரியராய் இனிய தமிழ்ப்பணியாற்றியோர்

இதழாசிரியர்களாய்ப் பணிபுரிந்து இனிய தமிழ் வளர்த்த அறிஞர்களும் உண்டு.

சி.வை. தாமோதரம் பிள்ளை, 'தினவர்த்தமானி' எனும் இதழாசிரியராய் இருந்தார்.

'சித்தாந்தம்' எனும் இதழின் ஆசிரியராய்ப் பணியாற்றினார், பூவை கலியாண சுந்தர முதலியார்.

அறிஞர் நரசிம்மலுநாயுடு, 'சுதேசாபிமானி', 'கோவை அபிமானி', 'கோவை கலாநிதி' முதலிய இதழ்களை நடத்தினார்.

ஆசுகவி என இலங்கைத் தமிழர்களால் அன்புடன் அழைக்கப் பெற்ற கல்லடி வேலுப்பிள்ளையின், 'சுதேச நாட்டியம்' சிறப்புப் பெற்ற ஓரிதழ்.

க.நா. சிவராசப்பிள்ளை, 'மக்கள் கருத்து' எனும் இதழின் துணையாசிரியராய்ப் பணியாற்றினார். சொல்லாராய்ச்சியில் தேர்ந்தவர்.

பண்டிதர் அருணகிரிநாதர், சீரிய சிறுகதைகளைத் தாங்கி வந்த, 'ஆனந்த சோதி' இதழைத் தொடங்கினார்.

மு.சு. பூர்ணலிங்கம் பிள்ளை, 'ஜஸ்டிஸ்' என்னும் ஆங்கில இதழின் துணையாசிரியராய் இருந்தவர்.

இரா. இராகவையங்கர்ர், மு.இராகவையங்கார் மதுரைத் தமிழ்ச்சங்கச் 'செந்தமிழ்' இதழ் ஆசிரியர்களாய் இருந்தனர்.

திரு.வி. கல்யாணசுந்தரனார், 'நவசக்தி', 'தேசபக்தன்' இதழ்களின் ஆசிரியப் பொறுப்பேற்றிருந்தார்.

கல்கி, நவசக்தி இதழில் பணியாற்றினார்; ஆனந்த விகடனில் உதவி ஆசிரியராய் இருந்தார்; பின்னர், 'கல்கி' இதழைத் தொடங்கி நடத்தினார்.

சாமி. சிதம்பரனார், 'பகுத்தறிவு', 'லோகோபகாரி', 'குடியரசு', 'விடுதலை' ஆகிய இதழ்களில் பல்வேறு காலகட்டங்களில் பணியாற்றினார்.

கோவைக்கிழார் இராமச்சந்திரன் செட்டியார், 'சித்தாந்தம்' எனும் இதழுக்கும்;

இராய. சொக்கலிங்கம், 'ஊழியன்' எனும் இதழுக்கும்;

சொ. முருகப்பா, 'குமரன்' எனும் இதழுக்கும்;

இ.மு. சுப்பிரமணிய பிள்ளை, 'தமிழ்த்தாய்' எனும் இதழுக்கும் ஆசிரியர்களாய் விளங்கியிருக்கின்றனர்.

தேசபக்தர் சிவா, 'ஞானபானு', 'பிரபஞ்ச மித்திரன்', 'இந்திய தேசாந்திரி' எனும் இதழ்களுக்கு ஆசிரியராய் விளங்கியிருக்கிறார்.

வ.வே.சு. அய்யர், 'தேசபக்தர்' இதழின் ஆசிரியராய் இருந்தார்; சுத்தானந்த பாரதியுடன் சேர்ந்து, 'பாலபாரதி' இதழையும் நடத்தினார்.

கா.சு. பிள்ளை, 'மணிமாலை' என்னும் இதழின் ஆசிரியராய் இருந்திருக்கிறார்.

'இந்தியா', 'சுதேசமித்திரன்' இதழ்களில் பணியாற்றியவர் பாரதி.

பாரதிதாசன், 'குயில்' எனும் கவிதை ஏட்டினை நடத்தி வந்தார்.

பிற துறையினரின் தமிழ்ப்பணி

தமிழ் அல்லாத பிற துறைகளில் பணியாற்றியவர்களும் தமிழ் வளர்ச்சியுறப் பல்வேறு பணிகளைச் செய்திருக்கின்றனர்.

பொறியியல் அறிஞராய் விளங்கியவர் பா.வே. மாணிக்க நாயக்கர்.

வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் கால் நடை மருத்துவத் துறையில் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலராய் விளங்கியவர்.

கனகசபைப் பிள்ளை அஞ்சல் துறையில் உயர் அலுவலராய்ப் பணியாற்றியவர்.

இரசிகமணி டி.கே.சி., இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆணையராய் இருந்தவர்.

அமைச்சராயிருந்து பெரும்புலவராய்த் திகழ்ந்தவர், பொன்னுச்சாமித் தேவர்.

சச்சிதானந்தம் பிள்ளை, அரசாங்கக் கல்வித் துறையில் பல உயர் பதவிகள் வகித்தவர். சைவம் வளரப் பெரும்பாடுபட்டார். சைவப் பாதிரியார் என்றே மக்கள் இவரை அழைத்தனர்.

ந.சி. கந்தையா பிள்ளை, மலேயாவில் இரயில்வே துறையில் பணியாற்றியிருக்கிறார்.

தணிகை செங்கல்வராய பிள்ளை, சார்பதிவாளராய்ப் பணியாற்றியவர்.

கீ. இராமலிங்கனார், நகராட்சி ஆணையராய்ப் பணியாற்றியவர்.

சட்டம் பயின்ற தமிழ்ச் சாதனையாளர்கள்

சட்டம் பயின்ற மிகப் பலர் சீரிய தமிழ்த் தொண்டாற்றி யுள்ளனர். பிறதுறைகள் எனக் கொள்ளும்போது சட்டத்துறை சார்ந்தவர்களே பெரும்பாலானோராய் இருக்கின்றனர்.

மாயூரம் (மயிலாடுதுறை) வேதநாயகம் பிள்ளை, நீதிபதி யாய்ப் பணியாற்றியவர்.

ஆங்கிலேய அரசாங்கத்தால் இரண்டு தீவாந்திர தண்டனைகள், ஒவ்வொன்றும் தனித்தனியே 20 ஆண்டாக மொத்தம் 40 ஆண்டுகள் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனக் கூறப்பட்ட கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை சிறந்த வழக்கறிஞர்.

வழக்கறிஞராய்ப் பணியாற்றிய பம்மல் சம்பந்த முதலியார் நாடகத் துறைக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளார்.

கோவையில் வழக்கறிஞராய்த் திகழ்ந்த, சி.கே. சுப்பிர மணிய முதலியார் சேக்கிழார் திருக்கூட்டத்தை உருவாக்கி, திருத்தொண்டர் புராணத்தைத் தொடர்ந்து உரையாற்றி வந்தார்.

நாவலர் சோமசுந்தர பாரதியார், சிறந்த வழக்கறிஞராய்த் திகழ்ந்தவர். இந்தி கட்டாயமாக்கப்படுவதை எதிர்த்தவர். இவரை, 'இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தந்தை' என்பர். 'தசரதன் குறையும் கைகேயியின் நிறையும்' எனும் இவருடைய ஆராய்ச்சி நூல் பெரிதும் போற்றப்படுவது.

விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்ற வ.வே.சு. அய்யர், பாரிஸ்டர் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்.

தமிழவேள் என்று போற்றப்படும் உமாமகேசுவரம் பிள்ளை, வழக்கறிஞர். தமிழைச் செழுமைப்படுத்த எண்ணி, கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோன்றக் காரணமாயிருந்தவர்.

கோவைக்கிழார் இராமச்சந்திரன் செட்டியார், சட்டம் பயின்றவர்; பன்மொழி அறிஞர்; கொங்குநாடு பற்றிய விரிவான ஆராய்ச்சி செய்துள்ளார்.

சட்டத் துறையில் முதுகலைப் பட்டத்தை (எம்.எல்.) பெற்று, 'எம்.எல். பிள்ளை' என்றழைக்கப்பட்டவர், கா.சு.பிள்ளை. கல்கத்தா பல்கலைக் கழகம் நடத்திய போட்டியில் முதன்மை பெற்றுப் பதினாயிரம் ரூபாய் பரிசையும், 'தாகூர் விரிவுரையாளர்' பட்டத்தையும் இவர் பெற்றிருக்கிறார்.

தமிழிசை இயக்கம் தோன்றுவதற்கு வித்திட்டவர்களில் ஒருவரும், சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்திற்கு உரை எழுதியவரும், இந்திய அரசின் நிதியமைச்சராய்ப் பணிபுரிந்தவருமான ஆர்.கே. சண்முகம் செட்டியார், சிறந்த சட்ட வல்லுநர்.

'சொல்லின் செல்வர்' எனப் போற்றப்படும் இரா.பி. சேதுப்பிள்ளை, சட்டம் பயின்றவர். சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தைத் தொடங்கிய இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராய் விளங்கியிருக்கிறார்.

வீ. கனகசபைப் பிள்ளை, அஞ்சல் துறையில் பணியாற்றிய போது இடையே விடுப்புப் பெற்றுச் சட்டம் பயின்று முதன்மை பெற்றார்.

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, சட்டம் பயின்று அத்துறையில் பட்டம் பெற்றவர்.

அறிவியல் கருத்துகளைத் தமிழில் சொல்லி வெற்றி பெற்ற அறிஞர் பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, சட்டம் பயின்று வழக்கறிஞராய் இருந்தவர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் அகர வரிசைப் பெருநூல் உருவாக்கப் பதிப்பாசிரியராய் விளங்கிய வையாபுரிப்பிள்ளை, வழக்கறிஞராய்ப் பணியாற்றியவர்.

புகழ்மணக்கும் படைப்பாளர் மு.சு. பூர்ணலிங்கம் பிள்ளை,

மூதறிஞர் எனப் புகழப்படும் இராஜாஜி,

இரசிகமணி எனப் போற்றப்படும் டி.கே.சி.,

ஆகியோரும் வழக்கறிஞர் பட்டம் பெற்றவர்களே!

தமிழ் வளர்த்த விடுதலை வீரர்கள்

19ஆம் நூற்றாண்டில், ஆங்கிலேயர்களை எதிர்த்து விடுதலைப் போர் தீவிரமாக நடைபெற்றது. விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்றுத் தடியடிபட்டும், சிறை சென்றும் துன்பமுற்றோர் எண்ணற்றவர். விடுதலைப் போரில் முன்னணியில் நின்று பாடுபட்டவர்களில் பலர், அப் போராட்டத்தினிடையே தமிழுக்கும் அருந்தொண்டாற்றியுள்ளனர்.

ஆன்மிகச் செல்வராகவும் அருந்தமிழ்ப் புலவராகவும் விளங்கிய சுப்பிரமணிய சிவா, தம் பேச்சாலும் எழுத்தாலும் ஆயிரமாயிரம் இளைஞர்களை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தார். தமிழுணர்வும், நாட்டுப்பற்றும் அவருடைய இருகண்களாய் விளங்கின.

இதந்தரு மனையின் நீங்கி
  இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
  பழிமிகுத் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
  விளைந்தெனை அழித்திட் டாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
  தொழுதிடல் மறக்கி லேனே!

எனப் பாடி விடுதலை வேட்கையை ஊட்டியவண்ணம் இருந்தவர் மாக்கவி பாரதி!

தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?
அக்கா அக்கா என்றுநீ அழைத்தாய்
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே

எனப் பாடி, கூண்டுக் கிளிபோல் அடிமைத் தளையில் கிடக்காமல் வானிலே வந்து திரியும் விடுதலை பெற்ற கிளிபோல, நாடு விடுதலை பெற வேண்டும் எனத் தொடக்கக் காலத்தில் விடுதலைக் குரல்கொடுத்த புதுவைக் குயில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

பின்னர்த் தன்மான இயக்கக் கவிஞராய் மாறி, எழுச்சிக் குரல் கொடுத்தார்.

தமிழன் என்றோர் இனமுண்டு;
தனியே அவர்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை மொழியாகும்;
அன்பே அவனுடை வழியாகும்

எனப் பாடிய நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை காந்தியக் கவிஞராக ஒளிவீசிச் சிறந்தவர். அவர் ஒரு சிறந்த ஓவியரும்கூட.

நாட்டு விடுதலையையும், தொழிலாளர் உயர்வினையும் நோக்கமாய்க் கொண்டு விடுதலைப் போர்க்களத்தில் ஒரு தமிழ்த் தென்றலாய் உலவியவர், திரு.வி.க.

நாவலர் சோமசுந்தர பாரதியார், தம் குடும்பத்தையே விடுதலைப் போரில் ஈடுபடச் செய்தவர்; சென்னை வந்திருந்த காந்தியடிகளை நேரில் கண்டு வலியுறுத்தித் தென் தமிழகத்திற்கு அழைத்து வந்தவர், நாவலர் பாரதியார்.

கல்கி, நாட்டு விடுதலைப் போரில் சிறைசென்றவர். அவருடைய முதல் இலக்கியப் படைப்பான 'விமலா' என்னும் நாவல், அவர் சிறையிலிருந்தபோது உருவானது.

விடுதலைப் போராட்டக்களத்தில் வீரக்கனலாய் ஒளிர்ந்தவர், வ.வே.சு. அய்யர்.

பாரதியின் சீடராய் வாழ்ந்தவர், வ.ரா. இவருடைய சிறுகதைகள் புதிய வழித்தடங்களைப் பதித்தன. 'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என அண்ணாவால் புகழப்பட்ட பெருமையுடையவர்.

செக்கிழுத்த செம்மல், ஆங்கில அரசுக்கெதிராய்க் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விடுதலைக்குத் தம்மையே ஒப்புக் கொடுத்த மாவீரர்.

பி.ஸ்ரீ. ஆச்சார்யா, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தியவர். இவர் வெளியிட்ட ஒப்பாய்வு நூல்கள் புகழ் பெற்றவை.

அறிஞர் நரசிம்மலு நாயுடு ஆங்கில அரசு தந்த 'இராவ்பகதூர்' பட்டத்தை ஏற்க மறுத்தவர். இவர் பெண் விடுதலைக்காக மிகவும் பாடுபட்டவர்.

ஈழ நாட்டு நல்லறிஞர்கள்

ஈழ நாட்டு நல்லறிஞர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள மறக்க முடியாத தொண்டுகள் பல.

தெய்வத் தமிழ் வளர்த்த ஆறுமுக நாவலர்,

'யாழ்நூல்' அருளிய சுவாமி விபுலானந்தர்,

பதிப்புத்துறைச் செம்மல் சி.வை. தாமோதரம் பிள்ளை,

திரு.வி.க. வை உருவாக்கிய கதிரைவேற் பிள்ளை,

'சுதேச நாட்டியம்' இதழாசிரியர் கல்லடி வேலுப்பிள்ளை,

சங்க நூல்களை உரைநடையில் தந்த ந.சி.கந்தையா பிள்ளை,

ஆகிய பெருமக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழ நாட்டில் தோன்றி, தமிழ் வளர்த்த நல்லறிஞர் ஆவர்.

தமிழகத்தில் சேர, சோழ, பாண்டி நாடுகள்; கொங்கு நாடு; நடு நாடு; தொண்டை நாடு ஆகிய எல்லாப் பகுதிகளிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் தோன்றித் தமிழ் வளர்த்த பெருமையை இந்நூல் மிகவும் சிறப்பாக எடுத்தியம்புகிறது.

நூற்சிறப்பு

இந் நூலில் கட்டுரைகள் அமைந்துள்ள முறை ஒரு தனிச் சிறப்பு. யாரைப் பற்றிச் சொல்கிறாரோ அவருடைய தனித்த பெருமைகளைக் கொண்ட ஓர் அறிமுகம்; அடுத்து அவர் தமிழுக்குச் செய்த தொண்டுகள்; முடிவில் அவருடைய வாழ்க்கை வரலாறு.

ஒவ்வொருவர் பற்றியும் தனித்தனியே ஒரு நூல் எழுதலாம். அவ்வளவு செய்திகளைக் குன்றக்குடி பெரியபெருமாள் சேகரித்திருக்கிறார். முறையான வரலாறுகள் இல்லாத நிலையில் எப்படி இவ்வளவு செய்திகளைத் திரட்டினார் என்பது வியப்பளிக்கிறது. தொடர்ந்து சில ஆண்டுகள் ஒவ்வொரு நாளும் பல மணி நேரம் இவர் இதற்கெனப் பாடுபட்டிருக்க வேண்டும். தேனீயினும் சுறுசுறுப்பாய்ச் சிறகடித்துப் பறந்து செய்தித் தேனைச் சேகரித்துத் திரட்டியிருக்கிறார் என்பது தெளிவு.

கட்டுரைகள், 'தமிழரசி' இதழில் தொடர்ந்து வந்தவை. இப்படியொரு நூல் எழுதவேண்டும் எனத் தனியே நினைத்திருந்தால் பெரியபெருமாளால் முடித்திருக்க முடியுமோ

என்னவோ? பத்திரிகைத் தொடர்! ஒவ்வொரு கிழமையும் ஒருவர் பற்றி எழுதியாக வேண்டும் என்னும் கட்டாயம் - நெருக்கடி. ஒரு கட்டுரை தந்ததும் அடுத்த கட்டுரையை ஒரு கிழமைக்குள் முடித்துத் தர வேண்டும். ஆகவே, அதற்குள் செய்திகளைத் திரட்ட வேண்டும்; திரட்டிய செய்திகளோ ஏராளமாக இருக்கும்; பத்திரிகையில் நான்கு அல்லது ஐந்து பக்கங்களுக்குமேல் கட்டுரை நீளக் கூடாது; அதற்கேற்றவாறு செய்திகளைச் சுருக்க வேண்டும்; சுருக்கம் என்ற பெயரில் முக்கியச் செய்திகள் விடுபட்டுவிடவும் கூடாது. எழுதி எழுதி, சுருக்கிச் சுருக்கி, செறிவாக்கிச் செறிவாக்கி வெளியிட்டதால்தான் கட்டுரைகள் தேனாய் இனிக்கின்றன. இப்படிப்பட்ட கட்டுரைகள் எழுதுவது பெரியபெருமாளுக்கு இப்போது கைவந்த கலையாகவே ஆகிவிட்டது.

நன்றிமலர் தூவுவோம்

'தமிழ் வளர்த்த நல்லறிஞர்' எனும் தொடரை, தமிழரசியில் எழுத இடமளித்து, அதை எழுதுவதற்குத் தக்க ஒருவரைத் தேர்ந்தெடுத்து, எழுதுபவர்க்கு எல்லாச் சுதந்திரமுமளித்து, தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர், 'சிறுகதைச் சேக்கிழார்' விக்கிரமன் அவர்கள் ஊக்கமளித்திராவிடில் இவ்வருமையான பயனுள்ள நூல் தோன்ற வாய்ப்பே இல்லாமல் போயிருக்கவும் கூடும்.

பத்திரிகைகளில் மலிவான செய்திகளைத் தந்து 'பணம் பண்ணுகிற' இக்காலச் சூழலில் அறிவு நலம் நிறைந்த, தமிழர்கள் அறிய வேண்டிய அரிய செய்திகளைத் தாங்கிய கருத்தாழமிக்க கட்டுரைகளைத் தம் இதழில் வெளிவர அனுமதியளித்த இதழ் உரிமையாளர் திரு.நடராசனும் நன்றிக்குரியவர்.

தமிழர் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய நூல் இது.

'அறிஞர் சீர் பரவுவாரை' வாழ்த்துவோம்!

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் நல்லோர் வரலாறுகளை எழுதியுள்ள பெரியபெருமாள் இப்போது இருபதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர் பற்றி எழுதமுற்பட்டு, 'அமுதசுரபி' இதழில் கட்டுரைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இம்முயற்சியில் அவர் முழு வெற்றிபெற என் உளம் நிறைந்த வாழ்த்துகள்!

திருத்தொண்டர் புராணம் எழுதிய சேக்கிழாரை, 'தொண்டர் சீர் பரவுவார்' எனப் போற்றுவதுபோல, தமிழ் வளர்த்த நல்லறிஞர் வரலாறாய், 'தமிழ்த் தொண்டர் புராணம்' எழுதியுள்ள குன்றக்குடி பெரியபெருமாளை இனி, 'அறிஞர் சீர் பரவுவார்' எனப் போற்றிப் பெருமைப்படுத்துவோமாக!

நூல் ஆக்கம்	குன்றக்குடி பெரியபெருமாள்
வகைமை	வாழ்க்கை வரலாறு
வெளியீடு	காமதேனு பப்ளிகேஷன்ஸ், சென்னை. (1996)

6

கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் புதுமைகள்

புதிய பூம்புகார்

இளங்கோவடிகள் இயற்றியுள்ள சிலப்பதிகாரம் நம் நெஞ்சையள்ளும் ஒரு முத்தமிழ்க் காப்பியம். தமிழில் தோன்றிய முதல் காப்பியமுமாகும். என்றாலும், இந்நூற்றாண்டின் இடைக்காலம் வரை அது மக்களிடையே பரவாதிருந்தது. கற்றறிந்த பெருமக்கள்கூடச் சிலப்பதிகாரத்தை அறியாதிருந்தனர். ஓலைச் சுவடிகளை அரிதின்முயன்று, தேடி, ஆய்ந்து சிலப்பதிகார மூலத்தை அரும்பதவுரை, அடியார்க்கு நல்லார் உரையுடன் டாக்டர் உ.வே.சாமிநாதையர், கி.பி. 1892ல் முதன் முதலில் அச்சில் பதிப்பித்தார். அப்போதும் அது புலவர்கள் மட்டுமே பயிலக் கூடிய நூலாகவே இருந்து வந்தது.

சிலப்பதிகாரம் தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தக் கூடிய காப்பியமாய் இருப்பதால் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் இதனை நாடெங்கும் பரப்பி வந்தார். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை அமைக்க வட ஆரிய மன்னர்களாகிய கனகன், விசயன் தலையில் கல்லேற்றிக் கொணர்ந்த செயல் தென்னாட்டு வீரத்தையும் சிறப்பையும் உணர்த்தக் கூடியதாய் இருந்ததால் திராவிட இயக்கத்தினரும் சிலம்பை எழுதவும் பேசவும் முற்பட்டனர்.

சிலப்பதிகாரக் கதை தொடங்கும் பூம்புகார் நகரம் கடலுள் மூழ்கியது. பட்டினப்பாலையில் உருத்திரங் கண்ணனார் காவிரிப்பூம்பட்டினத்தை வெகு சிறப்பாகப் பாடியுள்ளார். இதனையடுத்து இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இன்னும் விரிவாகப் பாடியிருக்கிறார். பின்னர் அண்மைக் காலம் வரை புகார் பற்றி ஆங்காங்கே சிற்சில குறிப்புகள் தவிர, சிறப்பாகப் பேசப்பட்டதாய் எவையுமில.

டாக்டர் கலைஞரின், 'பூம்புகார்', இளங்கோவன் உரையாடல் எழுதிய, 'கண்ணகி' ஆகிய திரைப்படங்கள் வெளிவந்தன. பண்டைய பூம்புகார் கடலுள் மூழ்கியதெனினும், அதன் சிறப்புகளெல்லாம் மிளிரும் வண்ணம் புதியதொரு பூம்புகார் நகரத்தை, காவிரி கடலொடு கலக்குமிடத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் உருவாக்கியிருக்கிறார். இவற்றின் பின்னர் இப்போது 'பூம்புகார்' எல்லோர் நாவிலும் இடம்பெற்ற ஒன்றாய் விளங்கி வருகிறது. வணிக நிறுவனங்கள், உணவு விடுதிகள் போன்றவை பூம்புகார் எனும் பெயரில் அமைக்கப் பட்டுள்ளன.

மூலத்தில் மாற்றம்

சிலப்பதிகாரம் ஆரியப் பண்பாடு தமிழ்ப் பண்பாட்டுடன் கலக்கத் தொடங்கிய காலத்தில் எழுந்த காப்பியம். காப்பியத்தில் தெய்வப் போற்றிப் பாடல்களும், இயற்கையிறந்த நிகழ்ச்சிகளும் நிரம்ப இடம் பெற்றுள்ளன. திராவிட இயக்கத்தினர் பகுத்தறிவுக் கொள்கையினர்; இறைவன், விதி என்பவற்றை ஏற்காதவர். ஆதலின் அவர்கள் சிலப்பதிகார மூலக்கதையைச் சிதைக்காமல், தம் கொள்கைகட்கு முரண்படுகின்ற இடங்களில் சிற்சில மாற்றங்களையும் புதுமைகளையும் செய்து நூல்கள் இயற்றலா யினர். இவ்வகையில் எழுந்தவையே பாவேந்தர் பாரதிதாசனின் கண்ணகி புரட்சிக் காப்பியமும், முத்தமிழறிஞர் கலைஞரின் சிலப்பதிகார நாடகக் காப்பியமும்.

புலவர் பெ. வரதராசன் அவர்கள் பாரதிதாசனும், கலைஞரும் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் என்னென்ன மாற்றங்களை, புதுமைகளைச் செய்துள்ளனர் என்பதை,

(அ) கதைக் கருவில் புதுமை

(ஆ) காப்பிய அமைப்பில் புதுமை

(இ) உள்ளடக்கத்தில் புதுமை

என மூன்று இயல்களில் இந்நூலுள் வெகு சிறப்பாக ஆராய்ந் துள்ளார். கண்ணகி புரட்சிக் காப்பியத்திலுள்ள புதுமைகளைக் கூறுவதே ஆய்வின் நோக்கமாதலால் இவ்வணிந்துரையிலும் அதுவே கொள்ளப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரப் பகுப்பு

சிலப்பதிகாரம் காண்டம் என்னும் பெரும் பகுப்பையும் காதை என்னும் உட்பகுப்பையும் கொண்டுள்ளது. புகார்க்

காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று காண்டங்களையும் அவற்றுள் முறையே 10, 13, 7 ஆக 30 காதைகளையும் கொண்டுள்ளது.

மணிமேகலைக் காப்பியம் காண்டப் பகுப்பின்றி 30 காதைகளை மட்டும் பெற்றிருக்கிறது.

சீவக சிந்தாமணியும் காண்டப் பகுப்பின்றி 13 உட்பகுப்பு களை இலம்பகம் எனும் பெயரில் கொண்டிருக்கிறது.

பெருங்கதை காண்டங்களைக் கொண்டு உட்பகுப்பு ஒவ்வொன்றும் அப்பகுதியில் அடங்கியுள்ள செய்திக்கேற்ப சாங்கியத்தாயுரை, யூகிசாக்காடு என்பன போன்று தலைப்புப் பெயர் பெற்றுள்ளன.

காப்பியங்களில் பொதுவாகப் பெரும்பகுப்பு காண்டம், பருவம் என்றும், உட்பகுப்பு காதை, இலம்பகம், படலம் என்றும் பெயர் பெறும். கம்பராமாயணம், காண்டம், படலம் என்னும் பிரிவுகளைக் கொண்டது. வில்லிபாரதம், பருவம் சருக்கம் எனும் பகுப்புகளைக் கொண்டது. இன்றைய கவிஞர்கள் இம்முறைகளில் ஒன்றைப் பின்பற்றியோ அல்லது வேறுவகையிலோ காப்பியங்களைப் படைத்திருக்கக் காண்கிறோம். பாரதியார் பாஞ்சாலி சபதத்தை இரண்டு சருக்கங்களில் எழுதியுள்ளார். பாரதிதாசன் அவர்கள் கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் மூன்று காண்டங்களைக் குறிப்பிட்டு உட்பகுப்புக்கு 'இயல்' எனப் பெயர் தந்திருக்கிறார். அவருடைய பாண்டியன் பரிசு காண்டப் பிரிவின்றி 'இயல்' பிரிவு மட்டுமே கொண்டுள்ளது.

ஆரியப் பண்பாட்டுக் கலப்பு

சங்க காலத்தில் காதலர் களவொழுக்கத்தில் ஈடுபட்டன ராயினும் பெற்றோரின் இசைவு பெற்றுத் திருமணம் முடியும் போதுதான் களவு கற்பெனப்படும். பண்டைத் தமிழ் மக்களால் களவுக் காதலில் இருந்தவர்கள் கற்பு மணம் புரிந்து கொள்வதே அறமெனப்பட்டது. பண்டைய தமிழ்த் திருமணங்கள் எவ்வாறு நடைபெற்றன என்பதைச் சங்க இலக்கியப் பாக்கள் வழி அறிகிறோம்.

மணமகனுடைய பெற்றோர் தம் சுற்றம் சூழ மணமகள் வீடு சென்று பெண் கேட்பர். அவர்கள் இசைவு தந்ததும் விருந்துண்டு மணவினை நாளைக் குறித்துக்கொண்டு திரும்புவர். பின்னர் உறவினர்க்கும் நட்பினர்க்கும் மணவினை நாளை அறிவிப்பர். திருமணம் பெண் வீட்டில் நடைபெறும். மணநாளன்று மணவீடு

நன்கு அணி செய்யப்படும்.வாயிலில் பந்தலிட்டு, முற்றத்தில் மணல் பரப்பி, பந்தலில் மாலைகளை நாற்றி (தொங்கவிட்டு), வீட்டினில் விளக்கேற்றி ஒளியூட்டுவர். விருந்தினர்க்கு வழங்குவதற்கு உழுத்தங் கஞ்சியும் பெருஞ்சோறும் ஆயத்தம் செய்து வைப்பர்.

விடியற்காலை, பல்லியம் முழங்க இல்லுறை தெய்வத்தை எல்லாரும் வழிபடுவர். செம்மைசால் முதுபெண்டிர் பூவும் நெல்லும் கலந்த நீர் நிறைந்த குடங்களைத் தம் தலைமீது தாங்கி வருவர். மணமகளை மனையிலிருத்தி மக்களைப்பெற்ற வாழ்வரசியர் நால்வர், முதியோர் சுமந்து வந்த நீரை வாங்கி, "நங்காய்! கற்புவழி நின்று கணவனுக்கேற்ற மனைவியாய் வாழ்வாயாக!" என வாழ்த்தி நீராட்டுவர். பின்னர் அவளுக்கு ஆடை அணிகலன் அணிவித்து மணப்பந்தருக்கு அழைத்து வந்து, "பெருமைமிகு வீட்டிற்குரிய தலைவியாவாய்" எனக் கூறித் தலைவனிடம் ஒப்படைப்பர். அன்றிரவே தலைவனும் தலைவியும் ஓரில்லில் தங்கி இன்புறச்செய்வர்.

இத்தகைய இயல்பான பொருந்திய தமிழர் திருமண நடைமுறையில் காலப்போக்கில் ஆரியர் திருமணமுறை நுழையலாயிற்று. கோவலன் கண்ணகி திருமணம்,

நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியம் சகடுஅணைய வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட
தீவலம் செய்து

நடைபெற்றதாய்ச் சிலப்பதிகாரக் காப்பியம் கூறுகிறது.

பாவேந்தர், திருமண வீட்டிற்கு வந்த பார்ப்பனனிடம் ஆரியச் சடங்குகளைச் செய்யக் கூடாது; செந்தமிழால் அவையோர் வாழ்த்தத் திருமணம் நடைபெற வேண்டுமெனச் சேந்தனார் எனும் பெரியவர் உரைத்ததாய் எழுதுகிறார்.

செந்தமிழால் அவையத்தார் வாழ்த்த லன்றி,
நாயைப்போல் குரைப்பதெலாம் நம்பால் வேண்டாம்.

தமிழர் திருமணத்தில் தமிழன்றி வேற்றுமொழி கூடாது என்பதை அழுத்தந் திருத்தமாய்ப் பாவேந்தர் கூறுவதைக் காண்கிறோம்.

பார்ப்பனிய எதிர்ப்பு

கோவலனைப் பிரிந்திருந்த கண்ணகியிடம் தேவந்தி எனும் பார்ப்பனப் பெண், "காவிரி கடலொடு கலக்கும் இடத்திற்கு அருகில் சோமகுண்டம், சூரிய குண்டம் என இரண்டு பொய்கைகள் உள்ளன. அவற்றில் மூழ்கி அருகேயுள்ள காமவேள்

கோட்டத்தைத் தொழும் மகளிர் கணவனொடு சேர்ந்து இன்புறுவர். அவற்றில் நாமும் ஒரு நாள் சென்று மூழ்குவோம்" என்றபோது கண்ணகி அவளிடம், "இச்செயல் எமக்குப் பெருமையுடையதன்று" எனக் கூறியதாய் இளங்கோ காட்டுகிறார். ஆனால், பாவேந்தரோ இது ஆரியப் பண்பாடெனக் கண்ணகி இகழ்ந்துரைப்பதாய்க் காட்டுகிறார்.

மெய்வைத்த தமிழர்களின் ஒழுக லாற்றை
மிகச்சிறிதும் அறிகிலாய்; ஆரி யர்தம்
பொய்வைத்த வாழ்க்கையினை நன்றே என்று
புளுகுவார் புளுகல்லால் ஏதும் காணாய்

என்கிறாள், கண்ணகி.

சேரன் செங்குட்டுவன்வாயிலாகப் பாரதிதாசன்,

இறந்தானின் உடலுக்குத் தேரும் தாரும்
ஏற்பாடு செய்வதும்,

அவன் வேறிடத்தில் சிறந்திருக்கிறான் என்று எண்ணுவதும், அவ்விடத்தில் அவன் சீரடைய இங்குள்ள பார்ப்பனர்க்கு முறம் அரிசி முதல், செருப்பு ஈறாய் முடிவணங்கிக் கொடுப்பதுவும் மடமையாகும் என்பதைத் தெளிவுபடுத்தி ஆரியக் கொள்கைகளின் வேருக்கு வெந்நீர் விடுகிறார். அதே மன்னன் மொழியாக, "குலம் ஒன்று; தெய்வம் ஒன்று என்பதான தமிழர் கொள்கைக்குப் புறம்பாக இங்குக் குடியேறியவர்கள் தம் நலத்திற்காகப் பல்லாயிரம் தெய்வங்களைப் பேசுகின்றார்கள். பன்றி ஒரு தெய்வமாம்; நாயும் அப்படித்தானாம். அவற்றின் பச்சையூன் இவர்கட்கு உணவாம்! என்றைக்கு இத்தீயொழுக்கம் திருந்தும்?" என ஆரியத்தை மேலும் சாடுகிறார்.

தேவர்க்கு உவப்பாகும் என்று கூறி ஆடு வெட்டும் சிறு செயலைத் தமிழரெலாம் வெறுக்கின்றார்கள். ஒருத்தி பல ஆடவரை மணப்பதைத் தமிழர்கள் கான்றுமிழ்கிறார்கள்.

யாவருமே பிறப்பினிலே நிகர்என் பாரை
எதிர்ப்பாரைத் தமிழரெலாம் எதிர்க்கின் றார்கள்

என ஆரிய மன்னர்களிடம் சேரன் செங்குட்டுவன் பேசுவதாயும் பாவேந்தர் படைத்துக் காட்டுகிறார்.

இறை மறுப்பு

பாவேந்தர் இறை மறுப்புக் கொள்கையுடையவர். ஆதலின் சிலப்பதிகாரத்தில் தெய்வங்கள்பற்றி வரும் இடங்களையெல்லாம் தம்முடைய, 'கண்ணகி புரட்சிக் காப்பியத்தில்' கூறாது விட்டிருக் கிறார்.

சிலப்பதிகாரத்தில் இந்திரவிழா என்றிருப்பதை மாற்றி, 'காவிரியாற்றுத் திருநாள்' எனக் கொள்கிறார். இந்திர விழாவில் ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும், அரசகுமரரும், வணிககுமரரும் கூடுகின்றனர். காவிரியின் சங்கமத் துறையில் நல்ல புண்ணிய நீரைப் பொற்குடங்களில் முகந்து வந்து இந்திரனைத் திருமுழுக்கு ஆட்டினர். சிவபெருமான், முருகன், பலதேவன், திருமால் ஆகிய கடவுளர்க்கு இனிய வழிபாடு நடைபெற்றது என்றெல்லாம் இளங்கோவடிகள், இந்திரவிழாவில் நடைபெற்ற கடவுள் வழிபாட்டினைக் கூறுகிறார். பாவேந்தர் அவர்களோ எந்தத் தெய்வத்தையும் கூறாது, நாட்டு மகளிரும் ஆடவரும் காவிரியை வாழ்த்தி, நீராடி, வீடுவந்து உடைமாற்றி, அணிகள் அணிந்து, அரசனிடம் சென்று அவனுக்கு வாழ்த்துக் கூறித் திரும்பியதும், விருந்தினரோடு உண்டார்கள் என்பதே காவிரியாற்றுத் திருநாள் எனப் புதுமை படைக்கிறார்.

கொற்றவையைப் புகழ்ந்து பாடும் வேட்டுவ வரி, திருமாலைப் போற்றித் துதிக்கும் ஆய்ச்சியர் குரவை, முருகனின் பெருமையை விவரிக்கும் குன்றக் குரவைப் பாடல்கள் இளங்கோவின் சிலப்பதிகாரத்தில் சிறந்த இசைப் பாடல்களாய் விளங்குகின்றன. பாரதிதாசன் இவற்றை முற்றிலுமாய்த் தாம் எழுதியுள்ள காப்பியத்தில் நீக்கியிருக்கிறார்.

ஊழ்வினை இல்லை

'ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்' என்பது இளங்கோவடிகளின் காப்பியக் கருத்து. 'ஊழ்வினை' என்பதைக் கூறாமலேயே விடுகிறார் பாவேந்தர்.

மாதவி பாடிய கானல்வரியைக் கேட்ட கோவலன், "நான் கானல்வரிப் பாடல்களைப் பாடினேன். வஞ்சனையுடன் கூடிய பொய்கள் பலவற்றைக் கூட்டும் இவளோ வேறொன்றின் மீது மனம் வைத்துப் பாடினாள்" என்று எண்ணினான். யாழிசையை ஒரு காரணமாகக் கொண்டு அவனுடைய முந்தைவினை வந்து அவனைச் சினங்கொள்ளச் செய்தது. ஆதலின் அவளைப் பிரிந்து தனியே சென்றான்.

> யாழ்இசைமேல் வைத்துத்தன் ஊழ்வினை வந்து உருத்ததுஆகலின்
> உவவுற்ற திங்கள்முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்க்

கோவலன் பிரிந்து சென்றான் என்பார் இளங்கோவடிகள்.

பாவேந்தர் ஊழ்வினையால் என்று சொல்வதைத் தவிர்த்து,

நான்ஒன்று பாடினேன்; அவளும் அஃதே
நவிலாமல் வேறொன்று நவில லானாள்;
தான்என்னை மறுத்தஒரு குறிப்புக் காட்டித்
தனிக்கின்றாள் என்று,கோ வலன்நி னைந்து
மீன்விழி மேல்இணைத்த கைவி லக்கி
விரைந்து சென்றான்

எனக் கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் குறிப்பிடுகிறார்.

பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலனைக் கொன்று சிலம்பைக் கொண்டுவருமாறு கூறியதற்கு ஊழ்வினையே காரணம் என இளங்கோவின் சிலப்பதிகாரக் காப்பியம் கூறும்.

வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினைஅலர் வேம்பன் தேரான் ஆகி
ஊர்காப் பாளரைக் கூவி ஈங்குஎன்
தாழ்பூங் கோதை தன்கால் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகில்
கொன்றுஅச் சிலம்பு கொணர்க ஈங்குஎன

இளங்கோ காட்டும் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறுகிறான்.

நிலமகள் மிக்க துயரம் அடையவும், மன்னனுடைய செங்கோல் வளையவும், கோவலனின் பண்டைய வினை அவனைப் பற்றியதே காரணம் என்கிறார், இளங்கோ.

காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து

என்கிறது சிலப்பதிகாரக் காப்பியம்.

பாரதிதாசனின் கண்ணகி புரட்சிக்காப்பியம் இங்கு ஊழ்வினையைக் காரணமாய்க் காட்டவில்லை.

பாண்டியனிடம் கண்ணகி வழக்காடுவதை இளங்கோவினும் விரிவாக எடுத்துக் காட்டுகிறார், பாவேந்தர்.

கள்வனைநீர் கண்டீரோ? விற்க வந்தோன்
கைச்சிலம்பை ஆய்ந்தீரோ? மாசி லாதோன்
விள்வனைத்தும் கேட்டீரோ? ஒருதீ யோன்தான்
விண்டதனை ஆராயாமல், 'கொல்வீர்' என்று
விள்வதுவும் தக்கதென எண்ணிட் டீரோ?
விளைவுண்மை காணீரோ? வாழ்க்கை இன்பம்
கொள்வாளும் கொள்ளாமல் செய்தீர்; என்னைக்
கொண்டானைக் கொன்றீரே என்று கூறி

அவள் வாதம் நீள்கிறது. மேலும் அவ்வழக்கை விசாரிக்க அரசனுக்கு உரிமையில்லை என்றும் கூறுகிறாள் : "அரசனாகிய அவன், நாட்டின் பொதுச் சொத்தை இழந்துவிடவில்லை. தன் தனிச் சொத்தை இழந்தவன்; அந்நிலையில் அவன் ஒரு வழக்காளி;

முறையீட்டாளன். இவ்வாறாக, ஒரு தனிஆள் வழக்கைத் தானே தன்பால் சொல்லிக் கொள்வதும் தீர்ப்பையும் தானே கூறிக் கொள்வதும் முறையா?

சமயப்பற் றோ,தீய சாதிப் பற்றோ
தந்நலப்பற்றோ, மற்றும் எந்தப் பற்றும்
உமியளவும் இல்லாத தமிழ்ச்சான் றோர்கள்
உதவியது சட்டம்!அதில் உள்ள வாறே
ஆட்சியினை நடத்துவோன் அரசன்; ஐயோ
தமியேனின் அருந்துணையைக் கொன்று போட்டான்
சட்டம்எங்கே? சட்டநெறி நின்ற தெங்கே?
அரசனது விளையாட்டே சட்ட மானால்
அச்சட்ட மேநாட்டை ஆளும்;

என அரசனின் அதிகாரத்தை இடித்துரைக்கிறாள். இற்றை நீதிமன்ற வாதம்போலக் காப்பிய நீதி மன்றத்தை மாற்றியிருக்கிறார், பாவேந்தர்.

மதுரை எரிந்தபோது, கண்ணகி முன் மதுராபதித் தெய்வம் தோன்றி, பாண்டியனின் செங்கோற் பெருமையைச் சொல்லி, 'மதுரை தீயில் அழியும் என்றொரு சொல் முன்னரே உண்டு' என்று கூறியதோடு, முற்பிறவியில் கோவலன் பெற்ற சாபமே இவ்வாறு இப்பிறவியில் அவன் இறக்கக் காரணம் என நீலியின் கதையைக் கூறுகிறது. இச்செய்திகளைப் பற்றி எதுவும் பேசாது விட்டுவிடுகிறார் பாரதிதாசன்.

தமிழ்ப் பற்று

இடைக்காலத்தில், வந்தேறிய மொழிகளால் செந்தமிழுக்குத் தீமை நேர்ந்ததால் தமிழின் பெருமையை, தமிழின் உயர்வைத் தமிழ் மக்களுக்கு உணர்த்த வேண்டிய கடமை தமிழ்ப் புலவர்களுக்கு நேரிட்டது. ஞானசம்பந்தர், சேக்கிழார், குமரகுருபரர் போன்றோர் தமிழின் பல்வேறு சிறப்புகளைப் பாடியிருக்கக் காணலாம். இந்தித் திணிப்பால் தமிழ் கெடும் என்பதை எடுத்துக் காட்டி இந்தி எதிர்ப்புப் பாடல்கள் பாடியவர், பாவேந்தர் பாரதிதாசன். பிற எக்காலத்திலும் நேரிடாத நெருக்கடி அவர் காலத்தில் தமிழுக்கு நேரிட்டது. ஆதலின் தமிழின் புகழை, மேன்மையை மற்றெவரினும் மிகுத்துப் பேசவேண்டியவர் ஆனார். எதைப் பாடினாலும் எங்கெங்கு முடியுமோ அங்கங் கெல்லாம் தமிழைப் பெருமையாய்ப் பாடியிருக்கக் காணலாம். அவ்வகையில் கண்ணகி புரட்சிக் காப்பியத்தில் தமிழுக்கு அவர் தந்துள்ள முதன்மையைக் காப்பியம் முழுவதுமே காணமுடிகிறது.

கோவலன் கண்ணகி திருமணத்திற்கு வந்தவர்களில் முக்கியமானவர்கள் என ஆண் பெண் பெயர்களாக எண்பதுக்கு மேற்பட்ட பெயர்களைப் பட்டியலிட்டிருக்கிறார்.

தமிழரின் தமிழ்க்கு முந்தை
தமிழ்ப்பெயர் பெறுதல் வேண்டும்

என்று பாடியவர் ஆதலால், தமிழ்ப் பெயர்கள் வேண்டுவோர்க்குப் பயன்படும் வகையில் பெயர்களை அடுக்கியிருக்கிறார்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் கண்ணகியைப் பாராட்டும் கோவலன்,

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே!

என்பான்.

பாவேந்தர் படைத்துள்ள கோவலனோ,

என்வாழ்வின் நிறைஅமிழ்தே! நினைக்கும் தோறும்
இனிப்பவளே! வாய்திறந்து பேசந் தோறும்
தென்தமிழின் நறுஞ்சாந்தாய்த் தித்திப் போளே!

என்கிறான். கண்ணகியின் பேச்சு தமிழெனத் தித்திக்கிறதாம்! வாய்க்குமிடமெல்லாம் கவிஞர் தமிழை இழையோட விடுகிறார்.

பாவேந்தர் காட்டும் சேரன் செங்கட்டுவன், படை எடுத்துச் செல்லும் வீரர்களிடம், தலை வெட்டப்பட்டு வீழும்போதும் தமிழரின் நாக்கு, 'வெல்க தமிழ்' என்றே பேசவேண்டும் என வீரவுரையாற்றுகிறான்.

வீசுதலை விழும்போதும் தமிழர் நாக்கு
'வெல்கதமிழ்' எனவேண்டும்.

செங்குட்டுவன், வடநாட்டுப் படையெடுப்புக் குறித்து வஞ்சினம் உரைத்தபோது அவையிலிருந்தவர்,

யாங்குள்ளான் தமிழ்பழித்தான் ஆங்குச் சென்றே
அழித்துயர்க என்றார்அங் கிருந்தோர் யாரும்

என்கிறார் பாவேந்தர்.

செங்குட்டுவனின் வடநாட்டு வெற்றியை அவனுடைய படைவீரர்கள் வெற்றிச் சங்கு முழங்கப் பாடுவதாகவும் ஒரு காட்சியைப் படைத்துக் காட்டுகிறார்.

தமிழர்க்குப் பகையானார் வாழ்வ தெங்கே?
தலையிற்றுக் குவியாதோ ஊது சங்கே!
எமைநத்திப் பிழையாதார் போவ தெங்கே?
இடருற்றுக் கெடுவாரே ஊது சங்கே!..

தமிழ்வெற்றித் திருநாளே வாழ்க என்றே
திசைஎட்டப் படிமீதே ஊது சங்கே!

மதுரையைக் காணச்சென்ற கோவலன் பரத்தையர் தெரு, அங்காடித்தெரு, மணிக்கல் தெரு, பொன்வணிகத் தெரு, அறுவைத்தெரு, கூலத்தெரு ஆகியவற்றைக் கண்டு திரும்பியதாக இளங்கோ பாடுகிறார். தமிழுக்கு முதன்மை தர விழையும் பாவேந்தர், அவன், உயர்ந்த கொள்கையுடைய தமிழ்ப்புலவர்களின் பேரவை, பெருமாடங்கள் நிறைந்த தெருக்கள், வாணிக நிலையங்கள், அறநிலையங்கள், கல்விக் கழகங்கள் முதலியவற்றைக் கண்டு திரும்பினான் என்கிறார். தமிழ்ப்புலவர்கள் பேரவையை மதுரையில் முதலில் சிறப்பித்துச் சொல்கிறார் பாவேந்தர்.

இவ்விடத்தில் கலைஞருடைய நாடகக் காப்பியத்திலுள்ள வீரமிக்க வஞ்சின உரையை இந்நூலாசிரியர் பொருத்தமுற எடுத்துக் கூறியுள்ளார். "தமிழை இகழ்ந்தார்கள் வடநாட்டுத் தருக்கர்கள்; வள்ளுவன், சாத்தனார், பாவாணர், பரணர், இளங்கோவடிகள், பாண்டியன் நெடுஞ்செழியன், அறிஞர், கவிஞர், கலைவாணர், கலைஞர் என்றிவர்களையெல்லாம் இகழ்ந்தார்கள்! எனவே வட ஆரிய மன்னர்க்குப் புத்தி புகட்டுவோம், தூசு தட்டுங்கள்; இமயத்தை முட்டுங்கள்; தமிழன் தோற்றதில்லை" எனச் செங்குட்டுவன் கூறுவதாய்க் கலைஞர் இன்றைய தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டி விடுகிறார்.

மாற்றமும் புதுமையும்

கதை இயல்பாக நடந்த ஒன்றாய்த் தோன்றும்படி எங்கெங்கு என்னென்ன மாற்றங்கள் வேண்டுமோ அவற்றைப் பாவேந்தர் செய்து கொள்கிறார்.

கோவலன் பிரிவால் கண்ணகி,

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்

இழந்திருந்ததாய் மாதரி வீட்டிலிருந்தபோது கோவலனிடம் கூறுகிறாள். இல்லறம் நடத்திய காலத்தில் அவள் இவற்றையெல்லாம் செய்தாள் என்பதைப் பாவேந்தர் சுட்டிக்காட்டிக் கண்ணகியின் கூற்றை உண்மையாக்குகிறார். கண்ணகி தன் வீட்டுக்கு வந்த நூற்றுக்கு மேற்பட்டவர்க்கு அவளே சமைத்து விருந்து படைத்தாள் என அவளுடைய இல்லற வாழ்க்கையைக்

கூறும்போது சொல்கிறார். அதன்வழி 'விருந்தெதிர் கோடல்' முன்னர் நடைபெற்றதை விளக்கிவிடுகிறார்.

அரசியின் சிலம்பு எவ்வாறு திருட்டுப் போனது என்பது சிலப்பதிகாரக் காப்பியத்தில் விளக்கப்படவில்லை. அது எவ்வாறு நடந்தது என்பதைப் பாவேந்தர் சுட்டுகிறார். அரசி ஒருநாள் இரவில் தன் மணாளனின் புணர்ச்சிக் காலத்தில் உடம்பில் பட்டு உறுத்தும் எனத் தன் சிலம்புகளைக் கழற்றி ஒரு பெட்டகத்தின் மேல் வைத்தாள். காலையில் துயிலெழுப்ப வந்த வஞ்சி எனும் பணிப் பெண் ஒரு சிலம்பை மறைத்து எடுத்துச் சென்று தன் காதலன், 'கருங்கை' என்பவனிடம் தந்தாள். அவர்கள் திருமணத்திற்குப் பணம் தேட அவள் இவ்வாறு செய்தாள்.

கருங்கை என்பவனைப் பொற்கொல்லன் எனப் பாவேந்தர் குறிப்பிடவில்லை; ஒரு குறிப்பிட்ட இனத்தவர்மீது தோன்றும் பழியை நுண்ணுணர்வுடன் தவிர்த்து விடுகிறார்.

வீதியில் கோவலன், 'சிலம்பு வாங்குவாருண்டோ' என்று கூவி வருகிறான். அதைக்காணும் கருங்கை அரசனிடம் வந்து கூறினான் என்று சொல்வதன்வழி, பொற்கொல்லன் எனும் பாத்திரத்திற்கே இடமில்லாமல் செய்துவிட்டார்.

வெட்டுண்ட கோவலனைக் கண்ணகி கண்டபோது, அவன் உயிர்பெற்றெழுந்து, அவளிடம் பேசி, விண்ணுலகு சென்றான் என்கிறது சிலப்பதிகாரக் காப்பியம், "செத்தவன் பிழைப்பதாவது" என்ற எண்ணத்தால் இச்செய்தியைப் பாவேந்தர் குறிப்பிடாம லேயே விட்டுவிடுகிறார்.

கண்ணகி ஆயிரக்கணக்கானவர்களோடு சேர்ந்து நீதி கேட்க மன்னனிடம் சென்றாள். மன்னவன் தவறுணர்ந்து மாண்டான். கண்ணகி ஆத்திரத்தால் மக்கள்முன் தன் புனைவுகளை ஒவ்வொன்றாய்க் கழற்றி வீசினாள். "என் கண்ணாளர் தனது வலது கையால் தொடக்கத்திலேயே முதலில் ஏந்தும் இடது முலை இன்னும் எதற்கு" என அதைப் பிய்த்து எறிகிறாள். சினங்கொண்ட மக்கள் கூட்டம் ஊருக்குத் தீயிட்டது; ஊர் வெந்தது என மதுரையில் நெருப்புப் பற்றியமைக்குப் பொருத்தமான காரணத்தைப் பாவேந்தர் இட்டுரைக்கிறார்.

கண்ணகி மதுரையிலிருந்து வைகைக் கரையைப்பற்றிப் பதினான்கு நாள்கள் நடந்து நெடுவேள் குன்றம் அடைந்து அதன் மீது ஏறி ஒரு வேங்கைமர நிழலில் நின்றாள். அப்போது தேவர்கள்

அங்கே தோன்றி, கண்ணகியை வாழ்த்தி மலர் மாரி பொழிந்தனர். பின்னர், கண்ணகி தன் கணவனாகிய கோவலனுடன் வான ஊர்தியிலே ஏறி வானுலகம் சேர்ந்தாள். இஃது இளங்கோவடிகள் கூறும் கண்ணகியின் முடிவு. ஆனால் பாவேந்தரோ, கண்ணகி நெடுவேள் குன்றத்தில் குறவர்பால் தன்னிலை கூறி அழுது உயிர்விடுகின்றாள். அக்குன்றவாணர் கண்ணகியின் உடலைப் புதைத்தனர் என்கிறார்.

இவ்வாறு கதை நிகழ்ச்சிகளையெல்லாம், நடைமுறைக்கு ஒத்தவையாக இருக்கும் வகையில் மாற்றங்களையும் புதுமைகளையும் பாவேந்தர் படைத்துக் கொண்டிருப்பதால் இது ஒரு நடைமுறைக் காப்பியம் என்று இந்நூலாசிரியர் நிறுவிக் காட்டுகிறார். தெய்வத்தன்மை ஏற்றாமலேயே மொழிக்கும் பண்பாட்டிற்கும் நலம்தரும் கருத்துகளைக் கூறமுடியும் என்பதை இதன் மூலம் நிறுவுகிறார்.

ஆரியர் சூழ்ச்சியைக் கூறி, தமிழர்கள் விழிப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்னும் கருத்தையே காப்பியத்தின் ஊடிழையாய்க் கொண்டிருக்கிறார் பாவேந்தர்.

> தமிழ்ஒ ழுக்கவேர்இருக்கும் வரைத மிழ்ச்சீர்
> தடங்கிளையும் அடிமரமும் இருக்கும்; இந்நாள்
> தமிழ்ஒழுக்க வேரழிந்தால் தமிழர் வாழ்வு
> தலைகவிழும்......

என எச்சரிக்கிறார்.

"தனித் தமிழில் சில பாடல்களால் இளங்கோவடிகளின் கருத்தைக் கலப்பில்லாமல் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஒரு நூல் செய்ய வேண்டுமென்று தோன்றியதால் இக்கண்ணகி புரட்சிக் காப்பியத்தைச் செய்துள்ளேன். இதனால் தமிழர்கள் தமிழின் சுவைகண்டு வாழ்வர்" எனப் பாவேந்தர் பாரதிதாசன் இக்காப்பியத்தை எழுதியதற்கான காரணத்தைக் கூறியுள்ளார்.

வாய்க்குமிடமெல்லாம் தமிழ், தமிழர் பண்பாடு பற்றிப் பேசுவதைப் பாவேந்தர் முக்கியக் குறிக்கோளாய்க் கொண்டிருக்கிறார். காப்பியத்தை முடிக்கும்போது இளங்கோவடிகள் கதையைக் கேட்பவர் மனத்தில் கொள்ள ஓர் அறவுரைத் தொகுப்பைத் தந்துள்ளார். பாவேந்தர் நிறைவுக் காட்சியை அறவுரையாக இன்றித் தமிழ் வாழ்த்தாக முடித்திருக்கிறார்.

வாழியகண் ணகிகற்பு! வைய மெல்லாம்
வாழியசெந் தமிழ் மாண்பு! தமிழ கந்தான்
வாழிய!வாழி யர்தமிழர்! யாண்டும் நன்று
வாழுகின்ற தமிழரெலாம் தமிழர் ஆட்சி
ஆழ்கடல்சூழ் தமிழ்நிலத்தில் நிலவச் செய்தல்
அறம் என்று திறம்காட்டும் தோள்கள் வெல்க!
வாழியவே, 'புலி,கயல், வில்'ஒருங் கியன்ற
மணிக்கொடிதான்! வாழ்கஅறம்! வாழ்க நன்றே!

இவ்வாறாய்ப் பாவேந்தர், எங்கெங்குத் தமிழ், தமிழர் நலம் பேச இடங்கிடைக்கிறதோ அங்கெல்லாம் அதனைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

சிலப்பதிகாரத்தைப் புதுநோக்கில் எழுதியிருப்பது போலவே பாவேந்தர் மணிமேகலைக் காப்பியத்தையும், 'மணிமேகலை வெண்பா'என எழுதியுள்ளார். அதில் அவர் கூறுகிறார். "ஆபுத்திரன் தான் பெற்ற அமுதசுரபி எடுக்க எடுக்கக் குறையாமல் உணவுதரும் என்பது என்ன? மணிமேகலையிடம் அக்கலம் வந்தது. அப்போதும் அதுதன் தன்மையில் குறைந்துவிடவில்லை. எடுக்க எடுக்க உணவு குறையாமல் இருந்தது. இது பழைய மணிமேகலையில் உள்ளது. இப்படிக் கூறப்படுவதன் கருத்து என்ன என்பதை விளக்க வந்ததுதான் என் மணிமேகலை வெண்பா."

"பழைய மணிமேகலை என்பதில் அடிமரத்தை மட்டும் நான் கூறிக் கிளைகளைக் கூறாது விடுத்ததன் நோக்கம் அந்தப் பழைய மணிமேகலைக் காப்பியத்தையும் மக்கள் மறவாமல் அடிக்கடி படிக்கவேண்டும் என்பதற்காகவே" என்கிறார்.

"இப்படிக் கூறப்படுவதன் கருத்து என்ன?" என்று பாவேந்தர் சிந்திக்கிறாரே அதுவே புதுமைக் காப்பியம் தோன்றுதக்குக் காரணம்.

சிலப்பதிகாரத்திலும் அடிமரத்தை முழுதாக எடுத்துக் கொண்டு சில கிளைகளைக் குறைத்தும், சில கிளைகளை அறவே நீக்கியும், மேலும் சில பூங்கொடிகளை அதில் படரவிட்டும் செய்திருப்பதுவே பாரதிதாசனின் கண்ணகி புரட்சிக் காப்பியம்.

புலவர் பெ. வரதராசன் இந்த ஆய்வை மிகச் செம்மையான முறையில் செய்துள்ளார். பாரதிதாசன் படைத்த புதுமைகளையும், அது எவ்வாறு புதுமையுடையதாய் இருக்கிறது என்பதையும் வெகு தெளிவாக விளக்கியுள்ளார்.

பாவேந்தர் மணிமேகலை வெண்பாவில் கூறியிருப்பது போல புலவர் பெ. வரதராசனின் இவ்வாய்வு பழைய சிலப்பதிகாரத்தை முழுமையாய் அடிக்கடி மறவாமல் படித்துவரத் துணை செய்யும் என்பது தெளிவு.

இத்தகைய ஆய்வுகள் இன்னும் பலசெய்து, மேலும் உயர் பட்டங்கள் பெற்று, வாழ்வில் எல்லா நலன்களும் நிறைய, புலவர் பெ. வரதராசன் பன்னெடுங்காலம் சிறந்து வாழ உளமார வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	கவிக்குயில் பெ. வரதராசன்
வகைமை	ஆய்வுக் கட்டுரை
வெளியீடு	தேன்தமிழ்ப் பதிப்பகம், கொழுந்தம்பட்டு, திருவண்ணாமலை மாவட்டம். (1998)

7

அகதி

'அகதி' காவியம்

'அகதி' எனும் காவியத்தைக் கவிஞர் இராமச்சந்திரன் நாமெல்லாம் கண்ணீர் வடிக்கவும், சீற்றங் கொள்ளவும், வஞ்சினம் உரைக்கவும், ஏக்கங் கொள்ளவும் எழுதியிருக்கிறார்.

கதைக்காக ஆசிரியர் காப்பியம் எழுதவில்லை. ஈழத்தில் தமிழர்கட்கு இழைக்கப்படும் கொடுமைகள், சிங்களப் படையினரின் வெறியாட்டங்கள், தோணிக்காரர்கள் படும்பாடு ஆகியவற்றைச் சித்திரித்துக் காட்டுவதற்காக ஒரு கதையைப் படைத்துக் கொண்டிருக்கிறார். அவ்வளவே!

காவியக் கதை

ஈழத்திலிருந்து கள்ளத்தோணியில் தமிழகம் வந்த ஒரு கன்னிப்பெண் தன்னை மாய்த்துக் கொள்ளக் கடலில் குதிக்கிறாள். அவள் பெயர் அயிரை. மூழ்கவிருந்த அவளைத் தோணியோட்டி காப்பாற்றித் தமிழகக் கரையில் சேர்க்கிறான். அத் தோணி ஓட்டியின் பெயர் சிங்கன். அயிரையை யார் குடும்பத்தில் சேர்த்துப் பதிவது என அதிகாரிகள் கேட்டபோது, படகு முதலாளியின் மகன் நாகன் என்பான் தான் அழைத்துச் செல்வதாய்க் கூறினான். நாகனோ மிகக் கொடியவன். என்ன நடக்குமோ என்று மக்கள் அஞ்சியிருந்த நிலையில் அயிரை துணிவுடன், 'என்னைக் காப்பாற்றிய சிங்கன் வீட்டிலேயே தங்குவேன்' என்றாள். நாகன் கறுவிச் சென்றான். அயிரை, சிங்கன் இருவரும் ஒருவரையொருவர் விரும்பித் திருமணம் செய்துகொண்டனர். பாரி, என்பவள் சிங்கனின் தங்கை.

பழிவாங்கும் எண்ணத்துடனிருந்த நாகன் குப்பத்திற்குத் தீ வைக்க ஏற்பாடு செய்தான். பற்றி எறிந்தது தீ. அப் பதற்றத்தில் நாகனின் ஆட்கள் அயிரையைத் தூக்கிச் சென்றனர். பாரி, இச் செய்தியைத் தன் மச்சான் வயிரத்திடம் கூறினாள். அவன் ஆட்களுடன் சென்று அயிரையைக் காப்பாற்றி மீட்டு வந்தான்.

குடிசைக்குத் தீ வைத்தவன் நாகன்தான் என்பது தெரிந்ததும் குடும்பத்தினர் அவனை நையப் புடைக்கச் சென்றனர். நாகனின் தந்தை நயினார், இழப்புக்கு ஈடு செய்து விடுவதாகக் கூறி மகனைக் காப்பாற்றினான்.

சிங்கனின் தந்தை வழக்கமாக நயினார்க்குப் படகோட்டுபவன். அவன் உடல் நலம் மிகவும் மோசமான நிலையிலிருந்தபோதும் ஈழத்துக்குத் தோணியை ஓட்டிச் செல்ல வேண்டுமென நயினார் வற்புறுத்தினான். தந்தைக்காகத் தான் ஓட்டிச் செல்வதாகச் சிங்கன் முன் வந்தான். சிங்கன் படகோட்டிச் செல்வதை நாகன் தன் ஆட்கள் மூலம் சிங்களக் கப்பல் படைத் தலைவனுக்கு அறிவிக்க ஏற்பாடு செய்தான்.

சிங்கன் செலுத்தி வந்த படகைச் சிங்களக் கப்பல் பிடிக்க வந்தது. சிங்கன் பொருள்களைக் கடலில் தள்ளிவிட்டுத் தானும் தண்ணீருக்குள் குதித்து மூழ்கினான். அவன் என்ன ஆனான் என்பது தெரியவில்லை. அயிரையும் பாரியும் அளவற்ற கவலை கொண்டனர்.

வயிரம், தான் ஒரு சொந்தப் படகு வாங்கியதும் பாரியைத் திருமணம் செய்வதாகக் கூறியிருந்தான். ஒரு புயல் நாளில் மீன்பிடிக்கச் சில மீனவர்களுடன் வயிரமும் கடலுள் சென்றான். புயல் விடாது மையம் கொண்டது. மீனவர்கள் கரை திரும்ப முடியவில்லை. படகில் மயங்கிக் கிடந்த வயிரத்தைச் சிங்களப் படையினர் பிடித்தனர். 'புலிகளுக்குச் சரக்குக் கொண்டு போகும் தோணியா?' என்று உதைத்துக் கொடுமைப் படுத்தினர். சிங்களச் சிறையில் வயிரம் அடைக்கப்பட்டான்.

'வயிரம் இல்லாத உலகில் வாழ்ந்து என்ன பயன்?' எனப் பாரி, ஒருநாள் இரவில் படகில் ஏறி அது சென்ற வழி சென்றாள்; மயங்கினாள். அப்படகைக் கண்ட ஒரு கப்பல் தலைவன் அவளை எடுத்துப் பிழைக்க வைத்தான். புத்த பிட்சு ஒருவர் அக் கப்பலில் பயணம் செய்தார். அவர் பாரியைத் தன்னிடம் அனுப்பச் சொன்னார். கரை சேர்ந்ததும், 'உரியவர் கேட்கும்வரை அவள் மடத்திலேயே தங்கட்டும்' என அழைத்துச் சென்று விட்டார்.

ஒரு நாள் பிட்சு பொன்னையும் பொருளையும் காட்டி அவளை அடைய முயற்சிக்கையில், இளம் பிட்சு ஒருவர் பெரிய பிட்சுவை அடித்து மூர்ச்சையாக்கிவிட்டு, பாரியை வெளியே கொண்டுவந்து விட்டு, 'ஓடிப் பிழைத்துக் கொள்' என்றார். பாரி கால் சென்ற வழியே ஓடினாள். மயக்கமுற்றவளாய் ஒருவீட்டுத் திண்ணையில் கிடந்தாள். ஒரு மூதாட்டி அவளுக்கு உணவளித்து,

அங்கிருப்பது ஆபத்து எனவும் உடனே வேற்றிடம் சென்று பிழைக்குமாறும் கூறினாள். குண்டு குழி, மேடு பள்ளம் எனப் பாராது பாரி ஓடியபோது ஓரிடத்தில் குண்டு வெடித்துக் குழியில் விழுந்தாள்.

சாந்தன் எனும் தமிழன் அவளைத் தூக்கி வந்து முகம்மது என்ற மருத்தவர் வீட்டில் சேர்த்தான். மருத்துவருடைய மகள் காணாமல் போயிருந்தாள். பாரி காணாமற்போன மருத்துவரின் மகளே போன்றிருந்ததால் தம் மகளே வந்துவிட்டாள் என மருத்துவரும் அவர் துணைவியாரும் பாரியை நன்கு பேணி வந்தனர்.

மருத்துவர் மகன் ரஹ்மான் தன் தங்கை பாத்திமா கல்லூரியிலிருந்து திரும்பியபோது சிங்கள இராணுவத்தினர் அவளைக் கெடுக்க முனைந்ததால் கடலில் விழுந்து உயிர்விட்டாள் என்பதைச் சொல்லி பாரி, பாத்திமா அல்லள் என்பதைத் தெளிவுபடுத்தினான். பாரி அவர்களிடம் தன் மச்சானைத் தேடத் தான் கடலில் சென்றதையும் கடைசியில் ஈழத்தில் அகப்பட்டுக் கொண்டதையும் விவரமாகக் கூறினாள்.

ரஹ்மானுக்குச் சிங்கள உயர் அதிகாரிகளைத் தெரியும். சிங்களச் சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளின் படங்களை வாங்கி வந்து பாரியிடம் காட்டினான். அப்படங்களுள் ஒன்றாக வயிரத்தின் படமும் இருந்தது. ரஹ்மான் தன் செல்வாக்கைக் கொண்டு வயிரத்தைச் சிறையிலிருந்து விடுதலை செய்ய ஆணை பெற்று, அவனை அழைத்து வரப் பாரியையும் தன் காரில் இட்டுச் சென்றான். ஆனால் முதல் நாளே வயிரம் மற்றொரு தமிழருடன் சிறையிலிருந்து தப்பித்துவிட்ட செய்தி கிடைத்தது. அத்தோடு அவன் கிடைத்தால் உடனே துப்புக் கொடுக்க வேண்டுமென ரஹ்மானும் எச்சரிக்கப்பட்டார்.

காரில் பாரியும் ரஹ்மானும் திரும்பியபோது கரிய முகமூடி அணிந்த ஓர் உருவம் அவர்களைத் தடுத்தது. தப்பி ஓடி வந்த வயிரமே அவன் என்பது தெரியவந்தது. ரஹ்மான் அவனையும் அழைத்துச் சென்று, தன் பெற்றோர்களிடம் சொல்லி, பாரியையும் வயிரத்தையும் ஒரு கள்ளத் தோணியில் தமிழகத்துக்கு அனுப்பி வைத்தான். தோணி தமிழ்க் கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

சிங்கன் கடலில் மூழ்கியபோது ஒரு கப்பல் தலைவன் காப்பாற்றினான். சிங்கன் கப்பலில் இருந்த தொலைநோக்கியில் பார்த்தபோது, படகில் வயிரமும் பாரியும் இருப்பதைக் கண்டான்.

படகைக் கப்பலிலிருப்பவர்கள் சுடப்போவது உறுதி. தன் தங்கையும் மைத்துனனும் இறப்பதா? மடமடவெனக் கப்பலின் அடித்தளத்திலிருந்த வெடிமருந்துக் கிடங்குக்குச் சென்று தீ வைத்தான். கப்பல் சிதறியது.

சுடுபடுவதிலிருந்து தப்பிப் படகில் சென்ற வயிரமும் பாரியும் கரையை அடைந்தனர். எப்போதும் கடலையே நோக்கிக் காத்துக்கொண்டிருந்த அயிரையும் அவர்களோடு சேர்ந்தாள்.

தொலைவில் கப்பலின் அடிமரத்தைப் பிடித்த வண்ணம் ஓர் உருவம் மிதந்து வருவது தெரிந்தது. மீனவர்கள் விரைந்து சென்று மரத்தைக் கரை சேர்த்தனர். பெருங் காயங்களுடன் சிங்கன் மரத்தைப் பற்றியிருப்பது தெரிந்தது. சாக இருந்த அவனும் பிழைத்தான்.

அயிரை - சிங்கன்; வயிரம் - பாரி இரண்டு இணையும் ஒன்றி மகிழ்ந்தனர். இதுவே கதை.

கதை இன்பத்தில் முடிகிறது. என்றாலும் நிகழ்ச்சி முழுவதையும் துன்பச் சுமையே கவ்வியிருக்கிறது. தம் எழுதுகோலில் ஆசிரியர் மையை ஊற்றவில்லை; தமிழர்களின் கண்ணீரை ஊற்றி எழுதியிருக்கிறார்.

காவிய நோக்கம்

சிங்களர் தமிழர்க்கு இழைக்கும் கொடுமைகளை ஆசிரியர் நெஞ்சு கொதித்து எழுதுகிறார். தமிழர் இருப்பிடமாக இருக்கும் இடங்கள் சிங்களர் இருப்பிடங்களாக வன்முறையில் மாற்றப்படுகின்றன.

> நேற்றுவரை இவ்வூரில் மாந்தர் வசித்தனர்;
> கூற்றுவன் படைபோல் கூட்டமாய்ச் சிங்களவர்
> கூலிப்படை வந்து சூழ்ந்தது ஊரை; ஓர்
> பாவமும் அறியாத அப்பாவி மக்களைக்
> கதறக் கதறக் கட்டி இழுத்துவந்து
> சுட்டுக் கொன்றனர்; கண்களைத் தோண்டினர்;
> நாவை அறுத்தனர்; கால்களை வெட்டி
> முடமாய் ஆக்கினர்; பெண்களின் மார்பைத்
> தீயால் சுட்டனர்; பங்கம் செய்தனர்; ஐயகோ!
> கேட்பதற்கு ஆள்இல்லை........ (பக். 126)

ஊரைவிட்டு வெளியேறிய தமிழ்ப் பிள்ளைகள்,

> இலைதழைகளை உண்பர் பசியால்;
> பின்னர் நோயுற்றுப்

பேதியும் கழிசலுமாய் மடிவர்;
தப்பிப் பிழைப்பவர் சிலரும் உண்டு.
இது, தமிழரின் கதி அம்மா
தமிழரின் கதி!

இனவெறியாளர்களின் திட்டமிட்ட வன்முறைச் செயல் இது. இவ்வன்முறையை,

எரிந்த கூரைகள், இடிந்த சுவர்கள்,
தரைமேல் ஆங்காங்கு இரத்தக் கறைகள்,
காலி டப்பாக்கள், கிழிந்த துணிகள்,
சிதறிக் கிடந்த தானிய மணிகள்,
சுவரிலும் சிவப்புச் சிதறல்;
இரத்தத்தின் வாடையும்,
அழுகிய பொருள்களின் நாற்றமும்,
காற்றில் கலந்து வீசிய துர்நாற்றமும்—
எல்லாம், அங்கு நடந்த
முறையற்ற செயல்களை—முற்றிய வெறித்தனத்தைப்
பறைசாற்றிக் கொண்டிருந்தன. (பக். 132)

கொடுமைகளைத் தாங்க முடியாமல் தமிழர்கள் வெளியேறியதும் தமிழர்கள் வாழ்ந்த அவ்விடத்தைச் சிங்களவர் வாழும் பகுதியாக மாற்றிக் கொள்வர். தமிழ் எல்லையையே அழித்துவிட வேண்டுமென்று சிங்கள இனவெறியர்களால் செய்யப்படும் கொடிய செயல் இது. இதனால்.....

தமிழர் வாழ்ந்த இடம்
சிங்களவர் வாழும் இடமாக
மாறிவிடும். (பக். 128)

இதுவே இன்றைய ஈழத்துத் தமிழர் நிலை. இதை உலகுக்குணர்த்துவதே இக்காவிய நோக்கம்.

இயல்பு நவிற்சி

குப்பத்து வாழ்க்கையை ஆசிரியர் வெகு இயல்பாகக் காட்டுகிறார். மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் புயலில் சிக்குண்டு பல நாள்கள், கரை திரும்ப முடிவதில்லை. இந் நிலையில் குப்பத்தில் உள்ளவர்க்கு உணவேது? உறக்கமேது? தண்ணீரில் படகொன்று தெரிந்தால்போதும்; அலைபோலப் பெண்க ளெல்லாம் அழுதழுது ஓடுவார்கள்; உரியவர்களைக் காணா விட்டால், 'ஓ' வென்று கதறுவார்கள். படகில் பிணமொன்று கிடக்கும்; அதை எடுத்துப்போட்டுக் குப்பமே குலுங்கி அழும்! தன் உறவைக் காணாத பெண்கள்,

அலைகொண்டு போயிற்றோ?
ஆரால் கடித்ததுவோ?
கலம்கவிழ்ந்து நொறுங்கிற்றோ?
காற்றிழுத்துச் சென்றதுவோ?
பாயும் சுழல்சுற்றிப்
பற்றி இழுத்ததுவோ?
பேய்ச்சுறா விழுங்கிற்றோ?
பாவிநான் என்செய்தேன்? (பக். 80)

எனப் பதறியழும் பரிதாபக் கோலம்;

படகுமுதலாளிகள் ஏழைகட்கு வட்டிக்குப் பணம் கொடுத்துவிட்டு, பின்னர் அவர்கள் கொண்டுவரும் பொருள்களை அரை விலைக்கும் கால் விலைக்கும் அடித்துப் பிடுங்கும் அடாவடித்தனங்கள்;

முதலாளிகளின் பிள்ளைகள் குப்பத்து இளம்பெண்களின் கற்பைச் சூறையாடச் செய்யும் ஈனச் செயல்கள்;

எதிர்த்துப் பேசினாலோ குடிசைகளைத் தீயில் பொசுக்கி இருக்க இடமின்றி உடுக்க உடையின்றித் தவிக்க விடுதல்;

குடிநோய்க்கு ஆளான குப்பத்துக் கிழவர்கள், குடிக்கக் காசு கிடைத்தால் போதுமென்று தங்கள் பெண்களின் அழகை விலை பேசும் போதை மயக்கம்;

சங்கு சிப்பி மீன்பிடித்து
பிழைக்கும் நம்ம சாதியிலே
பெத்த மகளை விலைபேசுவோரும்

இருக்கின்றாரே எனும் கன்னிப் பெண்களின் புலம்பல் - இவையே குப்பத்து வாழ்க்கை.

அணிநலம்

காப்பியம் சொல் நயம், அணி நயம் சிறந்ததாக இருக்க வேண்டும். திரு. இராமச்சந்திரன் உவமையணியினை வெகு சிறப்பாகவும் இயல்பாகவும் கையாண்டுள்ளார்.

மனம் ஒரு நிலையில்லாது அலைந்து திரிவதை,

கடலின் அலைகளைப் போலவே – உள்ளக்
கடலும் அலைந்தது வீணே (பக். 15)

என்கிறார்; நெய்தல் நிலத்தவனைப்பற்றிப் பேசுவதால் கடலையே உவமைப் பொருளாக்கியுள்ளார்.

வானத்தில் மீன்கள் பூத்துக் கிடந்தன; நீல நிற வானம்; வெள்ளை நிற உடுக்கள் –

வயிரத் துளிகளை வாரி இறைத்த
பட்டுத் துகிலெனக் கிடந்தது வானம் (பக். 17)

எனும் உவமையை உருவாக்கியுள்ளன.

பாதுகாப் பில்லாத பாழ்மனை போல
எதுவும் எவரும் செய்யலாம் (பக். 88)

என்பது ஓர் அரிய உவமை.

கடலில் கப்பல் தீப்பற்றி எரிந்து மூழ்குகிறது. அதற்குத் தக்கதோர் உவமை தருகிறார் :

மேற்றிசையில் செலும்கதிரோன்
நடுக்கடலில் வீழ்ந்ததெனத்
தீத்தழல்போல் கலம்,நீரில்
தாழ்ந்தமிழக் கண்டாரே. (பக். 170)

பட்டினி கிடந்ததால் மயங்கிக் கிடந்தவளுக்குக் கஞ்சி புகட்டியபோது அவள்,

தாகத்தால் அலைந்த ஜீவன்
தண்ணீரைப் பருகுதல் போல்
தவிப்புடன் விழுங்கி னாளே (பக். 136)

என்கிறார். அவளுடைய பசித்த நிலையை, 'தவிப்புடன் விழுங்கினாள்' எனும் தொடர் நன்கு உணர வைக்கிறது.

தற்குறிப்பேற்றம்

இயல்பாக நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சியின்மேல் கவிஞர் தம் குறிப்பை ஏற்றிச் சொல்வது தற்குறிப்பேற்ற அணி. மதுரை நகரின் கோட்டையில் கொடிகள் காற்றில் அசைந்தாடுகின்றன. அத்தோற்றம், மதுரையுள் நுழைய இருக்கும் கண்ணகியையும் கோவலனையும் இங்கே வாராதேயுங்கள் என்று கையசைத்துச் சொல்வதுபோல இருந்ததாம்; 'வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட' எனும் இளங்கோவடிகளின் இப்பாடலடியே தமிழ் இலக்கியப் பரப்பில் முதன் முதலில் எழுந்த தற்குறிப்பேற்றம்! தொடர்ந்து இவ்வணியைப் புலவர்கள் செழுமையுடன் பாடி வருகின்றனர்.

தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் தற்குறிப்பேற்றத்தை மிக உருக்கமாகக் கையாண்டுள்ளார். அண்ணா மறைவின் போது, 'இதயத்தைத் தந்திடு அண்ணா' என அவர் பாடிய கவிதையில்

அண்ணனுக்கோர் சிலை
சென்னையிலே வைத்த போது
ஆள்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்;

ஆணையிடுகின்றார் எம் அண்ணா என்றிருந்தோம்;
அய்யகோ, 'இன்னும்
ஓராண்டே வாழப் போகிறேன்' என்று அவர்
ஒருவிரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது.

இறப்பில் எழுந்த இத் தற்குறிப்பேற்றம் என்றும் இறவாததாம்!

கம்பருடைய தற்குறிப்பேற்றம் ஒன்று. மிதிலை நகரில் நுழைந்த இராமனைச் சீதை காண்கிறாள். மாலை நேரத்தில் அவனை நினைத்து உருகுகிறாள். காமத் தீ அவள் உடலைச் சுட்டெரிக்கிறது. உலகுக்கே வெப்பம் தருகின்ற சூரியன், சீதையின் காமச் சூட்டின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் தன் கைகளை உதறிக்கொண்டே கடலுள் முழுகிவிட்டானாம்!

அன்னமென் நடையவட்கு அமைந்த காமத்தீ
தன்னையும் சுடுவது தவிர்க்கி லான்என
நல்நெடுங் கரங்களை நடுங்கி ஓடிப்போய்
முன்னைவெங் கதிரவன் கடலில் மூழ்கினான்.

கடலில் சூரியன் மறைவதைக் காட்ட கம்பர் தரும் தற்குறிப்பேற்றம் இது.

நம் காவிய ஆசிரியர்க்கு இவ்வாறான சிங்காரச் சிந்தனைக்கு இடமேது? சூரியன் காலையில் எழுந்தான். மேகம் மூடியது. மீண்டும் வெளிப்பட்டான் என்பதை அகதி நிலைகொண்டே காணுகிறார். கொடிய புயல்; பகல் என்றும் இரவென்றும் பாராமல் பேய்க் கூத்தாடி எல்லாவற்றையும் அழித்தது. அந் நிலையில், 'கதிரவன் தோற்றம்' அதுவரை என்ன நடந்ததோ; தெரிய வில்லையே எனச் சொல்லிக்கொண்டு எழுவது போன்றிருந்த தாம். கதிரவன் எழுந்த உடனே மேகக் கூட்டம் ஒன்று கதிரவனை மறைக்கிறது. அக் காட்சி அதுவரை நடந்த அழிவு களைக் காணச் சகியாது கதிரவன் தன் முகத்தை மூடிக் கொண்டதுபோல ஆயிற்றாம்!

அழிவுச் சின்னங்களைக் காணக்
கூசியது போல முகத்தை
மறைத்துக் கொண்டது. (பக். 74)

மேகத்துள்ளிருந்த சூரியன் வெளிப்படுகிறான். இக்காட்சியோ, அழிவுகளைக் கண்டவுடனே விரைந்து முகத்தை மூடிக் கொண்ட கதிரவன், 'பின் மெதுவாக எட்டிப் பார்த்தது' போலிருந்ததாம்.

கதிரவன் தோற்றத்தையும், தோன்றிய கதிரவன் மேகத்துள் மறைந்து பின் வெளிப்போந்ததையும் தன் காவியச் சூழலுக்கேற்ப

அருமையான தற்குறிப்பேற்றமாக்கிக் கொண்டுள்ளார் கவிஞர் இராமச்சந்திரன்.

அழகோவியம்

பெண்களை முடிமுதல் அடிவரை அழகோவியப் படுத்திக் காட்டுகிற கவிதைகள் பல உண்டு. ஆனால் இராமச்சந்திரன் படைத்துக் காட்டியுள்ள விதம் தனித்தன்மையதாயுள்ளது.

கறந்த பால்போல் முகத்தாள்;
கபடம் அறியாதநல் அகத்தாள்;
மாரி எனக்கருங் குழலாள்;
மதிக்கீற் றெனும் சிறு நுதலாள்.....

விரிந்த குவளைபோல் விழியாள்;
விரியாத குமுதம்போல் இதழாள்;
கரைந்த கற்கண்டின் மொழியாள்;
கற்பனை ஓவியம் அணையாள்.. (பக். 13)

எல்லோரும் சொல்லும் கருத்துகள்தாம் என்றாலும் அவற்றை இராமச்சந்திரன் எளிமையான உயிரோட்டமுள்ள சொற்களால் அமைத்துச் சொல்லியிருக்கிறார். 'கரைந்த' எனும் சொல் கற்கண்டின் சுவையை மேலும் கூட்டுகிறது.

நயஉரை

தெரிந்த செய்தியே ஆயினும் அதனை நயந்தோன்றச் சொல்வது காவிய அழகு.

வந்து விழுந்த
வார்த்தைகள் உடலைத்
தாக்காமலேயே காயப்படுத்தின;
சில்லென்று வீசிய காற்று
சினத்தைத் தணிக்கவில்லை
வெப்பத்தை ஊக்கியது. (பக். 23)

அயிரையை, 'சிங்கன் ஒருவேளை பொருள்களைத் தானே எடுத்துக்கொண்டு தலைமறைவாகியிருப்பானோ?' என நயினார் கேட்டபோது, அயிரை துணிச்சலுடன்; "என் கணவர் அப்படிப்பட்டவரல்லர். எதிரிகளிடம் கிடைத்துவிடக் கூடாதே என்று கடலில் வீசியிருப்பார்" என்றாள். 'அவன் ஒருவன்தான் படகில் சென்றான்; உடனிருந்து பார்த்தவள்போலச் சொல்கிறாயே, எப்படி" என்று நயினார் கேட்டபோது அவள் கேட்டாள்;

உடன்சென்ற என்உயிரை
முடியுமா பார்க்க உம்மால்?

கணவனைப் பிரிந்திருக்கும் மனைவியின் நிலையை இதைவிட உருக்கமாகச் சொல்லச் சொற்களேது?

பாரியிடம் ரஹ்மான் சிங்களச் சிறையிலிருக்கும் தமிழ்க் கைதிகளின் படங்களைக் கொடுத்து அவற்றுள் அவள் கணவன் படம் இருக்கிறதா எனப் பார்க்கச் சொன்னான்.

ஒவ்வொன்றாய் எடுத்து
கூரிய விழிகளாலே
குறிப்பாகப் பார்த்துப் பார்த்து
வேறிவர் என்று கூறி
வெறுப்புடன் தள்ளி வைத்தாள். (பக். 142)

'வெறுப்புடன் தள்ளி வைத்தாள்' என்ற தொடரிலே உள்ள உயிர்ப்பு எத்துணை ஆழமானது. பார்க்கிறாள் கணவன் படமில்லை; வெறுப்புத் தோன்றுகிறது. அதை எடுத்து வைக்காமல் தள்ளி வைக்கிறாள். உள்ள உணர்வும் கையின் விரைவும் ஒன்றோடொன்று போட்டியிடுகின்றன.

புயலின் சீற்றத்தால் பறவைகள் படும்பாடு சொல்லுந்தரமன்று.

இருந்த கிளைமுறிய,
எழுந்து பறப்பதற்கு
திறந்த சிறகொடியத்
தாம்பட்டு வீழ்ந்தனவே (பக். 70)

விரிந்த சிறகைக் காற்று முறித்துவிடுகிறது. என்ன கொடூரம்?

ஏழை நாள் தோறும் நோயின் துயரினால் துன்புறுகிறவன். அவன் இறந்தான் என்பதை,

உயிரைப் பிரிந்து,துயர்க்
கடலைக் கடந்தனனே (பக். 104)

என்கிறார். இனியேது அவனுக்குத் துயர்?

மழை பொழியுது பொழியுது
விடாது பொழியுது
துளி விழுகுது விழுகுது
தொடர்ந்து விழுகுது –

இங்கே ஓசைநயம் நடமிடுகிறது.

பேச்சு வழக்கிலுள்ள பழமொழிகளும் நூலுள் இடம் பெற்றுள்ளன.

நாய் விற்ற காசு ஊளையிடுமா?
நரகலில் கிடந்த பணம் நாறுமா?
காவலற்ற சொத்துக்குக்

கண்டவர்கள் அடித்துக்கொள்ளுதல்
நியாயம்தானே! இவ்வுலகில்
அதைக் கேட்பவர் யார்? (பக். 109)

ஏழ்மையை ஆசிரியர் சோக உணர்வு மேலோங்க வெளிப் படுத்துகிறார்.

புயலுக்குப் பிறகு குப்பத்து, மக்களின் நிலை என்ன?

பொங்குவதற்கும் பொருளில்லை
பொங்கவைக்க இடமுமில்லை. (பக். 76)

சிறு குழந்தைகள் இந்த அவலத்தை உணரவில்லை. ஆதலின்,

அறியாப் பிஞ்சுகள் சில,ஆட்டம் போட்டன;
அவற்றுக்குப் பசியும் தெரியவில்லை; மற்றவர்
நிலையும் புரியவில்லை.

படகு முதலாளியிடம்,

உங்களுக்கு ஒருநாள் வருமானம்,
எங்களுக்கு உயிர்க்காலப் போராட்டம்

என வெடிக்கிறான் வயிரன். கழைக்கூத்தாடி ஒருவன் வித்தை காட்ட மக்களை அழைக்கிறான். அவர்கள் வந்து உட்கார்ந்ததும் அவர்களிடம் துணியேந்தி,

ஒருதுட்டு உங்களுக்கு ஒருவாய் வெத்திலை
எங்களுக்கு அதுதான் திங்கற சோறு

எனக் கழைக்கூத்தாடி காசு கேட்பதாகப் பாவேந்தர் பாடியுள்ள இப்பாடலடிகளை வயிரவனின் பேச்சு நம் கண்முன் நிறுத்துகிறது.

கவிஞர்க்கு மடங்களின் மீது அடங்காச் சினம்! அறவழிச் செல்ல வேண்டிய இடங்கள் காமக் களியாட்டங்களின் இருப்பிடமாகத் திகழ்வதா? சினம் கொப்புளிக்க எழுதுகிறார்

உழைத்துப் பிழைக்க
நல்லவே நாடி அறம்செய்து
வல்லமையாக வாழும் நினைவற்றுச்
சோம்பித் திரியும் வீணர்,
சோறு கிடைத்த இடமே
சொர்க்கலோகம் என்றெண்ணும்
வேறுநினைவில்லாத வெட்டிப்பயல்கள் –
இவ்வாறு பல்வகை மாந்தர்
பயிலும் இடமாகிவிட்டதே அறவழிச் செல்லவேண்டிய
மடங்கள். (பக். 112)

நல்ல வேளை; சோற்றோடு நிறுத்திக் கொண்டார். எல்லோருமே இப்படி இருந்துவிடுவதில்லை. அயிரையைக் கிழட்டு பிட்சுவிடம் இருந்து காத்துதவிய இளம் பிட்சுவைக் காட்டி, உண்மையான அற

உள்ளம் உள்ள துறவிகளும் சிலர் இருக்கின்றார்கள் என்பதைக் கதைப் போக்கிலேயே காட்டி விடுகிறார்.

தமிழீழம் காண்போம்

காவியத்தைப் படிக்கும்போது ஈழத்தமிழர்கள் படும் எல்லையற்ற அல்லல்கண்டு கண்ணீர் வடிக்கிறோம். இனவெறிச் சிங்களவர்களின் ஈனச் செயல்களறிந்து சீற்றங் கொள்கிறோம். இக் கயவர்களை வெற்றி கொள்ளாவிடின், 'எம் உடலில் பாய்வது தமிழ்க் குருதியன்று' என வஞ்சினம் உரைக்கிறோம். கொடுமைகள் மாய்ந்து தமிழர் ஈழம் மலர்வது எந்நாள்? என ஏங்குகிறோம். அந்நாள் தொலைவில் இல்லை என உறுதியான நம்பிக்கை கொள்கிறோம். 'அகதி காவியம்' நம் உள்ளங்களில் பதிக்கும் செய்திகள் இவையே!

அவலம் மேலோங்கக் காவியம் படைத்த கவிஞர், உவகை மேலோங்க அடுத்த காவியம் படைக்கும் நாள் விரைந்து உருண்டோடி வருவதாகுக!

நூல் ஆக்கம்	கவிஞர் எஸ்.பி. இராமச்சந்திரன்
வகைமை	காவியம்
வெளியீடு	தாமரை நூலகம், சென்னை. (2000)

8

காதற் கனிகள் (கற்பும் துறவும்)

புதுவைக் கவிஞர்

புதுவைக் கவிஞர் துரை. மாலிறையன், 'காதற்கனிகள்' எனும் தலைப்பில் அரியதொரு குறுங்காப்பியத்தை இரு பாகங்களாக ஆக்கித் தந்துள்ளார். அகப்பொருள் மரபுப்படி மாறன்-மங்கை இருவரும் தனியே ஒருவரையொருவர் கண்டு, காதல் கொண்டு, பல்வேறு தடைகளிடையேயும் அன்பு வளரப்பெற்றுத் திருமணம் செய்துகொள்ளும் வரையிலான செய்திகளைக் 'களவுக் கனி' என முதற் பாகமாகத் தந்துள்ளார். திருமணத்தின் பின்னர் பெற்றோரின் வெறுப்புக்கும் ஊராரின் பழிப்புக்குமிடையே அவர்கள் வாழ்ந்து வெற்றி காண்பதைக் 'கற்புக் கனி' என்னும் பகுதியாகவும், வெற்றிகரமான இல்லற வாழ்வின் பயனாக அவர்கள் மன்னுயிர்க்குத் தொண்டு செய்து மனநிறைவு கொள்வதைத் 'துறவுக் கனி' என்னும் பகுதியாகவும் கொண்டு காப்பியத்தின் இரண்டாம் பாகம் அமைந்திருக்கிறது.

> பாவேந்தர் பாரதியார் முதலோ ராகப்
> பைந்தமிழின் நலமேந்தும் புதுவை

எனப் புதுவையைச் சிறப்பிக்கிறார், கவிஞர் திருமாலிறையன். நாமோ பாரதியார், பாவேந்தர் வரிசையில் திருமாலிறையனையும் சேர்த்துப் புதுவையின் சிறப்பை எண்ணத் தக்க வகையில் இவர் காப்பியம் கவிச்சுவை மண்டிச் சிறந்துள்ளது.

எண்சீர் விருத்தம் கவிஞருடைய ஏவல் கேட்டு ஏற்றம் பெற்றுள்ளது, இக்காப்பியத்தின் முதற்பாகத்தில். இரண்டாம் பாகத்திலோ அறுசீர் விருத்தம் அவருடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு அழகு கூட்டுகிறது.

ஒரு காப்பியத்திற்குரிய எல்லா இலக்கணங்களும் சரிவர அமையப்பெற்று இக்காப்பியம் பெருமைக்குரியதாகத் துலங்குகிறது.

இயற்கை வருணனை

கவிஞரின் இயற்கை வருணனைகள் உயிரோட்டம் உள்ளனவாய்ச் சிறக்கின்றன. இயற்கையில் தோயும்போது கவிஞரிடம் கற்பனை களிநடம் புரிகிறது. கதிர் மறைந்து நிலவு தோன்றும் மாலை வேளையைக் கூறவரும் கவிஞர் இயற்கையை ஒரு வணிகனாக்குகிறார். இவ்வணிகன், வானம் என்னும் தராசில் ஒரு பக்கம் வெல்லக் கட்டியையும், ஒரு பக்கம் பாற்கட்டியையும் வைக்கிறான். மறையும் சூரியனுக்கு வெல்லக்கட்டியும், உதிக்கும் நிலவுக்குப் பாற்கட்டியும் பொருத்தமான உவமைகளாகின்றன. வணிகன் தராசுக் கோலைத் தூக்க அது நேர் நிலையில் இல்லையாம்! சூரியன் இருந்த தட்டு கீழே தாழ்ந்து, நிலவுள்ள தட்டு மேலேறி நின்றதாம்! மேற்றிசையில் பகலவன் மறையக் கீழ்த் திசையில் நிலவு தோன்றியது என்பதை இவ்வாறு சொல்லியிருப்பது ஓர் அழகிய வருணனை.

ஒருதட்டில் வெல்லக் கட்டி
　　ஒருதட்டில் சுவைப்பால் கட்டி
இருதட்டுச் சமன்கோல் கட்டி
　　ஏந்தியே நிறுப்பா னைப்போல்
பொருவானை வில்லாக் கொண்டு
　　பெருங்கதிர், திங்கள் என்னும்
இருகட்டி இயற்கை வைக்க
　　இருங்கதிர்த் தட்டு தாழும். (பாடல் 7)

உவமைகள்

உவமைகாட்டிச் சொல்வது, சொல்லப்படும் கருத்துக்கு வலிவூட்டும். தப்பாமல் பிடிக்குள் சிக்குவதை, இக்கவிஞர்,

மாட்டிய கொசுவைப் பாய்ந்து
　　மடக்கிடும் சிலந்தி போல (பாடல் 15)

என்கிறார். அன்னையின் அன்பில் கட்டுண்டு மனம் நிறைந்திருந்த மங்கை நிலையைக் கூறும்போது,

ஆமடிக் குள்கன் றேபோல்
　　அன்னைமுன் னேநின் றாளே (பாடல் 78)

எனத் தாய்மையின் அன்புப் பெருக்கையும் மகவின் பரிவுப் பிணைப்பையும் ஒருங்கிணைத்து விடுகிறார். அப்பத் துண்டை வீசியெறிந்தால் காக்கை குறியறிந்து சரியாகப் பற்றிக் கொள்ளுவதை உள்ளக் குறிப்பறிந்து ஒன்றைச் சட்டெனப் பற்றிக் கொள்வதற்கு உவமையாக்கிக் காட்டுகிறார்.

காக்கைகள் அப்பத் துண்டைக்
　　கோலமாய்க் கவ்வு தல்போல்— (பாடல் 41)

இளமைப் பருவம் துடிப்புள்ள பருவம். இடையறாது துடிக்கும் இப்பருவத்தைக் கூற ஏற்றதோர் உவமையை எண்ணுகிறார். முழவு அவர் கண்முன் நிற்கிறது. அடிக்க அடிக்கத் துடிக்கும் முழவுபோல இடையறாது அதிர்ந்து நிற்கும் இளமை என இரண்டையும் ஒன்றிணைத்து நமக்கு மகிழ்வூட்டுகிறார்.

அடிக்குங்கைப் புலவ னுக்கே
  அரும்புகழ்ப் பண்கொ டுக்கத்
துடிக்குந் தண்முழவு போலத்
  துடிக்கின்ற பருவம் அன்றோ
படிக்கின்ற பருவம்? (பாடல் 343)

அடிக்கின்றபடி அடித்தால்தான் முழவு சரியான இசையைத் தரும். அதுபோல, படிக்கின்ற முறையிலே படித்தால்தான் படிப்பின் பயன் கிட்டும். அடி பிசகினால் முழவொலியும் பிசகுவதுபோல, முறை தவறினால் படிப்பின் பயனும் பிழைபடும் என்ற கருத்துப் புலப்பட எண்ணி எண்ணி உணரத்தக்க உவமையைச் சொல்லிச் செல்கிறார் கவிஞர்.

அறிந்தவற்றை உவமையாக்கும்போது உள்ளம் அதனை ஆர்வத்தோடு ஏற்கிறது. தொலைக்காட்சியில் வண்ணம் காட்டும் பெட்டியில் வண்ணமில்லாப் படம் பொலிவின்றித் தோன்றுமல்லவா? உலகம் ஒளிமயமானது; பன்னிறக் காட்சி கொண்டது; சூரியன் மறையும்போது இருள் தோன்றி ஒளி மறைந்து - பொலிவு குன்றிக் காணப்படுவதற்கு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில் வண்ணமில்லாப் படம் தெரிவதைக் கவிஞர் உவமையாக்குகிறார்.

நிறத்தொலைக் காட்சிப் பெட்டி
  நிறமின்றிப் படம்காட் டல்போல்,
சிறப்பான உலக வண்ணம்
  சிறுகவே மாறும் வண்ணம்
உறப்போகும் இருளும் சூழும்
  ஒருமாலைப் பொழுது) (பாடல் 135)

இவ்வாறான பல உவமைகளைப் புதிய முறையில் கூறித் துரை.மாலிறையன் தம் பாடலுக்கு வண்ணம் சேர்க்கிறார்.

மரபுவழிக் கவிஞர்

கம்பராமாயணத்தில் மணப்பெண் சீதையைப் புனைவு செய்வதைக் கம்பன் அழகுபடப் பாடுகிறான். சீதைமீது முத்துமாலைகளைச் சார்த்துகின்றனர். சிவந்த நிறமுடைய அவள் மேனியில் பட்டதும் வெண்முத்து அவளுடைய நிறம் பாய்ந்ததால் செம்முத்தாக - சிவப்பாகக் காட்சியளிக்கிறதாம்! சிவந்த மேனியைச்

சேர்ந்த முத்து சிவந்தது எனக் கூறவரும் கம்பன், "செய்யவர்களைச் சேர்ந்தவர்களும் செய்யவர்களாகவே வாழ்வார்கள்" என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டுப் போலுமென்பான். சீதையின்,

வெய்யபூண் முலையிற் சேர்ந்த
  வெண்முத்தம் சிவந்த என்றால்
செய்யவர்ச் சேர்ந்து ளாரும்
  செய்யராய்த் திகழ்வர் அன்றே!

என்பான் கம்பன். இம்மாக் கவிஞன் வழிவரும் மாலிறையனும், "பனிக்கட்டியுள்ள கலத்தின் மேலே பட்ட நீராவி, தானும் குளிர்ந்து நீராகிவிடும். அதுபோன்றே சிறப்புடையார் தம்மைச் சார்ந்து வாழ்வாரும் சிறப்புற்றுப் பெருமை பெறுவர்" என்பார் (பாட்டு 338). அதுமட்டுமா? செம்மண் சாலையில் நிற்கும் பசுமரங்கள் அம்மண்ணின் நிறத்தைத்தான் பூசிக்கொள்ள வேண்டியிருக்கும். அதுபோல,

சும்மாவே இருப்பா யேனும்
  சுற்றியே உள்ள தீயார்
தம்மாலே உன்பால் மேவும்
  தரமில்லாப் பண்பே யன்றோ? (பாடல் 339)

என்று கூறி இவ்விரு காட்சிகளின் வாயிலாகச் 'சேரிடம் அறிந்து சேர்' எனும் ஔவையின் வாக்குக்கு அரிய விளக்கம் தந்துவிடுகிறார்.

பூங்கோதை வருகிறாள்; எதிரே அவள் 'அத்தான்' வருகிறான். அதனைப் பாவேந்தர்,

தொத்துகின்ற கிளிக்கெதிரில் அன்னோன் இன்பத்
  தோளான மணிக்கிளையும் நெருங்க –

என்பார். அவள் முகம் அவன் தோளிலே பதிய இருக்கிறது. ஆதலின் அவளைக் கிளி எனவும், அவன் தோளைக் கிளை என்றும் குறிப்பிட்டுள்ளார். திருமாலிறையனின் காப்பியத் தலைவி மங்கையோ தன் கணவன் மாறனிடம் ஊடல் கொள்கிறாள். சொல்லால் அவனைக் கிள்ளிவிடுகிறாள். ஆதலால் கவிஞர் அவளைக் கிளியாகவும், அவனை அக்கிளி கொத்தும் பழமாகவும் ஆக்கி,

அந்தப்
பச்சைக்கிள் ளைக்குக் கொத்தப்
  பழுத்ததோர் பழமும் ஆனான் (பாடல் 44)

என நயம்பட உரைக்கிறார்.

"காதலர் எப்போதும் என் கண்ணில் இருப்பதால் எழுதும் காலம்வரை அவர் மறைதலை அறிந்து, நான் கண்ணுக்கு மை

எழுதுவதில்லை" என்றும், "கண் இமைத்தால் காதலர் மறைவாரே என்று இமையாமல் இருக்கிறேன்; அதனை அறியாமல் காதலர் இவளைத் துயிலா நோய் செய்தார் என இவ்வூர் கூறுவது பேதைமையல்லவா?" எனவும் திருக்குறள் தலைவி தன் கண்ணுள் இருக்கும் காதலனைப் பற்றிக் குறிப்பிடுகிறாள். ஆனால் இக்காப்பியத் தலைவியோ, தலைவனைக் கண்ணில் வைத்திருக்க விரும்பாதவளாகக் காணப்படுகிறாள். ஏன் தெரியுமா?

கண்ணிலே வைத்தால் மாறன்
 களவாடப் படுவான் என்றே
பெண்ணிலே பெருமை கொண்டாள்
 பிழையிலா நெஞ்சுள் வைத்தாள். (பாடல் 36)

பாவேந்தர் பாரதிதாசன் "குடும்ப விளக்கின்" விருந்தோம்பற் பகுதியில்,

இற்றுத்தேன் சொட்டும் எலுமிச்சை; – வற்றியவாய்
பேருரைத்தால் நீர்சுரக்கும் பேர்பெற்ற நாரத்தை;
மாரிபோல் நல்லெண்ணெய் மாறாமல் – நேருறவே,
வெந்தயம் மணக்க,அதன் மேற்காயம் போய்மணக்கும்,
உந்துசுவை மாங்காயின் ஊறுகாய்;

என ஊறுகாய் பலவற்றையும் மற்றும் சுவைமிக்க உணவு வகைகளையும் அடுக்கிக் காட்டுவார். கவிஞர் திருமாலிறையனும் புதுவைக்காரராயிற்றே! பாவேந்தரைப் போலவே இவரும் பல பண்டவகைகளைக் கொடுத்து நம்மை மகிழ்விக்கின்றார். கருவுற்றுள்ள மகளுக்குத் தாய் பல்வகைப் பணியாரங்களை எடுத்து வருகிறாள். என்னென்ன அவை?

ஒருசின்ன பெட்டிக் குள்தேன்
 ஒழுகிடும் அதிர சங்கள்... (79)
செம்மஞ்சள் மலரைப் போலத்
 தேன்குழல்;
மும்மாதம் ஆனா லுந்தாம்
 மூவாத பொரிவி ளங்காய்; (80)
சொல்லவே நாவில் ஊறும்
 சுவைப்பாலின் முறுகல் கட்டி;
மெல்லிய கம்பிப் பொன்போல்
 விளங்கோமப் பொடி. (81)

ஓமப்பொடியை மெல்லிய கம்பிப் பொன் எனக் கூறி யிருப்பது நல்லதோர் உவமை!

எள்ளிளஞ் சிறிய பூவை
எடுத்துவைத் திட்ட மூக்கும்
வள்ளச்செந் தாம ரைப்பூ

இதழ்கவிந் திருந்த வாய்ப்பின்
அள்இரண் டும்,சி வப்பு
மாதுளை சிதறச் சிந்தும்
ஒள்ளிய மணிச் சிரிப்பும்

கொண்ட குழந்தையைக் காட்டுகிறார் பாவேந்தர் பாரதிதாசன். கவிஞர் திருமாலிறையன் காட்டும் குழந்தையோ,

கருமுல்லை மூக்கு; மின்னும்
கண்கீரை விதையே ஆகும்.
இருள்நீல மலர்மொட் டைப்போல்,
இலங்கிடும் மெய்யும் கொண்டு,
வரும்சின்ன சிட்டுப் போல
வருகின்ற குழந்தை நெஞ்சில்,
ஒருசின்ன குற்ற மில்லை;
ஒளிர்வானின் நிலவே ஆக (பாடல் 132)

விளங்கி மகிழ்விக்கிறது. காப்பியம் முழுவதிலும் கவிஞர் முந்தையோர் மொழிபொருளில் ஆழ்ந்துள்ளமை நன்கு புலப் படுகிறது; எனினும் அவர் உள்ளம் பாவேந்தரின் பாடலில் மிகுதியும் தோய்ந்துள்ளது என்பதும் தெளிவாகிறது.

உலகியற் கவிஞர்

கவிஞர் உலக நடப்புகளை உற்று நோக்கியும், மாந்தர் இயல்புகளை மனத்தில் கொண்டும் பாடுவதை நூல் முழுதும் பரக்கக் காண முடிகிறது.

ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு?

என வினவுவார் திருவள்ளுவர். பிறர் குற்றத்தைக் கூறும் முன் தன் குற்றத்தைக் கண்டு களையும் இயல்பு வேண்டும் என்பது பெரியோர் அறிவுரை. ஆனால் உலகமோ தன் கண்ணில் தூசை வைத்துக்கொண்டு பிறர் கண்ணில் உள்ள துரும்பைச் சுட்டுகிறது. அண்டை வீட்டாரைப் பற்றி - அதுவும் நன்மை பற்றியன்று பொல்லாங்கு பேசுவதிலே அக்கறை கொள்ளும் மக்கள் பெருகியிருப்பதை,

அயல்வீட்டுச் செய்தி என்றால்
அறிவிப்பே இன்றி வீசும்
புயலைப் போல்ஊரே பேசு(வதைக்) (பாடல் 20)

கவிஞர் சுட்டுகிறார். எதிர்பாராத புயல் பெருஞ் சேதத்தை விளைப்பதுபோல இவர்கள் பேச்சும் பெருந்தீங்கை விளைப்பனவாய் அமைந்துவிடுவதை இவ்வடிகள் உள்ளுறை பொருளாய்க் கொண்டுள்ளன.

பொது நிகழ்ச்சிகளைப் புகைப்படம் எடுத்தாலோ, அல்லது தொலைக்காட்சிப் படமெடுத்தாலோ கூட்டத்திலிருப்பவர்கள் நிகழ்ச்சியை நோக்குவதை விடுத்துப் படமெடுப்போரை நோக்கித் தம் முகத்தை எக்கி எக்கிக் காட்டுவதை நாம் கண்டிருக்கிறோ மன்றோ? அவர்கட்குத் தம் முகம் படத்தில் தெரியவேண்டும் என்னும் ஆசை! கவிஞர் திருமண வீட்டில்,

புகைப்படக் காரர் செல்லும்
போக்கினில் முகத்தைக் காட்டும்
வகை நிற்பார் (பாடல் 305)

சிலரைக் காட்டி இவ்வாழ்வியல் நிகழ்ச்சியை நமக்குப் படம் பிடித்துக் காட்டிவிடுகிறார்.

நுண்ணுரை

மக்கள் வாழ்க்கையிற் கொள்ளவேண்டிய சிறந்த, பயனுள்ள கருத்துகளை நூல்கள் கொண்டிலங்க வேண்டும். அத்தகு நுண்ணுரைகள் பல இந்நூலுள் அடங்கியுள்ளன.

.........குன்றாப்
பயனுள்ள பணிகள் செய்து
பிழையற வாழும் நாளே
பெருவிழா நாளாம்; (பாடல் 6)

அவரவர் கடமை ஆற்றின்
அரசுக்கும் தொல்லை இல்லை;

அதே வேளை அரசும் எவர் தவறு செய்தாலும் தண்டிக்கப்படுவர் எனும் நம்பிக்கை எவர்க்கும் ஏற்படும் வண்ணம்

எவர்க்குமே நேர்மை செய்யும்
ஏற்றங்கொள் அரசு வேண்டும். (பாடல் 70)

....வையம்
தழைத்திட வாழும் மக்கள்
எங்கிருந் தாலும் அன்னார்
ஏந்துளம் கோயில் ஆகும். (பாடல் 411)

நயவுரை

படிப்போர் நெஞ்சைக் களிப்பிலாழ்த்தும் நயவுரைகள் பல நூலுள் நிறைந்துள்ளன.

குழந்தை,

அன்பின் பயன்தந்த இன்பக் கொல்லை (பாடல் 129)

எனப் பாராட்டப்படுகிறது.

அணைக்கவே சொன்னாள்; மங்கை
அருகிலே நெருங்கி னானை

"அணைக்கநான் சொன்ன(து) என்னை
அன்(று)அன்று விளக்கை" என்றாள் (பாடல் 226)

என்பதில், 'அணைக்க' என்ற சொல்லைத்தான் எத்துணை நயமாய்க் கையாண்டுள்ளார்! காதலன்-காதலி சேர்ந்தனர் என்பதை,

ஆதாமும் ஏவா ளும்போல்
ஆனார்கள்; ஆங்கே இன்ப
மே,தாளம் போடத் திங்கள்
விரைந்தோடும்; இரவும் ஒடும் (பாடல் 229)

என்ற அடிகளிலேதான் எத்துணை காதற் குறும்பு! அதைச் சொல்வதிலேதான் எவ்வளவு நயம்?

பொன்னடிச் சுரங்கம் காட்டிப்
போய்எடுத் தாள்(க)என் றாலும்
என்மடிச் சுரங்கம் உன்னை
இசைந்துநான் பிரிவே னோடி? (பாடல் 275)

என்ற வினாவிலே அடங்கியுள்ள ஆசைதான் எவ்வளவு? காதலியைக் காதலன், 'தன்மடிச் சுரங்கம்?' என்று கூறுவதிலேதான் எவ்வளவு பெருமை?

ஒரு சொல்லுக்கு இருபொருளைத் தந்து மகிழ்விக்கின்ற திறமும் கவிஞரிடம் சிறப்பாக உள்ளது.

முழுகித்தான் சிப்பி முத்தை
முந்நீர்க்குள் இருந்தெ டுப்பார்;
முழுகாமல் இருந்தெ டுத்த
முத்துக்குத் தாய்முத் தீந்த(ாள்) (பாடல் 128)

கடலுள் இருக்கும் முத்து முழுகியெடுக்கப்பட்டது; ஆனால் குழந்தையாகிய முத்தோ, 'முழுகாமல் இருந்து' எடுத்த முத்து. 'முழுகுதல்' என்ற சொல்லை ஆண்டுள்ள விதம் நம்மை இன்பக் கடலுள் ஆழ்த்துகிறது.

எட்டியே இருந்தால் ஆர்க்கும்
எட்டியா காமல் வாழ்வோம்... (பாடல் 143)
பேசும்,நீர் என்றாள் மங்கை
பேசமோ நீரும் என்றான் (பாடல் 177)

என்பன போன்று சொல்லாட்சியால் சிறப்புற்றுள்ள இடங்கள் பல.

வினாக்கள்

வினாக்கள் மூலமே பல செய்திகளை விளங்க வைக்கும் கவிஞரின் திறம் போற்றுதற்குரியது.

காய்ச்சாத பாலுக் கென்ன
கற்கண்டும் பருப்பும்? (பாடல் 102)

குட்டையில் குளத்தில் முட்டைக்
  கொசுக்களும் தேங்கல் உண்டு;
நெட்டலை மேயும் நீல
  நிறக்கடல் தன்மேல் உண்டோ? (பாடல் 112)

கரியினை வைப்பா ருண்டோ
  கண்கவர் ஆடை தம்முள்? (பாடல் 318)

உளுத்தம்ப ருப்பில் கல்தான்
  ஒட்டுமோ? (பாடல் 369)

இவ்வினாக்கள் விளக்கும் செய்திகளைக் காப்பியத்தைப் படித்து அறியலாம்.

பேச்சு வழக்குச் சொற்கள் நயம்பட ஆளப்பட்டுச் சிறக்கும் இடங்களும் உண்டு. கலப்பு மணம் செய்து கொண்ட மங்கை-மாறன் பற்றி அயலார் கண்டவாறு பேசுகிறார்கள் எனக் கூறவருமிடத்தில்,

நஞ்சத்தாள் ஒருத்தி தன்னின்
  நாவைத்தான் தீட்டி விட்டாள். (பாடல் 18)

'நாவைத் தீட்டி விட்டாள்' என்பதிலேதான் எவ்வளவு எள்ளல்?

துறவு

துறவினை வேறுபட்ட பார்வையிற் பார்க்கின்றது 'துறவுக்கனி' என்னும் பகுதி.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்பார் திருவள்ளுவர். ஆதலாற்றான்

எவ்வுயிர்க்கும் அன்புசெய வேண்டும்; நெஞ்சில்
எள்ளளவும் பேராவல் இருத்தல் துன்பம் (பாடல் 508)

எனப் புகன்ற புத்தரும்,

எளியோர்க்கும் உதவுவதே அறம் எனக் கூறி எல்லோருக்குந் தாமே துயரேற்ற ஏசு வள்ளலும்,

இறைவன் உருவமற்றவன் என்பதை நாட்டி எல்லோரும் சமம் என எடுத்துச் சொன்ன நபிகள் நாயகமும்,

எக்குலத்தோர் ஆனாலும் பசிகொண் டாரேல்
எடுத்துண்ணத் தருவீரே எனப்பகர்ந்த வள்ளலாரும்

வாழ்வாங்கு வாழ்ந்த காரணத்தால் நம் நெஞ்சத்துள்ளே கடவுளென நிலைத்து நிற்பர் என்பதை இனிய மொழியில் எடுத்துரைத்து, துறவு என்பது மனைவி மக்களைத் துறத்தல் அன்று;

அஃது ஒரு மனநிலை; மன்னுயிர்க்குத் தொண்டு செய்யும் அம்மனநிலையைப் பெறுதலே மாபெரும் அறம் - துறவின் பயன் என்பதை நிலைநாட்டுகிறது காப்பியத்தில் உள்ள துறவுப் பகுதி.

கிளைச் செய்திகள்

சாதிக் கொடுமை இந்நாட்டிலிருந்து ஒழிந்தாலொழிய முன்னேற்றமில்லை; கலப்பு மணம் செய்து கொள்பவர்களுக்கு நேரிடும் துயர் துடைக்கக் கழகமொன்று வேண்டும்; ஊருக்குழைப்பதே யோகம் என்னும் இக்கருத்துகளை மையமாக்கி இக்காப்பியம் புனையப்பட்டுள்ளது. என்றாலும் மரங்களை வெட்டுவதன்வழி மண்ணின் வளத்தை அழிக்கிறோம்; நாடு நலம்பெற ஏற்றங்கொள்ள மனப்புரட்சி ஏற்படவேண்டும்; இயற்கை மருத்துவ முறையின் சிறப்பை மக்கள் அறியாது போயினர்; பயனுள்ள அம்மருத்துவம் போற்றப்படவேண்டும் என்பன போன்ற செய்திகளும் காப்பியத்தின் இடையே கிளைச் செய்திகளாய் அமைந்து சுவை கூட்டுகின்றன.

வாழ்க வளர்க

சிறந்ததொரு காப்பியத்தை யாத்துத் தந்துள்ள கவிஞர் துரை.மாலிறையன் இதுபோன்ற இன்னும் பல நூல்களை யாத்து ஏற்றம் பெற வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன். வாழ்க அவர் கவிதைத் தொண்டு! வளர்க அவர் புகழ்.

நூல் ஆக்கம்	கவிஞர் துரை. மாலிறையன்
வகைமை	குறுங்காப்பியம்
வெளியீடு	பூவழகி பதிப்பகம், சென்னை–14. (1986)

9

கனகாபிஷேக மாலை

முதற் காப்பியம்

பதினேழாம் நூற்றாண்டு தொடங்கித் தமிழில் இசுலாமியக் காப்பியங்கள் பல எழுந்துள்ளன. தமிழிலக்கிய வரலாற்றில் காவிய காலம் முடிவடைந்து சிற்றிலக்கிய வகைகள் பெருக்கெடுத்துக் கொண்டிருந்த நிலையில் இசுலாமியக் கவிஞர்கள் பெருங்காப்பியங்கள் பலவற்றைப் படைத்திருக்கிறார்கள். 17, 18, 19ஆம் நூற்றாண்டுகளை 'இசுலாமியப் பெருங்காப்பியக் காலம்' என்று குறிப்பிடலாம். இக்கால எல்லையில் தமிழில் 16 பெருங்காப்பியங்களை இசுலாமியப் புலவர்கள் படைத்திருக் கிறார்கள். பெருமானார் நபிகள் நாயகத்தின் வரலாற்றைக் கூறுவதால் சீறாப்புராணம் பலராலும் அறியப்பெற்று முதன்மை பெற்றிருக்கிறது; என்றாலும் இசுலாமியத் தமிழ்க் காப்பியத் தோற்ற வரிசையில் அஃது இரண்டாவதேயாம். கனகாபிஷேக மாலையே முதன் முதலில் தமிழில் தோன்றியுள்ள இசுலாமியப் பெருங்காப்பியம். இது கி.பி. 1648 (ஹிஜ்ரி 1058)ல் வெளிவந்தது. இந்நூலை இயற்றியவர் கனக கவிராயர் என்பார். கனகவிராயர் என்றும் வழங்குவதுண்டு. இஃது அவருடைய சிறப்புப் பெயர். அவருடைய இயற்பெயர் செய்கு நயினார் என்பதாம். காப்பியத்தை இயற்றுவதற்குக் கவிராயருக்குப் பொருளுதவி செய்தவர் மதுரையைச் சேர்ந்த கொந்தாலகான் என்பவர். இந்நூலைப் பாடுவதற்குக் கவிராயருக்கு மூல நூலாய் அமைந்தது முக்கத்தீஹுரசன் என்னும் அரபு நூலே!

பெயர்க் காரணம்

கனகாபிஷேகம் என்றால் பொன்னை வார்த்தல் என்பது பொருளாம். பெருமானாரும் அவரையடுத்து முறையே அபூபக்கர், உமறு, உதுமான், அலி, ஹசன், ஹுசைன், சறாயீல், செய்னுலாபுதீன் என எட்டு மன்னர்கள் ஒருவர்பின் ஒருவராய் ஆட்சிக்கு வருவதைச் சிறப்பாக ஒரு மாலை போன்று

தொடுக்கப்பட்டிருப்பதால் இந்நூல் கனகாபிஷேக மாலை என்று பெயர் பெற்றிருக்கலாம் என்பார் டாக்டர் உவைஸ்.

கனக (கவிராயர்) எட்டு மன்னர்களைப் போற்றிப் பாடியுள்ள தொகுப்பு ஆதலால் இந்நூலுக்குக் கனகாபிஷேக மாலை (கனகன் அபிஷேகித்துள்ள தொகுப்பு) என்னும் பெயர் வந்திருக்கக் கூடுமோ என்றும் கருதிப் பார்க்கலாம். கனகாபிஷேக மாலை என்னும் இச்சிறந்த காப்பியத்தைப் பாடியதால் ஒருவேளை புலவர் கனக கவிராயர் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பட்டிருப்பரோ என்றும் எண்ணிப்பார்க்கலாம். கனக கவிராயர் பாடியதால் நூல் கனகாபிஷேக மாலை என்ற பெயரைப் பெற்றதா அல்லது கனகாபிஷேக மாலையைப் பாடியதால் கவிஞருக்குக் கனக கவிராயர் என்ற சிறப்புப்பட்டம் கிட்டியதா என்ற முறையிலும் பெயர்க்காரணத்தை ஆராய இடமுண்டு.

பதிகம்

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகிய காப்பியங்களின் தொடக்கத்தில் பதிகம் அமைந்துள்ளது. காப்பியம் கூறும் செய்திகளைத் தொகுத்துத் தருவது பதிகம். இசுலாமியக் காப்பியங்களில் கனகாபிஷேக மாலை மட்டுமே பதிகத்தைக் கொண்டிருக்கிறது. காப்பியம் கூறும் முழுச் செய்திகளையும் சுருக்கி முப்பத்தொன்பது பாடல்களில் ஆசிரியர் தந்திருக்கிறார். பிற இசுலாமியக் காப்பியங்களில் பதிகம் இல்லை. கனகாபிஷேக மாலையில் பதிகம் காப்பியத்தின் தொடக்கத்தில் அமையாமல் கடவுள் வாழ்த்து, நாட்டுப் படலம், நகரப் படலத்தையடுத்து ஒரு தனிப் படலமாகவே அமைக்கப்பட்டிருப்பது காப்பியத் தொகுப்பில் ஒரு புது வகையாக உள்ளது.

வாழ்த்து

வாழ்த்துச் சொல்வதிலும் கனக கவிராயர் புது முறையைக் கையாண்டிருக்கிறார்! பொதுவாக உலகை, மக்களை வாழ்த்துவது காப்பியத்தின் இறுதியில் காணப்பெறும். ஆனால் இவரோ கடவுள் வாழ்த்துப் படலத்தின் முடிவில் (காப்பியத் தொடக்கத்தில்),

> பேதமில் ஒலிமார் தீனோர் பெரியவர் சிறியர் வாழி
> நீதமிற் படிப்போர் கேட்போர் நித்தமும் வாழி வாழி (பாடல் 27)

என வாழ்த்துரைக்கிறார். காப்பியத்தின் முடிவுப் பாடலாக,

> இந்தநூல் படித்தோர் வாழி; இனிமையின் உரைத்தோர் வாழி
> சிந்தையில் கேட்டோர் வாழி; செவ்விதின் உரைக்கக் கேட்கச்
> சந்தமா முயற்சி செய்தோர், தகையுத(வி) செய்தோர் வாழி;
> சுந்தர மதி,மும் மாரிபொழிந்(து) எவரும் வாழி; ஆமீன். (2792)

என்ற வாழ்த்துப் பாடல் அமைந்துள்ளது. படிப்போர், கேட்போரை வாழ்த்திக் கதையைத் தொடங்குகிறார். அவர்களை மீண்டும் வாழ்த்திக் காப்பியத்தை நிறைவு செய்கிறார். இந்த அமைப்பும் தனிச் சிறப்புடையதே.

உவமைகள்

அரிய பல உவமைகளைக் காப்பிய ஆசிரியர் அழகுபட ஆண்டிருக்கிறார். கல்லாதவரிடம் கொள்ளும் நட்பு வருத்தம் தரும்; இளமையில் கையில் பொருளின்றியிருப்பது பெரிய வாட்டத்தைத் தரும். இக்கருத்துகள் இணைந்து,

> கல்லா தவர்நட் பினைப்போன்றுங்,
> கையில் பொருள்அற் றவர்தமது
> நல்லாம் இளமை போன்று,மனம்
> வருந்தி..... (பாடல் 411)

என அருமையான உவமை தோன்றியுள்ளது.

இரு திறத்தவர்களுடைய பெரும்படையும் ஒன்றோடொன்று கலந்து பொருதன என்பது,

> வடகடலும் தென்கடலும் வந்தொன்றாய்க் கூடியபோல்,
> அடலரசன் பெரும்படையும் அலிப்படையும் எதிர்த்தனவால்
> (பாடல் 497)

எனக் கூறப்பட்டுள்ளது.

'வடகடலும் தென்கடலும்' என்னும் தொடராட்சி மகிழத்தக்கது. படையினர் பெருமளவில் மோதினார்கள் என்பது மட்டுமன்று; அவர்கள் நேர் எதிரெதிர்க் கொள்கையுடையவர்கள் என்பதையும் அத்தொடர் சுட்டுகிறது.

> தலைவனின்றித் தத்தளிக்கும் மக்களைக் குறிக்க
> ஆயனே இன்றி மேய்ஆடு போல்

என்ற அருமையான உவமையைக் கையாள்கிறார்.

உமறு கத்தாபு மறைந்ததும் மக்கள், அரசரில்லாக் குடிகளாகி அமைந்தனர் என்பதைக் கூறும் பாடல்கள் சிறப்புடையன. உவமைகளை அடுக்கிப் படிப்போரை உணர்ச்சிப் பிழம்பாக்கி விடுகிறார் கவிராயர்!

> தருவிலாப் பொழிலே போன்றும், தயவிலார் அறமே போன்றும்,
> மருவிலா மலரே போன்றும், மழையிலா நிலமே போன்றும்,
> உருவிலா உடலே போன்றும், ஒளியிலா மதியே போன்றும்,
> மருவிலாக் கணமே போன்றும், அரசிலாக் குடிகள் ஆனார். (829)

ஆயிலாக் காலி போலும், அறிவிலாப் புலமை போலும்,
தாயிலாக் குழவிபோலும், தமிழிலாத் தமிழே போலும்,
வேயிலாத் திகிரி போலும், விதுவிலா இரவே போலும்,
ஏயவோர் அரசும் இல்லா(து) இடர்ப்படும் குடிகள் ஆனார். (830)

தருவிலாப் பொழில், தயவிலார் அறம், மருவிலா மலர்...... என உவமைப் பொருள்கள் நீரொழுக்காய்த் தொடர்ந்துசெலப் பாடி யிருக்கும் அருமையை என்னென்பது? அறிவிலாப் புலமை இடர் தரும் என்பதை நெஞ்சில் தைக்கும் வண்ணம் தொடுத்திருக்கிறார்! 'தமிழிலாத் தமிழே போலும்' என்ற தொடர் தரும் ஆழமான பொருளை எண்ணி வியக்கிறோம்! இன்றைக்கு இத்தொடர் எவ்வளவு பொருந்தியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, இவ்விடரை நீக்கித் தமிழர்கள் 'தமிழுள்ள தமிழை'க் கையாள இப்பாடல் நமக்குத் தூண்டுகோலாய் அமைவதாக!

பண்டைநூற் பயிற்சி

கவிராயர் பண்டைத் தமிழிலக்கியங்களில் பெரும் பயிற்சி உடையவராயிருந்திருக்கிறார். அவற்றை ஆழமாய்க் கற்றுள்ள தோடு அவற்றிலுள்ள அரிய தொடர்களையும், கருத்துகளையும் தன் காப்பியத்தில் பொருத்தமுற எடுத்தாண்டிருக்கிறார். உமறு கத்தாபின் நல்லாட்சி நடைபெற்றதை,

மருந்தெனினும் பகுத்தருந்தி வந்தவர்க்(கு),
ஆதரம் பெருக்கி, வைய மெல்லாம்
பெருந்தலைமை நிலைநிறுத்திப், பீடுபெற
நிற்றலினாற் பகைபெற் றாலும்,
பருந்து,நிவந் திடுதுகிர்வாய்ப் பசுங்கிளியும்
ஒருதிருப்,பஞ் சரத்தில் வாழும்
பொருந்துகொடு வரிப்புலியும் புல்வாயும்
ஒருதுறைநீர்ப் புகுந்துண் டாரும் (369)

எனப் பாடுகிறார். பருந்தும் கிளியும் ஒரு கூட்டில் வாழவும், புலியும் பசுவும் ஒரு துறையில் நீருண்ணவுமாய் நல்லாட்சி நடை பெற்றதாம்!

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான், தனிக்காத்தான்; – மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ உலகு (நளவெண்பா 29)

என்னும் நளவெண்பாப் பாடலும்,

பொருதுறைசேர் வேலினாய்! புலிப்போத்தும் புல்வாயும்
ஒருதுறையின் நீருண்ண உலகாண்டான் உளன்ஒருவன்
(கம்ப. குலமுறை, 5)

எனும் கம்பராமாயணப் பாடலடிகளும் இணைந்து கவிராய ரிடம் ஒரு பாடலாய் உருவெடுத்துள்ளது. ஆட்சி குறித்த இக் கருத்து கவிஞருக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாய்த் தெரிகிறது. பிறிதோரிடத்திலும்,

சேன முங்,கிளி யும்,ஒரு பஞ்சரஞ் சேர,
மானும் வெம்புலி யும்,ஒரு துறையில்வா ருண்ண (791)

எனப் பாடியிருக்கக் காணலாம்.

திருக்குறள் கருத்துகள் கனகாபிஷேக மாலையில் பல இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன.

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு (குறள் 381)

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம் (குறள் 386)

என்பன திருக்குறள் பாடல்கள். மகதி என்பார் அரசாண்ட திறத்தைக் கூறவரும் கனக கவிராயர் இவ்விரு குறட்பாக்களையும் இணைத்து,

படைகுடி. கூ(ழ்)அமைச்சு நட்புஅரண் படைத்து, யாதுங்
கடுமொழி இலராய்க் காட்சிக்(கு) எளியராய்...... காத்தார் (541)

என்று பாடுகிறார். திருவள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார் என்று சொல்கின்ற பாடலும் இக் காப்பியத்தில் உண்டு.

'எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்னர்
எண்ணுவ மென்ப திழுக்கு'என்(று), இயல்பெரியோர்
கண்ணி யுரைத்த மொழி...... (2587)

என்று திருக்குறளைக் கவிராயர் போற்றிப் புகழ்வதைக் காண்கிறோம். திருவள்ளுவரை, 'இயல் பெரியோர்' எனச் சிறப்பிக்கிறார்.

தமிழ் மரபு

இக் காப்பியத்தில் தமிழ் மரபுகளை வேண்டியாங்கு கவிஞர் பயன்படுத்தியிருக்கிறார். காதலர் மீது காமன் மலரம்பு தொடுப்பதும், நிலாக் கதிர், தென்றல் காற்று, குயிலின் குரல் ஆகியவை காதலர்களை வருத்துவதுமாகப் பாடுவது தமிழ் மரபு. அரபுச் சூழலிலும் இக் கருத்துகளைக் கனக கவிராயர் பாடிச் செல்கிறார்.

மாரன்போர்க் கெழுந்தான்; அம்பூ மாரியைப் பொழிந்தான்; அந்த
ஏர்உறு மதியுந் தன்னொளிப் பிலாக்கதிர் களினாற் சுட்டான்;
காருறும் பொதிகைத் தென்றல் கால்வருத் திற்று; மாவிற்
சீருறுங் குயிலின் ஓதை இவனது திடம்போக் கிற்று. (1452)

பொதிய மலையைக் கவிஞர் அரபு நாட்டுக்கே கொண்டு சென்று விடுகிறார்.

பழமொழி

மக்களிடம் பரவலாய் வழங்கி வரும் பழமொழிகளைச் சுவைபட இக் காப்பியம் பல இடங்களில் கூறுகிறது.

'யானை உண்ட விளங்கனி' என்பது பழமொழி. இது,

உள்ளு டைந்தனர் யானை,உண்
விளங்கனி மான (790)

எனக் காப்பியத்தில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். 'மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பதுபோல' என்னும் பழமொழி,

எலிபிடித் திடுதற்கு ஓங்கும் மந்தரம் அகழ்ந்தாற் போல (1449)

என்ற பாடலடியில் வெளிப்படுகிறது.

'வேண்டாதார் கால்பட்டால் குற்றம்; கைபட்டால் குற்றம்'

என்பது பழமொழி. இதனை,

தான்மனம் வேண்டிடா மனைவி, தன்னது
கான்மரு வயிற்படிற் குற்றம்; செங்கரந்
தான்படிற் குற்றமாய்ச் சாற்றல் போலவே,
தேன்மொழிப் பாலெலாஞ் செயிரிற் கொண்டனர் (1483)

என்னும் பாடலில் காணலாம்.

'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல்' என்ற மொழி,

மருந்தை
மனத்தினில் நினைந்து,அதர் ஏக
அன்னது காலில் தட்டுப்பட் டாங்கு (1582)

எனும் பாட்டாய் வடிவெடுத்துள்ளது. 'பிடித்தாலும் புளியங் கொம்பாய்ப் பிடித்தான்' என்ற மொழியை மனத்திற் கொண்டு கவிராயர்,

வம்பன் 'எசிதை'ப் புளிய மரத்தினது
கொம்பென்றுன் னிப்பிடித்தீர்— (2586)

என்று எழுதுகிறார்.

மகிழ்வுரைகள்

மன மகிழத்தக்க உரைகள் பலவற்றை இக்காப்பியம் நமக்குத் தருகிறது.

பெண்கள் கண்களுக்கு மை தீட்டுகிறார்கள். மையின்றியே இருந்தாலே மனத்தை ஈர்த்துக் கொல்லும் கண்கள் அவை. அவற்றிற்கு மேலும் பொலிவூட்ட, மை எழுதுவதானது, கொலை செய்யக்கூடிய நஞ்சின் கையில் 'நீ கொல்' என்று நஞ்சைக் கொடுப்பதுபோல இருக்கிறதாம்!

கொலைசெயும் கடுவின் கையில் கொலவிடம் கொடுத்தால் என்ன
மலைமுலைச் சியர்,கண் கட்கு, மையினை இனிதின் இட்டாள்.(1359)

இழிஞரை என்ன செய்தாலும் அவர்கள் உயர்ந்தவராவதேது என்பதை,

கூவிழிக் காகம் முக்காற் குளிப்பினும் கொக்காங் கொல்லோ? (949)

என்ற வினாமூலம் புரியவைக்கிறார். நாள்தோறும் மூன்று வேளை குளித்தாலும் காக்கை வெள்ளையாவதேது?

இமாம் ஹுஸைனின் இறுதி நாள்களில் எசீதின் படைகள் அவரைச் சூழ்ந்துகொள்கின்றன; எந்த வகையிலும் அவர் தப்ப முடியாத நிலை. அந்நிலை எப்படிப்பட்டது? கவிராயர் கூறுகிறார் :

வலையினிற் படுமான் போலும், கரைபடு மச்சம் போலும்,
நிலைகெடக் குழியில் வீழ்ந்த நிறக்கரி போலும், தீயின்
உலையின்வாய் உறுப்படக்கிப் போலவும், மாவின் வாயில்
தலையுறு தவளை போலும், பூசைவாய் எலியே போலும் (2053)

ஐயிடை ஈக்கள் போலும், அளறிடை வேழம் போலும்,
வெய்யதூண் டில்எனு முள்ளை விழுங்கிய மீன்கள் போலும்,
மையறு மனத்தீ யோர்பால் அம்கடன் பட்டார் போலும்,
நெய்யழல் மீதிற், போலும் நெஞ்சுநொந் துருகி னார்கள். (2054)

ஹுஸைனார் இத்தகைய பேரின்னல்களுக்கு ஆளானார்கள் என்று மனமுருகக் கவிஞர் பாடுகிறார்; நம் மனங்களையும் உருக்கிவிடுகிறார். இராமனுடைய அம்புகளால் திகைப்புண்ட இராவணன் நிலையைக் கூறுகின்ற பழம் பாடலொன்று உண்டு.

விடங்கொண்ட மீனைப் போலும், வெந்தழல் மெழுகைப் போலும்,
படங்கொண்ட பாந்தள் வாயிற் பற்றிய தேரை போலும்,
திடங்கொண்ட இராம பாணம் செருக்களத் துற்ற போது,
கடன்கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை
வேந்தன்!

என்னும் இப்பாடலையும், ஹுஸைனார் நிலையை எடுத்துரைக்கும் கனக கவிராயர் பாடல்களையும் ஒப்பிட்டு இன்பம் காணலாம்.

வருணனைகள்

காப்பியங்களில் வருணனைகள் சிறப்பிடம் பெறுவன. புலவரின் கற்பனைத் திறனை வெளிப்படுத்த இடந்தருவது

வருணனைப் பகுதியே. இக் காப்பியத்தில் உள்ள வருணனைகள் வருணிக்கப் புகும் காட்சியை மனக்கண் முன்னர் ஓவியப்படுத்திக் காட்டுகின்றன.

அழகுமகளிரின் கண்களைக் கவிராயர் வருணித்துள்ள திறம் காண ஒரு பாடல் :

கயலைக், கடுவைக், கதிர்வாளைக்,
கரிய குவளைக் கடிமலரை,
அயிலைக், கடலை, வடுப்பிணையை,
அளியைச், சமனை முனிந்து,கதிர்
பயில்நற் குழையை எதிர்நடந்து,
பரந்து குமிழின் மேன்மறிந்து,
மயலுற் றிட,ஆ டவற்படுத்து,
மரையே போலும் இவர்விழிகள். (570)

அழகிய இளம் பெண்ணை வருணித்திருப்பது மட்டுமன்று; நேர் எதிராக முதிய கிழவியின் தோற்றத்தையும் வருணித்திருக்கும் திறமும் போற்றற்குரியது. (பாடல் 1345)

அருஞ்செயல்

இவ்வாறு பெருங்காப்பிய நலமனைத்தும் பொருந்தி விளங்குகின்ற இக் காப்பியத்தைப் பெருமைக்குரிய திரு. ஹஸன் அவர்கள் பதிப்பித்துத் தமிழ்கூறு நல்லுலகிற்குத் தந்திருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியது. திரு. ஹஸன் அவர்கள் நிறை புலமையாளர். அடக்கமும் எளிமையும் கொண்டவராயினும் ஆற்றுதற்கரிய அருஞ் செயல்களைச் செய்து முடிக்கும் ஆற்றலாளர். அவர்கள் இந்தக் காப்பியத்தை மிகவும் சிறந்த முறையில், முழுக் கவனம் செலுத்திப் பதிப்பித்திருக்கிறார்கள்! தமிழ் ஆர்வலர்கள் இலக்கிய அன்பர்கள் அவருடைய இப் பணியை என்றென்றும் மகிழ்ந்து போற்றுவார்கள் என்பது உறுதி.

நூல் ஆக்கம்	கனகவிராயர் (செய்கு நெய்னார்கான் புலவர்)
வகைமை	காப்பியம்
வெளியீடு	ஐந்தாம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு, கீழக்கரை. (1990)

10

தீரன் சின்னமலை

வாணிகம் செய்ய இந்தியா வந்த ஆங்கிலேயர்கள், இந்திய மன்னர்கள் - குறுநில மன்னர்களிடையே நிலவி வந்த உட்பகையை- - பூசலைப் பயன்படுத்திக் கொண்டு, நாட்டைக் கவர்ந்து ஆட்சி செய்யும் நிலையையும் ஏற்படுத்திக் கொண்டனர். விடுதலை உணர்வு மிக்க சிலர் அந்நிய நாட்டினர் நம்மை ஆளும் நிலை கண்டு கொதித்து அவர்களை விரட்டும் போர்களில் ஈடுபட்டு இன்னுயிரும் ஈந்தனர். வெள்ளையர் ஆட்சியை வேரொடு களைய வேண்டு மென முதலில் களம் கண்டவர் தென்னாட்டினரே. இந்நிலை வடபுலத்தில் பின்னரே ஏற்பட்டது.

ஆங்கிலேயருடைய மேலாண்மையை எதிர்த்து, அவர்களுக்கு அடிபணிய மறுத்துப் போரிட்டுத் தியாகம் பல செய்த பெருமை கொங்கு மண்ணுக்கு நிறைய உண்டு. தென்பாண்டி மண்டிலத்தில், 'வானம் பொழியுது பூமி விளையுது மன்னவன் காணிக்கை ஏதுக்குடா' என முழங்கி ஆங்கிலேயர்க்கு வரி செலுத்த மறுத்து வீர பாண்டியக் கட்டபொம்மன் போரிட்ட அக் காலகட்டத்தில் ஆங்கிலேயரை நாட்டை விட்டே ஓட்ட வேண்டுமெனக் கொதித்தெழுந்தவன் கொங்கு மண்ணில் தோன்றிய தீரன் சின்னமலை. ஆங்கிலேயரை மூன்று போர்களில் வெற்றி கண்ட அவனை வஞ்சமாக அப் பகைவர்கள் சிறைப் பிடித்தனர். கொங்கு மண்ணில் ஆங்கிலேயரால் முதன் முதலில் தூக்கிலேற்றப்பட்டவர் தீரன் சின்னமலையும் அவன் தம்பியருமே ஆவர்.

வீறுகொண்டெழுந்து விடுதலை உணர்வு கொந்தளித்துப் பொங்கிய அவ்வீரனுடைய வரலாறு அவன் பிறந்த மண்ணிலிருப்ப வர்களுக்கே அண்மைக் காலம்வரை தெரியாமலிருந்தது. சின்னமலையின் வீரம் குறித்துக் கும்மி முதலிய நாட்டுப்புறப் பாடல்கள் எழுந்தனவேனும் அவையும் புழக்கத்தில் இல்லாமல் இருந்துவந்தன. ஆங்காங்கே கிடைத்த சில வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டு தீரன் சின்னமலையின் வரலாற்றை

ஓரளவு அறிய முடிகிறதே தவிர முழுமையான, திட்டவட்டமான வரலாறு இதுதான் என்று சொல்லுதற்கியலவில்லை.

முதன் முதலாகப் புலவர் குழந்தை, தாம் அறிந்த செய்திகளைக் கொண்டு, 'தீரன் சின்னமலை வரலாறு' என்றொரு நூலை 1954இல் படைத்தார்; அவரே அதனைப் பெரியதொரு நாடகமாகவும் பின்னர் எழுதியுள்ளார். சின்னமலை பற்றி இதுவரை ஒரு சில நூல்களே வெளிவந்துள்ளன. திரு. கே.ஏ. மதியழன் எழுதியுள்ள 'தீரன் சின்னமலை' (1967), புலவர் தே.ப. சின்னசாமி எழுதியுள்ள 'தீரன் சின்னமலை வரலாறு' (1995), திரு. டி.எம். காளியப்பா எழுதியுள்ள 'தீரன் சின்னமலை' (1995), புலவர் முனைவர் செ. இராசு எழுதியுள்ள 'தீரன் சின்னமலைக் கவுண்டர்' (1996) என்பன சில குறிப்பிடத் தகுந்த நூல்களாம். கோவை சக்திக்கனல் 1984இல் இவ் வரலாற்றை ஒரு காவியமாய்ப் படைத்துள்ளார். நண்பனுக்குக் கடிதங்கள் வாயிலாய் வரலாற்றைச் சொல்லும் முறையில் 1992இல் திரு. பாலநடராசன், 'வீரத் திலகம் தீரன் சின்னமலை' என எழுதியுள்ளார். 'தீரன் சின்னமலை' (புதினம்) 1997இல் புலவர் அ. தயானந்தம் அவர்களால் வெளியிடப் பெற்றுள்ளது. 'விடுதலை வீரன் தீரன் சின்னமலை வரலாறு மேடை நாடகம்' முனைவர் கா. அரங்கசாமி அவர்களால் 1998இல் வெளியிடப்பெற்றுள்ளது. ஈரோடு பாவலர் வடிவேலன் 1999இல் இவ்வீர வரலாற்றைக் கவிதை நாடகமாக ஆக்கியுள்ளார். இப்போது திரு. பாஸ்கரதாசன் எழுதியுள்ள 'தீரன் சின்னமலை' வரலாற்று நூல் வெளிவருகிறது.

✡ ✡ ✡

பாஸ்கரதாசின் கதைபுனையும் ஆற்றலையும் கற்பனை மாந்தர்களை உலவவிடும் நேர்த்தியினையும் சுவைக்க, சின்னமலையின் வரலாற்றினை அறிவது பெருந்துணை புரியும். சின்னமலை பற்றி முதன்முதலில் எழுதிய புலவர் குழந்தை கூறியுள்ள செய்திகளின் அடிப்படையில் இவ்வரலாறு இங்கே தரப்படுகிறது.

பாண்டிய மன்னனால் உத்தம காமிண்டன் எனப் பட்டம் வழங்கப்பெற்ற கரியான் சர்க்கரை மரபில் வந்த கொங்கு வேளாளர் இரத்தினக் கவுண்டர் என்பார் மேலப்பாளையத்தில் பெருநிலக் கிழாராய் வாழ்ந்து வந்தார். மேலப்பாளையம் ஈரோடு மாவட்டத்தில் நொய்யலாற்றங்கரையில் உள்ளது. இரத்தினக் கவுண்டருக்குக் குழந்தைசாமி, தீர்த்தகிரி, தம்பி, கிலேதார், குட்டிசாமி என்ற ஐந்து ஆண் மக்களும், மயிலாத்தாள் எனும் ஒரு

பெண் மகவும் பிறந்தனர். இரண்டாம் மகனாகிய தீர்த்தகிரி கி.பி.1756இல் பிறந்தான்.

தீர்த்தகிரி இளம் வயதிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். வில் வாள் பயிற்சி, சிலம்பம், குதிரையேற்றம் முதலிய வீரக் கலைகளிலும் தேர்ந்தவனாயிருந்தான். அக் காலத்தில் சேலம், கோவை மாவட்டங்களடங்கிய கொங்கு நாடு மைசூர் மன்னரின்கீழ் இருந்து வந்தது. அப்பகுதியைக் கண்காணிக்கும் அரசு அலுவலர் சங்ககிரிக் கோட்டையில் இருந்துவந்தார். காலப்போக்கில் சேலத்தை ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

தீர்த்தகிரி கட்டிளங்காளையாய் 17 அகவையினனாய் விளங்கிய காலம். ஒருநாள், மைசூருக்குச் செலுத்தக் கொங்குப் பகுதியில் வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தை எடுத்துக் கொண்டு சங்ககிரிக் கோட்டைக்குச் சென்றவர்களை வழிமறித்த தீர்த்தகிரி, "கொங்கு நாட்டு வரிப்பணம் மைசூர்க் கருவூலத்திற்கா?" எனக் கொதித்தெழுந்து அப் பணத்தைக் கைப்பற்றினான். பணத்தைப் பறிகொடுத்தவர்கள், அவனை யார் எனத் தம் மேலலுவர்களிடம் கூறுவது எனக் கேட்டபோது, "சென்னிமலைக்கும் சிவன் மலைக்கும் இடையே ஒரு சின்னமலை வந்து வாங்கிக் கொண்டான்" என்று சொல்லுங்கள் என்றான். அப்போதிருந்து தீர்த்தகிரியின் பெயர் சின்னமலை என வழங்கலாயிற்று.

சின்னமலையின் அண்ணன் குழந்தைசாமிக்கு ஆரியப் பட்டியிலிருந்த அவன் மாமன் மகள் கெம்பாயி மணம் செய்து வைக்கப்பட்டாள். குட்டிசாமிக்கும் திருமணம் நடைபெற்றது. மயிலாத்தாளைச் சென்னிமலைக்கு அருகேயுள்ள உலகபுரம் என்னும் ஊரில் திருமணம் செய்து கொடுத்தனர்.

அயலாரை நாட்டைவிட்டு ஓட்ட வேண்டும் என்னும் குறிக்கோளோடு சின்னமலை, கொங்குநாட்டு இளைஞர்களை ஒன்று திரட்டிப் படைப்பயிற்சி கொடுத்து வந்தான். எப்போதும் ஒரு பெரிய இளைஞர் கூட்டத்துடன் வீட்டுக்கு வருவான்; அவர்கட்கு எந்நேரமாயினும் உணவு படைக்கவேண்டும். அண்ணன் மனைவி இதை வெறுத்தாள். சினத்துடன் தாய்வீடு சென்றவள் அங்கேயே தங்கிவிட்டாள்; சின்னமலையின் கொட்டத்தை அடக்க வேண்டுமெனத் தன் தந்தையை இடையறாது நச்சரித்தும் வந்தாள்.

மைசூரில் திப்பு ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் செய்து வந்தான். கொங்கு நாட்டில் மைசூரின் மேலாண்மை இருந்து

வந்தது; என்றாலும் மைசூர்க்காரன் சொந்த நாட்டவன்; அயல்நாட்டினராய ஆங்கிலேயரை முதலில் வெளியேற்றவேண்டும் என்றெண்ணி, சின்னமலை, திப்புவுக்குத் துணைநின்று ஆங்கிலேயரை எதிர்க்க எண்ணினான்.

சின்னமலையும் தம்பியரும் சென்னிமலைத் தேர்விழாவுக்குச் சென்றனர். அவனுக்கு மானக்கேடு உண்டாக்க வேண்டு மென்றெண்ணியிருந்த ஆரியப்பட்டி மாமன், சில முரடர்களைக் கொண்டு சின்னமலையையும் தம்பியரையும் பிடித்துத் தேர்க் காலோடு சேர்த்துப் பின்புறமாய்க் கட்டச் செய்தான். செய்தியறிந்த மயிலாத்தாளின் கணவர், ஆட்களை அழைத்துவந்து சின்ன மலையையும் மற்றவரையும் மீட்டுச் சென்றார். ஆரியப்பட்டி மாமனைப் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென மயிலாத்தாள் துடித்துப் பொங்கியழுதாள். 'ஆரியப்பட்டி மாமன் தலையை வெட்டி, இக்களங்கத்தைப் போக்குவேன்' எனச் சின்னமலை தங்கைக்கு உறுதி கூறினான்.

"தாய் மாமனைப் பழி வாங்குவது பிறகாகட்டும்; முதலில் தாய் மண்ணை அடிமைப்படுத்துபவனை அழிக்கவேண்டும்" என்றெண்ணியவனாய் மறுநாள் காலையிலேயே தம்பியரோடு கிளம்பி மைசூரை அடைந்து, திப்புவுடன் சேர்ந்தான். சின்னமலையின் திறமையைக் கண்ட திப்பு விரைவில் அவனைப் படைத்தலைவன் ஆக்கினான். சின்னமலை தன் படையிலிருந்த கொங்கு நாட்டு வீரர்களையெல்லாம் ஒன்று திரட்டினான். சில திங்களில் கொங்குப் படையின் தனித்தலைவன் ஆயினான்.

சீரங்கப்பட்டணம் போரில் திப்பு ஆங்கிலேயர்களிடம் தோற்றுக் கொல்லப்பட்டதும் சின்னமலை தன் வீரர்களுடன் கொங்குநாடு திரும்பினான். முதலில் ஆரியப்பட்டி சென்றான். தங்கைக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் மாமன், மாமன் மகன் இருவர் தலைகளையும் வெட்டி, ஊர் நுழைவாயிலிலிருந்த ஒரு புளியமரத்தில் கட்டித் தொங்கவிட்டான். அங்கிருந்து உலகபுரம் சென்று தங்கையிடம் செய்தி கூறிய பின்னரே ஊர் சென்றான்.

மேலப்பாளையத்தின் எதிரே காவிரியின் வடபகுதியில் உள்ள ஓடாநிலை என்னுமிடத்தில் தங்கினான். அங்கே பெரிய கோட்டை ஒன்றனை அமைத்தான். பெரும்படை திரட்டினான். தன்னுடன் சிறுவயதிலிருந்து கூடவே இருந்துவந்த கறுப்பன் என்பவனைச் சேனைத் தலைவனாக்கினான். கறுப்பன் கறுப்ப

சேர்வை ஆனான். (கறுப்பனை நாவிதன் என்பார் புலவர் குழந்தை; மற்றையோர் அவனை முக்குலத்தோர் தோன்றல் என்பர்.)

சின்னமலை கொங்கு நாட்டிலுள்ள பாளையக்காரர்கள் அனைவரையும் அழைத்து ஆங்கிலேயரை எதிர்க்க ஒத்துழைப்பு வேண்டினான். அனைவரும் அவன் சொற்கேட்டு அவனைத் தலைவனாய் ஆக்கினர். ஓடாநிலையிலிருந்து சின்னமலை கோவைக் கோனாக ஆட்சிபுரியத் தொடங்கினான்.

தமிழ்நாட்டில் கோவை தவிர மற்றெல்லாப் பகுதிகளும் ஆங்கிலேயர் வயம் ஆயின. ஆங்கிலேயர்கள் சேலத்திலிருந்து மலையாளம் செல்ல வேண்டுமென்றால் கோவை வழியாய்த்தான் செல்ல வேண்டும் அதற்குச் சின்னமலை பெரும் தடையா யிருந்தான். ஆங்கிலேயர் அவனுக்குப் பலவகையிலும் இன்னல் இழைத்தனர். அவர்கள் கொட்டத்தை அடக்க வேண்டுமென முடிவுசெய்த சின்னமலை 1801இல் அவர்கள்மீது படை யெடுத்தான். காவிரிக் கரையில் இரு படைகளும் மோதின. கர்னல் மேக்ஸ்வெல் தலைமையில் வந்த ஆங்கிலப் படை புறமுதுகிட்டு ஓடியது.

ஓராண்டு ஓய்திருந்த வெள்ளையர் 1802இல் பெரும்படை யுடன் ஓடாநிலையில் தாக்குதல் நடத்த வந்தனர். கடுமையான போர். சின்னமலை தடிக்காரர்களை முன்னேறித் தாக்க ஆணை யிட்டான். தடிப்பயிற்சி இல்லாத ஆங்கிலப்படை தடுமாறியது. சின்னமலை ஆங்கிலேயர் படைத் தளபதி கர்னல் மேக்ஸின் தலையைத் தன் வாளால் கொய்தான். அத் தலைக்கு மாலை, சந்தனம் அணிவித்து ஒரு தட்டில் வைத்து ஊர்தோறும் அனுப்பித் தன் வெற்றிக் களிப்பைத் தெரிவித்துக் கொண்டான்.

இரண்டாண்டுகள் ஓடின. சின்னமலையைத் தாக்க ஜெனரல் ஹாரிஸின் தலைமையில் ஒரு பெரிய குதிரைப் படை அறச்சலூரை அடைந்தது. சின்னமலை இதனை எதிர்பார்க்கவில்லை. அவனுடைய படைகள் வந்து சேரவில்லை. சின்னமலை தனி ஒருவனாய்க் குதிரைமீது சென்று ஹாரிஸின் குதிரைமீது ஒரு பெரிய குண்டினை வீசினான். பெருங்காயமுற்ற அக் குதிரை மிரண்டு பின்புறமாய்த் திரும்பி ஓட, அதனைத் தொடர்ந்து எல்லாக் குதிரைகளும் திரும்பித் தலைதெறிக்க ஓடின. இம் முறையும் ஆங்கிலேயர் படை பெருந்தோல்வி கண்டது.

மூன்று முறை தோற்றோடிய வெள்ளையர் சின்னமலையை எவ்வாறாயினும் ஒழித்தாக வேண்டுமென, கள்ளிக்கோட்டை

யிலிருந்து ஒரு பெரிய பீரங்கிப் படையை அனுப்ப மந்தணமாய் முடிவு செய்திருந்தனர்.

வேலப்பன் ஆங்கிலப் படையில் ஒரு சுபேதார். அவன் சின்னமலையின் ஊருக்குப் பக்கத்து ஊரினன். மைசூர்ப் படையில் சேர்ந்த அவன், சின்னமலையின் கீழ்ப் படைவீரனாய்ப் பணிபுரிந்தவன். சின்னமலையின் நாட்டுப்பற்றைக் கண்டு பெரிதும் போற்றியவன். மைசூர்ப் படையை ஆங்கிலேயர் வென்றபோது அவனைப் போர்க் கைதியாகப் பற்றினர். அங்குப் பணியாற்றிச் சுபேதாராய் உயர்ந்த அவன் கள்ளிக்கோட்டையில் இருந்தான். அவன் சின்னமலைக்கு, "ஆங்கிலேயர் பெரும் பீரங்கிப் படையுடன் தாக்கத் திட்டமிட்டுள்ளனர். அதை எதிர்ப்பது எளிதன்று. ஆதலின் இப்போதைக்கு ஓடாநிலைக் கோட்டையிலிருந்து வெளியேறிக் காலம் கனியும்வரை மறைந்திருப்பது நல்லது" என ஒரு கடிதம் மூலம் செய்தி அறிவித்தான். நிலையை உணர்ந்த சின்னமலை ஓடாநிலைக் கோட்டையிலிருந்த அனைத்தையும் வெளியேற்றினான். சமையற்காரன் ஒருவனுடன் பழனிக்கு அருகிலிருந்த கருமலைக் காட்டில் சென்று தன் தம்பியர் இருவருடன் மறைந்து வாழ்ந்தான்.

வெள்ளையர் ஓடாநிலைக் கோட்டையைத் தாக்கி அழித்தனர். உள்ளே எதுவும் இல்லாதது கண்டு பெரிதும் ஏமாற்றம் அடைந்தனர். வேலப்பனுடைய கடிதம் எவ்வாறோ தவறி அங்கே கிடந்தது. அதைப் படித்ததும் சின்னமலை தப்பியதற்கு அவனே காரணமென்பதறிந்து வேலப்பனை உடனே கொன்றனர்.

போரிட்டுச் சின்னமலையை வெற்றி காணமுடியாத வெள்ளையர் சூழ்ச்சியால் வஞ்சகமாய் அவனை அழிக்க வேண்டுமென முயன்றனர். பணத்தாசையால் சின்னமலையினுடைய சமையல்காரனே அவனை ஆங்கிலேயர்க்குக் காட்டிக் கொடுத்தான். சின்னமலையும் அவன் தம்பியர் இருவரும் உணவுண்டு கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர்.

வெள்ளையர் எவ்வளவோ கேட்டும், கப்பம் கட்டி அவர்களின் கீழ் இருக்கமுடியாது என வீரமுழக்கமிட்டதால் சின்னமலையும் அவன் தம்பியர் இருவரும் சங்ககிரிக் கோட்டையில் 1805இல் தூக்கிலிடப்பட்டனர். ஒரு மாவீரனின் வாழ்க்கை வரலாறு இவ்வாறு முடிவுற்றது.

இவ்வரலாற்றுச் செய்திகளைக் கருவாய்க் கொண்டு அடிப்படை வரலாறு மாறாத வகையில் சில கற்பனை

மாந்தர்களையும் நிகழ்ச்சிகளையும் படைத்துக்கொண்டு பாஸ்கரதாசன் இந்நூலை எழுதியுள்ளார்.

திரு. பாஸ்கரதாசனின் இந் நூலைப் படிக்கும்போது ஒரு வீரகாவியத்தைப் படிப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. கற்பனை நிகழ்ச்சிகள்கூட அவர் இணைத்திருக்கும் முறையில் உண்மை நிகழ்ச்சிகளெனவே எண்ணத் தோன்றுகின்றன.

மேலப்பாளையத்தில் மேள தாளங்கள் முழங்கத் தீரன் சின்னமலையின் தங்கை மயிலாத்தாள் திருமண நிகழ்ச்சிகளோடு வரலாறு தொடங்குகிறது; சங்ககிரிக் கோட்டையில் விடுதலை வீரர் மூவரின் உடல்கள் தூக்கில் தொங்குவதோடு முடிவடைகிறது. இன்பத்தில் தொடங்கி அவலத்தில் முடியும் இவ் வரலாற்று நூலுள் வீரம், பெருமிதம், அச்சம், அழுகை என எல்லாச் சுவைகளும் கைகோத்து, நூலை எடுத்ததுமுதல் படித்து முடிக்கும்வரை கீழே வைக்க முடியாத உணர்ச்சி வலையில் நம்மைக் கட்டுண்ணச் செய்கின்றன.

✡ ✡ ✡

கதை மாந்தர்களை அறிமுகம் செய்வதில் ஆசிரியர் கையாண்டுள்ள உத்திகள் போற்றும் வகையில் உள்ளன. மணவிழாவில் தீர்த்தகிரியின் இல்லச் சமையல்காரன் பழனியுடன் அவன் மகனும் சமையற் பணி செய்கிறான். தந்தையிடம் முரண்டு பிடித்துக்கொண்டே இருக்கிறான். பெண்ணின் தந்தை இரத்தினக் கவுண்டர் அவனை யார் என்று கேட்க, "என் மகன் ஐயா, ஊரெல்லாம் சுத்தித் திரிஞ்சு இப்பத்தான் திரும்பி வந்திருக்கின்றான். திருந்தியிருக்கிறானா என்னவோ.....?" எனப் பழனி சலித்துக் கூறினான். 'தலைக்குமேல் வளர்ந்த பிள்ளை, அளவுக்குமேல் கண்டிக்க வேண்டாம்' எனப் பழனியிடம் கூறிவிட்டு அவன் மகனிடம், 'நல்லப்பா, இனிமேலாவது இவனுக்கு நல்ல பெயர் எடுத்துக்கொடு....' என்றார், இரத்தினம். 'நல்ல பெயர் எடுத்துக்கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை எஜமான், என் பெயரைக் கெடுக்காமலிருந்தால் போதும்...' என்கிறான், பழனி. இந்த நல்லப்பன்தான் சின்னமலையின் சமையல்காரனாகி, இறுதியில் ஆங்கிலேயர்களிடம் அந்த விடுதலை வீரனைக் காட்டிக் கொடுத்தவன். நல்லப்பன் பொல்லா அப்பனாக மாறக் கூடியவன் என்பதை அவனை அறிமுகம் செய்யும்போதே ஆசிரியர் அருமையாய்ச் சுட்டிவிடுகிறார்.

கருமலைப் பகுதியில் மறைந்திருக்கச் சின்னமலையும் அவன் தம்பியரும் புறப்பட்டபோது தெய்வநாயகி சமையலுக்குத் தான் உடன் வருவதாய்ச் சொன்னாள்.

"அதற்குத்தான் நான் போகிறேனே..." என்கிறான் நல்லப்பன்.

"நல்லப்பா! நீயுமா எங்களுடன் வருகிறாய்" என்று சின்னமலையின் தம்பி கிலேதார் வேடிக்கையாய்க் கேட்டான்.

"ஆமாம். சாகும்வரை இனி உங்களோடுதான். சமையல் பாத்திரங்களைக் கட்டி வைத்துவிட்டேன்" என்கிறான் நல்லப்பன்.

"சரி... சரி... கடைசிச் சாப்பாடு உன் கையில்தான் போ..." என்கிறான் சின்னமலை. இத்தொடர்களெல்லாம் எவ்வளவு உண்மை என்பதைக் கதையின் முடிவில் நாம் அறியும்போது பின்னர் நடக்க இருப்பதை முன்கூட்டியே, அது நடைபெறும் என்று தெரியா வகையில், கதையோட்டத்தோடு இணைத்து இவ்வுரையாடல் இணைக்கப்பட்டுள்ளது என்பதை உணர்கிறோம். இவ்வாறு அனைத்துக் கதைமாந்தர்களும் வெகுபொருத்தமுடன் நயம் மிளிரப் படைத்துக் காட்டப்பட்டுள்ளனர்.

கொங்கு நாட்டுப் பழக்கவழக்கங்கள், பண்பாட்டுச் சிறப்புகள், திருமணச்சடங்குகள், வீர விளையாட்டுகள், கொங்கு மண்டலத்தை ஆண்ட மன்னர்கள், சங்ககிரிக் கோட்டை அமைப்பு, ஓடாநிலைக் கோட்டையின் சிறப்பு ஆகியவற்றை அன்றைய நிலையில் சற்றும் மாற்றமின்றி மிகச் சிறப்பாக ஆசிரியர் காட்டியிருக்கிறார்.

✡ ✡ ✡

நூலின் நடை தங்குதடையின்றிச் செல்கிறது. செய்திகள் இயல்பு நவிற்சியுடனே நம் உள்ளங் கொள்ளை கொள்வனவாய் அமைந்துள்ளன. "கோழி கூவும் நேரம்; குடும்பத் தலைவிகள் எழுந்து 'பொத் பொத்' என்று கம்பு, தினை குத்த, வயதான பொக்கை வாய்க் கிழவிகள் 'டிங்...... டிங்...." எனக் கொட்டைப் பாக்கை இடிக்க, வயது வந்த குமரிகள் 'சலக் சலக்' எனக் கொலுசுகள் ஒலிக்க வாசல் தெளித்துக் கோலமிட..." என இவ்வரலாறு எழுந்த காலத்தில் கொங்கு நாட்டுப் பெண்டிர் இருந்த நிலையை வெகு இயல்பாக, உள்ளது உள்ளவாறே படம்பிடித்துக் காட்டுவதுபோல எழுதிச் செல்கிறார். (இன்று இந்நிலையைக் காண முடிவதில்லை. என்னுடைய இளம் பருவத்தில் இந்நிகழ்ச்சிகளை நானே கண்டிருக்கிறேன்.) வரலாற்று நூலில் காவிய நடை களிநடம் புரிகிறது.

கண்ணியம் குறையாத காதல் நிகழ்ச்சிகள் - உரையாடல்கள் தமிழக அக இலக்கிய மரபுகள் மாறாமல் அமைக்கப்பட்டுள்ளன. இடுப்பில் குடமேந்தி வரும் காதலியிடம் காதலன் பேசுகிறான்

"பெண்ணின் இடையே இல்லை என்றிருந்தேன். குடமொன்று இருந்ததால் ஒப்புக்கு ஒப்புக் கொண்டேன். பொன் குடத்தைத் தாங்காத இடை மண் குடத்தை எப்படித் தாங்கும்? அடடா! படபடக்கும் உன் கரு இமைகள் வண்டுகள் பறப்பதைப் போலல்லவா இருக்கின்றன...." இப்படிச் செல்கிறது பேச்சு.

"கன்னியரின் கடைக்கண் பார்வையும் கத்திமுனையின் கூர்மையும் ஒன்று என்பார்கள். இரண்டுமே ஆபத்தானவை. கத்திமுனை குத்தினால்தான் காயப்படுத்தும்; ஆனால் கன்னியரின் பார்வையோ பட்டவுடனேயே காயப்படுத்திவிடும்" - இப்படியொரு பேச்சு. திருக்குறள் இன்பத்துப் பால், சிலப்பதிகாரக் கானல்வரி போன்றவற்றை இப்பேச்சு நம்முன் நிழலாடச் செய்கிறது.

வேலப்பன் தங்கை தெய்வநாயகியிடம் சின்னமலை காதல் கொண்டிருந்தான். ஆயினும் ஆங்கிலேயரை நாட்டிலிருந்து அகற்றிய பின்னரே திருமணம் என இருவருமே உறுதி பூண்டிருந்தனர். அக்காதலர் உரையாடலில் வீரமே முன் நிற்கிறது. சின்னமலை படை திரட்டி வருமாறு தன் ஆட்களுக்குக் கட்டளை யிட்டான். அருகிலிருந்த தெய்வநாயகி, "படை திரட்டி வரும்படி பலருக்கும் கட்டளையிட்டீர்கள்! எனக்கும் கட்டளையிட் டிருந்தால் ஈட்டி, வாள் ஏந்தி இளம் பெண்களுடன் வந்திருப்பேன்" என்றாள். சின்னமலையோ, "தெய்வநாயகி! கொங்கு நாட்டில் வீரர்க்குப் பஞ்சமில்லை. அவர்கள் கோழை களுமல்லர்..... இருந்தாலும் உன் ஆர்வத்திற்குப் பாராட்டுகள்! பெண்கள் பாதுகாப்பாய் இருக்க வேண்டியவர்கள்" என்றான். உடனே தெய்வநாயகி, "ஏன் பெண்கள் போரில் ஈடுபடக் கூடாதா?... இன்னும் நூறு அல்லது இருநூறு ஆண்டுகளில் பெண்கள் நாட்டை ஆள வந்துவிடுவார்கள்..... எல்லாத் துறைகளிலும் சமமாக இருப்பார்கள்" என்றாள். "தெய்வநாயகி, உன் வாக்குப் பலிக்கட்டும். இந்தத் துணிவும் தொலை நோக்கும்தாம் எனக்குப் பிடித்தவை" என்றான். இன்றைய நிலையை அன்றே தெய்வநாயகி வாக்காக ஆசிரியர் கூறியிருப்பது அருமை! தெய்வநாயகியின் வாக்கு முழுமையாய் நடைமுறைக்கு வருவதாகுக!

✡ ✡ ✡

போர்க்கள வருணனைகள் வீரத்தின் வெளிப்பாடாய் விளங்குகின்றன. "வேலுக்கும் வாளுக்கும் இரையான வீரர்களின் சடலங்களின் மீது குதிரைகளின் குளம்புகள் பட்டு மேலும் சிதைந்துபோன தசைகள் தெறித்து அவற்றின் அடிவயிற்றில்

ஒட்டிக் கொண்டன. வெட்டுப்பட்ட வீரர்கள் கீழே விழுந்து, எழ முயற்சிக்க அவர்களின்மீது குதிரைகள் மோதி வயிற்றிலும் மார்பிலும் மிதித்து ஏறி ஓடின. இருதயம் நிற்பதற்கு முன்பாகத் துடித்த உடல்கள் இரத்த ஆற்றிலே மீன்கள் துள்ளுவதைப் போலத் துள்ளின'' எனும் சின்னமலையின் போர்க்களக் காட்சிகளைப் படிக்கும்போது புற இலக்கியக் காப்பியங்களைப் படிக்கும் உணர்வு தோன்றுகிறது.

ஆங்கியேர்களின் தூதுவனாக வந்த கெம்பையநாதனுடன் சின்னமலை பேசும் பேச்சில் தமிழ்நாட்டின் வீரமும் தன்மானமும் இழையோடித் துரோகச் செயல்களை இகழ்கின்றன. 'அடப் பாதகனே.... தாய்ப்பால் குடிக்கவில்லையா நீ? நாய்ப்பால் குடித்திருந்தால்கூடக் கொஞ்சம் நன்றியாவது இருந்திருக்கும். என் நாய்க்கு இருந்த நன்றிகூட உனக்கு இல்லையேடா... உன் தாய்க்கு இந்தச் செய்தி தெரிந்திருந்தால் அவமானப்பட்டுப் போயிருப்பாள்! ஏன் பெற்றோம் இவனை என்று உன் தாய் ஏசட்டும்! ஏன் வாழ்ந்தான் இவன் என்று இந்த நாடே பேசட்டும்.... போ!"

போர்களில் தம்மைச் சேர்ந்தவரையே காட்டிக் கொடுக்கும் துரோகச் செயல் தமிழக வரலாற்றில்தான் மிகுதியாகக் காணப்படுகிறது. ஏனோ இவ்விழிநிலை? ஆங்கிலேயரின் தூதுவனாய்ச் சின்னமலையிடம் சேலத்துப் பாளையக்காரர் வந்தார். அப்போது எதிரிக்குத் துணைபோகும் தமிழனை இகழ்ந்து சின்னமலை தன் தம்பியிடம், "தம்பி! தமிழனுக்கு முதல் எதிரி தமிழன்தான்! அவனும் முன்னேற மாட்டான்... மற்றவனையும் முன்னேற விடமாட்டான்... தமிழன் தலைவிதியே இதுதான்" எனப் பேசுகிறான்! இன்னும் இந்நிலை தானோ?

பண்டைய தமிழ் வேந்தர்கள் போருக்குப் புறப்படும் வீரர்களிடம் எப்படிப் பேசியிருப்பார்கள் என்பதை பாஸ்கரதாசன், சின்னமலை தன் வீரர்களிடம் பேசும் பேச்சுக்களின் வாயிலாய் அறிய வைக்கிறார். போர் வீரர்களிடம் சின்னமலை பேசும் பேச்சு, மனோன்மணீயம் நாடகத்தில் சீவக வழுதி தன் படை வீரர்களிடம் ஆற்றும் உரையை நினைவு படுத்துகிறது.

நாட்டுப்பற்று மிக்க ஒரு தந்தையின் பேச்சு எவ்வாறு அமையும் என்பதை, சுப்பராயக் கவுண்டர், தன் மகள் வேலம்மாளிடம் பேசும் பேச்சில் பாஸ்கரதாசன் படைத்துக் காட்டுகிறார். "மகளே! தாயை விட்டுக்கொடுத்துப் பேசுபவனையும் தாய்நாட்டைக் காட்டிக்கொடுத்துப் பிழைப்பவனையும் வெட்டி

நடுவீதியில் நட்டு வைக்க வேண்டும். பெற்ற தந்தையைப் பற்றித் தவறாய்ச் சொன்னால்கூட, அவன் குடிகாரன் என்று விட்டு விடுவான். தம்பியைப் பற்றிச் சொன்னால் அவன் தறுதலை என்று இருந்துவிடுவான். தங்கையைப் பற்றித் தவறாய்ச் சொன்னால் அவளைக் கண்டித்து வைப்பான். கட்டிய மனைவி என்றால்கூடப் பொறுத்துக் கொள்வான். ஆனால் தன்னைப் பெற்ற தாயைப் பற்றி ஒருவன் தவறாய்ச் சொல்லிவிட்டால், அவள் வேசி யென்றாலும் பொறுத்துக் கொள்ளமாட்டான். சொன்னவன் கடவுளே என்றாலும் மன்னிக்க மாட்டான். மகளே! தாயும் தாய்நாடும் ஒன்றுதான்.'' இத்தகைய உரைகள் பல நூலுள் பொதிந்து கிடக்கின்றன.

மீசை பற்றிய அருமையானதொரு கருத்தைப் பாஸ்கரதாசன் கூறுகிறார்!. கெம்பையநாதன் ஆங்கிலப் படைத்தலைவனிடம், "கேப்டன்! எங்கள் நாட்டில் ஆண்களின் மீசையைப் பார்த்தீரா.... முறுக்கிவிடப்பட்டு வானத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் உங்கள் மேஜருக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி.... அது ஏன் தொங்கிய மீசை பூமியைப் பார்த்தபடி வளர்கிறது?" என்று கிண்டலாய்க் கேட்டான். ஆனால் அப் படைத்தலைவனோ, "இந்தப் பூமியைப் பிடித்துவிட வேண்டும் என்ற ஆசைதான்" என மறுமொழி சொன்னான். மீசை பார்த்த இடங்களையெல்லாம் ஆசையோடு கைப்பற்றியவர்கள் என்பதுதானே ஆங்கிலேயர் வரலாறு.

✡ ✡ ✡

சின்னமலை திருக்குறள்வழி ஆட்சி செய்தான் எனச் சொல்லிப் பாஸ்கரதாசன் பெருமை கொள்கிறார்; இன்றைய டாக்டர் கலைஞர் செயல்களைச் சின்னமலை ஆட்சியிலேயும் பொருத்திக் காட்டி மகிழ்கிறார். "கொங்கு மக்கள் யாவரும் ஓர் இனம்; ஒரு குலம் என்று ஒற்றுமையுடன் இருக்கும் பொது நோக்குடன் பொதுவான ஓர் இடத்தில் குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்படும்" எனச் சின்னமலை அறிவிக்கிறான். இன்றைய நடைமுறைகளைப் பழைய வரலாற்றில் நுழைத்து எழுதுவது உண்டு. சின்னமலையின் அறிவிப்பு, டாக்டர் கலைஞர் அவர்களின் 'சமத்துவபுரம்' திட்டத்தை நினைத்து எழுதியதாகும்.

சின்னமலையை மனித நேயம் மிக்க, சீர்திருத்த உணர்வு கொண்ட• இறைநம்பிக்கையாளராகப் பாஸ்கரதாசன் காட்டுகிறார் :

"ஐயா... எனக்குக் கடவுளின் மீது மிகுந்த பக்தி உண்டு... பெற்ற தாயின் மீது பக்தி உண்டு.... கற்ற தமிழின் மீது பக்தி உண்டு. ஆனால் பக்தி பிறரைக் பாதிக்கக்கூடாது."

"மனக்குறையைச் சொல்லக் கோயிலுக்கு வந்து செல்பவர் களுக்கு ஒரு குறையும் இருக்கக்கூடாது. அதிகமான மூட நம்பிக்கை யையும் வளர்க்கக் கூடாது. மன்னன் சரியில்லையென்றால் நாட்டின் நலம் கெட்டுவிடும். கட்டிய மனைவி சரியில்லை யென்றால் வீட்டின் பெருமை கெட்டுவிடும். பூசாரி சரியில்லை யென்றால் கோயிலின் புனிதம் கெட்டுவிடும்."

- இவை சின்னமலையின் கொள்கைகள்.

பொல்லான் எனும் தாழ்த்தப்பட்டவனை அடித்த சாமியாரைச் சின்னமலை கண்டித்து, சாமியார்களின் பொய்ப் புனைவுகளைக் கேலி பேசுகிறான்.

சாதி உணர்வு அற்றவனாகவும் சின்னமலை காட்டப் படுகிறான். பொல்லான் எனும் அருந்ததியத் தோழனை, 'இவர் எங்களில் ஒருவர்' என்கிறான் சின்னமலை. இதனை, 'குகனொடு ஐவரானோம்' என இராமன் கூறும் கம்பராமாயணத் தொடரோடு பொருத்திக் காணலாம்.

பொல்லான், சின்னமலை காலில் விழுகிறான். உடனே சின்னமலை, "பொல்லான், முதலில் எழுந்திரு. காலில் விழும் கலாச்சாரம் நம் இனத்தவருக்கு எப்போதும் வரக்கூடாது. உன் காலிலும் யாரும் விழக்கூடாது; நீயும் யார் காலிலும் விழக்கூடாது. இது நம் எல்லாருக்கும்தான்" என்கிறான் சின்னமலை.

பொல்லானை ஆங்கிலேயர் எவ்வளவோ துன்புறுத்திய போதும் அவன் சின்னமலை பற்றி எதுவுமே கூற மறுத்துவிட்டான். பெயர் பொல்லானே ஆயினும் பண்பில் அவன் நல்லான். சமையல்கார நல்லப்பன், பெயரில் நல்லானே ஆயினும் பண்பில் பொல்லான். இவ்விருவரும் பெயருக்கும் செயலுக்கும் முரண் அமைந்த கதைமாந்தர்களாவர்.

சின்னமலை தமிழுக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும் பெருமதிப் பளித்தவன். அவனுடைய ஆசிரியர் அம்பிகாபதிப் புலவர் அறிவுரைப்படியே அனைத்தையும் செய்துவந்தான். அம்பிகாபதிப் புலவர், மதுரைத் தமிழ்ச் சங்கம்போலக் கொங்குப் புலவர் சபை ஒன்றனைத் திருச்செங்கோட்டில் தொடங்கவேண்டுமெனும் தம் விருப்பத்தைச் சின்னமலையிடம் தெரிவித்தார். சின்னமலை அதனை உடனே ஏற்று ஏற்பாடுகள் செய்தான். சபை தொடங்க

ஏற்பாடாயிருந்த நாளில், அவன் தலைமறைவாய் வாழவேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது. "இப்போது எனக்குள்ள கவலையெல்லாம் புலவரின் நீண்ட நாள் கனவான கொங்குப் புலவர் சபைக்குத் தடை ஏற்பட்டதும், என் நீண்டநாள் இலட்சியமாகிய புதிய குடியிருப்பு அமையாது நின்றுபோனதும்தான்.... என் செய்வது? தமிழன்னை அவ்வாய்ப்பைத் தள்ளிப்போட்டு விட்டாள்" எனச் சின்னமலை கவலையுடன் புலவரிடம் கூறினான். அவனுடைய புதிய குடியிருப்புக் கனவு இன்று கலைஞரால் நனவாகி வருகிறது. புலவர் சபை கூடும் நன்னாளைத் தமிழன்னை மேலும் தள்ளிப் போடமாட்டாள் என்று நம்புவோமாக!

தீரன் சின்னமலை வரலாற்றினை முழுமையாகவும் விரிவாகவும் பாஸ்கரதாசன் எழுதியுள்ளார். இவ்வரலாற்றைப் படிப்போர் உள்ளங்களில் நாட்டு விடுதலை உணர்வு கொப்புளித்தெழும் என்பது உறுதி. திரு.பாஸ்கரதாசன் செய்தியைச் சொல்லியுள்ள பாங்கு போற்றும் வகையில் உள்ளது. இளைஞர்களிடையே இத்தகைய வீர வரலாறுகள் பரவவேண்டும்.

இந்திய விடுதலை வரலாற்றின் முதற்கட்ட நிகழ்வின் ஒரு பகுதியைச் செவ்வனே எழுதியுள்ள பாஸ்கரதாசனுக்கு மனம் நிறைந்த பாராட்டுகள். திறனறிந்து சொல்லும் தன்மை அவருக்கிருப்பதால் இத்தகைய நூல்கள் பலவற்றை எழுதி மக்களிடையே ஆக்கமும் ஊக்கமும் சேர்க்க வேண்டுமென விழைந்து வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	பாஸ்கரதாசன்
வகைமை	வரலாறு
வெளியீடு	கொங்குநூல் பதிப்பகம், சென்னை–5. (1999)

11

தீரன் சின்னமலை

முத்தமிழில் ஒன்றாய்ச் சிறந்திருந்து பின்பு மங்கிப் போயிருந்த கவிதை நாடகத்துறை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வளர்ச்சிப் படியில் அடியெடுத்து வைக்கலாயிற்று. என்றாலும் கவிதை நாடகங்கள் பெருமளவில் தோன்றின என்று சொல்ல முடியாது. 'கவிதை நாடகம் நமது இலக்கியச் சோலையில் எண்ண முடியாத மலர்த் தொகுதிகளாகக் காணப்படவில்லை. எப்போதோ உதிக்கும் குறிஞ்சி மலராகத்தான் காட்சி தருகிறது' என்கிறார் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர். கடந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் சற்றொப்ப 75 நூல்களே தோன்றி யுள்ளன. ஆண்டுக்கு ஒரு நூல் எனும் சராசரியைக்கூட எட்டவில்லை.

இருபதாம் நூற்றாண்டில் 1500க்கு மேற்பட்ட கவிஞர்கள் கவிதைகள் எழுதியுள்ளனர். இவர்களுள் கவிதை நாடகம் எழுதியவர் சற்றொப்ப 75 பேர் மட்டுமே. கவிதை எழுதுபவர்களுள் நூற்றுக்கு 5 விழுக்காட்டினரே கவிதை நாடகம் எழுத முன்வந்தள்ளனர் என்பது கொண்டு, கவிஞர்கள் கவிதையில் பிறவகை இலக்கியங்களைப் படைப்பதில் காட்டும் ஆர்வத்தைக் கவிதை நாடகங்களைப் படைப்பதில் காட்டுவதில்லை என்பதை அறிய முடிகிறது.

இதேபோல் குறிப்பிட்ட 60 ஆண்டுகளில் (1920-1980) ஏறத்தாழ 1400 நாடகங்கள் அச்சாகி வெளிவந்துள்ளன. இன்னும் பல நாடகங்கள் அச்சேறாது முடங்கிக் கிடக்கும் என்பது உறுதி.[1] இக்கால எல்லையுள் ஏறத்தாழ 45 கவிதை நாடக நூல்களே தோன்றியுள்ளன.

---

1. டாக்டர் ஏ.என். பெருமாள், அறுபது ஆண்டுகளில் அருந்தமிழ் நாடகம் (கட்டுரை), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக மணிவிழா மலர், 1962, பக். 32

இவ்வாறு கவிதை நாடகங்களும் அவற்றை எழுதுவோரும் எண்ணிக்கையில் குறைவாக இருந்தபோதிலும் கவிதை நாடகங்கள் பெருமைக்குரியனவாகவே கருதப்பட்டு வந்துள்ளன. கவிதை நாடகங்கள் எழுதுவதில் பெரும்புலவர்கள் தொடர்ந்து அக்கறை காட்டியே வந்திருக்கின்றனர். எண்ணிக்கையில் குறைந்தனவே யெனினும் கவிதை நாடகங்கள் கவிஞர்களின் எழுச்சிக்குக் காரணமாய் அமைந்திருந்தன.

"எல்லாக் காலங்களிலுமே சில விதிவிலக்குகளைத் தவிர நாடகக் கவிதைகள் பிற சமகால இலக்கியங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் சலிப்புடையனவாகத் தோன்றியபோதிலும், பெரும்புலவர்கள் நாடகங்கள் எழுதவே, மீண்டும் மீண்டும் விரும்பி முனைந்துள்ளனர். ஜான்சன், வோர்ட்ஸ்வொர்த், காலரிட்ஜ், பைரன், ஷெல்லி போன்றோர் நாடகக் கவிதைகளை எழுதியுள்ளனர். சில அருமையான நாடகக் கவிதைகளை இயற்ற வேண்டுமென்பது கீட்ஸின் தனியான ஆர்வமாக இருந்தது' என டௌசன் எனும் மேனாட்டு அறிஞர் ஒருவர் குறிப்பிட்டிருக்கக் காண்கிறோம்.

கவிதை நாடக ஆசிரியர்கள் உரையாடல்களில் உயர்ந்த மொழிநடை அமைய வேண்டும் எனக் கருதுவதால் பேச்சு மொழி நடை அறவே அகற்றப்படுகிறது. எனவே இவை பெரும்பாலும் நடிப்பதற்கில்லாது படிப்பதற்குரியனவாகவே அமைகின்றன.

இப்போது தமிழிலுள்ள கவிதை நாடகங்களை (1) வரலாற்று நாடகங்கள் (2) இலக்கிய நாடகங்கள் (3) சமுதாய நாடகங்கள் (4) கற்பனை அல்லது தத்துவ நாடகங்கள் (5) மொழிபெயர்ப்பு அல்லது தழுவல் நாடகங்கள் என ஐவகையாகப் பகுக்கலாம் என்பார் முனைவர் இரா.குமரவேலன். இவற்றுள் இலக்கியத் தழுவல் நாடகங்களே மிகுதியாக எழுந்துள்ளன. வரலாற்று நாடகங்கள் மிகவும் குறைந்த அளவே உள்ளன. இவற்றுள்ளும் தமிழ் நாட்டில் நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு எழுதப்பட்டவை நான்கு அல்லது ஐந்தே எனலாம். பாவலர் ஈரோடு வடிவேலன் தமிழக விடுதலை மறவன் தீரன் சின்னமலை பற்றி எழுதி வரலாற்றுக் கவிதை நாடக எண்ணிக்கையில் ஒன்றனைக் கூட்டியிருக்கிறார்.

இந்நாடகக் காப்பியத்தை எழுதியுள்ள முனைவர் இரா. வடிவேலனார் அவர்களைக் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக

---

1. S.W. Dowson, Drama and the Dramatic, P.69

அறிவேன். அவர் முதலில் எழுதியதே, 'நெஞ்சின் கனல்' என்னும் அன்னிமிஞ்லியைப்பற்றிய உரைநடை நாடகமாகும். அதற்குப் பிறகு தாமும் வளர்ந்து, தமிழையும் வளர்த்து வருகிறார். இவர் இருபத்தைந்து நூல்கள் எழுதியிருப்பதொன்றே இவர்தம் தமிழ்த் தொண்டிற்குச் சான்றாம். அவற்றுள் கவிதை நூல்கள் பல, புதினங்கள் பல, சிறுகதைகள் பல, நாடகங்கள் சில!

இவர் தமது அறுபத்து நான்காம் வயதில், பட்டறிவு நிறைந்த நிலையில், முதிர் புலமைத் தகுதியோடு, 'தீரன் சின்னமலை' என்னும் இந்நாடகத்தைத் தந்துள்ளார். இந்நாடகம் ஐந்து களங்களையும் இருபத்தாறு காட்சிகளையும் கொண்டுள்ளது.

நாடகங்களில் காட்சி அமைப்பு மிக முக்கியம். நாடகம், படிப்போரை அல்லது காண்போரை ஈர்த்துத் தன்வயப்படுத்துவ தாகவும், நாடகத்தின் மையக் கருத்தைப் படியவைப்பதாகவும் முதற்காட்சி அமையவேண்டுமெனத் திறனாய்வாளர் கூறுவர்.

முதல் நாடகக் காப்பியமாம் சிலப்பதிகாரத்தில், கோவலன் கண்ணகி திருமணத்தை முதற்காட்சியாக அமைக்கிறார், இளங்கோவடிகள். மங்கையர், மணமக்கள்மீது மங்கலப் பொருள் களைத் தூவி,

> காதலர்ப் பிரியாமல், கவவுக்கை ஞெகிழாமல்
> தீதறுக (சிலப். மங்கல. 61–62)

என வாழ்த்துகின்றனர். "நீவிர் என்றும் பிரியாமல், இணைந்த கை நெகிழாமல், தீதின்றி வாழ்வீராக" என வாழ்த்துவது எதிர்மறை முறையினதாம். இதனையே, "நீவிர் என்றும் இணைந்தவராய், கவ்விய கை கவ்வியதாகவே, நலம் பொலிய வாழ்வீராக" என உடன்பாட்டு முறையில் வாழ்த்தியிருக்கலாம். இம்மணமக்கள் நெடிதுநாள் இணைந்து வாழப்போவதில்லை; விரைவில் கோவலன் கண்ணகியைப் பிரிய இருக்கிறான்; தழுவிய கை நெகிழப்போகிறது; இவர்கள் வாழ்வில் தீமையே விளைய இருக்கிறது" என எதிர்காலத்தில் தீவினைகள் நிகழ இருப்பதைக் குறிப்பால் புலப்படுத்தி இளங்கோவடிகள் முதற்காட்சியை அமைத்திருக்கும் திறத்தினை ஆய்வாளர்கள் வியந்து பாராட்டு கின்றனர். கவிஞர் வடிவேலனாரும் முதற்காட்சி அமைப்பில் இவ்வுத்தியைச் சிறப்புறப் பயன்படுத்தியுள்ளார்.

அம்மன் விழாவில் பெண்கள் அடுப்புக் கூட்டித் தீப்பற்ற வைத்துப் பொங்கலிடுகின்றனர்.

தங்கத் தகடாய் நெருப்புகள் பற்றி,
எங்கும் இடமிலாக் கண்ணொட்டும் தூரம்,
பெருவிளக் குகளாய்.......

தெரிகின்ற காட்சியோடு வடிவேலனாரின் தீரன் சின்னமலை நாடகம் தொடங்குகின்றது. ஒளி மயமான தொடக்கம். விழாவில் சாமி ஆடிய ஒரு பெண்,

கொற்ற வண்டி குடைசாய் தலையும்,
மலைக்கோட்டை யொன்று மண்மே டாதலும்,
வடகீழ்த் திசையிலே மாயக் கண்களால்
உடன்று நோக்கி உரைக்கிறேன் மக்களே!

என்று கூறியதும் சாமியாட்டம் முடிவடைகிறது (களம் 1, காட்சி 3). ஓடாநிலைக் கோட்டை உடைபடப்போவதையும் சங்ககிரிக்கோட்டையில் சின்னமலைக்குக் கேடு நேரப்போவதையும் முன்கூட்டியே சாமியாட்டம் மூலம் அறிவிக்கும் உத்தியைக் கையாண்டு நாடகத் தொடக்கத்தை மிக அருமையாக அமைத்திருக்கிறார், பாவலர் வடிவேலன்.

நாடகக் கதைமாந்தர்கள் (1) நல்ல முறையில், (2) பொருத்தமாக, (3) வாழ்க்கை நடப்பில் காணக்கூடியவர்களாக, (4) முரண்பாடற்ற முறையில் படைக்கப்பட வேண்டும் என்பது அரிஸ்டாட்டிலின் கருத்து. இது வரலாற்று நாடகம் என்பதால் கதைமாந்தர் படைப்பில் ஆசிரியருக்குச் சிக்கல் இல்லை; என்றாலும் கற்பனை மாந்தர்களை இவ்விதியைச் சிறப்பாகப் பின்பற்றி, முரண் ஏதும் இன்றிப் படைத்திருக்கிறார்.

நாடகங்கள் தொடக்கம், சிக்கல், உச்சநிலை, வீழ்ச்சி, முடிவு என ஐந்து நிலைகள் கொண்டனவாய் விளங்கும். இந்நாடகத்தில் தீர்த்தகிரி திப்புவிடம் சென்று சேர்வதுவரை தொடக்கம்; திப்புவுடன் சேர்ந்து ஆங்கிலேயருடன் போரிடுவதும் திப்புவின் இறப்பிற்குப் பின் திரும்ப வந்து ஓடாநிலைக் கோட்டையிலிருந்து அரசாள்வதும் சிக்கல் எனலாம்; ஆங்கிலேயருடன் மூன்று போர்கள் நடத்தி வெற்றி பெறுதல் உச்ச நிலை; ஓடாநிலைக் கோட்டையை விட்டு அகன்று கருமலையில் மறைந்து இருத்தல் வீழ்ச்சி; ஆங்கிலேயரிடம் பிடிபட்டுத் தூக்கிலிடப்படுவது முடிவு. தொடக்கம், நெல் முளைத்தல் போன்றது; சிக்கல், முளைத்த நெல் நாற்றாவது போன்றது; உச்சநிலை, நெற்கதிர் தோன்றியதொப்பது; வீழ்ச்சி, கதிர் முதிர்ந்து முற்றிவிளைவது போன்றது; தாளை அறுத்து, நெல் அடித்து, தூற்றிக் கொண்டுபோய் உண்டு மகிழ்வது போன்றது முடிவு என்பார், விபுலானந்த அடிகள். கவிஞர் வடிவேலனாரின்

இந்நாடகத்தில் தொடக்கம், சிக்கல் மெதுவாக நடையிட்டுச் செல்கிறது. உச்ச நிலை, வீழ்ச்சி, முடிவு விரைந்து நடைபோடுகிறது.

தீரன் சின்னமலையின் வரலாற்றைக் கூறும் நோக்கில் கொங்கு நாட்டின் பண்பாடுகள், விழாக்கள் பற்றிச் சொல்ல வேண்டுமென ஆசிரியர் விழைவதால் கதையில் இவை பெருமளவில் இடம் பெறுகின்றன. அம்மன் விழா நடைபெற்ற விதம், பூப்பு நன்னீராட்டு விழா, எழுதிங்கள் சீர் இவற்றை யெல்லாம் விரிவாகக் கூறிவருபவர் சின்னமலையின் மூன்று வெற்றிகளையும் ஒரே காட்சியில் முடித்து விடுகிறார்.

காவிரிக்கரையில் சின்னமலையின் முதற்போர்; சின்னமலை யின் தோள்வலிமுன் நிற்கலாற்றாது புறங்காட்டி ஓடிற்று வெள்ளைப்படை. சின்னமலையின் குதிரைப்படை, வெருண் டோடும் வெள்ளைப்படையைத் துரத்தியடித்தது. 'பல இடங் களிலும் வெற்றிபெற்ற கர்னல் மேக்ஸ்வெல் படை, கோயமுத்தூரில் ஒரு சிறுபடைக்குத் தோற்றது' [1] என ஒரு வெள்ளையரே எழுதியிருக்கிறார்.

பூனைக் குலமென வெள்ளைப் படையோடப்
பூரித்து வீரப் புலிபோலச்
சேனைக் கதிபதி சின்ன மலைவரும்
தீரத்தை வந்துமே பாருங்கடி[2]

எனப் பெண்கள் கும்மியடித்து இவ்வெற்றியைப் பாராட்டினர்.

இரண்டாவது ஓடாநிலைப்போர். தடிவீச்சில் சிறந்தவர் களை முன்நிறுத்திப் போரிடச் செய்தான், சின்னமலை.

கச்சைகட் டுந்தடிக் காரர்க ளே,வெள்ளைக்
காரர் களை,யெங்குக் கண்டாலும்
காலை யொடித்துத் துரத்துங்கள் என்றுமே
கட்டளை யிட்டானாம் சின்னமலை.[3]

சின்னமலையின் கட்டளைப்படி தடிக்காரர் எதிரியைச் சின்னாபின்னப் படுத்தினர். ஆங்கிலப் படைத்தலைவன் கர்னல் மேக்ஸின் தலையைச் சின்னமலை தன் வாளால் கொய்தான்.

மூன்றாவது அறச்சலூர்ப் போர். ஆங்கிலேயரின் பெரும் குதிரைப் படை அறச்சலூரை நெருங்கியபோது சின்னமலை தனித்திருந்தான். தன் படை வந்து சேருமுன் சின்னமலை

---

1. போர்னிக் - ஐதரும் திப்புவும், பக். 163

2. நாட்டுப்புற வழக்கிலிருந்து வரும் 'சின்னமலைக் கும்மி'ப் பாடல்

3. மேலது

தனியொருவனாகக் குதிரையேறி விரைந்து சென்று ஆங்கிலப் படைத்தளபதி ஹாரிஸின் குதிரையின் வயிற்றின்மீது சுட்டான். வலி தாங்க முடியாது அக்குதிரை மிரண்டு பின்புறமாக ஓடியது; மற்றக் குதிரைகளும் அதனைப் பின்தொடர்ந்து தலைதெறிக்க ஓடின.

தீரன் சின்னமலையின் மனஉறுதியும் அஞ்சாத் தன்மையுமே அவனுக்கு இப்போரில் வெற்றியைத் தந்தது. நெருக்கடியான கட்டத்தில் தீர்க்கமான முடிவெடுத்தான். குதிரைப் படையில் முன்னால் வரும் குதிரையை மார்பில் சுட்டால் வலி பொறுக்க முடியாமல் அது திரும்பி ஓடும். அக்குதிரை சாகாமல் அதற்கு வலி உண்டாகும்படிச் சுடவேண்டும். இவ்வாறு சுடுவதில் சின்னமலை கைதேர்ந்தவன். படைத்தலைவனின் குதிரை ஓடினால் அதைப் பின்பற்றி மற்ற குதிரைகளும் ஓடும். குண்டடிப்பட்ட குதிரை எளிதில் நிற்காது. இவ்வுத்தியைப் பயன்படுத்தியே சின்னமலை தனி ஒருவனாக ஆயிரக்கணக்கில் வந்த படையை முறியடித்தான்.

சின்ன மலை,வெடி குண்டுக்குத் தப்பியே
சீமைப் படையின் குதிரை யெல்லாம்
ஒன்னின்பின் ஒன்னாகக் குள்ள நரிபோல
ஓடும்,ஒய் யாரத்தைப் பாருங்கடி'

என அவ்வெற்றி பலபடப் பாராட்டப்பட்டது. வீரம் செறிந்த இந்நிகழ்ச்சிகள் நாடகத்தில் ஒரே காட்சியில் முடிந்துவிடுகின்றன.

இவ்வெற்றிகளை நாடகத்தில் இன்னும் விரிவாகக் கூறியிருக்கலாம்; வடிவேலனார் வரலாற்றுச் செய்தியைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விடுபடாமலும் கூறி, பண்பாடு - பழக்க வழக்கங்கள் பற்றி விரிவாகக் கூறுவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறார் என்பது புலனாகிறது. இக்காப்பியத்தைப் பண்பாட்டு நிகழ்வுகளே பெரிதும் ஆட்சிசெய்கின்றன. வரலாற்று நிகழ்வுடைய ஒரு நாடகக் காப்பியத்தின் ஓட்டத்தில் விறுவிறுப்புக் குறையாமல் பண்பாட்டுக் கூறுகளை ஆற்றொழுக்கான நடையழகில் எழுதியிருப்பது, பாவலரின் கவிதை ஆற்றலையும் நுண்மாண் நுழைபுலத்தையும் காட்டுகிறது.

புலவர்களுக்குப் பாவலர் வடிவேலன் பெருமதிப்புச் சேர்க்கிறார். புலவர் அவைகூடி பழைய வரலாற்றை உரைக்கிறது. வெள்ளையரை எதிர்க்க மக்களை ஒன்று திரட்டும் பணியைச்

1. நாட்டுப்புற வழக்கிலிருந்துவரும் 'சின்னமலைக் கும்மி'ப் பாடல்

சின்னமலை புலவர்களிடம் ஒப்படைப்பதாகக் கூறிப் புலவர்கட்கு வடிவேலனார் பெருமை சேர்க்கிறார்.

சின்னமலை (புலவர்களிடம்) :

நமது நோக்கில் நன்முடி வெடுத்துளோம்
இச்செய்தி எங்கும் எடுத்துச் சென்றே
மறவர் படையை மண்டிடச் செய்க!

என்கிறான். புலவர்களும்,

எங்கள் கடமையை ஏற்றமாய்ச் செய்வோம்!

என உறுதியளிக்கின்றனர்.

மனோன்மணீயத்தில் சுந்தரம்பிள்ளை சில கதை மாந்தர்களின் வாயிலாய்த் தத்துவம், உயிரியல், இயற்கை பற்றிய செய்திகளை எடுத்துரைப்பார். வடிவேலனாரும் இவ்வுத்தியைக் கையாள்கிறார்; படைக்களப் பயிற்சி பற்றி எழுதும்போது சின்னமலையின் அரசியற் குரு சிவந்தாரைய்யன் வாயிலாகக் குதிரைகளின் நிறங்கள், சுழிகள், குணங்கள் பற்றி மிக விரிவாக எடுத்துரைக்கிறார். வெண்சங்கு நிறம் கொண்ட குதிரை பாடலம் எனப்படும். சிவலை செம்பட்டுப் போல இருக்கும்; பொன்னி என்பது தீ போல் மின்னும்; காரி என்பது கருவண்டு, கண்மை போன்ற நிறமுடையது. இந்நான்கு வண்ணங்களும் கலந்துள்ள குதிரை மறை எனப்படும் என நன்கு விளக்குகிறார். நாடகத்.தின் இப்பகுதி புலவர் குழந்தையின் காமஞ்சரி நாடகத்தை நினைவூட்டுவதாய் உள்ளது.

வெள்ளி,பால் முத்து, வெண்ணிலா, வெண்சங்(கு),
எள்ளல்இல் வெண்பனி, எனும்நிறம் இவற்றுள்
ஒருநிறம் உடைய பரி,பா டலம்எனப்
படும்;மா துளமலர், ஒருசெம் பஞ்சின்
ஒருநிறம் உடைய பரி,அது சிவலை;
கருமுகில், குயில்,மை, கருவண்(டு) இவற்றுள்
ஓர்நிறம் அடையச் சேர்,பரி காரி;
எரிநெருப்(பு) அன்ன பரி,அது பொன்னி;
இந்நிறம் நான்கும் துன்னுதல் மறை,ஆம்.
எந்நிறம் உடைய தெனினும், அந்நிறம்
தன்இடை வெண்மை துன்னிய பரியே
நன்னலம் உடைத்(து)எனப் பன்னிடும் பரிநூல்[1]

என்பன புலவர் குழந்தையின் பாடல் அடிகள்.

---

1. புலவர் குழந்தை, காமஞ்சரி (செய்யுள் நாடகம்), காட்சி 4 : 85-96

வரலாற்றின் அடிப்படைச் சம்பவங்களில் மாற்றம் எதுவுமின்றிச் சிற்சில இடங்களில் நிகழ்ச்சிகளைத் தத்தம் எண்ணத்திற்கேற்ப மாற்றி ஆசிரியர்கள் பலர் எழுதி இருப்பதை, சின்னமலை வரலாற்றில் காண முடிகிறது.

சின்னமலையின் தாய்மாமன் ஆரியப்பட்டிப் பட்டக்காரர். அவர் சின்னமலையைச் சென்னிமலை விழாவில் தேர்க்காலில் சேர்த்துக் கட்டி மானக்கேடு செய்தார். சின்னமலையின் தங்கை ஆரியப்பட்டி மாமனைப் பழி வாங்க வேண்டுமென்று சின்னமலையிடம் குமுறினாள். சின்னமலை தங்கையை அமைதிப்படுத்த மாமன் தலையை வெட்டிக் களங்கத்தைப் போக்குவேன் என்று கூறினான். ஆனால் மறுநாளே அவன் திப்புவிடம் சென்றுவிட்டான். சீரங்கப்பட்டிணத்திலிருந்து திரும்பியதும் சின்னமலை தன் மாமன், அவன் மகன் ஆகிய இருவர் தலைகளையும் வெட்டிப் புளிய மரத்தில் தொங்க விட்டான் எனப் புலவர் குழந்தையும் சக்திக்கனலும் இன்னும் சிலரும் எழுதுகின்றனர்.

தூக்குப் புளிய மரத்தினிலே – அட
தொங்குது பார்,அந்த மாமன்தலை.....
துண்டென வீழ்ந்த தலைகள் இரண்டையும்
தொங்கவிட் டேஎங்கள் சின்னமலை
தங்கையைக் கண்டிட எண்ணமிட்டான்–அங்கு
தாவிப் பறந்தது வெண்குதிரை[1]

எனச் சக்திக்கனல், தீரன் சின்னமலை காவியத்தில் பாடியுள்ளார்.

உறவுக்குள் சண்டையிட்டு ஒரே இனம் அழியக் கூடாது என்ற எண்ணத்தால் சின்னமலை ஆரியப்பட்டி மாமனைப் பழி வாங்கவில்லை என்கிறார் கே.ஏ.மதியழகன்.

முனைவர் செ.இராசு போன்ற சிலர் இச் செய்தியையே குறிப்பிடவில்லை.

சென்னிமலையில் தேர்க்காலில் கட்டப்பட்டிருந்த தன் அண்ணனை மீட்க மயிலாத்தாள் வாளெடுத்துப் போரிட்டாள். எதிரிகளில் ஒருவன் கை வெட்டுண்டது. சின்னமலை மைசூர் சென்றதும் ஆரியப்பட்டி மாமன், கைவெட்டுப்பட்டவனைத் தூண்டிவிட அவன் தன் ஒற்றைக் கையால் வாள் கொண்டு குத்தி மயிலாத்தாளைக் கொன்றான். உடல் நலங்குன்றியிருந்த அவள் தந்தையும் இதனைக் கேட்டதும் உயிர்துறந்தார். சீரங்கப் பட்டிணத்திலிருந்து திரும்புகையில் இச்செய்தியை யறிந்த

1. சக்திக்கனல், தீரன் சின்னமலை, பக். 56

சின்னமலை நேரே ஆரியப்பட்டி சென்று மாமன் தலையைக் கொய்து அதனை ஒரு புளிய மரத்தில் கட்டித் தொங்கவிட்டான் என எழுதுகிறார், பாஸ்கரதாசன்.

சரியான வரலாற்றாவணம் இல்லா நிலையில் இத்தகைய வேறுபாடுகள் தோன்றவே செய்யும்.

இந்நிகழ்ச்சியில் வடிவேலனார் சிறப்பானதொரு மாற்றம் செய்துள்ளார். சின்னமலையின் ஆணைப்படி அவன் படைத் தளபதி கறுப்ப சேர்வை ஆரியப்பட்டி மாமனையும் அவர் மகனையும் சின்னமலை கைது செய்துவருமாறு சொன்னதாக அவர்களிடம் சென்று கூறுகிறான்.

அன்றுயாம் செய்த தவறு திருந்தினோம்

என்கிறான், ஆரியப்பட்டியாரின் மகன் காங்கேயன். அப்படி யானால் சின்னமலையிடம் வந்து மன்னிப்புக் கேளுங்கள் என்கிறான் கறுப்ப சேர்வை.

நானும் எந்தையும் வருகிறோம்; நகரலாம்;

என ஆரியப்பட்டியார் மகன் கூறுகிறான். தந்தையும் மகனும் புறப்பட்டுப் போகின்றனர். அவர்களைக் கண்ட சின்னமலை நமக்குள் உள்ள சிறுபூசலால் நாம் அழிந்து போவதோடன்றி வெள்ளையர் நம்மை அடிமைப்படுத்துகின்றனர். ஆகையால் மாறுபடா மனத்தோடு வாழ்ந்து வெள்ளையரை வீழ்த்துவோம்.

காங்கேய னே நீ தந்தைக் குரைத்தே
இணைந்து பணியாற்ற இசைந்திடு வாயா?

எனக் கேட்கிறான். காங்கேயன்,

மைத்துன அணியரே! வகைதொகை கெட்டோம்;
தந்தைக்குப் பலநாள் உரைத்துத் திருத்தினேன்;
அறுபதில் வளையுமோ அரச மரந்தான்?

என்கிறான். சின்னமலை சிரித்தவண்ணம்,

மாறு கொண்டிருப்பின் விளைவது வேறாம்;
ஊறில் லாத உறவு தழைக்கவே
விருந்துண்டு இளைப்பாறி வீட்டகம் செல்க!

என்கிறான். அண்ணன் தம்பி, மாமன் மைத்துனர் அடித்துக் கொண்டு பிறர்க்கு அடிமையாகக் கூடாது என்று வடிவேலனார் சின்னத்'தம்பி'யைப் பேசச் செய்கிறார். ஆங்கிலேயன் தலையை வெட்டிய கை மாமன் தலையையும் வெட்டியது என்ற ஒரு பழியிலிருந்தும் நீக்குகிறார். 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்பதைச் சின்னமலை வாயிலாகத் தெளியவைத்து விடுகிறார்.

இந்நாடகக் காப்பியத்தில் கொங்கு இருபத்து நான்கு நாடுகள் எவை என்பதும், புன்றுறை போன்று அதில் சிறந்த வேளிர் மன்னர்களையும், காரைக்கோனின் வரலாற்றையும், காமிண்டன் விளக்கத்தையும், சின்னமலை முன்னோர் வரலாற்றினையும் புலவர்களின் உரையாடல் வாயிலாகக் கூறும் பாங்கும், தெளிந்த நீர் நிலையில் முகம் தெரியுமாப்போல் கண்ணுக்குரிய அழகிய வரலாற்றுக் காட்சிகளாகக் காட்டப் பட்டுள்ளன.

சென்னிமலை முத்துவேலப்ப கவுண்டர் கற்பனைப் படைப்பு. அவர் மகள் பெயர் வள்ளிநாயகி என மதியழகனும், தெய்வநாயகி எனச் சக்திக்கனலும் எழுதுகின்றனர். பெரியதம்பி அவளைக் காதலிப்பதாகவும் கதை சொல்லுகிறது. வடிவேலனாரோ முத்துவேலப்பரின் மகள் தெய்வநாயகி, கிலேதாரைக் காதலிப்பதாய் எழுதுகிறார். கற்பனைப் படைப்புகளில் வேறுபாடுகள் நிகழ்வது இயல்பே!

காட்டிக்கொடுத்த சமையற்கரனின் பெயரைப் பலர் கூறவில்லை; சமையற்காரன் என்றே குறிப்பிட்டுள்ளனர். அவன் பெயர் சாமியப்பன் என மதியழகனும், ஆண்டியப்பன் எனப் புலவர் தே.ப. சின்னசாமியும், நல்லப்பன் எனப் புலவர் இராசுவும் கூறுகின்றனர். வடிவேலனாரும் நல்லப்பன் என்றே கூறுகிறார். பெயர் கற்பனை என்று தெரிகிறது. அந்தக் கொடியவன் பெயரை நல்லப்பன் என்று குறித்திருக்க வேண்டாம்; பொல்லப்பன் என்று கூறி இருக்கலாம்.

இவர் கதைவிளக்கத்திற்காகப் பாடும் பாங்கில் உவமை களையோ, உருவகங்களையோ வலிந்து கூறிச் செல்வதில்லை. வினை, பயன், மெய், உரு என்ற நால்வகையாலும் அமைத்திருக்கும் உவமைகள் இயல்போட்டத்தை அயலதாக ஆக்கவில்லை; சான்றாக,

> அம்மை, பனிக்குளிர்ச் சோலைபோல்.... பள்ள மடையாய்....
> ஆக்களுக் கெல்லாம் அன்னைபோல்......

ஈபவள் என்றும்,

> ஆனூர் மரபு, மொக்கு மலர்ந்து விரிந்து
> விளங்கல்போல்......

என்றும், முத்துவேலப்பர் கூற்றாக,

> மதியின் மறுமிகுந்தாற்போல், எழுதாக் கிளவிபோல்,
> வாயிலா ஊமையின் வார்த்தைபோல் .....

என்றும்,

கைப்பூண் அணிகள் கண்ணிற் படுவபோல்

என்று கூறுவதிலும்,

சின்னமலையின் கூற்றாக வரும்

மழையால் நனைந்த பறவைபோல்

என்பதும்,

உமிழ் எச்சில் வெள்ளையர்

என்பதும்,

நிலவொளி முகத்தில் முகில்தாடிக் கூட்டம்

என்ற தொடரில் ஓர் உள்ளுறையை அமைத்துச் செல்லும் பாங்கும் சோலைக் கனிகள் தரும் சுவைபோல் உள்ளது.

நடிக்கும் நாடகமாயின் உரையாடல் நீண்டதாயிராது; அருகியதாய் ஒன்றிரண்டிடங்களில் நீண்டிருக்கக் கூடும். படிக்கும் நாடகங்களில் செய்தி விளக்கமே முக்கியமாதலின் நீண்ட உரையாடல்கள் இருந்தாலும் அவை சோர்வூட்டுவனவாகவோ சலிப்படையச் செய்வனவாகவோ இருப்பதில்லை. இதுபற்றி இன்னும் சில செய்திகள் கிடைக்காவா எனும் ஆவலைத் தூண்டுவனவாகவே அவை அமையும். இந்நாடகத்தில் நீண்ட உரையாடல்கள் இருப்பினும் நடிப்புக்கென வருமிடங்களில் நறுக்குத் தெரித்தாற்போன்று உரையாடல் பளிச்சிடுகிறது.

எடுத்துக்காட்டு

திப்பு எந்தையும் பட்டார்; யான்அர சேற்றேன்;
தந்தையின் அடிவழி மந்தையை எதிர்க்கிறேன்.

சின்ன கொங்கர் படைத்துணை என்றுமே யிருக்கும்;
சுல்தான் நாங்கள் செல்வோம் பாசறை!

கதைமாந்தருள் ஒருவர் தமக்குள் தனித்துப் பேசிக் கொள்வதான தனிமொழி (Soliloquy) அமைக்கப்படுவதுண்டு. மனோன்மணீயத்தில் நடராசன், குடிலன் போன்றோரின் தனிமொழிகள் சிறப்புப் பெற்றனவாம். இந்நாடகத்தில் தனிமொழி எதுவும் இடம் பெறவில்லை. ஒன்றிரண்டு தனிமொழிகளை ஆசிரியர் அமைத்திருக்கலாம்.

நாடகத்தின் முடிவுக் காட்சி, தொடர்ந்து அந் நாடகத்தைப் பற்றிய சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைய வேண்டும். சின்னமலையும் தம்பியரும் தூக்கிலிடப்படுகின்றனர்.

சின்னமலை முத்தமிட் டேதமிழ் மண்ணினை வணங்குவோம்!

(தூக்கிலிடப்படுவோர் மண்ணை முத்தமிடுகின்றனர்)

தூங்குவோம்; விதைகளாய் ஆவோம் தோழர்காள்!
(தூக்குக் கயிற்றை முத்தமிட்டுத் தூக்கிட்டுக் கொள்கின்றனர்)

இத்துடன் நாடகத்தை முடித்திருத்தலே போதுமானது. ஆயினும் அவலச் சுவையை மேலும் கூட்டும் வண்ணம் சின்னமலையை நினைந்து அவன் தங்கை அழுவதாகவும், காதலன் கிலேதாரை நினைத்து தெய்வநாயகி அழுவதாகவும் - அழுகைக் குரல்களோடு நாடகத்தை முடிப்பது, துன்பியல் முடிவு நாடகத்தின் மணிமுடி எனலாம்.

அண்ணன்மார் ஆளுகின்ற
ஆறுகளில் மகிழம்பூ
தண்ணீர் எடுத்துவரும்;
தலைமுழுகி ஆடிடுவோம்;
தண்ணீரு மில்லை
தலைமுழுக்கும் என்றுமிலை;
கொன்றுபட்ட செய்தியினால்
குலைநடுக்கம் ஆகுதம்மா!
கன்றிழந்த தாய்ப்பசுப்போல்
கதறி யழுகின்றேன்

- இது சின்னமலையின் தங்கை மயிலாத்தாள் குரல்.

சென்னி மலைத்தென்றல்
தெற்கிருந்து வீசிவரும்;
கன்னி இளநெஞ்சில்
காற்றாய் அவர்வருவார்;
என்னென்ன மோசெய்வார்
என்றிருந்தேன்; இன்றைக்கோ
எண்ணம் எதுவுமில்லை,
இசைப்பாட் டெடுக்கவில்லை;
கன்னத்தில் ஆறு
கரைபுரண்டு போகுதம்மா

- இது தெய்வநாயகியின் குரல்.

விடுதலைப் போரின் வித்துகளாய் மண்ணில் புதைந்த வீரர்களின் அன்புக்கு ஏங்கும் நங்கையரின் அழுகையொலி காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்க நாடகம் முடிகிறது.

கவிதை நாடகங்களுக்குரிய இலக்கணத்தைப் பின்பற்றி வடிவேலனார் இந்நாடகத்தை மிக அருமையாகப் படைத்திருக்கிறார். கொங்கு மண்ணின் வீரமும் பண்பாடும் நாடகத்தில் கைகோத்து நடைபோடுகின்றன.

பாவலர் திரு. இரா. வடிவேலனார் படைத்திருக்கும் கவிதைப் படைப்புகளுள் இதுவே தலையாயது என்பேன்! கற்பனை நயம், நாட்டியல், மரபுப் பாங்கு, நடப்பியல், கதைமாந்தர்கள், உரைகள், வரலாற்றுக் குறிப்புகள், காட்சி அமைப்புகள், உவமைகள், உருவகங்கள், இயல்பு நவிற்சி எல்லாம் சேர்ந்து, கவிஞர் வடிவேலனாரின் 'தமிழக விடுதலை மறவன் தீரன் சின்னமலை' என்னும் மிகச் சிறந்த இந்நாடகக் காப்பியம் என்றும் செங்கதிர்போல் ஒளிவிடும்! உயர்ந்து நிலைபெறும்!

விளையாட்டாக வந்துவிடவில்லை, விடுதலை. எத்தனை எத்தனை உயிர்களை இழந்தும், கொடுமைகள் பல பட்டும், குருதி சிந்தியும் பெற்றதிந்த விடுதலை என்பதை இன்றைய இளைய தலைமுறையினர் உணர வேண்டும் என்பதோடு அவர்கள் உள்ளத்தே நாட்டுப் பற்றுணர்வு மேலோங்க இந்நூல் பல்கலைக் கழக மாணவர்கட்குப் பாடநூலாக்கப்படவேண்டும் எனவும் விழைகிறேன்.

கொங்குப் பாமணி வடிவேலனாரின் முயற்சியைப் பாராட்டு கிறேன்; எழுத்தைப் போற்றுகிறேன். தமிழ் கூறும் நல்லுலகில் அவர் புகழ் ஓங்குவதாகுக.

நூல் ஆக்கம்	பாவலர் ஈரோடு வடிவேலன்
வகைமை	நாடகக் காப்பியம்
வெளியீடு	கொங்கு நட்புறவுப் பதிப்பகம் ஈரோடு. (1999)

12

தீரன் சின்னமலை

தீரன் சின்னமலை கொங்கு மண்ணின் வீர காவியம். இக்காவியத்தைப் பக்கத்திற்குப் பக்கம், ஏன், எழுத்துக்கு எழுத்து எரிமலைக் குழம்பைச் சேர்த்துக் கனல் பறக்க, கவிஞர் நடேசன் எழுதியுள்ளார்.

சின்னமலை, "இந்த மண் நம் சொந்த மண்; இதனை ஆள வேறு எவர்க்கும் உரிமை இல்லை; அண்டிப் பிழைக்க வந்த ஆங்கிலேயனுக்கு நாம் அடிபணிந்து போவதா?" என உரிமைக் குரல் எழுப்பினான்;

என்னுடை நாடு என்னுடை வீடு
யாரிதில் என்னை மிரட்டுவது?..
என்னுடைக் காடு என்னுடைப் பாடு
என்றன் வெள்ளாமையை யார்அறுக்க?...
என்னுடைப் பெட்டி என்னுடைத் துட்டு
யாரிடம் சாவி இருத்தல்சரி?...[1]

என்ற வினாக்களை மக்கள் மனங்களில் கனியச்செய்து ஆங்கிலேயரை எதிர்க்கப் பெரும்படை திரட்டினான். மூன்று போர்களில் வெற்றி கண்டு ஆங்கிலேயரை ஓட ஓட விரட்டினான்! வீரத்தால் அவனை வெற்றி கொள்ள முடியாமல் வெள்ளைப் பரங்கியர், சூழ்ச்சியால்-வஞ்சகத்தால் அவனைச் சிறை செய்து தூக்கிலிட்டனர்.

31-7-1805; இந்த நாள் இரவு வராமலேயே இருந்திருக்கக் கூடாதா என நம் நெஞ்சம் ஏங்குகிறது. ஆயின் என் செய்ய? அந்த இரவு வந்தது; மாபெரும் விடுதலை வீரனின் உயிர் குடித்து முடிந்தது.

✡ ✡ ✡

சிலப்பதிகாரத்தில் இடையிடையே சிறந்த உரைநடை இடம் பெற்றிருப்பதால் அதை, 'உரை இடையிட்ட பாட்டு' என்பர். 'தீரன்

---

1. வெ. இராமலிங்கம், நாமக்கல் கவிஞர் பாடல்கள், லிப்கோ வெளியீடு, பக். 147

சின்னமலை' எனும் இந்நூலில் இடையிடையே அருமை வாய்ந்த கவிதை வரிகள் இடம் பெற்றிருப்பதால் இதனைப் 'பாட்டு இடையிட்ட உரைநடைக் காவியம்' எனக் கூறலாம். நம் நெஞ்சைத் தொடும் நிகழ்ச்சிகளை எழுதுமிடங்களிலெல்லாம் உரைநடை, தான் விலகிக் கொண்டு, கவிதைக்கு இடம் தந்திருக்கிறது. 'கொங்கு நாட்டுக்கு ஒரு கொடிய நாள்' எனச் சின்னமலை தூக்கி லிடப்பட்டதை நடேசனாரின் உரைநடைக் கவிதையில் படிக்கும் பொழுது கண்கள் வேதனை நீரை மடைதிறந்து விடுகின்றன.

31–7–1905; ஆடி 18
கொங்குநாட்டுக்கு ஒரு கொடியநாள்;
துக்க நாள்! துயரநாள்!!....துடிக்குநாள்!!!
சங்ககிரியெங்கும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது!
சுனைகட்குச் செல்லவோ நீராடவோ தடை!
மலைக்கோட்டைக்கும் போக வரத்தடை!
எக்கோயிலுக்கும் வழிபாட்டுக்குச் செல்லத்தடை!
கோட்டைக் கதவுகள் அனைத்தும் மூடப்பட்டன.
பத்து வாயில்களும் மூடப்பட்டன.
சங்ககிரி மலை உச்சி!
ஆலமரத்துக்கு வடக்கில்
மூன்று தூக்குமரங்கள்!!
நடுநிசி!
கொலைகாரர்களின் பசி...
பந்தத்தைப் பறிக்கும் தீப்பந்தங்கள்...
சுற்றிலும் துப்பாக்கி முனைகள்...
நடுவில் சின்னமலை, பெரியதம்பி, கிலேதார்
தாங்களாகவே தூக்குக் கயிற்றை மூவரும் மாட்டிக் கொண்டனர்;
ஒன், டு, திரீ – ஒரு கர்ண கடூரமான குரல் ஒலித்தது.

முடிந்தன முடிந்தன மூன்று உயிர்கள்
மடிந்தன மடிந்தன மூன்று உடல்கள்
நடந்தது நடந்தது தீரனின் வீரமரணம்
கடந்தது கடந்தது காரிருள் இரவு
விடிந்தது விடிந்தது கதிரொளி வந்தது
கொங்குமண் மாதா தலைவிரி கோலமானாள்

✡ ✡ ✡

இனி,
காற்று வீசுமா...
நெருப்பு எரியுமா....
வானம் இடிக்குமா.....
கடல் கொந்தளிக்குமா.....

மீண்டும்,

1942ஆம் ஆண்டு ஆகஸ்ட் புரட்சி

காற்று வீசியது
நெருப்பு எரிந்தது
வானம் இடித்தது
கடல் கொந்தளித்தது

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் தீரன் சின்னமலையின் விடுதலைக் கனவு மலர்ந்தது.'[1]

✡ ✡ ✡

வேறு எவரும் பின்பற்ற இயலாத ஒரு தனித்த நடையழகு நடேசனார்க்கு வாய்த்துள்ளது.

"ஒருவன் பெயர் ஒலி முழக்கமானது; ஏன் இடி முழக்கமானது; படை முழக்கமானது; தொடர் முழக்கமானது" - என ஒரே சொல்லில் முடியுமாறு பல தொடர்களை இணைக்கும் பாங்கு;

"சிந்தனைகள் உதிர்ந்தன; உருண்டன; புரண்டன; திரண்டன" - என ஒரு செயலின் தொடர்ச்சியாய் நிகழும் சொற்களை அடுக்கி எழுதும் அருமை;

"கொங்கு மண்ணில் வாழைமரக் காய்ப்பு; தென்னை மரத்தோப்பு; செந்நெல் தொடர் அறுப்பு; இஞ்சியும் மஞ்சளும் கரும்பும் குவிப்பு" - என ஒரே ஒலிப்பு முடிவுடைய சொற்களை இயைபுத் தொடையில் இணைத்தெழுதும் திறமை;

"அவன் வீரச் சுவையை ஆரமாக அணிந்தான்; தாரமாக மணந்தான்" - எதுகை மோனைகளை இயல்பாகத் தவழவிடும் தகைமை;

சின்னமலைக்கு அவன் தங்கை பாச மலரானாள்; வீசும் மணமானாள்; தங்கக் காசானாள் - எனத் தொடர்களை அடுக்கிச் செல்லும் அழகு - இவை நடேசனாரின் நடை வகைகளுள் சில.

✡ ✡ ✡

இந்நூலின் எந்தப் பகுதியை நாம் படித்தாலும் அவர் கூறும் நிகழ்ச்சி நடைபெறுமிடத்தில் நாம் இருப்பது போன்ற தன்மையை உண்டாக்கும் சிறப்பும் இவர் எழுத்துக்கு உண்டு.

"முற்றுகையை முறியடி! கோட்டையைக் காப்பாற்று! கொடியைத் தூக்கிப் பிடி! எதிரிகளின் தலைகள் உருளட்டும்! உடல் மண்ணுக்கு - உயிர் நாட்டுக்கு! தாக்கு; தாக்கு! தகர்த்தெறி!

1. இந்நூல், பக். 69-70

போரிடு போரிடு! - தீரன் சின்னமலை போர்க்களத்தில் இவ்வாறு முழக்கமிடுகிறார். நாம் போர்க்களத்தில் நிற்பது போலவும், இக் கட்டளைகள் நமக்கிடப்படுபவை போலவும் நடேசனார் நமக்குத் தோன்றச் செய்து விடுகிறார், தம் எழுத்தின் ஆற்றலால்.

கைதுசெய்யப்பட்ட சின்னமலையிடம் வெள்ளையர்கள், 'நீ கப்பம் கட்டினால் போதும்; மீண்டும் மன்னனாகவே இருக்கலாம், என்று சொன்னபோது, சின்னமலை வெள்ளையரிடம், "ஒரு அற்ப சுகத்துக்காக உரிமையை விலை கூற மாட்டேன். அடிமை வாழ்வு பேடிகளுக்குரியது. வரலாற்றுப் பிழையை நான் செய்ய மாட்டேன். செய்தால் கொங்கு நாட்டில் கருவிலே இருக்கும் சிசு கூட என் முகத்தில் காரி உமிழும்.

"உங்களிடம் அதிகம் பேச விரும்பவில்லை. என்னுடல் மண்ணுக்கு! என்னுயிர் நாட்டுக்கு! என்ன தீர்ப்புக் கூறுகிறீர்களோ கூறுங்கள்! என்ன தண்டனை கொடுக்க விரும்புகிறீர்களோ கொடுங்கள்! அதை அச்சமின்றி ஏற்கச் சித்தமாக உள்ளேன்.

"இறுதியாக இன்று நான் கூறுரைக்கிறேன். காலம் கனியும். இன்றில்லாவிட்டால் நாளை; நாளை இல்லாவிட்டால் மறுநாள்.. இந்த மண்ணின் மைந்தர்கள் வீறுகொண்டு எழுவார்கள். விடுதலைத் தீ பற்றியெறியும். அன்று உங்கள் அதிகாரம், ஆணவம், ஆர்ப்பாட்டமெல்லாம் தூள்தூளாகும். என்ன தீர்ப்பு வேண்டுமானாலும் கூறுங்கள்! நாங்கள் தயார்! தயார்!" எனச் சின்னமலை முழங்கினான்.

சின்னமலை பேச்சை நாம் கேட்டதில்லை. சின்னமலையின் பேச்சின் வேகம் இப்படித்தான் இருந்திருக்கும் என நடேசனாரின் எழுத்தைக் கொண்டு புரிந்து கொள்கிறோம்.

சின்னமலையின் குதிரையோ துள்ளிப் பாய்ந்தது; வட்டமிட்டது; சுழன்று சுழன்று பாய்ந்தது. நடேசனாரின் எழுத்தோ வீரத்தில் துள்ளுகிறது; கொங்கு மண்ணை வட்டமிட்டு வட்டமிட்டு வருகிறது; வரலாற்று நிகழ்ச்சிகளை வாள் வீச்சிலும் வேகமாகச் சுழன்று சுழன்று பதியவைக்கிறது.

✡ ✡ ✡

நடேசனார் தன்மான இயக்கத்தைச் சார்ந்தவர். தம்முடைய இயக்க அடையாளத்தை மிக அழகாக ஓரிடத்தில் குறிப்பாய்ச் சுட்டுகிறார். தன்மான இயக்கத்தினர் வீரத்துக்கு எடுத்துக் காட்டாய் இராவணனையும், இரணியனையும் சுட்டுவர்.

இராவணனைப் பாவேந்தர்,

அன்றந்த இலங்கையினை ஆண்ட மறத்தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்புகழை வைத்தோன்;
குன்றெடுக்கும் பெருந்தோளான்; கொடைகொடுக்கும் கையான்;
குள்ளநரிச் செயல்செய்யும் கூட்டத்தின் கூற்றம்[1]

எனப் பெருமைப்படுத்தி இராவணனைத் தமிழர் மூதாதை என்பார்.

இரணியனை டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி,

திராவிடர்க்குத் தேனாய் – நிலவாய் –
தீந்தமிழ்க்கோர் படைக்கலனாய்த் திகழ்ந்த பெரியோன்!
போர்வாள்கள் உறங்குகின்ற உறைபோல மீசையுண்டு!
புவிமெச்ச வாழவேண்டும் தமிழர்நிலம் என்பதிலும் தணியாத
ஆசையுண்டு[2]

என திராவிடர் இனத் தலைவனாக இவனைக் காட்டுவார். இவர்கள் இருவர் பெயர்களையும் தக்க இடத்தில் நுழைத்து, தான் ஒரு தன்மானச் சிங்கம் என்பதை நிலைநிறுத்திக் கொள்கிறார், நடேசனார்.

சின்னமலையின் தளபதி, கறுப்புச் சேர்க்கை
ஒரு இரணியக் கலவை

என இராவணன், இரணியன் ஆகிய இருவரின் சேர்க்கையும் கலவையுமே கறுப்பு சேர்வை, என அவனைத் திராவிடரினக் காவலனாகக் காட்டி விடுகிறார்.

✡ ✡ ✡

பெருங்கவிஞர்களின் எண்ணங்கள் நடேசனாரின் எழுத்தில் தனியொரு பொலிவு பெறுகிறது. இரு மன்னர் போர் புரிகின்றனர்; வெற்றி யாருக்கு என நிச்சயிக்க முடியாத கடும்போர். இதோ இவன் வென்றான் என்று சொல்லலாமென்றால் வெற்றி அடுத்த கணம் மற்றவனைச் சேர்வது போலாகிறது. இதனைப் பாவேந்தர் பாரதிதாசன்,

......சாவு,
கொற்றவர்கள் இருவர்பால் மாறி மாறி
நொடிக்குநொடி நெருங்கிற்று வெற்றி மங்கை
நூறுமுறை ஏமாந்தாள் ஆளைத் தேடி[3]

எனப் பாடுகிறார்.

1. பாரதிதாசன் கவிதைகள், முதல்தொகுதி,
   பாடல் வீரத் தமிழன்
2. கலைஞர் கவிதைகள், பாரதி பதிப்பக வெளியீடு,
   பாடல் இரணியன்
3. பாரதிதாசன், பாண்டியன் பரிசு, இயல், 5 : 3 -

இதே மாதிரியான காட்சியை நடேசன், "வெற்றி தோல்வி மாறி மாறி மேளம் வாசித்தது. வெற்றி இவனுக்குத்தான் என ஒரு பக்கம் முரசு முழங்க முற்பட்டால், அது மாறித் திடீரென அடுத்த பக்கம் முழங்க நேரிடுவதுபோல வெற்றியும் தோல்வியும் மாறி மாறி நிகழ்கின்றன" எனப் பாவேந்தர் பாடலடிக் கருத்தைப் பெய்து எழுதுகிறார்.

இராவண காவியம் எழுதிய புலவர் குழந்தை, இராவணன் சிறு மழலையாய் இருந்த போது ஆசிரியரிடம் பாடம் கேட்டதை அழகொழுக எழுதியுள்ளார். பாடம் படித்துத் திரும்பும் குழந்தை இராவணனை அவன் தாய் அமிழ்து (உணவு) உண்ண அழைக்கிறாள். "அம்மா! நான் இப்போது அமிழ்துண்டுதானே வருகிறேன். இன்னும் எதற்கு அமிழ்து! தமிழ் தமிழ் எனத் தொடர்ந்தும் விரைந்தும் சொல்லுங்கள்; அமிழ்து வந்துவிடுமே! அதைத்தானே இப்போது உண்டு வருகிறேன்" என்கிறான்.

அமிழ்து அமிழ்து தமிழ்தாம் அன்னாய்
  ஆம்அது தமிழ்தான் என்னும்
தமிழ்அமிழ் தாக உண்டு
  தமிழ்மகன் வளரும் மாதோ![1]

இவை புலவர் குழந்தையின் பாடலடிகள். சின்னமலை சிறுவயதில் பாடம் கற்றான். எவ்வாறு? இதோ! நடேசனார் சொல்கிறார் :

"தீர்த்தகிரி கருத்துகளைக் கண்டான்; சொற்களை உண்டான்; இலக்கியங்களை நெஞ்சில் பதியமிட்டான்; இலக்கணங் களை உற்று நோக்கிக் கற்று, பகுத்துணர்ந்து, உய்த்துணர்ந்தான்." ஆம்! தீர்த்தகிரியும் தமிழ் அமிழ்தாக உண்டுதான் வளர்கிறான்.

அன்று கறுப்பு சேர்வை தீரன் சின்னமலையைக் கண்ணின் இமைபோலக் கணநேரமும் விலகாது பாதுகாத்து வந்தான். இன்றோ நம் கறுப்பு வட்டம் (நடேசன் தி.மு.க. வட்டச் செயலாளராய் இருந்தவர். அவர் இன்றும் 'வட்டம்' என எல்லோராலும் செல்லமாக வழங்கப்படுபவர், கறுப்பு நிறத்தினர்) ஏட்டில் பக்கத்திற்குப் பக்கம் சின்னமலையின் புகழைப் பதியமிட் டிருக்கிறார்.

இந் நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் தீரன் சின்னமலை யாகவே மாறி, ஆணவத்தால் அடக்கியாள நினைப்பவர் எவரே யாயினும் அவரைப் பூண்டோடு ஒழிக்க நெஞ்சுறுதி பெறுவர் என்பது திண்ணம்.

---

1. புலவர் குழந்தை, இராவண காவியம், இலங்கைக் காண்டம், இராவணப்படலம், பாடல் 6

சின்னமலையின் வரலாற்றை நன்கு ஆராய்ந்து நிகழ்ச்சித் தொகுப்புகளை நிரல்படுத்தி எழுதியிருக்கிறார், திரு.என்.ஏ. நடேசன். சின்னமலையின் பிறந்த நாள், அவன் தூக்கிலிடப்பட்ட நாள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்ற தேதிகள் ஆண்டுகள் ஆகியவற்றை உறுதிப்படுத்தித் தந்திருப்பது இந்நூலின் தனிச் சிறப்பு ஆகும்.

கி.பி.17-4-1756	தீர்த்தகிரி என்னும் தீரன் சின்னமலை பிறந்தான்.
கி.பி. 1773	மைசூர் மன்னனுக்கென வசூலிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்ட பணத்தைச் சின்ன மலை இடைமறித்துப் பறித்தான்.
கி.பி. 1776	சின்னமலை, திப்புவுடன் சேர்ந்து மைசூரில் ஆங்கிலேயர்க்கு ஏராளமான சேதம் விளைவித்தான்.
கி.பி. 1778	சின்னமலை மைசூரிலிருந்து கொங்குநாடு திரும்பினான்.
கி.பி. 1793	ஓடாநிலையில் கோட்டை கொத்தளங்கள் கட்டப்பெற்றன.
கி.பி. 4-4-1801	சின்னமலை ஆங்கிலேயரை எதிர்த்துக் கொங்கு மண்ணில் செய்த முதல் போரில் கர்னல் மாக்ஸ்வெல் தலைமையில் வந்த ஆங்கிலப் படையை வென்றான்.
1802இல்	ஓடாநிலையில் நடைபெற்ற இரண்டாம் போரில் கர்னல் மேக்ஸின் தலையைச் சின்னமலை தன் வாளால் கொய்தான்.
1804 இல்	அறச்சலூரில் ஜெனரல் ஹாரிஸின் குதிரைப்படையை எறிகுண்டால் தாக்கித் திக்குமுக்காடச் செய்தான்.
1799-1805	ஆறு ஆண்டுகள் கோவைக் கோனாகத் தீரன் சின்னமலை நல்லாட்சி புரிந்தான்.
5-5-1804	சின்னமலையின் ஓடாநிலைக் கோட்டையைத் தாக்க ஆங்கிலேயரின் பீரங்கிப்படை கள்ளிக் கோட்டையிலிருந்து புறப்பட்டது.
28-7-1805	சங்ககிரிக் கோட்டையில் சின்னமலையை ஆங்கிலத் தளபதிகள் விசாரணை செய்தனர்.

"நீ கோவைக் கோனாகவே இருக்கலாம். ஆனால் ஒன்றுக்கு நீ கட்டுப்பட வேண்டும். உன் நாட்டில் எங்களுடைய சிறுபடை ஒன்று இருக்கும். அதன் செலவை நீ ஏற்க வேண்டும். அதனுடன் ஒரு சிறிய தொகையை எங்கட்குக் கப்பமாகச் செலுத்த வேண்டும்" என்றனர், வெள்ளைத் தளபதிகள். சின்னமலை இப்பேச்சை மறுத்து ஆங்கிலேயரை எள்ளி நகையாடினான். அதனால் அவனும் அவனுடைய இரு தம்பியரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

31-7-1805 (ஆடி 18) : சின்னமலையும் தம்பியர் இருவரும் சங்ககிரி மலைக்கோட்டையில் இருந்த ஆலமரத்தின் அருகே தூக்கிலிடப்பட்டனர்

எனும் இவ்விவரங்களைத் திரு. நடேசனின் நூல் நமக்குத் தருகிறது.

✡ ✡ ✡

வட்டத்தின் கை வரைந்துகொண்டே இருக்கட்டும்; புதிய புதிய வட்டங்கள் தோன்றிக்கொண்டே இருக்கட்டும். வட்டத்திற்கு முடிவில்லை. நம் வட்டத்தின் எழுத்துகளுக்கும் என்றும் முடிவில்லை.

அடுத்த நூலை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டே இருப்பேன்.

நூல் ஆக்கம்	கவிஞர் என்.ஏ. நடேசன்
வகைமை	வரலாறு
வெளியீடு	என்.ஏ. நடேசன், நெய்க்காரப்பட்டி, நாமக்கல் மாவட்டம். (2003)

13

சிந்தனைச் சோலை

உலகத் தலைசிறந்த மொழிகளுள் நம் தமிழ் மொழியும் ஒன்றாம். வற்றாத இலக்கண நூல்களும் வனப்பான இலக்கிய நூல்களும் தமிழ் மொழியில் நிரம்ப உள்ளன. புலவர்களும் அறிஞர்களும் காலந்தோறும் புதிய புதிய படைப்புகளைத் தமிழ் மொழிக்கு அளித்துப் பெருமை சேர்த்துள்ளனர்.

காலம்தோறும் தமிழ்

தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும், காப்பியங்களும், தேவார திருவாசக திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களும், சிற்றிலக்கியங்களும், சித்தர் பாடல்களும், தனிப் பாடல்களும், பட்டினத்தார் - அருணகிரிநாதர் - தாயுமானவர் - வள்ளலார் பாடல்களும், பாரதியார் பாரதிதாசன் கண்ணதாசன் பாடல்களும், தற்காலத்திய மரபுக் கவிதை, புதுக் கவிதைகளும் மற்றும் நாட்டுப்புறப் பாடல்களும், இவற்றோடு திரு.வி.க., மறைமலையடிகள், டாக்டர் மு.வ., அறிஞர் அண்ணா போன்ற சான்றோரது உரைநடைப் படைப்புகளும், எழுத்தாளர்களின் நாடகம் - சிறுகதை - புதினம் போன்ற படைப்புகளும், பற்பல அறிவியல் மற்றும் கலைப் படைப்புகளும் காலந்தோறும் தமிழை அணிசெய்து வந்துள்ளன.

நான் இவ்வளவு விரித்துச் சொல்லுவதற்குக் காரணம் ஒரு மொழியின் உயிரோட்டம் இப்படி இருக்க வேண்டும். என்பதை உணர்த்துவதற்காகத்தான். ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து பிறகு வழக்கொழிந்து விடுவது ஓர் உயிர்மொழிக்கு அழகன்று. மொழி, மனத்தோடு தொடர்புடையது. மனம் அறிவாலும் உணர்ச்சியாலும் ஆளப்படுவது. அறிவும் உணர்ச்சியும் காலந்தோறும் மாறுபடும் இயல்புடையது. எனவே மனித சமுதாயத்தின் எண்ணங்களும் செயல்களும் காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றன.

காலமும் கருத்தும்

இவ்வேறுபாடு வாழ்க்கையிலும் அமைகிறது; அவ் வாழ்க்கையை மொழியும் மொழியின் படைப்புகளும் எடுத்துக் காட்டுகின்றன. பழங்காலத்துத் தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர்; காதலையும் வீரத்தையும் போற்றி மதித்தனர். இதைச் சங்க இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. குடும்பத் தலைவனும் தலைவியும் இல்லற வாழ்க்கையைப் போற்றி ஒழுகினர். ஆயினும் தலைவன் தலைவியைப் பிரிந்து காதற் பரத்தை, காமக்கிழத்தியரிடம் செல்லும் பழக்கமும் இருந்தது. இதை அக்காலத்துச் சமுதாயம் தவறாகக் கருதவில்லை. எனவே இவ்வொழுகலாறு சங்க இலக்கியத்தில் இடம் பெற்றது.

மக்களின் அறிவும் உணர்வும் மாறுபட்டபோது இவ்வொழுக்கம் தவறாய்த் தெரியவந்தது. அப்போது இவ்வொழுக்கத்தைக் கண்டிக்கும் உணர்வைத் திருக்குறள் வெளிப்படுத்தியது. பெண்களுக்கு மட்டுமே கற்புநெறி உரியது என்ற பழங்காலக் கருத்து நாளடைவில் மாறத் தொடங்கியது. ஆண்களுக்கும் கற்பு வேண்டும் என்ற கருத்து சமுதாயத்தில் நிலவியபோது பாரதியார் பாட்டு அதை வெளிப்படுத்திக் காட்டியது. மக்கள் மன்னனை உயிராகக் கருதிய காலத்தில் 'மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்' என்று கூறியது சங்கப் பாட்டு; மக்களாட்சி உணர்வு மேலோங்கி மக்கள் தங்களின் மகத்தான ஆற்றலை உணரத் தொடங்கிய காலத்தில் 'உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்' என்று மக்களை உயிராகவும் மன்னனை உடம்பாகவும் வைத்துக் கூறியது கம்பன் பாட்டு; பக்தி உணர்வு மேலோங்கியிருந்ததை உணர்த்துகிறது ஏழாம் நூற்றாண்டு ஆழ்வார்கள் மற்றும் சைவக் குரவர்கள் பாட்டு; சமுதாய சீர்திருத்த உணர்வு மேலோங்கியிருப்பதை உணர்த்துகிறது இருபதாம் நூற்றாண்டுப் பாரதி, பாரதிதாசன் பாட்டு.

காலமும் நடையும்

கால நிலைமைகளுக்கேற்றவாறு கலையாக்கச் சிந்தனை யை வெளிப்படுத்தின பழங்காலப் படைப்புகள்; அறிவியற் சிந்தனையைத் தூண்டுகின்றன இக்காலப் படைப்புகள். படைப்பின் கருத்துகள் மட்டுமன்று; மொழியின் வடிவங்களும் கூடக் காலத்திற்கேற்றவாறு மாற்றமடைகின்றன. பண்டைத் தமிழில் இலக்கணங்கள் - இலக்கியங்கள் மட்டுமன்றிக் கடிதம், சோதிடம், மருத்துவம், அறிவியல் கருத்துகளும் கூட

செய்யுளாகவே பாட்டாகவே இருந்தன. உரைநடைப் படைப்புகளே இல்லாத நிலை இருந்தது. பிற்காலத்தில் கவிதைகளே இல்லாத நிலையோ என்று எண்ணும் அளவுக்கு எல்லாப் படைப்புகளையும் உரைநடையே பிடித்துக் கொண்டது.

கவிதையிலும் சங்கச் செய்யுள் நடை, பல்வேறு காப்பியநடை, சிற்றிலக்கிய நடை, பாரதியார், பாவேந்தர் நடை, வசன கவிதை நடை, புதுக் கவிதை நடை என்றெல்லாம் பற்பல நடைகள்; உரைநடையிலும் திரு.வி.க. நடை, மறைமலையடிகள் நடை, மு.வ. நடை, அறிஞர் அண்ணா நடை முதலியனவாகப் பல்வேறு நடைகள். என்ன வியப்பு! என்ன பெருமை! நம் அருந்தமிழ்மொழி, காலத்திற்கு ஏற்றவாறு கருத்துகளையும், வடிவங்களையும் உத்திகளையும் தாங்கிப் புதுமைப் படைப்புகளோடு அல்லவா பொலிவுடன் திகழ்கிறது. இதுதான் ஓர் உயர்மொழியின் உயிரோட்டம் என்பது. இதனால் தான் நம் தமிழ்மொழி என்றென்றும் சிறப்போடு விளங்கிவருகிறது. இதை மேலும்மேலும் வளப்படுத்த வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும். இதற்கு, "திக்கெட்டும் செல்வீர்; கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்" என்ற பாரதியாரின் அறிவுரையைச் செயற்படுத்த வேண்டும். பாவேந்தர் கூறியவாறு,

செந்தமிழில் புதுப்புது நூல் விளைத்தற்குச் செல்வத்தைச் செலவு செய்ய வேண்டும்.

"கலையானாலும், அறிவியலானாலும் துறைதோறும் தமிழ்
நூல்கள் புதிதுபுதிதாய்த் தோன்றிக் கொண்டேயிருக்கவேண்டும்."

எழுத்தாளர் தமிழன்பன்

இந்த வகையில் தொண்டாற்றிடும் நல்லோர்களுள் அருமை நண்பர் ஆர்.சி. தமிழன்பன் அவர்களும் ஒருவர். இவர் சிறந்த சிந்தனையாளர். சிந்தித்தவற்றைத் தெளிவாகச் சொல்லும் வல்லமையுடையவர். தம்முடைய சிந்தனையில் பூத்த சில கருத்து மலர்களைச் சேர்த்து 'சிந்தனைச் சோலை' என்னும் நூலைத் தந்திருக்கிறார். நிலம், நீர், நெருப்பு, காற்று, விண், உயிர், இதயம், தொழில், வாணிகம், செல்வம், காதல், திருமணம் முதலிய பல்வேறு பொருள்பற்றிய அவரது சிந்தனைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பாடுபொருளைப் பார்க்கும்போது அவை பாடப்பட்ட பழம்பொருள்தானே என்று எண்ணத் தோற்றும். ஆனால் புதுமைச் சிந்தனையோடும், புதிய உத்தியோடும், புதிய நடையழகோடும் இது பாடப்பட்டிருப்பது சிறப்பாய் உள்ளது. நம்

சிந்தைக்கு விருந்தளிக்கிறது. இது செய்யுளும் இல்லை; உரைநடையும் இல்லை; புதுக் கவிதையும் இல்லை; ஆனால் அவை அத்துணையும் கலந்த ஓர் இன்பத் தமிழ் இது. இதில் அழகுக் கலையும் உள்ளது; அறிவியற் கலையும் உள்ளது. ஒவ்வொரு பொருளையும் பல்வேறு கோணங்களிலிருந்து படம்பிடித்துக் காட்டுகிறது இப்படைப்பு.

நிலத்தின் புடைப்புத்தான் மலை
நிலத்தின் வெடிப்புத்தான் ஆறு
நிலத்தின் சீற்றம்நெருப்பைக் கக்கும்;
நிலத்தின் மகிழ்ச்சி நீரை உமிழும்.

....

நிலத்தின் அணிமணிகள் தாவர வகைகள்;
நிலம் செய்துகொள்ளும் ஒப்பனைதான் நாடு, நகரங்கள்;
மாளிகை, மன்றங்கள்;
நிலத்தின் வியர்வை நீர் ஊற்று;
நிலத்தின் அச்சம் நில நடுக்கம்.

பயன் எழுத்து

சிந்தனைச் சோலை என்னும் இந்நூல் ஒரு தனித்தன்மை வாய்ந்தது. 'ஊன் இனிக்க, உளம் இனிக்க' எழுதியுள்ள இந்நூலாசிரியருடைய ஆற்றலைக் கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை.

114 தலைப்புகளில் 2358 அரிய சிந்தனை உரைகளை தமிழன்பன் தந்திருக்கிறார். உரை ஒவ்வொன்றும் ஒளி வீசும் மணிக்கல்லாய் மதிப்பும் சிறப்பும் பயனும் பெற்றதாய் மிளிர்கிறது.

"எழுதுபவர்களை எழுத்தாளர்கள் என்று பொருள் கொண்டால் போதாது. எழுதுவது குழந்தை பிறப்பதுபோல. கருவுறுவது போன்றது எண்ணம். கருவுக்கு ஆண், பெண் இருக்க வேண்டுவது போல, எண்ணம் பிறக்கக் காலமும் நோக்கமும் இருக்க வேண்டும். 'பிறகே எழுத்து' என எழுத்து பற்றிப் பேரறிஞர் அண்ணா குறிப்பிடுவார்கள். தமிழன்பன், "முல்லைப்பூ தூய்மையாக மலர்ந்து சிரிக்கிறது. அம்மலர் பூவாக இருப்பதோடு சரி; ஆனால் முருங்கைப்பூவோ பலன் தரும் காயை வழங்குகிறது. அதே போல, பூ எனச் சிந்தித்தல் அளவோடு மட்டும் சிந்தனை இருத்தல் கூடாது. முருங்கைப் பூவிலிருந்து பயன் தரும் காய் கிடைப்பது போல், சிந்தனை, செயல் வடிவம் பெற்றுச் செழுமையை வழங்க வேண்டும்" என்கிறார்.

முல்லை மலர் மணக்கும்! முருங்கை மலருக்கு மணம் இல்லை
முல்லை காய்க்காது; முருங்கை காய்க்கும்.

நண்பர் தமிழன்பன் எழுத்தோ தூய்மையானது, பயன் தருவது. மணம் தருவதில் முல்லை மலர்; பயன் தருவதில் முருங்கை மலர். இவருடைய எழுத்து மலர் அவ்விருவகை மலர்களின் தன்மைகளை இணைத்துக் கொண்ட புது மலர்.

சிந்தனைச் சிற்பி

எல்லோரும் அறிந்த எளிய சொற்களைத்தான் தமிழன்பன் கையாண்டுள்ளார். அவற்றை இணைத்திருக்கும் திறத்தால் நேர்த்தியால் மாபெரும் சிந்தனைகளை நம் மனத்தில் செதுக்கும் சிற்பியாய்த் திகழ்கிறார்.

"புல்லிலே தூங்கும் பனிநீர் சாதாரணமானதுதான். அதுவே கடலில் கலந்து விட்டால் மாபெரும் சக்தியாக, ஆற்றலாக மலர்ந்து விடுகிறது" (பக். 19). இது தமிழன்பன் வாக்கு. தமிழன்பனின் எழுத்துக்கு அவருடைய இவ்வாக்கு முற்றிலும் பொருந்தும். நம்மிடம் உள்ளவரை எளிமையாய் - சாதாரணமாய் இருக்கக்கூடிய சொற்கள் அவரிடம் சேரும்போது, அவரால் கையாளப்படும்போது, எத்துணை பேராற்றல் வாய்ந்தவையாக மாறி விடுகின்றன.

நடைமுறைச் செயல்களை ஒன்றன் மேலேற்றி அவர் உருவாக்கும் சொல்லோவியங்கள் உள்ளம் கொள்ளை கொள்வனவாக உள்ளன. நாம் நாள்தோறும் செய்வதைக் குறித்து வைக்கிறோம். அது நம்முடைய நாள்குறிப்பு. உலகம், தன் நாள்குறிப்பை எழுதி வைத்தால் அஃது எப்படியிருக்கும்; எண்ணிப் பார்க்கிறார்; உருண்டோடி வருகிறது ஓர் உயிர்த் தொடர் :

உலகம் எழுதும் நாள்குறிப்புதான் வரலாறு (பக். 219)

சிரிப்பு, சீற்றம், நர்த்தனம் - இவற்றை நாம் கண்டிருக் கிறோம். காற்று இச்செயல்களைச் செய்தால்..... இவ்வாறு எண்ணிப் பார்க்கிறார் தமிழன்பன். உடனே அருமையான உரை ஓவியத்தை உயிரோவியமாய்ப் படைத்து விடுகிறார்.

காற்றின் சிரிப்பு தென்றல்; (பக். 23)
காற்றின் சீற்றம் புயல்; (பக் 23)
காற்றின் நர்த்தனம் இசை; (பக். 210)

நூல் முழுதும் இத்தகைய இனிமைத் தொடர்கள் ஏராளம்! ஏராளம்!

திரவ வடிவ நெருப்புத்தான் திராவகம். (பக். 21)
எண்ணங்களின் நிழல் ஊர்வலம்தான் கனவு. (பக். 122)

புலன்கள் எல்லாம் ஒருசேர விருந்துண்டு களிக்கும்
பொன்விழாதான் திருமணம். (பக். 80)

மரபு காப்பவர்

மரபுவழி நின்று, அதே வேளை தன் சிந்தனைக்குப் புத்தெழில் சேர்க்கும், 'சித்தராக'த் தமிழன்பன் காட்சியளிக்கிறார்.

தும்பிகள் வேய்ங்குழலிசை எழுப்புகின்றன. அதனோடு பொருந்த மழலை வண்டுகள் நல்யாழினை இசைக்கின்றன; மயில்கள் ஆடுகின்றன. மந்திகள் பார்த்துக் களிக்கின்றன எனக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் சோலையை ஆடரங்காக்கிக் காட்டுகிறார்.

இருள்வளைப்பு உண்ட மருள்படு பூம்பொழில்,
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட,
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய,
வெயில்நுழைபு அறியாக் குயில்நுழை பொதும்பர்,
மயில்ஆ டரங்கின், மந்திகாண் பனகாண்! (மணிமே. 4 : 2–6)

என்பது சாத்தனார் காட்டும் ஆடரங்கு. பொழில் - ஆடரங்கு; மயில் - ஆடுமகள்; தும்பி - குழலிசைப்போர்;

மழலை வண்டு - யாழ் மீட்டுவோர்; மந்தி - பார்வையாளர்!

தமிழன்பன் விண்ணை நாடக மேடையாக்கிக் காட்டுகிறார். 'தாரகைகள் என்னும் தோரண விளக்குகளாலும், சூரியன், சந்திரன் என்னும் பேரொளி விளக்குகளாலும், மேகம் என்னும் காட்சித் திரைகளாலும் அணி செய்யப்பட்டு இயற்கைக் கூத்தன் நடத்திடும் நாடக அரங்குதான் விண்" என்கிறார் (பக். 27). பார்வையாளர்கள் 'நாம்' என்பதைச் சொல்லாமலேயே உணர்த்தியிருக்கிறார்.

உடுக்கள் சூழ நிலவு இருப்பதைக் கற்பனை நயத்தோடு பலரும் எழுதியிருக்கிறார்கள்,

புள்ளி மட்டும் வைத்து விட்டுக்
  கோலம் போடவே மறந்து
போன தும்யார்? கிண்ணி மட்டும்
  தனியில் வாடவே

என்பார் தமிழழகன். நிலவு கோலப் பொடிக் கிண்ணமாம்! உடுக்களோ கோலம் போடுவதற்காக இடப்பட்ட புள்ளிகளாம்! புள்ளிகளை மட்டும் வைத்துவிட்டு, கோலம் போடாமல் போய் விட்டார்களே! ஏன்? எனக் கற்பனை கொஞ்சப் புலவர் கேட்கிறார்.

இரவுப் பெண்ணாள் நிலாப்பா னையில்
கடைந்த தயிரின் சிதறல் துளிகள்!

என்பார் கவிஞர் ஈரோடு தமிழன்பன். நிலா, தயிர்ப் பானையாக, உடுக்கள், தயிரைக் கடையும்போது பானையைச் சுற்றிலும் தெறித்து விழும் துளிகளாகத் தெரிகிறது கவிஞருக்கு!

ஆர்.சி. தமிழன்பனோ, வானத்தைக் கோழிப் பண்ணை யாகவும், நிலாவைக் கோழியாகவும், உடுக்களைக் கோழிக் குஞ்சுகளாகவும் கற்பனை செய்து,

நிலவுக் கோழி, தாரகைக் குஞ்சுகளுடன்
மேய்ந்துவாழும் கோழிப்பண்ணைதான் வானம்

எனக் கூறி, சுவையுரை தருகிறார்.

புதுமை சேர்ப்பவர்

"மக்கள் தங்கள் தலையில் எண்ணெய் தடவி, சீப்பால் வாரிவிட்டு, ஒப்பனை செய்து, பொலிவுற்றவர்களாய், அலுவல்களை கடமைகளைச் செய்ய முற்படுகின்றனர். அதேபோல் நிலம், மழைநீர் என்னும் எண்ணெய் தடவி, உழவு என்னும் சீப்பால் சீவி, ஒப்பனை செய்த பின்பு, தானியமணிகளை விளைவு செய்யவேண்டிய கடமைத்தொண்டில் ஈடுபடுகிறது" - இவ்வாறு நிலமங்கையின் ஓவியத்தைத் தமிழன்பன் தீட்டி மகிழ்கிறார்.

நிலமகளுக்குக் கடலை ஆடையாகவும், மலைகளை முலைகளாகவும், மலையில் ஓடும் ஆற்றினை மார்பில் புரளும் முத்தாரமாகவும், மேகத்தைக் கூந்தலாகவும் கூறுவது மரபு.

அலைநீர் ஆடை; மலைமுலை ஆகத்து
ஆரப் பேரியாற்று; மாரிக் கூந்தல்;
கண்ணகல் பரப்பின் மண்ணக மடந்தை (சிலப். 5 : 1–3)

என்பார் இளங்கோவடிகள். 'நீராரும் கடலுடுத்த நிலமடந்தை' என்பது நாம் நாள் தோறும் கேட்டுவரும் தொடர். இம்மரபுவழி நின்று தமிழன்பனும் கடலை, நிலமங்கையின் ஆடையாய்க் கூறுகிறார். என்றாலும் அதில் ஒரு புதுமையைச் சேர்த்து, நம் பண்பாட்டுச் சிறப்பினைப் பளிச்சிடச் செய்கிறார் புதுமைக் கோலம் என்ற பெயரில் அரைகுறை ஆடையில் மங்கையர் உலவும் காலம்! ஆடை மறைக்கும் பகுதியைவிட, மறைக்காத பகுதியே மிகுதியாய் உள்ள நிலை! இடை உண்டோ இல்லையோ என்று இடையின் நுண்மையை நயமாய்க் கூறுவர். ஆனால் இப்போதோ, 'உடை உண்டோ இல்லையோ' என்று சொல்லத்தக்க அருவருக்கும் நிலை. தமிழன்பன் மரபுவழி நின்று, கடலை ஆடையாக்கிக் காட்டி, அதே வேளை அரைகுறை ஆடை அணியும்

அவலப் போக்குக் கூடாது என இன்றைய நிலையையும் மிக நுணுக்கமாய்ச் சுட்டிக் காட்டுகிறார்.

"நிலம், தன் உடலின் பெரும்பகுதியைக் கடலாடையால் சுற்றிக் கொண்டு கற்புக் கன்னியாகவே விளங்குகிறது" - இது தமிழன்பனின் கூற்று (பக். 18).

உலகில் நிலம் 1 பங்கு, நீர் 3 பங்கு. நிலத்தைவிட நீர்ப் பரப்பு மிகுதி என்பதை, 'உடலின் பெரும் பகுதியை' என்ற சொற்களால் புலப்படுத்தியுள்ள நயம் பாராட்டத்தக்கது. குறையாடை இழுக்கு எனத் தமிழன்பன் கருதுவதை, 'கற்புக் கன்னி' என்ற சொற்கள் தெரிவித்து விடுகின்றன.

விளக்க உரையாளர்

தமிழன்பனுடைய சிந்தனை உரைகள், திருக்குறளுக்கு உரையாக அமைந்துள்ள இடங்களும் உண்டு.

பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்அல்லது இல்லை பொருள் (குறள் 751)

என்பது திருக்குறள். "ஒரு பொருளாக மதிக்கப்படாதவரையும் மதிப்புடையவராகச் செய்யும் சிறந்த பொருள் செல்வத்தைப் போல வேறு இல்லை" என்பது இதன் பொருள்.

"அறிவிலியை அறிவாளியாக்கும்; குசேலனைக் குபேர னாக்கும்; மந்தியை மன்மதனாக்கும்; கூழாங்கல்லைக் 'கோகினூர்' வைரமாக்கும்; சிந்தையைக் குடைந்து விந்தைகளில் விளையாடும் செல்வத்தின் மாயாஜாலம் செப்புந்தரமன்று" (பக். 59) எனும் தமிழன்பனின் சிந்தனையுரை மேலே சொல்லியுள்ள திருக் குறளுக்கு விளக்கவுரையாய் அமைகிறது. திருவள்ளுவர் 'பொருளல்லவரைப் பொருளாக்கும்' என்றார். அதற்குத்தான் அறிவிலி - அறிவாளி; குசேலன் - குபேரன்; கூழாங்கல் - கோகினூர் என எத்துணை விளக்கங்கள்!

இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று (குறள் 100)

என்பதொரு குறள். "இனிய சொற்கள் தன்னிடத்து இருக்க, அவற்றைக் கூறாது, கடுஞ்சொற்களைக் கூறுதல், இனிய கனிகள் இருக்கும்போது இனிப்பில்லாத காய்களை உண்பதற்கு நிகராகும்" என்கிறார் திருவள்ளுவர்.

தோன்றும்போது துவர்ப்பாகவோ கசப்பாகவோ உள்ள காய், சின்னாளில் பழுத்து இனிமையைத் தருகிறது. அதுபோலத்தான் இன்னாச் சொற்கள் உள்ளத்தே தோன்றி

னாலும், பொறுமைகாத்து நினைந்து பார்த்தால், இன்னாமை மாறி இனிய சொற்களாக வெளிப்படும் - காயே கனியாவது போல! இப்பொருளும் இக் குறளின் உட்கிடையாய் உள்ளது. இந்த உட்கிடைப் பொருளைத் தமிழன்பன்,

"மாங்காய் புளிக்கிறதே என அவசரப்பட்டுக் காய்களை உதிர்த்துவிடுவதில்லை. மாங்காய் கனியாகிவிட்டால் செந்தேனாய் இனிக்கிறது. கசக்கும் வேப்பங்காய் கனிந்தால் இனிக்கிறது. அதேபோல் அன்புநெறி நிறைவு பெறும்போது அதைவிட இனிமையாய் அமையும் நெறி வேறெதுவும் கிடையாது" எனக் கூறுகிறார். ஆத்திரத்தில் அவசரப்பட்டு இன்னாச் சொற்களைக் கொட்டிவிடாதே; கொஞ்சம் ஆற அமரச் சிந்தித்தால் அவ்வின்னாச் சொற்களே இனிய சொற்களாய் மாறிவிடும் என்பதற்குத் தமிழன்பனின் மேலேயுள்ள கூற்று மிகப் பொருத்தமாய் அமைந்து சிறப்பளிக்கிறது.

அரம்போலும் கூர்மையான அறிவினை உடையவரானாலும் மக்கட்பண்பு இல்லாதவர்கள் ஓரறிவுடைய மரத்தைப் போன்றவரே ஆவர்; ஆறறிவு படைத்த மக்களாக அவர்களைக் கொள்ள முடியாது. பண்பில்லாதவர்கள் பெற்றுள்ள அறிவுக் கூர்மை, அரத்தைப்போலப் பிறரைத் தேய்க்கவே பயன்படும். இரும்பாலான அரம், தன்னினமாகிய இரும்பைத் தேய்த்து அறுக்கிறது. அதுபோலவே மக்கட் பண்பில்லாதவன் தன் இனத்தையே அழிப்பவனாவான். அரம் பிறவற்றைத் தேய்க்கும் போது அதுவும் கூர்மை குறைந்து மழுங்குதல்போலப் பண்பிலார் தம்மையடுப்பாரைக் கெடுப்பதோடு தம்முடைய அறிவையும் பயனற்றதாக்கிக் கொள்வர். இத்துணையையும் உள்ளடக்கிய தாகிய,

> அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண்(பு) இல்லா தவர் (குறள் 997)

எனும் திருக்குறள் அமைந்திருக்கிறது. அரத்தின் அழிக்கும் தன்மையை எடுத்துக்காட்டித் திருவள்ளுவர் நமக்கு அறம் உரைக்கிறார். தமிழன்பனோ, அரத்தின் ஆக்கத் தன்மையை மனத்தில் கொண்டு அரிய கருத்தை அளிக்கிறார்.

"அரத்திற்கும் அறத்திற்கும் ஒரு வகையில் நெருங்கிய தொடர்பு உண்டு. அரம் உலோகங்களை அராவி பயன்படத் தக்க உறுப்புகளை உருவாக்குகின்றது. அறமும் உயிர்களை மேவி பண்பட்ட உள்ளங்களை உருவாக்குகின்றது" (பக். 95). தமிழன்பனின் அரம், அறம் செய்வதாக உள்ளது. தன் இனமாகிய

வெற்று உலோகத்தை அறுத்துத் தேய்த்துப் பயன்படும் பொருளாக அரம் மாற்றுகின்றது. அதுபோல் தன்னையொத்த மனித குலத்தை உரியவாறு திருத்தி - தேய்க்க வேண்டிய தீய குணங்களைத் தேய்த்துப் பக்குவப்படுத்தி உயர்ந்த பண்புடைய வர்களாய் மாற்ற வேண்டிய அறச் செயலை, அரச் செயல் கொண்டு தமிழன்பன் அருமையாய் விளக்குகிறார்.

சொல்லாட்சிச் சிறப்பு

சொல் இவரிடம் விளையாடல் புரிகின்றது. 'பெண்மை' பற்றிக் கூறும்போது, 'உலகத்துக் கவர்ச்சியெலாம் ஒன்று திரட்டி உருவாக்கப்பட்டதே பெண்" என்கிறார் (பக். 42).

பெண்மை பேரின்பப் பெட்டகம் மட்டுமன்று; பேரன்பின் பெட்டகமும் ஆகும்.
பெண்மையில் போதையும் உண்டு; போதனையும் உண்டு.
பெண்மையின் உடல் மென்மையானது; உள்ளமோ அதைவிட மேன்மையானது.
(பக். 42)

பேரின்பம் - பேரன்பு; போதை - போதனை; மென்மை - மேன்மை; அடடே! பம்பரத்தை ஆட்டுவிப்பது போலன்றோ இவர் சொற்களை ஆட்டுவிக்கிறார்.

சிறந்த உவமைகள் வாயிலாக அரும்பெரும் கருத்துகளை எடுத்துச் சொல்வதில் தமிழன்பன் வல்லவராக இருக்கிறார். தங்கத்தை உருவாக்குவதில் உள்ள மூன்று நிலைகளை, தங்கமான தொழிலாய ஆசிரியத் தொழிலின் மூன்று நிலைகளோடு ஒப்பிட்டுக்காட்டியிருப்பது மதிப்புமிக்கதாயுள்ளது.

"தங்கச் சுரங்கத்தில் உள்ள தங்கம்கலந்த மண்ணை எடுத்து வரும் தொழிலாளியைப் போன்றவர் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்; மண்ணைப் பிரித்துத் தனித் தங்கமாகச் செய்யும் தொழிலாளியைப் போன்றவர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்; தங்கத்தை எழில் ஒளி வீசச் செய்யும் அணிகலப் பணியாளர்தான் கல்லூரி ஆசிரியர்" (பக். 50). மதிப்புமிக்கதும், ஒளியுடையதுமான தங்கத்தைக் கொண்டிருக்கும் தங்கச் சுரங்கம்போல, அரிய கருத்துகள் பொதிந்து கிடக்கும் சிந்தனைச் சுரங்கமாகத் தமிழன்பன் திகழ்கிறார் என்பதற்கு அவர் காட்டியுள்ள தங்கச் சுரங்க உவமையே போதிய ஒன்றாக விளங்குகிறது.

உரைநடைக் கவிதை

இஃது ஓர் உரைநடை நூல் என்றாலும் கவிதைக்குரிய அத்துணைப் பண்புகளையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. முரண்படும் சொற்களை இணைத்து அரண்தரும் கருத்துகளைத்

தமிழன்பன் கூறியிருப்பதை நூலுள் பல இடங்களில் காணமுடிகிறது.

"பிறப்பின்போது குழந்தை அழுகிறது; ஆனால் பெற்றோர் மகிழ்கின்றனர். இறப்பின்போது மனிதன் அமைதியாகிறான்; ஆனால் உற்றோர் அழுகின்றனர்" (பக். 41). அழுகையும் சிரிப்பும் ஆளப்பட்டுள்ள நேர்த்தியை இங்கே காண்கிறோம்.

ஆழ்ந்து, சிந்தித்துப் பொருள் தெளிய வேண்டிய உரைகள் பல, இந்நூலுள் உள்ளன. "நோய்க்கும் நலத்திற்கும் மூளும் போரில், நலத்திற்குப் பக்க பலமாகச் சேரும் நண்பன்தான் மருத்துவம்" என்பது தமிழன்பன் கூற்று (பக். 178). நோய் நலம் இரண்டுக்கும் போர்; மருத்துவம் நலத்தின் பக்கம் மட்டுமே சேரும் என்றாலும் வெற்றி யாருக்கு என்பதைக் கூறிட முடியாது. நலம், மருத்துவம் என்ற கூட்டணி வெல்லலாம்; இல்லை நோயே வென்றாலும் வெல்லலாம்!

நண்பர் தமிழன்பன் கல்வியைக் கடலாக்குகிறார். "கடல் ஆழமுடையது - அகலமுடையது - ஓசையுடையது. தன்னகத்தே முத்து பவளம் முதல் மீன்வகைகள் ஈறாகப் பொருள்வளம் பலவும் கொண்டது. அதேபோல் கல்வியும் ஆழமுடையது அகலமுடையது - ஓசையுடையது மட்டுமன்று, இனிமையும் உடையது. தன்னகத்தே அரும்பெரும் பொருள் வளங்கள் அனைத்தும் கொண்டது. எனவே அறிவுச்சுவை ததும்பும் அமுதக் கடலே கல்வி (பக். 53).

கடல் ஓரமாக நடந்து சென்றால் உடலுக்கு இனிமை சேர்க்கும் காற்றைப் பெறலாம். கடலினுள் சிறிது தூரம் சென்றால் நம் உணவுக்குத் தேவையான மீன் முதலியவற்றைப் பிடித்து வரலாம்! கடலினுள் ஆழ முழுகினாலோ உலகு மதிக்கும் முத்து, பவளம் முதலிய விலையுயர்ந்த பொருள்களைப் பெறலாம். கடலோடு ஒப்பிட்டதன் வழி, இந்த மூன்று நிலைகளையும் கல்விக்கு ஏற்றிச் சிந்திக்க வைக்கிறார்.

காற்று வாங்குவதுபோல, பொழுது போக்குக்காக - ஒருவகை இன்பத்துக்காகக் - கல்வியைக் கற்கலாம். உள்ளே சென்று மீன் பிடிப்பதுபோலத் தன் வாழ்க்கைப் பயன்பாட்டிற்காகவும் கல்வியைக் கற்கலாம்! இல்லை! ஆழ முழுகி முத்தெடுப்பதுபோல, நுணுகி ஆய்ந்து தெளிந்து கற்று, என்றும் விலை மதிப்பற்ற நிலைத்த புகழையும் அடையலாம்! கல்வியைக் கடலாக்கி, காற்றா, மீனா, முத்தா எது வேண்டுமோ அதை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள் - அஃது உங்களின் முயற்சியைப் பொறுத்தது

என்னும் ஆழமான - முத்தான கருத்தைத் தம்முடைய உரையிலே ஒளிவீசச் செய்திருக்கிறார், தமிழன்பன்.

அறிவுரைகள்

அவருடைய அறிவுரைகள் எல்லாம் நம்மை மேல்நிலைக்கு இட்டுச்செல்ல வழிகாட்டிகளாக உள்ளன. மனித வாழ்வு மேம்பாடடைய வேண்டும் என்பதே அவருடைய குறிக்கோளாக இருக்கிறது.

"கோபுரம் தங்கமாக இருந்தாலும் சிறப்புண்டு; வெண்கலமாக இருந்தாலும் சிறப்புண்டு. பண்பாளர்கள் எந்த வகையில் இருந்தாலும் நிச்சயம் புகழ் உண்டு" - புகழ்பெறத் தூண்டுகோலாக அமைந்துள்ள அறிவுரை இது (பக். 244).

''நல்லோர் படும் துன்பத்தில் மகிழ்ச்சி பெறுபவன் கொள்ளைக்காரன்; நல்லோர்க்குத் துன்பம் தந்து மகிழ்ச்சி பெறுபவன் கொலைகாரன். நல்லோர் பெறும் மகிழ்ச்சியைக் கண்டு மகிழ்ச்சி பெறுபவன் மனிதன்; நல்லோர்க்குரிய இனிய செயல்கள் புரிந்து, அவர்களது மகிழ்ச்சி கண்டு மகிழ்பவன் புனிதன்" (பக். 247). பாவேந்தர் பாரதிதாசன் கடுகு உள்ளம், துவரை உள்ளம், தென்னையுள்ளம், மாம்பிஞ்சு உள்ளம் ஆகியவற்றை விளக்கி இறுதியாக,

> தூயஉள்ளம். அன்புஉள்ளம், பெரிய உள்ளம்,
> தொல்லுல மக்களெலாம் ஒன்றே என்னும்
> தாய்உள்ளம்

வேண்டும் என்கிறாரே! அவ்வாறே மாந்தரினம் 'புனித' இனமாக வேண்டுமெனும் ஆசையைத் தமிழன்பன் அக்கறையோடு வெளிப்படுத்துகிறார்!

பாவேந்தரின் இப்பாடலைத் தமிழன்பனின் மற்றோர் உரையும் நினைவுபடுத்துகிறது. 'தொண்டு' பற்றிக் குறிப்பிடும்போது அவர்,

''வீட்டுக்குத் தொண்டு செய்பவன் குடும்பத் தலைவன்; வீதிக்குத் தொண்டு செய்பவன் அன்பாளன்; ஊருக்குத் தொண்டு செய்பவன் அறநெறியாளன்; நாட்டுக்குத் தொண்டு செய்பவன் அருளாளன்; இந்நானிலத்திற்கே தொண்டு செய்பவன் இறைவன்" என்கிறார் (பக். 136).

ஒவ்வொன்றையும் பற்றிய தமிழன்பனின் வரையறை (Definition) அவர்தம் சிந்தனையுரையில் அடங்கியிருக்கிறது. தலைமையை வரையறுக்கிறார் : "துலாக்கோல் தன்மையும், தூய தொண்டின் மென்மையும், துரோகத்தை எதிர்க்கும் வன்மையும்,

விரோதமின்மையும் தலைமைக்கேற்ற தனிப்பெருஞ் சிறப்புகளாகும்" (பக். 167).

நடைநயம்

நண்பர் தமிழன்பனுக்கு ஒரு தனி நடை வாய்த்திருக்கிறது. "ஊற்று நீர் தாவும்; அருவி நீர் குதிக்கும்; குளத்து நீர் அமர்ந்திருக்கும்; வாய்க்கால் நீர் நடக்கும்; ஆற்று நீர் ஓடும்; கடல் நீர் அலையும்; (பக். 20) என இவர் சொல்லியிருப்பதுபோல இவருடைய நடையும் சில இடங்களில் ஆடுகிறது; சில இடங்களில் ஓடுகிறது; சில இடங்களில் தாவுகிறது; சில இடங்களில் மென்மையாக மேவுகிறது.... இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்!

விரித்து விரித்துப் பொருள் கொள்ள வேண்டிய செய்திகளைச் சிறிய சிறிய தொடர்களில் அடக்கிக் காட்டுவது தமிழன்பனின் தனி ஆற்றலாய்த் திகழ்கிறது.

ஆத்திசூடி போன்று ஓரடியில் உயர்ந்த கருத்தைச் சொல்லும் நடையும் இவருக்குக் கைவந்த கலையாக இருக்கிறது.

ஊக்கமுடையார் ஏக்கமடையார் (பக். 255)

விருந்தில்லா வீடு விளக்கில்லா வீடு (பக். 242)

நறுக்குத் தெரிந்தாற் போல் 'பளிச் பளிச்' என மின்னுகின்ற நடையும் இவருக்கு உறவு.

மாந்தர்க்குக் கற்பு; மாவீரனுக்குக் கவசம்; மொழிக்கு இலக்கணம் (205). 'பயனிலை' இல்லாது பயன் தருகின்ற தொடர்கள் இவை.

உயர்ந்த எண்ணங்களின் சுருங்கிய எழுத்து வடிவமே இந்நூல். "நீதியை நிலைகுலையச் செய்வது நெஞ்சத்தையே வஞ்சிப்பதாகும்" (பக். 181).

"அருவியில் குளித்தால் முதலில் உடல் நலம் பெற்று, அதனால் உள்ளம் வளம் பெறுகிறது. அறிவில் திளைத்தால், முதலில் உள்ளம் வளம் பெற்று, அதனால் உடல் நலம் பெறுகிறது" (பக். 55).

"உழைப்பவன் வீட்டு முன்னால் உயர்வும் சிறப்பும் உழைக்கக் காத்திருக்கின்றன" (பக். 68).

"எல்லோரும் இன்புற்று வாழும் போதுதான், நம் வாழ்க்கையும் இன்புற்று விளங்கும்" (பக். 83).

"இதயங்களின் பரிமாற்றமே இனிய நட்பாகும்" (பக். 103)

சுருங்கிய தொடராட்சியைத் தமிழன்பனின் இத்தகு உரைகள் மெய்ப்பிக்கின்றன.

சிந்தனைச் சோலையின் சிறப்பு

"மாண்பார்ந்த எழுத்துகளை ஆள்பவனே, மக்கள் உள்ளத்தில் வாழ்பவன் ஆவான்."

"எழுத்தை ஏட்டில் தவழ விடுவதற்குமுன் அந்த எழுத்து தெளிந்த சிந்தனையிலிருந்து பிறத்தல் வேண்டும்."

"தன்னைப் படிப்போர் உள்ளத்தினை ஈர்த்து, அவர்தம் இதயங்களுடன் இரண்டறக் கலந்து, செயல்புரியும் ஆற்றலை நல்கிடும் உணர்வின் வடிவமே எழுத்து." (பக். 190-191)

இவை எழுத்துபற்றித் தமிழன்பன் கூறியுள்ளவை. அவருடைய இக்கூற்றுகளுக்கு முற்றிலும் பொருந்தியதாய் அவருடைய இந்நூல் அமைந்திருக்கிறது.

"எழுத்து, சொல் ஆகியவற்றினை வலுப்படுத்தி, நடையிலே புதுமையைப் புகுத்தி, ஒரு மொழியின் வளர்ச்சிக்குக் காரணமாக அமையும் சத்துணவுதான் இலக்கியம்" (பக். 204). - இதுவும் தமிழன்பனின் சிந்தனை உரையே! நூலைப் படிக்கும்போது எழுத்து, சொல் ஆகியவற்றினைத் தமிழன்பன் வலுப்படுத்தி யிருப்பதை உணர்கிறோம்; நடையிலே புதுமையைப் புகுத்தி யிருக்கிறார் என்பதையும் காண்கிறோம். மொழியின் வளர்ச்சிக்கு ஏன் சமுதாய வளர்ச்சிக்கு உதவும் அரிய இலக்கியமாக இருப்பதையும் அறிகிறோம். ஆதலின் இந்நூல் நம் சிந்தனைக்குச் 'சத்துணவாக' இருப்பதைத் தெளிந்து அள்ளி அள்ளி உண்கிறோம்!

தமிழன்பனுடைய, 'சிந்தனைச் சோலை' வளமான கருத்துகள் எனும் கொழுவிய நிழலைத் தந்து குளிர்விக்கிறது. பொருள் பொதிந்த சொற்களெனும் தேன் நிறைந்த மலர்களை மலர்வித்து மணமூட்டுகிறது; அச்சோலையில், அறிவுரைகள் எனும் நறுஞ்சுவைக் கனிகள் இனிப்பூட்டுகின்றன; கற்பனை எனும் தென்றல் நம் 'சிந்தை அணு உடல்' ஒவ்வொன்றையும் சிலிர்க்கச் செய்கிறது. அவருடைய கடின உழைப்பு எனும் செப்பனிடப்பட்ட பாதையும் அச் சோலையிலே படிந்து கிடக்கக் காண்கிறோம்! அப் பாதை வழி நடப்போம்; பயனும் பெறுவோம்!

ஒரே புள்ளியை மையமாகக் கொண்டு பல வட்டங்கள் வரைய முடியும். கணக்கு மொழியில் அவற்றைப் பொதுமைய வட்டங்கள் (concentric circles) என்பர். தமிழன்பன் ஒரு பொருளை மையமாய்க்கொண்டு தம் சிந்தனை ஆரத்தை விரிவுபடுத்திப் பல வட்டங்களை வரைந்திருக்கிறார். இப் பொது மைய வட்டங்களில் ஒவ்வொரு வட்டமும் ஒரு பொன்னுரை.

இவ்வாறான 114 பொது மைய வட்டத் தொகுதி அடங்கியதே 'சிந்தனைச் சோலை' என்னும் இந்நூல்.

'எழுத்தாளர்' எனும் தேர்தல்களத்தில் தமிழன்பன் வேட்பாளர் ஒருவராவார். 114 வாக்குச் சாவடிகள் உள்ளன. 2358 வாக்காளர்கள் உள்ளனர். அனைத்து வாக்குகளையும் இவரே பெற்று வாகை சூடி வலம் வந்துகொண்டிருக்கிறார்.

புற்றீசல்கள்போல வெற்றெழுத்துகள் பொலபொலவென வெளிவந்துகொண்டிருக்கும் இக்காலத்தில், தேனீபோலச் சுழன்று பறந்து தமிழன்பன் சேர்த்து வைத்துள்ள அறிவுத்தேன் மணக்கும் இந்நூல், 'கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ள உதவும்' குளிர் சோலையாய் உளங்குளிர வைக்கிறது.

புகழொடு பொலிக

"பூ மாலை தொடுக்கச் சிறிது நேரமே போதும். புகழ் மாலை தொடுக்க நெடுங்காலம் தேவை" - இதுவும் தமிழன்பனின் உரையே! அரிதின் முயன்று, நெடுங்காலம் உழைத்து உழைத்து, சிந்தனைச் சோலைப் பூக்களைப் 'புகழ் மாலை'யாய்த் தொடுத்திருக்கிறார். இம்மாலை, அவர், தாம் அணியத் தொடுத்ததன்று. மாலையைக் காணும் ஒவ்வொருவர் கழுத்திலேயும் அதனைச் சூட்டி, அவர்கள் அடையும் மகிழ்ச்சியும் மணமுமே, தாம் மாலை தொடுத்ததற்கான பயன் எனக் கருதுகிறார். மாலையை நாம் சூடி, அவர்க்கு நம் மகிழ்ச்சியைச் சூட்டுவோம்!

ஒருவருடைய உரையை மேற்கோளாக எடுத்தாளுவதுதான் அவ்வுரையைச் சொன்னவர்க்குத் தரப்படும் மிக உயர்ந்த பாராட்டு ஆகும் என்றார், மேனாட்டு அறிஞர் சான்சன். (Quotation is the highest compliment you can pay to an author - Johnson). தமிழன்பன் அவர்களுடைய உரைகளை மேற்கோள் உரைகளாக எடுத்து ஆளுவோம்! உயரிய அப்பரிசை அவர்க்கு நல்குவோம் எனக் கூறி அவருடைய எழுத்துத் தொண்டு வளர்க! புகழ் ஓங்குக! என உளம்நிறை அன்புடன் வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	ஆர்.சி. தமிழன்பன்
வகைமை	கட்டுரை
வெளியீடு	கோமதி பதிப்பகம், சென்னை–4. (1985)

14

புரட்சிப் பொன்மொழிகள்

திருப்புகழ் அடிமை திரு. சண்முகதாசன் அவர்கள் எழுதியுள்ள 'புரட்சிப் பொன்மொழிகள்' என்னும் நூலுக்கு ஓர் அணிந்துரை எழுதவேண்டுமென அருமை நண்பர் செங்குட்டுவன் என்னைப் பணித்தார். சமயத் தொடர்பான நூலுக்கு என்னை முன்னுரை எழுதச் சொல்கிறீர்களே என்றேன். நூலைப் படித்துக் கருத்துரைக்குமாறு சொன்னார். நூலை முழுதும் படித்ததும், திருப்புகழ் அடிமை திரு.சண்முகதாசன் சமயத்துறையில் ஒரு புதிய மனிதராய், புரட்சிக் கருத்துகளைக் கொண்டவராய், மொழியுணர்வும் இனவுணர்வும் கொண்ட சிந்தனையாளராய் இருப்பதை உணர்ந்தேன். சாதி சமயச் சண்டைகளிலே கோத்திரக் குப்பையிலே உழன்று கிடந்த மக்களைக் கண்டித்து, ஆருயிர்கட் கெல்லாம் அன்பு செய்யத் தொண்டாற்றிய அருளாளர் இராமலிங்க வள்ளலார் வழியில் வந்தவராய் இந்நூலாசிரியரைக் காணமுடிகிறது.

25 தலைப்புகளில் சிறந்த பொன்மொழிகள் இந்நூலுள் காணப்படுகின்றன. கடவுள்முதல் காமம்ஈறாய் அனைத்துப் பொருள்களுமே அலசி ஆராயப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொருளிலும் நூலின் தலைப்புக்கேற்றவாறு ஆசிரியரின் புரட்சி எண்ணங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சமுதாயத்தில் நிலவிவரும் ஒரு கருத்து அல்லது செயல்முறையை முற்றிலுமாக மாற்றுவதும், மாற்றுவதற்கான வழி காணுவதும் புரட்சியாகும். அப்புரட்சியை ஆசிரியரின் உரைகள் தூண்டுவனவாய் அமைகின்றன.

புராணங்கள் கோமாளித்தனமான கூற்று என்பதை ஆசிரியர் ஆணித்தரமாய் எடுத்துரைக்கிறார். "புராணங்கள், எழுதுபவனின் மனத்துக்கேற்றவாறு இறைவனை இழிவுபடுத்தும் இழிகதைகளேயன்றி மனத்தைத் தூய்மையாக்கும் புனித நூல்கள்

அல்ல என்பது வெள்ளிடை மலை" (பக். 24) எனத் துணிவுடன் எடுத்துரைக்கிறார். மேலும் ஆண்டவன் பெயரால் நம் அன்னை மொழியைத் துறப்பது இழிசெயல் என்பதையும் வெளிப் படுத்துகிறார். "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய மொழியாகிய தொன்மைத் தமிழ்மொழியை விட்டு, இடையில் வந்த ஏதோ ஒரு மொழியில் அருச்சனை செய்தால்தான் இறைவன் தோன்றுவான்" என்பது பித்தலாட்டக்காரர்களின் செயல் என்கிறார் (பக். 25). மேலும், "இந்த மொழியில் மந்திரத்தை உச்சரித்தால்தான் இறைவன் வருவான்; வேறெந்த மொழியில் சொன்னாலும் கடவுள் வரமாட்டான் என்று சொல்வது கடவுளை ஒன்றும் தெரியாத முட்டாள் ஆக்குவதற்கு ஒப்பாகும்" (பக். 89) என்றும் குறிப்பிடுகிறார்.

விதியின் பெயரால் மக்களை மடமையில் ஆழ்த்தும் போக்கையும் வன்மையாகக் கண்டிக்கிறார். "எல்லாமே இறைவன் செயல் என்றால் நல்ல வினைகளேயன்றோ நடைபெறவேண்டும்? ஆனால், மக்களிடம் காமம், கொலை, சூது, வாது மலிந்து கிடக்கின்றன. உழைப்பவன் ஒருவன்; உண்டு கொழுப்பவன் ஒருவன். மெய் சொல்பவன் பசியால் வாடுகிறான்; ஏமாற்றிப் பிழைப்பவன் இன்பத்தில் திளைக்கிறான். இவையெல்லாம் கடவுள் செயல் என்றால், விதியின் செயல் என்றால் இப்படிப் பல அறியாச் செயல்களுக்குக் காரணம் கற்பித்துத் தப்பித்துக் கொள்ளும் கயவர்களைத் தூக்கில் போட்டால் விதியென்ற பெயரால் இனி இத்தகைய முறையின்மை நடக்காது" என்னும் புரட்சி உரையைத் திருப்புகழ் அடிமை திரு.சண்முகதாசன் வாயிலாய் இந்நூலுள் காணமுடிகிறது (பக். 48).

ஆண்டவன் பெயரால், மதத்தின் பெயரால் சாதி ஏற்றத் தாழ்வுகள் கற்பிக்கப்பட்டதையும் கொதித்தெழுந்து கண்டிக்கிறார். "கடவுள், சாதிகளைப் படைத்ததாய்ச் சில நூல்கள் கூறுகின்றன. அஃது உண்மையாய் இருக்குமானால் அப்படிப்பட்ட கடவுளும் நமக்குத் தேவையில்லை...... அப்படிப்பட்ட நூல்களும் தேவையில்லை" (பக். 106). இது புரட்சி மொழியன்றோ?

சில அரிய உவமைகள் மிகவும் பொருத்தமான முறையில் இந்நூலுள் பல இடங்களில் ஆளப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

"மானத்தை இழந்தபின் அதைத் திரும்பப் பெற முயலுவது கடலில் மாணிக்கத்தைப் போட்டுவிட்டுத் தேடுவதற்கு ஒப்பாகும்" (பக். 55).

"ஒரு கரும்பு பயன்படுத்தும் வகையிலிருந்து சர்க்கரை யாகவும், போதைப் பொருளாகவும் மாறுகிறது. ஒரு குழந்தையை எப்படிப் பக்குவப்படுத்தி வளர்க்கிறோமோ அதைப் பொறுத்தே அதன் வளர்ச்சி அமைகிறது" (பக். 59).

"பொய்யைப் பல நாள் மறைக்க முடியாது; முதிர்ச்சியுற்ற கர்ப்பிணி எத்தனை நாள் அதனை மறைக்க முடியும்? ஒருநாள் வயிறு பெருத்து உண்மையென்னும் குழந்தை பிறந்தே தீரும்" (பக். 71).

"ஒன்றைப் பார்த்து ஒருநாய் குரைக்கும்; அதைப் பார்த்து என்ன நடந்தது என்ற உண்மையை அறியாமல் பல நாய்கள் குரைக்கும்; இப்படி உண்மை புரியாமல் குரைக்கும் மனித நாய்களும் நாட்டில் பல உண்டு" (பக். 90).

இவ்வாறு மக்கள் அறிந்த செய்திகளை உவமைகளாக்கிச் செய்திகளைச் சொல்லும் அரிய பாங்கு நூலுள் பக்கத்திற்குப் பக்கம் காணமுடிகிறது. இஃது ஆசிரியரின் வளமான சிந்தனையை யும் எதையும் கூர்ந்து நோக்கும் போக்கினையும் தெளிவாக்குகிறது.

"கோழியைப்போன்ற எழுத்தாளர்கள் நமக்குத் தேவை யில்லை; அது நெல்லை அப்படியே விழுங்கிவிடும். ஆனால், கிளியோ நெல்லைக் கொரித்து அரிசியை மட்டும் உண்ணும். சிறந்த எழுத்தாளர்கள் தீமைகளை நீக்கி உயர்ந்த உண்மை களையே மக்களுக்கு எடுத்துரைப்பர்" (பக். 126) என்பது எழுத்தாளர்கள் பற்றி நூலாசிரியர் கூறியுள்ள சிறந்த கருத்து. இவர் கூறியுள்ள இந்தக் கூற்றுக்கேற்பவே மனித குலத்திலுள்ள தீமைகளக் களைந்து நன்மைகளை நாடும் நல்லுள்ளம் கொண்டவராய்த் திருப்புகழ் அடிமை திரு. சண்முகதாசனை இந்நூலுள் காண முடிகிறது.

சமயத் துறையில் நடைபெறும் சீர்கேடுகள் அகன்று தூய்மையான அன்பு நிலவிச் சமுதாயம் செழிக்க வேண்டு மென்னும் கருத்துகளைச் சமய வழியிலேயே நின்று கூறுகின்ற புரட்சியாளராய்த் திருப்புகழ் அடிமை தென்படுகிறார். மதத்தின்

பெயரால், கடவுளின் பெயரால் நடைபெறும் பல கேடுகளைக் கண்டிக்கும் உரைகளைக் காவி உடை அணிந்த ஒருவர் வாயிலாய்க் கேட்கும் புரட்சியை இந்நூல் அளிக்கிறது.

திருப்புகழ் அடிமை திரு. சண்முகதாசன் அவர்கள் இவை போன்ற புரட்சிகரமான கருத்துகளைத் தொடர்ந்து தந்து, மக்கள் நல்வாழ்விற்கு வழிவகுக்க வேண்டுமெனப் பெரிதும் விழைகிறேன்.

நூல் ஆக்கம்	திருப்புகழடிமை சண்முகதாசன்
வகைமை	கட்டுரை
வெளியீடு	திருப்புகழரசு பதிப்பகம், சென்னை. (1981)

15

நாஞ்சிலார் கவிதைகள்

அமைச்சுக் கவிஞர்

சங்க காலத்தில் அறிவுடை நம்பி, உக்கிரப் பெருவழுதி, கோப்பெருஞ்சோழன், சேரமான் கணைக்காலிரும்பொறை, பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என முப்பதுக்கு மேற்பட்ட அரசப் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். பின்னர் அமைச்சர்களாய் விளங்கிய மாணிக்கவாசகரும், சேக்கிழாரும் முறையே திருவாசகத்தையும், பெரியபுராணத்தையும் பாடிய பெருங்கவிஞர்களாய் விளங்கியிருக்கிறார்கள். இன்றைய தமிழகத்தின் முதலமைச்சராய் விளங்கிய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும், அமைச்சராய் அரும்பணியாற்றிய நாஞ்சிலாரும் அழகு தமிழில் கவிதைபுனையும் ஆற்றலாளர் களாய் விளங்கி வருகின்றனர்.

அறத்துறைக் கவிஞர்

அப்பர் அடிகளுக்கு, 'நாவுக்கரசர் என்ற பெயருண்டு. நாஞ்சிலாரையும் நாட்டு மக்கள் 'நாவுக்கரசர்' எனப் பெருமையோடு போற்றிப் புகழ்கிறார்கள். அன்றைய நாவுக்கரசர் தம்மை ஆண்டவனோடு ஒன்றுபடுத்திக் கொள்ள உளமுருகிப் பாடினார். இன்றைய நம் நாவுக்கரசரோ, தம்மை மக்கட் குலத்துடன் இணைத்துக் கொண்டு அவர்கள் வாழ்வு மலர எழுச்சியுடன் பாடுகிறார். அமைச்சர் மாணிக்கவாசகரும், சேக்கிழாரும் துறவிகளாகிக் கவிதை புனைந்தனர். ஆனால் நம் அமைச்சர் நாஞ்சிலாரோ -

> துறவறம் எனக்கிலை, எனையணைக்க
> தூயநல் அறத்துறை இருக்கையிலே

என்று கூறுவதோடு,

> தெய்வத்தைக் கண்டிடப் பயணம் இல்லை
> தெய்வத்தை என்னிலே பார்த்தி டுவேன் (பக். 79)

என வையத்து வாழ்வாங்கு வாழ வழிவகுத்துக் கொடுக்கிறார்.

நாஞ்சிலார் ஓர் எழுச்சிக் கவிஞர்; மிடுக்குக் கவிஞர்; துணிச்சல் கவிஞர்; உதவிக் கவிஞர்; உறவுக் கவிஞர் என்பதை அவருடைய கவிதை அடிகளே உறுதிப்படுத்துகின்றன.

பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்

அந்நாளில் 'பொன்னி' இதழ் ஒவ்வொன்றிலும் பாரதிதாசன் வழி நிற்கும் கவிஞர் ஒருவர் பாடலை, "பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்" என்ற தலைப்பில் வெளியிட்டு வந்தனர். நாஞ்சிலார் அப் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞருள் ஒருவர். பாவேந்தரின் நோக்கும், போக்கும், துடிப்பும், எழுச்சியும், வெட்டொன்று துண்டிரண்டெனு முழங்கும் வேகமும் நாஞ்சிலாரிடமும் அப்படியே அமைந்துள்ளன. இவற்றோடு அழகியலில் தோய்ந்து பாவேந்தர் படைத்துள்ள கவிதைகளைப்போன்ற அழகியற் கவிதைகளையும் நாஞ்சிலார் அமுதூறப் பாடுகிறார். பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பு', நாஞ்சிலாரிடமும் 'சிரிக்குதடா நல்லழகு' என வெளிப்பட்டுள்ளது. காலையிளம் பரிதி, கடற்பரப்பு, ஒளிப்புனல், சோலை மலர்கள் என அழகு நங்கை 'தொட்ட இடமெலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்' என்பார் பாவேந்தர். மேலும் அழகு -

> சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்

என்றும் குறிப்பிடுவார். அவர் வழிவந்த நாஞ்சிலார், அதே பாவேந்தர் பாடியதற்குச் சற்றும் குறைபடாமல்,

> தத்துப் பித்தெனவே நடைபோடும் சிறுமழலைத்
> தளர்நடையில்; தரணிமகிழ் பொக்கைவாய்ச் சிரிப்பில்,
> சித்தம் குளிரவொரு சிற்றிலி ழைத்து,சிறு
> சேறு குழைத்துத் தவழன்பு விளையாட்டில்,
> பித்த நிலைக் குன்றினுச்சி தனிலுலகைப்
> பட்டென் றேற்றி வளர்மழலை மொழி நறவில்,
> நத்திக் கொழிக்குதடா நல்லழகு, நானிலத்தை
> நாட்டியப் பேரரங்காக்கி அழகரசி ஆடுகின்றாள்! (பக். 27)

பாவேந்தரின் ஒரு வரியை, நாஞ்சிலார் ஒரு பெரிய ஓவியமாகவே வரைந்து காட்டிவிடுகிறார். 'நத்திக் கொழிக்குதடா நல்லழகு' என்ற தொடரழகே ஓர் அழகு.

பண்டைய மரபுக் கவிஞர்

பழங்கவிஞர் மரபிலேயும் நம் கவிஞர் பாப்புனையத் தவறவில்லை. பண்டைய இந்த மரபுச் சிந்தனையில் தோய்ந்து வருகின்ற நாஞ்சிலார் -

> குயில்எனக்கு வேண்டாம், என்குமரிப் பெண்ணாள்
> குயில்மொழியில் நான்சிக்கிச் சொக்கி நிற்பேன்;

மயில்எனக் கெதற்குஇங்கே? மங்கை நல்லாள்
தோகை விரித்தாடுகை யில்எழுஞ் சிரிப்பில் (பக். 88)

எனப் பாடியுள்ளார். குமரிப் பெண்ணின் மொழிக்குக் குயிலிசை தோற்கிறது! மங்கை எழிலில் மயிற்சாயல் மங்கி விடுகிறது!

மும்மணி போற்றும் கவிஞர்

தம்மை உருவாக்கிய அண்ணாவையும், பெரியாரையும் உளமுருக ஊனுருகக் கவிஞர் நன்றிப் பெருக்கோடு போற்றுகிறார்-

அண்ணாவின் தலைமையிலே, அவர்காட்டும் சுட்டுவிரல்
அசைவினிலே, அணிதிரள ஆயிரமாயிரம் பெருமக்கள்

இருந்ததை எண்ணி இறும்பூது எய்துகிறார். சீர்திருத்த வரலாற்றின் வைரவரி என்கிறார், தந்தை பெரியாரை! அவர் இந்நாட்டின் நைந்த மக்களுக்காய்க் கல்லடியும் சொல்லடியும் தாங்கி ஆற்றிய பணிகள் அளவில் அடங்காவே! அவர் வழியில் நாம் செல்லாவிட்டால் நம் இனம் அழிந்தொழிந்து போய் விடும் எனச் சாட்டையடி கொடுப்பதுபோல மக்களுக்கு எடுத்துரைக்கின்றார்.

சொல்லுங்கள் பெரியாரைப் போன்ற உள்ளம்
தமிழனுக்கு வேண்டாமா? வேண்டா மென்றால்
செல்லுங்கள் அறியாமைப் புதைகுழிக்கு;
செயலற்ற மனிதர்களே எண்ணிப் பார்ப்பீர் (பக். 74)

பெரியார் வழியிலே செல்லாவிட்டால் நாம் அறியாமைப் புதைகுழியிலே ஆழ்ந்து அழிவோம் என உரிய முறையில் கவிஞர் எச்சரிக்கிறார்.

உடனிருந்து தோளொடு தோள்சேர பணியாற்ற வாய்ப்பைப் பெற்றிருக்கும் தம் அருமைத் தலைவர் கலைஞரைப் பாடுகின்ற அடிகளில் கவிஞரின் அடிமன அன்பைக் காண முடிகிறது. 'என்நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே' என்பது சங்ககாலப் பாடலடி. நாஞ்சிலாரின் நெஞ்சத்தைத் திறந்து பார்த்தால் அங்குக் கலைஞரே காணப்படுவார் என்பது திண்ணம் என்பதை அவருடைய பாடலடிகள் நிறுவுகின்றன.

கவிதைகளின் வார்ப்படமே! கட்டுரையின் சொல்வளமே!
புவிமகிழும் விமர்சனத்தின் புத்துயிரே! புதுப்புனலே!
தவித்திடுவோர் வெப்பத்தைத் தென்றலாய் மாற்றிவிடும்
தவத்திருவே! தமிழரசே! கலைஞர் பெருந்தகையே!

என உள்ளத்தின் ஆழத்தே ஊற்றெடுக்கும் உணர்ச்சி அடிகளை அடுக்கிச் செல்கிறார். தம் 'மனம் நிறைந்த' தலைவரைத் தம் 'மனோகர' மொழிகளால் வாழ்த்தியுள்ள கவிதை இது.

வாழ்க கவிஞர்

இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாஞ்சில் நாட்டிற்கு மென்மையும் அழகும் இணைந்த கவிதை இயற்றிய கவிமணி தேசிக விநாயகனார் புகழ் சேர்த்தார்; நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகிய இப்போது உணர்ச்சியும் எழுச்சியுமிக்க கவிதை களைப் படைத்து மனோகரனார் புகழ் வளர்த்து வருகிறார்.

இன்றைய அரசியல் போக்கினைச் சித்திரிக்கின்ற நறுக்குத் தெறித்தாற் போன்று, கவிதைகள் இந்நூலுள் மிகுதியாக உள்ளன. இவை காலத்தை ஒட்டியவை. சிந்தனைத் தெளிவும், தேர்ந்த சொல்லாற்றலும் உயர்ந்த கவித்தன்மையும் கொண்ட 'நாஞ்சிலார்' அவர்கள் காலத்தை வென்று நிற்கும் கவிதைகளையும் நிறையப் புனைதல் வேண்டும். என்றுமுள தென்தமிழில் என்றுமுள கருத்துகளை என்றுமுள எழில்ததும்ப எழுதி அவர் ஓங்கு புகழுடன் திகழ வேண்டும். இருபத்தொன்றாம் நூற்றாண்டின்[1] சிறந்த கவிஞருள் 'நாஞ்சில் மனோகரன்' ஒருவர் என நாடு புகழத்தக்க வகையில் இவர் அரிய பல கவிதை நூல்களை இயற்றித் தரவேண்டுமென்னும் விழைவோடு உளமாரப் பாராட்டிப் போற்றுகிறேன்.

வாழ்க கவிஞர் நாஞ்சிலார்! வளர்க கவிதைத் தொண்டு.

திரு. கயல் தினகரன் ஒரு கொள்கைக் குன்று. எழுத்துலகில் நீண்ட காலப் பட்டறிவு கொண்டவர். ஒரு நூலை எத்தகு சிறப்புடன் கொண்டு வரமுடியுமோ அத்தகு சிறப்புடன் இந்நூலை வெளிக்கொணர்ந்துள்ளார். அவருக்கும் நூலை வெளியிட்டுள்ள திருமாறன் நிலையத்தார்க்கும் என் மனம் நிறைந்த பாராட்டுகள்!

நூல் ஆக்கம்	கவிஞர் நாஞ்சில் மனோகரன்
வகைமை	கவிதை
வெளியீடு	திருமாறன் நிலையம், சென்னை.(1993)

1. இவர் இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் வாழ்ந் திருப்பார் என்ற விழைவோடு இஃது எழுதப்பட்டது. ஆனால் இவர் இயற்கையெய்தினார்.

16

அழகோவியம்

பாவேந்தர் பாரதிதாசன் இயற்கையில் தோய்ந்து, 'அழகின் சிரிப்பு' எனும் அரியதொரு பாடல் தொகுப்பைத் தந்தார்; கவிஞர் வாணிதாசன், 'எழில் விருத்தம்' பாடினார்; கவிஞர் குலோத்துங்கன், 'அழகோவியம்' படைத்திருக்கிறார்.

'அழகோவியம்' எனும் இந்நூல் அரிய சொல்லோவியமாய், உயரிய கருத்தோவியமாய், நெஞ்சையள்ளும் உயிரோவிய மாய் அமைந்திருக்கிறது. 'உள்ளத்தே அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே' எனக் குமரகுருபரர் பாடியிருப்பது இந்நூலுக்கு முற்றும் பொருந்தும்.

இயற்கை எல்லோருக்கும் ஒரே மாதிரியாய்க் காட்சி யளிக்கிறது; ஆயினும், காண்பவர் கருத்து வளத்திற்கேற்பப் புதிய புதிய செய்திகள் உருவெடுக்கின்றன. கவிஞர் குலோத்துங்கன் இயற்கையைக் கண்டு கண்டு, உணர்ச்சி கொண்டு கொண்டு, அழகை மொண்டு மொண்டு தந்திருக்கிறார்.

மலை முகடாம் நகிலை, முகில் ஆடையால் மூடி மறைக்கும், 'குன்று' அழகு;

அணிமணி கோடி தந்தும் ஆடையை விலக்காப் பெண்கள் மணியுடை களைந்து தம் மலர்மேனி அணைக்கும், *'ஆற்றின்' அழகு;*

பவளம், முத்து எனும் உயர்வான மக்களைப் பெற்றுப் பெருமையுடன் பூரிக்கும், 'கடல்' அழகு;

தீமையை அகற்றத் தோன்றிடும் அறிஞர் போல,

இருளை விரட்டத் தோன்றி ஒளிபரப்பும், 'கதிர்' அழகு;

கண்ணின் கருமணியில் தோன்றும் வெண்படலம் போலக் கரிய விண்ணில் காட்சி தரும், வெள்ளை 'நிலவு' அழகு;

நாவேந்தித் தமிழைப் பாடிக் குளிர்நடை நடந்திடும், 'தென்றல்' அழகு;

மலர் தூவிய மகரந்தத்தால் பொன்னிறமாய்க் காட்சி யளிக்கும் எருமை தூங்கும், 'மருத'நில அழகு;

சக்கையாய்ப் போன வாழ்வைச் சந்தனக் காடாய் மாற்றும், 'குழந்தை' அழகு;

நெய்யிடும் விளக்குபோல நெடுங்காமம் தன்னையூற்றி மெய்யினை வருத்தும், 'பெண்கள்' அழகு;

சொன்னதைச் சொல்லும் கிள்ளையாய், சொக்குப் பச்சைப் பிள்ளையாய்ப் பொலியும், 'கிளி' அழகு;

அல்லலை மாய்க்கும் அழகிய நடமிடும், 'மயில்' அழகு;

தங்கிடும் சோலையைத் தமிழிசையால் மணக்கச் செய்யும், 'குயில்' அழகு;

காதலுக்கு என்றுமே தூதாகும், 'அன்னத்தின்' அழகு;

தென்னைமரக் கீற்றில் ஆடி நெஞ்சை மயக்கும் தேன் வண்ணச், 'சிட்டு' அழகு;

எண்ணிலா அழகுப் பூவாய் எப்போதும் நிலைத்து வாழும், 'தாமரை' அழகு;

கிழமான போதும் நல்ல கிளுகிளுப்போடு வாழும் அழகான விழுது கொண்ட, 'ஆலமர' அழகு;

ஊருணியாய் ஊரார்க்கு நன்மைதரும், 'நீர்க்குள' அழகு;

பூத்தோறும் வந்தமர்ந்து தேனுண்டு இசைபாடும் அஞ்சிறைத், 'தும்பி' அழகு;

நிலாப் பெண்ணைக் காதலித்துக் கண்ணடிக்கும், 'விண்மீன்' அழகு;

தோற்றத்தில் சிறிதே ஆனாலும் தொல்லுலகம் மெச்சும் ஆண்மைப், 'புலி' அழகு;

என 'அழகின் முடிச்சு' ஆக இந்நூல் திகழ்கிறது.

குலோத்துங்கனின் ஊனில் உயிரில் பாவேந்தர் பாரதிதாசன் ஒன்றியிருக்கிறார். அவருடைய கருத்துகளும் தொடர்களும் இவருடைய பாடல்களில் பொருத்தமுறப் பதிந்து அழகு சேர்க் கின்றன. 'குன்றம்' எனும் தலைப்பில், பாவேந்தர் பாரதிதாசன்,

> தங்கத்தை உருக்கி விட்ட
> வானோடை தன்னி லேஓர்
> செங்கதிர் மாணிக் கத்துச்
> செழும்பழம் முழுகும் மாலை

எனப் பாடியிருப்பதையொட்டி, குலோத்துங்கன்,

செங்கதிர்ச் செல்வன் மேற்கில்
சென்றமர் மாலைப் போழ்து,
தங்கத்தை உருக்கி விட்ட
தளதளத்த எழிற்பி ழம்பாய்,
அங்கந்தக் குன்று தோன்றும்!

எனக் குன்றத்தை அழகோவியமாக்கிக் காட்டுகிறார்.

பாவேந்தர் நிலவினை,

காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ

என்பார். கவிஞர் குலோத்துங்கன், 'குளிரடைந்த ஒளிப் பிழம்பைப்' பாலோடு ஒப்பிட்டுச் சுவையேற்றுகிறார்.

பொழுதெலாம் கதிரு திர்த்த
பொல்லாத வெம்மை தன்னை,
விழுங்கி,நீ கடலில் மூழ்கி,
வியனுலகில் குளிர்ந்து வீசல்,
அழுதிடும் குழவிக் காக
அரும்பாலைக் காய்ச்சிப், பின்பு
முழுவதும் ஆற வைத்தே
ஊட்டிடும் தாயை ஒக்கும்!

கதிரொளி, சுடுகின்ற பால்; அதனை முற்றிலும் குளிர வைத்தபால், நிலவொளி.

விண்மீன் நிறைந்த வானத்தைப் பார்க்கும் பாவேந்தர்,

மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம்;இ தைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண்(டு) அந்திக் குப்பின்,
விண்மீனாய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!

எனப் பாடுகிறார், பாரதிதாசனார். கவிஞர் குலோத்துங்கனும் இவ்வாறே,

மண்ணகத்தே உழைப்போர், நித்தம்
மனங்குமுறிக் கொதித்த தாலே,
விண்ணகத்தே கொப்பு ளங்கள்
விரிவாகப் படர்ந்த தாமோ?

எனப் பாடுகின்றார்.

குழந்தையைக் காணும் பாரதியார்,

கன்னத்தில் முத்தமிட்டால் – உள்ளந்தான்
கள்வெறி கொள்ளு தடீ!

என்பார். நம் கவிஞரோ,

பித்தாக்கிப் போடும், உன்றன்
பிஞ்சு மலர்மேனி தொட்டு,
முத்தங்கள் தந்தேன் நூறு

என்கிறார்.

நெற்பயிர் புடை கட்டியது பச்சைப் பாம்பு கருவுற்றதுபோல இருந்தது; புடையிலிருந்து வெளிப்பட்ட கதிர் நற்குணமில்லாதவர் கையில் பணமிருந்தால் அவர்கள் தலை நிமிர்ந்து நிற்பது போலத் தலைதூக்கி நின்றது. நெல்மணிகள் விளைந்து முற்றியதும் கதிர் வளைந்து நின்றது, கல்வியறிவுள்ளவர் தலை பணிந்து இருப்பது போன்று இருந்தது என்பார் சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர்.

சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந்(து), ஈன்று, மேல்அலார்
செல்வமே போல்தலை நிறுவி, தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே!

என்பது சீவகசிந்தாமணிப் பாடல். நெற் கதிர் வளைந்து தலை சாய்த்தது கல்விசேர் மாந்தரின் பணிவொத்திருந்ததெனத் திருத்தக்க தேவர் கூறுகிறார். குலோத்துங்கனோ நெற் கதிர் வளைந்திருந்தது நாணித் தலைகுனிந்து நடக்கும் பெண்போல இருந்தது என்கிறார்.

நாணியே தலைகு னிந்து,
நடந்திடும் பெண்கள் போல,
ஆணிப்பொன் எழிலைக் கூட்டும்,
அருமணிக் கதிரின் நெல்லும்,
கோணியே முகங்க விழ்ந்து,
கொள்ளையாய் விளைந்தி ருக்கும்!

குலோத்துங்கன் அழகியலை மட்டும் பாடுபவராக இல்லை. சமுதாயச் சிந்தனைகளும் பாடல்களில் இழையோடுகின்றன. பெண்களின் அழகைப் பாடுவதோடு அவர் நின்றுவிடவில்லை. ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக இருக்க வேண்டும் என்கிறார்.

இன்னின்ன அழகாய் மட்டும்
இருப்பதைப் பெண்கள் நீக்கி,
என்னென்ன தொழிலை ஆண்கள்
எங்ஙனும் ஆற்று வாரோ,

அன்னன்ன எல்லாம் செய்தே,
　　அகிலத்தில் உயர்தல் வேண்டும்;
பொன்னன்ன பெண்ணின் ஏற்றம்
　　பொழிந்திடும் புவியில் இன்பம்!

பெண்களின் முன்னேற்றமே நாட்டு முன்னேற்றம் என்பதை வலியுறுத்திச் சொல்கிறார்.

கவிஞர் வரையும் ஒவ்வோர் ஓவியமும் சிறு குறைக்கும் இடமின்றி முழுமை பெற்றுச் சிறக்கிறது. சிட்டுக் குருவியைப் பாடுகிறார்; குருவி நம்முன் தத்தி ஓடுவது போன்ற தோற்றத்தைச் சொற்களிலே உண்டாக்கி விடுகிறார்.

வண்டுகிள்ளிப் போட்ட தூய
　　வெண்தா மரையோ மேனி?
செண்டுமல்லி மலரைக் கிள்ளிச்
　　செய்ததுவோ சிவந்த கால்கள்?
குண்டுமல்லி அரும்பெ டுத்துக்
　　குவித்ததுவோ அழகு மூக்கு?
குண்டுமணி தானோ கண்கள்?
　　குளிர்தமிழோ பேச்சு? வாழி!

'என்ன செய்தாலும் அழிக்க முடியாத பெருஞ்சொத்து இயற்கை. இயற்கையின் மேற்பரப்பை மட்டுமே நாம் காண்கிறோம்! அதுவோ அளந்தறிய முடியாத ஆழத்தைக் கொண்டிருக்கிறது' என்பர் அறிஞர். இந்நூலுள் கவிஞர் குலோத்துங்கனின் புலமை மேற்பரப்பை மட்டுமே காண்கிறோம்! அவருள்ளே அடங்கி யிருக்கும் அளப்பரிய கவிதையாற்றல் தொடர்ந்து வெளிவந்த வண்ணம் இருக்க வேண்டும்.

சொல் நயமும், பொருள் நயமும், ஒலி நயமும் ஒருசேர எழுதும் ஆற்றல் பெற்றுள்ள குலோத்துங்கனின் கவிதைத் தொண்டுக்கு உளம் நிறைந்த வாழ்த்துகள்.

நூல் ஆக்கம்	புலவர் தி. குலோத்துங்கன்
வகைமை	கவிதை
வெளியீடு	பிரசாந்த் நூலக வெளியீடு, சென்னை. (1996)

17

சிவனடியான் கவியரங்கக் கவிதைகள்

கவியரங்கம்

பண்டை நாட்களில் கவிஞர்கள் தாம் இயற்றிய நூல்களை ஒரு பொது இடத்தில் அறிஞர் பலர் முன்னிலையில் படித்து, அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றமை கவிதை அரங்கேற்றம் எனப்பட்டது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேறிய நூல்கள் பெருமைக்குரியனவாய்க் கருதப்பட்டன. ஒரு நூல் எப்போது, எங்கே அரங்கேறியது எனும் செய்தி அந்நூலிலேயே குறிக்கப் படுவதுண்டு.

> எண்ணிய சகாத்தம் எண்ணூற்
> றேழின்மேற், சடையன் வாழ்வு
> நண்ணிய வெண்ணெய் நல்லூர்
> தன்னிலே, கம்ப நாடன்
> பண்ணிய இராம காதை,
> பங்குனி அத்த நாளிற்,
> கண்ணிய அரங்கர் முன்னே,
> கவியரங் கேற்றி னானே

என்னும் பாடல்வாயிலாய்க் கம்பர் தம்முடைய இராமாயணத்தைப் பங்குனி அத்த நாளில், திருவரங்கத்தில் அரங்கேற்றினார் என அறிகிறோம். அன்று அறிஞர்கள் முன்னிலையில் அரங்கேறியே நூல்கள் அறிமுகம் பெற்றன. இன்று அவ்வாறான வழக்கம் இல்லாது போயிற்று. ஆயினும் கவிஞர்கள், தாம் இயற்றியுள்ள கவிதைகளை அவையில் படிக்கின்ற கவியரங்க நிகழ்ச்சிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. ஆண்டுதோறும் காரைக்குடியில் நடைபெற்றுவரும் கம்பர் விழாவில்தான் கவியரங்கமும் பட்டிமன்றமும் சிறப்பு நிகழ்ச்சிகளாய் முதன்முதலில் இடம் பெறலாயின. இவ்விருவகை நிகழ்ச்சிகளும் காரைக்குடி கம்பர் விழா வாயிலாகவே நாட்டுக்கு அறிமுகமாயின எனக் கூறுவது மிகையாகாது. இதைப் பின்பற்றித் தமிழகத்தில் பல்வேறு இலக்கிய அமைப்புகள் கவியரங்க, பட்டிமன்ற

நிகழ்ச்சிகளை நடத்திடலாயின. இன்றோ கவியரங்கம், பட்டிமன்ற மின்றி அரசியற் கூட்டங்களோ, இலக்கியக் கூட்டங்களோ மற்றும் எவ்வகை நிகழ்ச்சிகளோ இல்லை என்னுமளவிற்கு அவை சிறப்பிடம் பெற்றுள்ளன.

கவிஞர்களின் கவியரங்கக் கவிதைத் தொகுப்புகள், நூல் வடிவில் பல வெளிவந்துள்ளன. கவிஞர் தொ.மு.சி. இரகுநாதனின் கவியரங்கப் பாடல்கள், 'கவியரங்கக் கவிதைகள்' என்றும்; கவிஞர் வாணிதாசனுடையவை, 'பாட்டரங்கப்பாடல்கள்' என்றும்; கவிஞர் மீ.இராசேந்திரனுடையவை, 'மூன்றும் ஆறும்' என்றும்; கவிஞர் ஈரோடு தமிழன்பனுடையவை, 'தமிழன்பன் கவிதைகள்' என்றும்; கவிஞர் அமிர்தலிங்கம் அவர்களுடையவை, 'கம்பன் கவியரங்கில் மலரமுதன்' என்றும்; கவிஞர் அரு. நாகப்பனுடையவை, 'கவியரங்கில் கம்பன்' என்றும்; கவிஞர் ஆலந்தூர் மோகனரங்க னுடையவை, 'கவியரங்கில் மோகனரங்கன்' என்றும்; கவிஞர் கண்மதியனுடையவை, 'கண்மதியனின் கவியரங்கக் கவிதைகள்' என்றும் இன்னும் இவைபோன்ற வேறு சிலவும் இதுவரை வெளிவந்துள்ளன. இன்னும் பலர் கவியரங்கக் கவிதைகளைத் தனியே வெளியிடாமல் தங்கள் நூலின் ஒரு பகுதியாகவும் வெளியிட்டுள்ளனர் கவியரங்கக் கவிதை நூல் வரிசையில் கவிஞர் பெரி. சிவனடியான் பாடியுள்ளவை இந்நூலாக வெளிவருகின்றது. அவர் பாடிய நாற்பது கவியரங்கக் கவிதைகள் இந்நூலில் உள்ளன.

பெரி. சிவனடியான்

நான் முப்பதாண்டுகட்கு மேலாகக் கவிஞர் சிவனடியானுடன் பழகி அவருடைய கவிதையின்பத்தைத் துய்த்து வருபவன். அவர் கலந்துகொண்ட கவியரங்குகட்குத் தலைமை தாங்கிய பெருங்கவிஞர்கள் அவரைப்பற்றிக் கூறியுள்ளவற்றைத் தொகுத்துப் பார்த்தால் அவருடைய பெரும் புலமையையும், கவிதையாற்றலையும் அறிந்து மகிழலாம்.

அமுதச் சுவையோ அருங்கனியோ
அன்பர் இவர்தம் தமிழ்ப்பாக்கள் (பக். 25)

என்கிறார் கவிஞர் மா. வரதராசன்!

சிவனடியான் தமிழென்றால் சீரி ருக்கும்
சித்திரித்த இலக்கியத்தின் சாறி ருக்கும் (பக். 34)

என்கிறார் கவியரசு கண்ணதாசன்!

(ஈரச்) சந்தனக் கவிஞர் சொந்தச்
சரக்குள்ள பாட்டுக் காரர் (பக். 283)

என்கிறார் கவிக் கோ. அப்துல் ரகுமான்!

பக்குவம் ஊட்டித் தேனைப்
  பழந்தமிழ்ச் சொல்லுக் குள்ளே
சொக்கவே வைப்பேன் என்னும்
  தூய்தமிழ்க்(கு) அன்பன்... (பக். 177)

என்கிறார் கவிஞர் மு. அண்ணாமலை.

கவிஞர் சிவனடியார் கண்ணாம் 'கலை'யின்
கவியரங்கிற் கற்கண்டு தந்து – கவிஞர்
இவரென்றே எல்லோரும் வாழ்த்துதலை ஏற்றார்
அவர்,வாழ்க! கீர்த்தி அடைந்து! (பக். 184)

என மனங்குளிர வாழ்த்துகிறார் பாவேந்தர் பாரதிதாசன்!

'கவிஞர் சிவனடியான் கவிதையைப் படிக்கக் கேட்டதும் பாரதியின் வாரிசு மறையவில்லை எனப் பரவசம் அடைந்தேன்' எனப் பாராட்டுகிறார் கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு (பக். 20).

'நீரோட்டம் போன்ற நல்ல உயிரோட்டமுள்ள கவிதை; பாடல்களில் அவர்தந்த பல்வேறு சந்தங்கள் பாரதிதாசனின் பாடல்களை நினைவுபடுத்தின' எனப் போற்றுகிறார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்! (பக். 40, 125).

'முறையோடும் அழகோடும் கவிதை புனையும் ஆற்றல் பெற்றவர், அமுதுக்குச் சுவையூட்டும் அடியான் பாடல்' என்கிறார் கவிஞர் முடியரசன்! (பக். 98).

'கம்பன் விருத்தம் பாடுவதில் வல்லவன். அம்மரபு இக்காலத்திலும் அழியவில்லை என்பதற்கு இவர் (சிவனடியான்) இங்கே பாடிய பாடல்கள் சான்று பகர்கின்றன' என்கிறார் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்! (பக். 118).

'சிவனடியான் அழகாக ஆழமான கருத்துகளுடன் கவி புனைந்திருந்தார். நகைச்சுவையோடு எவ்வளவு கம்பீரமாகப் படித்துக் காட்டினார். கவியுலகம் மறையவில்லை, வளர்கிறது என்பதையல்லவா இது காட்டுகிறது' என்கிறார், ச.து.சு யோகியார். (பக். 105).

'காலத்திற்கு ஏற்ற நடையில் பாடியிருக்கிறார்' எனக் களிப்புடன் கூறுகிறார் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் (பக். 170).

'இவர் கவிதைகளின் தனிச் சிறப்பு இனிமையும் எளிமையுமாகும்' என ஏற்றம் தருகிறார் திருக்குறளார் வீ. முனுசாமி (பக். 271).

முப்பகுதி

கவியரங்கக் கவிதை ஒவ்வொன்றிலும் பொதுவாக மூன்று பகுதிகள் இருக்கும். முதற் பகுதி தமிழ் வாழ்த்து அல்லது

இறைவாழ்த்தாக இருக்கும். அடுத்து, கவியரங்கத் தலைவர், கவியரங்க அமைப்பாளர், உடன் பாடுவோர் பாராட்டப் பெறுவர். மூன்றாம் பகுதி எடுத்துக்கொண்ட பொருள் பற்றியதாக இருக்கும். இந்நூலுள் உள்ள கவிதைகளில் முதற்பகுதி தென்படவில்லை; நூலின் பக்கம் கூடுதலாகும் என்பதால் விடுபட்டிருக்கலாம் எனக் கருதுகிறேன்.

தலைவர் வாழ்த்து

கவியரங்கத் தலைவரைப் பாராட்டுவது பொருத்தமாகவும், சிறப்பாகவும், அளவோடும் அமைந்துள்ளது. பாவேந்தர் தலைமையிலே கவிஞர், திங்கள் பற்றிப் பாடுகிறார். அப்போது,

தென்னகத்துக் கவிவானத் திங்க ளாக
சீர்திருத்தப் புத்துலகத் திங்க ளாக
பொன்னான புலவர்குழுத் திங்க ளாக
புரட்சிமனப் பாசறையின் திங்க ளாக
மன்னரெனக் கவியரங்கத் திங்க ளாக
மலர்ந்திருக்கும் புதுச்சேரி இரெத்தி னத்தை
என்சொல்லி வணங்கிடுவேன் இங்கே! என்றன்
எழுத்திறைவா! கவித்தலைவா! வணக்கம்! வாழி! (பக். 85)

எனப் பாவேந்தரை வணங்கி வாழ்த்துகிறார். பாட எடுத்துக் கொண்ட பொருள் திங்கள்; ஆதலின் கவியரங்கத் தலைவரைத் திங்களாகப் பாராட்டுவது கேட்போரின் உள்ளத்தை ஈர்க்கும் தன்மையதாகிறது. பாவேந்தரின் இயற்பெயர் கனக சுப்புரத்தினம்! எனவே 'புதுச்சேரி இரெத்தினத்தை' வணங்குகிறேன் என்பது பொருள் பொதிந்ததாயும் கேட்போரின் கரவொலியைப் பெறுவதாயும் அமைந்துவிடுகிறது.

இந்நூலுள் உள்ள நாற்பது அரங்குகளுள் ஒன்பது அரங்குகளில் கவியரசு கண்ணதாசன் தலைமையில் கவிஞர் பாடியுள்ளார். கண்ணதாசனைச் சிவனடியார்,

தென்றலினைத் தூதனுப்பித் தென்ன கத்தின்
சிந்தையெலாம் கொள்ளை கொண்ட கள்வன் (பக். 113)

எனக் கூறுகிறார். 'தென்றல்' கண்ணதாசன் நடத்திய இலக்கிய ஏடு. 'தென்றலினைத் தூதனுப்பிச் சிந்தை கவர்ந்தார்' எனச் சொல்லும்போது கேட்போர் தென்றலில் தோய்வதினும் சிந்தை குளிர்வர் என்பது திண்ணம்! கண்ணதாசனைக் கவிஞர் மேலும் பாராட்டுகிறார்

தென்றலது சிலவேளை சுடவும் கூடும்;
  தீங்கனியும் சிலவேளை கசக்கக் கூடும்;
அன்றலர்ந்த தாமரையும் வாடக் கூடும்;
  அழகியவள் முகப்பொலிவும் அகலக் கூடும்;
அன்பேந்தி நின்றருகே கொஞ்சிக் கொஞ்சி,
  அவள்தந்த முத்தங்கள் சலிக்கக் கூடும்;
மன்றேறிக் கவிகண்ண தாசன் தந்த
  மதுக்கவிதை ஒருநாளும் சலிப்பதில்லை! (பக். 66)

கண்ணதாசன் குடிப்பழக்கம் உள்ளவர். அவர் தந்த 'மதுக் கவிதை' என்று சொல்லும்போது அவையினர் கையொலி எழுப்பி மகிழ்ந்திடுவது இயல்பேயாம். தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் இளங்கோ பற்றிப் பாடும்போது அடிகளாரை,

இல்லையென இளங்கோவை நினைக்க வேண்டாம்
இருக்கின்றேன் நானென்றே இங்கே வந்தார் (பக். 41)

எனச் சொல்லி வணங்குகிறார். அடிகளாரையே இளங்கோவாக்கி வணங்கும் பாங்கு அவையினரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி யிருக்கும் என்பது திண்ணம்.

கவியரங்கப் பாங்கு

ஒரு நூலைப் படிக்கும்போது மனத்தில் நிறுத்தி ஆர அமரச் சிந்தித்துப் பொருள் கண்டு சுவைக்க இயலும். கவியரங்கிலோ நிதானமாகச் சிந்திக்க இடமில்லை. கவிதையைப் படித்துக் கொண்டிருக்கும்போதே, காதில் கேட்ட அளவிலேயே பொருள் புரிந்து சுவைக்கத்தக்கதாய்க் கவிதைகள் அமைந்தால்தான் கேட்போரைத் தம்பால் ஈர்க்க முடியும். ஆதலின் கவியரங்கப் பாடலை இயற்றுவது ஒரு தனிக்கலை என்றே சொல்லலாம். கேட்டதும் புரியத் தக்க எளிமையுடனும், அதேவேளை சிறந்த பொருள் வளம் கொண்டதாயும் இருந்தால்தான் கவியரங்கக் கவிதைகள் சிறப்புப் பெற முடியும். இந்த வகையில் கவிஞர் சிவனடியான் முழு வெற்றி பெற்றுள்ளார் என்று துணிந்து கூறலாம். கவியரங்கப் பாடலுக்கு இன்றியமையாத் தேவையான சொல் விளையாட்டு, ஓசை நயம், நகைச்சுவை முதலிய அனைத்தும் கவிஞர் சிவனடியானின் பாடல்களில் நிறைந்துள்ளன.

சிக்கல் என்னும் ஊரிலுள்ள முருகனைச்
சிக்கலிலே பாடிஎன் சிக்கல் தவிர்த்திட்டேன் (பக். 21)

எனப் பாடும்போது 'சிக்கல்' என்னும் சொல்லை இரு பொருளில் ஆண்டு நலம் கூட்டுகிறார்.

திருமயிலைச் சிங்காரா! சிவனடியான் பாடுகிறேன்!
ஒருமயிலை விட்டிறங்கி ஓடிவந்தால் ஆகாதா!
இருமயிலை விட்டுவர இல்லை மனமுனக்குப்;
பொறுமையிலை என்றனுக்குப் புறப்பட்டு வாதோழா! (பக். 21)

(மயிலை ஓர் ஊர்; ஒருமயில் ஊர்தி; இருமயில் வள்ளி தெய்வயானை) கவிதையடிகளிலுள்ள 'மயிலை' கேட்போரை மயக்கத்தானே செய்யும். அன்றன்றைய செய்திகளை - நாட்டு நடப்புகளைக் கவிதைப் பொருளாக்கும்போது கேட்போரை அது பெரிதும் கவ்வும் தன்மையதாய் அமையும். கலப்பு மணம் பெருக வேண்டும் - அதன் வழிச் சாதி வேறுபாடுகள் அழிய வேண்டும் என்பது இன்றையச் சமுதாய வேட்கை! இவ்வாறான மன நிலையிலுள்ள அவையில் கந்தன் காலத்திலேயே கலப்பு மணம் தோன்றிவிட்டது எனப் பாடினால் கலகலப்பு ஏற்படுவது இயல்புதானே! குறப்பெண் வள்ளியை மணந்ததால் கந்தன் திருமணமே முதற் கலப்புத் திருமணம் என்கிறார் கவிஞர்.

கூடிமணத்தால் கந்தன் கலப்புமண மும்செய்தான்;
முடிந்த கலப்புமணம் முதலில் முருகனுக்கே! (பக். 31)

இவர் பெயரோ சிவனடியான்; இவர் ஒரு கவியரங்கில் பாட வேண்டிய பொருள் பெண்மை; அவையினரைத் தன்பால் ஈர்க்க இந்நிலையைத் தனக்கு வாய்ப்பாக்கிக் கொண்டு,

ஈண்டுவந்த சிவனடியான் இல்ல றத்தான்!
எள்ளளவும் பெண்மைதனை வெறுக்க மாட்டான்! (பக். 106)

எனப் பாடுவது சிறப்பாக உள்ளது. நூலுள் இவ்வாறான பல இடங்களைப் படிப்போர் காணலாம்.

பாடுபொருள்

கவியரங்கத் தலைவரையும் அமைப்பாளரையும் பெருமளவில் பாராட்டி, பாட எடுத்துக்கொண்ட பொருளைப் பெயரளவில் பாடி முடிப்பாரும் உண்டு. கவிஞர் சிவனடியானோ பாட எடுத்துக் கொண்டுள்ள பொருளை அகலமாகவும் ஆழமாகவும் தெளிவாகவும் திட்பமாகவும் பாடும் இயல்பினர் என்பதை இந்நூலிலுள்ள கவிதைகள் நன்கு புலப்படுத்துகின்றன.

பெரியார் - புயற்காற்று என்னும் தலைப்பில் பாடுகையில் அவர் எவ்வகைப் புயற்காற்று என்பதைக் கவிஞர் எடுத்துரைப்பது நேர்த்தியாக உள்ளது.

சாதி சமயம் சதிராடும் வேளையிலே
மோதி மிதித்த முன்னேற்றப் புயற்காற்று!

மூடப் பழக்கம் முடைநாற்றம் வீசுவதை
ஓடத் துரத்தும் ஓங்காரப் புயற்காற்று! (பக். 73)

ஜீவா என அன்போடு பாராட்டப்படும் திரு.ஜீவானந்தம் அவர்கள் பாரதியாரின் பாடல்களை எடுத்தாண்டு விளக்கும் தந்தமை எல்லோராலும் பாராட்டப்பட்டது. ஆதலின் ஜீவாவைப் பாடும்போது கவிஞரவர்கள் அவரைப் பாரதியுடன் இணைத்துப் பாடி இருவரும் ஒன்று சேர்ந்து மீண்டும் வரவேண்டுமெனும் விழைவைப் புலப்படுத்துகிறார்.

ஜீவா இருக்கும்வரை ஜீவகவி சாகவில்லை;
ஜீவா இறந்தவுடன் சிறப்புரைக்க ஆளில்லை;
ஜீவாவும் பாரதியும் ஜீவகா வியமானார்;
ஜீவாவும் பாரதியும் சேர்ந்துவரக் காண்போமா! (பக். 69)

சிவனடியானின் பாடல்கள் எளிமையும் பொருட்செறிவும் கொண்டவை.

கற்பென்ற பெட்டகத்தைக் காத்தல் வாழ்வில்
கன்னியர்க்கும் ஆடவர்க்கும் பொதுவே யாகும்.
சொற்பொழிவால் காக்கின்ற பொருளா கற்பு?
தூயமனத் திண்மையினால் காக்க வேண்டும்! (பக். 116)

பெண்ணின்றி மண்ணைப் பிரமன் படைத்திருந்தால்
கண்ணில்லா வெற்றுடல்போற் காட்சி யளித்திருக்கும்!
ஆணின்றிப் பெண்ணை அமைத்திருப்பின் அச்சம்,மடம்
நாணின்றிப் பெண்மை நல்மெல்லாம் செத்திருக்கும்!
ஆணோடு பெண்ணை அடுத்தடுத்துப் படைத்தானே!
காணாத இன்பத்தைக் கண்ணுக்குள் வைத்தானே! (பக். 172)

1961ஆம் ஆண்டிலேயே இலங்கைப் பிரச்சினையைப் பாடித் தமிழர் உணர்வைக் கவிஞர் தட்டியெழுப்பியுள்ளதைப் பின்வரும் பாடலால் அறிய முடிகிறது.

இலங்கையிலே தமிழ்க்குடிக்கு வைக்கும் கொள்ளி
இங்குள்ளார் நெஞ்சத்தை வாட்டா விட்டால்,
உலகெங்கும் உளதமிழர், இந்நாட் டாரை
உயிரற்ற பதுமைகளாய், உதவாக் கேடாய்,
நிலச்சுமையாய், நெஞ்சீரம் அற்ற தாயாய்,
நினைப்பார்கள் வெறுப்பார்கள் பெற்ற நாட்டை! (பக். 199)

ஒரு பாட்டின் இடையிலே கவிஞர், ஒரு தாலாட்டுப் பாடியுள்ளார். நினைக்க நினைக்க நெஞ்சினிக்கும் பாடலது!

நிலவின் ஒளியெடுத்து நின்முகத்தைத் தொட்டானோ!
பலவின் சுளையெடுத்துப் பதித்தானோ கன்னம்அதில்!
கிள்ளை அலகெடுத்துக் கீறியிதழ் தந்தானோ!

வெள்ளை மலரெடுத்து விழியமைத்துப் பார்த்தானோ!
சம்பங்கிப் பூவெடுத்துச் சமைத்தானோ நின்கரத்தைச்
செம்பஞ்சு இதழாலே செய்தானோ நின்பாதம்!
மூக்குக் கிளிமூக்கோ, முனைமுறியா முந்திரியோ!
நாக்கை நறுந்தமிழில் நனைத்தெடுத்துச் சேர்த்தானோ! (பக். 269)

குழந்தையின் ஒளி வீசும் முகம், சுவைக் கன்னம், செவ்விதழ், வெண்மை விழி, மென்மைக் கரம், செவ்விய அடிகள், கூரிய மூக்கு, மழலைப் பேச்சு ஆகியவற்றை இணைத்து அவர் பாடியுள்ள இத்தாலாட்டு தனிச் சிறப்புடையது.

நிலவில் உள்ள கறுப்பை அதன்களங்கம் என்பதுண்டு. ஆனால் கவிஞரோ அவ்வாறு சொல்பவர் அறியாதார் என்கிறார். நிலவு என்னும் குமரிப் பெண்ணின் முகப்பருவே அக்கறுப்பு எனச் சொல்லும் கவிஞரின் கற்பனையை எண்ணி மகிழ்கிறோம்!

களங்கம் உனக்(கு) உண்டென்று கழறு கின்றார்,
  களங்கத்தை அவர்கண்ணில் பெற்ற தாலே!
களங்கமில்லை அதுஉனக்கு! பருவ காலக்
  கன்னிமுகப் பருவாகும்.... (பக். 58)

கம்பன் தமக்கு உதவிய சடையப்ப வள்ளலை இராமாயணப் பாடல்களில் புகுத்தித் தன் நன்றிமறவாமையைப் புலப்படுத்தியுள்ளார் எனப் பெருமைபடப் பேசுவோம். நண்பர் சிவனடியார் 'இன்சொல்' என்னும் தலைப்பில் கவிதை பாடும்போது, தமக்கு மருத்துவம் செய்துதவிய மருத்துவரின் இன்சொல்லைத் தக்கவாறு தம் கவிதையில் இணைத்துத் தம் நன்றிமறவாத் தன்மையைப் புலப்படுத்துகிறார்!

என்னுயிரை மீட்க எமனோடு போராடி,
அன்னைபோற் காத்த அருள்மனத்தார் வீ.கே.ஆர்.
கொடுக்கப் பணமெடுத்தேன், கூறினார்: 'நீதமிழை
எடுத்து மொழிவதற்கே இவ்வுயிரை நான்மீட்டேன்;
எடுத்துப்போ இப்பணத்தை' என்றவுடன் கண்ணீரை
வடித்தவர்தம் தாளில் வழங்கினேன் காணிக்கை;
மருத்துவர்க்குத் தேவை மாறாத இன்சொல்லே;
கருத்திதனைக் கண்டு கையெடுத்துக் கும்பிட்டேன்!
மக்கள் இனத்தார் மாறாமல் இன்சொல்லை
எக்கால மும்உரைத்தால் ஏழுலகும் பின்தொடரும். (பக். 256)

இவ்வாறு பாடியதைக் கவியரங்கத் தலைவர் தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் அவர்களும், "இன்சொல் பற்றிச் சிவனடியான் பாடிய கவிதையில் டாக்டர் வி.கே. இராமச்சந்திரன் (புதுக்கோட்டை) அவர்களை நினைவு கூர்ந்தார்; மிக்க

மகிழ்ச்சியடைந்தேன். தம்மிடம் அன்பு பாராட்டியவர்களை - தம்மை ஆதரித்தவர்களைக் கவிஞர்களும் புலவர்களும் நன்றியுணர்வோடு நினைப்பதும் பாடுவதும் அவர்களின் கடமையாகும். அதுவே நம் மரபுமாகும். அதற்காய்ச் சிவனடியானை மிகவும் பாராட்டுகிறேன்" (பக். 252) என்று கூறி மகிழ்கிறார்.

சத்தியம் காத்துச் சந்ததி உயர்த்தும்
முத்திரை எழுத்தே முடிவினில் வெல்லும்! (பக். 277)

என்பது கவிஞர் வாக்கு. இவருடைய எழுத்து சத்தியத்தைக் காப்பது; சந்ததியை உயர்த்துவது என்பதைநாம் இவர்தம் கவிதையிலிருந்தே அறிந்து கொள்ள முடிகிறது.

பாடிய பாரதி இன்றில்லை – அவன்
பட்டாளம் உண்டின்று நாட்டிலே (பக். 132)

என்று பாடும் இக்கவிஞரே பாரதியின் பட்டாளத்தில் ஒருவர்தான்.

கப்பல்வரக் கலங்கரையின் விளக்குத் தேவை
கவிஞர்குலம் தழைத்திடஉம் கவிதை தேவை (பக். 202)

என்று இவர் பாவேந்தர் பாரதிதாசனைப் பாடுகிறார். இக்கூற்று இவருக்கும் பொருந்தும். ஆம்! இளங்கவிஞர்கள் பின்பற்றிடத்தக்க வகையில் இவரிடம் கவிதை மரபு மணம் வீசித் திகழ்கிறது. கவியரங்கக் கவிதைகள் பொதுவாக இரண்டு தன்மையதாய் இருக்கும், ஒன்று : சில கவிதைகள் கவியரங்கில் பாடப்படும்போது ஏற்ற இறக்கம், இசை, நகைச்சுவை, சூழ்நிலை, கேட்போர் மனநிலை முதலிய கூறுகளால் சிறப்பாய் அமையும். மற்றொன்று : சில கவிதைகள் என்றென்றும் படித்துச் சுவைப்பதற்கேற்ற வகையில் நிலையான இன்பம் கொண்டதாய் அமையும். கவிஞர் சிவனடியான் அவர்களின் கவிதைகளோ இவ்விரண்டு நிலையிலும் சிறந்து ஒரு தனிப் பெருமையுடையதாய் விளங்குகின்றன. பாரதி, பாவேந்தர் வழியில் கவிமரபு காத்து வரும் இப்பெருங்கவிஞரை மனமாரப் பாராட்டி மகிழ்கிறேன். தமிழ்க் கவிதை உலகில் இந்நூல் ஓர் இளந்தென்றலாய் உலாவி இன்பம் நல்கும் என நம்புகிறேன்.

இக்கவிதை நூலைக் காரைக்குடி செல்வி பதிப்பகம் வெளியிட்டுப் பெருமைகொள்ளுகிறது. செல்வி பதிப்பகப் பதிப்பு என்றால் அது செல்வப் பதிப்பாகவே திகழும். சுத்தானந்த பாரதியாரின் 'சிலம்புச் செல்வம்', 'மணிமேகலை அமுதம்'; திருக்குறளாரின் 'வள்ளுவர் வழிப்பயணம்'; முனைவர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் 'இரட்டைக் காப்பியங்கள்' போன்ற

ஒப்பற்ற உயர்நூல்களை - ஒண்டமிழ்ப் புதையல்களை நமக்குத் தந்த செல்வி பதிப்பகம் இப்போது இக்கவிதை நூலையும் வழங்கி யிருக்கிறது. அன்னைத் தமிழுக்கு அருந் தொண்டாற்றுவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள செல்வி பதிப்பக உரிமையாளர் வீர. சிவராமன் அவர்களையும் நான் உளமாரப் பாராட்டி மகிழ்கிறேன். வெல்க தமிழ்!

நூல் ஆக்கம்	கவிஞர் சிவணடியான்
வகைமை	கவிதை
வெளியீடு	செல்வி பதிப்பகம், காரைக்குடி. (1984)

18

வண்ண நிலவின் வளர்கலை

புலவர் வேள்நம்பி இலக்கியத்தின் பல்துறையிலும் பண்பட்ட எழுத்து முத்திரையைப் பொறித்தவர் சிறந்த கட்டுரையாளர்; நாடக ஆசிரியர்; புதின ஆசிரியர்; கவிஞர். அவர் இயற்றிய கவிதைகளின் தொகுப்பு இந்நூல்! பாடல்கள் அனைத்தும் கவியரங்குகளில் படைக்கப்பட்டவை. ஒன்பான் மணியென ஒன்பது கவிதைகள் நூலுள் ஒளி வீசிச் சிறக்கின்றன.

கவியரங்கக் கவிதைகளுக்கான சிறப்புக் கூறுகள் அனைத்தும் அமைந்தவையாக வேள்நம்பியின் கவிதைகள் விளங்குகின்றன. (கவியரங்கக் கவிதைகளின் அமைப்புமுறை பற்றியுள்ள செய்திகளை இதன் முன்னதாக உள்ள சிவனடியானின் கவியரங்கக் கவிதைகளின் அணிந்துரையில் காணலாம்.)

திருச்செங்கோட்டில் கவிஞர் முடியரசன் தலைமையில் வேள்நம்பி பாடுகிறார். முடியரசன் பாவேந்தர் பரம்பரையினர்; வேள்நம்பியும் அப்பரம்பரையினரே! எனவே முடியரசனாரை,

முடியணியாப் பாவேந்தர் படையில் நின்று
முத்தமிழைப் பரப்புவதில் இன்பம் காணும்
முடியரசர் தலைமையிலே பாட வந்தேன்
முன்அவர்க்கே என்வணக்கம் நன்றி சொல்வேன்! (பக். 27)

முடியரசர், முடியணியா வேந்தர் படையிலே நின்று பணியாற்று கிறார். பாவேந்தர் வழிநிற்பவர் முடியரசன் என்பதை நயமாகப் புலப்படுத்திவிடுகிறார்.

'புனர் வாழ்வு' எனும் கவியரங்கிற்குக் கவிஞர் முருகு சுந்தரம் தலைமை தாங்குகிறார். அவரைப் பாராட்டும்போது அவருடைய படைப்புகளை இடையே நுழைத்து அழகு செய்கிறார். கவியரங்கத் தலைவர்,

இளமை முறுக்கினை எழுத்தில் பாய்ச்சுவார்;
வளமிகு பாட்டைத் தேனாய் வடிப்பவர்;
'பனித்துளி' கொண்ட 'சந்தனப் பேழை'
தனியழகு காட்டக் 'கடைத்திறப்பு'ச் செய்தவர்;

பனித்துளி, சந்தனப் பேழை, கடைத்திறப்பு என்பன முருகு சுந்தரம் எழுதிய கவிதை நூல்கள். தலைவருக்கு இவர் சொன்ன அடியை இவருக்கே கூறலாம், இவர் 'வளமிகு பாட்டைத் தேனாய் வடிப்பவர்.'

கவிஞர்கள் அவையடக்கம் பாடுவது இயல்பு. அவையடக்கம் என்பதைத் தன்னடக்கம் என்று கூறலாம். அவையடக்கப் பாடலில் தாம் அறிவிற்குறைந்தவரென்றும், எனினும் தாம் பாடுவதைப் பொறுத்தருள வேண்டுமென்றும் கூறுவது பொருளாயிருக்கும். பெரும்புலவர்கள் தங்களைப் பாடும் திறமையற்றவர்கள் என்று கூறுவது அடக்கம் காரணமாகவேயன்றி அஃது உண்மையாகாது. தாம் புலமைநலம் குறைந்தவர் எனச் சொல்லுகின்ற அவையடக்கப் பாடல்களில்தாம் அவர்களுடைய புலமை நலத்தை நாம் முற்றிலுமாகக் காணமுடியும். கவிஞர் வேள்நம்பி ஒன்றிரண்டு இடங்களில் அவையடக்கப் பாடல் பாடியிருக்கிறார்.

திருச்செங்காட்டில் கண்ணகிவிழாக் கவியரங்கம்; அழைத் திருந்த ஒரு கவிஞர் வரவில்லை. திடீரென வேள்நம்பியை அக்கவிஞர் பாடவேண்டிய தலைப்பில் பாடச் சொல்லி விட்டார்கள். 'சிலம்பில் அச்சம்' என்பது தலைப்பு. தலைப்பு அச்சம்! கவிஞரோ அஞ்சாது பாடிமுடித்தார். அங்கே அவர் உண்மையிலேயே அடக்கமுடன் கூறுகிறார்.

இடம்நிரப்ப வந்தவன்நான் என்றன் பாட்டில்
இனிமை,நயம் இவைகளைநீர் தேட வேண்டாம்!
முடிவடையும் நேரத்தில் குறையாய் விட்டு
முடிக்கமனம் பொறுக்காமல் என்னை ஏற்றித்
திடமுடனே அச்சத்தைப் பாடு என்றார்!
திணறலுடன் நானுங்கள் முன்நிற் கின்றேன்;
அடக்கமல்ல என்சொற்கள்! முற்றும் உண்மை!
அவையோரே! கவிஞர்களே! பிழைபொ றுப்பீர்! (பக். 28)

பாடல் எழுந்த சூழ்நிலையை அறியும் போது இப்பாடல் தனியழகு பெறுகிறது. இஃது அடக்கத்தால் பாடியது; இவர் பாடியுள்ள இன்னொரு பாடலையும் காண்போம்.

ஒரு கூட்டத்தில் காலையில் பாரதி பற்றிய கருத்துரை; மாலையிலே நிறைவாக ஒரு பட்டி மண்டபம்; இவற்றிற்கிடையில் பிற்பகலில் ஒரு கவியரங்கம். அரங்கிற்கு வேள்நம்பி தலைமை; அவர் பாடுகிறார் :

முன்வைத்தார் மாம்பழத்தை முற்பகலில்! நீர்சுவைத்தீர்!
பின்வைப்பார் தேன்வாழை; பெற்றுவப்பீர்! தேர்ந்திடையில்
உட்கார வைத்தார்கள் உங்கள்முன் என்னையிங்கு

முட்பலா வாக! முகஞ்சுளித்துக் கொள்ளாதீர்!
உட்சுளை யாகவே உள்ளார்கள் இங்குள்ளார்;
நட்பால் அவர்க்கிடையில் நானமர்ந்தேன்..... (பக். 91)

கருத்தரங்கு மாம்பழம்; பட்டிமன்றம் தேன் வாழை; கவியரங்கத் தலைவராகிய தன்னை முட்பலா என்கிறார். "நான் மேல்தோலாய் முள்ளோடு முன்னே இருந்தாலும், பலாச் சுளையான பாக்களைத் தருகின்ற பாவலர்கள் பின்னே இருக்கின்றார்கள். நான் முள்தோல்; என்னை விட்டுவிடுங்கள். புலவர்களுடைய சுளைப் பாடல்களைச் சுவையுங்கள்" என்கிறார். அவையடக்கமாகத் தம்மை முட்பலா என்கிறார். கருத்தரங்கினை எளிதாய்ச் சுவைக்கலாம் மாம்பழம்போல; பட்டிமன்றத்தினைக் கருத்தரங்கினும் எளிமையாய்ச் சுவைக்கலாம் - வாழைப்பழம் போல! கவியரங்கைப் பலாத்தோலை நீக்கிச் சுளை எடுப்பதுபோல, புலமைநிறை சொற்களின் பொருள் தேர்ந்து சுவைக்க வேண்டும். ஆகவே, கவியரங்கினைப் பலாப்பழம் என்கிறார். 'முட்பலா' என்று தம்மை அவர் சொல்வதன் வாயிலாக முக்கனியை உண்ணும் நிலையையும், கருத்தரங்கம், பட்டிமன்றம், கவியரங்கம் ஆகியவற்றைச் சுவைக்க வேண்டிய நிலைப்பாட்டினையும் அருமையாய் எடுத்துரைத்து விடுகிறார்.

கவியரங்கப் பாடலுக்குத் தேவையான சொல்விளையாட்டு, ஓசை நயம், நகைச்சுவை முதலிய அனைத்தும் கவிஞர் வேள் நம்பியின் பாடல்களில் அமைந்துள்ளன.

கணவன் உரிய நேரத்தில் இல்லம் திரும்பவில்லை. அதனாலே அவள் ஊடல் கொண்டிருக்கிறாள். கணவன் உரிய பொழுதில் வந்து சேராமைக்கு-காலக்கழிவுக்குக் காரணம் என்ன தெரியுமா? வேள்நம்பி கூறுகிறார்

பண்பு புகட்டும் பைந்தமிழ் அரங்கில்
நற்றமிழ்ப் புலவரின் நல்லுரை கேட்டே
நிற்றலில் நேரஞ் செல்லுதல் நினையேன்
திரும்பும் பொழுதில் திரும்ப வில்லை!

வீட்டுக்கு வரும் வழியில் இலக்கிய உரை கேட்டு நின்றதால் இல்லம் திரும்பக் காலம் கடந்ததாம்!

✡ ✡ ✡

தாம் உயர்ந்த பின்பு, தம்மை உயர்த்தியவரை நினையாமல் மறந்துவிடுவதை விளக்க வேள்நம்பி கையாண்டுள்ள உவமை அருமை.

சிறகுக்கு வலிமைதான் சேர்ந்த பின்னர்
சேய்ப்பறவை தாயகத்தை மறந்து போகும்! (பக். 52)

சுற்றிப் பறந்து இரை தேடிக் கொண்டு வந்து, வாயில் ஊட்டிப் பறவை, குஞ்சை வளர்க்கிறது. குஞ்சுக்கு இறக்கை முற்றிப் பறந்து சென்றதும் அது தாயை நினைப்பதிலையே! ஆசிரியர்களாலே அறிவு பெற்று உயர்ந்தவர்கள் ஆசிரியர்களையே மறந்துவிடுகிறார்களே, என்ன அவலம்?

ஆசிரியரைப் போற்றியுள்ள பகுதி அவருடைய நெஞ்சின் ஆழத்திலிருந்து ஊற்றெடுத்த சொற்கோவை! அடடே! ஆசிரியரை என்னென்ன வகையிலெலாம் போற்றுகின்றார்.

மடமையிருள் கிழிக்கின்ற ஒளியின் கீற்று!
மாக்களையும் மக்களாக்கும் அறிவின் ஊற்று!
கடமையிலே களிக்கின்ற படையின் ஏறு!
கழுவடையின் இழிவகற்றிப் பாயும் ஆறு!...

முன்னேற்றம் காண்பார்க்குத் தடையில் லாமல்
முன்னின்றே அவர்க்குதவத் தோன்றும் ஏணி!
முன்தோன்றும் புத்தேட்டு மலரின் சாற்றை
முழுவதையும் பிறர்க்கீட்டி மகிழும் தேனீ!

ஒளியாது பெய்தளித்து ஓயும் மஞ்சு!
உலகத்தார் துயருக்கே உருகும் நெஞ்சு!...
துளியேனும் தனக்கென்று சேர்க்கா உள்ளம்!
தொண்டென்று கருதாமல் ஓடும் வெள்ளம்!... (பக். 56, 57)

வேள்நம்பி கடமையுணர்வு மிக்க ஆசிரியர் என்பதால், ஆசிரியரைப் பற்றி எழுதும்போது சொற்கள் சிறந்த மாணாக்கர் போல் கைகட்டி அடங்கிக் கடமையாற்றியுள்ளன. வேள்நம்பி தன்னையே நினைந்து எழுதியவை இவ்வடிகள் என்றே கூறலாம்!

✡ ✡ ✡

தொழிலாளர்களைப் பாடும் போது, அவர்கள், தம்மைத் தாமே அறியாதவர்களாய் இருக்கிறார்களே என்பதை அரிய உவமைகள் வாயிலாக விளக்குகின்றார்.

விழிபறிக்கும் ஒளிமுகத்தை ஈனும் சிப்பி
விலைமதிப்பை அறியாது; அதனைப் போன்றே
குழிவெட்டிக் கொழிக்கின்ற பொன்து கள்தான்
குவலயத்தில் தன்பெருமை காணா தன்றோ!
அழிந்தழிந்து இறுதிவரை மணம்ப ரப்பும்
அகில்சாந்தும் தன்புகழை அறிவ தில்லை;
எழும்புதுமைக் கிருப்பாக்கும் தொழிலா ளர்தாம்
இப்புவியில் எப்போதும் இருட்டில் நின்றார். (பக். 60)

✡ ✡ ✡

நட்பு பற்றி நிறையக் கருத்துகள் அறிவோம்? நல்லோர் நட்பு கரும்பை நுனியிலிருந்து கடித்துச் செல்வது போன்றது; தீயோர் நட்பு கரும்பை அடியிலிருந்து உண்டுசெல்வது போன்றது என்பார் திருவள்ளுவர். நல்லோர் நட்பு மாலை நிழலைப்போல வளர்ந்து கொண்டே போகும்; தீயோர் நட்போ, முற்பகல் நிழல்போலக் குறைந்து கொண்டே வரும் என்பார் பர்த்ருகரி. அவரே சொல்வார் : ஒரு சொட்டுத் தண்ணீர்; அது பழுக்கக் காய்ச்சிய இரும்பின்மேல் விழுந்தால் இரும்பு அஃதை உறிஞ்சித் தன்னுள் அடக்கிவிடும். அதுபோலச் சிலரிடம் சேர்ந்தால் அவர்கள் நம்மை அழித்துத் தம்மை முன்நிறுத்திக் கொள்வர். அதே நீர்த்துளி தாமரை இலையின்மேல் விழுமானால், அவ்விலைமேல் இருக்கும் வரை பகலவன் ஒளிபட்டு முத்துப்போல ஒளி வீசும்; இலையை விட்டு நீங்கினால் முத்தொளியும் இல்லாமல் போகும்; அதுபோல் பெரியாரிடம் சேருங்கால் அவர்களிடம் இருக்கும் வரை·நமக்கும் சிறப்பு இருக்கும், தாமரை இலை நீர் ஒளிபெறுவதுபோல; அவரை விட்டு நீங்கினால் ஒன்றும் இல்லாதவர்கள் ஆகிவிடுவோம். அதே நீர்த்துளி ஒரு முத்துச் சிப்பியின் வாயில் விழுந்தால், சிப்பி அந்த நீர்த்துளியையே முத்தாக்கி விடும். அதுபோல் சிலரிடம் சேரும்போது அவர்கள் தம் பண்பால் நம்மை உயர்ந்தவர்களாக்கி விடுவார்கள். இவையெல்லாம் நல் நட்பு, தீ நட்புக்கு உள்ள காட்டுகள். ஒரு சொட்டு நீர்த்துளியைக் கொண்டே இந் நட்புகள் விளக்கப் பெற்றுள்ளன. நண்பர் வேள்நம்பியோ ஒட்டும் நட்பு ஒட்டா நட்பு என்பவற்றை உணவுப்பொருள் கொண்டு சிறப்பாய்க் கூறுகிறார். இனிப்புப் பண்டத்திலுள்ள இனிப்புச் சுவை தொண்டையோடு சரி; பிறகு இருக்காது; பழஞ்சோற்றை உண்டாலோ அது பசியைப் போக்கி வலிவு கொடுக்கும்.

கண்டேன் நான் சிலபேரை : கல்வி செல்வம்
  கவர்கின்ற கட்டழகு வாய்ந்த வர்தாம்;
தொண்டைவரை சுவைகாட்டி மறைந்து போகும்
  சுவைப்பண்டம் போலவர்கள் இறங்கி விட்டார்!
அண்டியவர் சிலருண்டு; அவர்க்கு நானோ
  ஆசிரியன் மாணாக்கன் உறவாய் நின்றேன்;
உண்டபழஞ் சோற்றைப்போல் பசியைப் போக்கி
  உள்ளுங்கால் நன்றிக்கே உரியர் ஆனார்! (பக். 67)

✡ ✡ ✡

புனர்வாழ்வு எனும் கவிதை தொழுநோய்க் கட்டுப்பாட்டு நிலையத்தில் கவிஞர் பாடியது. தொழுநோயாளிகள் புனர்வாழ்வு பெறவேண்டும் என்னும் பெருநோக்கில் எழுந்த கவிதை இது.

தொழுநோயாளிகள் மட்டுமன்று; விழி ஒளி இழந்தவர், முடவர், நலிந்தவர், திக்கற்றோர் போன்றவர்களும் நல்வாழ்வு பெறவேண்டும் எனும் நல்லெண்ணத்தை இக்கவிதை வெளிப் படுத்துகிறது. டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராய் இருந்தபோது இவர்கட்கெல்லாம் செய்த உதவிகளை நினைந்து அவரை நன்றியோடு பாராட்டுகிறார், கவிஞர் வேள்நம்பி.

நைந்திடு வோர்கள் நம்மவர் என்றே
சிந்தையில் எண்ணம் சிறிதே கொண்டால்
தீத்திறம் நீங்கிடப் பெற்றே
பூத்துக் குலுங்கிடும் புனர்வாழ் வன்றோ! (பக். 86)

இப்பாடல் அவலச் சுவை நிரம்பியதாய் உள்ளது!

✲ ✲ ✲

குடும்ப நலம் மாமனார் என்ற பாடல் குடும்பக் கட்டுப்பாட்டினை நகைச்சுவைபட மொழிகிறது. ஐந்து பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான் என்பர். அதை வேள்நம்பி வழிமொழிந்து பாடுகிறார்

கொடிபறக்கும் கோட்டையுடன் வாழ்ந்த வர்கள்
கூடிவரும் பகைமுடித்து நிமிர்ந்த வர்கள்
அடிபணியும் நிலையினராய்த் தாழ்ந்து போதல்
ஐந்தாறு பெண்பெற்றார் ஆத லாலே! (பக். 85)

✲ ✲ ✲

சிலம்பில் அச்சம், காதலர் வள்ளுவர் எனும் இரண்டு கவிதைகளும் நம் பண்டைய இலக்கியங்கள் பற்றியன. அவ் விலக்கியச் செய்திகளைத் தம் மனத்தே கொண்டு, அதைத் தம் மொழியில் கவிஞர் வேள்நம்பி சொல்லும் திறம் போற்றுதற் குரியது. அவ்விரு கவிதைகளிலும் சிலம்புக்கும் திருக்குறளுக்கும் வேள்நம்பி உரை எழுதியிருக்கிறார் - உரைநடையில் அன்று; கவிதை நடையில்!

கோவலன், கண்ணகி, கவுந்தி மூவரும் வையைக் கரையை அடைகிறார்கள்! அவர்கள் ஆற்றைக் கடந்து மதுரையை அடைய வேண்டும். அது வேனிற் காலம். மரங்கள் பூக்களால் நிறைந்துள்ளன. உதிர்ந்த பூக்கள் வையை ஆற்றில் மிதந்து நீரையே மறைக்கின்றன. இளங்கோ அடிகள் வையை நீர் ஓடுவதை, பொய்யறியா வையைத் தாய் புலம்புகிறாள் என்பார். ஏன்? மதுரைக்குச் சென்றதும் இழந்த பொருளை ஈட்டலாம் என்ற மகிழ்வு பொங்க வருகிறானே கோவலன்; இவன் வாழ்வல்லவோ முடியப்போகிறது? கண்ணகி மதுரையை அடைந்ததும் மங்கல

அணியை இழக்கப் போகிறாளே! என்ற வேதனையால் வையை அழுதாள்! அவளுடைய கண்ணீரே வையையில் பெருகியோடும் தண்ணீர். இக்கண்ணீரைக் கோவலன் கண்ணகி காணாதவாறு மறைக்க முற்படுகிறாள் வையைத்தாய்! கரைகளில் கிடந்த பூக்களாகிய முந்தானையை எடுத்துக் கண்ணீராகிய தண்ணீரை மறைத்து வையை நடந்து சென்றாளாம்!

வையை என்ற பொய்யாக் குலக்கொடி
தையற்கு உறுவது தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்நிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்
புனல்யாறு அன்றுஇது பூம்புனல் யாறுஎன

வையை ஓடியதாய் இளங்கோவடிகள் பாடியிருக்கிறார். இதனை வையையின் அச்சமாக வேள்நம்பி,

எதிர்காணும் வையையைப்போல் வாழ்வில் இன்பம்
எதிர்காலம் நமக்களிக்கும் என்றே எண்ணி
எதிர்த்தோடும் புனல்பெருக்கைக் காண்ப வர்தம்
எதிர்கால நிலையுணர்ந்த வையை மங்கை,
புதுமையினைச் சுவைக்கவெண்ணிப் போமி வர்கள்
பொல்லாங்குக் கிரையாகப் போவ தெண்ணிப்
புதிர்விளக்க முடியாமல் பூவால் மூடிப்
போவதுதான் அச்சத்தின் காட்சி அன்றோ? (பக். 31)

எனக் கருத்துச் சிதையாமல் தம் கவிதையில் வடித்துக் காட்டுகிறார்.

✡ ✡ ✡

பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் விட்டதைக் கேள்வியுற்ற சேரன் செங்குட்டுவன் வருந்தினான். ஆட்சிப் பொறுப்பில் இருப்பது எவ்வளவு இடர் தருவது என்ற உண்மை அவன் மனத்தில் ஓடியது. 'நாட்டில் மழை பெய்யாது வளம் குன்றினால் மன்னனுக்கு அச்சம்; ஏதேனும் ஒன்றால் மக்கள் வருத்தமடைந்தால் அதனாலும் அரசனுக்கு அச்சம்; குடிமக்களைக் காக்கும் தொழிலை மேற்கொண்டு, கொடுங்கோல் அஞ்சி, மக்களைக் காக்கும் நல்ல அரச குடியில் பிறப்பது, துன்பத்தைத் தருவதேயன்றி விரும்பி ஏற்கத்தக்கதன்று' என்றான்.

மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்.

ஆட்சித் திருவாசகமாய்ச் செங்குட்டுவனின் இச்சொற்கள் அமைந்துள்ளன.

இதனை அப்படியே தம்முடைய நடையில், மூலத்தின் உயிர்த் தன்மை சிறிதும் குறையாமல் வேள்நம்பி தந்திருப்பது அவருடைய புலமை வளத்திற்குச் சான்றாகும்.

பருவத்தில் மழைபொழிய வில்லை என்றால்
  பாராளும் மன்னனுக்கு உறக்கம் இல்லை;
ஒருபொழுதில் குடிமக்கள் துன்பம் உற்றால்
  ஒடுங்காவாம் அவனிமைகள் கால்கள் கைகள்;
வருவாயைப் பெருக்கிநலம் பேணா விட்டால்,
  வாடாமல் வாழவழி காட்டா விட்டால்,
இருப்பிடத்தை அழித்துவிட்டுச் செங்கோல் போகும்!
  இருப்பவர்க்கும் நெருப்பின்மேல் படுக்கை யாகும்!
ஆள்கின்ற குடியினிலே தோன்றி னாலே
  அவர்க்கமைதி என்றென்றும் இருப்ப தில்லை. (பக். 32)

சிலப்பதிகார அடிகளுக்கு விரிவுரை போல வேள்நம்பி பாடல் விளங்குகிறது.

✡ ✡ ✡

காதலர் - வள்ளுவர் என்ற பாடல் திருக்குறள் காமத்துப் பாலின் பிழிவாய் உள்ளது.

இருநோக்கு இவளுண்கண் உள்ளது; ஒருநோக்கு
நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து (குறள் 1091)

என்பது திருக்குறள். இதனை வேள்நம்பி கூறுவதைப் பாருங்களேன்!

......மின்விழிப்
பார்வையே நோயைப் பரப்பும்; வியப்பே!
தீர்ப்பதும் நோயைஅத் தெரிவையின் பார்வையே;
தருவதும் பின்னர்த் தந்த ஒன்றினைத்
திரும்பப் பெறுமொரு பெருஞ்செயல் காட்டும்
அருமருந் தாக அவளைக் கண்டேன்! (பக். 37)

✡ ✡ ✡

தலைவன் பிரிந்துளான். தலைவி வருந்தியிருக்கிறாள். தோழியிடம்,

நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டுஎன் உயிர். (குறள் 1213)

நனவிலே வந்து அன்பு செய்யாதவரை, யான் கனவிலே கண்ட அக்காட்சியால் என் உயிர் நீங்காமல் இருக்கிறது என்கிறாள். இதனை மேலும், தெளிவுபடுத்தும் வகையில் வேள்நம்பியின் பாடல் இருக்கிறது.

உறங்கா விழிகளில் உகுநீர் காட்டுவீர்
உறங்க மாட்டீர்! உறங்குவீர் ஆயின்
ஆங்கெழில் மார்பன் அவரைக் கனவில்
தீங்கு தவிர்த்திடக் கண்டே திளைப்பேன்;
கண்டுரை யாடிக் களிப்பேன்; களிப்பில்
கொண்டுயிர் வாழ்ந்தே கொடியநாள் கழிப்பேன்!
நம்பியர் பிரிந்த நங்கையர் வாழ்தலும்
தம்துயர் பொறுத்தலும் தாம்பெறும் கனவால்! (பக். 43)

✡ ✡ ✡

பண்டைத் தமிழ் மரபு காத்து வரும் இப்பைந்தமிழ்க் கவிஞரை மனமாரப் பாராட்டுகிறேன். வண்ண நிலவின் வளர் கலையொப்ப இவர் புலமை நாளும் நாளும் வளர்ந்து நிறையெழில் நல்குவதாகுக.

நூல் ஆக்கம்	கவிஞர் கோ. வேள்நம்பி
வகைமை	கவிதை
வெளியீடு	கவின் பதிப்பகம், சேலம். (1995)

19

மூன்று தமிழ்க்களம்

சங்க காலத்தில் மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் என்னும் பெரும்புலவர் வாழ்ந்திருந்தார். இந்நூலாசிரியரோ இன்றைய தாரை அறுவை வாணிகன் இறையரசனாக விளங்கி வருகிறார். ஆம்! துணி வணிகமே இவருடைய தொழில்; என்றாலும், பெரும் புலமை மிக்கவராய் அரிய பல கவிதைகளை இயற்றிச் சிறக்கிறார். புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் நூற்றாண்டு விழாவினையொட்டி நடந்த கவிதைப் போட்டிகளிலும், கவியரங்குகளிலும் இவர் கலந்துகொண்டு பாடிய பாடல்களும், குளித்தலை தமிழ்ச்சுடர் ஐயா இளமுருகு பொற்செல்வி அவர்கள் நடத்தி வருகின்ற தமிழ்க் 'காசு' நினைவு இலக்கிய விழாக்களில் பாடிய பாடல்களுமே இந்நூலில் பெருமளவு இடம் பெற்றிருப்பதால், 'பாவேந்தர்' பற்றியும், 'கா.சு.' பற்றியும் கவிஞர் இறையரசனின் எண்ண ஓட்டத்தை இந்நூல் உணர்த்துவதாய் உள்ளது.

கவிஞர் அவர்கள் முன்னரே, 'குறளும் பொருளும்', 'நாலும் பொருளும்' என்னும் இரண்டு கவிதை நூல்களை இயற்றியுள்ளார். அவை இரண்டும் முறையே திருக்குறளுக்கும், நாலடியார்க்கும் எழுந்த உரை நூல்கள். அவ்வுரைகள் கவிதையாய் அமைந்துள்ளன. கவிஞருடைய சொந்தக் கவிதைப் படைப்பாக வெளியாகும் இரண்டாம் நூல் இது.

இந்நூலின் ஒவ்வொரு பாடலின் தொடக்கத்திலும் அப்பாடல் எங்கு, எப்போது பாடப்பெற்றது என்னும் குறிப்பைக் கவிதை அடிகளிலேயே தந்து நம் உள்ளங்களைக் களிப்பில் ஆழ்த்துகிறார். கவிஞர் கண்ணதாசனின் பத்தாம் ஆண்டு நினைவு நாள் கவிதைப் போட்டியை 'மூச்சு' எனும் இதழ் நடத்தியுள்ளது. அதில் பாடிய பாடல் இந்நூலில், 'கருவறை தொடங்கிக் கல்லறை வரை', என்ற தலைப்போடு இடம் பெற்றுள்ளது (பக். 70). அப்பாடலுக்கு முன்னுரையாக,

கண்ண தாசக் கனித்தமிழ்ப் பாவலர்
மண்வீழ் பத்தாம் மனம்வருந் தாண்டில்
'மூச்சு'எனும் இதழ்தான் மூட்டிய போட்டியில்
ஒச்சிப் போர்செய ஒச்சிய பாவேல் (7–10–1991)

என்ற குறிப்பைக் கவிஞர் தருகிறார். பத்தாம் நினைவு நாள் என்பதற்கு, 'மண்வீழ் பத்தாம் மனம்வருந் தாண்டு' எனக் குறித்திருப்பது நினைவு நாளுக்கு ஒரு புதிய தொடராட்சியை நல்கியுள்ளது. இவ்வாறு முன்வைக்கும் பாடல்கள் எதிர்காலத்தில் சிறந்த வரலாற்றுக் குறிப்புகளாய்த் திகழும் என்பதில் ஐயமில்லை. சங்கப் புலவர்கள் தத்தம் பாடல்களுக்கு இவ்வாறான முன் கவிதைகள் தந்திருப்பாராயின் முறையான தமிழ்நாட்டு வரலாற்றைக் கண்டறிவதில் எத்தகைய இடர்ப்பாடும் நேர்ந்திருக்க இடமில்லை.

கவிஞர் இறையரசன் பாவேந்தர் பாரதிதாசனின் பண்பு நலன்களையும், பாடற் சிறப்புகளையும் மிக அழகாக எடுத்துரைக்கிறார். பாவேந்தர் யார்? தந்தைபெரியார் உரைநடையில் சொன்ன கருத்துகளைப் பாட்டு வடிவில் வடித்துத் தந்தவர்

பெரியாரின் பகுத்தறிவுக் கருத்தை யெல்லாம்,
பேழைக்குள் பெருஞ்செல்வம் சேர்த்து வைக்கும்
உரியாரின் செயல்போலப், பாட்டுப் பேழை
உள்வைத்து வருங்காலம் வாழத் தந்தார். (பக். 30)

நால்வருணக் கொடுமையை நசுக்கப் பாடியவர் பாவேந்தர் என்பதை,

நரியாராம் ஆரியரின் நால்வருணத் தீங்கை
நசுக்கிவிடப் பாய்ந்தெழுந்தே நமைக்காத்த வேங்கை! (பக். 48)

எனும் இறையரசனின் பாடல் அடிகள் இயம்புவதை அறிகிறோம்.

பாவேந்தர் பாரதிதாசன் தாலாட்டுப் பாக்களில் பகுத்தறிவைப் புகுத்தியவர்.

காப்பார் கடவுள்உமைக் கட்டையில்நீர் போகுமட்டும்
வேர்ப்பீர், உழைப்பீர், எனஉரைக்கும் வீணருக்கும்,
மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே! என்செந்தமிழே கண்ணுறங்கு!

என ஆண் குழந்தை தாலாட்டிலும்

சாணிக்குப் பொட்டிட்டுச் சாமியென்பார் செய்கைக்கு
நாணி உறங்கு; நகைத்துநீ கண்ணுறங்கு;

எனப் பெண் குழந்தை தாலாட்டிலும் குருட்டுக் கடவுள் நம்பிக்கையைக் குருதி கொப்புளிக்க எடுத்துரைத்தவர் பாவேந்தர். இதை நமக்கு எடுத்துரைக்கும் முறையில் இறையரசன் அவர்கள்,

தாலாட்டில் பகுத்தறிவைத் தந்தபெருங் களிறு!
தமிழ்க்கண்ணே அவ்வாறே தழைத்துயர்ந்து மிளிரு! (பக். 49)

என வேண்டிக் கொள்கிறார். பாரதிதாசனின் கொள்கைகட்குத் தம்மை முற்றிலுமாக ஒப்படைத்துக் கொண்டுள்ள நம் கவிஞர் அப்பெருங் கவிஞரை,

'மூவேந்தர் ஆனதமிழ்ப் பாவேந்தர்'

'விடிவெள்ளிப் பாட்டீந்த வேந்தன்'

'புரட்சிப் பாவேந்தன் ஒருபுதுமை நெறிவித்து'

எனப் பாராட்டி மகிழ்கிறார். பாவேந்தர் பற்றி இந்நூலிலுள்ள செய்திகளைத் தொகுத்தால் அஃது ஒரு கருத்துப் பேழையாகவும் வரலாற்றுக் களஞ்சியமாகவும் புகழ் பெறும்.

ஒவ்வொருவருடைய இயல்பையும் உள்ளது உள்ளவாறே கவிதை வரிகளில் படம்பிடித்துக் காட்டுவதில் இறையரசன் சமர்த்தராயிருக்கிறார். ஐயா இளமுருகு பொற்செல்வியைப் பாடியுள்ள,

நடமாடும் இம்முதிய இளைஞர் போல
நம்மாலும் தொண்டுசெய முடியா தென்பேன் (பக். 155)

என்னும் அடிகளைப் படிக்கும்போதே, 'தமிழ்க் காசு' விழாவில் ஐயா அவர்கள் அங்குமிங்குமாய் இளைஞர்போல ஓடியாடும் காட்சி நம் கண்முன்னர் ஓவியமாகிறது.

தலைப்பாகை கட்டியுள்ள தோற்றம்; – இவர்
தமிழுக்கே ஈட்டியுள்ள தேற்றம்;
மலைத்தேனாய் இனிக்குமிவர் எழுத்து;–தமிழா
மறவாமல் இவர்புகழை வழுத்து! (பக். 87)

இவ்வடிகள் கா. சு. பிள்ளையின் தோற்றத்தோடு அவர் தமிழ் நடையையும் ஒன்றுபடுத்திக் காட்டுகின்றன. இலக்கியச் செல்வர் இளங்குமரனாரை,

தமிழின் ஏற்றம் அமிழ்தாய் உரைக்கும்
தனித்திறம் பெற்றவராம்! – பண்டைத்
தமிழெலாங் கற்றவராம்; (பக். 92)

எனச் சிந்து பாடிச் சிறப்பித்துள்ளார். இவ்வாறே எவரைப் பாடினும் அவர்தம் உயர்கொள்கைகளை ஒருசேரத் தொகுத்துத் தருவதில் இறையரசன் வல்லவராய் விளங்குகிறார்!

கற்பனை கவிதையை வளமாக்குகிறது. கவிக்கோழி, எண்ண முட்டைகளைக் கவனமுடன் அடைகாப்பதால் வெளிப்படும் குஞ்சுகளே கற்பனைகள். நாம் ஒவ்வொருவரும் ஏதாவதொரு வகையில் கற்பனையாளர்களாய் இருக்கிறோம் என்கிறார் சார்சு எலியட். வெறும் கற்பனை மட்டுமே சிறந்ததாகிவிட முடியாது, பொருட் பொதிவு இல்லாத கற்பனை காலில்லாது இறக்கை மட்டுமே இருப்பதற்கு ஒப்பாகும் என்பார் ஓர் அறிஞர். கற்பனையே உலகை ஆள்கிறது என்கிறான் நெப்போலியன். அழகு, மகிழ்ச்சி என உலகில் சிறந்த அனைத்தையுமே கற்பனையே உருவாக்குகிறது என்கின்றனர். உயர்ந்த கற்பனை ஒரு கவிஞனுடைய புலமை ஆளுமையைப் புலப்படுத்தும். கற்பனை பற்றிய இத்துணைக் கூற்றுகளையும் மெய்ப்பிக்கும் வகையில் கவிஞர் இறையரசனின் கற்பனைகள் இலங்குகின்றன.

உருசிய நாட்டு ஆர்மேனிய நில நடுக்கத்தைப் பாடுகின்ற கவிஞர் அவலத்திடையேயும் ஓர் அரிய கற்பனையைப் படர விடுகிறார். இம் மண்ணில் கண்டறிய வேண்டியவை இன்னும் எவ்வளவோ இருக்க அவற்றை விடுத்து உருசிய மக்கள் விண்ணை ஆராயச் சென்றுவிட்டனரே என்ற பொறாமையால் - மண்ணை விடுத்து விண்ணை நாடினர் என்ற வெகுளியால் - அவர்களை நிலம் நடுங்கி அழித்துவிட்டதாம்! நிலநடுக்கத்துக்கு இப்படியொரு கற்பனை

உன்வளத்தை முழுவதுமாய்ப் பயன்படுத்தல் விட்டே,
  உயர்விண்ணை ஆராயப் போய்வெற்றி கொண்டு
வன்மையுடன் உருசியர்கள் வாழ்வதனால், உன்றன்
  வயிறெரிந்து வெடித்தாயா? அழுக்காற்றுக் காரி! (பக். 24)

நாணம் தலைசாய்த்தலைச் செய்யும். "தண்புகழ் கேட்டார்போல் தலைசாய்த்து மரம் துஞ்ச" என்று குறிப்பிடும் கலித்தொகை. உலகில் என்னென்னவோ கொடுமைகளைச் செய்பவர்கள் நாணப்படாதிருக்கும்போது, நாணலே உனக்கேன் நாணம் எனக் கேட்கிறார் கவிஞர்.

ஒருயிராம் நாணலுக்கேன் ஓயாத நாணம் (பக். 66)

காற்று வீசும்போதெல்லாம் ஓயாது சாய்கின்றது நாணல் என்பதைக் கூற இப்படியொரு கற்பனை.

ஒவ்வொரு கவிஞரிடமும் சில சொற்கள் அடிக்கடி பயன்பட்டு நிற்கும். இறையரசனிடம், 'ஈகம்' என்ற சொல்

கொஞ்சிச் சேர்கிறது. பல இடங்களிலே அச்சொல்லை அவர் பயன்படுத்தியிருக்கக் காண்கிறோம்.

மாண்டேலா 'ஈகம்'போல் (பக். 33)
வாழ்நாளைப் பிறர்க்'கீகம்' வலிந்தும் செய்வோர் (பக். 42)
செந்தமிழ்க்கே உயிரீந்தோர் 'ஈகம்' (பக். 61)
தமிழ்வளர்க்கத் தமை'ஈகம்' செய்து வாழும் (பக். 85)

மொழிஞாயிறு பாவாணர் அடியொற்றி மொழிகாக்கும் கவிஞராய் இறையரசன் இருப்பதால் பாவாணர் உருவாக்கிக் கொடுத்த பல சொற்களை இவர்தம் கவிதைகளில் ஆங்காங்கே ஆண்டிருக்கக் காண்கிறோம்.

குறள்வழியில் வாழுமுயர் குமுகாயம் ஆக்கு (பக். 37)
நலங்கவியும் தமிழ்க்குமுகம் நாளையிங்குக் காண (பக். 50)
பாவேந்தர் பார்வையில் குமுக நயன்மை (பக். 64)

முன்னைய புலவர்களின் சொற்களையும் கருத்துகளையும் கவிஞர் தக்க இடங்களில் எடுத்தாண்டு தம் கவிதைக்கு வளம் சேர்த்திருக்கிறார். பாவேந்தர் நிலவைப் பாடும்போது,

சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்திரித்த வண்ணந் தானோ

என்று குறிப்பிடுவார். 'சிந்தாமல் சிதறாமல்' என்னும் தொடர் இறையரசனை ஈர்த்திருக்கிறது. அதனால் அவர்,

அந்தியிலே தனித்திருக்கும் வேளையிலோர் பெண்ணாள்
அருகுவந்து மெய்தழுவிக் காதல்கலை எல்லாம்
சிந்தாமல் சிதறாமல் செய்தாளாம்! (பக். 23)

என்று பாடிடக் காண்கிறோம்!

சிறிய அளவுக்கும், பெரிய அளவுக்கும் திருவள்ளுவர் தினையையும் பனையையும் காட்டுவார்.

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார் (குறள் 104)

என்பது திருக்குறள். இதே முறையில் தினையையும் பனையையும் இறையரசனும் பயன்படுத்திடக் காண்கிறோம்!

தினையளவும் மாசுவராத் திண்மைநெறி சேர்க்கும்—
பனையளவாய் அன்பில்லப் பயன்உணர்த்தும் அந்நூல்— (பக். 39)

குழந்தைகளின் மழலைச் சிறப்பைத் திருவள்ளுவர்,

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் (குறள் 66)

என்று குறிப்பிடுவார். இக்குறட் கருத்தை மனத்தே கொண்டு, இரண்டு குழந்தைகளே போதும் என்று பாடும்போது குழலையும், யாழையும் குழைத்து இனிக்கச் செய்கிறார்.

குழல்போலும் யாழ்போலும் மழலைஓர் இரண்டு!
கொண்டிடுக! மிகையானால் துயர்குவியும் திரண்டு! (பக். 129)

இந்நூலில் இறையரசன் வைர வரிகளாய்ச் சிலவற்றை ஆங்காங்கே வரைந்திருக்கிறார். அவற்றையெல்லாம் தொடுத்தால் தமிழ்ப் பண்பெனும் பெருமைமிகு அணிகலனாய் மிளிரும்.

அகல்உலகை அன்பென்னும் சுவைத்தேனில் குழைப்போம்! (பக். 34)

அரியகுறட் குமுகாயம் அமைக்காமை நாண்நாண்! (பக். 38)

இல்லாதார் கல்லாதார் இல்லாமை வேண்டும்! (பக். 68)

வானத்தை நிலந்தான்போய்த் தொடுதல் உண்டா?
வல்லூறாய் ஊர்க்குருவி பறத்தல் உண்டா? (பக். 96)

இறையரசனுடைய கவியரங்கப் பாடல்களைப் படிக்கும் போது, அவர் கவியரங்கப் பாப்புனைவதில் நன்கு தேர்ச்சி பெற்றுள்ளார் என்பது தெரியவகிறது.

கவியரங்கம் ஒன்றில் தலைமையேற்றுள்ள இவர் கவிஞர் வெள்ளமுத்து என்பவரைப் பாட அழைக்க வேண்டும். அப்போது பாடுகிறார் :

வெள்ளமுத்து! பாட்டெழுதி வெல்லுமுத்து! கொஞ்சுதமிழ்
உள்ளமுத்து! பாவேந்தர் ஒண்முத்தை – அள்ளுமுத்து!
நாவேந்தர் போற்றுமுத்து! நன்முத்தாய்ப் பாடுமுத்து!
பாவேந்தை இங்குபாடு முத்து! (பக். 113)

முத்து முத்தாய்ச் சொற்கள் உருண்டுவந்து காதுகளை இனிக்கச் செய்கின்றன.

சொல்விளையாட்டு கவியரங்கப் பாடலில் தனியிடம் பெறுவது. கல்வி வளர்ச்சியில் பெற்றோர் பங்கு பற்றிப் பாடும் இவர்,

பெற்றோரின் பங்குபாடப்
பெற்றோனாய்ப்... (பக். 145)

எனக் கூறும்போது பெற்றோர், பெற்றோன் என்ற சொற்களை இரு பொருளில் ஆண்டு நலம் கூட்டுகிறார்.

பாவேந்தருடைய 'அழகின் சிரிப்பு' எனும் நூலைக் குறித்து இறையரசன்,

நூலுக்குள் நுழைந்திட்டால் நுவலரிய ஈர்ப்பு!
நுவல்மாண்பின் மணிக்குலத்தை நூல்கோத்த சேர்ப்பு!
பாலுக்குள் தேன்கலந்த பழுகுதமிழ் வார்ப்பு!
படித்துணர்ந்தால் உளங்கொளுமே பண்கேட்ட ஆர்ப்பு! (பக். 20)

இவ்வாறு பாடியுள்ளார். இறையரசன் கவிதைகளில் மரபு மணம்வீசிச் சிறக்கிறது. பாவேந்தர் வழியில் கவிமரபு காத்துவரும் இப்பெருங்கவிஞரை உளமாரப் பாராட்டி மகிழ்கிறேன்! களம் புகுந்துள்ள இக் கவிதைநூல் ஞாலத்தை வென்று நிற்கும் பெருமையதாய் விளங்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

நூல் ஆக்கம்	பாவலர் இறையரசன்
வகைமை	கவிதை
வெளியீடு	மணிமேகலைப் பதிப்பகம், சின்னதாராபுரம், கரூர். (1992)

20

யாருக்காக உலகம்?

புதினம்

'யாருக்காக உலகம்?' என்னும் இப்புதினம் மூவேந்தர் முத்துவின் முத்திரைப் பதிப்பு.

புதினம் என்றால் என்ன என்பதற்கு அறிஞர்கள் பலவாறான விளக்கங்கள் அளித்துள்ளனர். "புதினம் என்பது உரைநடையில் அமைந்த புனைகதை; அது ஆண் பெண்களாகிய கதை மாந்தர்களின் வாழ்க்கையின் உணர்ச்சி நிறைந்த நிகழ்ச்சிகளைச் சித்தரித்துக் காட்டுவது'' எனச் சேம்பர்சு ஆங்கில அகராதி கூறுகிறது.

"வாழ்க்கையைப் படம் பிடிக்கும் இலக்கிய வகைகளுள் புதினம் ஒன்று; அதாவது வாழ்க்கையில் காணக்கூடிய கதை மாந்தர்களையும், அவர்களுக்கு நேரக்கூடிய நிகழ்ச்சிகளையும் கொண்டு, ஆசிரியர், நம் கண்முன் நடப்பது போன்ற அரிய படைப்பைச் செய்கிறார்" என்கிறது தமிழ் வளர்ச்சிக் கழகக் கலைக் களஞ்சியம்.

"புதினம் என்பது உரைநடையில் அமைந்த நீண்ட கதை. அது பெரும்பான்மை கற்பனையானது. அதன் முக்கிய நோக்கம் மக்களுக்கு மகிழ்வூட்டுவது; என்றாலும் அதன் உள்ளார்ந்த நோக்கம் படிப்பவர்களை வாழ்க்கையை அறிந்து கொள்ளச் செய்வதேயாம்" என்கிறது உலகநூற் கலைக் களஞ்சியம்.

''கதை கூறும் பாங்கிலமைந்த மனித வாழ்க்கையின் விளக்கமே புதினம்" என்று எர்னேசுடு பெக்கரும், "வாழ்க்கையைப் பற்றிய தனிமனிதனின் எண்ணப் பதிப்பே புதினமாகிறது" என என்றி சேம்சும் கூறுகின்றனர்.

இவை அனைத்தையும் உள்ளடக்கியதான ஒரு விளக்கத்தை எழில் முதல்வன் தருகிறார். "ஒரு விரிவான கதையமைப்பையும், அதை நடத்திச் செல்லும் வேறுபட்ட பண்புகள் கொண்ட கதை மாந்தர்களையும், அவர்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கும்

நிகழ்ச்சிகளையும், மறைமுகமாக வெளிப்படுத்தும் குறிக்கோள் அல்லது குறிக்கோள்களையும் கொண்ட ஓர் உரைநடைப் பதிப்பே புதினம்" என்பது அவர் கூற்று.

புதினச் செல்வாக்கு

தமிழ் இலக்கிய வரலாற்றில் இந்நூற்றாண்டில் மிகவும் செல்வாக்குப் பெற்றுள்ள வகை புதினமேயாம்! "சாசரும் சேக்சுபியரும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலோ இந்நூற்றாண்டிலோ பிறந்திருந்தால் அவர்களுடைய எழுதுகோல் பாட்டுத் துறையில் மிகுதியாக முனையாமல் புதினத் துறையில் தொண்டாற்றியிருக்கும்" எனப் புதினத்தின் செல்வாக்கு பற்றி டாக்டர் மு.வ. குறிப்பிடுகிறார்.

"நாவல் என்னும் புதினம், கலை வடிவங்களுள் மிகுந்த நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்ததும் எக்கருத்தையும் கூறும் ஆற்றல் வாய்ந்ததுமாக இருப்பதால் காவியம், மிகு கற்பனைக் கதை, நாடகம், தன்னுணர்ச்சிப் பாக்கள் போன்ற பழைய இலக்கிய வகைகளையெல்லாம் வென்று உயர்ந்திருக்கிறது" என்பர் அறிஞர்.

இத்தகைய செல்வாக்கு மிக்க படைப்பிலக்கியமாகிய புதினத்தை, மேலே சொல்லப்பட்டுள்ள வரையறைகள் அனைத்தும் பொருந்திவரும்படியாக "யாருக்காக உலகம்?" என்ற பெயரில் எழுதிப் பெரும் வெற்றி கண்டிருக்கிறார் மூவேந்தர் முத்து.

புதின வகை

"குடும்பப் புதினம், சமூகப் புதினம், வரலாற்றுப் புதினம் எனப் புதினம் மூவகையாகப் பிரிக்கப்படுகிறது. சமுதாயத்தின் உறுப்பாகிய குடும்பத்தில் பற்பல நிகழ்ச்சிகளும் பற்பல எண்ண வேறுபாடுகளும் இருக்க வாய்ப்புண்டு. குடும்பத்தை நிலைக் களமாகக் கொண்டு எழுதும் கதையில் வேகமும் ஆர்வமும் மிகுதியாக இருக்கின்றன. அதனால்தான் இங்கே பலர் குடும்பப் புதினங்களை எழுதுகின்றனர். "இந்த நாட்டுக் குடும்பம் புதினத்துக்கு ஏற்ற கருவைத் தருவது. குடும்ப நிகழ்ச்சிகள் விரிந்து, பல்வேறு குடும்பங்களின் தொடர்பும், ஊராருடைய நன்மை தீமைகளின் இயைபும், சமுதாயத்தில் உண்டாகும் பொது நிகழ்ச்சிகளின் இணைப்பும் உடையதாகக் கதை விரிந்தால் அது சமூகப் புதினமாகிறது" என்பார் அறிஞர் கி.வா. செகந்நாதன்.

இவ்வகையில் மூவேந்தர் முத்துவின் இப்புதினத்தைக் குடும்பப் புதினம் என்றும் சொல்லலாம், சமுதாயப் புதினம்

என்றும் சொல்லலாம். மேலாக, குடும்பப் பாங்கு கொண்ட சமுதாயப் புதினம் என்பது இன்னும் பொருத்தமாக இருக்கும்.

இயல்பில்லாத நிகழ்ச்சிகளும் விந்தைகளும் நிரம்பிய தொடர்நிலைக் கதைகளைக் கட்டற்ற கற்பனைக் கதைகள் என்றும் இயல்பான மனிதப் பண்புகளையும் நிகழ்ச்சிகளையும் கொண்டு இவை உண்மையாக நடக்கத் தக்கவை என்று நினைக்கும் வகையில் அமையும் கதைகளை நடப்பியல் அல்லது மெய்யியல் கதைகள் என்றும் பிரித்துச் சொல்வர். யாருக்காக உலகம்? எனும் இப்புதினம் ஒரு நடப்பியல் கதையாகும்.

உள்ளதை உள்ளவாறே எழுதுவது ஒரு வகை. முற்றிலும் கற்பனையாக எழுதுவது இன்னொரு வகை. உண்மை நிகழ்ச்சிகளில் கற்பனையைக் குழைத்து எழுதுவது மற்றொரு வகை. முதலாவது வரலாறாகிவிடும். இரண்டாவது உலகத்தோடு ஒட்டாது தனித்து நிற்கும். மூன்றாவதோ எண்ணத்தோடு பொருந்தி மனத்தைக் கவ்வுவதாக இருக்கும். யாருக்காக உலகம் மூன்றாவது வகையைச் சார்ந்ததாக இருக்கிறது.

யாரால் உலகம்?

உலகம் யாரால் இருந்து வருகிறது என்ற வினாவை எழுப்பி அதற்கு விடை கண்டிருக்கிறார்கள் நம் முன்னோர்.

> பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
> மண்புக்கு மாய்வது மன்

என்கிறது திருக்குறள். பண்புடையவர்கள் இருத்தலாலேயே இந்த உலகம் இருந்து வருகிறது. இன்றேல் மண்ணோடு மண்ணாய் அழிந்து போவது உறுதி என்கிறார் திருவள்ளுவர்.

அமிழ்தேயாயினும் தான் மட்டும் தனித்து உண்ணாதவர்; யாரொடும் வெறுப்பில்லாதவர்; அஞ்சுவதற்கு அஞ்சிச் சோம்பலற்று இருப்பவர்; புகழ் கிடைப்பதாயின் தம் உயிரையும் கொடுப்பவர்; பழியொடு வருவதாயின் உலகமே கிடைப்பதாயினும் மேற்கொள்ளாதவர். இவ்வாறாகத் தமக்கென வாழாது பிறர்க்கென வாழுகின்ற பேராளர்களாலேயே உலகம் இருந்து வருகிறது என்கிறார், கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி.

> உண்டாலம்ம இவ்வுலகம்.....
> தமக்கென முயலா நோன்தாள்
> பிறர்க்கென முயலுநர் உண்மை யானே

என்பது அப்பாண்டியனின் பாடலடிகள். நம் மூவேந்தரோ யாருக்காக உலகம்? என்ற வினாவை எழுப்பி அதற்கு நம்மை விடை காணச் சொல்கிறார்.

புதினக் கதை

கதிரவன், கிராமத்தில் பிறந்தவன். தாய் தந்தையரை இழந்து தனித்தவன். படிப்பு முடிந்ததும் முதன் முதலாகச் சென்னை வந்து அங்கிருந்த தன் ஒரே அக்காள் வீட்டை அடைகிறான். ஒன்பது குடித்தனங்கள் வாழ்ந்து வரும் ஒரு கட்டில் அவன் அக்காள் வீடு ஒரு பகுதி. ஒவ்வொரு குடும்பமும் ஒரு வகை. அக்காள் கணவனின் பரிந்துரையால் கதிரவனுக்கு அச்சகம் ஒன்றில் மெய்ப்புத் திருத்தும் பணி கிடைக்கிறது. தீயவை கண்டு பொங்கும் உள்ளங் கொண்டவன் அவன். எங்கெங்குத் தீமைகள் நிகழ்ந்தனவோ அங்கெல்லாம் பொங்கி எழுந்து கடிந்து எதிர்த்தான். விளைவு அவன் தொல்லைகளுக்கு ஆளானானே தவிரத் தீமைகள் தீர்ந்த பாடில்லை.

இவ்வாறான ஓர் எதிர்ப்பின்போது அவனை அமைதிப் படுத்தி அப்புறம் அழைத்துச் சென்றாள் அவன் வாழும் கட்டிலேயே வேறொரு வீட்டில் வாழ்ந்துவந்த வெண்ணிலா என்னும் கல்லூரி மாணவி. காலப் போக்கில் வெண்ணிலா தன்மேல் காதல் கொண்டிருப்பதை அறிந்த கதிரவன், தானும் அக்காதலை ஏற்று வளர்க்கிறான். மெய்ப்புத் திருத்தும்போதும் ஓய்வு நேரங்களிலு மாகக் கதிரவன் ஏராளமான நூல்களைப் படித்துத் தன் அறிவைப் பெருக்கிக் கொள்கிறான்; சிறந்த கவிஞனாகவும் மலர்கிறான். வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் கூட்டங்களில் பேசி, சிறந்த பேச்சாளனாகவும் மாறினான்.

வெளியூர்க் கூட்டம் ஒன்றுக்குச் சென்ற போது பேருந்தில் நடத்துநரின் தகாச் செயலுக்காக அவனுடன் வாதாடிய கதிரவன், தடித்த சொற்களைப் பயன்படுத்த நேர்ந்தது. அன்றிரவு அந்த நடத்துநர் கொலை செய்யப்பட்டார். அக்கொலையைச் செய்தவர்கள் முன் நாள் நடத்துநர்க்கும் கதிரவனுக்கும் நடந்த வாய்ச் சண்டையைச் சொல்லி, கதிரவனே கொலை செய்திருக்க வேண்டுமெனும் எண்ணத்தைத் தோற்றுவித்தனர். கதிரவன் கைதாகித் தண்டிக்கப்பட்டுச் சிறையிலும் அடைக்கப்பட்டான்.

அவனுடைய நண்பர்களின் இடையறா முயற்சியால் காலம் கழிந்து அவன் குற்றவாளி அல்லன் என நிரூபிக்கப்பட்டு விடுதலை பெற்றான். அவன் சிறைப்பட்ட செய்தியைச் செய்தித்தாளில் பார்த்த அப்போதே அவனுடைய அக்காள் உயிர் நீத்தாள். அக்காள் கணவனோ வேறொரு திருமணம் செய்துகொண்டு கதிரவன் மீண்டும் சென்னை வந்தபோது அவனை வீட்டினுள் விடவும் மறுத்துவிட்டான். முன்பு கதிரவன் குடியிருந்த அந்த மனைக்கட்டு

விற்கப்பட்டு, அதிலிருந்தவர்களெல்லாம் வெளியேறிவிட, யார் எங்கிருக்கிறார்கள் என்பதை அவனால் அறிய முடியவில்லை.

வெண்ணிலா கதிரவனைக் காதலிப்பதை அறிந்து அதனை விரும்பாத அவள் தந்தை, கதிரவன் சிறையிருந்த சமயம் அவளை, வற்புறுத்தி ஓர் உயர் அலுவலர்க்குத் திருமணம் செய்து வைத்தார். வெண்ணிலா பற்றிக் கதிரவனுக்கு ஏதும் செய்தியில்லை. அவன் செல்லுமிடங்களிலெல்லாம் கொலைகாரன் என்ற பழிப்பு; தெரிந்தவர்களும் அறிந்தவர்களும்கூட ஒதுங்கினர்.

மனம் வெதும்பியவனாய்ச் சென்னையில் ஓர் ஒதுக்குப் புறத்தில் 'வெண்ணிலா' என்ற பெயரில் ஒரு சிறு அச்சகம் தொடங்கினான். அதே பெயரில் ஓர் இதழையும் தொடங்கி, 'கானம்பாடி' என்ற பெயரில் எழுதி வந்தான். எழுத்து புகழ் சேர்த்தது. என்றாலும் அவன் எங்கும் வெளிச் செல்வதே இல்லை. கதிரவன்தான் கானம்பாடி என்பது யாருக்குமே தெரியாது.

வெகு காலத்திற்குப் பின்னர் ஒரு நாள் வெண்ணிலா அவனைக் காண வந்தாள். தனக்கு நடந்தவற்றையும் கானம்பாடி கதிரவனாகத்தான் இருக்க வேண்டும் எனத் தான் எவ்வாறு யூகிக்க முடிந்தது என்பவற்றையெல்லாம் விவரித்துத் தான் இரண்டு பெண்மக்களுக்குத் தாயாக இருப்பதையும் கூறினாள். இருவருமே பண்டைய செய்திகளைப் பரிமாறிக் கொண்டனரே தவிர, அன்றைய நிலைக்கு ஒரு சிறிதும் வழுவின்றி நடந்து கொண்டனர். கதிரவன் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென வெண்ணிலா வற்புறுத்தியபோது இனி அந்தப் பேச்சுக்கே இடமில்லை என்றான் அவன்.

வெண்ணிலாவின் கணவன் பெரிய அலுவலர் என்றாலும் நேர்மையானவன் அல்லன். அவன் சொந்த நாட்டையே காட்டிக் கொடுக்கும் கும்பலோடு சேர்ந்து சதித்திட்டம் தீட்டியதை அறிந்து, ஓரிரவு அவன் அக்கும்பலோடு சேர வெளியே செல்ல முற்பட்டபோது அவனை வீட்டைவிட்டு வெளியேறாதவாறு வெண்ணிலா தடுத்தாள். அவளை உதறியெறிந்து அவன் வெளியேற முயன்றபோது தன்னை மீறிய நிலையில் அவள் அவனைச் சுட்டுக் கொன்றாள். அதற்காக அவள் வருந்தவில்லை. மாறாக நாட்டு நலனுக்காகத் தான் செய்த தியாகத்தை எண்ணி மகிழ்ந்தாள். தன் பெண்கள் இருவரையும் கதிரவனிடம் ஒப்படைத்துத் தன்னைக் காவல் துறையினரிடம் ஒப்படைத்துக் கொள்கிறாள்.

நாட்டுக்காகத் தன் கணவனையே கொன்ற வெண்ணிலாவின் வழக்கின் முடிவு என்ன ஆகும்? இனி இந்த உலகில் அவள் யாருக்காக வாழப் போகிறாள்? என்ற வினாக்களோடும், கொடுமை இருள் சூழ்ந்த உலகில் கீழ்வானில் கதிரவன் தோன்றி இந்த உலகம் யாருக்காக என்பதை விளக்கத்தான் வேண்டும் என்ற ஆசிரியரின் விழைவோடும் கதை நிறைவு பெறுகிறது.

யாருக்காக உலகம்?

இந்தப் புதினத்தில் வரும் கதைமாந்தர்களின் இயல்புகளைக் கொண்டவர்களை நாம் நாள்தோறும் கண்டுகொண்டே இருக்கிறோம். இவர்களுள் யாருக்காக உலகம்?

கணவன் வேலைக்குச் சென்றதும் வீட்டு வேலை எதுவும் இல்லாமலேயே ஊரைச் சுற்றி வரும் இல்லத்தரசி; குழந்தைகளை வெளியே அனுப்பிவிட்டுப் பகலிலேயே மனைவியுடன் கொஞ்சிக் குலாவும் கணவன்; வீட்டுக்கு வந்ததுமே மனைவியை அடித்துத் துன்புறுத்தும் அரக்க மனம் கொண்ட கணவன்; ஒரு வேலையும் செய்யாமல் தன்னை அலங்கரித்துக்கொண்டு கணவனை மிரட்டி வேலை வாங்கும் மனைவி; வேலை எதுவும் தேடாமல் மனைவியின் நகைகளை அடகு வைத்துக் குடித்துவிட்டு வீட்டிலேயே கிடக்கும் கணவன்; வீட்டுச் செலவுக்குக் கொடுக்கும் பணத்தில் அரைகுறையாகச் செலவு செய்துவிட்டு வாரத்தில் நான்கைந்து நாள்களாவது பகல் காட்சிக்குச் சென்றுவரும் குடும்பத் தலைவி; மனைவியின் நச்சரிப்புத் தாங்காமல் அவளுக்காக அண்டைக் குடித்தனங்களுடன் தேவையில்லாமல் சண்டை ஏற்படுத்திக் கொள்ளும் கணவன்; ஒருவரை ஒருவர் புரிந்து தேவையறிந்து மகிழ்வுடன் வாழ்கின்ற கணவன் மனைவி; சுற்றிலும் நடக்கும் நிகழ்ச்சிகளில் அவ்வப்போது தலையிட்டுச் சமாதானம் செய்யும் குடும்பத்தவர் என ஒரே கட்டில் வாழுகின்ற ஒன்பது குடித்தனக்காரர்களின் இயல்புகள் கூறப்பட்டுள்ளனவே! – இவர் போன்றவர்களுக்காகவா?

மாட்டுத் தொழுவச் சாணத்தை வெள்ளம்போல் வீதியில் விட்டவர்களைக் கதிரவன் கண்டிக்க அவர்கள் அவனையே அடிக்க வந்தார்களே! – அத்தகையவர்களுக்காகவா?

இக்கொடுமையைக் கதிரவன் காவல் நிலையத்தில் சென்று சொல்ல; குற்றவாளிகளைக் கண்டிக்காமல் அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பினார்களே காவல் நிலையத்தார் அவர்கள் போன்றவர்க்கா?

பேருந்தில் ஒரு பெண்ணிடம் குறும்பு செய்த ஒருவனைக் கதிரவன் நெட்டித் தள்ளினான். அவன் கதிரவனைத் தாக்கக் கதிரவனும் அவனைத் தாக்க முற்பட்டபோது எதையுமே கண்டு கொள்ளாதவர்களாகப் பேருந்தில் அமர்ந்து கொண்டிருந்தார் களே, அவர்கள் போன்றவர்க்கா?

மாமியாரின் கொடுமை தாங்காமலும் கணவனின் ஆதரவு இல்லாததாலும் தற்கொலைக்கு முயன்று கதிரவனால் காப்பாற்றப்பட்டாளே வீணா - அவள் போன்றவர்களுக்கா?

இளைஞனாயிருந்தபோது ஒருநாள் திரையரங்கில் தன் தாய் வேறொருவருடன் இருக்கக் கண்டு நெஞ்சம் குமுறியவனாய் ஆத்திரத்தில் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்து தந்தையிடம் சொல்ல, அவன் குடியில் சொல்கிறான் எனத் தாய் சொல்லியதைக் கேட்டு, தந்தை அவனையே கண்டிக்க, அதனால் உலகையே வெறுத்துக் குடியிலேயே தன் வாழ்வை அழித்துக் கொண்டானே வீணாவின் கணவன் - அவன் போன்றவர்களுக்கா?

மகன் எவ்வளவு கொடுமைகள் செய்தாலும் அவனைக் கண்டிக்காது அனைத்துக்கும் மருமகளையே காரணமாக்கிக் கரித்துக் கொட்டுகிறாளே மாமியார் - அவள் போன்றவர்களுக்கா?

தேவையில்லாத பல பேசி, வாதப் பிரதிவாதங்கள் நடத்தி, கடைசியில் கைகலப்பு நேருமோ என்ற நிலையில் வெட்டிப் பேச்சு இப்படித்தான் தீமையாகும் என்று கதிரவன் கூறியபோது, "இதோ வந்துவிட்டார் திருவள்ளுவர் நீதி சொல்வதற்கு" என்று கேலி பேசி இகழ்ந்தார்களே - அவர்கள் போன்றவர்க்கா?

குடிசைகள் தீப்பற்றி எரிந்தபோது கதிரவன் ஓடிச் சென்று பொருள்களைக் காப்பாற்றி எடுத்த போதும், தீயில் சிக்கிக் காயமுற்ற போதும் ஏதும் துணை செய்யாமல் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தார்களே மக்கள் - அவர்கள் போன்றவர்க்கா?

கைராசிக்காரி என்று போற்றப்பட்டு, எத்தனையோ திருமண அழைப்பிதழை அவள் கையாலே அச்சிட்டுக் கொடுக்கும் தங்கம், வயது முதிர்ந்து தனக்கென ஒரு திருமண அழைப்பை அச்சுக் கோக்க முடியாதவளாக முதிர் கன்னியாய் வாடுகிறாளே - அவள் போன்றவர்க்கா?

மகப்பேறு வலியால் ஒரு தனியார் மருத்துவமனையின்முன் வீதியில் துடித்துக் கொண்டிருந்த பெண்ணைப் பணம் இல்லா விட்டால் இந்த மருத்துவமனையில் இடமில்லை; பொது

மருத்துவமனைக்குப் போ என்று இரக்கமில்லாமல் சொன்னார்களே - அவர்கள் போன்றவர்க்கா?

இரண்டு குழந்தைகளைப் பெற்று விட்டு, கணவன் பிடிக்கவில்லை என்று எவனோ ஒருவனுடன் ஓடிப் போனாளே கங்கை - அவள் போன்றவர்க்கா?

ஏதோ ஒரு வெறியில் ஓடிவிட்டாள் என்றும், தவறு ஏதும் நடக்கவில்லை என்றும், உயிரையும் மாய்த்துக் கொள்ளச் சென்றபோது தடுத்துக் காப்பாற்றியதாகவும் கதிரவன் எடுத்துச் சொன்னபோது, பெருந்தன்மையோடு கங்காவை மீண்டும் ஏற்றுக் கொண்டானே அவள் கணவன் காசிநாதன் - அவன் போன்றோர்க்கா?

ஏதாவது ஒன்று என்றால் அதுபற்றித் தீர அறியாமலேயே கண், காது, மூக்கு வைத்து வதந்தியைப் பரப்புகிறார்களே அத்தகையோருக்காகவா?

உலகத்தைப் பற்றிக் கவலைப்படுவது பிறகாகட்டும்; முதலில் நம்மைப் பார்த்துக் கொள்வோம் என்று கூறுகிற கம்பர் அச்சக உரிமையாளர் மாதவன் இருக்கிறாரே - அவர் போன்றோர்க்கா?

போராட்டங்கள், அவற்றில் கலந்து கொள்ளும் அனைவரின் விருப்பத்தினால் அன்று; கட்டாயத்தின் பேராலேயே நடைபெறுகின்றன. அறநெறிகள் என்று நாட்டில் அறமல்லாதவற்றைச் செய்துவருகிறதே ஒரு கும்பல் - அவர் போன்றார்க்கா?

மகள் கதிரவனைக் காதலிப்பதை அறிந்தும், அவள் விருப்பத்திற்கு மாறாகக் கட்டாயமாக அவளைத் திருமணம் செய்து வைக்கிறாரே வெண்ணிலாவின் தந்தை - அவர் போன்றார்க்கா?

குடிக்கும் கணவன்; அவனைக் கண்டித்தால் எங்கே எல்லாவற்றையும் அழித்துவிடுவானோ என்று அஞ்சி, அவன் ஆடுவதற்கெல்லாம் வளைந்து கொடுத்து, அவளே அவன் குடிக்க ஊற்றியும் தந்து, பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி, கணவனின் தொழிலைத் திறம்படச் செய்யச் செய்து தியாகத்தின் வடிவாய்த் திகழ்கிறாளே ஒரு தாய் - அவள் போன்றார்க்கா?

தாங்கள் கொலையைச் செய்துவிட்டு, ஒரு பாவமும் அறியாத கதிரவன்மீது அக்கொலைக் குற்றம் சேரக் காரணமாயிருந்தார்களே சிவகாமியின் அண்ணனும் மாமனும் அவர்கள் போன்றார்க்கா?

கவிஞர் கானம்பாடியின் எழுத்தாலும் பேச்சாலும் மாநகராட்சித் தேர்தலில் வெற்றிபெற்றுப் பின்னர் சட்டமன்றத் தேர்தலிலும் வெற்றிபெற்று அமைச்சரானதும், கானம்பாடியை

(கதிரவனை)க் காணவே வராத - மேல்மட்ட வாழ்க்கை கிடைத்ததும் மக்களைப் பற்றிச் சிந்திக்காது, வேற்று வழிகளில் தங்கள் வாழ்க்கையை உயர்த்திக் கொள்கின்ற மதிவாணன் போன்றோர் இருக்கிறார்களே - அவர்களுக்காகவா?

தன் மனத்தை ஒருவனுக்குக் கொடுத்தாள். அவனோ அவளை எப்படியெல்லாமோ ஆட்டிப் படைத்துவிட்டுக் கடைசியில் வேற்றொருத்தியைத் திருமணம் செய்துகொண்டான். ஆயினும் அவனைத் தவிர வேற்றொருவரை மனத்தில் அமர்த்திக் கொள்ள முடியாது தனி வாழ்க்கை வாழ்கிறாளே சின்னம்மா - அவள் போன்றார்க்கா?

யார், எவன் என்று தெரியாமலேயே கல்லூரியில் தன்னுடன் படிக்கும் ஒருவனுடன் சுற்றுவதும், தாய் அறிந்து கண்டித்து 'அவன் உன்னை ஏமாற்றி விட்டால் என்ன செய்வாய்?' என்றபோது கொஞ்சமும் கூச்சமில்லாமல் 'அவன் என்னை ஏமாற்றினால் நான் இன்னொருவனை ஏமாற்றுவேன்' என்று காதலைக் கொச்சைப்படுத்திப் பேசும் கலைச்செல்வியைக் காண்கிறோமே - அவள் போன்றார்க்கா?

பணத்தை எந்த வழியிலாவது சேர்க்க வேண்டும்; நாட்டையே காட்டிக் கொடுப்பதானாலும் எனக்குத் தேவை பணமே என்று சொல்லுகின்ற கார்வண்ணன் இருக்கிறானே - அவன் போன்றவர்களுக்கா?

தம்பி கதிரவன் செய்வது நல்லதுதான் என்று தெரிந்த போதும்,தன் கணவன் சினந்து கொள்வாரே என்பதற்காகக் கதிரவனிடம், 'உலகம் எப்படிப் போனால் என்ன? உன் வேலையைப் பார்' என்று பரிவோடு கூறியவளும், கதிரவன் கைதானான் என்ற செய்தியைப் படித்ததும் உடனே உயிர் விட்டவளுமாகிய பாசப்பேழை அரும்புக்கண்ணுவைக் காணுகிறோமே - அவள் போன்றவர்களுக்கா?

அரும்புக்கண்ணு இறந்ததும் உடனே வேற்றொரு திருமணத்தைச் செய்து கொண்டதோடு, கதிரவன் சென்னை மீண்டபோது வீட்டினுள் நுழையக் கூடாது என்று விரட்டினானே கதிரவனின் மாமா, அரும்புக்கண்ணுவின் கணவன் அவன் போன்றார்க்கா?

வெண்ணிலா கதிரவனை உயிருக்குயிராய்க் காதலிக்கிறாள். அவன் சிறைப்பட்டபோது, பெற்றோர் வேற்றொருவர்க்கு அவளைத் திருமணம் முடிக்க முயன்றபோதும் கதிரவனையே மணப்பேன் என்று உறுதியாகக் கூறினாள். பெண்ணடிமைப்

போக்குள்ள சமுதாய நிலையால் வேற்றொருவனுக்கு அவள் கட்டாயத் திருமணம் செய்து வைக்கப்பட்டாள். காதலில் தோல்வியே ஆயினும் சமூகக் கடமையை ஏற்றுக் கண்ணியம் குறையாமல் வாழ்க்கை நடத்தினாள். கதிரவனை மீண்டும் காண நேர்ந்தபோது, தான் இன்னொருவனின் மனைவி என்ற நிலையில் சிறிதும் தடுமாற்றமின்றி விளங்கினாள். கணவன் நாட்டுத் துரோகியாய் மாறியபோது, முடிந்தவரை தடுத்து, முடியாதபோது, அவனையே கொன்று நாட்டைக் காத்தாள். எந்த நிலையிலும் தனக்குள்ள பொறுப்பிலிருந்து சிறிதும் வழுவாது திகழ்ந்தாளே வெண்ணிலா - அவள் போன்றவர்களுக்கா?

தீமையைக் கண்டு பொங்குகின்ற மனம்; அநீதிகளை எதிர்த்துப் போராடுகின்ற குணம்; எத்துணைச் சோதனைகள் நேர்ந்தாலும் நேர்மையிலிருந்து விலகாத தன்மை; எழுத்தாலும் பேச்சாலும் சமூகத்தை முன்னேற்றிய தொண்டு; தன்னை வருத்திக் கொண்டேனும் ஊர் நலத்துக்கு உழைக்க வேண்டுமென்னும் உயர்ந்த நோக்கம். தான் விரும்பிய வெண்ணிலா, பெண்ணுரிமை இல்லாத் தன்மையால் இன்னொருவனுக்கு மனைவியாக நேரிட்டதை அறிந்து இரக்கம்; அதே வேளை பிறன்மனை நோக்காத பேராண்மையுடன் அவளிடம் நடந்துகொண்ட பண்பு; இவற்றின் இணைப்பாய்க் காணப்படுகிறானே கதிரவன் - அவன் போன்றார்க்கா?

யாருக்காக உலகம்? இஃது ஆசிரியரின் கேள்வி. இவர்கள் அத்துணை பேருக்குமே உலகம் இடமளித்துத்தான் வருகிறது. இஃது உண்மை. தீமையே இல்லாததாய் உலகம் இருந்துவிட்டால் நன்மைக்காய்த் தனியே மதிப்பு ஏது? உலகில் நன்மைக்கும் தீமைக்கும் இடையே என்றும் போராட்டம் நடந்தவண்ணந்தான் இருக்கும். இது நியதி. ஆயினும் நன்மை, தீமையை அடக்கி மேலோங்கி நிற்க வேண்டும். அந்நிலைக்குப் பாடுபடுபவர்களுக்கே இந்த உலகம் இருக்க வேண்டும் என்பது புதின ஆசிரியரின் விழைவு. இந்த விழைவு நிறைவேற இயன்ற அளவு பாடுபடவேண்டும் என்பதே புதினத்தைப் படிப்போரின் கடமை.

உலகம் இன்பமும் துன்பமும் இணைந்ததே. ஒரு வீட்டில் சாப்பறை கொட்டுகிறது. இன்னொரு வீட்டில் மணமுரசு முழங்குகிறது. கணவனோடு கூடியிருப்பவர்கள் மலர்சூடி மகிழ்ச்சிப்பெருக்கில் திளைக்கிறார்கள். அதேவேளை, கணவனைப் பிரிந்தோரோ கண்ணீர் வழியப் பொலிவிழந்து வாடுகிறார்கள். இறைவன் இன்பமும் துன்பமும் ஒன்றாய் இருக்கும்படி உலகை

ஏன் படைத்தான்? அவனுக்குப் பண்பே இல்லையோ? இப்படி எண்ணுகிறார் பக்குடுக்கை நன்கணியார் என்ற சங்கப் புலவர். உடனே அவர் மனமோ, 'உலகில் இன்னாமையும் இனிமையும் இணைந்தேதான் இருக்கும். இஃது இயல்பு. இந்த இயல்பை உணர்ந்து இன்னாமையை இனியதாய் ஆக்க வேண்டுவதே நம் கடமை' என்கிறது.

ஓர்இல் நெய்தல் கறங்க, ஓர்இல்
ஈர்ந்தண் பாணி முழவு ததும்பப்,
புணர்ந்தோர் பூஅணி அணியப், பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பு இலாளன்;
இன்னாது அம்ம இவ்வுலகம்
இனியகாண்க இதன்இயல்பு உணர்ந் தோரே

எனும் இந்தப் பாடலுக்கு ஒரு புதின வடிவைத் தந்திருக்கிறார் திரு. மூவேந்தர் முத்து.

குறிக்கோள்

'வாழ்க்கை எழுத்தாளனுக்குத் தரும் அனுபவக் கலையே புதினத்துக்கு மூலப் பொருள். புதினத்திற்குப் பெரியதொரு கதைக்கரு, கதைக்கு வேண்டிய கதை மாந்தர்களை இயக்கிச் செல்லும் நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிகளுக்கேற்ற சூழ்ச்சிகள், சூழ்ச்சிகளுக்கும் கதைமாந்தப் பண்புகளுக்கும் ஏற்ற உரையாடல்கள் ஆகிய இத்துணையும் வேண்டும்; எல்லாவற் றிற்கும் மேலாகக் குறிக்கோள் வேண்டும்' என்கிறார் அகிலன். குறிக்கோள் இல்லாப் புதினம் உரிய பயனைத் தராது. மூவேந்தர் முத்து அவர்களோ தேர்ந்த குறிக்கோள்களுக்காகவே இப்புதினத்தை எழுதியுள்ளார்.

அடுத்த வீட்டில் வாழ்பவர்கள் யார் என்று அறிந்து கொள்ளும் அக்கறையற்றவர்களாக நகர மக்கள் வாழ்கிறார்களே! தீமைகளைக் கண்டும் அவற்றைத் தடுக்க முன் வருவோர் இல்லையே! சமூகத்தில் பெண்கள் படும் கொடுமைகளுக்கு எல்லையே இல்லையே! இவற்றையெல்லாம் போக்கவும் நீக்கவும் மக்கள் கிளர்ந்தெழ வேண்டும் என்னும் எண்ணத்தை ஊட்டுவதே இப்புதினத்தின் உட்பொருள் எனலாம்.

உண்மையைச் சொன்னால் உதைக்க வருகிறது உலகம். தன் நலத்துக்காகப் பொது நலத்தைக் கெடுக்கும் கூட்டம் பெருகி வருகிறது. சமுதாய வானில் படிந்துள்ள கறை இருளை அகற்றக்

கீழ்வானில் கதிரவன் தோன்றியே ஆக வேண்டும் என்பது ஆசிரியரின் எதிர்பார்ப்பு.

தாங்கள் பிழைக்க வேண்டியதுதான். அதற்காக மற்றவர்கள் பாதிப்புக்கு உள்ளாகக் கூடாது என்ற நியாய உணர்வுகூட இருப்பதில்லை. இஃது ஏன்? தவறு செய்யும் ஒவ்வொருவரும் பல காரணங்களைச் சொல்லித் தவற்றை நியாயப்படுத்துகிறார்களே? அக்கிரமங்களைக் கண்டிக்க வேண்டுமெனும் துடிப்பு நாளாக ஆகக் குடும்ப பாசம், பந்தம் இவற்றால் அமுங்கி மறைந்து விடுகிறதே - இது ஏன், என ஆசிரியரின் உள்ளம் நூல் முழுவதும் இடையறாது பல வினாக்களை எழுப்பிக்கொண்டே இருக்கிறது. இவ்வினாக்களுக்கெல்லாம் சரியான விடைகளைக் காண்பதே இப்புதினத்தின் முழுமையான குறிக்கோள்.

நாமுண்டு, நம்முடையது உண்டு என்று ஒவ்வொருவரும் எண்ணிக் கொண்டால் இந்த உலகம் என்னாவது? இத்தன்னலப் போக்கை அகற்ற யாராவது ஒருவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு இடையறாது உழைக்க முன்வர வேண்டும் என்பதை விளக்குவதே இப்புதினத்தின் நோக்கம்.

நம் மக்கள் அறிவு மிக்கவர்கள்; ஆற்றல் வாய்ந்தவர்கள்; உழைப்பதற்கு அஞ்சாதவர்கள்; உழைத்துக் கொண்டும் இருக்கிறார்கள்; ஆனாலும் அவர்கட்கு முன்னேற்றமான வாழ்க்கை அமையவில்லையே, ஏன்? எனக் கானம்பாடி (கதிரவன்) கேட்கும் கேள்வியை நாம் ஒவ்வொருவரும் நமக்குள்ளே கேட்டு அதற்கு உரிய விடை காணவேண்டு மென்பதே இப்புதினம் எழுதப் பட்டதற்கான காரணம்.

கதைக் கரு

கதைக் கரு என்பது ஒரு தொடர் கதை போன்றதாகவோ அல்லது தனி நிகழ்ச்சியாகவோ இருக்கலாம். முத்து அவர்கள் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கதைக் கருவாகக் கொண்டிருக்கிறார். பெரும்பாலும் உண்மை நிகழ்ச்சிகளே கதையாக ஆக்கப்பட்டுள்ளன. உண்மை நிகழ்ச்சிகளைப் புதினமாக மாற்றுவதற்கு ஏற்றவாறு கற்பனை நிகழ்ச்சிகளும் சேர்க்கப் பட்டுள்ளன.

மாட்டுத் தொழுவக்காரர்கள், பேருந்தில் பெண்களிடம் வம்பு செய்யும் இளைஞர்கள், பொது இடங்களில் ஏற்படும் அவசியமற்ற சண்டைகள், அறப் போராட்டம் என்ற பெயரால் வெறியாட்டமிடும் கும்பல், சிக்கல்களை நேருக்கு நேர் சந்திக்க

முடியாமல் தற்கொலையை நாடும் கோழைகள், தவறு செய்தவர் தப்பிப்பதும் நேர்மையாளர் தண்டிக்கப்படுவதுமான அவலநிலை; இளமை முறுக்கில் இன்னதென்று தெரியாமலேயே ஆணும் பெண்ணும் பழகித் தவறுக்கு ஆளாதல் என்பன போன்ற தனி மனித, குடும்ப, சமுதாயச் சிக்கல்களே இப்புதினத்தின் கதைக் கருவாய் இருந்திடக் காண்கிறோம். முட்டையைக் கோழி அடைகாத்துக் கருவுக்கு உயிர் கொடுத்தல்போல செய்திகளைத் தன் மனத்தில் அடைகாத்து, சிந்தனையாம் வெப்பத்தை ஊட்டி, இப்புதினத்தை முத்து உயிர்ப்பித்திருக்கிறார்.

படைப்புத் திறன்

'இது நடந்திருக்கத்தான் வேண்டும் என்னும் உணர்வைக் கதை உண்டாக்க வேண்டும். அதில் நடக்கும் நிகழ்ச்சிகள் இப்படித்தான் நடக்க முடியும், வேறு வகையில் நடக்க முடியாது, வேறு வகையில் நடக்க நியாயமுமில்லை என்ற கருத்தை நல்ல புதினம் தோற்றுவிக்க வேண்டும்' என்பார் மேடாச்சு போர்டு என்னும் அறிஞர்.

முத்துவின் இப்புதினத்தில் இது நூற்றுக்கு நூறு உண்மையாகிறது. வீதிகளிலும், பேருந்துகளிலும், மருத்துவ மனைகளிலும், காவல் நிலையங்களிலும் என்ன நடக்கிறதோ - நடக்க முடியுமோ அவற்றையே முத்து தம் முத்தான எழுத்துகளில் வடித்திருக்கிறார். கொலைகாரர்கள் கொலைப்பழியை வேற்றொருவர்மேல் எப்படிப்போடுவது என்றுதாமே பார்ப்பார்கள். அப்படித்தானே கதையிலும் நடக்கிறது.

பெண்களை வற்புறுத்தித் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளச் செய்யப் பெற்றோர்கள் 'இது நடக்காவிட்டால் நாங்கள் பிணமாவோம்' என்று மிரட்டுவதுதானே இயல்பு. இதுதானே புதினத்தில் வெண்ணிலாவின் வாழ்க்கையில் நடைபெறுகிறது. இதுபோன்றே ஒவ்வொரு நிகழ்ச்சியும்.

கதையை ஆசிரியர் தாமே கூறிச் செல்வது ஒரு முறை. கதை மாந்தர்கள் தம் கதையைத் தாமே கூறுவதுபோல எழுதுவது ஒரு முறை. இப்புதினத்தில் மூவேந்தர் முத்து கதைமாந்தர்களைச் சந்திக்கச்செய்து, அவர்களது உரையாடல் மூலம் அக்கதை மாந்தர்களின் பண்பு நலன்களையும் உணர்ச்சிகளையும் எடுத்துக் காட்டிச் சுவைகுன்றாமல் கதையை வளர்த்துச்செல்லும் உத்தியைக் கையாண்டிருக்கிறார்.

இப்புதினத்தில் பல சிறு நிகழ்ச்சிகள் ஒன்றிணைக்கப்பட்டு அவையாவும் ஒரு சட்டத்துள் அமையுமாறு செய்யப்பட்டிருக் கிறது. ஒன்றை முற்றிலும் கற்பனையாக எழுதுவதைவிட உண்மை நிகழ்ச்சிகளுக்குக் கற்பனையை ஊட்டி எழுதுவது உள்ளத்தைக் கவரக் கூடியதாக இருக்கும். முத்து அவர்கள் தாம் கண்டுணர்ந்த தனித்தனிச் செய்திகளை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி இப்புதினத்தை உருவாக்கியிருக்கிறார்.

ஒரே கட்டில் குடியிருக்கும் ஒன்பது குடித்தனக்காரர்களின் இயல்புகளை அவர் வெவ்வேறு இடங்களில் கண்டிருக்கலாம். ஆயினும் புதினத்தில் அவர்களை ஓரிடத்தில் சேர்த்து ஒன்பான் சுவையையும் உண்டாக்கி விடுகிறார். வெவ்வேறு மனப்போக்கு கொண்டவர்களை ஓரிடத்தில் இணைக்கின்ற நிகழ்ச்சிகளை உருவாக்கி அரிய கருத்துகள் வெளிப்பட இடமேற்படுத்துகிறார்.

ஓரளவுக்குத் தன்வரலாற்றுத் தன்மை வாய்ந்த போக்கில் தங்களது சொந்த வாழ்வின் வெளிப்பாடாகவும் புதினத்தைப் படைப்பதுண்டு. மூவேந்தர் முத்துவே புதினத்தில் கதிரவனாகப் படைக்கப்பட்டிருக்கிறார் என்பதை முத்துவை அறிந்தவர்கள் உணர்வர். கதிரவன் என்னும் கதைமாந்தனுக்குச் செய்திருக்கும் கற்பனை என்ற புனைவை நீக்கிவிட்டால் அங்கு நாம் முத்துவைத்தான் காண முடியும். மற்ற கதை மாந்தர்களும் முத்து அறிந்த அல்லது பார்த்தவர்களாகவே இருப்பர் என்பதைப் புதினத்தைப் படிக்கும்போது உணர முடிகிறது.

ஆசிரியர் விவரங்களை ஒழுங்குபடுத்தி உண்மையாகவே வாழ்க்கையில் நடப்பது போன்ற தோற்றத்தைப் படிப்பவர் களிடையே ஏற்படுத்திவிட்டால் புதினம் வெற்றி பெற்றதாகிறது. இ.எம். பாகடர் குறிப்பிடுவதுபோலப் புதின ஆசிரியன் நோக்கம், தான் சொல்ல வருவதைப் படிப்போர் ஒத்துக் கொள்ளும் வகையில் ஏற்புறச் சொல்வதுதான். இப்புதினத்தைப் பொறுத்த வரை செய்திகள் பொருத்தமுற இயைக்கப்பட்டுள்ளன. நடக்க முடியாதது என்று ஒதுக்குவதற்கு எதுவுமே இல்லை.

கதை மாந்தர்களின் பண்புகள், குணநலன்களுக்கேற்பப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. உலகை மூடிக் கிடக்கும் தன்னல இருளை ஓட்ட வேண்டுமெனப் பாடுபடும் கதைத் தலைவனுக்குக் 'கதிரவன்' எனப் பொருத்தமான பெயர் சூட்டப்பட்டுள்ளது. கதிரவன்முன் இருள் தோற்றோடித் தானே போக வேண்டும். நிலா, கதிரவனால் ஒளி பெறுவது; கதைத் தலைவன் கதிரவனால் வாழ்க்கை ஒளி பெறுகின்ற வாய்ப்பை இழந்துவிட்டாலும்

அறிவொளியைப் பெறுகின்ற பெண்ணுக்கு 'வெண்ணிலா' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

வெண்ணிலாவுக்கு நேர் எதிரான குணத்தைப் பெற்றிருக்கும் அவள் கணவன், நிலவை மறைக்கும் இருண்ட மேகத்தைச் சுட்டும் 'கார்வண்ணன்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறான். கங்கா - அவள் கணவன் பெயரோ காசிநாதன். கல்வியோடு நெருங்கிய தொடர்பு கொண்டது அச்சுக் கலை. ஆதலின் அச்சுக் கூடத்திற்குக் கல்வியிற்சிறந்த 'கம்பர்' பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அரும்புக்கண்ணு, கலைச்செல்வி, கதிர்ச்செல்வி என அருமையான தமிழ்ப் பெயர்கள் புதினத்தில் இடம் பெற்று நம்மை மகிழ்விக்கின்றன. தமிழர்கள் தங்கள் குழந்தைகட்கு இப்போது தமிழில் பெயர் வைப்பதையே மறந்துவிட்டனர். வடமொழிப் பெயர்களெல்லாம் தமிழ்ப்பெயர்களாக மாற்றி அமைக்கப்பட்டும், தூய தமிழ்ப் பெயர்கள் சூட்டியும் மகிழ்ந்த நிலை மாறி இன்று செல்லும் போக்கைப் பார்த்தால் எதிர்காலத்தில் மக்கட்குத் தமிழ்ப் பெயர்கள் இருக்குமோ என்ற ஏக்கம் ஏற்படுகின்றது.

'தமிழரின் தமிழ்க் குழந்தை தமிழ்ப் பெயர் பெறுதல் வேண்டும்' என்ற இயக்கம் தோன்ற வேண்டிய சூழ்நிலை; நண்பர் முத்து புதினத்தில் அழகிய தமிழ்ப் பெயர்களை ஆண்டு, அறிஞர் மு.வ.வை நமக்கு நினைவுபடுத்தி வருகிறார். இதற்காக அவருக்கு நம் நெஞ்சு நிறைந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்வோம்.

உரையாடல்

ஆசிரியரே கதை சொல்வதாக அமையும் புதினத்தில் இடையிடையே உரையாடல்கள் இருந்தால்தான் கதைக்குச் சுவை உண்டாகும் என்பார் மிரியம் அல்லாட். இப்புதினத்தில் இடையிடையே என்றில்லாமல் புதினம் முழுவதுமே நிகழ்ச்சி களைக் காட்டிலும் கதை மாந்தர்களின் உரையாடல்களே, சிந்தனையைத் தூண்டி ஆழமான தத்துவக் கருத்துகளை உணர்த்துவனவாயுள்ளன. இக்கதைமாந்தரின் பேச்சு இப்படித் தான் இருக்கும், இதுதான் இயற்கை என்ற வகையில் உரை யாடல்கள் வெகு பொருத்தமாக அமைந்துள்ளன.

வெண்ணிலாவும் கதிரவனும் பேசிக் கொள்கின்றனர் :

"கதிரவன்! வெளியூர்த் திருமணம், கூட்டம் என்றெல்லாம் போய் நேரத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். அங்கேபோய் ஏதாவது போராட்டம், அது, இது என்று வம்பு செய்து கெட்ட பெயர் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்."

"நியாயமான உணர்வுகள் என்று எனக்குத் தோன்றினால் அதை எதிர்த்துப் போராட வேண்டுமென்று தோன்றுகிறது வெண்ணிலா."

"போராடாமலும் நியாயத்தைச் சொல்லலாமே. அற வழியிலும் நாம் வெல்ல முடியும்."

"எனக்கு அப்படித் தோன்றவில்லை."

"இதுவரை நீங்கள் தனிமனிதர். இப்போது நானும் உங்களில் ஒருத்தியாக - பாதியாக இருக்கப் போகிறேன் என்பதை மறந்து விடாதீர்கள்."

"வெண்ணி! நீ சொல்வதும் நியாயம்தான். உனக்காக வேண்டுமானால் இனிமேல் வேகமில்லாமல் பிரச்சினைகளைச் சந்திக்கிறேன்." இவ்வுரையாடல் போலவே புதினத்தில் அனைத்து இடங்களிலும் உரையாடல்கள் உயிரோட்டம் உள்ளனவாகவும், கதைமாந்தரிடம் இழையோடி நிற்கும் உறவையும் தொடர்பையும் விளக்குவனவாகவும் அமைந்துள்ளன.

நீண்ட உரையாடல் சுவையைக் குறைக்கும் என்பர். ஆனால் மூவேந்தர் முத்துவோ சில இடங்களில் நீண்ட பேச்சுகளை அமைத்து அவற்றின்வழிக் கதைக்கும் உணர்வுகளுக்கும் நிறைவு சேர்க்கும் தனித்திறன் பெற்றவராய் விளங்கிடக் காண்கிறோம்!

புதினத்தின் இடையில் நீதிகள் இழைந்திருக்க வேண்டும். தத்துவக் கருத்தக்கள் கரைந்திருக்க வேண்டும். ஆனால் அவை புதின ஆசிரியரின் பிரச்சாரமாக ஆகிவிடக்கூடாது. "புதினத்தை வைத்துக் கொண்டு எது வேண்டுமானாலும் செய்யலாம். வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் புகுந்து ஆராயலாம். சிந்தனையுலகத்தின் பகுதிகளில் புகுந்து ஆராய்ச்சி செய்யலாம். ஒன்று மாத்திரம் செய்யக் கூடாது. எக்காரணம் கொண்டும் ஆசிரியன் என்ற முறையில் பிரச்சாரம் செய்யுக்கூடாது" என்பர் அறிஞர். பிரச்சாரத்துக்குரிய கருத்துகளை முத்து கதைமாந்தரின் உரையாடல்களிடையே அமைத்து, கதைப் பகுதியாகவே ஆக்கி விடும் கெட்டிக்காரராய் இருக்கிறார்.

கதைகளிலும் காப்பியங்களிலும் படிக்கும்போது போற்று கின்ற ஒன்றை நாம் நடப்பியல் வாழ்க்கையில் ஏற்காது எதிர்க்கிறோம் என்னும் கருத்து, கதிரவன் - அச்சக உரிமையாளர் உரையாடலில் பளிச்சிடுகிறது.

கதிரவன் வெண்ணிலா கடற்கரை உரையாடலில் இன்றைய பெண்கள் நிலைமை, பெண்கள் முன்னேற்றம் பற்றிய கருத்துகள் விரிவாக இடம் பெறுகின்றன.

அச்சுக் கோக்கும் அரவிந்தன், அல்லி உரையாடலால் அச்சுத் தொழிலிலுள்ள பல கூறுகள் விளக்கம் பெறுகின்றன.

கிராமத்தில் கதிரவன் பேசிய பேச்சில் இன்றைய கிராமத்தின் நிலையும், கிராம முன்னேற்றத்திற்கான கருத்துகளும் இடம் பெறுகின்றன.

இதழில் கானம்பாடி இவ்வாறு எழுதினார் என்று சொல்லும் முறையில் சமுதாயச் சிக்கல்கள் அனைத்தும் அலசப்படுகின்றன.

கதிரவனும் வெண்ணிலாவும் பிரிவுக்குப்பின் சந்தித்தபோது உரையாடுவதில், பெண் காதலிப்பவனை அடைய முடியாத அவல நிலையில் அவளை எவ்வாறு சமூகம் கொடுமைப்படுத்துகிறது என்பது தெளிவாக்கப்படுகிறது.

இப்புதினத்தில் உரையாடல்கள் அனைத்தும் கருத்து விளக்கங்களாகவே அமைந்திருப்பது தனிச் சிறப்பாகும்.

கதைமாந்தர் படைப்பு

கதைமாந்தர்களே கதைக் கோப்பை உருவாக்குகின்றனர். கதைக்கு முதன்மை கொடுத்துக் கதைமாந்தர்களைப் படைப்பது ஒரு முறை. கதைமாந்தர்களே முதன்மை பெறும்படியாக எழுதுவது ஒரு முறை. இப்புதினத்தில் கதைமாந்தர்களை முதன்மைப்படுத்தி, அவர்களுடைய எண்ணப் போக்குகளுக்கேற்ற வகையில் கதை பின்னப்பட்டுள்ளது.

இவான் துர்னேவ் என்னும் அறிஞர், "என்னுடைய தொடக்க நிலையாக நான் கருத்துகளை ஒருபோதும் எடுத்துக்கொண்ட தில்லை. மாறாகக் கதைமாந்தர்களையே என்னுடைய தொடர் நிலையாக எப்போதும் நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன்" என்பார்.

இக்கூற்றுக்கேற்ப முத்துவும் கதைமாந்தர்களுடைய சொல்லையும் செயலையும் முன்னிறுத்தி, அவர்கள் வாயிலாகச் சமுதாயத்திற்குச் சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்லி யிருக்கிறார்.

ஒருவர் ஒரு குறிக்கோளை நிறைவேற்றுவதில் வெற்றி கண்டிருக்கலாம். அல்லது இயல்பான வாழ்க்கையை ஏற்றுக் கொண்டிருக்கலாம். இவ்விருவகைக் கதைமாந்தர்களையும் ஆசிரியர் இப்புதினத்தில் படைத்துக் கொண்டுள்ளார்.

இராபர்ட் லிட்டெல் கூறுவதுபோல, கதைப்பின்னலினால் கதைமாந்தர்கள் உருவாகின்றதாகவும் கதைமாந்தர்களினால் கதைப்பின்னல் உருவாகின்றதாகவும் ஒன்றையொன்று தழுவிச் செல்லும் வகையில் புதினம் அமைந்திருக்கிறது.

சமூக எண்ணம்

எழுத்துகள் எவையாயினும் அவை இன்றைய வாழ்க்கைச் சிக்கலுக்கு விடைகாணுவதாக அமையவேண்டுமெனும் கொள்கை யுடையவர் மூவேந்தர் முத்து. அதனாற்றான் "மனைவியை அடக்க நினைக்கும் கணவன், அடங்காமல் அவனை விரட்டும் மனைவி, கட்டுக்கடங்காப் பிள்ளைகள், காளையாய்ச் சுற்றும் குடும்பத் தலைவன், பெண்மையை மதிக்காத கணவன், ஆண்களை மிதிக்கும் பெண்கள், காதலை மோதலாக்கும் கூட்டம், அக்காதலையே விலைபேசும் வனிதையர், உழைப்பை மதிக்காத மனிதர், உழைப்பவரை ஏய்க்க முயலும் பண முதலைகள், உழைக்காமல் சோம்பித் திரியும் மாந்தர் பற்றிய பிரச்சினைகளை" எழுதி அவற்றுக்கெல்லாம் தீர்வுகாண வேண்டுமென விழைகிறார்.

"கற்பிற்சிறந்தவள் கண்ணகியா, மாதவியா, சீதையா? என்று காரணம் தேடினோம்; கந்தல் துணியின்றிக் கிடக்கும் மக்களின் துயர்தீர நாம் சிந்திக்கவில்லை. களத்தில் வெற்றி கொண்டவன் இராமனா - இராவணனா? என்று இலக்கியத்தை ஆராய்ந்தோம்; ஆனால் வாழ்க்கைப் போராட்டத்தை வெல்வதற்கு என்ன வழி என்று ஆராய்ந்து சொல்லவில்லை.

'அண்ணன் - தம்பி பாசத்தில் பரதனா, இலக்குவனா என்று நடந்துபோன கதைக்கு நாள் முழுவதும் விவாதம் செய்கிறோம். ஆனால் உடன் பிறந்த அண்ணன் தம்பிகள் சொத்துக்காகக் கொலை செய்யும் அளவிற்குப்போவது ஏன் என்பதை உணர்த்தித் திருத்த முடியவில்லை.

"முல்லைக் கொடிக்குத் தேர் கொடுத்தான் பாரி என்று இரக்க நெஞ்சத்தை ஈரமான மனிதர்களிடம் எடுத்துரைக்கிறோம். ஆனால் இங்கே வயிற்றில் ஈரத்துணியை நனைத்துச் சுற்றிப் பசியை ஆற்றிக் கொள்கிறோமே அதற்கு மாற்று என்ன என்பதை எண்ணிப் பார்க்க முடியவில்லை" என இன்றைய சமுதாய நிலையையே எண்ணிப் பார்க்கிறார் ஆசிரியர்.

சிறப்புக் கூறுகள்

நம் கண்முன்னே நாம் நாள்தோறும் காணுகின்ற கொடுமை களை - நம் மனத்தில் நினைத்துக் கொண்டிருப்பவைகளை முத்து ஓர் அரிய புதினமாக்கித் தந்திருக்கிறார். வரிக்கு வரி வாழ்க்கை உண்மைகள்; சிந்திக்கத் தூண்டும் கருத்துகள். புதினத்தின் எந்த ஒரு பக்கத்தையும் மேலோட்டமாகப் புரட்டிவிட முடியாது; இப் புதினத்தில் முத்து கூறியுள்ள ஒவ்வொரு கருத்தும் ஒரு தனி நூலே

எழுதக் கூடிய அளவுக்கு விரிவானதாகும். 'பனித்துளி தன்னுள்ளே பனைமரத்தை அடக்கிக் காட்டுவது போல' பரந்துபட்ட இவ்வுலகம் இப்புதினத்துள் அடங்கிக் கிடக்கிறது என்பது மிகையாகாது.

செய்திகளை எல்லாக் கோணங்களிலிருந்தும் பார்த்து அவற்றை அலசி, ஆராய்ந்து அதன் பல்வேறு பரிணாமங்களையும் புரிய வைக்கும் திறமையை முத்துவிடம் காண்கிறோம். உழைத்து முன்னேற வேண்டும் என்பதை வலியுறுத்தத் தம் மனத்தில் உள்ளவற்றையெல்லாம் கொட்டிக் குவிக்க இந்தப் புதினத்தை முத்து பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

"எந்தத் தொழிலாக இருந்தாலும் இழிவு என்றும் கௌரவம் என்றும் பார்க்கக் கூடாது. அப்படிப் பார்க்காமல் உழைத்தவர்கள்தான் இந்த உலகத்தில் சாதனைகளைப் படைத்த வர்கள்" என உழைப்பின் மேன்மையை எடுத்துரைக்கிறார்.

நளினநடைக்கு இவரிடத்தில் வறுமை ஏது? வெண்ணிலா வும் கதிரவனும் காதலர்கள். கதிரவனின் அக்காள் அரும்புக்கண்ணு ஒருநாள் அவனைக் கன்னத்தில் அடித்துவிட்டாள். முத்து எழுதுகிறார் "அரும்புக்கண்ணு கன்னத்தில் அடித்துவிட்டாள் என்பதைக் கேட்ட, வெண்ணிலா தன் கன்னத்தைத் தடவிவிட்டுக் கொண்டாள். இதுதான் காதலின் தன்மையோ?" - எடுத்துக்காட்ட இப்படி எத்துணை இடங்கள்!

"இந்த உலகம் யாருக்காகப் படைக்கப்பட்டிருக்கிறது? தங்களுக்கு மட்டுமே என்று நினைக்கிறார்களே! மற்றவர்களும் வாழ வேண்டாமா?"

"ஒருவன் தனக்காக வாழாமல், ஊர் மக்களுக்காகவும் வாழ வேண்டும். யாருக்காக உலகம் என்பதை விளக்கவேண்டும். தாழ்ந்து கிடக்கும் மக்களைக் கைகொடுத்துத் தூக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல வழிகளைக் காட்டவேண்டும்."

"உடல் சோர உழைத்தும் வயிறு நிறையாத மக்களுக்கு யாருக்காக உலகம் என்பதை உணர்த்துவதற்குக் கதிரவன் போன்றவர்கள் வாழத்தான் வேண்டும்" என்பது முத்துவின் முடிந்த முடிபு.

மானம் காக்கும் எழுத்து

எழுத்துகள் ஆடையணிந்து மானத்தோடு வாழ வேண்டும். ஆடையில்லாத அலங்கோல எழுத்துகள் உலவி வரும் இந்நாளில் எழுத்தறம் தவறாது எழுதுகின்ற மூவேந்தரை முத்துவை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவருடைய எழுத்திலேயே

கூறுவதென்றால் முத்துவின் எழுத்து, "மண்ணின் மானம் காக்கும் எழுத்து; இந்த மண்ணை மட்டுமன்று, மக்களின் மானத்தையும் காத்து அவர்களை நல்வாழ்வு வாழவும் வைக்கும்."

புதினத்தைப் படிக்கும்போது, நம்முடன் எளிமையாகப் பழகி உரையாடும் முத்துவிடம் இவ்வளவு பெரிய எழுத்தாற்றலா என்றெண்ணி வியக்கிறோம். "அமைதியான தோற்றம் அளிக்கும் கதிரவன் உள்ளத்தில் இவ்வளவு தீவிரச் சிந்தனைகளா! அவன் எவ்வளவு உணர்ச்சிக் குழம்பாகக் கருத்துகளை எடுத்து வைக்கிறான்" என வெண்ணிலா வியக்கிறாளே, அது முத்துவின் எழுத்துக்கும் பொருந்தும்.

படிப்போர் பல கோடி

தெளிவான சொற்கள்; தேவையான சொற்கள்; கருத்தையும் உணர்ச்சியையும் ஊட்டுகின்ற சொற்களால் இப்புதினம் நடைபோடுகிறது. படிப்பவரின் நெஞ்சில் எண்ணற்ற வினாக்களையும் சிந்தனைகளையும் கிளர்ச்சியையும் உண்டாக்கும் ஆற்றல் வாய்ந்ததாக இப்புதினம் திகழ்கிறது.

"எந்த ஒரு மனிதன் தன் இதயத்தினுள்ளே நோக்கி அங்கே தான் கண்டுணர்ந்ததை நேர்மையுடன் எழுதுகிறானோ அவன் எண்ணற்ற வாசகர்களைப் பெற்றவனாவான்" என்பது எட்கோவ் என்பார் பொன்மொழி.

முத்துவின் உள்ளத்துள்ள கருத்துகள், உணர்ச்சி வடிவெடுத்து, தெள்ளத் தெளிந்த தமிழில், தெவிட்டா அமிழ்தமாகத் தரப்பட்டிருப்பதால் இப்புதினத்தைக் கோடிகோடி பல கோடி மக்கள் படித்துப் பயன்பெறுவர் என்பது உறுதி.

வாழ்க என் இளவல் மூவேந்தர் முத்து!

ஆல்போல் தழைக்க என்றும் அவர் தமிழ்ப்பணி.

நூல் ஆக்கம்	மூவேந்தர் முத்து
வகைமை	புதினம்
வெளியீடு	பூவழகி பதிப்பகம், சென்னை–14. (1991)

21

மலைநாட்டின் மீதினிலே

பதினேழாம் நூற்றாண்டில் குமரகுருபரரும் சிவப்பிரகாச சுவாமிகளும், பதினெட்டாம் நூற்றாண்டில் சிவஞான முனிவரும் தாயுமான அடிகளும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராமலிங்க அடிகளும் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் இறையுணர்வு கலந்த பாக்களைப் பெருமளவில் பாடியாற்றிய பணியை இந் நூற்றாண்டில் பெருங்கவிக்கோ சேதுராமன் செய்து வருகிறார். இன்றைய நிலையில் நானூறு, ஐந்நூறு பக்கங்களைக் கொண்ட கவிதை நூல்களை வெளியிடுகின்ற துணிவு கவிஞர் சேதுராமன் ஒருவர்க்கு மட்டுமே இருக்கிறது என்று சொல்லலாம். 'தமிழ்முழக்கம், நெஞ்சத் தோட்டம், எண்ணச் சுடர், தாய்மண், ஐயப்பன் ஆற்றுப்படை' ஆகிய அவருடைய கவிதைநூல்களைத் தொடர்ந்து, 'மலைநாட்டின் மீதினிலே' எனும் இந்நூல் வெளிவருகிறது. மலேசிய மாமுனி சுவாமி இராமதாசரின் மணிவிழாவில் கலந்து கொள்வதற்காக மலேசியா சென்றிருந்த கவிஞர், அந்நாட்டுத் தமிழர் தமக்கு அளித்த வரவேற்பிற்கும் விருந்தோம்பலுக்கும் நன்றி தெரிவிக்கும் முறையில் இக்கவிதை நூலை யாத்துள்ளார்.

சேதுராமன் பயணத்தைக் கப்பலில் மேற்கொண்டார். அப்பயணத்தை ஒரு காவியமாக எழுதவேண்டுமென எண்ணங்கொண்டு மணிமொழி என்னும் இளைஞனையும், கனிமொழி என்னும் நங்கையையும் கற்பனைப் பாத்திரங்களாய்ப் படைத்துக்கொள்கிறார். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் கற்றவனையே திருமணம் செய்துகொள்ள முடியும் என்று கனிமொழி கூற, அவளைக் காதலிக்கும் மணிமொழி அந்த அறுபத்து நான்கு கலைகளையும் ஒருசேரக் கற்றவர் மலேசிய மாமுனி இராமதாசர் என்பதறிந்து அவரைக் காண மலேசியா புறப்பட்டான்.

காப்பியத்தில் சேதுராமன் தன்னைப் 'பாமணி' எனப் புனைந்து கொள்கிறார். பாமணியும் மணிமொழியும் கலத்தில்

ஒருவரையொருவர் அறிகின்றனர். இருவரும் நாடிப்போவது ஒருவரையே என்பதறிந்ததும், மணிமொழி பாமணியைத் தன் காதலுக்குத் துணைசெய்யுமாறு வேண்டுகிறான். பாமணியும் துணை செய்வதாய் வாக்களிக்கிறார். இருவரும் ஈப்போ நகரில் முனிவரைச் சந்திக்கின்றனர். பாமணியின் நாட்டுப் பயணமும் மணிமொழியின் காதற் பயணமும் இணையுமாறு சேதுராமன் இக்காப்பியத்தை இயற்றியுள்ளார். பாமணியின் பயணமும் மணிமொழியின் காதலும் இனிதே நிறைவேறுகின்றன. பயண நூல்களில் கவிதைக் காப்பியமாக வெளிவருவது இதுவே முதல் நூல் என்று கருதுகின்றேன்.

பயணம் சென்றவர்கள் சென்ற இடங்களில் தாம் கண்டவற்றையும் அவற்றின்வழி நாம் அறிய வேண்டியவற்றையும் எழுதியிருப்பதை அறிவோம். நண்பர் சேதுராமனோ அவற்றோடு தாம் கண்ட நாட்டில் நம் தாய்த்திரு நாட்டைச் சார்ந்த தமிழர் இனி எவ்வாறு வாழவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டித் தமிழர்களின் நல்வாழ்வில் நாட்டம் காட்டியுள்ளார்.

பினாங்கின் கடற்கரை அழகும், ஈப்போவின் எழில்நலமும், கோலாலம்பூரின் கோலமும், சிங்கைத் துறையின் சீர்சால் சிறப்பும், கொஞ்சுதமிழில் இந்நூலில் துள்ளியாடுகின்றன. மலேசிய-சிங்கை நாடுகளிலுள்ள தமிழ், தமிழர், தமிழியக்கங்கள், தோட்டங்கள் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தமிழர், மலேசியக் கல்விநிலை, சீனர்களின் வாழ்க்கை முறை, சிங்கை வானொலி தொலைக்காட்சி நிலையப் பணிகள், அந் நாடுகளின் தொழில், செல்வ வளம் ஆகியவற்றைத் தன்பால் அடக்கியுள்ள செய்திப் பெட்டகமாய் இந்நூல் திகழ்கிறது.

வகைவகை வளங்கள் தகைதகை மனிதர்
    வளர்வளர் அறங்கள் மறைநீதி
தொகைதொகை எழில்கள் தொழுதொழு உயிர்கள்
    சுடர்படர் அறிவுக் கலையாதி (பக். 216)

உடைய நாட்டினை அவர் அறிந்தவாறே நாமும் அறிந்து கொள்ளச் செய்கிறார்.

மலேசிய, சிங்கை செல்வோர் அடைகின்ற அனுபவங்களை யும் அங்குக் காண வேண்டிய - அறிய வேண்டிய இடங்களையும், செய்திகளையும், தாய்த் தமிழகத்திலிருந்து வருகின்றோரைத் தக்கபடி வரவேற்கின்ற தமிழன்பர்களையும், மலேசிய மண்ணில் தமிழ் காக்க முனைகின்ற மன்றங்களையும், மாண்புறு பெரியோர்களையும் ஒருசேர அறிகின்ற அரிய நூலாய் இந்நூல்

திகழ்கின்றது. வியக்கத்தக்க அரும்பெரும் அரிமா முயற்சியில் வெற்றிவாகை சூடியுள்ளார் பெருங்கவிக்கோ.

மலேசியா செல்லும் தமிழன்பர்களுக்கு இது ஒரு வழி காட்டியாகவும் அங்கு யார் யாரைக் காணவேண்டுமென்பதைச் சுட்டுகின்ற கைகாட்டியாகவும், ஆற்றுப்படை நூலாகவும் விளங்குகிறது.

சுவாமி இராமதாசர்

நூலின் தலைமகனாய்த் திகழ்பவர் சுவாமி இராம தாசர்.அவருடைய அன்பு, அருள், தொண்டு, கல்வி ஆகியவை நன்முறையில் நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

தமிழ்ப்பணி யாளன் தவநெறி யாளன்
அமிழ்தம் கிடைப்பினும் அதனையும் பிறர்க்குத்
தந்தே வாழத் தான்நினை அறவோன்; (பக். 5)

அயரா உழைப்பால் ஆக்கம் விளைப்போன்
முயற்சிக் கழனி முனைப்பின் இருப்பிடம்; (பக். 5)

தன்னை மறப்பினும் தமிழை மறவான்; (பக். 6)

அறுபத்து நான்காம் அருந்தமிழ்க் கலைக்கும்
உறைவிட மான உயர்வான இமயம். (பக். 7)

இவ் அடிகள் இராமதாசரைப் பற்றிய அரிய படப்பிடிப்பாய்த் திகழ்கின்றன.

ஓங்குபுகழ் தமிழர்நிலை உயர வேண்டும்
உலகத்தமிழ்ப் பண்பாட்டை இணைக்க வேண்டும்
வீங்குநலம் செய்பணிகள் நிலைக்க வேண்டும்
வேற்றுமையும் சீரழிவும் நீங்க வேண்டும் (பக். 63)

என்பதே அடிகளாரின் தலையாய நோக்கமாகும். இதற்காகவே அவர் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார் என்பதைக் கவிஞர் பொருத்தமுற எடுத்துரைக்கின்றார்.

கோலாலம்பூரில் அடிகளாரின் மாணவர் பொன்னுசாமியின் மனையாள் அடிகளாரைக் கண்டு வணங்கித் தம்மை யாரென அறிமுகம் செய்து கொண்டபோது,

பொன்னுவின் மனையா ளாநீ
  பொன்றாது வாழி வாழி!
நன்முறை வாழ்கின் றீரா?
  நலமுடன் பொன்னுள் ளானா? (பக். 77)

என்று அடிகளார் கேட்பதாய்க் கவிஞர் பாடியிருப்பது அடிகளே நேரிலிருந்து பேசுவதுபோல ஒலிக்கிறது. அடிகளிடம் நேரில் பேசியவர்கள் இதை நன்கறிவர்.

ஒருநாள் வடிவேலு என்ற மாணவர் தம் கவிதை ஒன்றை அடிகளிடம் தந்து திருத்தித் தருமாறு கேட்டார். அடிகள் அடுத்த நாள் வருமாறு கூறினார்; வடிவேலு வற்புறுத்தவே பாட்டைத் திருத்தி, இலக்கணத்தையும் விளக்கினார். வடிவேலு திரும்பியபோது எதிரே வந்த மணிமுடி, "அடிகளாரின் தாயார் இறந்துவிட்ட செய்தி தெரியாதா?" என்று கேட்டதும் வடிவேலு பதறித் துடித்தார்.

தாய்மடிந்த வருத்தத்தைக் கூட எண்ணார்
தண்டமிழ்த்தொண் டொன்றைத்தான் குறிக்கோ ளாக்கி (பக். 163)

அடிகளார் வாழ்ந்து வருவதைக் கவிஞர் குறிப்பிடும்போது நம் நெஞ்சு உருகுகிறது!

மலேசிய நாட்டில் பாமணி (சேதுராமன்) அடிகளாருடன் நண்பர் ஒருவருடைய வீட்டில் விருந்துண்ணும்போது அடிகளார்,

வளமிகு நாடிது; மாற்றம் இலையால்!
வண்டமிழ் நாட்டுக் காய்கறிச் சுவைகள்
உளஇந்தக் கறிக்கே இல்லை! நம்மண்
உள்ள சக்தி சுவையுடைத் தாகும் (பக். 184)

என்று குறிப்பிடுவதிலிருந்து அடிகளாருக்குள்ள தாய்மண் பற்றை நன்கு அறிகிறோம்.

சுவாமிகளின் கோலாலம்பூர் பேச்சும், சிங்கைப் பேச்சும் தமிழரின் பண்டை வரலாற்றைப் பறைசாற்றுகின்றன. அப்பேச்சை நேரில் கேட்க மலேசிய மக்கள் பெற்ற பேற்றைக் கவிஞர் சேதுராமன் நம்மையும் பெறச்செய்துள்ளார். இவ்வுரையினைக் கேட்பவர்களும், படிப்பவர்களும் உயிர்த்தெழுந்த நிலைபெறுவர் என்பது உறுதி. கடலிற் கலம் செலுத்திக் களம் கண்டு நாடு வென்ற தமிழன் அங்கேயே நிலைத்திருந்திருப்பானேல் இன்று அவனியில் பெரும்பகுதி தமிழ் நிலமாக அல்லவா இருக்கும்? என்ற அடிகளாரின் கேள்வியிலுள்ள வரலாற்று உண்மையை உணரும்போது தமிழர் அடைந்துள்ள இழப்பை எண்ணிக் கலங்க வேண்டியிருக்கிறது.

எங்கும் நிரந்தரமாய் இத்தமிழன் தங்காது
பொங்கும் தாய்மண் பூரிக்கும் பற்றாலே
அங்கங்கே அப்போதப் போதைக்குத் தானிருந்து
சங்கமம் ஆகினான், தாய்மண் சென்றேதான்! (பக். 263)

அதனாலன்றோ ஆளவேண்டிய இடங்களில் அடிமை வேலை செய்கிறான்.

தீபத்(து) ஒளியாம் செந்தமிழ்க்கே உணர்வெனும்
எண்ணெய் விடமறவேல் (பக். 268)

என்று அடிகளார் கூறுகின்ற அறிவுரை, சிங்கைத் தமிழர்கட்கு மட்டுமன்று. நமக்கும் சேர்த்துத்தான்!

கனிமொழி, மணிமொழியின் காதலுக்கு இடையூறாய் முளைத்த, 'பெருமாள்' என்பான் மலையிலிருந்து கல்லை உருட்டிவிட்டு மணிமொழியைக் கொல்ல முயல்கையில் பிடிபடுகிறான். அவனை அடிகளார்முன் நிறுத்துகின்றனர்.

தவத்திரு அடிகள் ஆய்ந்து
  தடியனை மன்னித் தே,நீ
இவணினி இதுபோல் என்றும்
  இழிநிலை எண்ணம் வேண்டா
கவலையை விடுக உன்றன்
  கபடத்தை விட்டாயானால்
சிவனரு ளாலே உன்னைத்
  திகழ்நலம் பெறவே செய்வேன்! (பக். 311)

என்கிறார். அடிகளாரின் மன்னிக்கும் மனப்பாங்கையும் கயவனையும் திருத்தி அறவழிப்படுத்துகின்ற அருளுள்ளத்தையும் கண்டு,

வள்ளலுக்கும் வள்ளலென வள்ள லாரின்
  மறுபிறப்பாய் வந்துதித்த தவத்தின் ஊற்று! (பக். 62)

என மனம் நெகிழ்ந்து, உயிர்மகிழ்ந்து, நெஞ்சுருகி,

வெண்மைமிகு ஆடையினை மேனி கட்டி
  வெள்ளைமனம் தன்னையருள் கடலாய் ஆக்கிக்
கண்ணிலொரு சுடர்தெரிக்க நோக்கும் பார்வை
  கரைகடந்த பெருநலமாய் (பக். 63)

விளங்குகின்ற அவரை வாயார வாழ்த்தி உளமாரப் போற்றி வணங்குகிறோம்.

பாமணி சேதுராமன்

கவிஞர் சேதுராமன் தம்மை இந்நூலில் பாமணி என அழைத்துக் கொள்கிறார். பாக்களை 'மணிமணி'யாகப் பாடுகின்ற இவருக்குப் 'பாமணி' என்பது பொருத்தமான பெயரே! தம்மை மலேசியா வருமாறு அழைத்திருந்த மடலைப் பெற்றதும்,

மடலை அவிழ்த்துப் பார்த்தான் – தாழும்
மடல்பூ மணத்தை உண்டான் (பக். 13)

என அவர் அடைந்த மகிழ்ச்சியை உள்ளவாறு வெளிப்படுத்து கிறார். நண்பர்கள் பரிசும் வரிசையும் தந்து, வாழ்த்தி, அலை கடல்மேல் வழியனுப்பிய நிகழ்ச்சியை நெஞ்சுருகப் பாடுகிறார். கடற்பயணம் பல கற்பனைகளை அவரிடத்தே தோற்றுவித்தாலும்

சிந்தனை அலைகளையும் மோதவிடத் தவறவில்லை. பிழைப்புத்தேடி மலேசியா செல்லும் மக்களைக் கப்பலில் கண்டதும் வியப்பச்சத்துடன்,

வந்தாரை வாழ்த்தி மகிழ்ந்த தமிழினத்தார்
சிந்தை வருந்தி,பிற தேயத்தைச் சேர்கின்றார். (பக். 22)

எனக் கவல்கிறார். கப்பல் பயணத்தைப் பற்றி அவர் எழுதியிருப்பதைப் படிப்பவர் தாமே கப்பலில் செல்வதைப் போன்ற உணர்வைப் பெறச்செய்திருக்கிறார்.

மலேசியாவில் சிங்கப்பூரில் தம்மை வரவேற்ற, தாம் கண்ட அனைத்து நண்பர்களையும் அவர்களுடைய பண்பு நலன் கனிய மறவாது நினைந்து போற்றிச் செய்ந்நன்றி மறவாத் தன்மையை நிலைநாட்டுகிறார்; பாட்டில் ஊட்டுகின்றார்.

ஆண்ட தமிழினம் இன்று மலேயாவில் அடிமை வேலை செய்வது கண்டு உள்ளங் குமுறுகிறார்.

தோட்டத்தில் வாழ்கின்ற நமது மக்கள்
தொன்றுதொட்டு இன்றுவரை இடைவி டாத
பாட்டாளி மக்களாகிப் பச்சை ரத்தம்
பரிமாறி இருளடர்ந்த காட்டில் துஞ்சி
நாட்டுகிறார் பால்மரங்கள் பட்டைசீவ
நன்குவடி கின்றதெது? பாலா, இல்லை;
கூட்டுகின்ற தமிழ்க்குருதி அன்றோ, சிந்திக்
குவிகிறது மலாய்நாட்டின் செல்வமாக. (பக். 100)

என்ற எண்ணச்சுடர் அவருள்ளத்தை ஆட்கொள்கிறது.

மலேயாவிலேயும் தமிழர்கட்கிடையேயுள்ள பேதங்களைக் கண்டு,

எங்குதமி ழரிருந்த போதும் பேத
எண்ணங்கள் தொலையாதோ? (பக். 104)

என்று ஏங்குகிறார்.

கடல் கடந்து சென்று வாழ்கின்ற இடத்திலும் தமிழர்கள் பிச்சையெடுக்கும் நிலையில் இருக்கிறார்களே என்று அழுகிறார்.

எழில்மிகும் இந்த நாட்டிலே கூட
இரவலர் இருப்பதைக் கண்டேன்;
அழகுசூழ் பினாங்குத் துறைமுகம் இறங்கி
அவ்வழி சென்றிடும் போதில்,
தழல்மிதித் ததைப்போல தாளங்கே ஆனேன்
தமிழர்கள் இரவல ராகிக்
கிழமையாய்ப் பிச்சை கேட்டனர் கண்டே
கேவியே அழுதனன் அங்கே. (பக். 138)

சுவாமி இராமதாசரின் மாநாட்டுப் பேச்சுவழி மலைத் தமிழ்நாடே மலாய்நாடு என்பதைத் தக்க சான்றுகளுடன் நிறுவிக் காட்டுகிறார்.

செழுமை நிறைந்த அந்த நாட்டிலும் சிறைச்சாலை இருக்கத்தான் செய்கிறது. செல்வ வளம் மன பலத்தை உண்டாக்கி விடுவதில்லை என்றானதைக் கவிஞர் உணர்ந்து,

பூமி அழகாய் இருந்ததி னாலே
  புரட்டுகள் இல்லையா? பொலிவுடல் அழகாய்
நாமிருந் ததனால் நம்முளம் நன்றோ? (பக். 219)

என்று அமைதி கொள்கிறார்.

வளம் திகழ் நாட்டிலும் திருட்டும் பொய்யும் நடம் புரியத்தான் செய்கின்றன எனப் பாமணி பொங்கியெழுவதில் நியாயமிருக்கிறது.

வென்றிசேர் மலேயா நாடு
  விறுடன் வருவோ ரெல்லாம்
நன்றுசேர் பொருளை, விஞ்சு
  நற்புகழ் ஈட்டிக் கொண்டு
சென்றவர் சென்ற வர்தாம்
  செய்நன்றி மதிப்ப தில்லை (பக். 188)

என மலேயா தமிழர் மனம் நோகுமளவுக்கு அங்குச் செல்லும் சிலர், திரும்பியதும் அவர்களை நினையாமலேயே இருந்து விடுகின்றனர். இந்தக் குறைபாட்டைப் பாமணிக்கு அளித்த வரவேற்பில் அங்குள்ள மக்கள் சுட்டியும் காட்டியிருக்கின்றனர். வளமுள்ள நாடாதலால் தமிழ் நாட்டில் இருந்து வருவோர்க்கு அவர்களால் வாரி வழங்க முடிகிறது. அதே அளவுகோல் கொண்டு அவர்கள் தமிழ் நாட்டிற்கு வருங்கால் நிகழாமைக்கு,

குளம்நிறைந் திருந்தா லன்றோ
  குளிர்செந்தா மரைப்பூ பூக்கும்
களம்இன்றி ஆடல் எங்கே
  கவின்தமிழ் நாடு தொப்பாம் (பக். 191)

என்ற அவர் பதில் பொருத்தமாயுள்ளது! பொருளால் அவர்கள் காட்டும் வரவேற்பைக் காட்ட இயலவில்லையானாலும் பிறவிப் பாசத்தால், அன்பால் காட்டலாமல்லவா?

தெருக்கூட்டி வேலை செய்வோர்
  தேவைமேல் வெள்ளி பெற்று
வருத்தங்கள் இன்றி வாழ்வர்
  மணிப்பொறி டர்லின் சட்டை

தருக்குடன் அணிந்து வேலை
தாழ்ந்ததாய் நினைந்தி டாமல்
கருத்துடன் பணிசெய் கின்றார்
கவலைகள் அவர்க்கில் லையாம். (பக். 194)

இதை நோக்கும்போது தமிழகத்தில் நிலையாக உழைத்தாலும் நிம்மதியில்லை. எங்கோ கூலியாக உழைத்தாலும் வருவாய் மிகுதியாக இருக்கிறது; இந்த வேறுபாட்டினை எண்ணிக் கவிஞர் இரங்குகிறார்.

"பாரதிக்குப் பிறகு, பாவேந்தர்க்குப் பிறகு பாவலர் தமிழில் இல்லை என்கிறார்களே, இதற்கு உங்கள் பதில் என்ன" என்று மலேசிய வானொலியில் கேட்டபோது பாமணியின் சீற்றம் எல்லையற்றதாகிறது. பாரதி, பாவேந்தருக்குப் பிறகு தமிழ் நாட்டில் தோன்றியுள்ள, அவர்கள் வழிவந்த கவிஞர்களை வரிசைப்படுத்திக் காட்டுகிறார். பெரிய பட்டியலை அவர் தந்துள்ளார் எனினும் இன்னும் அதிற் குறிப்பிடப்படாத பலபேர் உள்ளனர். பட்டியலைத் தருகின்ற பாமணியார்,

தங்கம்போல் தரளம்போல், தாவிப் பாய்ந்து
தவிடுபொடி ஆக்குகின்ற குண்டு கள்போல்,
எங்கெங்கோ கண்டம்விட்டுக் கண்டம் பாயும்
ஏவுகணை போல்பாக்கள் வடிப்போ ரெல்லாம்
தாயகத்தில் தமிழகத்தில் இருக்கின் றார்கள் (பக். 275–76)

என்பதனைக் கருத்துக் குருடர்கள் காணவில்லை போலும்! இவ்வாறு குள்ள மனம் கொண்ட அவர்களை,

சாவேந்திப் போனவரைத் தாம்பு கழ்ந்தே
தம்வயிறு வளர்க்கின்ற கலகக் காரர் (பக். 277)

எனப் பாமணி குறிப்பது பொருத்தமே!

புதுக்கவிதைபற்றியும் பாமணியிடம் வினவுகிறார்கள். எந்த வகையில் எழுதினாலும் தமிழ், தமிழர் முன்னேற்றமே கவிதையின் நோக்கமாக இருக்க வேண்டும். கண்கள் இரண்டாயினும் 'நோக்கு' ஒன்றாதல் வேண்டும் என வலியுறுத்துகிறார்.

மலேயா, சிங்கை நாட்டில் தமிழ்மலர், தமிழ்முரசு, புதிய சமுதாயம், உதயம் முதலிய இதழ்கள் செம்மையான முறையில் வெளிவருவதைக் காணுகின்ற கவிஞர், தமிழ்நாட்டில் அறிஞரின் பேச்சைவிட்டு ஆகாத பேச்சினை அச்சில் ஏற்றி நெறியழிக்கும் ஏடுகள்பற்றி,

வாளினை மறந்து வாலினைப் பிடிக்கும்
வகையிலா மூடரைப் போல
வேலியே பயிரை மேய்வதைப் போன்றாம்
தமிழக இதழ்களின் நிலையே! (பக். 140)

என வெதும்புகிறார்.

தமிழகம் தன்னில் தான்இதழ் நடத்துவோர்
தமிழையே அழிக்கிறார்; தமிழ்எழுத் தாளர்பலர்
உமியாம் படுக்கை அறைக்கதை எழுதி
உயிரை அல்ல, வயிறை வளர்க்கின்றார்! (பக். 233)

என்ற அவருடைய நியாயமான குற்றச்சாட்டு நீங்கும் நாள் தமிழகத்தில் விரைவில் மலரச் செய்ய வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

கற்பனைப் பாத்திரங்கள்

மணிமொழி என்ற இளைஞனையும், கனிமொழி என்ற நங்கையையும் கற்பனைப் பாத்திரங்களாய்க் கவிஞர் படைத்துள்ளார். மணிமொழி அறுபத்து நான்கு கலைகளையும் கற்க, தவத்திரு இராமதாசரை நாடிச் செல்கிறான். சுவாமியிடம் குடிகொண்டிருந்த கலைகளையும், அவற்றுள் யார் யாருக்கு எவ்வெக் கலையை அவர் கற்றுத் தந்துள்ளார் என்பதைக் குறிப்பிடவும் நூலாசிரியர் இக்கற்பனைப் பாத்திரங்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். கற்பனைப் பாத்திரங்கள் என்பதை அவரே சொல்வதிலிருந்தன்றி நாமே உய்த்துணர இயலா அளவுக்குப் பிறபாத்திரங்களோடு இப்பாத்திரங்களை இணைத்துச் செல்வதும் அறுபத்து நான்கு கலைகளையும் (பக். 68-69இல்) வரிசைப் படுத்திச் சொல்லியிருப்பதும் பாராட்டுக்குரியனவாம்.

மணிமொழி கலை பயின்றதைக் குறிப்பிடும் வகையில் அறுபத்து நான்கு கலைகளுள் சிலவற்றுக்கான விளக்கத்தைக் கவிஞர் வாயிலாய் அறிகிறோம்.

இடமும் வலமும் மிகச்சென்றே
இங்கும் அங்கும் காலாடி
திடமாய் வலம்இடம் தானோடி
திசைகள் தன்னை அளந்தாடி
உடலம் பாய்ந்த உறழ்ச்சியினால்
உணர்ந்து கீழ்மேல் தூக்கி.... (பக். 247)

உடல் வலி காட்டி ஆடுகின்ற சிலம்பக்கலை; மறைப்பிடங்களின் நுட்பங்களை விளக்குவதாயுள்ள நரம்படிக் கலையெனும் வர்மக்கலை; உறுப்பு நலன்களைக் கொண்டு பண்பு நலன்களை வரையறுக்கக்கூடிய சாமுத்திரிகா கலை;

சொல்லரி யாத துணிவு டனே
　　தூக்கும் கைகள் உடல்ப லத்தால்
வெல்லற் கரிய முறையி னிலே
　　வியப்பால் அனைவரும் போற்றி செய (பக். 246)

எதிரியை வீழ்த்துகின்ற மல்லகக் கலை;

மண்டித் தெளிந்து சதிராடி
　　வலமும் இடமும் சாரிசெய்து
மண்டித் திரிந்து சகடமிட்டு
　　வார்ப்பும் வடிப்பும் மிகக்காட்டிச் (பக். 247)

செய்யும் வாட்போர்க் கலை; கைவேல், நெடுவேல், எறிவேல்களை உறதியாய்ப் பிடித்து எதிரிகளைத் தூளாக்கும் வேற்கலை; ஐந்து களையும் கட்டுப்படுத்தித் தன் வயமாக்கக் கூடிய பூத ட, ,னக்கலை; மந்திரம் கூறிக் கொடியவரை வீழ்த்தி வதம் செய்கின்ற மாரணக் கலை; கருட பஞ்சாட்சரத்தை ஓதிப் பாம்பைப் பிடிக்கவும் விடத்தைப் போக்கவும்கூடிய விடநிவர்த்திக்கலை ஆகிய கலைகளின் விளக்கங்களை அறிந்து கொள்கிறோம். இது போன்றே பிற கலைகளுக்கும் விளக்கம் தந்திருப்பின் அவற்றையும் அறியும் பேறு பெற்றவர்களாயிருப்போம். சொல்ல வேண்டுமென்ற ஆவல் இருந்தாலும் நூலின் எல்லை நீளும் எனக்கருதிக் கவிஞர் கூறாது விட்டார்போலும்!

உளங்கவர் உரைகள்

காலை ஞாயிறு கதிர் விரித்து முளைப்பதை,

ஆண்சிங் கம்தான் அதிகா லையில்
　　அடர்ந்த பிடரி மயிர்கு லுக்கி
மாண்புற உடலம் சிலிர்க்க எழுந்து
　　வரும்இரை தேடப் புறப்ப டல்போல்
கதிரவன் கருக்கல் கரைகடந்தான் (பக். 47)

எனக் குறிப்பிடுவது சுவையான கற்பனை.

சமுதாயக் கொடுமைகளையெல்லாம் சாய்த்தோட்டும் ஈட்டியாய்த் தன் பாக்கள் விளங்குவன என்ற தன்னம்பிக்கை உடையவர் கவிஞர் சேதுராமன். அவர்,

....மேன்மை
தமிழர் எவர்க்குத் தான்வந்த போதும்
　　தமிழன் உயர்வதாய்த் தானெண வேண்டும் (பக். 235)

என்ற பரந்த மனப்பாங்குடன் இயங்கி வருகின்ற அப்பழுக்கற்ற பொதுநலத் தொண்டர்.

பணிதமிழ்ப் பணிக்கே பலப்பல கூட்டம்
　　பைந்தமிழ் பேசி நைந்த தமிழர்க்குள் (பக். 174)

பிணிக்கு மருந்தாய் இருந்து வருபவர்.

பூத்திருக்கும் வையச் சோலையிலே இன்பம்
பூக்கக் குலவிக் குடியிருப்பேன்;
காத்திருக்கும் என்றன் சேவைக்குப் பாரெல்லாம்
கண்டிப்பாய் என்கடன் முடித்திருப்பேன்;
வஞ்சம் கயமையின் வன்மை அழிப்பேன்;
வாட்டும் சுயநலப் பேயை ஒழிப்பேன்;
நெஞ்சிருக் கும்வரை நேர்மையுள் வாழ்வேன்!
நீணிலம் இங்கேயே சுவர்க்கம் அமைப்பேன்!

- பாமணியாம் சேதுராமனின் கவிக்குரல் இது.

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்

என்ற எண்ணச் சுடரைப் பெற்றுள்ள கவிஞர் பாமணி வாழ்க என்று வாழ்த்துவதோடு இன்னும் இதுபோன்ற பல நூல்களைத் தமிழுக்களித்து வளம் சேர்க்க என வேண்டிக் கொள்வோமாக! இந்நூல் மலேசிய - சிங்கை தமிழர்க்கான மாபெரும் இணைப்புப் பாலம்; மலேசியா - சிங்கை செல்வார்க்குச் சிறந்த வழிகாட்டி. தமிழ்கூறு நல்லுலகம் பெருங்கவிக்கோவிற்கு வாழ்த்துரைக்கிறது.

வெல்க கவிஞர் பணி! வாழிய உலகு!

நூல் ஆக்கம்	பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்
வகைமை	கவிதை (பயண நூல்)
வெளியீடு	தமிழ்மணி புத்தகப் பண்ணை, சென்னை. (1978)

22

'மலேசியத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்'

மலேசியா,

பன்னாட்டு மக்களுமே வாழும் தீவு!
பலமொழியும் பலகலையும் வளரும் தீவு!
எல்லோரும் போற்றுகின்ற சிங்கைத் தீவு! (பாடல் 264)

இதனில் வாழும் தமிழர்,

செந்நீரைச் சிந்திச் செழுமலை நாடுதனைப்
பொன்னாடாய் ஆக்கிய பொற்றமிழன் – எண்ணற்ற
ஏக்கத்தால் (பா. 232)

வாடிய போதும்,

எழுத்தாளர் கூட்டமொன்று மலைநாட்டில்
எழுந்ததுகா ணென்றே செப்பி (பா. 255)

'மலேசியத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம்' என்னும் பெயரால் 650 கவிதைகளைத் தொகுத்து நூலாக்கியுள்ளனர்.

மலேசிய நாடு

1965ஆம் ஆண்டு மலேசியாவில் சுற்றுப்பயணம் செய்த பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழர்களிடம்

"இங்குத் தமிழ்மொழி பேசுகின்ற நீங்கள் மலேசியர் என்ற உணர்வுடன் வாழவேண்டும்.

"உங்கள் உயிரும் உடலும் மலேசிய மண்ணோடு பிணைக்கப் படவேண்டும்.

"இங்கு வாழ்கின்ற உங்களைத் தமிழ்நாட்டுக்குப் பற்றுக் காட்டுங்கள் என்று கேட்கமாட்டேன்; தமிழ்மொழிக்குப் பற்றுக் காட்டுங்கள் என்று கேட்பேன்; தமிழ்ப் பண்பாடுகளை, மரபுகளை மறவாமல் பேணுங்கள் என்று கோருவேன்" என உரையாற்றினார். அண்ணா கூறிய இக்கருத்தினை ஏற்றிருப்பவர்களாய்த் தமிழர்கள்

அங்கு வாழ்ந்து வருகின்றனர் என்பதைச் சில கவிதைகள் தெரிவிக்கின்றன.

தேன்பாயும் ரம்புத்தான் தித்திக்கும் மங்குஸ்தீன்
வான்தோய் டொரியான் வளமரங்கள் – மீன்பாயப்
பொங்கும் அலைகடல்கள் போர்வேழம் போல்மலைகள்
எங்கள் மலாயா இது! [1] (பா. 65)

மலேசிய நாடு மிக்க வளங்கொழிக்கும் நாடு என்பதனைத் தமிழ்க்கவிஞர் குஞ்சுபாகவதர் 'கல்யாணி' பண்ணில் பாடுவதைக் கேட்போம்

இயற்கை வளம்கொழிக்கும் எம்நாடு
இன்ப மலேசியாஎனும் பெயரோடு

செயல்முறை யால்வெற்றிகண்ட நன்னாடு
செறிந்தமலை,வெளி, கானம் உடையநாடு

பல்லின மாந்தர் பண்பால் ஒன்றுசேர்ந்து,
பாங்குடன் தொழில்தனைப் படைக்கும் திருநாடு;
கல்விப் பெருக்கால் கலைக்கோயில்கள் மலிந்து,
கண்டவர் வியப்புற விளங்கும் பொன்னாடு;

முப்புறமும் கடல்சூழ்ந்தே அலைமோதும்
ஒப்புமை ஏதும் இல்லா எழில்நாடு;
நட்புற வு,பல நாட்டிடை வைத்து
நன்மை பெருக்கி உயர்ந்த நன்னாடு (பா, 427)

என்று போற்றுகின்ற நாட்டிலுள்ள தமிழ்க்கவிஞர் தொகுத்தளிக்கும் இக்கவிதைக்களஞ்சியம், மெய்யாகவே பல்சுவைக் களஞ்சியமாய்த் திகழ்கிறது.

---

1. ரம்புத்தான், மங்குஸ்தீன், டொரியான் ஆகியவை மலேசியாவிலுள்ள பழமரங்கள். டொரியான் பழம் சிறப்புப் பெற்ற ஒன்று. டூரி என்னும் மலாய் மொழிச்சொல், முள் என்னும் பொருள் கொண்டது; ஆதலின், டொரியான் பழத்தை முள்நாறிப் பழம் என்று வழங்குவர். கவிஞர் ஐ. உலகநாதன், 'எங்கள் மலாயா இது' எனப் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

இந்தநாடு எங்கள்நாடு; இந்தநாட்டு மண்ணிலே
இன்றிருக்கும் உயிர்கள்யாவும் எங்கள்தாயின் பிள்ளையே;

இந்தவானம் எங்கள்வானம் இந்தவானின் மீதிலே,
இங்கும்அங்கும் ஓடும்மேகம் எங்கள்தாயின் கூந்தலே!

காடுமேடு சீர்படுத்திக் காதல்கொண்ட தந்தையர்
நாடுமலை நாடிதென்று நாவினிக்கப் பாடுவோம். (பா. 74)

எனப் பாடிக் களிக்கிறார், வே. சங்கு சண்முகம்.

களஞ்சியப் பகுதிகள்

'இயற்கை', 'இறை', 'நாடு', 'தோட்டப்புறம்' எனத் தொடங்கிப் 'பல்சுவை' முடியப் பதினான்கு பகுதிகளாய்ப் பிரித்து இக் களஞ்சியம் தொகுக்கப்பெற்றுள்ளது.

கவிதைகளுள் பெரும்பகுதியில் தாய்த்தமிழகத்தின் மண் வாசனையே மணக்கிறது என்பதனை உணரும்போது, கவிஞரின் தாய்ப்பாசத்தைச் செவ்வையாய்ப் புரிந்துகொள்ள முடிகிறது.

பாவேந்தரின் கவிதைத் தாக்கம் பாடல்களில் பெரிதும் உள்ளது; ஆங்காங்கே, சங்கப்பாடல் தொனிக்கிறது; பட்டுக்கோட்டையாரும் இடையிடையே வருகிறார்; நாட்டுப்புறப் பாடல்களின் மணமும் கமழ்கிறது என்றால் அது மிகையாகாது.

தாய்த் தமிழ்நாட்டின் தாக்கத்திற்கு ஆளான கவிஞரே மிகுதியாயுள்ளனர்.

தூய தமிழ்ச்சொற்களைக் கவிதைகளில் காணும்போது, தாய்த்தமிழரைவிட மலையகத் தமிழரது தமிழ்ப்பற்றைப் போற்றாமல் இருக்க இயலாது; இது பெருமிதம் கொள்ளச் செய்கிறது.

'சிறுவர்' பகுதி சுவைமிக்க பகுதி; புரட்சிக்கவிஞரது இளைஞர் இலக்கியத்தையும், குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பாவையும் அது நினைவூட்டுகிறது. மலேசிய நாட்டில் வாழும் பிற இனத்தவரின் குழந்தைகளின் பாங்குபற்றியும் ஒப்பிட்டுப்பாடியிருந்தால் தாய்த்தமிழகத்திற்குப் புதிய கருத்துகள் கிட்டியிருக்கும். இதனைக் குறையாய்க் கூறவில்லை; ஓர் எதிர்பார்ப்பு; அவ்வளவே!

இயற்கை

செல்வர் என்றும் ஏழை என்றும் வேறுபாடு கருதாது, அருவி அனைவருக்கும் குளிர்ச்சி நல்குகிறது. அதனைக் கவிஞர் ஒருவர்,

> அருவியே! நீதான் ஆடும் ஆடைபோல் காணு கின்றாய்;
> வறியவர், செல்வர் யார்தான் வரினுமே தயக்கம் இன்றித்
> தருகிறாய் குளிர்ச்சி! வெள்ளைத் தளிர்க்கையால் தழுவு கின்றாய்!
> (பா. 16)

என்று கவிநயத்தோடு கூறுகிறார்.

மேலும் கவிஞர் ஒருவர்,

> தென்பாங்கு இசையெழுப்பிச் சிந்துகவி பாடும்;
> தென்றல்மெல்ல வந்துவந்து திரைநுரையில் ஆடும்;
> பெண்பாங்கின் நளினமொடு பின்னிஅலை போடும்;
> பிழைபொறுக்கா உள்ளமெனக் கரைதழுவி மீளும்!

அணியணியாய்த் தவழ்ந்துவரும் அழகுதனி அழகு!
அரைகுறையென் றுலகார்ப்பை அறிவுறுத்தும் பழகு!
....
பசியஎழில் படர்பொழிலாய்ப் பார்ப்பவர்கண் ஈர்க்கும்!
பனிமலையில் முகில்குழுமிப் பாலமுதம் வார்க்கும்! (பா. 32)

என்று இயற்கையின் எழிலைப் பாடுவது நம் உள்ளத்தை ஈர்க்கவே செய்கிறது.

பஞ்சமென் றபெரும் நோயுமிங் கில்லை
பட்டினி என்றா லதெப்படி என்பார்;
நஞ்சக மிலை,நய வஞ்சக மில்லை,
நன்மை வளர்த்தற நிலையினைக் காப்பார்;
தஞ்சமென் றார்க்கிங்(கு) ஆதர வுண்டு,
சத்திரஞ் சாவடி போன்றவை இல்லை;
மஞ்சம் நிகர்நெடுஞ் செல்வமே கொழிக்கும்
மாவள நாடு மலாயிநன் னாடே! (பா. 67)

என்னும் கவிதையைப் படிக்கும்போது, அந்த, 'மலாய் நாட்டைக் காணாத கண்ணென்ன கண்ணே?' என்னும் ஏக்கம் நம்மைக் கௌவுகிறது.

அந்த மலாயா நன்னாட்டில்,

கார்கறுத்துக் ககனமழை பொழியும் நேரம்
கானமயில் கனிவுடனே நடன மாடும்;
....
பார்க்கின்ற பக்கமெல்லாம் பயிர்செ ழிக்கும்;
பசுமைநிறப் பால்மரத்தின் அணிவ குப்புச்
சேர்க்கின்ற இன்பநிலை கோடி கோடி
செய்கின்ற அத்தனையும் இரப்ப ராலே;
வார்க்கின்ற ஈயமெல்லாம் கப்ப லேறி
வரும்போது மின்னுகின்ற பொருளாய் மாறி
ஊரெல்லாம் வணிகநிலை (பா. 76)

பெருக்கும் எனப் பண்பாடும் புலமையிலே கவிஞர் காதிர்சுல்தான் பாடியுள்ளது நினைவுகூரத்தக்கது.

மலைநாட்டில் பல்வேறு இனத்தவர் வாழ்கின்றனர். இனவேறுபாடு அங்கில்லை; அவரவர், அவரவர் பணிகளைச் செவ்வனே செய்து இன்பமுடன் வாழ்கின்றனர்.

கவிஞர் வீரையா கைவண்ணத்தில் அதனை அறிந்து கொள்ள முடிகிறது

அன்னை மலையகமே! அகிலத்தின் ஓர்துளியே!
ஆழிசூழ் உலகினிலே அழகுமின் வடிவமொடு
இன்னல் களைந்தே ஈட்டுகின்ற ஆட்சிமுறை!
மின்னலின் வேகத்தில் மீட்டுகின்ற முன்னேற்றம்!

இன்பத்தின் எல்லையிலே இனம்பாரா ஒற்றுமையும்,
இணைந்திருக்கும் மூவினத்தின் எடுப்பான உழைப்புமுறை
துன்பத்தின் சாயலின்றித் தூய்மையின் வழியினிலே
அன்பான நெறியினிலே ஆற்றுகிறார் தம்பணியை! (பா. 77)

தமிழ்

'தமிழ்' என்னும் பகுதி எழில்சேர் பூக்காடாய்த் திகழ்கிறது. அக்காட்டில், 'தமிழுக்கோர் அம்மானை', 'தலைமுறைக்கோர் அம்மானை', 'தமிழ்ப்பகைக்கோர் அம்மானை', 'தமிழ்நிதிக்கோர் அம்மானை' போலப் பலநிறப் பூக்கள் உள்ளன. அவை, "உலகத் தமிழா! உனக்கோர் செய்தி, உன்னையும் என்னையும் படைத்தவள் தமிழ்த்தாய்! அலைகடல் மலைகள் நிலத்தைப் பிரிக்கலாம்; அனைத்தும் கடந்தது நம்தமிழ் உணர்வு!" (பா. 93) என்று கூவுகின்றன. அத்துணைக் கவிதைகளிலும் பாவேந்தரின் பாமணம் வீசுகிறது.

மலையகக் கவிஞர்கள் உள்ளத்தில், எண்ணத்தில், எழுத்தில் புதுவைக்குயில் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் மிகுதியும் இடம் பெற்று நிலைத்து நிற்கிறார்!

"செந்தமிழ்க் கிங்கொரு தீமையெனில் இந்தத் தேகம் இருந்தொரு இலாபமுண்டோ" எனப் பாவேந்தர் பாடினார்.

பொன்னும் மணியும் புவியாளும் நற்பேறும்
என்னை அணுகிடினும் ஏற்பேனா; – புன்மனத்தர்
எண்ணி அழிக்கவரின், இன்னுயிரை நான்மதியேன்
கன்னித் தமிழென்றன் கண் (பா. 89)

எனத் தமிழ்ப்பாதுகாப்புக்கு, 'என் உயிரையும் கொடுப்பேன்' என்கிறார், கவிஞர் பா. இராமையா.

ஆறு வகுப்புவரை தமிழ் இல்லை என்ற நிலை நேர்ந்தபோது ஆறாத் துயரோடு, அம்மானை வடிவில் கவிதை படைத்துள்ளார் கவிஞர் ஒருவர்.

ஆறுவதைப் புண்ணென்பார்; அன்னைத் தமிழ்வகுப்பு
ஆறுவரை இல்லையெனில், ஆறாப்புண் அம்மானை;
ஆறுவரை இல்லையெனில், ஆறே கரைமீறும்;
நேருவதைப் பின்பகைவர் நெஞ்சுணரும் அம்மானை;
நீடிக்கும் வாழ்க்கையிலோ வேடிக்கை அம்மானை. (பா. 85)

இந்த நிலை இன்றுகூடத் தமிழ்நாட்டில் நிலவுகிறதே மாறாய் வளர்கிறதே என்பதை எண்ணும்போது மலேசியத் தமிழர்களின் தமிழுணர்வைப் போற்றிப் பாராட்டாமல் இருக்க முடியாது.

பெருமைக் குகந்தபெரும் புலவர்க்கு நம்மவர்கள்
பெருமையைச் சேர்க்க வேண்டும்;
புகழோ டிருந்துபுகழ் குன்றாதொ ளிர்ந்துதமிழ்ப்
பாணரைப் போற்ற வேண்டும்;
திறமைக்குத் தக்கதொரு பரி(சு),ஆண்டி லொருதடவை
தருதற்கு முயல வேண்டும் (பா. 107)

எனத் தமிழ்வாணரைப் போற்றவேண்டும் என்கிறார், கவிஞர் ஒருவர்.

தமிழர் குறைகளை எடுத்துச் சொல்லும் கவிதைகளும் உள்ளன

அறம்பேசும் மறங்கூறும் அறிவுக்(கு) உரம்சேர்க்கும்
அன்புமொழி தமிழ்கற்கத் தடையா?

....

உறங்குகின்ற இனந்தானே உரசித்தான் பார்ப்போமே
உணர்ச்சிதனை என்றுமுனைந் தாரோ?
நாங்கள் கைகட்டி நில்லோம் (பா. 103)

எனக் குமுறுகிறார், கவிஞர் மைதீ. சுல்தான்.

'வாழ்கதமிழ்' என்றிந்த வையம்பி ளக்க
வாழ்த்தொலிகள் முழங்குகின்றார் மலைநாட்டுத் தமிழர்!
வாழ்கதமிழ் என்பதனால் வாழ்ந்திடுமோ தமிழ்தான்
வகையாற்றும் தமிழ்க்கூட்டம் சோம்பிக்கி டந்தால்!

....

'பொன்மொழியாம் எங்கள்தமிழ் புகழ்சார்ந்த' தென்று
புலம்புவதால் தமிழ்வளர்ந்து பூத்திடுமா? (பா. 102)

"எங்களுக்கொரு வழிசொல் பைந்தமிழ்த்தாயே!" என்று தமிழ்த்தாயிடம் வழிகேட்கிறார், கவிஞர் ஒருவர்.

பொய்மைப் புனைசுருட்டைப் போற்றிப் புகழாமல்
நாட்டு நடப்பறிந்து நாட்டவர்க்காய் எழுதுமய்யா!

....

குறளெங்கள் மறையென்பீர்! குறைகண்டால் கோபிப்பீர்!
ஒல்காப் புகழ்படைத்த தொல்காப் பியமென்பீர்!
ஒருநாளும் அதனைநீர் கண்ணாலே கண்டறியீர்!

....

பாடப் புத்தகங்கள் பிழைமலிந்து கிடக்கையிலே
படிக்கும் பிள்ளைகட்குத் தமிழறிவு எங்குவரும்? (பா. 104)

என்னும் கவிஞரின் அடிகள் இன்றைய தமிழரது உண்மை நிலையை அப்பட்டமாய்ப் படம்பிடித்துக் காட்டுகின்றன என்றால் அது மிகையாகாது.

வானொலியிலோ, தமிழ் நாடி நரம்பு அற்றவர்கள் அறிவிப்பில், 'மாலை மணி-ஆரு' என்றும், பள்ளி ஒலிபரப்பில், 'எளுவத்தி மூனு, எம்பத்தி ஒன்னு' என்றும் ரகர றகர - லகர ளகர ழகர வேறுபாடின்றி உச்சரித்துத் தமிழைக் கொலைசெய்கின்றனர். திரைப்படங்களோ தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உருப் படாமல் செய்து வருகின்றன. இவ்விழி நிலைகளைக் கண்டு,

என்னத்தை யாரிடத்தில் எப்படிச் சொல்லியழ?
கைப்புண்ணைப் பார்ப்பதற்குக் கண்ணாடி யாவேண்டும்? (பா. 104)

எனக் கவிஞர் ஒருவர் அழுது புலம்புகிறார். தமிழ்நாட்டில் உள்ள தொலைக்காட்சிகளிலும் திரைப்படங்களிலும் இந்நிலைதானே? எங்கிருந்தாலும் தமிழ்க்கொலையில் தமிழர் நிலை ஒன்றுதானோ?

தமிழனுக்கு உற்றுள்ள தலை கவிழும் நிலை கண்டு தமிழியக்கம் நடத்த இன்றே வழிவகுக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறார், கவிஞர் சுப. நாராயணன்.

அறிவியலுக்கு ஏற்றதாய்த் தமிழை மாற்றும் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்; கருத்துலகப் பூம்பொழிலில் கோடி கோடியாய் மலரும் அறிவியற்பூக்களின் மணம் தமிழில் கமழ வேண்டும். வளர்ந்து வரும் அறிவியற்கலைகளைப் பெற்றுத் தமிழ் வளங்கொழிக்க வேண்டும். இதற்கேற்ற முறையில்,

கறையற்ற கல்விமுறை கற்பிக்க நல்லதொரு
  கல்லூரி கட்ட வேண்டும்;
கனமுள்ள நம்மவர்கள் இவைபோன்ற நற்பணிகள்
  கடமையாய்க் கருது வாரோ? (பா. 107)

என வினவி, இவை நிறைவேற வேண்டுமென்னும் விருப்பத்தைப் புலப்படுத்துகிறார், கவிஞர் டி.வி. இராகவன் பிள்ளை.

காரளந்த கூந்தல்மகள் கண்ணகியின் காற்சிலம்பில்
  கற்பைவைத்துக் காவியம் செய்தோன்,
சேரன்தம்பி இளங்கோவும் செத்திருக்க மாட்டானா
  'செக்ஸ்'கவிஞர் கூட்டம் பார்த்தே?
பாரளந்த வள்ளுவனும் பாவாடை அளக்கின்ற
  பாவலரைக் கண்டி ருந்தால்
சீரழிந்த தமிழ்நாட்டை, சிறப்பிழந்த பண்பாட்டைத்
  தீயாகி எரித்தி ருப்பான் (பா. 111)

என 'இலக்கியம் எங்கே போகிறது?' என்று ஆவேசப்படுகிறார், கவிஞர் ஒருவர். இக்குமுறலைக் கண்டு எமது உள்ளமும் எரிமலை யாகிறது.

தோட்டப்புறத் தமிழர்

அனைத்துக் 'கவிதைகளும் தமிழையோ தமிழர்களையோ பாராட்டுவதோடு நின்றுவிடவில்லை. தோட்டப்புறத்தில் வேலை செய்யும் தமிழ்த்தோழரது அவல நிலையையும் பல கவிதைகள் உள்ளம் நொந்து கவிஞர் பலரால் பாடப்பட்டுள்ளன. அவை நமது உள்ளத்தை நெகிழச்செய்கின்றன. தாய்த்தமிழகத்தில் உள்ளவர், மலையகத்தமிழர் அனைவருமே சீரும் சிறப்புமாய் வாழ்வதாய் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். 'அது தவறு; அவ்வாறு எண்ணாதீர்; தோட்டப்புறத் தமிழரைப் பாருங்கள்' என்பன போலப் பல கவிதைகள் நமக்குச் சொல்கின்றன.

தோட்டத் தொழிலாளர் நிலை இன்று குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்துள்ளது. வெள்ளையர்களால் அவர்கள் ஒப்பந்தக் கூலிகளாய் அழைத்துச் செல்லப்பட்ட காலத்தில் அவர்கள் பட்ட தொல்லைகளும் துயரங்களும் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. வெள்ளையரின் கங்காணிகள், "மலாய், வளம் கொழிக்கும் நாடு; அங்குச் சென்றால் வாழ்க்கையில் வளம் செழிக்கும்; பணத்தை அள்ளிக் குவிக்கலாம்" என ஆசைச் சொற்களை அள்ளி வீசி அழைத்துச் சென்றனர். அவற்றை நம்பிச் சென்றவர்கள் ஏமாந்தனர். காடுகளில் விலங்குகளோடு விலங்காய் வாழ்ந்தனர்; கொசுக்கடிக்குப் பச்சை இரத்தம் பரிமாறி உயிர் துறந்தோர் பலர். வெள்ளையர்கள் அவர்களை மனிதராகவே மதிக்கவில்லை. நீண்ட வரிசையில் அமைக்கப்பட்ட கூரை வேய்ந்த சிறு குடிசைகளில் தோட்டத் தொழிலாளர் வாழ்ந்தனர். ஒவ்வொரு குடும்பத்துக்கு ஓர் அறைமட்டுமே! அதற்குள்ளேதான் அவர்கள் வாழ்க்கை. அக் குடிசைகளுக்குள் காற்றோ, வெளிச்சமோ இல்லை. தண்ணீர், விளக்கு வசதிகள் இல்லை. அவர்கள் பட்ட பாடுகளைப்பற்றிய பாடல்கள் பல உள்ளன. ஒருவர் அந்த இரங்கத்தக்க வாழ்க்கையைக் கதையாய்ச் சொல்கிறார்.

> வந்தகதே வாழ்ந்தகதே – நம்ம
> வயிறெரிஞ்சி போனகதே
>
> சுட்ட கருவாட்லே
> கஞ்சிய குடிச்சுக்கினு
> காசுபணம் சேக்கலான்னு
> கையடிச்சி கொண்டாந்தாங்க;
> கொயினா[1] தண்ணிய
> குடிக்க வச்சாங்க.

---

1. கொயினா - மலேரியாக் காய்ச்சலுக்கான மருந்து.

அழைத்து வந்தபோது எத்துணை எத்துணைக் கவர்ச்சிச் சொற்கள்! கண்ட பலன் என்ன?

சஞ்சி[1] கூலிங்களுக்குச்
சொர்க்கம் காட்டத்தான்
பொறமலை[2]யில் தள்ளினாங்க;
சொர்க்கமும் காணலிங்க,
சொகுசும் காணலிங்க,
கொசுவால குடிச்சமிச்சம்
கொள்ளையிலும் போனாங்க. (பா. 129)

இங்கே வர அழைத்தபோது சொன்னதென்ன? இங்கே வந்தபின் நடப்பது என்ன?

சீனிக்குச் சாக்காயோட்டக் – கூட்டிக்கினுவந்த
கறுப்புச் சட்டைக் கதிர்வேலு கங்காணி
லாலான்[3] முள்ளு டிங்கின்னுதே – இங்கு
லப்பர்க் கொட்டை[4] டப்புன்னுதே. (பா. 115)

வாழைப்பழத்துக்குக் குரங்கோட்டுவதுதான் செய்ய வேண்டிய வேலை; ஒரு தட்டு அப்பத்துக்கு ஒரு தட்டு வெள்ளி[5] கிடைக்கும் என்றெல்லாம் கூறி, ஏதுமறியா ஏழைமக்களை அழைத்து வந்து, படுகுழியில் தள்ளிய கங்காணிப் பாவிகளும் வாழ்ந்திருக்கிறார் களே! தன்னலத்துக்காகப் பிறரை ஏதாவதொரு வகையில் வாட்டும் கங்காணிகள், என்றும் எங்கும் வாழத்தானே செய்கிறார்கள்; அவர்களுக்குத்தானே நல்வாழ்க்கையும் கிடைக்கிறது!

தோட்டப்புறத் தொழிலாளரைக் கங்காணிகள் மூட்டெலும்பை முறித்துச் சாகடிப்பதாயும், தினக்கூலியைக் குறைத்துக் கொடுத்து ஏமாற்றுவதாயும் நாட்டுப்புறப்பாணியில் அமைந்துள்ள கவிதைகள் நம்மை மலையகத்துத் தோட்டப் புறங்களுக்கே அழைத்துச் சென்றுவிடுகின்றன.

---

1. சஞ்சி - ஒப்பந்தம்; ஒப்பந்தத் தொழிலாளர்.

2. பொறமலை தமிழகத்திலிருந்து வரும் ஒப்பந்தத் தொழிலாளர்களைத் தங்க வைக்குமிடம்; இங்கு ஒரு வாரம் தங்கிய பிறகே நாட்டினுள் நுழைய முடியும்.

3. லாலான் - ஒரு வகைப் புல் (ஒரு மீட்டர் வளரும்).

4. லப்பர் கொட்டை - பால்மர வித்து.

5. வெள்ளி - மலேசியாவில் நாணயத்தை வெள்ளி என்று வழங்குவர்.

பாலுமரம் வெட்டலான்னு, பழையகப்பல் ஏறிவந்தேன்
நாப்பத்தஞ்சி காசப்போட்டு நட்டெலும்ப முறிக்கிறானே
முப்பத்தஞ்சி காசப்போட்டு மூட்டெலும்ப முறிக்கிறானே (பா. 118)

என்னும் அடிகளைப் படிக்கும்போது நம் கண்கள் குளமாகின்றன.

ரப்பர் மரத்தைப் பாலெடுக்க வெட்டும்போது எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்; தவறான முறையில் வெட்டிவிடக்கூடாது. தவறாக வெட்டிவிட்டால் கூலியைக் குறைத்துவிடுவர். நன்கு நிறைந்து வரிசையாய் உள்ள ரப்பர் மரத்தொகுதியை, இளம் பெண்களுக்குக் காட்டுகிறார், கங்காணி; ஆண்களுக்கோ, பள்ளத்தாக்கிலுள்ள கலப்பான வரிசையைக் காட்டுகிறார். அவ்வாறான ஓரவஞ்சனைபற்றிய ஆண் ஒருவரின் குரல் இது :

காயம் பட்டதுன்னு கூலிக்காச வெட்டுறார்;
சின்னச்சின்னப் பொண்களுக்கு நல்லநெர[1] காட்டுறார்;
என்னப்போல ஆண்களுக்கு ஏதோ,பாசா[2] காட்டுறார்;
பாக்கப் பயமா இருக்குதடி – நமக்கும்
பாலு வெட்டு வேணாமடி – இந்தப்
பாழாப் போன தோட்டத்திலே! (பா. 119)

ரப்பர்த் தோட்டத்தில் வேலை செய்யும் பெண்களிடம் கங்காணி, வெள்ளைக்கார முதலாளி, 'கிராணி' ஆகியோர் நல்ல முறையில் நடந்துகொள்வதில்லை என்பது நன்கு தெரிகிறது. அதற்கு அஞ்சி, அடிக்கடி வேறு வேறு தோட்டங்களுக்குப் பெண்கள் மாறிமாறிச் செல்லும் வழக்கத்தையும் காணமுடிகிறது.

தொடதொடத்தான் காடி[3]போட்டுத்
தொரயும் வந்திட்டான் – அந்தக்
கிஸ்முஸ்[4] என்றுபேசும் கிராணி[5] வந்திட்டான்! (பா. 121)

....

1. நெரெ - வரிசை. நூல் பிடித்தாற்போல் வரிசையாய் உள்ள ரப்பர் மரங்களுள் ஒரு நாளைக்கு வெட்டப்பட வேண்டிய குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மரங்களைக் கொண்ட தொகுதி.

2. பாசா - பள்ளத்தாக்கு.

3. தொடதொடத்தான் காடி - மோட்டார் சைக்கிள். (காடி வண்டி) படித்தவர்களைவிடப் படியாத ஏழை மக்கள், பயன்படு தன்மையைக்கொண்டு, புரியும்படியான எளிய சொற்களை மொழிபெயர்த்துவிடுகிறார்கள். 'குடுகுடு வண்டி' என்பதும் இவ்வாறாய்த் தோன்றிய மொழிபெயர்ப்பே.

4. கிஸ்முஸ் சாதாரண மக்கள் ஆங்கில மொழியை இப்படிக் கூறுவர்

5. கிராணி - கணக்கர்; எழுத்தர்.

சங்குச்சத்தம் கேக்குதடி ஜல்தியா வாடி – அந்தச்
சதிகாரக் கங்காணி ஏசுவாண்டி!

குடுகுடுத்தான் வண்டியேறித் தொரயும் வந்திட்டார்
'குட்மார்னிங்' என்றுசொல்லிக் கிராணி வந்திட்டார். (பா. 122)

....

அஞ்சா நம்பர் காட்டுக்குள்ளே
என்ன வெட்டச் சொல்லுறார்
மெத்தப்பய மாகுதையா – நானும்
வேறதோட்டம் போறனையா! (பா. 121)

தோட்டப்புறங்களில் வேலை செய்யும் பெண்களிடம், கங்காணிகள் தவறான முறையில் நடந்துகொள்வர். ஏழ்மை நிலை பெண்களை ஏதும் செய்ய இயலாதவர்கள் ஆக்கிவிடுகிறது. பெண் ஒருத்தி இதனைப் புலம்பலோடு கூறுகிறாள் :

ருதுவான சேதிகேட்டு மெதுவாகக் கைபுடிச்சி
மூனுமாசம் போனப்புறம் மூடிவச்சிக் கழுத்தறுத்து
மொட்டப் பசங்களுக்கு மூனுமுடி போட்டவனே!

தொட்டுத் தொடுசலுக்குத் தொங்கநெரப் பாப்பாத்தி
கட்டித் தழுவிக்கக் கட்டிலிலே காமாட்சி
கருக்கில் களத்தினிலே காத்தானின் பெண்டாட்டி
மோகம் தீரலயோ? மூதேவி கங்காணி!

மூனுமுடி போட்டாலும் முழுப்புருஷ(ன்) வந்தாலும்
காட்டுக்கு வந்துவிட்டால் கண்ஜாடை போகாலயே;
ஒன்னால கெட்டவநான் ஊரறியச் சொல்லுறனே! (பா. 123)

என்னென்ன கொடுமைகளையெல்லாம் கங்காணி செய்கிறான் என்பதைச் சொல்வதோடு தன்னையும் கெடுத்துவிட்டான் என்பதைச் சொல்லியழுகிறாள். இத்துணைக்கும் தொட்டுத் தாலி கட்டிய அவன் மனைவி வீட்டிலிருக்கிறாள்.

தோட்டப்புறத் தோழி ஒருத்தியைத் திருமணம் செய்வதாய்ச் சொல்லி ஒருவன் ஏமாற்றிவிட்டான். தாய்த்தமிழகத்திலும் அஃது அன்றாடம் நடக்கும் செயல்தான். இருந்தாலும், மலையகக் கவிஞர் தோட்டப்புற மக்கள் நிலையை உள்ளமுருகக் கூறுவதோடு பெண் ஒருத்தியின் துணிச்சலையும் எடுத்துரைக்கிறார்.

பாசாவில் தண்ணி மொள்ளப்
பக்கம் பாத்துத் தடம்போனேன்

அங்கே,

முழுகவந்த மாமா! – என்ன
'முழுகாம' ஆக்கினீங்க!
குளிக்கவந்த மாமா – என்ன
'குளிக்காம' ஆக்கினீங்க!

ஆனாலும்,

சாதிபத்திப் பீத்துறீங்க – பெரிய
சாதகமே பாக்குறீங்க;
தீண்டாத சாதீன்னு – தெரிஞ்சே
திண்டுமெத்தை கேட்டீங்க
ஊர்ஒலகம் சிரிக்கும்படி – நீங்க
ஒய்யாரம் பேசுறீங்க! (பா. 130)

"கேட்டபோதெல்லாம் உனக்குப் பாய் விரித்தேன். இப்போ ஊருக்குப் போகப்போறீங்களாம்! ஊத்துக்காட்டிலே பொண்ணாம்! ஊரறியக் கண்ணாலமாமே; ஆனால், ஒன்று.

நாயம் பொறக்க வேணும் – எனக்கு
நாயம் பொறக்க வேணும்
நல்லபடி கேக்கறப்பா – நமக்குள்
நாயம் பொறக்க வேணும்
என்வயித்துப் பிள்ளைக்கு – ஊரறிய
வாக்குத் தரவேணும் (பா. 130)

என உறுதிப்படப் பேசுகிறாள்.

சமுதாயம்

சமுதாயச் சீர்கேடு எங்குமே நீக்கமற நிறைந்துள்ளது; தொழிலாளர் அவலம் மலையகத்தையும் விட்டபாடில்லை.

முதலாளி வாழ்வை முதலாக உயர்த்த
முதலாக நின்று முழுமையாய் உழைப்பவன்;
....
சிந்தனைப் பயிரைச் சிந்தையின் உயிராய்
வந்தனை செய்தே வருந்தியே உழைப்பவன்;
ரப்பரொடு ரப்பராய் இழுபறியாய் இன்னமும்
கொப்பரை யாய்க்காய்ந்தே குழைவதுதான் நீதியோ? (பா. 137)

என்று முதலாளி வர்க்கத்தைக் கேட்கத் தோன்றுகிறது.

ஆண்டாண்டு காலமாய் நாட்டை யாண்ட
அருந்தமிழர் கூட்டந்தான், சோற்றுக் கின்றிக்
கூண்டோடு கலமேறி அடிமை யாகிக்
கூலியாகக் கோழையாக வந்த பின்னால்,
காண்கின்ற நிலையென்ன? இந்த நாட்டில்
காடழிக்கும் வேலைதான் காத்தி ருக்க
நாண்பாய்ந்த மானானார் தமிழ ரெல்லாம்!
நமையோட்டி வந்தவர்தாம் கொழுக்க லானார் (பா. 138)

என்னும் கவிஞரின் அடிகள், புரட்சிக்கவிஞர் பாவேந்தர் 1930இல் பாடிய, 'உலகப்பன் பாட்'டில் வரும்,

கூலிமக்கள் அதிகரித்தார், என்ன செய்வேன்!
பொத்தல்இலைக் கலமானார் ஏழை மக்கள்
புனல்நிறைந்த தொட்டியைப்போல் ஆனார் செல்வர்

என்னும் அடிகளை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்து கின்றன.

மலையகத்தில் ஒரு தடவை புயல் வீசியபோது அல்லற்பட்ட கவிஞர் ஒருவரின் புலம்பல் :

தந்தை குடிவெறியன்! தாயோ பெருந்தீனி!
வந்தெனக்கு வாய்த்தவளோ வன்குரங்கு! – எந்நாளும்
சூதாடி வம்பு தொடருமகன்! என்னில்லில்
போதாதோ வீசும் புயல்! (பா. 167)

தாய்த்தமிழகத்தில் மாபெருங்கேடாய் விளைந்திருக்கும் சாதிக் கொடுமை, மலையகத் தமிழரையும் விட்டபாடில்லை என்பதனை மலையகத் தமிழ்க்கவிஞர் பாடலடிகள் தெளிவாக்குகின்றன. பிழைக்க வழி தேடிச் சென்றவர்கள் வறுமையை மட்டுமன்றிச் சாதியையும் சேர்த்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள்.

மாண்புசால் பள்ளர் தம்மை மனத்தினி லிழிவா யெண்ணி
வீம்புகள் பேசுகின்ற வீணர்காள் ஆய்ந்து பார்மின்! (பா. 171)

தொட்டாலும் தீட்டென்று சொன்னார்....
ஓடும் குருதியும் வேறா? – சிலர்
உடலத்தி லோடுதல் சாக்கடை நீரா?
வாடும் பிரிவினை ஏனோ? – இங்கு
வாழும் சகோதரர் தாழ்ந்தவர் தாமோ? (பா. 172)

பெண்மை

ஒருவனுக்கு ஒருத்தி எனும் பண்பாடு கொண்டவர் நாம். திருமணத்தின்போது, நகமும் சதையும்போலவும், வண்ணப்பூவும் மணமும் போலவும் இணைந்து வாழ்வோம் என உறுதி பூண்டு இல்லறமேற்கும் மணமக்களிடையே மனமுறிவு ஏற்படுதல் ஏனோ? இது நன்றன்றே!

பாசம் மிக்க
அகத்திருந்து காதலெனும் உரமிட்டு,
வாழ்க்கையெனும் பயிரை, அன்பாய்ச்
செகத்திருந்து வளர்ப்பமென உறுதி கொண்டீர்;
மணமுறிவைச் செய்தல் நன்றோ? (பா. 179)

ஒருவர் மனத்தை ஒருவர் அறிந்து, புரிந்து ஒன்றிணைந்து வாழவேண்டுமேயன்றி 'மணமுறிவு' கூடாதென அறிவுரை கூறுகிறார், கவிஞர் ஒருவர்.

மணமுறிவு இல்லாதிருப்பது நன்று என்றபோதிலும், கணவனை இழந்த இளம் பெண்டிர் மறுமணம் செய்துகொள்வதைப் பழங்குப்பை நீதியைக் காட்டித் தடுக்கக்கூடாது. கைம்பெண் மறுமணத்தை ஏற்பதோடுகூட ஊக்குவிக்கவும் வேண்டும். கைம்பெண்டிர் நிலைபற்றி,

> கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே இங்கு
> வேரிற் பழுத்த பலா – மிகக்
> கொடியதென் றெண்ணிடப் பட்டதண்ணே குளிர்
> வடிக்கின்ற வட்ட நிலா

என அப்பெண்டிர்பால் பரிவு கொண்ட நிலையில் பாவேந்தர் பாரதிதாசன் பாடினார்.

பெண்கள் முன்னேற்றம் நாடுவோர் கைம்மைக் கொடுமை ஒழிய உறுதி பூணவேண்டும். கைம்பெண்டிர் மறுமணம் என்பது மிகுந்த அளவில் பேசப்படுகிறதேயன்றிச் செயலளவில் போதிய அளவு முன்னேற்றம் இல்லையே என வேதனைப்படுகிறார், கவிஞர் கோ.தொ. இராவணன்.

> விளைகின்ற நிலமாக இருக்கின்றாள் வளங்காண
> விருப்புள்ள வீர னில்லை.

இதற்கு வீரம் வேண்டியதில்லை; ஈரமுள்ள மனம் வேண்டும். கைம்பெண் மஞ்சள் பூசிக்கொள்ள மஞ்சள் தர முன்வருவாரில்லை. ஆனால், ஒற்றைக் கண்ணாலே வலை வீசி மேய்கின்ற காளையர்க்கோ பஞ்சமில்லை என அத்தகையோரைக் கடுமையாய்ச் சாடுகிறார்;

> அளிக்கின்ற தளிர்மேனி பெற்றுள்ள கனியின்று
> அவலமாய்ப் போகும் போது, நாளும்
> அழுகாத நிலைபேணி, ஒருதாலி யவட்கிட்டே
> அணைக்கின்ற இளைஞ னில்லை. (பா. 182)

என இராவணன் அங்கலாய்க்கிறார். இன்றைய நிலையில் தாலி எதற்கு? பதிவுத் திருமணமே சிறந்தது.

மலேசியத் தமிழ்க்கவிஞரும் பெண்களைக் கவர்ச்சிகாட்டிப் பாடியுள்ளனர் என்பது தெரிகிறது. அதனைக் கண்டித்து அங்குள்ள பெண்கள் குரல் கொடுத்த செய்திகள் அடங்கிய கவிதைகள் பலவும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளமை பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

பெண்கவிஞர் மாலிக் பேகம், அவ்வாறாய்ச் சாடியுள்ள கவிதைகளில் சில அடிகள்:

துப்புக்கெட்ட ஆண்களுக்கு வெட்கமே இல்லை – அழகு
தோகையரைப் பழிக்காவிட்டால் தூக்கமே இல்லை

....

துறவியைப்போல் முடிவளர்த்துக் கொண்டு திரிவதும் – வெள்ளைத்
துரைகளைப்போல் 'சிகரெட்' துண்டை வீசி எறிவதும்
நிறையழகு என்றுயாரும் சொல்வதே இல்லை

....

பழையதமிழ் இலக்கியங்கள் படிச்சதும் உண்டா? – அழகு
பாவையரைப் புலவரெல்லாம் பழிச்சதும் உண்டா? (பா. 180)

இக்கவிதை 1968ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. தற்போது அந்நிலை மாறியிருக்கலாம்.

பெண் ஒருத்தியின் பெண்மை கெடுவதற்குக் காரணமாய் இருப்பவர் ஆண்களே. ஆண்கள் கற்புடன் வாழ்ந்தால் எப்பெண் கற்பு இழப்பாள்? ஒழுக்கமான வாழ்விற்கு இருபாலரும் பொறுப்பேற்க வேண்டும். அதனை உணர மறுப்பதேனோ?

காவிய நாயகி ஆக்குவர் – தம்
காரியம் முடிந்ததும் ஓடுவர்!
ஓவியப் பாவையென் றோதுவர் – பின்
உலுத்திடச் செய்துமே தூற்றுவர்!
தாய்க்குலம் என்றுமே ஏத்துவர் – பின்
நாய்க்குலம் என்றுபின் ஏசுவர்....
தறுதலை யாக்கியே ஏகுவர்! (பா. 183)

என்று கவிஞர் கமலாலட்சுமி ஆண்களைச் சாடுகிறார். சாடுவதற்குப் பெண் கவிஞருக்கும் உரிமையிருக்கிறது. பெண்களும் தங்களைத் தற்காத்துக்கொள்ளத் தற்காப்புப் பயிற்சி பெறுதல் மேல். இக்கவிதை 1967ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. இக்கால ஆண்கள் திருந்தியவராய் இருக்கலாம்.

'இடும்பை தவிர்க்கும் குடும்பவிளக்கு' என்னும் தலைப்பில் உள்ள கவிதை நீண்ட ஒன்று; 89 அடிகளைக் கொண்டது; இக்கவிதையில் ரப்பர்த் தோட்டத்தில் வேலை செய்யும் தோழியர் ஒருவரது குடும்பச்சுமை சித்திரிக்கப்படுகிறது. 'ஒரு கவிதை நயம்' என்றே இதனைச் சொல்லலாம்; உள்ளத்தைத் தொடுகிறது. மலையகத் தோட்டப்புறக் குடும்பத் தலைவியின் பொறுப்பினை நல்ல முறையில் புரிந்துகொள்ளுதற்கு இந்த ஒரு கவிதையே போதும்!

காலை எழுந்திருந்து கைகால் முகங்கழுவி
வேலைக்குச் செல்ல விரைந்து கணவனையும்
நாலைந்து முறைகூவி நாள்காட்டி எழுப்பியபின்

கணவன், குழந்தைகள், மற்றவருக்கும் காப்பியை ஆற்றிக் கொடுத்து, உணவும் கொடுத்துவிட்டு, வீட்டுவேலை செய்யும் அம்மையிடம் மற்றச் செய்திகளைச் சொல்லிவிட்டு,

வெள்ளி முளைக்குமுன் விழிமலர்ந்த தோட்டமகள்
....
வாளி உளியுடன் வாய்சிவக்கும் வெற்றிலையும்
தோழியர் சூழத் தொழில்செய்யும் இடம்நோக்கிக்
....
கடுகி நடையோட்டிக் கடமைசெய்யும் இடம்வந்தால்
....
கையில் உளியெடுத்துச் சீவிடுவாள் பால்மரத்தை
செய்யும் இவள்பணிக்குச் செகத்தினில் ஏதுவமை?
பொய்யல்ல இதுபோற் குடும்பம் பலவுண்டு.

இவ்வாறான,

தோட்டப் புறப்பெண்கள் தொழுகைக்கும் ஏற்றவரே (பா. 189)

என்று நாம் பாராட்ட வேண்டும்.

பக்தி

தாய்த்தமிழகத்தவர்போல் மலையகத் தமிழரும் காளி, மாரி, முருகன் போன்ற கடவுள்களை வணங்குகின்றனர். ஒரு நாள் காளிக்குப் பலியிடுதற்குப் பக்தர் ஒருவர் ஆட்டுக்கடாவைப் பலிபீடம் நோக்கி ஓட்டிச் சென்றார். அக்கடா காளியை வேண்டுகிறது

என்னருமை அன்னையே! எழில்மிகு காளியே!
உன்னுடைய அருளினால் உலகெலாம் மலர்ந்தன;
அன்புடை உயிரெலாம் உன்னுடை மக்களே!
வன்புடன் எங்களைக் கொல்பவர் மக்களோ?
உன்னுடை மக்களுள் யானொரு வன்அன்றோ?
என்றனை என்அண்ணன் கொல்லுத லும்நன்றோ?
அன்பினும் அறத்தினும் அகப்படும் அன்னையே!
....
என்பெரும் உயிரினைக் காத்திடு (பா. 191)

என்று கூறியதாய்க் கவிஞர் பாடியுள்ளார். காளி கடாவைக் காப்பாற்றினாளா என்பதனை யார் அறிவார்?

நாட்டு நடப்பு

அங்கிங்கு என்று இலாதபடி எங்கும் நிறைந்திருப்பவர், குண்டர். குண்டர் இல்லாத நாடே இல்லையென்று கூறலாம்; ஏதோ ஒரு வகையில் இக்குண்டர்களுக்குச் செல்வாக்கும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இதனையறிந்த மலையகத்துக் கவிஞர்

'தெருக்குண்டர் புராணம்' ஒன்று பதினாறே அடிகளில் எழுதி முடித்துள்ளார்; சுவை மிகுதி.

இருக்கின்ற சுகவாழ்வு போதா திங்கே
　இருக்கின்ற அத்தனையும் எனக்கே வேண்டும்;
உருப்படியாய் நான்மட்டும் வாழ்ந்தால் போதும்;
　ஊர்கெட்டு உலகழிந்து போனால் என்ன?
பெருமையொடு நானிருக்க வேண்டும்! (பா. 206)

என்று எண்ணுகின்ற பேராசை உள்ளங்கொண்டவர்க்கும் அந் நாட்டில் பஞ்சமில்லை என்பதனைக் கவிஞர் பலர் படம் பிடித்துக் காட்டியுள்ளனர்.

'ஆ லேங்' என்ற சீனத்துக்காரரது மளிகைக் கடைக்கு, நம்மைக் கவிஞர் ஒருவர் அழைத்துச் செல்லுகிறார். அரசு குறித்த விலைக்கு அரிசி கிடைப்பதில்லை; மைதா மாவும் கிட்டவில்லை. ஒரு கட்டி மைதாவுக்கு ஒரு காசு விலை ஏறினால் ஒரு ரொட்டிக்குப் பத்துக் காசை ஏற்றிவிடுகின்றனர், வணிகர். விலை ஏற்றத்தையும் எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. காரணம் கேட்டால், 'அவனவனும் கதை அளக்கிறான்' என்று கவிஞர் சொல்லுகிறார்

நேத்திருந்த சாமான்விலை இன்னைக்கு மாறுது!

....

ஆலேங்கடைச் சரக்கெடுக்க என்னை வெரட்டுறா!
அரிசி இருக்கு விலைஇதுன்னு அரசு சொல்லுது – அது
அறிவிக்கின்ற விலைக்கு எங்கே அரிசி கிடைக்குது?

....

கட்டிக்கொரு பத்துக் காசு மாவு ஏறினா – அது
ரொட்டிக்கொரு பத்தக் காசா மாறி ஏறுது!
தட்டிக் கேட்டா அவனவனும் கதைய ளக்கிறான்!

....

போறபோக்கு எங்கே நிக்கும் சொல்ல முடியுமா? (பா. 212)

'லாயர் பூரோ' என்பவர் பெரிய மனிதர். 'லாயர் பூரோ' என்பது பெயரன்று. அது மலாய் மொழியில் ஒரு மரபுத் தொடர். 'லாயர் பூரோ' என்றால், தமக்கு 'எல்லாம் தெரியு'மென்று வெற்று வீறாப்புப் பேசுபவர். இந்த லாயர் பூரோவாகிய பெரிய மனிதர் எப்படிப்பட்டவர்?

பேருக்கு முன்னாலே நல்லதொரு பட்டம் – இவர்
　பேசுகின்ற பேச்செல்லாம் 'லாயர்–பூரோ' சட்டம்!
சாருக்கு ஊருக்குள் தலைவரெனும் பட்டம் – பொழுது
　சாய்கின்ற நேரத்தில் நடத்தைமகா மட்டம்!

வட்டிக்கு விடுவதிலே இவர்மிகவும் கெட்டி – இவர்
வழங்குகின்ற பணத்திற்கோ இரட்டிப்பு வட்டி
....
சேயில்லா நங்கையர்மேல் வைப்பாரே சிந்தை – இவர்
திரிந்துவரும் இடமெல்லாம் வஞ்சியரின் சந்தை. (பா. 215)

கவிஞர், மலையக 'லாயர் பூரோ'க்களைப்பற்றிப் பாடியுள்ளார். தாயகத் தமிழகத்திலும் லாயர் பூரோக்களுக்குக் குறைவில்லை என்பதனையும் சொல்ல அவருக்கு ஆசை! வேறு பெரிய மனிதர் ஒருவரைப்பற்றிக் கேட்போம்

சிங்காரம்,

பனையைப் போல நீண்டிருப்பார்;
பச்சைச் சிரிப்பும் சிரித்திடுவார்;
சுனையிற் காணும் புல்லைப்போல்
சொட்டைத் தலையில் மயிரிருக்கும்!
....
தங்கத் தமிழால் பிழைத்திடுவார்;
'தமிழன் அல்லன்' என்றிடுவார்;
அங்கும் இங்கும் பார்த்துவிட்டே
அருகில் யாரும் இல்லையென்றால்,
'துங்கத் தமிழைப் பிழைப்பதற்கே
தொடர்ந்தேன் படிக்க; ஆனாலும்,
எங்கள் மொழியே வேறெ'ன்பார்;
என்னுடை இனமும் வேறென்பார்;
சிறந்த பதவி தருகின்றோம்;
'சிங்கா ரம்'வா என்றிட்டால்
பறந்தே வந்து சேர்ந்திடுவார்
'பார்நான் தமிழன்' தானென்பார். (பா. 216)

ஏமாற்றுபவர்களும் ஏமாறுபவர்களும் எங்கும் இருக்கிறார்கள். உணவுக்கடை நடத்தி ஏமாந்த அம்மை ஒருவரின் கதையை அந்த அம்மையே கூறுவதுபோல இரக்க உணர்வும் நகைச்சுவையும் இழைந்து செல்ல, கவிஞர் கா. இராமு சொல்லோவியம் ஒன்றனைப் படைத்தளித்துள்ளார்.

"வட்டிக்குப் பணம் வாங்கி வகைவகையாய்ச் சமைத்து இலை நிறையப் பரிமாறினேன். இட்டலிக்குச் சட்டினி கேட்டவர்க்குச் சாம்பாரும் ஊற்றினேன்; இறைச்சியும் கொடுத்தேன். தோசைக்கு ஒருவர் மோர் கேட்பார்; இன்னொருவர் சுவை ஊறுகாய் கேட்பார். அத்துணையும் அவர்கள் விருப்பம் போல் படைத்தேன். காப்பி சூடாய் இல்லையென்றால் கடிந்து கொள்வர்; உடனே சூடேற்றித் தருவேன். காப்பி குடித்தவுடனோ கடன் சொல்லிப் போய்விடுவர்.

மாதம் முடியுமட்டும்
  வயிறார உண்டுவிட்டு
மாதம் முடிந்தவுடன் – கிளியே
  மாயமாய்ப் போனாரடி!

போட்ட முதலெல்லாம்
  போனவழி தெரியவில்லை;
கேட்டாலும் கொடுப்பாரில்லை – கிளியே
  கேளாய்என் கதையடியோ (பா. 185)

இன்னல் இழையோடக் கிளிக்கண்ணியைக் கவிஞர் முடித்திருக்கிறார். ஏமாற்றித் திரிபவர் இல்லாமல் செய்வது எவ்வாறு?

இந்த மாதிரியான 'சிங்காரங்கள்' தாய்த்தமிழகத்திலும் இருக்கிறார்களே! அவரை என்ன செய்வது?

மலையகத் தமிழர் பார்க்கும் 'சினிமா' தாய்த்தமிழ்நாட்டிலிருந்துதான் செல்லுகிறது. சினிமாவால் அங்குள்ள இருபால் இளைஞரும் கேடுறுகின்றனர்; தமிழ்ப்பண்பாட்டுக்குக் கேடு விளைக்கிறது; 'குணம்' என்னும் குன்று உடைக்கப்படுகிறது. அதுகண்டு,

இலைமறை காயாய் இருக்கும் காமக்
கழிவை அந்தோ! கலையெனும் பெயரால்
கடைவிரிக் கின்றீர்; கால்மலம் தொட்டதோ(டு)
உடையெலாம் பூசி உவக்கின் றீரே!
இவற்றைக் காணும் இளையோர் நெஞ்சம்
துவண்டு போமோ! தூய்மைப் படுமோ!
திரைப்பட நடிக நடிகை யர்தம்
அரைகுறை ஆடை அலங்கோ லங்கள்
உருக்கி உள்ளத் துணர்வை நாளும்
அரித்திடும் ....
உயர்ந்த நடிப்பும், உலகிய லறியும்
இயற்கை உணர்வொடு ஏற்ற பண்பும்
ஏந்தித் திரைப்படம் வருநாள் என்றோ? (பா. 218)

'கழிமலக் குப்பை' எனத் திரைப்படத்தை அன்றே சாடிய கவிஞர் இன்றைய திரைப்படங்களைப்பற்றி என்ன சொல்வாரோ?

தாய்த்தமிழகத்தில் புரையோடிப்போயிருக்கும் கேடுகள் அங்கேயும் சென்று அவர்களைச் சீரழிக்கின்றன. தமக்குத் தாமே பட்டங்கள் சூட்டிக்கொள்வது, மாலைகள், சால்வைகள் போடச் செய்துகொள்வது போன்ற கயமைக் குணத்தைச் சாடுகிறார், மலையகக் கவிஞர் ஒருவர்.

.... அவரே வாங்கிய,
போர்வையை ஒருவரைப் போர்த்திடச் செய்தும்,
பொன்னா டைதனைப் பெற்றிடும் கூட்டமும்,
மண்ணில் இன்று மிகுந்துள தாலே
பொன்னா டைக்குப் பெருமைதான் ஏது? (பா. 219)

வறுமையில் வாடும் குடும்பத் தலைவன், மனைவியின் ஆவலை நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறான் 'பொறுத்திரு; செல்வம் வரும்; அப்போது உன் ஆவலை நிறைவேற்றுகிறேன்' என்கிறான், கணவன். பட்டுக்கோட்டைக் கவிஞரை நினைவுபடுத்துகின்றன, மலையகத்துக் கவிஞர் பாடலடிகள்

கிட்டாத பொருட்கெல்லாம் ஆசை வைத்துக்
கொட்டலாமோ கண்ணீரைப் பெண்ணே! நம்மின்
பெட்டிகளில் பணம்புரளும் காலம் தோன்றும்
பொறுத்திடுவாய் எதிர்காலம் நமக்கும் உண்டே (பா. 252)

என்னும் அடிகள்,

காடு வெளைஞ்சென்ன மச்சான் – நமக்குக்
 கையும்கா லுந்தானே மிச்சம்?

எனும் பட்டுக்கோட்டையார் அடிகளை நினைவூட்டவில்லையா?

முத்தமிழ்ப் பாடல்

தமிழன் பழம்பெருமை பேசுவதிலே வல்லவன். முத்தமிழ்பற்றி மூச்சுவிடாமல் பேசுவான். ஆனால், முத்தமிழ்பற்றி ஏதும் அறிந்திருக்கமாட்டான். அப்படிப்பட்டவரின் முத்தமிழிற்கு ஓர் இலக்கணம் தருகிறார், கவிஞர் :

பழம்பெருமை பேசிடுவார் ஒருவகையர்! மிக்க
படித்தவன்ஊர்க் குருவிஎனும் ஒருவகையர்! வாழ
வழிதேடாப் பாட்டாளி ஒருவகையர்! ஆக
வகைமூன்றாய் வாழ்வதனால்; 'முத்தமிழர்' ஆனார். (பா. 254)

முத்தமிழுக்கு இலக்கணம் வகுக்கும் கவிஞரே! இற்றை நாளிலும் தங்கள் கருத்தினை மறுக்க முடியாத நிலைதான் நிலவுகிறது.

புதுமைப்பாடல்

குழந்தைகட்குத் தாலாட்டுப் பாடுவதைக் கேட்டிருக்கிறோம். கிழங்களுக்குத் தாலாட்டுப் பாடி மலேசியக் கவிஞர் ஒருவர் புதுமை படைத்துள்ளதுடன் வயிறு குலுங்கச் சிரிக்கவும் செய்துவிடுகிறார்.

பல்முளையாப் பிள்ளைகட்குப் பாடுவதே தாலாட்டு
பல்விழுந்து கூன்விழுந்து பார்க்கும் திறமிழந்து
சொல்விழுந்து போகாத் தொணதொணப்புச் செல்வங்கள்
தொல்கிழங்கள் தூங்குதற்குப் பாடுகிறேன் தாலாட்டு—

எனத் தாலாட்டைத் தொடங்கி, கிழடுகளின் தன்மைகளை வரிசையாய் அடுக்கிப் பாடுகிறார்.

மீசை நரைத்தாலும் ஆசை நரைக்காமல்
பேசுகின்ற முன்னாள் இளசுகளே தூங்குங்கள்!
வீட்டுக்கு வீடுள்ள வாசற் படியேறிக்
கூட்டம் நடத்துகின்ற பாட்டிகளே தூங்குங்கள்!
பட்டறிவில் கண்டெடுத்த பாதைகளைச் சொல்லாமல்
விட்டதையே பேசுகின்ற வேலையென்ன தூங்குங்கள்!
'நாங்கள் முடித்துவிட்டோம் நாள்வரும் உங்களுக்கும்
வாங்கள்' எனப்பேசும் வக்கணைக்குத் தாலாட்டு! (பா. 194)

நாளைக்குத் தமக்கும் இப்படித் தாலாட்டுப் பாடப்படும் என்பது தெரிந்திருந்தும் வக்கணையோடு பாடியுள்ளார். முதுமையின் இயல்புகளைச் சுவையுடன் சொல்ல இந்தத் தாலாட்டைப் பாடியுள்ளார்.

சான்றோர்கள்

மலையகக் கவிஞர்கள் நாட்டுக்குழைத்த நல்ல தலைவர் பலரைப்பற்றியும் கவிதைகள் பாடியுள்ளனர். அவர்களின் வரலாற்றைத் தழுவி எழுதப்பட்டுள்ள பாங்கு போற்றத்தக்கதாய் அமைந்துள்ளது. தம்நாட்டுத் தலைவர்களைப்பற்றியதோ டல்லாமல் பன்னாட்டுத் தலைவர்களையும், தமிழறிஞர், சமுதாயச் சீர்திருத்தக்காரர், அரசியல் சார்புடையார் ஆகியோர்களையும் வேறுபாடு கருதாது போற்றிப் பாடியுள்ள மலையகக் கவிஞர்களின் பரந்த மனப்பாங்கைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கவிஞர் பார்வையில் பெரியவர் சிலர் :

பன்னூலும் தேர்ந்தாய்ந்து பைந்தமிழ்க்குப்
  பயன்தூக்கிப் பயிற்று வித்து
நன்னூற்கு உரைகண்டும் நல்விருத்தி
  பதிப்பித்தும் நனிசி றக்க
முன்னேற்ற முறைபுகல முற்று,அரைப்
  புள்ளிகளை முதுமொ ழிக்குத்
தன்னாற்றல் கொண்டுயர்த்தித் தமிழ்செழிக்கப்
  புதுப்பாதை தந்த செம்மல் (பா. 326)

ஆறுமுக நாவலர்,

ஆரியக் கொடுமையை ஆயிரங் காலமாய்
நேரிலே எதிர்த்துமுன் வெற்றியும் கண்டிலாப்
போரிலே ஒருவனாய்ப் பொருதுமே வென்றவன்;
வெண்ணெடுந் தாடியன்;
தன்மதிப் பியக்கியே தமிழரை எழுப்பினன்;
பொய்யேற்றும் பார்ப்பனப் புரோகிதம் ஒழிப்பவன்
தமிழர் மேன்மையை விழைந்த (பா. 327)

தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி,

பன்னூ றாண்டுகள் பறங்கியர் கையில்
அன்னை இந்தியா அடிமைகொண் டிருந்த
அவல நிலையினை அகற்றிய வீரன்;
அண்ணல் காந்தியின் அரும்பெரும் தோழன்;
....
நேர்மையின் சின்னம்; நீதியின் நண்பன்;
அறிவின் சுடரவன்; ஆங்கில மேதை;
அரசியல் வானில் அழகு வெண்ணிலா (பா. 393)

பண்டித ஜவஹர்லால் நேரு,

நெஞ்செலாம் வீரம் பொங்க, நினைவெலாம் உறுதி பூண,
விஞ்சிடும் ஆர்வத் தாலே மிகைவிழை வுடனே நாட்டை
அஞ்சிடா வண்ணம் காக்க அருந்தமிழ்ப் பெருமை (பா. 340)

சேர்த்த தேசியக்கவி பாரதி,

நீக்கிரோவின் மாபெரிய தலைவர், மண்ணில்
நிழல்பெற்றோர் அனைவர்க்கும் நண்பர், அன்பைத்
தேக்கிவந்த பெருந்தொண்டர், மேதை, நீதி
தெரிந்துரைக்கும் வல்லவராம் (பா. 387)

மாவீரர் மார்ட்டின் லூதர் கிங்,

குமுறும் எரிமலைபோல் கோடிதுயர் சூழ்ந்தும்
நிமிர்ந்தொளிர நெஞ்சுயர்த்தி (பா. 391)

நின்ற மாவீரன் லுமும்பா,

தர்மம் தழைக்கச் சமாதானம் மேலோங்கப்
பர்மா,மண் உலகுக்குப் பரிந்தளித்த புனிதமகன்!
வானத்துக் கிழக்கில் வருங்கதிர்போல் வந்துபிரான்!
ஞானத்தில் புத்தன் நடந்ததுபோல் நடைபயில்வோன்! (பா. 331)

விந்தைப் பெருமனிதன் ஊ தாண்டு,

அருவியென வீழ்ந்துவரும், நெளிநதியாய் ஓடும்,
ஆடியென உருக்காட்டும், குளம்போலத் தோன்றும்,

பெரும்புயலும் சீறிவரும், பின்பொருகால் மாறிப்
பின்னிஉடல் உளமீர்த்துத் தென்றல்நடை போடும்,
தமிழுக்கும் அமுதென்று பேர்சொன்ன (பா. 349)

புரட்சிக்கவிஞர் பாவேந்தர்,

இருந்தமிழின் இலக்கியத்திற் கிருப்பிடமாய்
இனிமைதரும் எழுத்தாளர்;
விடுதலைப்போர் எரிகிளம்பித் தாயகத்தை
அந்நாளில் வெதுப்புங் காலை
கொடுமுடிபோல் தலைநிவந்து உரிமைதனை
நிலைநாட்டிய (பா. 365)

தமிழ்த்தென்றல் திரு.வி.க.,

வெற்றிலையும் பாக்கும் விளையாடும் நேரத்தும்
மற்றவரை மகிழ்விக்கும் குணக்குன்று;
தீஞ்சுவையை அள்ளித் தெளிக்கின்ற திறமையோன்;
பொடியள்ளிப் போடும் பூவிரலன்;
இடிமின்னல் போல இசைக்கின்ற குரலோன்;
பச்சையப்பன் கல்லூரிப் பண்பாளன் (பா. 355)

பேரறிஞர் அண்ணா,

குவளையூர் முத்து வேலன்
கொதிப்பினில் குதித்துத் தாவிக்
கவலையே றாத நெஞ்சக்
காவிரி அஞ்சு கத்தாய்
குவளையிற் குடியி ருந்து
கொடியுனா வருந்தி நீபிறந்தாய்
ஈரோட்டுப் பள்ளிக் கூடத்
திருந்துநீ கற்ற பாடம்
தேரோட்டும் செஞ்சொல் அண்ணா
தெருட்டிய கழகம் தன்னில்
சீராட்டத் துணையா யிற்றுத்
தேர்ந்துநீ கலைஞன் ஆனாய் (பா. 332)

என்னும் பாராட்டுக்குரிய டாக்டர் மு. கருணாநிதி,

கல்லார்க்கும் திருக்குறளின் சிறப்புணர்த்திக்
கனிவிக்கும் கல்வியில் தெளிவானவன்;
சொந்தமாய் உருவான வன் – தமிழர்
பல்லோரும் பணிந்தேத்தும் வகையினில் அறம்காட்டும்
பாட்டையில் நடைபோட்டவன் – தமிழ்க்குக்
கேடெனில் விளைத்தாரை எதிர்த்துச் சமர்புரி
கிழச்சிங்க மெனப்பாய்ந்த (பா. 354)

முத்தமிழ்க்காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம்,

கருமத்தின் வீர னாகிக் கடமையில் தொண்டனாய்,
உருவத்தில் கருமை பெற்றும் உள்ளத்தில் தும்பை ஒத்தவராய்,
பெருந்தமிழ் நாட்டுமக்கள் பெற்றிக்கோர் விளக்காய்,
எதுபுகழ் சேர்க்கு மென்ற எண்ணமே இல்லாமல்,
குலத்தொழில் பாகுபாட்டின் கொடுமையை எரித்த (பா. 367)

கர்மவீரர் காமராசர்,

தகநலம் புரிவதும் தகைமையை அறிவதும்
தலைமகன் துங்குவின் குணம்!
பகலவன் எனப்புகை படர்கையைத் துடைத்தொளி
பரப்பிய(து) இங்கவர் மனம்!

தாகத்தை விடுதலையில் வைத்தார் நேற்று
தமிழ்,சீனம், மலாய்,மூன்று மொழிகள் ஏற்றுப்
பாகத்தைப் பிரிக்காமல் அண்ணன் தம்பி
பண்புரைத்த தந்தையிவர்!

கால்நடையாய்ச் சிலநேரம் நடந்தும் செல்வார்
கடைத்தெருவில் மக்களிலே கலந்தும் கொள்வார் (பா. 324)

என்று சிறப்புடன் போற்றப்படும் மலேசிய நாட்டு விடுதலைத்தந்தை **துங்கு அப்துல் ரகுமான்,**

கலியோட்ட அறிவூட்டும் கவின்மிக்க கல்வி
கடிதன்று எளிதாக்கும் கலைத்திட்டம் தந்த,
பொலிவான தொழிற்சாலை பொருளாக்கம் சேர்க்கப்
புதிதான உடன்பாடு புவியெங்கும் கொண்ட,
வலிவான நிலத்திட்ட வகைகண்ட,
வழுவாத இனம்மூன்றும் வடிவொன்றைக் கண்ட,
நலம்பேணும் அமைச்சுக்கு நடுவான (பா. 325)

மேம்பாட்டுத் தந்தை **துன் அப்துல் ரசாக்,**

சங்கநதி தீரத்தில் தவழ்ந்து வந்தவன்
அஞ்சிக் கிடந்தவரை ஆதரித்தவன்
சங்கத் தமிழ்புரக்கும் சம்பந்தன்
மன்னும் தமிழ்க்குலத்தை வாழவைத்த சம்பந்தன்
காட்சிக் கெளியன்
மாட்சி மிகுந்த தமிழ்மன்னன் (பா. 345, 379)

என்னும் சிறப்புக்குரிய தேசிய நிலநிதிக் கூட்டுறவு சங்கம் கண்ட **துன் சம்பந்தன்,**

ஏனை யோர்போல் இந்தியரும் வாழச்
சிந்தித்துச் செயல்பட்டவன்;
ம.இ.கா. கட்டி வளர்த்தவன் (பா. 351)

என்னும் புகழுக்குரிய **டான்ஸ்ரீ மாணிக்கவாசகம்,**

முப்மணிக் கருத்தினை முழக்கின மகாதீர்!
ஆசியான் கூட்டுக் கண்டான்! (பா. 350)

என அனைவராலும் போற்றப்படும் தலைமை அமைச்சர் பெருமகன் **டத்தோஸ்ரீ மகாதீர்,**

உலகமா மனிதர் என்னும்
உயரிய விருதுபெற்ற திலகம்!
மலேசியாவின் சிகரம்!
வெண்குளிர் நிலவு!
பினாங்கு பாலம் கட்டிய பெருமான்!
பொதுப்பணித் துறைக்குப் புகழ்மணி சேர்த்தவன்!
புதுப்புது வரலாறெல்லாம் பூக்கச் செய்தவன்! (பா. 338)

என்னும் பெருமைக்குரிய **டத்தோ ஸ்ரீ ச. சாமிவேலு,**

அறியாமை அகன்றால்தான் அருந்தமிழ்க் குயர்வென்ற
பெரியாரின் கருத்துகளை எதிரொலித்த பேச்சாளர்!
உரம்வாய்ந்த செய்தமிழுக் குயிர்தந்த செந்தமிழ்வேள்;
கறைபட்ட வரலாற்றைக் கடுமுழைப்பால் அழித்தெழுத,
நிறைவான மனத்தோடு களம்புகுந்த நெறியாளர்!
சீர்திருத்தச் சங்கத்தைச் சிறப்பாக வழிநடத்தி,
ஊர்திருத்தம் கண்டுயர உழைத்திட்ட பாட்டாளர்!

முரசென்னும் நாளேட்டை முனைப்போடு வெளியிட்டே
அரசாள முத்தமிழை அரியணையில் ஏற்றியவர்!
பலகலைசேர் கழகத்தில் பைந்தமிழ்க்குத் தடைபோட்டு
நலங்கெட்ட வடமொழியை நிலைநாட்ட முயற்சிசெய்த
நீலகண்ட சாத்திரியின் நேர்வைரி! (பா. 339)

என மலையக மக்களின் பாராட்டுக்குச் சொந்தமான **தமிழவேள் கோ. சாரங்கபாணி,**

மூதறி வாளர் முத்தமிழ் வல்லார்;
ஞானச் செல்வர்;
அன்பொளிர் கின்ற தோற்றம்,
அருளொளி பொங்கும் கண்கள்,
பண்பொளிர் கின்ற பேச்சு,
நண்பொளிர் கின்ற நெஞ்சம்,
நடமாடும் கலையின் கூடம்;

மண்ணெனப் பொறுமைகாட்டும் மாதவர்;
சேர்ந்தோர் பொன்னெனக் கருதத்தக்க புகழினர்;
கவிஞர்க் கெல்லாம் பண்ணெனத் திகழ்பவர்;
பாமுறை தேர்ந்த வள்ளல்;
மாணவர்தம் கருத்தறிந்து ஒளிசெய்யும் (பா. 328)

இன்பொளிர் **இராமதாசர்**

என மேலும் பலரது புகழ் பாடும் கவிதைகள் களஞ்சியத்துக்குச் சிறப்பினைச் சேர்க்கின்றன.

சமய ஒருமைப்பாடு

மலேசியாவில் மலாய் மண் மைந்தர், தமிழர், சீனர் இன்னும் பல இனத்தவரும் மதத்தினரும் வாழ்ந்து வருகின்றனர். மலேசியத் தமிழ்க்கவிஞர்களுடைய பாடல்களில் அனைத்து மத, சமயக் கருத்துகளைக் காணமுடிகிறது.

பத்துமலை மீதிருந்து படியளக்கும் வேல்முருகா!
எத்திசையும் நீயிருந்து எனைக்காக்கும் வேலவனே! (பா. 45)

என முருகனைப் போற்றிப் பாடுகிறார், மு.கா.ம. முத்தமிழ்ச் செல்வன்.

மூவடியால் உலகளந்து மூவுலகும் தொழுதேத்த
மாவலியின் கதைமுடித்த மாலவனார் அம்மானை?
மாவலியின் கதைமுடித்த மாயவனே ஆய்பாடிக்
கோவலரின் திருச்செம்மல் கோபாலன் அம்மானை? (பா. 43)

எனத் திருமாலை அம்மானைப்பாடலில் பாடி அகங்குளிர்கிறார், திருமதி பார்வதி பூபாலன்.

புத்தரின் உண்மைநெறியை எடுத்தியம்பிப் பெருமை கொள்கிறார், காரை கிழார். (பா. 55)

ஐம்பெருங் கடமைகளைப் போற்றுவோம் – நெஞ்சில்
ஆன்ம நெறிச்சுடர் ஏற்றுவோம் (பா. 59)

என இசுலாத்தின் ஐம்பெருங் கடமைகளை நிறைவேற்றுவதன் வாயிலாய் ஆன்ம நெறிச் சுடரை ஏற்ற விழைகிறார், எம். அலி. அக்பர்.

யூதர் நிலத்தில் பெத்லகேம் ஊரில்
    ஊரே உறங்குகையில்
மாதம் பத்து நிறைந்த தாலே
    மாட்டுத் தொழுவத்தில் (பா. 62)

பிறந்த ஏசுவை வாழ்த்தி வழிபடுகிறார், ஜோசப் செல்வம்.

மதங்கள், சமயங்கள் ஆகியன வெவ்வேறாய் இருப்பினும் அவற்றின் பெயரால் போட்டிகளோ சண்டைகளோ சச்சரவுகளோ இல்லாமல் அனைவரும் ஒருமைப்பாட்டுணர்வுடன் மலேசியாவில் வாழ்ந்து வருவதைக் காண்கிறோம். இந்நிலை உலகெங்கும் மலருமாயின் உலகம் அமைதிப் பூங்காவாய்த் திகழ வழியேற்படும்.

களஞ்சியப் பெருமை

மலேசியத் தமிழர் தாம் வாழும் நாட்டை மேம்படுத்தப் பட்ட பாடுகள், அவர்தம் நாகரிகம், பண்பாடு, கலை வளர்ச்சிகள், தமிழ்மொழிக்குச் செய்த தொண்டுகள், அவர்தம் வரலாறு போன்றவற்றை உலகத் தமிழர் அறிந்துகொள்ள இக்களஞ்சியம் பெரிதும் துணைபுரிகிறது.

களஞ்சியத்தின் தலைமைத் தொகுப்பாசிரியர் கவிஞர் முரசு. நெடுமாறன் 'வரலாற்று வாயில்' என்னும் தலைப்பில் வழங்கியுள்ள செய்தி மலேசியத் தமிழர் வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுகிறது. இதனை விரித்து எழுதினால் எதிர்காலத் தலைமுறைக்குப் பெரிதும் பயன்படும்.

தமிழர் மலேசியாவில் மட்டுமன்றி, இலங்கை, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, பிஜித் தீவுகள், மொரீசியஸ், ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலும் வாழ்கின்றனர். அவர்கள் வரலாறு இதுபோல் தொகுக்கப்படுமானால் 'உலகத் தமிழர் வரலாறு' ஒன்று கிடைக்க வாய்ப்புண்டு; பெரும்பயனும் உண்டு. அப்படிப்பட்ட ஒரு வரலாற்று நூல் உருவாக இக்களஞ்சியம் முன்னோடியாய் - வழிகாட்டியாய் - திகழும் என்பதில் ஐயமின்று.

நூல் ஆக்கம்	முரசு நெடுமாறன் (மலேசியா)
வகைமை	அயலகக் கவிதைச் செல்வம்
வெளியீடு	அருள்மதியம் பப்ளிகேசன்ஸ் செலங்கூர், மலேசியா. (1997)